2996

J.N.L.A. Debates

Official Report

Vol 46 No 2

18 November 1987

©

V211,31 N87

N87.46.2

136540

வெளியீடு 1-7-1988

Issued 1-7-1988

2996

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

2668/Ae/88.

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, நவம்பர் 18, 1987–தொகுதி 46–எண் 2

Wednesday, the 18th November 1987–Volume 46–No 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600 009

விலை ரூ. 3·00]

[Price Rs. 3·00

4211.31 N87

N87.46.2

136541
சென்னை-600 008

## உள்ளடக்கம்

18—11—1987

| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிடாத வினாக்கள். | 375—559 |
| **2. கவன ஈர்ப்பு—** | |
| (அ) பயிர் ஈட்டுறுதித் திட்டத்தில் கையாளப்படும் முறைகளிலுள்ள குறைபாடுகள். | 559—563 |
| (ஆ) திருச்சி மாவட்ட நியாய விலைக் கடைகளில் கட்டாய மளிகைப் பொருள் விற்பனை. | 564—567 |
| (இ) வால்பாறை டீ எஸ்டேட்ஸ் ஆப் இந்தியா கம்பெனித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம். | 567—576 |
| (ஈ) திருப்பூர் தனலட்சுமி 'ஏ' மற்றும் 'பி' மில்கள் இயங்காமலுள்ளதால் தொழிலாளர் பாதிப்பு. | 577—584 |
| (உ) செங்கை மாவட்டம் திருநீர்மலை கல்குவாரியைத் தனியாருக்குக் குத்தகைக்குக் கொடுத்தது குறித்து. | 584—588 |
| (ஊ) கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறையிலிருந்து பேருந்துகள் விடப்படாதது. | 589 |
| (எ) சென்னை, பைராகிமடம் வெங்கடேச பெருமாள் கோயில் நிலத்தைத் தனியாருக்குக் குறைந்த குத்தகைக்குக் கொடுத்துள்ளது குறித்து. | 589—595 |
| **3. தகவல் கோரல்—** | |
| (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர்கள் காணாமல் போனது குறித்து. | 596—599 |
| (ஆ) இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக ஊர்வலம் வந்த மாணவர்கள் மீதான வழக்கு குறித்து. | 599—600 |

(இ) அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அவையில் வைக்கப்பெறாதது குறித்து. — 600

(ஈ) எடுத்துக் கொள்ளப் பெறாத கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கான பதில்கள். — 601

4. அறிவிப்புகள்—

(அ) சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு விற்கு தேர்தல். — 601

(ஆ) பேரவை அலுவல். — 673—679, 690

5. அறிக்கைகள் அளித்தல்—

(அ) பொதுக் கணக்குக் குழு. — 601—602

(ஆ) பொது நிறுவனங்கள் குழு. — 602

(இ) அரசு உறுதிமொழிக் குழு. — 602—603

(ஈ) மனுக்கள் குழு. — 603

(உ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு. — 603

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1987 — 603—664, 679—690

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் — 653—664

திரு. அ. ரகுமான்கான் — 604—626

திரு. கு. ரமணி — 627—634

திரு. கே. சுப்பராயன் — 634—641

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் — 641—647

திரு. எஸ். வேணுகோபால் — 648—652

(ஆ) நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு, 1987 — 664

(இ) நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு, 1987 — 665—690

(ஈ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987— — 666—678




பக்கங்கள்


மாண்புமிகு திரு. க. இராசாராம் — 666, 687—690

திரு. மா. மணிமாறன் — 666—675

திரு. பொ. உத்திராபதி — 675—680

திரு. கோ. வீரய்யன் — 680—682

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் — 683—687

(உ) கள்ளச் சாராயக்காரர்கள் மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987— — 690—691

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் — 691, 712—719

திரு. பொ. முத்துராமலிங்கம் — 691—695

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் — 695—699

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 699—703

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் — 703—709

திரு. பொ. உத்திராபதி — 709—712

(ஊ) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 — 719—728

மாண்புமிகு திரு. த. இராமசாமி — 719, 724—727

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 719—721

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் — 721—724

(எ) தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987 — 728—747

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 728, 742—746

திரு. கோ. வீரய்யன் — 729

திரு. அ. ரகுமான்கான் — 729—734

திரு. ஜி. கே. ஜெ. பாரதி — 734—742

பக்கங்கள்

(ஔ) தமிழ்நாடு கடன் நிவாரண (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 — 747—755
மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 747, 753—754
திரு. எம். செல்லமுத்து — 748
திரு. பொ. உத்திராபதி — 748—750
திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் — 750—753

(ஐ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 — 755—756
மாண்புமிகு திரு. த. இராமசாமி — 756

(ஒ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 — 757
மாண்புமிகு திரு. த. இராமசாமி — 756

(ஓ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (செல்லத் தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவு, 1987 — 757
மாண்புமிகு திரு. த. இராமசாமி — 757

7. அரசினர் தனித் தீர்மானங்கள்—

(அ) மின் வாரியத்திற்கு இருக்கக்கூடிய கடன் வரம்பு. — 758

(ஆ) 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்ட விதிகளுக்கு திருத்தம் — 758—809
டாக்டர் கே. சௌரிராஜன் — 764—774
திரு. சோ. மா. இராமச்சந்திரன் — 774—777
திரு. கு. ரமணி — 777—785
திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் — 785—789
மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் — 758—764, 789—808

(இ) 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்ட விதிகளுக்குத் திருத்தம் — 809—815

(ஈ) 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட விதிகளுக்குத் திருத்தம். — 815—820

8. அரசினர் தீர்மானம்—
பேரவை ஒத்திவைக்கப்பெறுதல் — 821

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். — 821—823

2996

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987, நவம்பர் 18, புதன்கிழமை.

கார்த்திகை 2, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு-2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்."

கிடைத்தற்கரிய காலம் வந்து வாய்க்குமானால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அப்போதே செய்தற்கரிய செயல்களைச் செய்யவேண்டும்.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிடாத வினாக்கள்.

**கிராம நிர்வாக அதிகாரி பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டோர்.**

1—வினா எண் 3101—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) கிராம நிர்வாக அதிகாரி பதவிக்கு தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் அனைவரும் பயிற்சியை முடித்துவிட்டார்களா ?

(ஆ) மொத்தம் பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர் ?

விடை—

(அ) கிராம நிர்வாக அலுவலர் பணிக்கு நியமனம் செய்யத் தேர்வு செய்யப்பட்டவர்களில் பயிற்சிக்காக காத்திருப்போர் பட்டியலில் உள்ள 359 பேர்களைத் தவிர மற்ற அனைவரும் பயிற்சியை முடித்துவிட்டார்கள். இந்த 359 பேர்களுக்கும் பயிற்சி அளிக்க செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) 13,381. (அவர்களில் பயிற்சியின் இடையில் நின்றவர்கள், இறந்தவர்கள், ஓய்வு பெற்றவர்கள், பணியைவிட்டுச் சென்றவர்கள், பயிற்சிக்குப் பின்னர் பணியில் சேராதவர்களும் அடங்குவர்).

**சேரன்மாதேவி தொகுதியில் தாமிரபரணி நதிக்கும் கன்னடியான் கால்வாய்க்கும் இடையேயுள்ள ஆற்றுச்சாலை சீரமைப்புப்பணி.**

2—வினா எண் 3283—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)** : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி தொகுதி, கூனியூர் கிராமத்தில் தாமிரபரணி நதிக்கும் கன்னடியான் கால்வாய்க்கும் மத்தியில் உள்ள ஆற்றுச் சாலையை சீரமைத்து அதனுடன் உள்ள தெற்கு அரியநாயகிபுரத்திற்குச் செல்லும் இணைப்புச் சாலை சீரமைப்பு பணி எப்போது துவங்கப்படும்?

விடை—

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி தொகுதி, கூனியூர் கிராமத்தில் தாமிரபரணி நதிக்கும் கன்னடியான் கால்வாய்க்கும் மத்தியில் உள்ள ஆற்றுச் சாலையை சீரமைத்து அதனுடன் உள்ள தெற்கு அரியநாயகிபுரத்திற்குச் செல்லும் இணைப்புச்சாலை அபிவிருத்திக்கு ரூ. 2 லட்சம் செலவாகும். கிராமப் பணித் திட்டத்தின்கீழ் (Village Works Programme) சாலை மேம்பாடு பணிகளுக்கு இந்த ஆண்டு நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை. சாலை சீரமைப்பு பணிகளுக்கு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் நிதி ஒதுக்கீடு ஒரு வட்டாரத்திற்கு ரூ. 60,000 என இந்த ஆண்டு குறைந்த அளவு ஒதுக்கப்பட்டுள்ளதால், மேற்படி இணைப்புச் சாலை சீரமைப்பு பணியினை எடுத்து செய்ய இயலவில்லை.



**வெங்கடாம்பட்டி சாலையிலிருந்து இணைப்புச் சாலை அமைத்தல்.**

3—வினா எண் 1543—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)** : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஒன்றியம், மேலகோவிலூற்று பகுதிவாழ் மக்களிடமிருந்து வெங்கடாம்பட்டி சாலையில் இருந்து இணைப்புச் சாலை அமைக்கக் கோரி மனு வந்துள்ளதா?

(ஆ) அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஒன்றியம், மேலகோவிலூற்று பகுதிவாழ் மக்களிடமிருந்து வெங்கடாம்பட்டி சாலையிலிருந்து இணைப்புச் சாலை அமைக்கக் கோரி மனு எதுவும் வரவில்லை. இச்சாலை ஏற்கனவே வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டு, தனியார் நிலம் குறுக்கே இருந்தமையால் 50 மீட்டர் தூரம் வரை சாலை அமைக்க இயலாமல் போய்விட்டது.

**தேவேந்திர ஆதிதிராவிடர் காலனிக்கு பால்வாடிக் கட்டிடம் கட்டும் திட்டம்.**

4—வினா எண் 1682—**திரு. மெ. ஆண்டி அம்பலம்** : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சாணார்பட்டி யூனியன் செங்குறிச்சி கிராமம், தேவேந்திர ஆதிதிராவிடர் காலனிக்கு பால்வாடிக் கட்டிடம் கட்டித்தர அரசிடம் திட்டமுள்ளதா?

விடை—

இல்லை.

## தெற்கு கழுகுமலையிலுள்ள மேல்நிலை நீர்த்தொட்டி.

5—வினா எண் 2142—**திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓட்டப்பிடாரம் வட்டம் கயத்தார் ஒன்றியம் தெற்கு கழுகுமலையிலுள்ள மேல்நிலை நீர்த் தொட்டியை திறப்பதில் காலதாமதத்திற்கு காரணம் என்ன?

விடை—

துலுக்கப்பட்டி மற்றும் தெற்கு கழுகுமலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் இரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. துலுக்கப்பட்டி மேல் நிலைத் தொட்டிக்கு கழுகுமலை கயத்தார் தேவர்குளம் சாலைக்கு அருகில் கிணறு ஒன்று வெட்டி அதில் 7.5 குதிரை சக்தி கொண்ட ஜெட் பம்பு செட்டு அமைத்து நீரேற்றி குடிநீர் வழங்க திட்டமிடப் பட்டது. ஆனால் அக்கிணற்றில் போதிய அளவு தண்ணீர் இல்லை. நிபுணர்களைக் கொண்டு நிலத்தடி நீர் பரிசோதனை செய்ததில் தெற்கு கழுகுமலையிலிருந்து 800 மீட்டர் தூரத்தில் குடலை மாடசாமி கோவில் பக்கத்தில், போதிய நீர் ஆதாரம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கு கிணறு தோண்டுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதனால் மேல்நிலைத் தொட்டிக்கு நீர் வழங்கலில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. விரைவில் இப்பணிகள் முடிக்கப்பட்டு மேல்நிலைத் தொட்டிகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## திருவிடைமருதூர் தாலுக்காவை தொழில் துறையில் பின்தங்கிய தாலுக்காவாக அறிவித்தல்.

6—வினா எண் 12041—**திரு. மு. இராசாங்கம் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தாலுக்காவை தொழில் துறையில் பின்தங்கிய தாலுக்காவாக அறிவிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?





விடை—

இல்லை. ஆனால் மாநிலத்தில் பெரிய மற்றும் நடுத்தர தொழில்கள் இல்லாத வட்டங்கள் எனக் கருதப்படும் 52 வட்டங்களில் திருவிடைமருதூர் வட்டமும் ஒன்றாகும். இந்த 52 வட்டங்களைத் தொழிலே இல்லாத வட்டங்களாக (No Industry Taluk) அறிவிக்கும்படி மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## திருவிடைமருதூரில் தீயணைக்கும் நிலையம் அமைக்கும் திட்டம்.

7—வினா எண் 2350—**திரு. மு. இராசாங்கம் :** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூரில் தீயணைக்கும் நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் ஏதாவது உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் புதிய தீயணைப்பு நிலையங்கள் நிறுவுவதற்கான இடங்களின் முன்னுரிமைப் பட்டியலில் தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் சேர்க்கப் பட்டுள்ளது. அரசின் நிதிநிலைமைக்கேற்ப அங்கு விரைவில் தீயணைப்பு நிலையம் ஒன்று திறக்கப்படும்.

## திட்ட அலுவலர்களுக்கு வழங்கப்படும் பயணப்படி.

8—வினா எண் 2744—**திரு. பொ. உத்திராபதி மற்றும் திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பள்ளித் துணை ஆய்வாளர், உதவிக் கல்வி அலுவலர், மாவட்ட அலுவலர், களப்பணியாளர் போன்றவர்களுக்கு வழங்கப் படுகிற மாதிரி சம்பளத்தில் 50 சதவீதம் பயணப்படி திட்ட அலுவலர்களுக்கும் வழங்க அரசு உத்திரவிடுமா?

விடை—

தற்போது பள்ளித் துணை ஆய்வாளர், உதவிக் கல்வி அலுவலர், மாவட்ட அலுவலர், களப்பணியாளர் போன்றவர்கள், அவர்களது ஊதியத்தில் 50 விழுக்காடு வரை பயணப்படி பெறலாம். அதுபோல் ஊரக வளர்ச்சி முகமைகளில் இட்ட அலுவலர்களுக்கும் அதேபோல் பயணப்படி வழங்கப்பட்டு வருகிறது.

### தஞ்சை மாவட்டத்தில் மரம் வளர்க்கும் திட்டத்தின்கீழ் தென்னை மரங்கள் நடுதல்.

9—வினா எண் 3006—**திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் மரம் வளர்க்கும் திட்டத்தின் கீழ் சாலை ஓரங்களிலும் புறம்போக்கு இடங்களிலும் 1983-84 ஆம் ஆண்டு தென்னை மரங்கள் நடப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், அதைப் பராமரிக்க மேற்கொண்ட நடவடிக்கை யாவை?

விடை—

(அ) 1983-84 ஆம் ஆண்டில் 132 தென்னை மரங்கள் நடப்பட்டுள்ளன.

(ஆ) மேற்கண்ட மரங்களை பராமரிப்பு செய்வதற்கு கூலி ஆட்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### போலிச் சாமியார்களைக் கண்காணித்தல்.

10—வினா எண் 3120—**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

**போலிச் சாமியார்களைக் கண்காணித்து அரசு நடவடிக்கை எடுக்குமா?**



விடை—

போலிச் சாமியார்களை காவல் துறையினர் கண்காணித்து வருகின்றனர். கீழ்க்கண்டவாறு போலிச் சாமியார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது:—

(1) 1983-ல் பெரியார் மாவட்டம் கருங்கல்பாளையத்தைச் சேர்ந்த தாமோதர முதலியார் என்னும் போலிச் சாமியார் மீது கு. எண். 126/83-ல் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 328-ன் கீழ் வழக்குத் தொடரப்பட்டு தண்டனையில் முடிந்தது.

(2) 1984-ல் திருநெல்வேலி (மேற்கு) மாவட்டத்தில் சிவராஜு என்கிற போலிச் சாமியார் மீது செங்கோட்டை காவல் நிலைய கு. எண் 131/84 இந்திய தண்டனைச் சட்டம் 420 மற்றும் சென்னை நகர காவல் சட்டப் பிரிவு 65-ன் கீழ் வழக்குத் தொடரப்பட்டு வழக்கு நீதிமன்ற நிலுவையில் உள்ளது.

(3) 1985-ல் திருச்சி மாவட்டத்தில் க. நடராஜன் என்கிற போலிச் சாமியார் மீது திருச்சி கோட்டை காவல் நிலைய கு. எண் 764/85-ல் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 420, 376, 316 மற்றும் 511-ன் கீழ் வழக்குத் தொடரப்பட்டு வழக்கு நீதிமன்ற நிலுவையில் உள்ளது.

(4) 1985-ல் தருமபுரி மாவட்டத்தில் மத்தம் கிராமம் பச்சையப்பன் (எ) பிரபாகரன் என்கிற போலிச் சாமியார் மீது ஓசூர் சிப்காட் காவல் நிலைய கு. எண். 14/85-ல் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 328 மற்றும் 376-ன் கீழ் வழக்குத் தொடரப்பட்டு விசாரணையில் உள்ளது.

### சேரன்மாதேவி 12 ஆவது வார்டு ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு அருகிலுள்ள சாலை செப்பனிடும் பணி.

11—வினா எண் 3277—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

**திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுக்கா சேரன்மாதேவி கிராமம் 12 ஆவது வார்டு ஆதி திராவிடர் மக்களின் குடியிருப்புக்கு அருகில் உள்ள சாலை செப்பனிடுதல் பணி எப்போது துவங்கும்?**

விடை—

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுக்கா, சேரன்மாதேவி கிராமம் 12 ஆவது வார்டு ஆதி திராவிடர் மக்களின் குடியிருப்புக்கு அருகில் உள்ள சாலை செப்பனிடும் பணி 1985-86 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 24—1—1986-ல் ஆரம்பிக்கப்பட்டு 31—1—1986-ல் முடிக்கப்பெற்று விட்டது.

### குஜிலியம்பாறை அருகில் நீர்த்தேக்கம் அமைத்தல்.

12—வினா எண் 3301—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம், குஜிலியம்பாறை பகுதியில் வரும் காட்டோடைகளை பயன்படுத்தி குஜிலியம்பாறை அருகில் சிறிய நீர்த்தேக்கம் ஒன்று அமைக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில, அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் குறித்து முதல் நிலை ஆய்வு 1—7—86-க்கு பின்னர் மேற்கொள்ளப்படும் என்று தலைமை பொறியாளர் (ஆய்வு) தெரிவித்துள்ளார்.



### பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முதலுதவி பயிற்சி திட்டம்.

13—வினா எண் 3329—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள பள்ளிகள், கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முதல் உதவி பயிற்சியைக் கட்டாயமாக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

தமிழகத்திலுள்ள பள்ளிகள், கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முதல் உதவிப் பயிற்சியைக் கட்டாயமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. பொதுவாகப் பள்ளிப் பாடத் திட்டத்தின்கீழ் வராத சாரணர், சாரணியர் இயக்கம், செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செயிண்ட் ஜான் ஆம்புலன்ஸ் உள்ள பள்ளிகளில் மட்டும் முதல் உதவி பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

### அடைக்கனூர் கிராமத்தில் புதிய பாதை அமைத்தல்.

14—வினா எண் 3342—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம், தட்டாரப்பட்டி ஊராட்சியில் உள்ள அடைக்கனூர் கிராமத்தில் 1977-ம் ஆண்டு புயலுக்குப்பின் புதியதாக கட்டப்பட்டுள்ள 30 வீடுகளுக்கு பொதுப் பாதை அமைக்கக் கோரி அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) வேடசந்தூர் வட்டம், தட்டாரப்பட்டி ஊராட்சி, அழைக்கனூர் கிராமத்தில் 1977-ம் ஆண்டு புயலுக்குப் பின்பு புதிதாக கட்டப்பட்டுள்ள 30 வீடுகளுக்குப் பொதுப் பாதை அமைக்கக் கோரி அரசுக்கு விண்ணப்பம் எதுவும் வரவில்லை.

(ஆ) மேற்படி 30 வீடுகளுக்குச் செல்ல தற்சமயமும் மெயின் ரோட்டிலிருந்து சுமார் 200 அடி நீளத்திற்கும், 3 அடி அகலத்திற்கும் பாதை உள்ளது. பாதை அமைந்துள்ள பகுதி பட்டா நிலமாக உள்ளது. மாற்று ஏற்பாடுகள் செய்ய வேறு வகையில்லை.

## குளத்தூர் தொகுதி கிராமங்களில் அடி பைப் அமைக்கும் செயற்குறிப்பு.

15—வினா எண் 3404—திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி அன்னவாசல் ஒன்றியத்தைச் சேர்ந்த காதுகுடிப்பட்டி கிராமத்தில் அடி பைப் அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) **இல்லை.**

16—வினா எண் 3412—திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி விராலிமலை ஒன்றியம் ஆலங்குடி கிராமத்தைச் சேர்ந்த களத்துப்பட்டி கிராமத்திற்கு அடி பைப் அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**தற்போது இல்லை.**



## தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் துவக்கப்பட்ட பெருந் தொழில்கள்.

17—வினா எண் 3502—திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேசன் மூலம் துவக்கப்பட்ட பெருந் தொழில்கள் எத்தனை?

(ஆ) அவை யாவை?

விடை—

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் இதுவரையில் பொதுத் துறையில் எட்டு நிறுவனங்களும், கூட்டுத் துறையில் 25 நிறுவனங்களும் துவக்கியுள்ளது. அவைகளின் விவரம் பின்வருமாறு:—

### (1) பொதுத் துறை நிறுவனங்கள்:

1. (அ) தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம், ஆலங்குளம்.

ஆலங்குளம் சிமெண்ட் ஆலை.
[Alangulam Unit (TANCEM) Alangulam.]

(இ) அரியலூர் சிமெண்ட் ஆலை, அரியலூர்.
[Ariyalur Unit (TANCEM), Ariyalur.]

(உ) ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடு திட்டம், ஆலங்குளம்.
[Asbestos Cement Sheet Project (TANCEM) Alangulam.]

(எ) தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்த் திட்டம், மாயனூர்.
[Tamil Nadu Asbestos Pressure Pipe Project (TANCEM) Mayanur.]

2. தமிழ்நாடு கெமிக்கல் பிராடக்ட்ஸ் நிறுவனம், காரைக்குடி.
(Tamil Nadu Chemical Products Limited, Karaikudi.)

[1987 நவம்பர் 18

3. (அ) தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனம், அரக்கோணம். (Tamil Nadu Steels, Arakkonam.)

(இ) தமிழ்நாடு ஸ்டீல்ஸ் மீள் உருளை ஆலை, அரக்கோணம். [Tamil Nadu Steels (TNS) Re-rolling Mill, Arakkonam.]

4. தமிழ்நாடு தொழிலியல் வெடிமருந்து நிறுவனம், காட்பாடிக்கு அருகில். (Tamil Nadu Industrial Explosives Limited near Katpadi.)

(2) கூட்டுத் துறை நிறுவனங்கள்:

1. அசிடிலீன் அண்டு இண்டஸ்ட்ரியல் காஸ் சிலிண்டர்ஸ் லிமிடெட், சென்னை. (Acetylene and Industrial Gas Cylinders Limited, Madras.)

2. அரக்கோணம் காஸ்டிங்ஸ் அண்டு போர்ஜிங்ஸ் லிமிடெட், அரக்கோணம். (Arakkonam Castings and Forgings Limited, Arakkonam).

3. ஆசியா டொபாக்கோ கம்பெனி லிமிடெட், ஓசூர். (Asia Tobacco Company Limited, Hosur).

4. ஆசியன் பேரிங்ஸ் லிமிடெட், பாகலூர் (ஓசூருக்கு அருகில்). [Asian Bearings Limit.ed Bagalur (near Hosur).]

5. டைனாவிஷன் லிமிடெட், சென்னை. (Dynavision Limited, Madras).

6. பைபர் பைப்ஸ் (இந்தியா) லிமிடெட், கடலூர். [Fibre Pipes (India Limited, Cuddalore.]

7. கங்கப்பா பேப்பர் மில்ஸ் லிமிடெட், வடகுத்து. (Gangappa Paper Mills Limited, Vadakuthu).

8. கிரேட் சீ ட்ராலர் பில்டிங் யார்டு மண்டபம் லிமிடெட், மண்டபம். (Great Sea Trawler Building Yard Mandapam Limited, Mandapam),



1987 நவம்பர் 18]

9. இண்டர் காண்டினெண்டல் லெதர்ஸ் லிமிடெட், இராணிப்பேட்டை. (Inter Continental Leather Limited, Ranipet).

10. காமர் கெமிக்கல்ஸ் அண்டு இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், இராணிப்பேட்டை. (Kamar Chemicals and Industries Limited, Ranipet).

11. மதராஸ் ஷூ பேப்ரிக் லிமிடெட், வாலாஜாபேட்டை. (Madras Shoe Fabric Limited, Walajapet).

12. மல்லடி டிரக்ஸ் அண்டு பார்மாசூடிக்கல்ஸ் லிமிடெட், இராணிப்பேட்டை. (Malladi Drugs and Pharmaceuticals Limited, Ranipet).

13. மாருதி கிறிஸ்டல் சால்ட் கம்பெனி லிமிடெட், திருப்போரூர். (Maruthi Crystal Salt Company Limited, Thiruporur).

14. பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட், நரசிங்கம்பட்டி, மதுரை மாவட்டம். (Pandian Chemicals Limited, Narasingampatti, Madurai District).

15. தமிழ்நாடு குளோரேட்ஸ் லிமிடெட், புலியூர். (Tamil Nadu Chlorates Limited, Pulivur).

16. சதர்ன் அக்ரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், முண்டியம்பாக்கம். (Southern Agrifurane Industries Limited, Mundiyampakkam).

17. சதர்ன் ஹைட்ரோ கார்பன்ஸ் லிமிடெட், தொண்டமாநல்லூர், புதுக்கோட்டை மாவட்டம். (Southern Hydrocarbons Limited, Thondamanallur, Pudukkottai district).

18. சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், தூத்துக்குடி. (Southern Petrochemical Industries Limited, Tuticorin).

19. தமிழ்நாடு ஆல்கலைன் பேட்டரீஸ் லிமிடெட், சென்னை. (Tamil Nadu Alkaline Batteries Limited, Madras).

20. தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், இராணிப்பேட்டை. (Tamil Nadu Chromates and Chemicals Limited, Ranipet),

[1987 நவம்பர் 18

21. தமிழ்நாடு தாதா பார்மாசூடிக்கல்ஸ் லிமிடெட், பல்லாவரம். (Tamil Nadu Dadha Pharmaceuticals Limited, Pallavaram).

22. சதர்ன் போரக்ஸ் லிமிடெட், பொன்னேரி. (The Southern Borax Limited, Ponneri).

23. தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் அண்டு பெர்டிலைசர்ஸ் லிமிடெட், தூத்துக்குடி. (Tuticorin Alkali Chemicals and Fertilisers Limited, Tuticorin).

24. தமிழ்நாடு புளோரைன் அண்டு அலைடு கெமிக்கல்ஸ் லிமிடெட், கடலூர். (Tamil Nadu Fluorine and Allied Chemicals Limited Cuddalore).

25. வானவில் டைஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், கடலூர். (Vanavil Dyes and Chemicals Limited, Cuddalore).

**வாசுதேவநல்லூரில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் திட்டம்.**

18. வினா எண் 3506—**திரு. ஆர். ஈஸ்வரன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூரில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா?

விடை—

தமிழ்நாட்டில் புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட வேண்டிய இடங்களின் முன்னுரிமைப் பட்டியலில், திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் சேர்க்கப்பட்டுள்ளது. அவ்வரிசைப்படி அரசின் நிதி நிலைமைக்கேற்ப வாசுதேவநல்லூரில் உரிய நேரத்தில் தீயணைப்பு நிலையம் ஒன்று திறக்கப்படும்.



1987 நவம்பர் 18]

**கூடலூர்-பெரிய சோலை சாலையை தார்ச்சாலையாக மாற்றல்.**

19—வினா எண் 3602—திரு. கே. உச்சி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதி, ஓவாலி பேரூராட்சியைச் சேர்ந்த கூடலூர்-பெரியசோலை சாலை மிகவும் பழுதடைந்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இச்சாலையை தார்ச் சாலையாக்க அரசு செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ): கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ளது தனியார் நிலத்தில் உள்ள சாலையாகும். இச்சாலை மஞ்சு ஸ்ரீ எஸ்டேட்டுக்குச் சொந்தமான தனியார் சாலையாகும். ஆதலால் இத்தனியார் சாலையை ஊராட்சி ஒன்றியம் மூலமாக மேம்பாடு செய்ய இயலாது.

**பெண்களுக்கென தனிக் காவல் நிலையம் அமைக்கும் திட்டம்.**

20—வினா எண் 3628—திரு. மு. தங்கமணி: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெண்களுக்கான தனிக் காவல் நிலையம் அமைத்திடும் திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—

தமிழ்நாட்டில் முழுதும் பெண்களைக் கொண்டே நிர்வகிக்கப்படும் காவல் நிலையங்கள் அமைத்து, அவைகளில் பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பது அரசின் உத்தேசமாகும். தற்பொழுது ஒவ்வொரு யூனிட்டிலும் ஒரு பெண் சப்-இன்ஸ்பெக்டர், ஒரு பெண் தலைமைக் காவலர், 10 பெண் காவலர்கள் இருக்குமாறு 60 யூனிட்டுகள் அமைத்து இந்த யூனிட்டு

களை எல்லா மாவட்டங்களிலும் சென்னை நகரத்திலும் முக்கிய காவல் நிலையங்களுடன் இணைந்து நிர்வகிப்பது என்று முடிவு செய்யப்பட்டு இதற்குத் தேவையான 60 பெண் சப்-இன்ஸ்பெக்டர்கள், 60 பெண் தலைமை காவலர்கள் மற்றும் 600 பெண் காவலர்களை பணியில் அமர்த்த 12—8—1980 நாளிட்ட உள்துறை அரசாணை எண் 2113-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலே கண்ட ஆணையின்படி நியமிக்கப்பட்ட பெண் காவலர்கள், தலைமைக் காவலர்கள், பெண் சப்-இன்ஸ்பெக்டர்கள் பயிற்சி முடித்து தங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள காவல் யூனிட்டுகளில் பணியில் சேர்ந்துள்ளார்கள். செப்டம்பர் 1982 முதல் 60 பெண் காவல் யூனிட்டுகளும் வேலை தொடங்கியுள்ளன.

## மார்நாடு கால்வாயின் மீது பாலம் கட்டுதல்.

21—வினா எண் 3688—திரு. க. பாரமலை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வெள்ளப் பாதுகாப்பு என்ற வகையில் மானாமதுரைத் தொகுதி தட்டாங்குளம் என்ற ஊருக்கு தென்புறத்திலும், தாதைப் பஞ்சாயத்தைச் சேர்ந்த இந்திரா நகர் என்ற இடத்திலும் மார்நாடு கால்வாயின் மீதும் பாலம் கட்டும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை. மானாமதுரைத் தொகுதி தட்டாங்குளம் என்ற ஊருக்கு தென்புறத்திலும், தாதைப் பஞ்சாயத்தைச் சேர்ந்த இந்திரா நகர் என்ற இடத்திலும் மார்நாடு கால்வாயின் மீதும் சாலை மற்றும் பாலம் கட்டும் பணிகள் நிதி வளமின்மையால் இதுவரை எடுத்து செயலாக்கப்படவில்லை.



## வாழைக்கோம்பை மலைவாழ் கிராமத்திலுள்ள நீர்த்தொட்டி.

22—வினா எண் 3970—திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாழைக்கோம்பை மலைவாழ் கிராமத்திலுள்ள நீர்த்தொட்டி பழுதடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், கங்கவள்ளி ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த வாழைக்கோம்பை கிராமத்திலுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியைச் சுற்றிலும் நீர்க் கசிவு ஏற்பட்டுள்ளது. இதைப் பழுது பார்க்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## திருக்கோவிலூர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் திட்டம்.

23—வினா எண் 4033—திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது முதல் செயல்படத் துவங்கும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருக்கோவிலூர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றியமைப்பது சம்பந்தமாக செயற்குறிப்பு தற்போது பரிசீலனையில் உள்ளது.

[1987 நவம்பர் 18

**கோவை மாவட்டத்தில் இருபதாயிரம் வீடுகள் கட்டும் திட்டம்.**

24—வினா எண் 4162—திரு. கு. சமணி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் இருபது ஆயிரம் வீடுகளைக் கட்டும் எட்டு ஆண்டுத் திட்டம் ஒன்று அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**செங்குன்றம், மணலி, பொன்னேரி போன்ற பகுதிகளுக்கு பேருந்துப்பணி.**

25—வினா எண் 4210—திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரை ஒட்டியுள்ள செங்குன்றம், மணலி, பொன்னேரி போன்ற பகுதிகளுக்கு அதிகப் பேருந்துகளை விட மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) செங்குன்றம்:

(அ) தடம் எண் 62-எ-யில் பேருந்துகளை அதிகரிக்கக் கோரி, செங்குன்றம் பகுதி மக்கள் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திடம் வேண்டுகோள் விடுத்தனர். தற்போது தடம் எண். 62-எ-யில் ஆறு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும்



1987 நவம்பர் 18]

இத்தடத்தில் இயக்கும் பேருந்துகள் நட்டத்தில் (பேருந்து ஒன்றிற்கு மாதம் சுமார் ரூ. 9,000 நட்டத்தில்) இயங்குவதால் தற்போது இத்தடத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் பேருந்துகளை அதிகரிக்க இயலாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) அவ்வாறே தடம் எண். 57-ஐ (செங்குன்றம்—வள்ளலார் நகர்) சென்னை உயர்நீதி மன்றத்திற்கு நீட்டிக்கக் கோரியும் விண்ணப்பம் பெறப்பட்டது. தற்போதைய இத்தடத்தின் பயணதூரம் 15.1 கி.மீ. ஆகும். இதனை மேலும் உயர்நீதிமன்றம் வரை நீட்டித்தால் 3.5 கி.மீ. கூடுதலாகும். தற்போது பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்ற பயணத் தடவைகளும் குறைந்துவிடும். ஆகையால் உயர்நீதி மன்றம் வரை நீட்டிக்க இயலாது.

மணலி:

(அ) மணலி புதுநகர் குடியிருப்போர் நலச் சங்கத்திடமிருந்து, மணலி புதுநகரிலிருந்து உயர்நீதிமன்றம்/எழும்பூர் வரை நேரடித்தடம் வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டது. அதன் அடிப்படையில் ஓர் புதிய தடம் (தடம் எண் 44-ஏ) மணலி—புதுநகரிலிருந்து எழும்பூர் வரை ஆண்டாள்குப்பம், கொருக்குப்பேட்டை வழியாக பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் 1—6—1985-லிருந்து இயக்கப்படுகிறது.

(ஆ) தடம் எண் 64, 29-டி, 38-பி ஆகிய பேருந்துகளை மாதவாம் பால் பண்ணையிலிருந்து மணலிக்கு நீட்டித்து இயக்குமாறு வேண்டுகோள் பெறப்பட்டது. அவ்வாறு நீட்டித்து இயக்கினால் ஒவ்வொரு பயணத் தடவைக்கும் கூடுதலாக சுமார் 4 கி.மீ. பயணதூரம் அதிகமாகும். இதனால் தற்போது பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வரும் பேருந்துகளின் பயணத் தடவைகள் வெகுவாக குறைந்துவிடும் என்பதால் மணலி வரை இயக்க இயலாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொன்னேரி :

பொன்னேரி பகுதி மக்கள், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் கோரிக்கைகளுக்கேற்ப கீழ்க்கண்ட வழித்தடங்களில் இரண்டு பேருந்துகளை 12—2—1986 முதல் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் இயக்குகிறது :—

(1) பொன்னேரி—காட்டூர்
பொன்னேரி—பாங்கூடு

(2) பொன்னேரி—கன்னாரப்புக்குளம்
பொன்னேரி—எடூர்

**திருக்கோவிலூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதி.**

26—வினா எண் 4653—திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் போதிய கட்டிட வசதி இன்மையால் அங்கு படிக்கும் மாணவிகள் மரத்தடியில் அமர்ந்து படிக்கும் நிலை அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் பல அரசு உயர்/மேல்நிலைப் பள்ளிகள் போதிய கட்டிட வசதியின்றி இயங்கி வருகின்றன. அதில் இப்பள்ளியும் ஒன்று. இவற்றுக்கென ஆண்டுதோறும் போதிய நிதி ஒதுக்கி, தேவைகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இவ்வாண்டிற்கென (1986-87) ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 1 கோடி தொகையில், இப்பள்ளியின் தேவைகள் கவனத்துடன் பரிசீலிக்கப்படும் என்று பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.





**சங்ககிரியில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தல்.**

27—வினா எண் 4888—திரு. ச. கோவிந்தசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சங்ககிரியில் தீயணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

விடை—

சேலம் மாவட்டம், சங்ககிரியில் தீயணைப்பு நிலையம் திறப்பதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான நீர்த்தாங்கி வண்டி கட்டுமானம் செய்யப்பட்டு வருகின்றது. கட்டுமானம் செய்து கிடைக்கப்பெற்றவுடன் சங்ககிரியில் தீயணைப்பு நிலையம் ஒன்று திறக்கப்படும்.

**தாலுக்கா தலைமையிடங்களில் கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தும் திட்டம்.**

28—வினா எண் 5004—திரு. க. வெ. வீராணம்பலம் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மீன்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் இயங்கி வரும் நடமாடும் கால்நடை மருந்தகத்தை விரிவு செய்யவும், எல்லாத் தாலுக்கா தலைமையிடங்களிலும் ஏற்படுத்தவும் அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1987 நவம்பர் 18

## நாகப்பட்டினம் நகருக்கு குடிநீர் வழங்கல்.

29—வினா எண் 5053—திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் நகருக்கு குடிநீர் வழங்க தற்போதுள்ள ஏற்பாட்டை திருத்தி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு காலத்தில் நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## திருச்சி மாவட்டத்தில் N.R.E.P., I.R.D.P., R.L.E.G.P., ஆகிய திட்டங்களின்கீழ் ஒதுக்கப்பட்ட தொகை.

30—வினா எண் 5073—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் N.R.E.P., I.R.D.P., R.L.E.G.P., ஆகிய திட்டங்களின்கீழ் 1984-85 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு?

(ஆ) நடப்பு ஆண்டிற்கு நிதியை அதிகப்படுத்தும் உத்தேசம் உள்ளதா?

விடை—

(அ) மற்றும் (ஆ): திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு 1984-85 மற்றும் 1985-86 ஆம் ஆண்டுகளுக்கு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்



1987 நவம்பர் 18]

மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை உறுதித் திட்டம் ஆகியவற்றின் கீழ் எடுத்துச் செய்யப்பட்ட பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி பற்றிய விவரம் கீழே வருமாறு:—

| வ. எண்ணும், திட்டத்தின் பெயரும். | ஒதுக்கப்பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|
| | 1984–85. | 1985–86. |
| (1) | (2) | (3) |
| 1 தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் .. .. .. | 360.33 | 335.82 |
| 2 ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் .. .. .. | 248.00 | 227.85 |
| 3 ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டம் .. | 466.15 | 425.72 |
| மொத்தம் .. | 1,074.48 | 989.41 |

## பெரிய கிணத்து ஓடை பகுதி புறம்போக்கு நிலத்தில் சிறிய ஏரி அமைக்கும் திட்டம்.

31—வினா எண் 5225—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், நான்ரு கிணறு பகுதியிலுள்ள பெரிய கிணத்து ஓடையின் பகுதியிலுள்ள புறம்போக்கு நிலத்தில் சிறிய ஏரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) திட்டம் தீவிர ஆய்வில் உள்ளது.

(ஆ) திட்டம் இறுதியாக்கப்பட்ட பின்புதான் அதன் விவரங்கள் தெரியவரும்.

[1987 நவம்பர் 18

### சென்னையில் கழிவு நீர் அகற்றும் வடிகால் வசதி இல்லாத பொதுத் தெருக்கள்.

32—வினா எண் 5413—திரு. **சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் கழிவு நீர் அகற்றும் வடிகால் வசதி இல்லாத பொதுத் தெருக்கள் எத்தனை?

(ஆ) கழிவு நீர் அகற்ற வசதி செய்து தர அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) சென்னை மாநகரில் பழைய எல்லைக்குள் என்.எஸ்.கே. நகர், மேல்பட்டடை, மாம்பலம் ஏரிக்கரை, கோட்டூர், பள்ளிப்பட்டு, ஈக்காட்டுத்தாங்கல் ஆகிய இடங்களிலும், சென்னை மாநகரத்தோடு 1978 ஆம் ஆண்டு இணைக்கப்பட்ட 12 பஞ்சாயத்துக்களிலும் கழிவு நீர் அகற்றும் வடிகால் வசதிகள் இல்லை.

(ஆ) மேல்பட்டடை, மாம்பலம் ஏரிக்கரை, கோட்டூர் ஆகிய இடங்களுக்கு கழிவு நீர் வடிகால் வசதிக்காக பணிகள் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தவிர பள்ளிப்பட்டு, வில்லிவாக்கம், திருவான்மியூர் ஆகிய பகுதிகளுக்கு திட்டங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டன. சென்னை நகரத்தோடு 1978 ஆம் ஆண்டு இணைக்கப்பட்ட ஏனைய பஞ்சாயத்துக்களுக்கு கிருஷ்ணா நதித் திட்டத்தின்கீழ் கழிவு நீர் குழாய் வசதிகள் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### சென்னை அண்ணா நகர் விஸ்வேஸ்வரய்யா பூங்காவை அழகுபடுத்தும் திட்டம்.

33—வினா எண் 5426—திரு. **சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அண்ணா நகரிலுள்ள விஸ்வேஸ்வரய்யா பூங்காவினை அழகுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1987 நவம்பர் 18]

விடை—

ஆம். சென்னை அண்ணா நகரில் உள்ள விஸ்வேஸ்வரய்யா பூங்காவை, போக்குவரத்துக் கழகங்கள், எண்ணெய் பெட்ரோலியக் கழகங்கள், வங்கிகள் போன்ற நிறுவனங்களின் உதவியுடன் மேம்படுத்த வீட்டுவசதி வாரியம் திட்டமிட்டுள்ளது.

### அம்மன்பேட்டையிலுள்ள நவீன அரிசி ஆலையிலிருந்து வெளியேறும் கழிவு நீர்.

34—வினா எண் 5508—திரு. **எஸ். இராசாராமன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், அம்மன்பேட்டையிலுள்ள நவீன அரிசி ஆலையின் கழிவு நீர் வெளியேறி துர்நாற்றம் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அருகாமையிலுள்ள நிலங்களில் இந்நீர் பாய்வதால் களர் நிலமாக மாறுவதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) ஆம். இது குறித்து அரசு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) கழிவு நீரில் களர் தன்மை உண்டாக்கக்கூடிய உப்புக்களோ மற்ற தீங்கு விளைவிக்கும் பொருள்களோ இல்லையாதலால் இந்த நீர் பாயும் நிலங்கள் களர் நிலமாக மாற வாய்ப்பில்லை.

### புழல் ஏரியை பாதுகாக்கும் திட்டம்.

35—வினா எண் 5526—திரு. **கே. பி. கே. சேகர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக்கு குடிநீர் வழங்கும் புழல் ஏரி தண்ணீர் அசுத்தப்படுத்தப்படுவதைத் தடுக்க ஏரிக்கரையின் மீதி பாகத்தை முள் வேலி அமைத்து பாதுகாக்க திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) : புழல் ஏரி தண்ணீர் அசுத்தப்படுவதைத் தடுக்க நாரவாரிகுப்பத்திற்கு அருகில் 200 மீட்டர் நீளத்தில் புதிய கரையும், 800 மீட்டர் நீளத்தில் கால்வாயும், 820 மீட்டர் நீளத்தில் முள்வேலியும் அமைக்கப்பட்டுள்ளது.

## விளவங்கோடு தாலுக்காவில் தாமிரபரணி ஆற்றில் பாலம் கட்டுதல்.

36—வினா எண் 5531—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா, முளம்மூடு என்ற இடத்தில் தாமிரபரணி ஆற்றில் பாலம் கட்டும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## கன்னியாகுமரி மாவட்டத்தில் மணவாளக்குறிச்சி பாலம் அமைக்கும் பணி.

37—வினா எண் 5544—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் இராஜாக்கமங்கலம் ரோட்டில் மணவாளக்குறிச்சி பாலம் அமைக்கும் வேலை மிகவும் மந்தமாக நடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த வேலையை துரிதப்படுத்த அரசு முன்வருமா?



விடை—

(அ) மற்றும் (ஆ) : ஒப்பந்தக்காரர் தனது வேலையில் சீரான முன்னேற்றத்தைக் காட்டாத காரணத்தினாலும், பழைய பாலத்தின் மீது தடை செய்யப்பட்ட போக்குவரத்து, பொது மக்களின் தொடர் வேண்டுகோளினாலும், மாவட்ட ஆட்சியர் கருத்தின்படியும், மாற்று வழிப் பாதையாக அமைக்க வேண்டி இருந்ததால் வேலையில் காலதாமதம் ஏற்பட்டது. தற்போது அப்பணி முடிந்து புதுப்பால வேலை துவங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை விரைவில் முடித்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## கோயில் யானைப் பாகர்களுக்கு இன்சூரன்ஸ் திட்டம்.

38—வினா எண் 9042—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக திருக்கோயில்களில் உள்ள யானைப் பாகர்களுக்கு ஆயுள் இன்சூரன்ஸ் திட்டம் அமல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தமிழக திருக்கோயில்களில் ஆலயச் சிப்பந்திகளாக இருக்கும் யானைப் பாகர்களுக்கும் ஆலய ஊழியர்களின் குரூப் இன்சூரன்ஸ் திட்டம் 1—7—1982 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

## பேரூர் கோயில் அருகிலுள்ள ஆற்றின் படித்துறையை பழுது பார்த்தல்.

39—வினா எண் 5682—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதியில் பேரூர் கோயில் அருகில் உள்ள ஆற்றில் படித்துறை இடிந்துள்ளது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை பழுது பார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இப் படித்துறை திருப்பணியை உபயதாரர்களைக் கொண்டு உபயமாக செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

**க.க. சாவடியில் வணிகவரி சோதனைச் சாவடியருகில் பாதையை அகலப்படுத்தல்.**

40—வினா எண் 5684—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி க.க. சாவடியில் வணிகவரி சோதனைச் சாவடி அருகில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க அங்குள்ள பாதையை அகலப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா ?

விடை—

பாதையை அகலப்படுத்த மாற்றுச் சாலை ஒன்றை அந்த இடத்தில் அமைக்க மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெற்றபின்னும் போதிய நிலம் கிடைக்கப்பெற்றவுடனும் இப்பணி மேற்கொள்ளப்படும்.

**கோவை காந்தி நகரில் மேல்நிலைத் தொட்டி கட்டுதல்.**

41—வினா எண் 5685—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சியிலுள்ள வெங்கிட்டாபுரம் அருகிலுள்ள காந்தி நகரில் மேல்நிலைத்தொட்டி கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா ?





(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பு என்ன ?

(இ) அரிசனங்கள் வாழ்கிற பகுதியாக உள்ளதால் விரைவில் கட்ட என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) காந்தி நகர் என்ற இடத்தில் மேல்நிலைத்தொட்டி தனியாகக் கட்டும் திட்டம் ஏதுமில்லை. வெங்கிட்டாபுரத்தில் ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டும் திட்டம் இருக்கிறது. இது பூர்த்தியானால் காந்தி நகர் பகுதி மக்களுக்கும் தண்ணீர் கிடைக்கும்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) தற்சமயம், காந்தி நகரில் உள்ள அரிசன மக்களுக்கு ஒரு பொது பவுண்டன் (Fountain) கட்டப்பட்டுள்ளது. இரு குழாய்கள் மூலம் தினமும் 8 முதல் 10 மணி நேரம் சிறுவாணி தண்ணீர் கிடைக்கிற அளவு வசதி செய்யப்பட்டுள்ளது. இவ் வசதிக்காக இரண்டு குழாய் முனைகள் (Points) உள்ளன.

**திருப்பத்தூரில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தல்.**

42—வினா எண் 5744—திரு. கு. ரமணி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முத்துராமலிங்கம் மாவட்டம், திருப்பத்தூரில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

முத்துராமலிங்கம் மாவட்டம், திருப்பத்தூரில் தீயணைப்பு நிலையம் திறப்பதற்கு ஏற்கனவே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான நிரந்தர கட்டிடம் கட்டுமானம் செய்யப்பட்டு வருகின்றது. கட்டுமானம் செய்வித்து கிடைக்கப்பெற்றவுடன், திருப்பத்தூரில் ஒரு தீயணைப்பு நிலையம் திறக்கப்படும்.

**திருப்பத்தூர் அரசு மருத்துவமனை.**

43—வினா எண் 5745—திரு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முத்துராமலிங்கம் மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா அரசு மருத்துவமனையில் ஒரு நாளைக்கு எவ்வளவு வெளி நோயாளிகள் வருகின்றார்கள்? உள் நோயாளிகள், படுக்கைகள் எவ்வளவு உள்ளன?

(ஆ) டாக்டர்கள் எத்தனை பேர்கள்? பெண் டாக்டர்கள் உள்ளார்களா?

(இ) இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

| | |
|---|---|
| (அ) ஒரு நாளைக்கு வருகின்ற வெளி நோயாளிகள் | 425 |
| உள் நோயாளிகள் | 50 |
| ஒப்பளிக்கப்பட்ட படுக்கைகள் | 38 |

(ஆ) மொத்தம் ஆறு மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர். அவற்றின் விவரம் :—

| | |
|---|---|
| ஆண் மருத்துவர் | 3 |
| பெண் மருத்துவர் | 1 |
| பல் மருத்துவர் | 1 |
| சித்தா மருத்துவர் | 1 |
| மொத்தம் | 6 |

(இ) இல்லை.

**கோவை மாநகராட்சியில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள்.**

44—வினா எண் 5749—திரு. கு. **ரமணி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சிகளில் உதவியாளர்களாகப் பணியாற்றும் பணி மூத்தவர்கள் வரிசைப்படி லைசென்ஸ் இன்ஸ்பெக்டர்கள் பதவிக்கு நியமிக்கப்பட வேண்டுமென்ற ஊரக வளர்ச்சி



உள்ளாட்சித் துறை 25—11—1981 தேதியிட்ட ஆணை எம்.எஸ். 1951 கோவை மாநகராட்சியில் நடைமுறையாக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரங்கள் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : நகராட்சிகளுக்கான இந்த ஆணை கோயம்புத்தூர் மாநகராட்சிக்குப் பொருந்தாது.

ஆனால், 12—4—1983-ம் தேதியிட்ட, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, அரசு ஆணை எண் 545-ல் கோவை மாநகராட்சியில், இளநிலை உதவியாளர் அந்தஸ்திலிருந்து, உரிம ஆய்வாளர் பதவிகளை உதவியாளர் ஸ்தானத்திற்கு உயர்த்தி உத்தரவிடப்பட்டுள்ளது. அதில் கூறியுள்ளபடி, உயர்த்தப்பட்ட ஸ்தானத்திற்கு, தேர்வுநிலை இளநிலை உதவியாளர்களில், உதவியாளராக பதவி உயர்வு கொடுப்பதற்கு தகுதி உள்ளவர்களை அவர்களின் பணி மூப்பை கருத்தில் கொண்டு நியமனம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு நியமனம் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 14 ஆகும்.

**மயிலை கபாலீஸ்வரர் கோயில் குளக்கரையில் புதிதாக காய்கறி விற்பனை அங்காடிகள் கட்டுதல்.**

45—வினா எண் 5754—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலுக்கு அருகிலுள்ள குளக்கரையில் புதிதாக காய்கறி விற்பனை அங்காடிகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

[1987 நவம்பர் 18

(ஆ) படுக்கை வசதியை அதிகரிக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

விடை—

(அ) 622.

(ஆ) தற்போது இல்லை.

**திருப்பூர் இரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள மேம்பாலம்.**

50—வினா எண் 5871—திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ரெயில்வே நிலையத்திற்கு அருகே உள்ள மேம்பாலத்தின் நடுப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நடைபாதை பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

விடை—

இப்பாலத்தின் மேல் உள்ள பாதையில் ஏற்படும் பழுதுகள் அவ்வப்போது சரி பார்க்கப்பட்டு போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் இப்பாலத்தின் நடுப்பகுதியில் அமைந்துள்ள நடைபாதைகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளையும் சரிசெய்து நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

**கதர்த் துறையில் பணிபுரியும் தொழிலாளர்கள்.**

51—வினா எண் 5874—திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கதர்த் துறையில் பணியாற்றுகிற தொழிலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அவர்களில் நிரந்தரமாகவுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?



1987 நவம்பர் 18]

விடை—

(அ) 31—12—1985-ஓள்ள கணக்குகள்படி தமிழகத்தில் கதர்த் துறையில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 43,853 ஆகும்.

(ஆ) அவர்களில் நிரந்தரமாகப் பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 77.

**திருப்பூர் தொகுதியிலுள்ள சாயத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர்.**

52—வினா எண் 5876—திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதியில் சாயப்பட்டறைகளும் டையிங் பேக்டரிகளும் நிறைந்த பகுதிகளில் நிலத்தடி நீர் கெட்டு வருவது அரசிற்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சாயத் தொழிற்சாலைகளின் கழிவுநீர் குறிப்பிட்ட தரத்திற்கு சுத்திகரித்து வெளியேற்றப்படுவதற்கு அரசு, தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தை பிரித்தமைத்தல்.**

53—வினா எண் 5962—திரு. கே. உச்சி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தை கூடலூர், பந்தலூர் ஊராட்சி ஒன்றியங்களாகப் பிரிக்கக்கோரி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து குறிப்பு ஏதேனும் அனுப்பப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) அரசுக்கு செயற்குறிப்பு ஏதும் வரவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**சென்னை அண்ணா மேம்பாலத்தின் கீழ் உள்ள குதிரை சிலைகளை அகற்றுதல்.**

54—வினா எண் 6169—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அண்ணா மேம்பாலத்தின் கீழ்பகுதியில் உள்ள குதிரை சிலைகளை அகற்ற அரசு முடிவு செய்துள்ளதா ?

விடை—

சென்னை அண்ணா மேம்பாலத்தின் கீழ்பகுதியில் உள்ள குதிரை சிலைகளை அகற்றுவது குறித்து இந்தத் துறையிடம் எவ்விதக் குறிப்புமில்லை.

**செருவாமணி ஊராட்சியிலுள்ள மேல்நிலைத் தொட்டி.**

55—வினா எண் 6462—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம் செருவாமணி ஊராட்சியில் மேல்நிலைத் தொட்டி கட்டி பைப் லைன் போட்டும் குடிநீர் வழங்கவில்லை என்பதற்கு அப்பகுதி மக்களிடமிருந்து கோரிக்கை மனு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தண்ணீர் வழங்கப்படும் ?





விடை—

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம் கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள செருவாமணி ஊராட்சி மக்களுக்கு 1—2—1986 முதல் மீண்டும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**காமராசர் நினைவில்லம்.**

56—வினா எண் 6534—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காமராஜ் நினைவில்லத்தில் அவருடைய பேச்சுக்களும், கருத்துக்களும் ஒலிநாடா மூலம் ஒலிபரப்பப்படுமா ?

விடை—

காமராஜ் நினைவில்லத்தில் அவருடைய பேச்சுக்களும், கருத்துக்களும் ஒலிநாடா மூலம் ஒலிபரப்பும் திட்டம் தற்சமயம் ஏதும் இல்லை.

**திருப்பூர் லட்சுமி நகரில் ஆரம்பப்பள்ளி ஏற்படுத்தல்.**

57—வினா எண் 6566—திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் லட்சுமி நகருக்கு ஆரம்பப் பள்ளி வேண்டுமென்று நீண்ட நாட்களாக அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்து வருவது அரசிற்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், பள்ளி கட்டித்தர அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் லட்சுமி நகரில் ஏற்கனவே நகரமன்ற ஆரம்பப்பள்ளி வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வந்தது. அக்கட்டிடம் பழுதடைந்த நிலையில் இருந்ததாலும்,

உரிமையாளர் கட்டிடத்தை எடுத்துக் கொண்டதாலும், வேறு கட்டிடம் உடனடியாக கிடைக்கப் பெறாததாலும், அப்பள்ளி மேட்டுப்பாளையம் நகர்மன்ற ஆரம்பப்பள்ளியின் ஒரு பகுதியில் மாற்றப்பட்டு தற்காலிகமாக நடைபெற்று வருகிறது. தற்போது லட்சுமி நகர் வட்டாரத்தில் நகர் மன்றம் வாங்கியுள்ள இடத்தில் புதிய கட்டிடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டபின் லட்சுமி நகர் வட்டாரத்திலே பள்ளி செயல்படும்.

**பரிசுச் சீட்டு விற்பனை மூலம் கிடைத்த நிகர லாபம்.**

58—வினா எண் 6606—**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பரிசுச் சீட்டு விற்பனையில் ஆரம்பகாலத்தில் இருந்து இதுவரை அரசுக்குக் கிடைத்த நிகர லாபம் எவ்வளவு?

விடை—

ரூ. 40,78,32,000.

**தமிழ்நாட்டிலுள்ள தீயணைப்பு நிலையங்கள்.**

59—வினா எண் 6736—**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் மொத்தம் எத்தனை தீயணைப்பு நிலையங்கள் உள்ளன?

(ஆ) 1985 ஆம் ஆண்டு எத்தனை நிலையங்கள் திறக்கப் படவுள்ளன?

விடை—

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 136 தீயணைப்பு நிலையங்கள் உள்ளன.



(ஆ) ஐந்து தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| மதுரை மாவட்டம் | ஆண்டிப்பட்டி. |
| | மயிலாடும்பாறை. |
| | திருமங்கலம். |
| சேலம் மாவட்டம் | திருச்செங்கோடு. |
| தென் ஆற்காடு மாவட்டம் | நெல்லிக்குப்பம். |

**பொன்னேரியில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் திட்டம்.**

60—வினா எண் 6873—**திரு. கே. பி. கே. சேகர்:** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் பொன்னேரியில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் புதிய தீயணைப்பு நிலையங்கள் திறப்பதற்கான ஊர்களின் முன்னுரிமைப் பட்டியலில் பொன்னேரி சேர்க்கப்பட்டுள்ளது. அரசின் நிதிநிலைமைக்கேற்ப உரிய நேரத்தில் அங்கு தீயணைப்பு நிலையம் திறக்கப்படும்.

**சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நாள்தோறும் வசூலாகும் தொகை.**

61—வினா எண் 6882—**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை வள்ளுவர் கோட்டத்தைக் காணவரும் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து நாள்தோறும் வசூலாகும் தொகை சராசரியாக எவ்வளவு?

விடை—

சென்னை வள்ளுவர் கோட்டத்திற்கு வருகை தரும் பார்வையாளர்களின் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக ரூ. 1,000 வசூலாகிறது.

[1987 நவம்பர் 18

### முந்திரி சாகுபடி விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்.

62—வினா எண் 6884—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் முந்திரி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 1984 ஆம் ஆண்டு எவ்வளவு கடன் வழங்கப்பட்டது?

விடை—

முந்திரி சாகுபடிக்காக கடன் வழங்கப்படவில்லை. ஆனால் முந்திரி பராமரிப்புக்காக தென்னார்க்காடு மத்திய கூட்டுறவு வங்கி 1984-85 ஆம் ஆண்டில் 9 பேர்களுக்கு ரூ. 0.13 இலட்சமும், திருச்சிராப்பள்ளி மத்திய கூட்டுறவு வங்கி 1985-86 ஆம் ஆண்டில் 3 பேர்களுக்கு ரூ. 0.02 இலட்சமும் கடன் வழங்கியுள்ளது.

### கவுண்டம்பூதூரிலுள்ள குடிநீர் கிணறு.

63—வினா எண் 6914—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம், சாணார்பட்டி யூனியன் ராகுலாபுரம் பஞ்சாயத்து, கவுண்டம்பூதூரில் குடிநீருக்காக பழைய கேணியை ஆழப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

இல்லை. குடிநீர் கிணற்றுக்கு அருகில் ஆழ்துளைக் கிணறு (போர்வெல் ஹேண்ட் பம்ப்) நல்ல முறையில் இயங்கி வருகிறது. கிணற்றில் போதுமான தண்ணீர் உள்ளது.

### திம்மநல்லூர்-வடுகம்பட்டி சாலை அமைக்கும் திட்டம்.

64—வினா எண் 6991—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, நத்தம் வட்டாரத்தில் உள்ள திம்ம நல்லூர்-வடுகம்பட்டிக்கு 1½ கி.மீ. சாலையினை அமைத்திடும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) ஆம்.



1987 நவம்பர் 18]

(ஆ) நத்தம் தொகுதி, நத்தம் வட்டாரத்தில் உள்ள திம்ம நல்லூர்-வடுகம்பட்டிக்கு 1½ கி.மீ. சாலை அமைக்கும் பணி 1986-87 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் சேர்த்து நிறைவேற்றப்படும்.

### ஆண்டிவாடஞ் செட்டியூரிலுள்ள குடிநீர்க் கிணறு.

65—வினா எண் 6927—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம், சாணார்பட்டி யூனியன், இராகுலாபுரம் பஞ்சாயத்து, ஆண்டிவாடஞ் செட்டியூரில் பழைய கேணியை ஆழப்படுத்தி, குடிநீருக்காக வசதி செய்ய அரசு முன்வருமா?

விடை—

இல்லை. சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், இராகுலாபுரம் பஞ்சாயத்து ஆண்டிவாடஞ் செட்டியூரிலுள்ள பழைய கிணற்றில் குடிநீருக்குப் போதுமான அளவு தண்ணீர் வசதியுள்ளதால், கிணற்றை இப்போது ஆழப்படுத்த அவசியமில்லை எனக் கருதப் படுகிறது.

### முசிறி தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம்.

66—வினா எண் 6971—திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் முசிறியில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணிகள் துவங்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறி தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிலம் குறித்து, வழக்கு ஒன்று மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் நடைபெறுவதால், வழக்கு முடிந்த பின்னரே நிரந்தரக் கட்டிடம் கட்டுவது குறித்து தீர்மானிக்க இயலும்.

[1987 நவம்பர் 18

**முகப்பேறு சாலையில் கட்டப்பட்டுள்ள வட்ட வடிவ வீடுகள்.**

67—வினா எண் 7297—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா நகர் மேற்கிலிருந்து அம்பத்தூர் செல்லும் முகப்பேறு ரோட்டில் கட்டப்பட்டுள்ள வட்ட வடிவ வீடுகள் எத்தனை?

(ஆ) அவற்றில் எத்தனை குடும்பங்கள் குடியிருக்கின்றன?

விடை—

(அ) மொத்த வட்ட வடிவ வீடுகள் 1,072.

(ஆ) இன்னமும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

**அரசுப் பண்ணையில் கரும்பு உற்பத்திக்கு ஆகும் செலவு.**

68—வினா எண் 7334—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசாங்கப் பண்ணையில் ஒரு ஏக்கருக்கு கரும்பு உற்பத்தி செய்ய எவ்வளவு செலவு ஆகும்?

விடை—

ஒரு ஏக்கருக்கு கரும்பு உற்பத்தி செய்ய சுமார் ரூ. 3,000 முதல் ரூ. 3,400 வரை செலவாகிறது.

**மு. பரூர் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல்.**

69—வினா எண் 7338—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதியிலுள்ள மு. பரூரிலுள்ள உயர்நிலைப் பள்ளி கீத்துக்கொட்டகையில் நடைபெறுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா?



1987 நவம்பர் 18]

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இப்பள்ளிக்கு ரூ. 1.20 இலட்சம் செலவில் இரு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் பொதுப் பணித்துறையினரால் கட்டி முடிக்கப்பட்டு 26—2—1986 அன்று பள்ளித் தலைமை ஆசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

**பழையனூரில் காவல் நிலையம் அமைத்தல்.**

70—வினா எண் 7401—திரு. க. பாரமலை: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், மானாமதுரை வட்டம், பழையனூரில் ஒரு காவல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

விடை—

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், மானாமதுரை வட்டம், பழையனூரில் காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரியம்பகபுரம் கிராமத்தில் புதிய துவக்கப்பள்ளி ஆரம்பிக்கும் திட்டம்.**

71—வினா எண் 7549—திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குடவாசல் ஊராட்சி ஒன்றியம், பெரும்பண்ணையூர் ஊராட்சி திரியம்பகபுரம் கிராமத்தில் புதியதாக ஒரு துவக்கப்பள்ளி ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

**அனந்தநல்லூர் வாய்க்கால் தலைப்பை மாற்றி அமைக்கும் திட்டம்.**

72—வினா எண் 7558—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், வீரசோழன் ஆற்றின் அனந்தநல்லூர் வாய்க்கால் தலைப்பை மங்கநல்லூர் வாய்க்கால் தலைப்பு அருகே மாற்றி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது. தேவைக்கேற்பவும் தொழில் நுட்ப அடிப்படையிலும் தக்க முடிவு செய்யப்படும் என தலைமைப் பொறியாளர் (பர்சனம்) கூறியுள்ளார்.

**வேளாண்மைக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டோர் எண்ணிக்கை.**

73—வினா எண் 7579—திரு. க. பாரமலை : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982-83, 1983-84 மற்றும் 1984-85 ஆண்டுகளில் விவசாயக் கல்லூரிகளில் மொத்தம் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் பிரிவைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) பழங்குடி இனத்தில் கொண்டாரெட்டி ஜாதியைச் சேர்ந்தவர்கள் மட்டும் எத்தனை பேர் ?



விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) தமிழ்நாட்டிலுள்ள வேளாண்மைக் கல்லூரிகளில் 1982-83, 1983-84 மற்றும் 1984-85 ஆண்டுகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் விபரமும், அவர்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் பிரிவைச் சேர்ந்தவர்கள் பற்றிய விபரமும், அப்பழங்குடி இனத்தில் கொண்டாரெட்டி ஜாதியைச் சேர்ந்தவர்கள் விபரமும் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

| ஆண்டு. | மொத்தம் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர். | கொண்டாரெட்டி ஜாதியைச் சேர்ந்தவர்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1982—83 .. | 578 | 111 | .. |
| 1983—84 .. | 667 | 116 | 5 |
| 1984—85 .. | 766 | 137 | 5 |

**மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டோர் எண்ணிக்கை.**

74—வினா எண் 7592—திரு. க. பாரமலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982-83, 1983-84 மற்றும் 1984-85 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் மொத்தம் எத்தனை பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் ?

(ஆ) அதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் பிரிவினைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்?

(இ) இவர்களில் பழங்குடி மக்கள் இனத்தைச் சேர்ந்த கொண்டாரெட்டி ஜாதியைச் சேர்ந்தவர்கள் மட்டும் எத்தனை பேர்?

விடை—

| | ஆண்டு. | சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்கள். |
|---|---|---|
| (அ) | 1982–83 .. .. .. | 1,052 |
| | 1983–84 .. .. .. | 1,071 |
| | 1984–85 .. .. .. | 1,072 |
| (ஆ) | 1982–83 .. .. .. | 181 |
| | 1983–84 .. .. .. | 180 |
| | 1984–85 .. .. .. | 176 |
| (இ) | 1982–83 .. .. .. | 13 |
| | 1983–84 .. .. .. | 8 |
| | 1984–85 .. .. .. | 2 |

## நீலகிரி மாவட்டத்தில் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றல்.

75—வினா எண் 7650—திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு உயர்நிலைப்பள்ளிகள் எந்த அடிப்படையில் மேல்நிலைப்பள்ளிகளாக மாற்றப்படுகின்றன?

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் வரும் கல்வி ஆண்டில் ஏதேனும் மேல்நிலைப் பள்ளியாக மாற்றப் படுமா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட பொது மக்கள் பங்குத் தொகையான ரூ. 25,000 செலுத்தப்பட்டிருக்க வேண்டும். அரசு உயர்நிலைப் பள்ளி





மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படுவதற்கு முன்னர் அப்பள்ளி அமைந்திருக்கும் வட்டாரத்தின் கல்வித் தேவையை பூர்த்தி செய்ய அப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படத்தான் வேண்டுமா அல்லது அப்பள்ளியிலிருந்து 8 கி.மீ. தூரத்திலுள்ள இதர மேல்நிலைப் பள்ளிகளே அத்தகைய கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யுமா என ஆராயப்படும். மேலும், குறிப்பிட்ட அப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படுவதால் அருகி லுள்ள இதர மேல்நிலைப் பள்ளிகளின் மாணவர்களின் வருகை பாதிக்கப்படுமா என்பதும் கவனத்தில் கொள்ளப்படும். உயர்த்தப் பட உத்தேசிக்கப்படும் உயர்நிலைப் பள்ளியின் 10-வது வகுப்பில் உள்ள மாணவர்கள் அப்பள்ளியின் 11-வது வகுப்புக்குத் தேவை யான குறைந்த பட்ச எண்ணிக்கையிலாவது உள்ளனரா என்பதும் கருத்தில் கொள்ளப்படும்.

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தக் கோரி கருத்துருக்கள் எதுவும் இதுவரை பெறப்படவில்லை. உரிய கருத்துருக்கள் சார்ந்த ஆய்வு அலுவலர்களிடமிருந்து பெறப்பட்டால் அவைகள் உயர் மட்டக் குழுவின் பரிந்துரைக்கு வைக்கப்பட்ட பின்னர் அரசால் பரிசீலிக்கப்படும்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## அம்பத்தூர் தொழிற்பேட்டையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகள்.

76—வினா எண் 7662—திரு. கே. உச்சி: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னை, அம்பத்தூர் தொழிற்பேட்டையில் பணி யாற்றும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகள் எத்தனை?

(ஆ) அதன் மூலம் பயன்பெற்ற தொழிலாளர்கள் எத்தனை பேர்?

விடை—

(அ) அம்பத்தூர் தொழிற்பேட்டையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்காக மொத்தம் கட்டப்பட்ட 201 வீடுகளில், 200 வீடுகள் தகுதிவாய்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கப் பட்டுள்ளன. எஞ்சிய ஒரு வீடு "அம்பத்தூர் தொழிற்பேட்டை தொழிலாளர் குடியிருப்போர் நல சங்கத்திற்கு" வழங்கப் பட்டுள்ளது.

(ஆ) அதன்மூலம் பயன்பெற்ற தொழிலாளர்கள் 200 பேர் களும் அவர்களின் குடும்பத்தினரும் ஆவர்.

## மத்திய தொகுப்பிற்கு வழங்கப்பட்ட அரிசி மற்றும் உணவுப் பொருட்கள்.

77—வினா எண் 7688—திரு. கே. உச்சி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1983 ஜுலை முதல் 1985 ஜுன் வரை மத்திய தொகுப்புக்கு வழங்கப்பட்ட அரிசி மற்றும் உணவுப் பொருள்களின் அளவு என்ன?

விடை—

1983 ஜுலை முதல் 1985 ஜுன் வரை மத்திய தொகுப்பிற்கு அரிசி வழங்கப்படவில்லை, மற்ற உணவுப் பொருள்கள் எதும் இம்மாநிலத்திலிருந்து மத்திய தொகுப்பிற்கு வழங்குவதில்லை.

## சென்னையில் கட்டப்பட்டுள்ள திரு. வி. க. பாலம்.

78—வினா எண் 7782—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள திரு. வி. க. பாலம் எந்த ஆண்டு கட்டப்பட்டது?

(ஆ) அதற்கான செலவு எவ்வளவு?



விடை—

(அ) சென்னை அடையாறு பகுதியிலுள்ள திரு. வி. க. பாலம் கட்டும் வேலை 29—11—1971-ல் ஆரம்பிக்கப்பட்டு 28—2—1974-ல் முடிக்கப்பட்டது.

(ஆ) அதற்கான செலவு ரூ. 56,05,905.

## வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்ட்.

79—வினா எண் 7790—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1985 ஆம் ஆண்டு வெளிநாடுகளிலிருந்து தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள சிமெண்டின் அளவு எவ்வளவு?

விடை—

1985-86 ஆம் ஆண்டுக்கான மைய அரசின் இறக்குமதிக் கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலம் 1985-ம் ஆண்டில் 55,000 டன் சிமெண்ட் இறக்குமதி செய்யப்பட்டது.

## திருவாடானையில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக கிளை பணிமனை அமைக்கும் திட்டம்.

80—வினா எண் 7800—திரு. கா. சொர்ணலிங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடானையில் எம். பி. டி. சி. கிளை டிப்போ அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## மதுரை நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்.

81—வினா எண் 7843—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நகரில் உள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

விடை—

மதுரை நகரில் உள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அவையாவன :—

(1) மதுரை நகருக்குள் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு இராமநாதபுரம், சிவகெங்கை, கும்பகோணம் போன்ற ஊர்களுக்கு செல்லும் பேருந்துகளை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகில், பனகல் சாலையில் புதிதாக திறக்கப்பட்ட அண்ணா பேருந்து நிலையத்திற்கு மாற்றி அமைக்கப்பட்டது. அதனால் வெளி வீதிகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்கள் குறைக்கப்பட்டன.

(2) சாலைச் சந்திப்புகளிலும், பஸ் நிறுத்துமிடங்களிலும் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்களை குறைக்க பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தினருடன் போக்குவரத்து ஆலோசனைக் குழு மூலம் கலந்து பேசி, சாலைச் சந்திப்புகளுக்கு அருகில் உள்ள நகர் பேருந்து நிறுத்தும் இடங்களையும், சாலைகளில் எதிர் எதிராக உள்ள நகர் பேருந்து நிறுத்தும் இடங்களையும் கூடுமானவரை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.





(3) மத்திய சந்தை மற்றும் சுற்றுப் பகுதிகளில் குறிப்பிட்ட நேரங்களில் லாரிகள் வந்து செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் நான்கு சித்திரை வீதிகளிலும் லாரிகள் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது.

(4) வெளிவீதிகளில் இருபக்கம் வாகனங்கள் நிறுத்துவது தடை செய்யப்பட்டு, சிறிய வாகனங்களை ஒருபுறமாக நிறுத்தி வைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(5) போக்குவரத்து விதிகளை மீறுபவர்களின் மேல் 1985-ம் ஆண்டில் 8,827 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. தொடரப்பட்டுள்ளன. மேலும் மோட்டார் வாகன வழக்குகள் மற்றும் போக்குவரத்து போக்குவரத்து இடைஞ்சல் செய்யும் சாலையோர வியாபாரிகள், விதிகளை மீறும் கூலி விற்போர், சைக்கிள்கள், சைக்கிள் மற்றும் கைவண்டிகள், மாட்டுவண்டிகள், 887 சிறு வழக்குகள் தொடரப் ரிக்ஷாக்கள் முதலியவைகள் மீது, பட்டன.

மேலும் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## விளாத்திக்குளம் தொகுதியில் குளங்களை மராமத்து செய்யும் செயற்குறிப்பு.

82—வினா எண் 7856—திரு. சு. குமரகுருபர ராமநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதியில் வறண்டு கிடக்கின்ற குளங்களில் (மேடாகிய பகுதியில்) குறிப்பாக தத்தநேரி வேலாயுதபுரம், மேல்மாந்தை, பல்லாக்குளம் ஆகிய தாழ்த்தப்பட்ட கிராமங்களில் மராமத்து வேலைகள் செய்யும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

**விடை—**

திருநெல்வேலி மாவட்டத்தில், விளாத்திகுளம் தொகுதியில், சத்தநேரி, மேல்மாந்தை, பல்லாக்குளம் (கிழக்கு) ஆகிய குளங்களில் மராமத்து வேலைகள் விரைவுபடுத்தப்பட்ட சிறுபாசனத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, முடிவடையும் தருவாயில் இருக்கின்றன. வேலாயுதபுரம் குளத்தின் மராமத்து வேலை இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

### கிராமப்புற சாலைகளை சீர் செய்யும் செயற்குறிப்பு.

83—வினா எண் 7930—திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் மூலம் அதிக நிதி ஒதுக்கீடு செய்து கிராமப்புற சாலைகளை சீர் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

மைய அரசின் ஆணைப்படி புதிதாக சாலைகள் அமைக்கத் தான் இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்படுகிறதே தவிர, தற்போது சாலைகளை சீர் செய்ய நிதி வழங்கப்படுவதில்லை.

### விவசாயிகளுக்கு சிறந்த நீர் நிர்வாகம் பெறச்செய்யும் திட்டம்.

84—வினா எண் 8063—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மாநிலத்தில் சிறந்த நீர் நிர்வாகத்தினை பெறுவதற்கு அரசு விவசாயிகளுக்கு செய்யும் உதவிகள் என்ன?

**விடை—**

தமிழ் நாட்டில் சிறந்த நீர் நிர்வாகத்தை பெறுவதற்கு பல திட்டங்கள் வேளாண்மைப் பொறியியல் துறையினால் செயல்படுத்தப்படுகின்றன. மத்திய அரசின் நிதியுதவியோடு காவிரி,



கீழ்பவானி, சாத்தனூர், பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனப் பகுதியிலும் உலக வங்கி நிதி உதவியோடு பெரியாறு வைகை பாசனப் பகுதியிலும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. கண்மாய் பாசனப்பகுதிகளில் நீர் நிர்வாகத்தை மேம்படுத்த ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் நிதியுதவியுடன், செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, புதுக்கோட்டை மற்றும் பசும் பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களிலுள்ள ஏரிகள் நவீனப்படுத்துவதற்காக பொதுப் பணித்துறையினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த ஏரிகளில் பாசன மேம்பாட்டுப் பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையினரால் செயல்படுத்தப்படுகின்றன. மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்பட்டு வரும் காவிரி, கீழ்பவானி, பரம்பிக்குளம்-ஆளியாறு, சாத்தனூர் பாசனப் பகுதிகளில் செய்யப்படும் பண்ணை மேம்பாட்டுப் பணிகளுக்கு 50 சதவித மானியமும் விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது.

இதேபோன்று உலக வங்கி நிதியுதவியுடன் செயல்பட்டு வரும் பெரியார் வைகை பண்ணை மேம்பாட்டுத் திட்டத்திற்கும், மற்றும் ஐரோப்பிய பொருளாதாரக் குழு உதவியுடன் இயங்கி வரும் கண்மாய் பாசன பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு எவ்வளவு மான்யம் கொடுப்பது என்பது பற்றி பரிசீலனையிலுள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் பயிருக்குத் தேவையான பாசன நீர் உரிய காலங்களில் உரிய அளவு கிடைக்கும் வகையில் பாசன வாய்க்கால்களை பகிர்வுத் தொட்டிகள், படுகை அணை ஆகியவை அமைத்துக் கொடுத்து பாசனம் சிறப்பாக நடைபெற வகை செய்யப்படுகிறது. இதன் மூலம் இப்பாசனப் பகுதி திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ள இடங்களில் உள்ள விவசாயிகளுக்கு சீரான நீர் தேவைப்படும் அளவிற்கு பெற ஏதுவாகிறது. மேலும், காவிரி, கீழ்பவானி மற்றும் பெரியார் வைகை பாசனப்பகுதிகளில் ஒவ்வொரு பாசனப் பகுதியிலும் சுழற்சி முறையில் நீர்ப்பாசனத்தை அறிமுகப்படுத்தும் வகையில் ஒரு முன்னேற்றத் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

[1987 நவம்பர் 18

### சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்க திட்டம்.

85—வினா எண் 8074—திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்க அல்லது வீடு கட்ட மான்யத்தோடு கூடிய கடன் தொகை கொடுக்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—

இல்லை.

### ஆலங்குடி தொகுதியில் வெள்ளாற்றின் குறுக்கேயுள்ள பாலம்.

86—வினா எண் 8128—திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி நா. கொத்தமங்கலம் வெள்ளாற்றின் குறுக்கே உள்ள பாலம் உடைந்துள்ளது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம். திருவரங்குளம் ஒன்றியம் நா. கொத்தமங்கலம் இசுகுப்பட்டி சாலையில் வெள்ளாற்றின் குறுக்கே அமைந்துள்ள பழுதடைந்துள்ள பாலம் ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பில் உள்ளது. பாலத்தை புதியதாக கட்ட மதிப்பீடு ரூ. 40,000-க்கு அங்கீகரிக்கப்பட்டு, திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளால் ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது.



1987 நவம்பர் 18]

### சேந்தங்குடி பெரியாத்தாள் ஊரணி வாய்க்காலில் பாலம் கட்டுதல்.

87—வினா எண் 8132—திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி கொத்தமங்கலம் பெரியகுளம் கண்மாயில் இருந்து சேத்தன்குடி மெய்யாத்தான் ஊரணி செல்லும் வாய்க்காலை மராமத்து செய்து பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கப்படும்?

(இ) திட்ட மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) கேள்வியில் குறிப்பிட்டுள்ள ஊரணியின் சரியான பெயர் 'பெரியாத்தாள்' ஊரணியாகும். மேற்படி வாய்க்காலில் இரண்டு சிறு பாலங்கள் (கல்வெர்ட்) கட்டப்பட்டு விட்டன.

(2) வாய்க்காலை மராமத்து செய்யும் பணி இவ்வாண்டில் (1986-87) எடுத்துக் கொள்ளப்படும். திட்ட மதிப்பீடு ஆய்வில் உள்ளதால் மதிப்பீடு பற்றி தகவல் ஆய்வு முடிவடைந்த பின்னர் தான் தெரியவரும்.

### ஆலங்குடி பேரூராட்சியில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்கும் திட்டம்.

88—வினா எண் 8152—திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி பேரூராட்சியில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் பணிமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பு எவ்வளவு?

(இ) திட்டம் எப்போது துவங்கும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சுமார் பத்து இலட்சம் ரூபாய்கள்.

(இ) தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் மேற்படி திட்டம் துவங்கப்படும்.

### மாத்தூர் ஒன்றியத்திற்கு நிதி ஒதுக்குதல்.

89—வினா எண் 8161—திரு. டி. எம். வெங்கடாசலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மாத்தூர் ஒன்றியத்திற்கு நிதி ஒதுக்கீடு எப்போது செய்யப்படும்.

விடை—

தற்போது மாத்தூர் ஒன்றியத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

### மாத்தூர் ஒன்றியத்திற்கு அலுவலகம் கட்டுதல்.

90—வினா எண் 8164—திரு. டி. எம். வெங்கடாசலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மாத்தூர் ஒன்றியத்திற்கு எப்போது அலுவலகம் கட்டப்படும்?

விடை—

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மாத்தூர் ஒன்றியத்திற்கு அலுவலகம் கட்ட 1987-88-ம் ஆண்டு பகுதி திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்ய செயற்குறிப்பு அனுப்பப்பட்டு உள்ளது. நிதி ஒதுக்கீடு செய்தபின் வேலை துவங்கப்படும்.



### Grants to Madras Vigilance Association at Mylapore.

91. வினா எண் 11552—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு சத்துணவு மற்றும் சமூக நலம் சுதார்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Whether any grant is offered by the State Government to the Madras Vigilance Association at Katcheri Road, Mylapore, Madras-4.

(b) If so, the details thereof for the last five years.

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆதரவற்ற சிறுமியர் மற்றும் பெண்களுக்கு அடைக் கலம் அளிக்கும் பொருட்டு, இந்நிலையம் இயங்கி வருகிறது. இவ்வொரி ஒருவருக்கு மாதம் ரூ. 45 வீதம் ஆண்டு மானியமாக ரூ. 8,500 இந்நிலையத்திற்கு அரசு அளித்து வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்நிலையத்திற்கு அளிக்கப்பட்ட மானிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| 1980-81 | ரூ. 8,500. |
| 1981-82 | ரூ. 8,500 |
| 1982-83 | ரூ. 8,500 |
| 1983-84 | ரூ. 8,500 |
| 1984-85 | ரூ. 8,505 |

### நேசமணி போக்குவரத்துக் கழக திங்கள் சந்தை பணிமனைக்கு நில ஆர்ஜிதம்.

92—வினா எண் 8300—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் திங்கள் சந்தை பணிமனைக்கு நில ஆர்ஜித நடவடிக்கை எந்த நிலையிலுள்ளது?

(ஆ) காலதாமதத்துக்கான காரணம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இது குறித்து அரசு ஆணை விரைவில் வெளியிடப் படலாம்.

[1987 நவம்பர் 18

### தாம்பரம் ஜி.எஸ்.டி. சாலையிலுள்ள குடிசைவாழ் மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம்.

93—வினா எண் 8404—திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் நகரில் ஜி.எஸ்.டி. ரோட்டில் உள்ள குடிசைகளில் வாழ்பவர்களுக்கு, குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### 1984-ம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலின்போது ஏற்பட்ட கலவரங்கள்.

94. வினா எண் 2994—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984 டிசம்பர் மாதத்தில் தமிழகத்தில் நடைபெற்ற தேர்தலின்போது கலவரங்கள் நடைபெற்றனவா?

(ஆ) அதனால் எத்தனை பேர்கள் பாதிக்கப்பட்டார்கள்?

(இ) எத்தனை பேர் இறந்தனர்?

விடை—

(அ) 1984 டிசம்பர் மாதத்தில் தமிழகத்தில் நடந்த பொதுத் தேர்தலின்போது 176 பலதரப்பட்ட கலவர சம்பவங்கள் நிகழ்ந்தன.

(ஆ) இச்சம்பவங்களில் 482 நபர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.



1987 நவம்பர் 18]

(இ) ஒரே ஒரு இடத்தில் மட்டும் கலவரத்தைக் கட்டுப்படுத்த காவல் துறையினர் உபயோகித்த துப்பாக்கி சூட்டினால் ஒருவர் உயிரிழந்தார்.

### தஞ்சை இராசா மிராசுதார் அரசு மருத்துவமனை அறுவை சிகிச்சை அரங்கிற்கு லிப்ட் வசதி.

95. வினா எண் 9772—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் இராசா மிராசுதார் அரசினர் மருத்துவமனையில் அமைந்துள்ள அறுவை சிகிச்சை அரங்கிற்கு லிப்ட் வசதி செய்து தர அரசு முன்வருமா?

விடை—

இது பற்றி அரசின் ஆய்வில் உள்ளது.

### கோடியக்கரையில் ஆமை ஆராய்ச்சிப் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு.

96. வினா எண் 8444—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் கோடியக்கரையில் ஓர் ஆமை ஆராய்ச்சிப் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்னவாகு?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[1987 நவம்பர் 18

**தர்மபுரி, பர்கூர் வனப்பகுதியிலுள்ள பொதுமக்களுக்குப் பாதுகாப்பு.**

97. **வினா எண் 8452**—திரு. எஸ். **இராசாராமன்** : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மீன்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி, பர்கூர் வனப்பகுதிக்குள் சிறுத்தைப் புலியினால் பொதுமக்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் 1980-81 முதல் 1985-86 முடிய கடந்த ஆறு ஆண்டுகளில் கரியங்கலம் அருகில் மோட்டூர் என்னும் கிராமத்தில் 30—11—1985 அன்று ஒரு சிறுத்தைப் புலி நுழைந்து நான்கு பேர்களைக் காயப்படுத்திவிட்டது என்ற ஒரே ஒரு சம்பவம் மட்டும் நிகழ்ந்துள்ளது. இந்த சிறுத்தையை வனத்துறைப் பணியாளர்கள் மீண்டும் வனப்பகுதிக்குள் விரட்டிவிட்டனர். பொதுவாக, சிறுத்தையோ அல்லது புலியோ கிராமத்திற்குள் நுழைந்து விட்டால், அவற்றைக் காட்டிற்குள் விரட்டியடித்துப் பொது மக்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

**1985-86-ல் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் மைய அரசு வழங்கிய தொகை.**

98. **வினா எண் 8471**—திரு. மா. **மணிமாறன்**: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1985-86-ல் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின்கீழ் மைய அரசு வழங்கிய தொகை எவ்வளவு ?



1987 நவம்பர் 18]

விடை—

1985-86-ல் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின்கீழ் மைய அரசு வழங்கியுள்ள தொகை ரூ. 4,495.76 இலட்சம். இது தவிர, ரூ. 672.00 இலட்சம் மதிப்புள்ள 44,800 மெட்ரிக் டன் கோதுமை இலவசமாக இத்திட்டத்திற்கு மைய அரசு வழங்கியுள்ளது.

**பருத்தி உற்பத்தியில் முன்னணியில் நிற்கும் மாவட்டம்.**

99. **வினா எண் 8551**—திருமதி பா. **வளர்மதி**: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பருத்தி உற்பத்தியில் தமிழ்நாட்டில் முன்னணியில் நிற்கும் மாவட்டம் எது ?

விடை—

திருநெல்வேலி மாவட்டம்.

**அகில இந்திய காவல்துறை குழுவின் பரிந்துரைகள்.**

100. **வினா எண் 1004**—திரு. கெ. **செம்மலை**: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) National Police Commission பரிந்துரைகளின் அடிப்படையில் மாநில அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

விடை—

பதிலுக்கான ஒரு விபர அறிக்கை பேரவை முன் வைக்கப்படுகிறது.

**அறிக்கை.**

1983-ம் வருடம் ஏப்ரல் திங்களில் மைய அரசு தேசிய காவல் [illegible] அறிக்கைகளை [illegible] அவற்றிலுள்ள பரிந்துரைகள் [illegible] நடவடிக்கை

[1987 நவம்பர் 18

எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இந்த அறிக்கைகளில் காவலர்களின் நலன், அவர்களது கடமைகள் மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் போன்ற இதரச் சட்டங்களில் திருத்தங்கள், செயல் முறைகள் முதலானவை பற்றி உள்ளன. இப்பரிந்துரைகளைப் பற்றி ஆராய ஒரு குழு அமைக்கும்படியும் மைய அரசு கூறியுள்ளது. அரசு ஆணை பல்வகை எண் 538, உள்துறை, நாள் 12, மார்ச் 1981-ல் ஒரு குழு அமைத்திட ஆணைகள் வெளியிடப்பட்டன. அதன்படி கீழ்க்கண்ட உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது :—

| | |
|---|---|
| 1. சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலர், உள்துறை. | தலைவர். |
| 2. இணைச் செயலர் (நிதித் துறை). | உறுப்பினர். |
| 3. இணைச் செயலர் (காவல் 1), உள்துறை. | செயலர். |
| 4. துணைச் செயலர் (காவல் 2), உள்துறை. | |
| 5. துணைச் செயலர் (சிறைகள்), உள்துறை. | உறுப்பினர். |
| 6. துணைச் செயலர் (நீதிமன்றங்கள்), உள்துறை. | உறுப்பினர். |
| 7. துணைச் செயலர், சமூக நலத்துறை. | உறுப்பினர். |
| 8. துணைச் செயலர், சட்டத் துறை. | உறுப்பினர். |
| 9. சார்புச் செயலர், பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு) துறை. | உறுப்பினர். |
| 10. காவல் துறைத் துணைத் தலைவர் (நிர்வாகம்). | உறுப்பினர். |

இக்குழு பல கூட்டங்களை நடத்தி தேசிய காவல் குழுவின் பரிந்துரைகளை நன்கு விவாதித்து பல முடிவுகளை எடுத்துள்ளது.

2. தேசிய காவல் குழுவின் பரிந்துரைகள் கீழ்க்கண்ட தலைப்புகளில் அடங்கும்—

(அ) காவல் துறையில் பணியாற்றுபவர்களின் சம்பளத்தை உயர்த்துதல்.

(ஆ) காவல் துறையில் பணியாற்றுபவர்களுக்கு குடியிருப்பு போன்ற வசதிகளைச் செய்து கொடுத்தல்.



1987 நவம்பர் 18]

(இ) காவல் துறைக்கு ஆள் எடுப்பதில் சில புதிய விதிகளைக் கடைப்பிடித்தல்.

(ஈ) காவல் துறையில் V.H.F.U.H.F. போன்ற தகவல் தொடர்பு அமைப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்து காவல்பணிகளை எளிதாக்குதல்.

(உ) சட்டம் ஒழுங்கை பராமரிக்கும்போது பெருத்த கலவரச் சூழ்நிலைகள் ஏற்படும்போது அவற்றை அடக்குவதற்கு புதிய சட்டத்தை இயற்றுதல்.

(ஊ) காவல் துறையில் லஞ்ச ஊழல்களைப் போக்கி திறமையை வளர்த்தல்.

(எ) குற்றவியல் நடைமுறைச் சட்டத்திலும் இந்திய சான்று சட்டத்திலும் சில திருத்தங்கள் கொண்டு வருதல்.

(ஏ) இந்திய காவல் சட்டம் 1861-க்கு பதிலாக தற்போதைய தேவைகளைக் கருத்தில்கொண்டு ஒரு புதிய இந்தியக் காவல் சட்டத்தை ஏற்படுத்துதல்.

3. தமிழ்நாடு அரசு காவல் துறையில் V.H.F.U.H.F. போன்ற நவீன தகவல் தொடர்பு அமைப்பு முறைகளை ஏற்படுத்திக்கொடுத்தும் Computer ஒன்றையும் காவல் துறைக்கு வாங்கிக் கொடுத்தும் உள்ளது. இதனால் காவல் துறையில் பணிகள் ஓரளவிற்கு எளிதாக்கப்பட்டுள்ளன. மேற்கொண்டு நவீன கருவிகள் தேவையிருக்குமாயின் அது குறித்து ஆய்ந்து அரசு முடிவு எடுக்கும்.

காவல் துறையில் பணியாற்றும் சார்நிலைப் பணியாளர்களுக்கு 80 விழுக்காடு வீடு வசதிகளை செய்து கொடுக்கும் நோக்கத்துடன் 1955-56 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் காவல் துறை வீட்டு வசதி திட்டம் துவக்கப்பட்டது. 1979-80 முதல் 1983-84 வரை காவல் துறை மேல்நிலைப் பணியாளர்களுக்கு 830 குடியிருப்புக்கள், காவல்துறை கீழ்நிலைப்பணியாளர்களுக்கு படைவீடுகள் (Barracks) 5,097 கட்டுவதற்கு ஏழாவது நிதிக்குழு 6.78 கோடி ஒதுக்கியது. இதனைப் பயன்படுத்தி தமிழ்நாடு அரசு மேல்நிலைப் பணியாளர்களுக்கு 523 குடியிருப்புகள் கட்டவும் காவல்துறை சார்நிலைப் பணியாளர்களுக்கு 3,487 குடியிருப்புகளும் கீழ் நிலைப் பணியாளர்களுக்கு 2,445 படைவீடுகளும் கட்டுவதற்கு

[1987 நவம்பர் 18

ஒப்புதல் அளித்துள்ளது. ஒதுக்கியுள்ள மானியத்தைக் காட்டிலும் அதிகமாக ஏற்படும் கூடுதல் செலவாகிய ரூபாய் 13.30 கோடியை மாநில அரசே ஏற்றுக்கொள்ளும். 1985 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திற்குள் இந்த 6,455 படை வீடுகளும் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காவலர்களுக்கு குடியிருப்புகளை கட்டிக் கொடுப்பதில் இவ்வரசு பெரிதும் முயன்று ஆண்டுதோறும் புதிய குடியிருப்புகளைக் கட்டிக் கொடுத்துள்ளது.

புதிய காவல் சட்டத்தை ஏற்படுத்துவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகின்றது. இதற்கான துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஒருவரை நியமித்து அறிக்கை கொடுக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பெருத்த கலவரங்கள் அண்மைக்காலத்தில் ஏதும் ஏற்படாததால் தேசிய காவல் கமிஷன் செய்துள்ள பரிந்துரைகளின்படி தனிச் சட்டத்தை இயற்ற வேண்டியதில்லை என்று மைய அரசுக்கு இவ்வரசு தெரிவித்துள்ளது.

4. பிற பரிந்துரைகளை இவ்வரசு ஆய்ந்து வருகிறது.

### கிராமப்புறங்களில் ஏழைகளுக்கு வீடு கட்டும் திட்டம்.

101. வினா எண் 1404—திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985 ஆம் ஆண்டில் கிராமப் பகுதிகளில் ஏழை மக்களுக்கு வீடு கட்டும் திட்டம் அமுல் படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு என்று ஒதுக்கீடு செய்ய அரசு பரிசீலனை செய்யுமா?

விடை—

(அ) கிராமப்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு கிராமப்புறங்களில் [illegible] கட்ட கடனுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் 1985 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.



1987 நவம்பர் 18]

(ஆ) இத்திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கென தனியாக ஒதுக்கீடு செய்ய இயலாது.

### சென்னை மாநகரின் தண்ணீர் பிரச்சினை.

102. வினா எண் 1571—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரின் தண்ணீர் பிரச்சினையை சமாளிக்க அரசு முன் எச்சரிக்கை நடவடிக்கையாக என்னென்ன பணிகள் நடைமுறைப் படுத்த உள்ளது?

(ஆ) சென்ற ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதா?

விடை—

விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

(அ) இவ்வாண்டு இனிவரும் காலங்களில் குடிநீர் பற்றாக்குறை நிலைமையை சமாளிக்க முன் எச்சரிக்கையாக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளன:—

(1) 2,000 ஆழாய்க் கிணறுகள் பழுதுபார்த்து சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

(2) தற்போதுள்ள இந்தியா மார்க்-2 பம்புகள் பழுது பார்க்கப்பட்டு சரி செய்யப்பட்டு வருகின்றன.

(3) நீர் வராத 40 இந்தியா மார்க்-2 பம்புகள் புதிதாக வேறு இடத்தில் மறுபடியும் போடப்பட்டு வருகிறது.

(4) வேண்டிய இடங்களில் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு இந்தியா மார்க்-2 பம்புகள் பொருத்தப்படும்.

(5) [illegible] குழாய்க் கிணறுகள் வேலை செய்யாத [illegible] இந்தியா மார்க்-2 பம்புகள் [illegible] படும்.

துணை விமானி (நேரடி நியமனம்) மற்றும் ஒரு ராடர் வானிலை நிபுணர் (இந்திய வானிலை ஆய்வுத் துறையிலிருந்து அயற் பணியில் பெறப்பட்டவர்) ஆகியோர் நியமிக்கப்பட்டு கடந்த ஆண்டில் பயிற்சி பெற்றனர்.

நடப்பு (1985) ஆண்டிலும் மேற்கூறிய நிறுவனத்தின் நிபுணர் குழு ஜூன் மாதம் கடைசி வாரம் முதல் நவம்பர் மாதம் கடைசி வாரம் வரை இத்திட்டத்தை செயல்படுத்துவதோடு நம் குழுவினருக்குப் பயிற்சியும் அளிப்பர்.

**சென்னையிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகம்.**

**103. வினா எண் 1583—திரு. சைதை சா. துரைசாமி, திரு. செ. தங்கராசு மற்றும் திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—**

சென்னையில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் இருந்து எத்தனை பேர் 1977-ல் இருந்து 1984 வரை வேலை வாய்ப்பு பெற்றார்கள் தகுதிவாரியாக?

விடை—

விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை.**

(6) நகரிலுள்ள பொதுக் கிணறுகள் உடனே தூர் வாரப்பட்டு மக்கள் உபயோகத்திற்குக் கொண்டு வரப்படும். இது உடனடியாக செய்து முடிக்கப்படும்.

(7) பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேவைப்பட்ட அளவுக்கு குடிநீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டு லாரிகள் மூலம் அதிக அளவு குடிநீர் வழங்கப்படும்.

(8) மூன்று நில நீர் பகுதிகளில் 6 தயார் நிலை ஆழ் துளைக் கிணறுகள் அமைக்கப்படும்.

(9) சென்னை நகரைச் சுற்றியுள்ள நீர்பிடிப்புப் பகுதிகளில் மழை அளவை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்துடன் செயற்கை மழைத் திட்டம் நிரந்தரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாண்டும் ஜூலை முதல் நவம்பர் முடிய செயற்கை மழைத் திட்டம் நடைமுறையில் இருக்கும்.

(ஆ) ஆம். சில இடங்களில் நிலத்தடி நீரின் மட்டம் அதிக ஆழத்தில் சென்றுவிட்டதால் குழாய் கிணறுகளால் முழு அளவில் தண்ணீரை வழங்க முடியவில்லை. இம்மாதிரி இடங்களில் 100-க்கு மேற்படாமல் புதிதாக இந்தியா மார்க்-2 பம்புகள் நிறுவப்படும்.

சென்னை நகரத்தில் 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட குடிநீர் தட்டுப்பாட்டைச் சமாளிக்கும் பரிசோதனை முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட செயற்கை மழைத் திட்டம் நல்ல பயனீன்றதைத் தொடர்ந்து அரசு இத்திட்டத்தை தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை முதல் நவம்பர் வரையிலான பருவ காலத்தில் நிரந்தரமான திட்டமாக செயல்படுத்தத் தீர்மானித்தது. இதற்காக திருவாளர்கள் அட்மாஸ்பெரிக்ஸ் இன்கார்ப்பரேட்டட் என்ற அமெரிக்க நிறுவனத்திடமிருந்து 3,73,000 அமெரிக்க டாலர் (ரூபாய் 43,13,632.70) செலவில் செயற்கை மழை திட்டத்திற்காக சிறப்பியல்புடன் கூடிய விமானம், ராடர் கருவி ஆகியவற்றை வாங்கியுள்ளது. மேற்கூறிய நிறுவனத்தினர் 1984 மற்றும் 1985 ஆண்டுகளில் ஜூலை முதல் நவம்பர் வரையில் இத்திட்டத்தை தமிழ்நாட்டில் நிறைவேற்றவும், அரசு நியமிக்கும் விமானி மற்றும் துணை விமானி ஆகிய குழு ஒன்றுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கவும் ஒப்புக்கொண்டனர். இதற்காக ஒரு விமானி (இந்திய விமானப் படையிலிருந்து அயற் பணியில் பெறப்பட்டவர்) ஒரு





துணை விமானி (நேரடி நியமனம்) மற்றும் ஒரு ராடர் வானிலை நிபுணர் (இந்திய வானிலை ஆய்வுத் துறையிலிருந்து அயற் பணியில் பெறப்பட்டவர்) ஆகியோர் நியமிக்கப்பட்டு கடந்த ஆண்டில் பயிற்சி பெற்றனர்.

நடப்பு (1985) ஆண்டிலும் மேற்கூறிய நிறுவனத்தின் நிபுணர் குழு ஜூன் மாதம் கடைசி வாரம் முதல் நவம்பர் மாதம் கடைசி வாரம் வரை இத்திட்டத்தை செயல்படுத்துவதோடு நம் குழுவினருக்குப் பயிற்சியும் அளிப்பர்.

### சென்னையிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகம்.

103. வினா எண் 1583—திரு. சைதை சா. துரைசாமி, திரு. செ. தங்கராசு மற்றும் திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் இருந்து எத்தனை பேர் 1977-ல் இருந்து 1984 வரை வேலை வாய்ப்பு பெற்றார்கள் தகுதிவாரியாக?

விடை—

விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

சென்னையிலுள்ள கீழ்க்கண்ட 5 வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலம் வேலைவாய்ப்பு பெற்றவர்கள் பற்றிய விவரங்கள் 1977 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு முடிய சேகரிக்கப்பட்டு, இணைப்பில் கல்வித் தகுதி வாரியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

1. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை-35 (எஸ். எஸ். எல். சி. முதல் பட்டப் படிப்புத் தேறியவர்களுக்காக).

2. தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை-17 (பட்ட மேற்படிப்பு, பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் தொழில் பட்டப்படிப்பு படித்தவர்களுக்காக).

3. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் நுட்பம்), சென்னை-35 (டிப்ளமோ மற்றும் தொழில் அனுபவம்/சான்றிதழ் பெற்றவர்களுக்காக).

4. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை-20 (எஸ்.எஸ்.எல்.சி. தவறியவர்களுக்கும் அதற்குக் கீழ் தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்காக).

5. உடல் ஊனமுற்றோர்க்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை-35 (உடல் ஊனமுற்றோருக்காக).



சென்னையிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலம் 1977-லிருந்து 1984 முடிய வேலைவாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை தகுதிவாரியாக.

| கல்வித் தகுதி. (1) | 1977 (2) | 1978 (3) | 1979 (4) | 1980 (5) |
|---|---|---|---|---|
| எஸ். எஸ். எல். சி. தவறியவர்கள் அதற்கும் குறைந்த கல்வித் தகுதியுடையவர்கள் | 2,278 | 1,828 | 1,444 | 1,643 |
| எஸ். எஸ். எல். சி. தேறியவர்கள் (தட்டச்சு, சுருக்கெழுத்து, ஆரம்பக் கல்வி, நடுநிலை பயின்ற ஆசிரியர்கள் போன்றோர்). | 1,105 | 1,218 | 1,099 | 1,325 |
| பி. யு. சி. மற்றும் பட்டப்படிப்பு தவறியவர்கள் | 431 | 218 | 387 | 444 |
| பட்டப்படிப்பு தேறியவர்கள் .. .. | 620 | 444 | 1,097 | 427 |
| மருத்துவப் பட்டதாரிகள் .. .. .. | 165 | 89 | 57 | 232 |
| பொறியியல் பட்டதாரிகள் .. .. .. | 125 | 468 | 1,333 | 310 |
| வேளாண்மைப் பட்டதாரிகள் .. .. | 47 | 27 | 150 | 73 |
| கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் .. | 141 | 94 | 49 | 41 |
| சட்டக் கல்வி பயின்ற பட்டதாரிகள் .. | 3 | 7 | 2 | 4 |
| பட்டதாரி ஆசிரியர்கள்...... .. .. | 6 | 90 | 58 | 573 |
| பட்ட மேற்படிப்பு பட்டதாரிகள் .. .. | 463 | 350 | 1,705 | 507 |
| தொழிற்கல்வி மற்றும் அனுபவம் பெற்றவர்கள் (டிப்ளமோ மற்றும் சர்டிபிகேட் பெற்றவர்கள்) | 1,054 | 1,054 | 1,754 | 1,809 |
| அனைத்து உடல் ஊனமுற்றோர் .. .. | 206 | 263 | 350 | 624 |
| மொத்தம் .. .. | 6,644 | 6,150 | 9,485 | 8,012 |

| கல்வித் தகுதி. | 1981 | 1982 | 1983 | 1984 |
|---|---|---|---|---|
| (1) | (6) | (7) | (8) | (9) |
| எஸ். எஸ். எல். சி. தவறியவர்கள் / அதற்கும் குறைந்த கல்வித் தகுதியுடையவர்கள். | 1,714 | 1,986 | 4,079 | 2,531 |
| எஸ். எஸ். எல். சி. தேறியவர்கள் (தட்டச்சு, சுருக்கெழுத்து, ஆரம்பக் கல்வி, நடுநிலை பயின்ற ஆசிரியர்கள் போன்றோர்). | 2,530 | 2,336 | 4,382 | 3,151 |
| பி. யூ. சி. மற்றும் பட்டப்படிப்பு தவறியவர்கள் | 348 | 903 | 2,364 | 1,914 |
| பட்டப்படிப்பு தேறியவர்கள் .. .. | 510 | 1,027 | 563 | 458 |
| மருத்துவப் பட்டதாரிகள் .. .. .. | 180 | 257 | 36 | 52 |
| பொறியியல் பட்டதாரிகள் .. .. .. | 231 | 215 | 1,096 | 1,034 |
| வேளாண்மைப் பட்டதாரிகள் .. .. | 106 | 87 | 80 | 88 |
| கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் .. .. | 113 | 152 | 176 | 120 |
| சட்டக் கல்வி பயின்ற பட்டதாரிகள் .. .. | 11 | 4 | 5 | 3 |
| பட்டதாரி ஆசிரியர்கள் .. .. .. | 870 | 626 | 999 | 533 |
| பட்ட மேற்படிப்பு பட்டதாரிகள் .. .. | 1,002 | 1,340 | 638 | 677 |
| தொழிற்கல்வி மற்றும் அனுபவம் பெற்றவர்கள் (டிப்ளமோ மற்றும் சர்டிபிகேட் பெற்றவர்கள்) | 1,640 | 2,513 | 2,616 | 1,126 |
| அனைத்து உடல் ஊனமுற்றோர் .. .. | 1,114 | 901 | 748 | 654 |
| மொத்தம் .. .. | 10,369 | 12,347 | 18,082 | 12,341 |





## போக்குவரத்துக் கழக பேருந்துகளில் அனுமதிச் சீட்டு இல்லாமல் பிடிபட்டோர்கள்.

104. **வினா எண் 2053—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983-84, 1984-85 ஆண்டுகளில் அனுமதிச் சீட்டு இல்லாமல் பயணம் செய்ததாகப் பிடிபட்டவர்கள் எத்தனை பேர் போக்குவரத்துக் கழகங்கள் வாரியாக ?

(ஆ) அவர்களிடமிருந்து அபராதமாக வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை.**

(அ மற்றும் ஆ) :

| போக்குவரத்துக் கழகங்களின் பெயர்கள். | ஆண்டு | அனுமதிச் சீட்டு இல்லாத பயணிகளின் எண்ணிக்கை. | வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | ரூ. பை. |
| 1 கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் .. .. | 1983-84 | 519 | 5,803.20 |
| | 1984-85 | 549 | 5,614.40 |
| 2 நேசமணி போக்குவரத்துக் கழகம் .. .. | 1983-84 | 1,226 | 6,101.95 |
| | 1984-85 | 2,475 | 8,348.60 |
| 3 அண்ணா போக்குவரத்துக் கழகம் .. .. | 1983-84 | 280 | 982.05 |
| | 1984-85 | 321 | 2,452.50 |
| 4 பல்லவன் போக்குவரத்துக் கழகம் .. .. | 1983-84 | 64,871 | 3,13,270.15 |
| | 1984-85 | 66,652 | 3,11,642.95 |
| 5 பாண்டியன் போக்குவரத்துக் கழகம் .. .. | 1983-84 | 5,284 | 10,562.00 |
| | 1984-85 | 28,204 | 49,698.20 |



| | | | |
|---|---|---|---|
| 6 மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் .. | 1983-84 | 3,942 | 8,052.40 |
| | 1984-85 | 1,670 | 13,206.85 |
| 7 சேரன் போக்குவரத்துக் கழகம் .. .. .. | 1983-84 | 3,165 | 6,997.05 |
| | 1984-85 | 2,780 | 7,873.10 |
| 8 ஜீவா போக்குவரத்துக் கழகம் .. .. .. | 1983-84 | 2,085 | 2,750.00 |
| | 1984-85 | 2,140 | 3,129.50 |
| 9 சோழன் போக்குவரத்துக் கழகம் .. .. | 1983-84 | 5,854 | 11,598.50 |
| | 1984-85 | 3,374 | 9,718.85 |
| 10 பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் | 1983-84 | 1,531 | 5,732.00 |
| | 1984-85 | 3,219 | 10,415.75 |
| 11 தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் .. | 1983-84 | 1,272 | 4,684.55 |
| | 1984-85 | 2,082 | 8,606.85 |
| 12 திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் .. .. | திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் முன் பதிவு செய்து குறிப்பிட்ட பயணிகள் மட்டும் அனுமதிக்கப்படுவதால் அனுமதி சீட்டு இல்லாமல் பயணிகள் எவரும் பயணம் செய்யும் வாய்ப்பு இல்லை. | | |
| 13 தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் .. | இக்கழகம் 1—4—1985-லிருந்துதான் செயல்படுவதால் இக்கழகத்திற்கான விவரங்கள் இல்லை. | | |

[1987 நவம்பர் 18

## தமிழகத்தில் அரசுத் துறை மற்றும் தனியார் துறை மூலம் விடப்படும் பேருந்துகள்.

105. **வினா எண் 2066—திரு. பி. என். இராமச்சந்திரன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1984 ஜூலை முடிய அரசுத் துறையிலும், தனியார் துறையிலும் விடப்படும் பஸ்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) 1983-84 ஆண்டு கொடுக்கப்பட்ட உரிமங்கள் எவ்வளவு?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) இதுகுறித்த விவர அறிக்கை ஒன்று சட்ட மன்றப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை.

(அ) 31—7—1984 வரை தமிழகத்தில் அரசுத் துறையிலும் தனியார் துறையிலும் விடப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை :

| வரிசை எண்ணும் பேருந்து விவரமும். | தனியார் பேருந்துகளின் எண்ணிக்கை. | அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் எண்ணிக்கை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. தடப் பேருந்துகள் .. | 4,609 | 7,772 | 12,381 |
| 2. உபரிப் பேருந்துகள் | 480 | 717 | 1,197 |
| மொத்தம் .. | 5,089 | 8,489 | 13,578 |



1987 நவம்பர் 18]

(ஆ) 1—4—1983 முதல் 31—3—1984 உடன் முடிவுற்ற ஆண்டில் வழங்கப்பட்ட பேருந்து உரிமங்களின் விவரங்கள் :—

| வரிசை எண்ணும் மாவட்டமும். | தனியாருக்கு வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை. | அரசுப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை. | மொத்த உரிமங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 செங்கற்பட்டு .. | இல்லை. | இல்லை. | இல்லை. |
| 2 கோயம்புத்தூர் .. | 2 | 206 | 208 |
| 3 தர்மபுரி .. | 3 | 7 | 10 |
| 4 திண்டுக்கல் .. | .. | .. | .. |
| 5 கன்னியாகுமரி .. | .. | .. | .. |
| 6 சென்னை .. | .. | 29 | 29 |
| 7 மதுரை .. | .. | .. | .. |
| 8 வடாற்காடு .. | 4 | .. | 4 |
| 9 பெரியார் .. | .. | — | .. |
| 10 பொள்ளாச்சி .. | .. | .. | .. |
| 11 புதுக்கோட்டை .. | 2 | .. | 2 |
| 12 இராமநாதபுரம் .. | .. | 11 | 11 |
| 13 சேலம் .. | 3 | .. | 3 |
| 14 தென்னாற்காடு .. | 4 | 94 | 98 |
| 15 தஞ்சாவூர் .. | 1 | 71 | 72 |
| 16 நீலகிரி .. | .. | .. | .. |
| 17 திருச்சிராப்பள்ளி. | 2 | 126 | 128 |
| 18 திருநெல்வேலி .. | .. | 19 | 19 |
| 19 அண்ணா .. | 2 | .. | 2 |
| மொத்தம் .. | 23 | 563 | 586 |

[1987 நவம்பர் 18

**வீராணம் திட்டத்திற்காக ஏற்படுத்தப்பட்ட அலுவலகங்கள்.**

106. **வினா எண் 2175—திரு. க. பாலசுப்பிரமணியன்**: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீராணம் திட்டத்திற்கான அலுவலகங்கள் தற்போது எந்தெந்த இடங்களில் உள்ளன?

(ஆ) எத்தனை பேர்கள் என்னென்ன வேலைகளில் இருக்கிறார்கள்?

(இ) அந்த அலுவலகங்களுக்காகும் மொத்த செலவு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு?

**விடை—**

விவர அறிக்கை அவையில் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை.**

(அ) வீராணம் திட்ட அலுவலகங்கள் கீழ்க்கண்ட இடங்களில் உள்ளன :

| அலுவலகத்தின் பெயர். | தற்போதுள்ள இடம். |
|---|---|
| 1. வீராணம் திட்ட கோட்ட அலுவலகம். | சென்னை. |
| 2. வீராணம் திட்ட உப கோட்டம். | செங்கற்பட்டு. |
| 3. வீராணம் திட்ட பிரிவு | (அ) மங்கலம் (திருக்கழுக்குன்றம் அருகில்).<br>(ஆ) சாத்திப்பட்டு (பண்ருட்டி அருகில்).<br>(இ) வடக்குத்து (வடலூர் அருகில்). |



1987 நவம்பர் 18]

(ஆ) வேலையில் உள்ளவர்களின் எண்ணிக்கையும், வேலையின் விவரமும் :

(1) கோட்ட அலுவலகத்திலுள்ள நபர்கள் :

| | |
|---|---|
| நிர்வாகப் பொறியாளர் | 1 |
| கோட்ட கணக்கர் | 1 |
| உதவியாளர்கள் | 2 |
| தட்டச்சர் | 1 |
| வரைவுத் தொழில் அலுவலர் | 1 |
| அலுவலக உதவியாளர் | 1 |
| ஊர்தி ஓட்டுநர் | 1 |
| மொத்தம் .. | 8 |

**வேலைகள் விவரம்:**

உயர்நீதி மன்றத்திலும், மாநகர உரிமை இயல் நீதி மன்றத்திலும் வீராணத் திட்டச் செயலாக்கம் குறித்து தொடரப்பட்ட வழக்குகளைத் தலைமைப் பொறியாளர், நிர்வாக இயக்குநர் அவர்களின் உத்தரவு பெற்று அவ்வப்போது கவனித்து நடவடிக்கை எடுக்கவும், உபரிப் பொருள்களைப் பல் தலைமை அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு விற்பதற்கும், அது குறித்து தகுந்த நடவடிக்கை எடுக்கவும், உபகோட்டத்திலும், பிரிவு அலுவலகங்களிலும் செயலாற்றிய பணிகளை ஆய்வு செய்வதற்கும் கோட்ட அலுவலகம், சென்னையில் செயல்படுகிறது.

(2) உபகோட்ட அலுவலகத்திலுள்ள நபர்கள் :

| | |
|---|---|
| உதவி நிர்வாகப் பொறியாளர் | 1 |
| இளநிலை உதவியாளர் | 1 |
| அலுவலக உதவியாளர் | 1 |
| காவலர் | 1 |
| மொத்த நபர்கள் .. | [illegible] |

[1987 நவம்பர் 18

**வேலையின் விவரம்**—பிரிவு அலுவலகங்கள் ஆற்றும் பணிகளை ஆய்வு செய்யவும், கோட்டத்தின் ஆணைப்படி உபரிப் பொருள்களைப் பிரிவு அலுவலர்கள் வழங்குவதை கண்காணிக்கவும், மற்ற கோட்டத்திலுள்ள பணிகள் குறித்து உதவி செய்யவும் செங்கற்பட்டில் செயல்படுகிறது.

(3) பிரிவு அலுவலகத்திலுள்ள நபர்கள்

| | |
|---|---|
| மங்கலம் : | |
| இளநிலைப் பொறியாளர் | 1 |
| பணிசார் ஊழியர்கள் | 6 |
| தினக்கூலிகள் | 6 |
| சாத்திப்பட்டு : | |
| இளநிலைப் பொறியாளர் | 1 |
| பணிசார் ஊழியர்கள் | 4 |
| தினக்கூலிகள் | 7 |
| வடக்குத்து : | |
| இளநிலைப் பொறியாளர் | 1 |
| பணிசார் ஊழியர்கள் | 4 |
| தினக்கூலிகள் | 7 |

**வேலையின் விவரம்**—உபரிப் பொருள்கள் மற்றும் தளவாடங்களைப் பாதுகாத்தல், உபரிப் பொருட்களைக் கோட்ட ஆணைப்படி வழங்குதல், ஆய்வு மாளிகைகள், வீராணக் குடியிருப்பு, வீராணத் திட்டத்திற்காக கட்டப்பட்ட இதர கட்டிடங்களின் பராமரித்தல் போன்ற பணிகள் இப்பிரிவு அலுவலகங்களில் நடைபெறுகின்றன.

(இ) ஆண்டொன்றுக்கு ஆகும் மொத்த செலவு ரூபாய் 3 இலட்சம்.



.987 நவம்பர் 18]

## தமிழகத்தின் மின் உற்பத்தி.

107. வினா எண் 2403—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் மொத்த மின்சார உற்பத்தி எவ்வளவு?

(ஆ) அவை எங்கெங்கு எவ்வளவு உற்பத்தியாகிறது?

**விடை**—

(அ) மற்றும் (ஆ) : பேரவையின் முன் ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

(அ) மற்றும் (ஆ) தமிழக மின்வாரிய அனல் மற்றும் புனல் மின் நிலையங்கள் மூலம் 1984-85 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப் பட்ட மின்சாரத்தின் மொத்த அளவு 9,385 மில்லியன் யூனிட்டுகள். அதன் விபரம் பின்வருமாறு :

1. புனல் மின்சாரம்—

| | (மில்லியன் யூனிட்டுகளில்.) |
|---|---|
| 1 பைக்காரா | 391 |
| 2 மோயாறு | 168 |
| 3 குந்தா—1 | 290 |
| 4 குந்தா—2 | 713 |
| 5. குந்தா—3 | 410 |
| 6. குந்தா—4 | 156 |
| 7 குந்தா—5 | 91 |
| 8. மேட்டூர் அணை | 145 |
| 9. மேட்டூர் சுரங்க மின்நிலையம் | 535 |
| 10. பெரியாறு | 567 |

(மில்லியன் யூனிட்டுகளில்.)

| | | |
|---|---|---|
| 11. சுருளியாறு | 104 | |
| 12. பாபநாசம் | 127 | |
| 13. சர்க்கார்பதி | 145 | |
| 14. ஆளியாறு | 146 | |
| 15. சோலையாறு—1 | 156 | |
| 16. சோலையாறு—2 | 58 | |
| 17. கோதையாறு—1 | 198 | |
| 18. கோதையாறு—2 | 46 | |
| மொத்த புனல் மின்சக்தி | 4,450 | |
| 2. அனல் மின்சாரம்— | | |
| 1. பேசின் பிரிட்ஜ் | 87 | |
| 2. என்னூர் | 1,427 | |
| 3. தூத்துக்குடி | 3,421 | |
| மொத்த அனல் மின்சக்தி | | 4,935 |
| (1) மற்றும் (2) மொத்தம். | | 9,385 |



### சென்னை கடற்கரையை அழகுபடுத்தல்.

108. வினா எண் 2533—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கடற்கரையை அழகுபடுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) அதுபற்றிய விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஓர் விவர அறிக்கை அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை.

(ஆ) சென்னை கடற்கரையில் அடங்கும் முக்கிய பகுதிகள் மெரினா கடற்கரையும் எலியட்ஸ் கடற்கரையும் ஆகும்.

2. நேப்பியர் பாலத்திலிருந்து புதிய கலங்கரை விளக்கம் வரையுள்ள மெரினா கடற்கரைப் பகுதி பொதுப்பணித் துறையின் பராமரிப்பில் உள்ளது. அப்பகுதியை அழகுபடுத்த அரசிடம் உள்ள செயற்குறிப்புகளின் விவரம் வருமாறு:

(1) மெரினா கடற்கரைக்கு எழிலூட்டும் வகையில் பலவகையான மரங்களை நடுதல்;

(2) சீரணி அரங்கத்திற்கு முக்கியப் பிரமுகர்களை அழைத்துச் செல்ல மற்றுமொரு சாலை அமைத்தல்;

(3) ஓர் திறந்தவெளி திரையரங்கம் கட்டுதல்;

(4) மணற் பகுதியில் அசுத்தம் செய்பவர்களைக் கண்டிக்க தகுந்த ஏற்பாடுகள் செய்தல்;

(5) வானொலி நிலையத்திற்கு எதிரிலிருந்து சாந்தோம் வரையில் மணற்பரப்பில் செல்லும் கிளைப் பாதையில் புதிய மின் விளக்குகளை பொருத்தும் பணிக்குத் தேவையான தொகையை சென்னை மாநகராட்சிக்கு வழங்குதல்;

(6) அண்ணா சதுக்கம் முதல் புதிய கலங்கரை விளக்கம் வரை காதலர் பாதையை ஒட்டியுள்ள மணற்பரப்பு மற்றும் பூங்கா பகுதியில் அதிக தூரத்திற்கு ஒளிதரும் மிகப் பிரகாச மான மின் விளக்குகளை (Hologen Lights) பொருத்துதல்.

3. எலியட்ஸ் கடற்கரையை அழகுபடுத்தும் செயற்குறிப்புகள் பற்றிய விவரங்கள் வருமாறு:

(1) சென்னை பெருநகர் வளர்ச்சி ஆணைக்குழு (Madras Metropolitan Development Authority) எலியட்ஸ் கடற்கரையை அழகுபடுத்துவதற்காக ஓர் பெருந் திட்டம் (Master Plans) தயாரித்துள்ளது.

(2) எலியட்ஸ் கடற்கரையை அழகுபடுத்தும் திட்டங்களை செயல்படுத்த மைய அரசின் சுற்றுலா வளர்ச்சித் துறையிடம் ரூ. 10.00 இலட்சங்களுக்கு நிதியுதவி கேட்கப்பட்டுள்ளது.

**பம்மல் பேரூராட்சி தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவுநீரை அகற்றல்.**

109. வினா எண். 2731—திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி பம்மல் பேரூராட்சியில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுநீரை முறையாக அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.





**அறிக்கை.**

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டப் பிரிவுகள் 25/26-ன்படி, புதியதும் ஏற்கனவே நடைமுறையி லுள்ளதுமான தொழிற்சாலைகள் கழிவுநீர் மற்றும் தொழிற் சாலைக் கழிவு நீர் வெளியேற்றுவதற்காக தமிழ்நாடு மாசு கட்டுப் பாடு வாரியத்தின் அனுமதியைப் பெற வேண்டும். இதன் தொடர்பாக, 24—10—1984 அன்று பேரூராட்சி இயக்குநர், பம்மல் பேரூராட்சி நிர்வாக அலுவலர் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய உறுப்பினர் செயலர் ஆகியோர்களுடன் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் கூட்டமொன்று கூட்டினார்கள். இக்கூட்டத்தில், இசைவு வேண்டி, வாரியத்திற்கு விண்ணப்பித்திருக்காத தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக் கெதிராக, 1958 ஆம் ஆண்டுத் தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டத்தின்கீழ் பம்மல் பேரூராட்சி நிர்வாக அதிகாரி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. பம்மல் பேரூ ராட்சியில் இதுவரை 40 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இசைவிற்காக வாரியத்திற்கு விண்ணப்பித்திருக்கின்றன. 31 தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு, வாரியத்தால் விதிக்கப் பட்ட வரன்முறைகளை நிறைவு செய்யும் வகையில் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவ வேண்டுமென்னும் நிபந்தனையின் பேரில் இசைவு வழங்கப்பட்டது. தோல் தொழிற்சாலைகளால் 31—7—1985-க்கு முன்னர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். 31—5—1984-க்குள் அனுமதி கோரி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு விண்ணப்பிக்காத 8 தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கெதிராக வாரியம் வழக்கு தொடுத்துள்ளது. தோல் பதனிடுவோர் சங்கமானது, பம்மல் பகுதியில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்காகப் பொதுவான கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான கருத்துருக்களை உருவாக்க சங்கமொன்று அமைக்க உத்தேசிப்பதாக அறிவித் திருக்கின்றது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சுத்தி கரிப்பு நிலையத்தை நிறுவ தோல் பதனிடும் தொழிற்சாலைகளால் எடுக்கப்படும் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை கண்காணித்து வருகிறது.

[1987 நவம்பர் 18

### தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் லாபம்.

110. வினா எண் 2766—திரு. அ. பாலுச்சாமி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் லாபத்தில் இயங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1984-85 ஆம் வருடத்தில் தணிக்கையாகாத உத்தேச கணக்கின்படி ரூ. 4.79 இலட்சம் லாபம் ஈட்டியுள்ளது.

### நிலக்கோட்டை பகுதியில் பழங்கள் பதனிடும் தொழிற்சாலை ஏற்படுத்தல்.

111. வினா எண் 2767—திரு. அ. பாலுச்சாமி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை பகுதியில் பழங்கள் பதனிடும் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1987 நவம்பர் 18]

### எல்லா ஒன்றியங்களிலும் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றும் பணி.

112. வினா எண் 2795—திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் எல்லா ஒன்றியங்களிலும் தன்னிறைவுத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளதா?

(ஆ) நிறைவு பெறாத ஒன்றியங்களிலுள்ள விடுபட்ட பணிகளை நிறைவேற்ற என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கப்படாத பணிகள் அவற்றின் தன்மை, உடனடித் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலைத் திட்டம், கிராம சாலைகள் திட்டம் போன்ற திட்டங்களின்கீழ் எடுத்துச் செய்யப்பட்டு வருகின்றன.

### சென்னை மூர்மார்க்கெட்டில் கடைகள் வைத்துள்ளோருக்கு மாற்று இடத்தில் கடைகள் வாடகைக்கு கட்டித்தரும் திட்டம்.

113. வினா எண் 2799—திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மூர்மார்க்கெட் பகுதியில் புதிய ரயில் நிலையம் அமைக்கப்பட்டு உள்ளதால் அதில் கடை வைத்துள்ளவர்கள் அனைவருக்கும் மாற்றிடத்தில் கடை வாடகைக்கு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) ஆம். [illegible]

[1987 நவம்பர் 18

(ஆ) சமீபத்தில் மூர்மார்க்கெட் தீப்பிடித்து எரிந்ததால், பாதிக்கப்பட்ட அனைத்து வியாபாரிகளுக்கும், மூர் மார்க்கெட்டிக்கு அருகில் உள்ள அல்லிக்குளம் பகுதியில் பல்மாடி அங்காடியினைக் கட்ட அரசு அனுமதித்து அதற்கு முதற்கட்டமாக ரூபாய் 1.4 கோடி நிதி உதவி சென்னை மாநகராட்சிக்கு அளித்துள்ளது. கட்டிடம் கட்ட தக்க மேல் நடவடிக்கை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது.

## தமிழகத்திலுள்ள நெடுஞ்சாலைகளை புதுப்பித்தல்.

114. வினா எண் 2804—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள நெடுஞ்சாலைகள் எத்தனை ஆண்டு களுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படுகின்றது?

(ஆ) சாலைகளை மேலை நாடுகளில் உள்ளதுபோல் தரமுள்ள சாலைகளாக அமைக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

(அ) ஆண்டுதோறும் சாலைகளை பழுதுபார்த்து பராமரிப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப சாலை பராமரிப்பு மற்றும் புதுப்பிக்கும் பணி நடைபெறுகிறது.

(ஆ) நமது நாட்டில் தட்ப வெப்ப நிலைக்கேற்ப சாலைகள் அமைக்கப்படுகின்றன. மேலை நாடுகளில் அங்குள்ள தட்ப வெப்ப நிலைக்கு தக்கவாறு சாலைகள் அமைக்கப்படுவதால் அவர்கள் அமைப்பது போன்ற சாலை வடிவமைப்புகள் நமது நாட்டிற்குப் பொருந்தாது.



1987 நவம்பர் 18]

## வைகை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள எட்வின் மேம்பாலத்தை புதுப்பித்தல்.

115. வினா எண் 2811—திரு. என். எஸ். வி. சித்தன் மற்றும் திரு. ஏ. தெய்வநாயகம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நகரில் வைகை ஆற்றின் குறுக்கே கட்டப்பெற்றுள்ள எட்வின் மேம்பாலத்தைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

## நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட மக்கள் குழுக்களின் ஆயுள்கால வரம்பை நிர்ணயிக்கும் திட்டம்.

116. வினா எண். 2818—திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு போடப்பட்டுள்ள மக்கள் குழுக்களின் ஆயுள்கால வரம்பு நிர்ணயிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மக்கள் குழுக்கள் 3—5—1985 தேதியிட்ட ஆணையின் மூலம் கலைக்கப்பட்டு விட்டன.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ஸ்கேனர் கருவி வாங்குதல்.**

117. வினா எண். 2851—திருவாளர்கள் எம். செல்லமுத்து மற்றும் கோ. வீரய்யன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மூளை உறுப்புப் பதிவுக் கருவி (ஸ்கேனர்) கோரி அரசுக்கு ஏதேனும் முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மூளை உறுப்புப் பதிவுக் கருவி வாங்கப்பட்டு 9—5—1985 முதல் செயல்படத் துவங்கி உள்ளது.

**கைத்தறிக்கென்று குறிப்பிட்ட ரக துணிகளை ஒதுக்கும் திட்டம்.**

118—வினா எண் 2858—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கைத்தறிக்கென்று குறிப்பிட்ட ரக துணிகளை ஒதுக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

விடை—

ஆம். ஒரு சில துணி ரகங்களின் உற்பத்தியை கைத்தறிக்கு மட்டுமே ஒதுக்க வகை செய்யும் "கைத்தறி ஒதுக்கீட்டு சட்டம்" அண்மையில் பாராளுமன்ற இரு சபைகளிலும் நிறைவேற்றப் பட்டது. இதன் தொடர் நடவடிக்கைகளை ஆராயும் பொருட்டு, 14—5—1985-இல், மத்திய அரசு நியமித்துள்ள 'அலுவல் குழுவில்' கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் 8—5—1985 அன்று சென்னையில் மத்திய அரசின் விநியோகம் மற்றும் துணிநூல் அமைச்சருடன் தமிழக அரசின் கைத்தறி அமைச்சரும் கலந்து கொண்ட



உரையாடலின்போது சில துணி ரகங்கள் கைத்தறிக்கு மட்டுமே ஒதுக்கப்பட வேண்டும் எனப் பரிந்துரை செய்யப்பட்டது. இது மைய அரசால் அமைக்கப்பட்டுள்ள அலுவல் குழுவின் பரிசீலனையில் உள்ளது. இக்குழு தனது பரிந்துரைகளை 31—7—1985-ல் மத்திய அரசுக்கு சமர்ப்பிக்கும் என்று கருதப் படுகிறது. இதற்கிடையில் சில துணிரகங்களை கைத்தறிக்கே ஒதுக்கும் பொருட்டு மத்திய அரசை வலியுறுத்தி இவ்வரசு கடிதம் எழுதியுள்ளது.

**நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தின் மூலம் கிடைக்கும் வருமானம்**

119—வினா எண் 2900—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் கிடைக்கும் வருமானத்தில் தமிழக அரசுக்கு எவ்வளவு பங்குத் தொகை மைய அரசு அளிக்கிறது ?

விடை—

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கு கிடைக்கும் ஆதாயத்தில் தமிழக அரசுக்கு பங்குத்தொகை வழங்கும்படி மைய அரசை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**டென்மார்க் அரசின் உதவியுடன் தாய்-சேய் நலத்தை மேம்படுத்தும் திட்டம்.**

120—வினா எண் [illegible]—திரு. எஸ். இராசநாராயணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டென்மார்க் அரசின் உதவியுடன் தாய் சேய் நலத்தை மேம்படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தின் விவரம் என்ன ?

**விடை—**

(அ) மற்றும் (ஆ): டென்மார்க் அரசின் நிதி உதவியுடன் சேலம் மற்றும் தென் ஆற்காடு மாவட்டங்களில் சுகாதார நலத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மேற்படி திட்டத்தில் தாய்-சேய் நலத்தை மேம்படுத்தும் திட்டமும் அடங்கும். இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**வேதாரண்யம் உப்பளத்தின் கிழக்குப் பகுதியில் உப்பு உற்பத்தி செய்யும் திட்டம்.**

121—வினா எண் 2943—திரு. என். இராசாராமன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் உப்பளத்தில் கிழக்குப் பகுதியில் உப்பு உற்பத்தி செய்ய அரசு திட்டமிட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

122— வினா எண் 2944—திரு. என். இராசாராமன்: Will the Hon'ble Chief Minister be pleased to state—

(a) Whether land has been acquired at Papanasam Town Railway Station Road in Thanjavur district for constructing Police quarters?

(b) When the land was acquired and the cost thereof; and

(c) When the quarters are expected to be completed?

**விடை—**

(அ) பாபநாசம் நகரின் அருகில் உள்ள திருப்பாலத்துறை கிராமத்தில் 1.08 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) 30—9—1968 ஆம் ஆண்டில் நிலம் கையகப்படுத்தப் பட்டது. அதன் மதிப்பு ரூபாய் 5,456.25.



(இ) பாபநாசம் நகரில் காவலர் குடியிருப்புக்கென ரூபாய் 16,00,000 செலவில் குடியிருப்புகள் கட்டும் திட்டம் பற்றிய கருத்துரு தஞ்சை மேற்கு காவல் கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்பட்டு காவல் துறை இயக்குநரின் ஆய்வில் உள்ளது. இச்செயற்குறிப்பு அரசிற்கு அனுப்பப்பட்டதும், நிதி நிலைமைக்கேற்ப அரசு ஆராய்ந்து ஆணை பிறப்பிக்கும்.

**முந்திரிப் பருப்பு எடுக்கும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஊதிய விகிதங்களை உயர்த்தும் திட்டம்.**

123 வினா எண் 2950—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முந்திரிப் பருப்பு எடுக்கும் தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு சமுதாய வளர்ச்சிக்கு ஏற்ப ஊதிய விகிதங்களை உயர்த்திட அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

(அ) முந்திரித் தொழிலில் வேலைக்கு 1983-ல் நிர்ணயிக்கப் பட்ட குறைந்தபட்ச ஊதிய வீதங்களை மேலும் மாற்றியமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

(ஆ) இதில் ஆலோசனை கூற குறைந்த பட்ச ஊதியச் சட்டத்தின் 5(1)(ஏ) பிரிவின் கீழ் குழு ஒன்றினை அமைக்க அரசு தொழிலாளர் துறை ஆணையருடன் கலந்தாலோசித்து வருகிறது.

**அண்ணா சதுக்கத்தின் வலப் புறத்தில் புத்தக விற்பனை நிலையமும், அண்ணாவின் திருமுகச் சிலையும் அமைக்கும் திட்டம்.**

124. வினா எண் [illegible]—திரு. என். இராசாராமன்: மாண்பு மிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா சதுக்கத்தின் வலது புறத்தில் ஒரு புத்தக விற்பனை நிலையமும், அண்ணாவின் திருமுகச் சிலை ஒன்றும் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) அண்ணா சதுக்கத்தில் மேற்கோள் நூலகமும், அண்ணா புத்தக விற்பனை நிலையமும் அமைக்கப்பட்டு 11—12—1985 முதல் செயல்பட்டு வருகின்றது. பார்வையாளர்களின் வசதிக்காக இந்நூலகம் இரு பிரிவுகளாகக் கட்டப்பட்டுள்ளது. ஒரு பகுதியில் அண்ணா எழுதிய நூல்களும், அண்ணாவைப்பற்றி பிறர் எழுதிய நூல்களும், அடங்கிய மேற்கோள் நூலகமும் (Reference Library) மற்றொரு பகுதியில் அண்ணாவின் நூல்களை விற்பனை செய்ய விற்பனை நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன. அண்ணாவின் திருமுகச் சிலை அமைக்கும் திட்டம் எதும் இல்லை.

### மாயனூரில் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் அழுத்தக் குழாய்கள் தயாரிக்கும் பணி.

125—வினா எண் 2954.—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயனூரில் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் அழுத்தக் குழாய்களை தயாரிப்பதற்கான பணிகள் துவக்கப்பட்டு விட்டனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்தொழிற்சாலையில் 1—10—1984 முதல் உற்பத்தி தொடங்கப்பட்டு 1—12—1985 வரை சுமார் 15,250 டன் ஆஸ்டெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### தமிழகத்தில் வாழைப்பயிர் முடிக்கொத்து நோயால் பாதிக்கப்படுதல்.

126—வினா எண் 2957—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பயிராகும் வாழைப்பயிர் முடிக்கொத்து நோயால் பா[illegible]பட்டுள்ளதை அரசு அறியுமா?





(ஆ) ஆம் எனில், முடிக்கொத்து நோய்க்கு தக்க மாற்று மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் ஆராய்ச்சிக் கழகங்கள் ஈடுபடுத்தப்படுமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆராய்ச்சிப் பணி கோவை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே கப்பல் போக்குவரத்து நடத்துதல்.

127—வினா எண் 2959—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையில் கப்பல் போக்குவரத்து நடத்தும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே கப்பல் போக்குவரத்து நடத்தும் கருத்துரு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

### அதிக மகசூல் தரும் வாழை பயிரிடல்.

128—வினா எண் 2960—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிக மகசூல் வாழை எந்தெந்த மாவட்டங்களில் அறிமுகப்படுத்தபட்டுள்ளது?

(ஆ) குள்ள வாழை என்ற இரகத்திற்கு பின்னர் அதிக மகசூல் தரும் வாழை எது?

விடை—

(அ) செங்கற்பட்டு, வடஆற்காடு, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், பெரியார் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் அதிக மகசூல் தரவல்ல வாழை இரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) எதுமில்லை.

**காமராசர் நினைவாலய மண்டபத்தில் புத்தக விற்பனை நிலையம் அமைக்கும் திட்டம்**

129—வினா எண் 2963—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டியிலுள்ள பெருந்தலைவர் காமராசர் நினைவாலய மண்டபத்தில் அவர்களுடைய வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகளை விளக்கும் புகைப்படங்களை வைக்கவும், அங்கே ஒரு புத்தக விற்பனை நிலையம் அமைக்கவும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) தற்போது இல்லை

(ஆ) கேள்வி எழாது



**சென்னை மெரினா கடற்கரையில் திறந்தவெளி அரங்கம் அமைத்தல்.**

130—வினா எண் 2964—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மெரினா கடற்கரையில் ஓர் திறந்தவெளி அரங்கம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திறந்தவெளியில் திரைப்படம் காட்டுவதற்கும் இவ்வசதியினால் ஒலி எழுப்பாவண்ணம், திரைப்படம் பார்ப்பவர்களுக்கு மட்டும் ஒலி கேட்கும் வண்ணம் ஏற்பாடு செய்யும் கருத்துரு ஒன்று பொதுப்பணித் துறை பொறியாளர்களால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. கட்டிட அமைப்புகள் எதுமில்லாமல் சுற்றுப்புற சூழ்நிலையை பாதிக்காவண்ணம் இவ்வமைப்பு ஏற்படுத்தப்படும்.

**ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்து வாங்க ஒதுக்கப்படும் தொகையை உயர்த்துதல்.**

131—வினா எண் 2987—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு மருத்துவமனைக்கும் மருந்து வாங்க ஒதுக்கப்படும் தொகை எவ்வளவு?

(ஆ) இந்தத் தொகையை உயர்த்த கருத்துரு ஒன்று அரசு ஆய்வில் உள்ளதா?

விடை—

(அ) ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 20,000 மதிப்புள்ள மருந்துகள் வழங்கப்படுகின்றன.

(ஆ) இல்லை.

## அரியலூர் சிமெண்ட் ஆலையில் துணை பொருட்கள் உற்பத்தி செய்யும் திட்டம்.

132—வினா எண் 2993—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் சிமெண்ட் ஆலையில் துணை தொழிலாக கல்நார் கூரை தகடுகள் (asbestos sheets) வெள்ளை களிமண்ணிலிருந்து (white clay) பீங்கான் (ceramic) பொருட்கள் உற்பத்தி செய்யும் திட்டத்தை அரசு மேற்கொள்ள உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## காடுகள் வளர்ப்பதற்கு வெளிநாடுகளின் உதவிகள்.

133—வினா எண் 3030—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காடுகள் வளர்ப்பதற்கு வெளிநாடுகளின் உதவிகள் ஏதேனும் கிடைக்கின்றனவா?

விடை—

ஆம். சுவீடன் நாட்டு மேம்பாட்டுக் கழகம் உதவி செய்கிறது.



## முதுமலை, வால்பாறை காடுகளிலிருந்து யானைகள் கோளாவிற்குச் செல்லுதல்.

134—வினா எண் 3031—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காடுகளை அழிப்பதால் முதுமலைக் காடுகளிலிருந்தும் வால்பாறைப் பகுதியிலிருந்தும் யானைகள் கோளாவிற்குச் செல்கின்றன என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், தடுப்பு நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## தனியாரோடு இணைந்து நடத்தும் தொழிற்சாலைகள்.

135—வினா எண் 3043—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியாரோடு தமிழக அரசு இணைந்து நடத்தும் தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) அவ்வகையில் புதிய தொழிற்சாலைகள் துவங்கும் திட்டம் உண்டா?

விடை—

(அ) இருபத்தி ஐந்து.

(ஆ) உண்டு.

[1987 நவம்பர் 18

### வெளிநாடுகளில் தொழில் நடத்தும் தமிழர்கள் தமிழகத்தில் தொழில் துவக்கும் திட்டம்.

136—வினா எண் 3047—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெளிநாடுகளில் பெரியதாகத் தொழில் நடத்திவரும் தமிழர்களைத் தமிழகத்தில் தொழில்கள் துவங்க அழைக்கும் திட்டம் உண்டா?

விடை—

உண்டு.

### சுற்றுலாப் பொருட்காட்சிகள் மூலம் கிடைத்த லாபம்.

137—வினா எண் 3053—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சுற்றுலாப் பொருட்காட்சிகள் மூலம் சென்ற ஆண்டின் நிகர லாபம் எவ்வளவு?

விடை—

சுற்றுலா பொருட்காட்சி மூலம் சென்ற ஆண்டின் (1984-85) நிகர லாபம் ரூ. 21.11 லட்சம் ஆகும்.

### சென்னையில் பெருகிவரும் மசாஜ் கிளப்புகளை கட்டுப்படுத்தும் திட்டம்.

138—வினா எண் 3060—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் நாள்தோறும் பெருகிவரும் மசாஜ் கிளப்புகளை அரசு கட்டுப்படுத்தும் திட்டம் ஏதும் ஆய்விலுள்ளதா?



1987 நவம்பர் 18]

விடை—

தற்பொழுதும், காவல் துறையினர், மசாஜ் நிலையங்களில் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகள் இருப்பதாக கவனத்திற்கு வரும்பொழுது, இந்திய குற்றவியல் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம் போன்ற பொது சட்டங்களின் கீழ் தகுந்த நடவடிக்கை மேற்கொள்கின்றனர். இருப்பினும், புதிதாக ஏற்பட்டுள்ள இத்தொழிலை முறைப்படுத்தவும், இதன் மூலம் குற்றங்கள் நிகழாவண்ணம் கட்டுப்படுத்தவும், சென்னை நகர காவல்துறை சட்டம் மற்றும் சென்னை நகர முனிசிபல் கார்ப்பரேஷன் சட்டம் ஆகியவைகளை திருத்துவது குறித்து, காவல் துறை இயக்குநர் மற்றும் சென்னை நகர சிறப்பு அலுவலர் இவர்களிடமிருந்து செயற்குறிப்பு அரசால் கோரப்பட்டுள்ளது.

### சுகாதாரப் பணிகளுக்காக உலக வங்கி கடன் வழங்கல்.

139. வினா எண் 3062—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டு சுகாதாரப் பணிகளுக்காக உலக வங்கி கடன் வழங்க முன் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் யாது?

விடை—

(அ) ஆம். தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தின்கீழ்.

(ஆ) குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையினை உயர்த்த சுமார் 55.78 கோடி ரூபாய்க்கு சமமான 32,000 மில்லியன் அமெரிக்க டாலர்களை அனைத்துலக வளர்ச்சி நிறுவன கடனாக வழங்குவதற்கு உலக வங்கி முன் வந்துள்ளது. இத் தொகையில் துணை சுகாதார நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்டுவதையும் சேர்த்து பொது சுகாதார நடவடிக்கைகளுக்காக 24.40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் அடங்கும் பல்வேறு பிரிவுகளுக்குமான மொத்த செலவினங்கள் சென்னையில் உள்ள திட்ட ஒருங்கிணைப்பாளரால் ஒவ்வொரு மாதமும்

சேகரிக்கப்பட்டு இந்திய அரசிடமிருந்து பண உதவியினைப் பெறுகிறது. அதன் பேரில் இந்திய அரசு அனைத்துலக வளர்ச்சி நிறுவனத்தின் கடனுதவியாக உலக வங்கியிடமிருந்து ஈடு செய்துகொள்கிறது.

## அரசு நிறுவன பேருந்து ஊழியர்களுக்கு வீடு கட்டும் திட்டம்.

140. வினா எண் 3071—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு நிறுவன பஸ் ஊழியர்களுக்கு வீடு கட்டித்தர தமிழக அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதுபற்றிய விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலும் பணிபுரியும் தொழிலாளர்களுக்காக குறைந்தது 100 வீடுகள் கட்டித்தரப் படும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதற்கிணங்க ஒவ்வொரு போக்குவரத்துக் கழகமும் தொழிலாளர்கள் வீடு கட்டி வழங்கும் திட்டம் (Own your own Housing Scheme) என்ற ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. வீடு கட்டுவதற்கான நிலங்களை வாங்கி, அவற்றை கட்டுவதற்குத் தேவையானபடி அங்கீகரிக்கப்பட்ட 'லே-அவுட்' செய்து, வீடு கட்டி பின்னர் பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். இதற்காக நிதியில் 30 சதவீதம் தொகையினை விண்ணப்பம் செய்துள்ள உறுப்பினர்களிடமிருந்து முன் தொகையாகவும், மீதமுள்ள தொகையினை, வீட்டுவசதி வளர்ச்சி நிதி நிறுவனம் மூலமும் பெறத் திட்டமிடப்பட்டுள்ளது.

## செயற்கை பட்டு நூல் விலை உயர்வால் செயற்கை பட்டு நெசவுக்கூடங்கள் பாதிப்பு.

141. வினா எண் 3076—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செயற்கை பட்டு நூல் விலை உயர்வால் செயற்கை பட்டு நெசவுக்கூடங்கள் பாதிக்கப்பட்டுள்ளது உண்மையா?



(ஆ) ஆம் எனில், பாதிப்பைப் போக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை யாது?

விடை—

(அ) செயற்கைப் பட்டு நூல் விலை உயர்வடைந்து உள்ளதாகவோ, நெசவுக் கூடங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவோ தகவல் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

## தமிழ்நாட்டில் திறந்தவெளி பல்கலைக் கழகம் தொடங்குதல்.

142. வினா எண் 3078—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் முதலாவது திறந்தவெளி பல்கலைக் கழகம் எப்போது, எங்கு தொடங்கப்படும்?

விடை—

தமிழ்நாட்டில் திறந்தவெளி பல்கலைக் கழகம் தனியாக தொடங்கப்படுவது சம்பந்தமான கருத்துரு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

## திருவில்லிபுத்தூர் தாலுகா அலுவலகத்தில் நிலுவையிலுள்ள பட்டா கேட்டு வரப்பெற்ற விண்ணப்பங்கள்.

143. வினா எண் 3085—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தாலுகா அலுவலகத்தில் பட்டா கேட்டு விண்ணப்பித்து 2 வருடங்களாகியும் பட்டா கிடைக்காமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் பட்டா கிடைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**1984 ஆம் ஆண்டில் டெல்லியிலிருந்து தமிழகத்திற்கு அனுப்பப்பட்ட பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்.**

144. வினா எண் 2087—திரு. இரா. **தாமரைக்கனி**: மாண்புமிகு சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) டெல்லியில் பிச்சை எடுத்த தமிழர்கள் 400 பேரை கடந்த 1984 ஆம் ஆண்டு மத்திய அரசு தனி ரெயிலில் தமிழகம் அனுப்பி வைத்தது உண்மையா?

(ஆ) அவர்களுக்கு எந்த வழியில் மறுவாழ்வு அளிக்கப்பட்டது?

விடை—

(அ) கடந்த 1984 ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில், டில்லியில் பிச்சை எடுத்த தமிழர்கள் (தொழுநோய் பிச்சைக்காரர்கள்) 32 பேரைத்தான் மத்திய அரசு தமிழகத்திற்கு தனி ரெயிலில் அனுப்பி வைத்தது.

(ஆ) அவர்கள் அனைவரும் மல்லவாடி அரசு மறுவாழ்வு இல்லத்தில் செங்கல்பட்டு நன்முறையில் பாராமரிக்கப்பட்டு வருகின்றார்கள்.

**அதிக வருமானமுள்ள கோயில்களில் தக்கார்களுக்குப் பதிலாக அறங்காவலர் குழு ஏற்படுத்தும் திட்டம்.**

145. வினா எண் 2091—திரு. இரா. **தாமரைக்கனி மற்றும்** திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அதிக வருமானமுள்ள கோவில்களில் தக்கார்களுக்குப் பதிலாக அறங்காவலர் குழு ஏற்படுத்தும் திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா?



விடை—

தக்கார்கள் நியமனம் தற்காலிகமானதுதான். முறையாக அறங்காவலர் குழு அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**செயற்கை மழையை பெய்விக்கும் திட்டம்.**

146. வினா எண் 3103—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்த ஆண்டு செயற்கை மழையை பெய்விக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

விடை—

ஆம். இவ்வாண்டும், இனி வரும் ஒவ்வொரு ஆண்டிலும், ஜூலை முதல் நவம்பர் முடிய செயற்கை மழைத் திட்டத்தை செயல்படுத்தும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

**ஸ்கூட்டர் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் இரண்டு பேருக்கு மேல் பயணம் செய்வதைத் தடுத்தல்.**

147. வினா எண் 3108—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

விபத்துக்களை தவிர்க்கும் வகையில் ஸ்கூட்டர் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் இரண்டு பேருக்கு மேல் பயணம் செய்வது தடுக்கப்படுமா?

விடை—

1939 ஆம் ஆண்டைய இயக்கூர்திகள் சட்டத்தின் (மையச் சட்டம்) பிரிவு 85-ன்படி ஸ்கூட்டர் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் இரண்டு பேருக்கு மேல் பயணம் செய்வது குற்றமாகும். அவ்வாறு பயணம் செய்பவர்கள் மீது சட்டப்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

[1987 நவம்பர் 18

## மகாபலிபுரத்தில் ஒலி, ஒளி காட்சி, நாடகம் அருங்காட்சியகம் ஏற்படுத்தல்.

148. வினா எண் 3109—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தமிழக மன்னர்களின் சிறப்பை விளக்கும் ஒலி-ஒளி காட்சி, நாடகம், அருங்காட்சியகம் போன்றவை மகாபலிபுரத்தில் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

விடை—

திறந்தவெளி அரும்பொருட்காட்சியகம் அமைக்கப்பட்டு வருகிறது.

## சாலை விபத்து நடப்பதைத் தடுக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்.

149. வினா எண் 3113—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாலைகளில் விபத்து நடப்பதைத் தடுக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

(ஆ) நெடுஞ்சாலைகளில் வைக்கோல் போட்டு வைப்பதும் விபத்து நடப்பதற்கான காரணம் என்று கூறப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில் அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) வினா அறிக்கை ஒன்று அவையமுன் வைக்கப்பட்டுள்ளது.



1987 நவம்பர் 18]

### அறிக்கை.

(அ) தமிழ்நாட்டில் சாலை விபத்துக்களைத் தடுக்கக் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன :—

1. சாலை விதிகளை மீறும் நபர்கள்மீது தகுந்த சட்டப் பிரிவுகளின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகிறது;

2. வேகக்கட்டுப்பாடு, மிகுந்த சுமையேற்றும் ஊர்திகள் ஆகியவை பற்றி காவல்துறை சோதனையிடப்பட்டு வழக்கு பதியப்படுகிறது;

3. கண்கூசும் முன் விளக்கு, இசை ஒலியெழுப்பி ஆகியவை பயன்படுத்தப்படுவது குறித்தும் வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

4. சாலை விபத்துக்களைத் தவிர்க்கும் வண்ணம் முதன்மைச் சாலைகளில் சாலை ஊர்தி போக்குவரத்தைச் சீரமைக்க சாலையின் மையத்தில் தடுப்பு அமைப்புகள் (Central Medians) சென்னைப் பெருநகர் மற்றும் முக்கிய நகர்களில் அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது;

5. சென்னை போன்ற பெருநகர்களில் முதன்மைச் சாலை சந்திப்புகளில் தானியங்கும் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டு, ஊர்திகள் போக்குவரத்து சீரமைக்கப்பட்டுள்ளது;

6. சாலை நடைபாதையில் வரைகடப்பு செய்துள்ள, நடைபாதை கடைகள் விளம்பரப் பலகைகள் வருவாய்த் துறை மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் உதவியுடன் அப்போதைக்கப்போது அப்புறப்படுத்தப்படுகின்றன;

7. திருப்பங்கள், பள்ளி இருக்கும் இடங்கள் முதலியவை ஊர்தி ஓட்டிகளுக்கு நன்கு புலப்படும் வண்ணம், சைகைப் பலகைகள் நிறுவப்படுகின்றன;

8. போக்குவரத்தைச் சீரமைக்கும் வண்ணம் நான்குவழி/இருவழி போக்குவரத்து ஏற்படுத்தப்பட்டு தெளிவாகத் தெரிய சாலைகளின் மையத்தில் மஞ்சள் கோடுகள் வரையப்படுகின்றன.

9. ஊர்தி ஓட்டுநர்கள் ஊர்திகளை வேகமாக ஓட்டுவதைத் தவிர்க்க சென்னை நகரில் சில முக்கிய இடங்களில், வேகக் கட்டுப்பாடு அமைப்புகள் சாலைகளில் பொருத்தப்பட்டுள்ளன;

[1987 நவம்பர் 18

10. முக்கிய சாலை சந்திப்புகளில் ஊர்திகள் மற்றும் பாதசாரிகளின் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த போக்குவரத்துப் பிரிவு காவலர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர் ;

11. மெதுவாக செல்லும் ஊர்திகள் போக்குவரத்திற்கு முக்கிய சாலைகளில் தடங்கலாக இருப்பதைக் கருத்திற்கொண்டு குறிப்பிட்ட நேரங்களில் அவ்வழியில் அவை செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது ;

12. கவனிப்பாரற்று சாலையில் உலவும் கால்நடைகள் பிடிக்கப்பட்டு, பட்டியில் அடைக்க வகை செய்யப்படுகின்றது. இவற்றின் சொந்தக்காரர்கள் அதற்குரிய தண்டத் தொகை கட்டியபின்தான் அவை திருப்பி ஒப்படைக்கப்படுகின்றன ;

13. பள்ளி மாணவ மாணவியருக்கு போக்குவரத்து பற்றி பயிற்சி தரப்படுகின்றது. மேலும் தேவைப்படும் பொழுது மாணவர் மற்றும் ஊர்க்காவல் படையினரின் பணி சாலை போக்குவரத்தை ஒழுங்குப்படுத்த பயன்படுத்தப்படுகின்றது ;

14. சென்னைப் பெருநகரில் ஊர்திகளை ஒழுங்காக நிறுத்த முக்கிய இடங்களில் ஊர்திகளை நிறுத்துமிடங்கள் குறிக்கப்பட்டு, கட்டணங்கள் வாங்கப்படுகின்றன. இதனால் தாறுமாறாக ஊர்திகள் நிறுத்தப்படுவதும், அதனால் போக்குவரத்து நிலை குத்தி விடுவதும், விபத்து நேர்வதும் தவிர்க்கப்படுகின்றன ;

15. ஸ்கூட்டர் Scooter மற்றும் மோட்டார் சைக்கிள் Motor Cycle) போன்ற இரு சக்கர ஊர்திகளில் பயணம் செய்வோர் கட்டாயமாக தலைக்கவசம் அணியவேண்டும் என்ற சட்டம் தமிழ்நாட்டில் செயல்படுகிறது.

16. மேலும் தேசிய நெடுஞ்சாலையில் நிகழும் விபத்துகள் பற்றி அவ்வப்போது தெரிவித்து மேல் நடவடிக்கை எடுக்கவும், பாதிக்கப்பட்டோருக்கு முதலுதவி அளிக்கவும், சென்னை-விழுப்புரம், சென்னை-வேலூர் மற்றும் சென்னை-நெல்லூர் நெடுஞ்சாலைகளில் மூன்று ரோந்து பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தவிர சென்னை-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் மேலும் 10 போக்குவரத்து உதவி நிலையங்கள் இதற்கென நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் தீவிர கண்காணிப்புகளால் நெடுஞ்சாலைகளில் கண்மூடித்தனமாக ஊர்திகள் ஓட்டுவதும், அவற்றால் விபத்துக்கள் நிகழ்வதும், பெரிதும் தவிர்க்கப்படுகின்றன :



1987 நவம்பர் 18]

17. சாலை விபத்துகள் பற்றிய புள்ளி விவரங்கள் திருத்தப்பட்ட புதிய படிவத்தில் நிறைய விபரங்களுடன் தொகுக்கப்படுகின்றன. இது சாலை விபத்துக்கான காரணம் பற்றி ஆய்வதற்கும், தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பதற்கும் பெரிதும் உதவுகின்றன ;

18. அரிமா குழாம் ( Lions Club ) சுழல் குழாம் (Rotary Club ) ஜெய்சீஸ் ஆகிய தொண்டு நிறுவனங்கள் சாலை விதிகள் பற்றி நிறுவும் விளம்பரங்கள் மக்கள் இவ்விதிகளைக் கடைப்பிடிக்க பெரிதும் உதவுகின்றன ;

(ஆ) ஆம்.

(இ) பெரும்பாலும் அறுவடை காலங்களில் வைக்கோலை நெடுஞ்சாலைகளில் உழவர்கள் உலர்த்த முயல்கின்றனர். இப்படி வைக்கோலை நெடுஞ்சாலையில் பரப்பியதால் தமிழ்நாட்டில் கடந்த மூன்றாண்டுகளில் ஒரு விபத்து நிகழ்ந்துள்ளது. அவ் விபத்தில் திருப்பத்தூரை நோக்கிச் சென்று கொண்டிருந்த பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று திருப்பத்தூர்-வாணியம்பாடி பிரதான சாலையில் தலை கீழாகக் கவிழ்ந்து அதில் பயணம் செய்துகொண்டிருந்த பயணி ஒருவர் விபத்து நடந்த இடத்திலேயே மரணமடைந்தார் மற்றும் பதினைந்து நபர்கள் காயமுற்றனர். இவ்வழக்கு தற்பொழுது திருப்பத்தூர் குற்றவியல் உட்கோட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

## சென்னை நகரில் வீடியோ லைப்ரரிகள் பரவுவதைக் கட்டுப்படுத்துதல்.

150. வினா எண். 3116—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரம் முழுவதும் பரவியுள்ள வீடியோ லைப்ரரிகளை கட்டுப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா?

விடை—

ஆம்.

[1987 நவம்பர் 18

## சுற்றுலா தொழில் பொருட்காட்சி மூலம் கிடைத்த வருமானம்.

151. வினா எண் 3122—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் 1985 ஆம் ஆண்டு நடந்து முடிந்த சுற்றுலாத் தொழில் பொருட்காட்சி மூலம் அரசுக்கு கிடைத்துள்ள வருமானம் எவ்வளவு?

(ஆ) சுற்றுலாப் பொருட்காட்சியைக் கண்டுகளித்தவர்கள் எத்தனை பேர்?

விடை—

(அ) சென்னையில் 1985 ஆம் ஆண்டு நடந்து முடிந்த சுற்றுலாத் தொழில் பொருட்காட்சி மூலம் ரூ. 24.11 இலட்சம் நிகர வருவாய் கிடைத்துள்ளது.

(ஆ) 1985 ஆம் ஆண்டு சுற்றுலாப் பொருட்காட்சியைக் கண்டு களித்தவர்கள் சுமார் 30 இலட்சம் பேர்.

## பட்டா பாஸ் புத்தகங்கள் வழங்கல்.

152. வினா எண் 3129—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை மாவட்டங்களில் பட்டா பாஸ் புத்தகங்கள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது?

(ஆ) மற்ற மாவட்டங்களில் எப்போது கொண்டு வரப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): சட்ட அடிப்படையின்றி, நிர்வாக வசதிக்
காக 1972-ம் ஆண்டில் பட்டா பாஸ் புத்தகங்கள் நீலகிரி மாவட்
டத்தைத் தவிர ஏனைய மாவட்டங்களில் வழங்கப்பட்டன.
எனினும், சட்ட அடிப்படையில் அவற்றை வழங்க, 1983-ம் ஆண்டு
தமிழ்நாடு பட்டா பாஸ் புத்தகச் சட்டம் 1986-ல் இயற்றப்பட்
டுள்ளது. இச்சட்டத்தின் அடிப்படையில் பட்டா பாஸ்
புத்தகங்கள் வழங்கும் பணி விரைவில் துவக்கப்படவுள்ளது.



1987 நவம்பர் 18]

## தமிழ்நாட்டில் 1984-85 ஆம் ஆண்டில் கொத்தடிமைகளாக மீட்கப்பட்டோர் எண்ணிக்கை.

153. வினா எண் 3149—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஆதி-திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-85 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் எத்தனை பேர் கொத்தடிமைகளாக மீட்கப்பட்டனர் மாவட்ட வாரியாக?

(ஆ) இன்னும் மீட்கப்பட வேண்டியவர்கள் எத்தனை பேர்?

விடை—

(அ) தமிழ்நாட்டில் மீட்கப்பட்டவர் எவரும் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

## நரிக்குறவர் வாழ்வை மேம்படுத்தும் தனித் திட்டம்.

154. வினா எண் 3150—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நரிக்குறவர் வாழ்வை மேம்படுத்தும் தனித்திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): இம்மாநிலத்தில் வசிக்கும் நரிக்குறவர்
நல்வாழ்வுக்கென தனியாக சிறப்புத் திட்டங்கள் ஏதும் தற்சமயம்
நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனினும் அவர்களுக்கு வீட்டு
வசதி கோரி முறையீடு ஏதும் வரப்பெறின் அதுபற்றி கவனிக்கப்
பட்டு அதற்கென தனியே அரசு உத்தரவு போடப்படுகிறது.
எனவே இவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பது தவிர
அவர்களின் மேம்பாட்டுக்கென சிறப்பான தனித்திட்டங்கள்
ஏதும் நடைமுறையில் இல்லை.

[1987 நவம்பர் 18

## கண்ணகி கோயில் பற்றி கேரளா அரசுடன் நடைபெறும் பேச்சுவார்த்தை.

155. வினா எண் 3151—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டு எல்லையில் உள்ள கண்ணகி கோயில் தொடர்பாக கேரள அரசுடன் நடந்து வரும் பேச்சுவார்த்தை எந்த அளவில் உள்ளது?

(ஆ) அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) கேரள அரசுடன் பேச்சு வார்த்தை ஏதும் தற்போது நடைபெறவில்லை.

(ஆ) கண்ணகி கோட்டம், தமிழ்நாட்டைச் சார்ந்தது என்று சரித்திர இலக்கிய சான்றுகளோடு மற்றும் ஆவணங்களையும் சுட்டிக்காட்டி, மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு அதில் தலையிட்டு ஆவன செய்யக்கோரி ஒரு கடிதம் வரையப்பட்டது. தற்போதைய பிரதமரிடம் இது குறித்து, கடித தொடர்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## மேட்டூரில் குடிநீர் தட்டுப்பாடு.

156. வினா எண் 3160—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அரசு மேற்கொண்டுள்ள நிவாரணப் பணி யாது?

விடை—

(அ) குடிநீர் தட்டுப்பாடு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1987 நவம்பர் 18]

## தீப்பிடிக்காத வீடுகளுக்குப் பதிலாக மாடி வீடுகள் கட்டித்தரும் திட்டம்.

157. வினா எண் 3168—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீப்பிடிக்காத வீடுகளுக்குப் பதிலாக மாடி வீடுகளை ஏழைகளுக்கு கட்டித்தர அரசு முடிவு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சிவசண்முகபுரம், கோடம்பாக்கம் புதூர், சத்தியவாணி முத்து நகர், ஆண்டிமான்யம் மற்றும் வள்ளீஸ்வரன் கோயில் தோட்டம் பகுதிகளில் பழுதடைந்த தீப்பிடிக்காத வீடுகளை அகற்றிவிட்டு மாடி குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தினால் கட்டப்பட்டுள்ளன.

## கால்நடைகளிடமிருந்து தொற்றும் அடைப்பான் நோயை ஒழித்தல்.

158. வினா எண் 3172—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கால்நடைகளிடமிருந்து மனிதனுக்குத் தொற்றும் அடைப்பான் நோயை ஒழிக்க அரசு தீவிர நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

விடை—

கால்நடைகளுக்கு அடைப்பான் நோய் கிளர்ச்சி எங்கெங்கு எப்பொழுது ஏற்படுகிறது என்பதனை வரையறுத்து முன் கூட்டியே நோய்க் கிளர்ச்சி கண்ட இடங்களில் தடுப்பூசிகள் போடப்பட்டு, தற்போது இந் நோய் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

### கள்ளச் சாராயம் விற்றதாக கைது செய்யப்பட்டோர் எண்ணிக்கை.

159. வினா எண் 3173—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளில் கள்ளச் சாராயம் விற்றதாக கைது ஆனவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை—

(அ) 1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளில் கள்ளச் சாராயம் விற்றதாகக் கைது ஆனவர்கள் :

| 1983-84. | 1984-85. |
|---|---|
| 11,710 | 9,459 |

(ஆ) 1983-84 மற்றும் 1984-85 ஆம் ஆண்டுகளில் கள்ளச் சாராயம் விற்றதாக கைது செய்யப்பட்ட நபர்கள் மீது எடுக்கப் பட்ட நடவடிக்கை விபரங்கள்.—1983-84 ஆம் ஆண்டில் கள்ளச் சாராயம் விற்ற குற்றத்திற்காக தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டத்தின் கீழ் 11,746 வழக்குகளில் 11,710 நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப் பட்டன. இவர்களில் 31—12—1985-ல் உள்ள நிலவரப்படி 155 நபர்களுக்கு தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. 1,700 வழக்கு களில் வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டும் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டும் உள்ளனர். 2,986 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. 1,208 வழக்குகள் நீதிமன்றங்களில் விசாரணை நிலுவையில் உள்ளன. 1,722 வழக்குகள் புலன் விசாரணையில் உள்ளன. 3,074 வழக்குகளில் நடவடிக்கை கைவிடப்பட்டது. ஒரு வழக்கில் கண்டுபிடிக்க முடியாதது என கருதி மேல் நடவ டிக்கை கைவிடப்பட்டது. 1984-85 ஆம் ஆண்டில் கள்ளச் சாராயம் விற்ற குற்றத்திற்காக மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் 9,486 வழக்குகளில் 9,459 நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 31—12—1985-ல் உள்ள



நிலவரப்படி இவர்களில் 33 நபர்கள் தண்டனை அடைந்துள்ளனர். 90 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டும் இவ்வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டும் உள்ளனர். நான்கு வழக்குகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. 3,047 வழக்குகள் நீதிமன்ற விசாரணையில் நிலுவையில் உள்ளன. 6,067 வழக்குகள் இன்னும் புலன் விசாரணையில் இருந்து வருகின்றன. 208 வழக்கு களில் நடவடிக்கை கைவிடப்பட்டது. 37 வழக்குகள் கண்டு பிடிக்க முடியாதது எனக் கருதி மேல் நடவடிக்கை கைவிடப் பட்டது.

### தமிழகத்தில் வாத்துப் பண்ணை அமைக்கும் திட்டம்.

160. வினா எண் 3174—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வாத்துப் பண்ணை அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இங்கிலாந்து நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் காக்கி காம் பெல் என்ற வாத்து இனத்தை வளர்க்கும் திட்டம் உள்ளது. இதற்காக ரூபாய் 6.5 இலட்சத்தில் திட்டம் வகுக்கப் பட்டு பிரேரணை தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்திட மிருந்து பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

### வால்பாறை டாப்சிலிப் பகுதியில் வனவிலங்குகளுக்கு குடிதண்ணீர் வசதி.

161. வினா எண். 3238—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு சுற் றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை டாப்சிலிப் பகுதியில் வனவிலங்குகள் குடி தண்ணீர் வசதிக்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

[1987 நவம்பர் 18

விடை—

வால்பாறை டாப்ஸ்லிப் பகுதி, ஆனைமலை வனவிலங்குச் சரணாலயத்தில் அடங்கியுள்ளது. இந்த வனவிலங்குச் சரணாலயப் பகுதியில் உள்ள வனவிலங்குகளுக்கு தண்ணீர் வசதிகள் செய்ய 1983-84 மற்றும் 1984-85 ஆம் ஆண்டுகளில், 12 நீர்த் தடுப்பு அணைகள், 3 குளங்கள் மற்றும் 10 நீர்த் தொட்டிகள் மொத்தம் ரூபாய் 2,25,681 செலவில் கட்டப்பட்டுள்ளன. இதனால் தண்ணீர்த் தட்டுப்பாடு நீங்கி வருகிறது. இச்சரணாலயத்திற்கு மேலும் தேவைப்படும் நீர்த்தடுப்பு அணைகள் மற்றும் குளங்கள் அமைக்கவும், இன்னும் சில மேம்பாட்டுப் பணிகளைச் செய்யவும் 1985-86 ஆம் ஆண்டில் ரூபாய் 3,50,000 வழங்கப்பட்டுள்ளது.

### ஆடு மாடுகளை காடுகளில் மேய்க்க பட்டிபாஸ் வழங்கல்.

162. வினா எண் 3239—**திரு. வி. தங்கவேலு**: மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆடு மாடுகளைக் காடுகளில் மேய்க்க "பட்டி பாஸ்" வழங்க அரசு முன்வருமா?

விடை—

ஆடு மாடுகளை (வெள்ளாடுகளைத் தவிர) காடுகளில் மேய்க்க "பட்டி பாஸ்" வழங்குவது ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது.

### சின்னாளப்பட்டியிலுள்ள கஸ்தூரிபாய் மருத்துவமனை.

163. வினா எண் 327[illegible]—மாண்புமிகு **திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) மதுரை மாவட்டம் சின்னாளப்பட்டியிலுள்ள கஸ்தூரிபாய் மருத்துவமனையை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று மருத்துவ மனையின் ஊழியர்களும், பொது மக்களும் அரசைக் கோரியுள்ளனரா?



1987 நவம்பர் 18]

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) கஸ்தூரிபாய் மருத்துவமனையை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்ற கோரிக்கை அம்மருத்துவமனையின் ஊழியர்களிடமிருந்து மட்டுமே பெறப்பட்டது.

(ஆ) ஆனால், இம்மருத்துவமனை தனியாரால் நிறுவப்பட்ட ஒரு சங்கத்தால் (சங்கங்களுக்கான விதிகளின்படி பதிவு செய்யப்பட்ட ஒன்று) நடத்தப்பட்டு வந்தது. தற்போது சங்கம் ஒரு டிரஸ்டாக மாற்றப்பட்டுள்ளது. இதில் அரசிற்கு எவ்வித பொறுப்பும் இல்லை. ஆகவே, இதை அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்பு ஆராயப்படவில்லை.

### சேரன்மாதேவி பகுதியில் கன்னடியான் கால்வாய் மீதுள்ள சாலைப் பாலத்தை அமைத்தல்.

164. வினா எண் 3296—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம் சேரன்மாதேவி தொகுதி வடக்கு அரியநாயகிபுரம் மற்றும் தெற்கு அரியநாயகிபுரம் ஆகிய பகுதிகளுக்கு இடையே உள்ள கன்னடியான் கால்வாய் மீதுள்ள சாலைப் பாலத்தை சற்று விரிவுபடுத்தி சீரமைக்கும் பணி எப்போது துவங்கும்?

விடை—

வினாவில் குறிப்பிடப்படும் வடக்கு அரியநாயகிபுரம் ஆற்றுச் சாலையில் கோடசல் கால்வாயின் குறுக்கே அமைந்துள்ள இக் கல்பாலம் திருப்திகரமான நிலையில் உள்ளது. இது கல்-தூண்களாலும், மூடு கற்களாலும் கட்டப்பட்டுள்ளதால் இதனை அகலப்படுத்த முடியாது. அத்துடன் இச்சாலையில் போக்குவரத்து ஏதும் நடைபெறாத காரணத்தாலும், வண்டி நடைபாதைப் பாலமாக அணுகு சாலையுடன் அமைக்க சுமார் ரூபாய் நான்கு இலட்சம் தேவைப்படுவதாலும், நிதிப் பற்றாக்குறை காரணமாக இதனை தற்சமயம் எடுத்துச் செய்ய இயலவில்லை.

[1987 நவம்பர் 18

**விவசாயிகளுக்கு வெள்ளைப் பொன்னி நெல் விதை வழங்கல்.**

165. **வினா எண் 3304**—மாண்புமிகு திரு. **வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் விவசாயிகளுக்கு வெள்ளைப் பொன்னி நெல் விதை வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

(அ) தமிழகத்தில் விவசாயிகளுக்கு வெள்ளைப் பொன்னி நெல் விதை வேளாண்மைத் துறை மூலம் வழங்கப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**வேடசந்தூர் நகரில் உதவி வேளாண்மை இயக்குநர் அலுவலகம் அமைத்தல்.**

166. **வினா எண் 3346**—மாண்புமிகு திரு. **வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் நகரில் உதவி வேளாண்மை இயக்குநர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

மதுரை மாவட்டத்தினை பிரித்து, திண்டுக்கல், தலைமையிடமாக அண்ணா மாவட்டம் 15—9—1985 முதல் துவக்கப்பட்டு உள்ளது. அந்த பிரேரணையில் வேடசந்தூர் உட்பட நான்கு உதவி வேளாண்மை இயக்குநர் அலுவலகங்கள் அமைக்க வேளாண்மை இயக்குநர் செயற்குறிப்பு அனுப்பியிருந்தார். அந்த



1987 நவம்பர் 18]

செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்தது. நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு புதிதாக உதவி வேளாண்மை அலுவலகம் எதுவும் அமைக்கத் தேவையில்லை என முடிவு எடுக்கப்பட்டது.

**கண் பார்வை இழந்தோருக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்கல்.**

167. **வினா எண் 3366**—மாண்புமிகு திரு. **வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கண் பார்வை இழந்தோருக்கு மாதம் இருமுறை சிகிச்சைக்கு செல்வதற்காக இலவசப் பயணச் சீட்டு பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் அளிக்கப்பட்டு வந்தது இன்னும் அளிக்கப்படுகிறதா?

(ஆ) அத்திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவாக்கப் படுமா?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் இரு விழிகளையும் இழந்தவர்களுக்கு அக்கழகப் பேருந்துகளில் எல்லா காரணங்களுக்காகவும் பயணம் செய்ய இலவசப் பயணச் சீட்டு வழங்கப்படுகிறது. மற்றும் விரைவுப் பேருந்துகளை இயக்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைத் தவிர மற்றைய போக்குவரத்துக் கழகங்கள், கண் பார்வையற்றவர்கள் அவர்களுடைய இல்லத்திலிருந்து கல்வி நிலையம்/மருத்துவ மனை/பணியாற்றுமிடம் செல்ல இலவசப் பயண அட்டை வழங்குகின்றன.

**ஒன்றியங்களிலுள்ள குடிதண்ணீர் குழாய்களில் ஏற்படும் பழுதை நீக்குவதற்கு பிட்டர் நியமனம்.**

168. **வினா எண்** [illegible]—மாண்புமிகு திரு. **வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** (பேரவைத் துணைத் தலைவர்): [illegible] கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1987 நவம்பர் 18

(அ) ஒன்றியங்களில் உள்ள குடிதண்ணீர் குழாய்களில் ஏற்படும் பழுதை நீக்க ஒன்றியத்திற்கு ஒரு பிட்டர் மட்டும் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், ஐம்பது குழாய்க்கு ஒரு பிட்டர் வீதம் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) கோடை காலத்தில் கையிறைப்பான்களில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிபார்க்கும் பொருட்டு, ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கையிறைப்பான்களின் எண்ணிக்கைக்கேற்பவும், பழுதுகளை சரி பார்ப்பதற்கு ஏற்படும் கால அளவின் அடிப்படையிலும் கூடுதலான பணியாளர்களை தற்காலிகமாக நியமிக்கவும் அவர்களுக்குத் தகுந்த முறையில் ஊதியம் வழங்கிடவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**விதவைகள் அரசுப் பணியில் சேர முன்னுரிமை அளித்தல்.**

169. **வினா எண் 3381—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம், மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விதவைகள் அரசுப் பணியில் சேர முன்னுரிமை அளிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

ஆதரவற்ற விதவைகள் அரசுப் பணியில் சேர ஏற்கெனவே தனி சலுகை வழங்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு பணியிடத்திற்குப் போட்டியிடும் மற்ற போட்டியாளர்கள் பெற்றிருக்கின்ற தகுதிகளை ஆதரவற்ற விதவை பெற்றிருந்தால் அவ்விதவைக்கு முன்னுரிமை அளிக்கப்படும். [illegible]



1987 நவம்பர் 18]

**திண்டுக்கல்லுக்கு குடிநீர் வழங்கும் காமராஜ் நீர்த்தேக்கம்**

170. **வினா எண் 3387—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லுக்கு குடிநீர் வழங்கும் காமராஜ் நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு மணல் மேவியதால் குறைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

**விடை—**

(அ) காமராஜர் சாகர் அணையின் வடிவமைப்பு கொள்ளளவு மணல் மேவியதால் பாதிக்கப்படவில்லை. எதிர்காலத்தில் ஏற்படும் மணல் படிவிற்காக வடிவமைப்பின் நீர் எடுக்கும் கிணற்றுக்கு அருகில் 26 அடி ஆழம் முன்னேற்பாடாக கொடுக்கப்பட்டுள்ளது. பொதுவாக வெள்ளக் காலங்களில்தான் மண் படிவை நீக்கும் பணி மண் அரிப்பு மதகை இயக்கி செய்யப்படும். எனவே அணையின் வடிவமைப்பு கொள்ளளவு தற்போது மண் மேவியதால் குறையவில்லை.

(ஆ) தற்சமயம் இது குறித்து நடவடிக்கை அவசியமில்லை. உரிய காலத்தில் திண்டுக்கல் நகராட்சி பராமரிப்பு பணியை மேற்கொள்ளும்.

**சேலம் மாவட்டத்தில் மருத்துவமனை**

171. **வினா எண் [illegible] திரு. [illegible] மணி:** மாண்புமிகு [illegible] ஆட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் [illegible] மருத்துவமனை [illegible] உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு என்ன செலவாகும்?

(இ) [illegible]

விடை—

(அ) ஆம். கட்டுமானப் பணி ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

(ஆ) தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தாலும் அரசாலும் ரூபாய் 1,11,42,000 ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

(இ) ஐம்பது (50) படுக்கைகளைக் கொண்டதாக இருக்கும்.

தூத்துக்குடி மின் நிலையத்திற்கு ஆஸ்திரேலியாவிலிருந்து நிலக்கரி இறக்குமதி.

172. வினா எண் 3457—திரு. கு. ரமணி: மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மின்சார நிலையத்துக்கு ஆஸ்திரேலியாவிலிருந்து நான்கு லட்சம் டன் நிலக்கரி இறக்குமதி செய்ய மாநில அரசு அனுமதி கோரியதற்கு மத்திய அரசு அனுமதித்துள்ளதா?

(ஆ) அந்த நிலக்கரிக்கு இறக்குமதி வரியிலிருந்து விலக்களிக்கக் கோரப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், மத்திய அரசு என்ன பதிலளித்துள்ளது?

விடை—

(அ) மாநில அரசு 5 லட்சம் டன் நிலக்கரி இறக்குமதி செய்ய மத்திய அரசிடம் அனுமதி கோரியது. ஆனால் மத்திய அரசு 1 லட்சம் டன் நிலக்கரி மட்டும் இறக்குமதி செய்து கொள்ள அனுமதித்தது.

(ஆ) ஆம்.

(இ) மத்திய அரசு இக்கோரிக்கையை ஏற்கவில்லை.

சேது சமுத்திரத் திட்டம்.

173. வினா எண் 3461—திரு. அ. [illegible]: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சேதுசமுத்திரத் திட்டத்தின் தற்போதைய நிலை குறித்து [illegible] பெறப்பட்டுள்ளதா?



விடை—

சேதுசமுத்திரத் திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

செயற்கை முறை கருத்தரிப்பு விந்துகளின் திறன் குறைவால் கால்நடை வளர்ச்சி பாதிப்பு.

174. வினா எண் 3477—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செயற்கை முறை கருத்தரிப்பு விந்துகளின் திறன் குறைவு காரணமாக கால்நடை வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை சீர் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

உடுமலைப்பேட்டை குதிரை மசால் மாவு தயாரிப்பு ஆலை.

175. வினா எண் 3478—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை குதிரை மசால் மாவு தயாரிப்பு ஆலை (Alfalfameal) உற்பத்தித் திறன் குறைவாய் இருப்பதின் காரணம் என்ன? [illegible]

(ஆ) உற்பத்தியைப் பெருக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

[illegible]

[1987 நவம்பர் 18

அறிக்கை.

(அ) குதிரை மசால் உணவு தயாரிக்க தேவையான மூலப் பொருளான குதிரை மசால் செடி போதிய அளவுக்குக் கிடைக் காததே இதற்குக் காரணம்.

(ஆ) உற்பத்தியைப் பெருக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன :—

1. குதிரை மசால் செடி பயிரிடும் விவசாயிகளுக்கு ஏற்படக் கூடிய சிக்கல்களைக் களைய தேவைப்படும்போது கழகத் தலைவர்/மேலாண் இயக்குநர் தலைமையில் கூட்டம் கூட்டப்பட்டு அவர்களுக்குத் தேவையான வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

2. புரதச்சத்து குறையாமல் இருக்க செடிகளை மூன்று வாரத்துக்கு ஒரு முறை வெட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3. மின்வெட்டு நடைமுறையில் உள்ள காலங்களில் குதிரை மசால் செடி உற்பத்தி செய்யும் விவசாயிகள் போதுமான கடன் வசதி பெற வேண்டிய நிலையில் உள்ளனர். இந்நிறுவனத்துக்குத் தான் தாங்கள் உற்பத்தி செய்யும் குதிரை மசால் செடியைக் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு இவர்களுக்கு வேண்டிய தொகையை வங்கி மூலம் தாய் நிறுவனம் கடனாக பெற்றுத் தருகிறது.

4. விவசாயிகளின் கோரிக்கைக்கு இணங்க இப்போது குதிரை மசால் செடியின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 150-ல் இருந்து ரூ. 160 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

### கல்லணைப் பகுதியைச் சுற்றுலா மையமாக்கல்.

176. வினா எண் 3492—திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லணைப் பகுதியைச் சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன ?



1987 நவம்பர் 18]

விடை—

(அ) ஆம்.

(ஆ) ரூ. 18.00 இலட்சத்தில் திட்டப் பணிகள் தயாரிக்கப் பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### ஆசிரியர் நல்வாழ்வு குறித்து அமைக்கப்பட்ட தேசிய அமைப்பின் மாநில செயற்குழு.

177. வினா எண் 3495—திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆசிரியர் நல்வாழ்வு குறித்து அமைக்கப்பட்ட தேசிய அமைப்பின் மாநில செயற்குழு தற்போது செயல்பட்டு வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அது கடந்த ஆண்டில் ஆற்றியுள்ள பணிகள் என்னென்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) படிப்புதவித் தொகையாக 1983-84-ல் ரூ. 77,937-ம், 1984-85-ல் ரூ. 54,750-ம், நலிவுற்ற ஆசிரியர்கட்கு உதவி மான்யமாக 1983-84-ல் ரூ. 2,750-ம், 1384-85ல் ரூ. 8,5000ம் வழங்கப்பட்டன.

5—9—1984-ல் ஆசிரியர் தின விழாவைச் சிறப்பாக கொண்டாடும் முகத்தான் சிறப்பு மலர் மாநில விருது பெற்ற நல்லாசிரியர்கள் பற்றிய குறிப்புகளுடன் வெளியிடப்பட்டது.

ஆசிரியர் தினத்தன்று முக்கிய பிரமுகர்கள் மற்றும் நன்கொடை அளித்த நிறுவனங்களின் வாழ்த்துக்கள் செய்தித் தாள்களில் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டது.

### இராயபுரத்திலுள்ள படகு கட்டும் தளம்.

178. வினா எண் 3500—திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இராயபுரம் படகு கட்டும் தளத்தில், விசைப்படகுகள் கட்டும் திறன் எவ்வளவு ?

விடை—

இராயபுரம் படகு கட்டும் தளம் இப்போது செயல்படவில்லை.

மானாமதுரை பகுதியில் சர்க்கரை ஆலை அமைத்தல்.

179. வினா எண் 3516—திரு. கா. சொர்ணலிங்கம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை பகுதியில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்.

180. வினா எண் 3543—திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெம்பக்கோட்டை ஒன்றியம், வலையப்பட்டி, டி. கரிசல்குளம் கிராமங்களில் நல்ல தண்ணீர் இல்லாத காரணத்தால் இங்கு ஆண்டிலேயே பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், [illegible] திட்டம் [illegible] உள்ளது?



1987 நவம்பர் 18]

விடை—

(அ) மற்றும் (ஆ) வெம்பக்கோட்டை ஒன்றியம், வலையப்பட்டி, டி. கரிசல்குளம் ஆகிய இரு குடியிருப்புகளும் நல்ல நீர் நிலை கொண்ட குடியிருப்புகள் என அறியப்பட்டது. எனவே, தற்போது இக்குடியிருப்புகளுக்கு குடிநீர்த் திட்டம் ஏதுவும் திட்டமிடப்படவில்லை.

சிவகாசி-விருதுநகர் சாலை விரிவாக்கம்.

181. வினா எண் 3544—திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி-விருதுநகர் சாலை விரிவாக்கப்பட்டு தார் போடப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) இப்பணியினையும் அர்ஜுனா நதியின் குறுக்கே பால வேலையும் தொடங்க நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா?

விடை—

(அ) சிவகாசி-விருதுநகர் சாலையை (22.40 கி.மீ. நீளம்) விரிவுபடுத்தி கல்பரத்தும் வேலைகளுக்கு ரூ. 14.00 இலட்சம் செலவில் செய்ய அரசு புதிய பணிகள் திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி சாலையை விரிவுபடுத்தி கல்பரத்தும் பணி மட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டு 12/84-ல் பணி முடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள பாலங்கள் கட்டும் பணிக்கு பெருந்தொகை தேவைப்படுவதால் இப்பணியினை உடனடியாக மேற்கொள்ள இயலாது. எனினும் நிதி நிலைமை இடம் தரும்போது இதனை எடுத்து செயல்படுத்த பரிசீலிக்கப்படும்.

[1987 நவம்பர் 18

**தொலைக்காட்சியில் நிகழ்ச்சி நேரம் மாற்றப்பட்டதை குறித்து மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சரகத்திற்கு அனுப்பிய தந்தி கடிதம்.**

182. **வினா எண் 3552—திரு. செ. செம்மலை:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொலைக்காட்சியில் நிகழ்ச்சி நேரம் மாற்றப்பட்டதைக் குறித்து 11—3—1985 ஆம் தேதி தமிழ்நாடு அரசு மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சரகத்திற்கு அனுப்பிய தந்திக்கும் கடிதத்திற்கும் பதில் ஏதும் பெறப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விபரம் என்ன ?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) விபர அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

சென்னை தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒளிபரப்பில் 10—3—1985-லிருந்து தமிழ் நிகழ்ச்சி நேரமாகிய இரவு 8-30 மணியிலிருந்து 9-00 மணி வரை உள்ள 30 நிமிட நேரத்தை தேசிய ஒளிபரப்புக்காக மாற்றியமைத்ததை அறிந்தவுடன் 11—3—1985 அன்று மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு தந்தி அனுப்பினார்கள்.

அதில், 10—3—1985-லிருந்து தமிழ் ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்த இரவு 8-30 மணி முதல் 9-00 மணி வரையுள்ள நேரத்தை தேசிய ஒளிபரப்புக்காக மாற்றியமைப்பது தொலைக்காட்சி பார்ப்போருக்கு இடைஞ்சலும், இடையூறும் ஏற்படுத்துவதுடன், முக்கியமான நேரத்தில் தமிழ் ஒளிபரப்பை பார்க்கின்ற வாய்ப்பை இழக்க வேண்டியுள்ளது என்கின்ற நிலைமையை தெரிவித்து முன்போலவே தமிழ் ஒளிபரப்பு நிகழ்ச்சிகளை மாலை 6-00 மணியிலிருந்து இரவு 9-30 மணிவரை தொடர்ந்து நடத்த, தொலைக்காட்சி நிறுவனத்தினரை அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.



சென்னை-600 008. 136541

1987 நவம்பர் 18]

தொடர்ந்து, மத்திய ஒலிபரப்புத்துறை அமைச்சர் அவர்களுக்கு, 14—3—1985-ல் செய்தித்துறை அமைச்சர் அவர்களும், 22—4—1985-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கடிதங்கள் அனுப்பினார்கள்.

19—6—1985 அன்று புதுடெல்லியில் நடந்த செய்தித்துறை அமைச்சர்கள் மாநாட்டிலும், தமிழ் நிகழ்ச்சி நேரமாகிய இரவு 8-30 மணியிலிருந்து 9.00 மணி வரையுள்ள 30 நிமிட நேரத்தை டில்லியிலிருந்து ஒளிபரப்பப்படும் "வர்த்தக ஒளிபரப்பு" நிகழ்ச்சிகளுக்காக மாற்றியமைத்தது தமிழக மக்கள் மனத்திலே, இத்தகைய ஒளிபரப்பு மூலம் இந்தி மொழி திணிக்கப்படுகிறது என்ற கருத்தை ஏற்படுத்துகிறது. தேசிய ஒற்றுமையும், தேசிய உணர்வையும் வளர்க்கக் கூடியதாக தேசிய நிகழ்ச்சிகள் அமைய வேண்டும் என்றும், அவை மக்கள் மனத்தில் வேற்றுமை உண்டாக்காதவாறும் மாநில நிகழ்ச்சிகள் பாதிக்காதவாறும் அமைய ஆவன செய்ய வேண்டும் என்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் வலியுறுத்திக் கூறப்பட்டது. தற்போது நேரங்கள் மாற்றப்பட்டு 11—8—1985 முதல் சென்னையிலிருந்து இரவு 8-40 மணிக்கு தமிழ் செய்தி ஒளிபரப்பும், டெல்லியிலிருந்து இரவு 9-30 மணிக்கு ஆங்கில செய்தி ஒளிபரப்பும் நடைபெற்று வருகின்றன. தற்போது இரவு 9-00 மணி முதல் தேசிய நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன.

**தமிழ்நாட்டிலிருந்து கோலாவிற்கு சந்தன மரங்கள் கடத்தலைத் தடுத்தல்.**

183. **வினா எண் 3553—திரு. செ. செம்மலை:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து கோலாவிற்கு சந்தன மரங்கள் அதிக அளவில் அனுமதியில்லாமல் கொண்டு செல்லப்படுவது உண்மையா ?

(ஆ) அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள தீவிர நடவடிக்கை யாது ?

விடை—

(அ) அதிக அளவில் இல்லையென்றாலும் ஓரளவு கொண்டு செல்லப்படுகின்றன.

(ஆ) கேரளத்திற்கு அனுமதியில்லாமல் சந்தன மரங்கள் கொண்டு செல்வதை, உதகையிலுள்ள வனப் பாதுகாப்புப் படையினர் கேரள காவல் துறையினரின் உதவியுடன் கண்டு பிடித்து கேரளாவிலுள்ள சில சந்தன எண்ணெய் தொழிற்சாலைகளிலிருந்து சில ஆவணங்களைக் கைப்பற்றியுள்ளனர். இவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

### அரசு ஊழியர்களின் குறைகளை விசாரிக்க தனி டிரிபியூனல் அமைக்கும் திட்டம்.

184. வினா எண் 3556—திரு. செ. செம்மலை மற்றும் மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஊழியர்களின் குறைகளை விசாரிப்பதற்கென்று தனி டிரிபியூனல் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) இம்மாநில அரசு ஊழியர்களுக்காக நிர்வாகத் தீர்ப்பாயம் ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

(ஆ) இறுதி முடிவேதும் எடுக்கப்படாத நிலையில் விபரம் தெரிவிக்கும் நிலை எழவில்லை.



### இன்னைக்கோரையில் புதிய தேயிலை தொழிற்சாலை அமைத்தல்.

185. வினா எண் 3561—திரு. கே. உச்சி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், இன்னைக் கோரையில் புதிய தேயிலை தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசிடம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இச்செயற்குறிப்பு பகுதி இரண்டாம் திட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1985-86-ல் இத்தொழிற்சாலை அமைப்பதற்கு அரசாணை நிலை எண் 337, தொழிற்துறை, நாள் 27—3—1986-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த தொழிற்சாலைக்காக அரசு பங்குத் தொகை ரூ. 7.50 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தொழிற்சாலை பதிவு செய்யப்பட்டு மற்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### நீலகிரி மாவட்டம் கூக்கல் தொரையில் மருத்துவமனை.

186. வினா எண் 3565—திரு. கே. உச்சி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், ஊட்டி வட்டம், கூக்கல் தொரையில் கட்டப்பட்டுவரும் அரசு மருத்துவமனையின் கட்டுமானப் பணிகள் எப்பொழுது முடியும்?

விடை—

கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு 11—[illegible]—1985 அன்று திறந்தும் வைக்கப்பட்டுவிட்டது.

## முதுமலை சரணாலயத்தில் உல்லாசப் பயணிகள் தங்குவதற்காக கட்டப்பட்ட கோபுரங்கள்.

187. வினா எண் 3583—திரு. கே. உச்சி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், முதுமலை வன விலங்குச் சரணாலயத்தில் உல்லாசப் பயணிகள் தங்குவதற்காக கட்டப்பட்ட கோபுரங்கள் Towers எத்தனை?

(ஆ) அவைகளின் மதிப்பீடு எவ்வளவு?

(இ) தினசரி கட்டணம் எவ்வளவு வசூலிக்கப்படுகிறது?

விடை—

(அ) முதுமலை வனவிலங்குச் சரணாலயத்தில் பயணிகள் தங்குவதற்காக சாண்ட்ரோட்வாட்ச் டவர் மற்றும் சி.எம். வாட்ச் டவர் என்ற இரண்டு பார்வையாளர் மாடங்கள் கட்டப்பட்டுள்ளன.

(ஆ) இவ்விரு மாடங்களைக் கட்ட முறையே ரூ. 28,778.00 மற்றும் ரூ. 1,02,891.00 செலவிடப்பட்டன.

(இ) ஒரு அறைக்கு நாள் ஒன்றிற்கு ரூ. 25 வாடகை வசூலிக்கப்படுகிறது.

## கூடலூர் வட்டத்தில் வெட்டப்பட்ட தங்கச் சுரங்கம்.

188. வினா எண் 3595—திரு. கே. உச்சி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் நீண்ட நாட்களுக்கு முன் தங்கச் சுரங்கம் ஒன்று வெட்டப்பட்டு இடையில் நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதனை மீண்டும் தொடங்க அரசு ...



விடை—

(அ) ஆம்.

(ஆ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் காணப்படும் தங்க அமைப்புக்கள் பொருளாதார முக்கியமற்ற குறைந்த அளவே காணப்படுகிறது. எனவே, அரசு அங்கு சுரங்கப்பணியை தொடர்ந்து மேற்கொள்ளாது எனலாம்.

## கூடலூர் நடுவட்டம் சாலையை அகலப்படுத்தல்.

189. வினா எண் 3605—திரு. கே. உச்சி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் நடுவட்டம் சாலை மிகவும் குறுகிய பாதையாக இருப்பதால் போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாக உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை அகலப்படுத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

விடை—

(அ) மற்றும் (ஆ) மேற்கூறிய கருத்துரு பரிசீலனையில் இல்லை.

## தமிழ்நாடு பரிசுச் சீட்டின் மூலம் அரசுக்கு வருமானம்.

190. வினா எண் 3633—திரு. மு. தங்கமணி: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பரிசுச் சீட்டின் மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானம் என்ன?

(ஆ) பரிசு விழுந்தும் பரிசுத் தொகையைப் பெற்றுக் கொள்ளாமல் எவ்வளவு தொகை உள்ளது?

(இ) மற்ற மாநிலங்களைப்போல் முதல் பரிசு ஒரு கோடி உயர்த்தும் செயற்குறிப்பு உள்ளதா?

[1987 நவம்பர் 18

விடை—

(அ) ரூ. 39.58 கோடி.

(ஆ) ரூ. 8.33 கோடி.

(இ) இல்லை.

### மயிலாடுதுறையில் நகராட்சி குடிநீர் திட்டத்திற்கு நிதியுதவி.

191. வினா எண் [illegible]—திரு. [illegible]: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் திட்டத்திற்கு நிதி உதவி செய்யும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா?

விடை—

இல்லை.

### குமரி மாவட்டத்திலுள்ள நீதிபதிகளுக்கு குடியிருப்பு வசதி.

192. வினா எண் 3644 டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்திலுள்ள எல்லா நீதிபதிகளுக்கும் குடியிருப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளனவா?

விடை—

குமரி மாவட்டத்தில் 12 நீதிபதிகளுக்கு வீட்டுவசதி செய்யப் பட்டுள்ளது.



1987 நவம்பர் 18]

### குமரி மாவட்டம் தமிழகத்துடன் இணைவதற்கு போராடியவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகை.

193. வினா எண் 3657—டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணைவதற்கு போராடியவர்களுக்கு அளித்து வந்த உதவித் தொகை நிறுத்தப் பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

(இ) தொடர்ந்து இவர்களுக்கு உதவித் தொகை வழங்க எடுத்து வரும் நடவடிக்கை யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) குமரி மாவட்டம், தாய்த் தமிழகத்தோடு இணைய வேண்டும் எனப் போராடிய தியாகிகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை எதிர்த்து சென்னையைச் சேர்ந்த திரு. ஆர். ஆர். தளவாய் அவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் 1975-இல் அளித்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டபின் உச்ச நீதிமன்றத்திற்கு முறையீடு செய்து கொண்டார். அந்த முறையீட்டினை விசாரணை செய்த உச்ச நீதிமன்றம், இத்திட்டம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானது என்று தீர்ப்பளித்தது. மேற்குறித்த தீர்ப்பின் காரணமாக இத்திட்டம் 1977 ஆம் ஆண்டில் ரத்துச் செய்யப்பட்டது.

(இ) பிறிதொரு திட்டத்தில் தமிழுக்காகப் போராடியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க கருதப்பட்டுள்ளது.

[1987 நவம்பர் 18

## நாகர்கோவில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம்.

194. வினா எண் 3669—டாக்டர் கே. குமாரதாஸ்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்
196. வினா எண் 3699 திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு
கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் நாகர்கோவிலில் இயங்கிவரும் கூட்டுறவு வீடு கட்டுதல் என்கிற கூட்டுறவு அமைப்பின் கீழ் செயல்பட்டு வருகின்ற நிறுவனம் வீடு கட்ட இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இடத்தில் 18 (பதினெட்டு) மாத காலத்திற்குள் வீடு கட்டவில்லையென்றால் கொடுத்த இடத்தை ரத்துச் செய்து வேறு நபருக்கு அதிக லாபத்திற்கு விற்று விடுவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது?

(இ) தமிழகம் முழுவதும் இம்மாதிரியான திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

விடை—

(அ) மற்றும் (ஆ) நாகர்கோவில் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் துணை விதி 36 எ-யின்படி வீட்டுமனைகள் ஒதுக்கப்பெற்ற ஆறு திங்களுக்குள் வீடு கட்டுமான வேலையினை ஆரம்பித்து 18 மாதங்களுக்குள் வீடு கட்டுமானப் பணியை முடித்து விடவேண்டும். இந்நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத 29 உறுப்பினர்களின் மனைகளை சங்கக் குழு கூட்ட தீர்மானத்தின்படி ரத்துச் செய்து, அம்மனைகளை முன்னுரிமைப் பதிவேட்டில் நிலுவையில் உள்ள நபர்களுக்கு, எற்கனவே நிர்ணயிக்கப்பட்ட விலைக்கே மறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் சங்கம் எவ்வித இலாபமும் ஈட்டவில்லை.

(இ) கூட்டுறவு வீடு கட்டுநர் சங்கங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட மாதிரி துணைவிதிகள் போல வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள் வீட்டுமனை வினியோகச் சங்கங்கள் ஆகியவைகளுக்குச் சம்பந்தப்பட்ட துணை விதிகளில் உள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாதவர்களது மனையினைத் திருப்பிப் பெறுவது துணைவிதிப்படி முறையாகும். இதனை எல்லா கூட்டுறவுச் சங்கங்களும் கடைப்பிடிக்க வேண்டியது கடமை



1987 நவம்பர் 18]

## பவானி ஆற்றின் மீது பாலம் கட்டும் திட்டம்.

195. வினா எண் 3672—திரு. மா. சின்னராசு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலுக்கா நெல்லித்துறை பகுதியை மேட்டுப்பாளையத்தோடு இணைக்க பவானி ஆற்றின்மீது பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

## கீழணையில் கொள்ளிடத்தின் மீது கட்டப்பட்டுள்ள குறுகலான பாலங்கள்.

196. வினா எண் 3699—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் உள்ள அணைக்கரை எனப்படும் கீழணையில் கொள்ளிடத்தின் மீது கட்டப்பட்டுள்ள பழைய குறுகலான பாலங்களுக்கு பதில் புதிய அகலமான பாலங்கள் கட்ட திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

விடை—

தற்போது இல்லை.

## மரமடக்கி கிராமம் அருகே வெள்ளாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டும் திட்டம்.

197. வினா எண் 3710—திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அறிமளம் ஒன்றியம், மரமடக்கி கிராமத்திற்கு அருகே வெள்ளாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மாமடக்கி கிராமத்திற்கு அருகே வெள்ளாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டும் திட்டம் தற்போது விரிவான ஆய்வில் உள்ளது.

(ஆ) அந்த அணைக்கட்டு கூடலூர் கிராமத்தின் அருகிலுள்ள சேது கண்மாய் மற்றும் பிற ஏரிகளை நிரப்ப வகை செய்யும்.

**பள்ளிகளில் அச்சகத் தொழிலை தொழிற்கல்வியாக போதிக்கும் திட்டம்.**

198. வினா எண் 3715—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிகளில் அச்சகத் தொழிலை தொழிற் கல்வியாக போதிக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

விடை—

மேல்நிலைப் பள்ளிகளில் 1983-84-லிருந்து அச்சகத் தொழில் என்ற தொழிற் பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது.

**சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குச் சொந்தமான இடம்.**

வினா 3725—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சைதை ஆசிரியர் பயிற்சி கல்லூரிக்கு சொந்தமான இடத்தை நரிக்குறவர் பள்ளிக்கு வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குச் சொந்தமான நிலத்தில், நரிக் குறவர் பள்ளியின் ஆதிக்கத்திலுள்ள ஒரு பகுதி நிலத்தை அப்பள்ளிக்கு நிலக்கிரயமின்றி வழங்குவது சம்பந்தமான கருத்துரு சென்னை மாவட்ட ஆட்சியர் பரிசீலனையில் உள்ளது.



**பவானிசாகர் தொகுதி, புன்செய் புளியம்பட்டி பேரூராட்சியில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டும் திட்டம்.**

200. வினா எண் 4313—திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் பவானிசாகர் தொகுதி புன்செய் புளியம்பட்டி பேரூராட்சிப் பகுதியில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை வீடுகள்?

(இ) எப்போது வேலை துவங்கப்படும்?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) ஆம். 23.56 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த செயற்குறிப்பு மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர் வீடு கட்டும் பணி துவக்கப்படும்.

**இசைக் கல்லூரிகளில் பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேல் படிப்பு வகுப்புகள் தொடங்கல்.**

201. வினா எண் 6762—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் இசைக் கல்லூரியில் பட்டப் படிப்பு பட்ட மேற்படிப்புப் பிரிவுகள் தொடங்கும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**தலைவர்கள் பிறந்த நாளில் கைத்தறித் துணிக்கு தள்ளுபடி அளித்தல்.**

202. வினா எண் 6851—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணா, பெரியார், காமராஜ் போன்ற தலைவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு கைத்தறித் துணிக்குத் தள்ளுபடி வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

**வடமாநிலங்களில் தமிழ் பிரசார சபை அமைத்தல்...**

203. வினா எண் 6943—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடமாநிலங்களில் தமிழ் பிரசார சபை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.



**கிராமிய பண்ணைகள் அமைத்தல்.**

204. வினா எண் 6949—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயம், மீன், கோழி, ஆடுவளர்ப்பு போன்றவை அடங்கிய கிராமிய பண்ணைகளை நிறுவும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை.**

205. வினா எண் 7222—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு கொடுக்கும் விவசாயிகளிடமிருந்து 1984-85 அரவை பருவத்திற்குக் கொடுக்கப்படும் விலை கட்டுப்படியாகவில்லை என்றும், வேலூர் சர்க்கரை ஆலையில் கொடுக்கப்படும் விலை வேண்டும் என்றும் அரசிற்கு வேண்டுகோள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

இளங்கலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு முதுகலைப் பட்டம்.

210—வினா எண் 7643—திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில், இளங்கலை பட்டம் பெற்ற ஆசிரியர்கள் முதுகலை பட்டம் பயில அரசு உதவித் தொகை அளிக்கிறதா?

(ஆ) ஆம் எனில், மாவட்ட வாரியாக பயனடைந்தோரின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

நகரப் பேருந்துகளில் Multi Pronged Route

211—வினா எண் 7667—திரு. கே. உச்சி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் Multi Pronged Route ஆக நகரப் பேருந்துகள் விடப்படுகின்றனவா?

(ஆ) எந்தெந்த நகரங்களிலிருந்து அவ்வாறு விடப்பட்டுள்ளன?

(இ) அதற்கான காரணம் என்ன?



விடை—

(அ) ஆம்.

(ஆ) பல்முனை வழித்திட்டத்தின்கீழ் (Multi-pronged Route) பேருந்து விடும் திட்டம் அனைத்து நகரங்களுக்குமே விஸ்தரிக்கப் பட்டு, அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

(இ) இத்திட்டத்தால் பல திசைகளிலும் உள்ள அனைத்துக் கிராமங்களுக்குமே பேருந்து வசதி கிடைக்கும்.

குத்தாலம் ஒன்றியம், பெருஞ்சேரி சரஸ்வதி வித்தியாலயத்தை அரசு ஏற்று நடத்துதல்.

212—வினா எண் 7951—திரு. பாப்பா சுப்பிரமணியம்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், பெருஞ்சேரி கிராமத்தில் உள்ள சரஸ்வதி வித்தியாலயம் என்ற தனியார் பள்ளியை அரசு மேற்கொள்ளும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

வடிகரை அல்லது சன்னா நல்லூர் கிராமத்தில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்.

213—வினா எண் 7965—திரு. பாப்பா சுப்பிரமணியம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நன்னிலம் வட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வடகரை அல்லது சன்னா நல்லூர் கிராமத்தில் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

**பூலத்தூர் மற்றும் கும்பரையூர் கிராமங்களுக்கு பண்ணைக் காட்டிலிருந்து குடிநீர்த் திட்டம்.**

214—வினா எண் 8020—டாக்டர் த. **முகம்மது சலீம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டம், பூலத்தூர், கும்பரையூர் கிராமங்களுக்கு பண்ணைக்காட்டிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : கும்பரையூர் மற்றும் பூலத்தூர் கிராமங்களுக்கு, பண்ணைக்காடு குடிநீர்த் திட்டத்திலிருந்து ரூ. 17.23 இலட்சம் செலவில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

**ஸ்ரீவைகுண்டம் தாலுக்கா கிராக்குளம் பாசனக்குளத்தை ஆழப்படுத்தல்.**

215—வினா எண் 8025—திரு. எஸ். என். **இராமசாமி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவைகுண்டம் தாலுக்கா கிராக்குளம் புதிய பாசனக் குளத்தை ஆழப்படுத்தும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?



விடை—

(அ) மற்றும் (ஆ) : திருநெல்வேலி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் கிராக்குளம் என்ற கண்மாய் 1977-78-ம் ஆண்டில் புதிதாக அமைக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டு முழுவதும் பயனடைவதால் ஆழப்படுத்தும் அவசியம் இல்லை. எனவே, அதனை ஆழப்படுத்தும் திட்டம் ஏதுமில்லை.

**சென்னிமலை ஒன்றியத்திற்கு காவிரி ஆற்று குடிநீர்த் திட்டம்.**

216—வினா எண் 8070—திரு. கா. செ. **பழனிச்சாமி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவிரி ஆற்றில் இருந்து, சென்னிமலைக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தை சென்னிமலை ஒன்றியம் முழுவதற்கும் விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—

இல்லை.

**இரமங்கலம் பேரூராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம்.**

217—வினா எண் [illegible]—திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, இரமங்கலம் பேரூராட்சிக்கு உலக வங்கியின் துணையுடன் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### ஆலங்குடியில் புதிய பேருந்து நிலையம் கட்டுதல்.

218—வினா எண் 8155—**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் புதிய பேருந்து நிலையம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) இதன் திட்ட மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) ஆம். 7-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மாநில ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பேருந்து நிலையம் மற்றும் பலன் தரத்தக்க முயற்சிகளை மேற்கொள்ள நகர் ஊரமைப்பு திட்டக்குழுவால் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) திட்ட மதிப்பீடு ரூ. 20 இலட்சம்.

### ஆலங்குடி தொகுதி, பிலாவிடுதி கிராமத்தில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி வாரிய வீடுகள்.

219—வினா எண் 8158—**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியில் கரம்பக்குடி ஒன்றியத்தில் உள்ள பிலாவிடுதி கிராமத்தில் தமிழ் நாடு கூட்டுறவு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கட்டிய வீடுகள் கட்டி முடிக்க முடியாத நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

(இ) கூடுதல் நிதி கொடுக்கும் திட்டம் உண்டா?

விடை—

(அ) ஆம்.





(ஆ) மற்றும் (இ) பிலாவிடுதி கிராமத்தைச் சேர்ந்த 40 உறுப்பினர்கள் உள்ளிட்ட 1,546 உறுப்பினர்களுக்கு உச்ச கடன் ரூ. 4,500-க்கு மிகாமல் கூடுதல் கடன் தொகை வழங்க தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு அரசு அனுமதி வழங்கி யுள்ளது.

### கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து சந்தூர் தாமரை ஏரிவரை தண்ணீரை கொண்டு வருதல்.

220—வினா எண் 8159—**திரு. டி. எம். வெங்கடாசலம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து வேலம்பட்டி ஏரிவரை வரும் தண்ணீரை சந்தூர் தாமரை ஏரி வரை கொண்டுவரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

### மின் இணைப்பில் முன்னுரிமை அளித்தல்.

221—வினா எண் 8188—**திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மின் இணைப்புக்கான முழு செல்வினையும் ஏற்றுக் கொள்ளும் விவசாயிகளுக்கு முன்னுரிமை அளித்து மின் இணைப்பு கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

### மதுரை மாவட்டத்தில் கால்நடைப் பண்ணை ஏற்படுத்துதல்.

222—வினா எண் 8276—**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

[1987 நவம்பர் 18

மதுரை மாவட்டத்தில் "Veterinary Farm" ஏற்படுத்தி சிறப்பான நூதன இனவிருத்தி மூலம் அதிக பால்தரும் பசுக்களை உண்டாக்கி, கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு வழங்க, தற்போது நிலவி வரும் குறைபாடுகளை நீக்க அரசு ஏதும் திட்டமிட்டுள்ளதா?

விடை—

மதுரை மாவட்டத்தில் கால்நடைப் பண்ணை ஏற்படுத்த திட்டம் ஏதுமில்லை. சிறப்பான நூதன இனவிருத்தி மூலம் அதிக பால் தரும் பசுக்களை உண்டாக்க மதுரை மாவட்டத்தில் 44 உறைவிந்து நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பிரிவு.**

223—வினா எண் 8280—திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அரசு மருத்துவ மனைக்கு அறுவை சிகிச்சை அறை ஏற்படுத்த அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**பட்டுக்கோட்டை தொகுதி, நசுவினி ஆற்றில் அணை கட்டும் திட்டம்.**

224—வினா எண் 8324—திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, மங்களங்காடு அருகே நசுவினி ஆற்றில் அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?



1987 நவம்பர் 18]

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆம். திட்ட ஆய்வு தற்போது இறுதிப் படுத்தப்படும் நிலையில் உள்ளது.

**வால்பாறை அட்டகட்டியில் சந்தன மரக்காடுகள்.**

225—வினா எண் 8377—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறை அட்டகட்டியில் சந்தன மரக் காடுகளை அதிகமாக வளர்க்க அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

விடை—

வால்பாறையில் அட்டகட்டியில் சந்தன மரக் காடுகளை வளர்க்கும் திட்டம் எதுவுமில்லை.

**வால்பாறை தொகுதி, வாட்டர்பால்ஸில் மின்சாரத்திற்கு அணை கட்டுதல்.**

226—வினா எண் 8388—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாட்டர்பால்ஸில் (வால்பாறை தொகுதி) மின்சாரத்திற்காக அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) வாட்டர்பால்ஸ் சிறிய நீர் மின்திட்டம் செயல்படுத்துவதற்கான திட்டம் தீட்டப்பட்டது. ஆனால் சுற்றுப்புற சூழ்நிலை காரணமாக இத்திட்டம் மேற்கொள்ளப் படவில்லை.

[1987 நவம்பர் 18

## திருவான்மியூருக்கு அருகில் சிப்காட் மூலம் தொழிற்பேட்டை.

227—வினா எண் 8402—திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிப்காட் நிறுவனம் மூலம் திருவான்மியூருக்கு அருகில் தொழிற்பேட்டை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணிகள் எப்பொழுது துவங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## தாம்பரத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தங்கும் விடுதி.

228—வினா எண் 8408—திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தாம்பரம் நகரில் ஒரு சாலையோர தங்கும் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



1987 நவம்பர் 18]

## சோழவரத்திற்கு விமான சர்வீஸ்.

229—வினா எண் 8430—திரு. கே. பி. கே. சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் பொன்னேரி தொகுதி, சோழவரம் மோட்டார் பந்தயம் நடந்து வரும் இடத்தில் விமான சர்வீஸ் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## சென்னை குடிநீர் திட்டத்திற்கு மத்திய அரசு வழங்கிய தொகை.

230—வினா எண் 8443—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை குடிநீர் திட்டத்திற்காக மத்திய அரசு சுமார் 98 கோடி ரூபாய் வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1987 நவம்பர் 18

**தர்மபுரியில் சூரியகாந்தி எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை.**

231—வினா எண் 8450—**திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரியில் ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டில் சூரியகாந்தி எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் கருத்து அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்பெறும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**மதுரை மாவட்டம் மேகமலையை சுற்றுலா மையமாக்கல்.**

232—வினா எண் 8457—**திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்திலுள்ள மேகமலையை சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**சென்னைக்கு அருகே வாத்துப்பண்ணை அமைக்கும் திட்டம்.**

233—வினா எண் 8557—**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைக்கு அருகே வாத்துப்பண்ணை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



1987 நவம்பர் 18]

விடை—

ஆம்.

**உசிலம்பட்டி தாலுகா, செல்லம்பட்டி கரும்புச் சாலையை மேம்படுத்தல்.**

234—வினா எண் 8639—**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா, செல்லம்பட்டி பகுதியில் உள்ள கரும்புச் சாலையை மேம்படுத்த அரசு திட்டம் ஏதும் வைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவங்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கூடிய விரைவில் துவங்கப்படும்.

**சேலம் மாவட்டத்தில் சிமெண்ட் தொழிற்சாலை துவங்கும் திட்டம்.**

235—வினா எண் 8665—**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

Whether there is any proposal to establish a Cement Factory at Salem District?

விடை—

இல்லை.

[1987 நவம்பர் 18

### நிலக்கோட்டையில் மஞ்சளாற்று கால்வாய்களை ஆழப்படுத்தல்.

240—வினா எண் 9000—**திரு. அ. பாலுசாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டையில் மஞ்சளாறு தண்ணீர் பாயக்கூடிய சிறுநாயக்கன்பட்டி, ஆவாரம்பட்டி கண்மாய் வரை ஆழப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### கடலூர் பழைய நகரில் சிப்காட் தொழிற்பேட்டை.

241—வினா எண் 9086—**திரு. துரை அன்பரசன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் பழைய நகரில் உருவாகி வரும் சிப்காட் தொழிற்பேட்டையின் அமைப்புப் பணிகள் செயல்பட துவங்கி விட்டனவா?

(ஆ) ஆம் எனில், தொழிற்பேட்டை எப்போது முதல் செயல்படத் துவங்கும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நான்கு தொழிற்சாலைகள் வியாபார ரீதியில் செயல்பட்டு வருகின்றன.



1987 நவம்பர் 18]

### கிராமப்புறங்களில் விவசாயிகளுக்கு மின்இணைப்பு கொடுத்தல்.

242—வினா எண் 9148—**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் ஆழ்குழாய் கிணறுகளும், மின்சார மோட்டார்களும் அமைத்துக்கொண்டு மின்சார இணைப்பு கோரி நீண்ட நாட்களாக உள்ள விவசாயிகளுக்கு உடன் மின் இணைப்பு கிடைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறதா?

விடை—

விண்ணப்ப தேதி வரிசைக்கிரமப்படி மின்சார இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

### பெரியார் மாவட்டம், புன்செய் புளியம்பட்டி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுதல்.

243—வினா எண் 9162—**திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் புன்செய் புளியம்பட்டி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் இல்லை.

[1987 நவம்பர் 18

### ஆன் தி லைன் சர்வீஸ்

244—வினா எண் 9195—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆன் தி லைன் விவசாய பம்புசெட்டுக்கு சர்வீஸ் வழங்கப்பட்டு, டிரான்ஸ்பார்மர் லோடு கூடுதலாக உள்ள இடங்களில் மின் இணைப்பு கொடுக்கப்படாததை அரசு அறியுமா?

(ஆ) அப்படிப்பட்ட டிரான்ஸ்பார்மர் மாற்றப்பட்ட பிறகும் மின் இணைப்பு வழங்கப்படாத இடங்களுக்கு உடனடியாக மின் இணைப்பு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) டிரான்ஸ்பார்மர் லோடுக்கு உட்பட்டு இடங்களிலேயே ஆன் தி லைன் மின் இணைப்புகள் வழங்கப் பட்டுள்ளன. எனவே, லோடு மீறி இணைப்பு கொடுக்கும் கேள்விக்கு இடமில்லை.

### வாடிப்பட்டி தாலுகா, அலங்காநல்லூருக்கு குடிதண்ணீர் வசதி.

245—வினா எண் 9250—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுக்கா, அலங்கா நல்லூர் போலீஸ் சரகத்தைச் சேர்ந்த பெரிய ஊர்சேரி கிராமத்தில் குடிதண்ணீருக்காக போடப்பட்டுள்ள அடிபம்பில் மோட்டார் வைத்து, ஓவர் டேங்க் கட்டி, குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இந்த வேலை எப்போது துவங்கும்?



1987 நவம்பர் 18]

விடை—

(அ) மற்றும் (ஆ) 60,000 லிட்டர் கொள்ளளவு உள்ள ஒரு மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய குடிநீர் விநியோகத் திட்டத் திற்கான வேலை பெரிய ஊர்ச்சேரி கிராமத்தில் நடப்பு நிதியாண்டில் துவங்கப்பெறும்.

### அரசு போக்குவரத்துக் கழகங்களில் வேலையில் இறந்தவர்களின் வாரிசுகளுக்கு வேலை அளித்தல்.

246—வினா எண் 9297—திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழகங்களில் வேலை பார்க்கும் போது மரணம் எய்திய தொழிலாளர்களின் உறவினருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படாமல் எத்தனை கேஸ்கள் இருக்கின்றன?

(ஆ) அவர்களுக்கு உடனே வேலைவாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா?

விடை—

(அ) 380 பேர்.

(ஆ) வாரிசுகளின் கல்வி மற்றும் இதர தகுதிகளுக்கேற்ப காலி இடங்கள் இருப்பின் உடனே வேலை அளிக்க போக்கு வரத்துக் கழகங்கள் நடவடிக்கை எடுக்கின்றன.

### கோத்தகிரி வட்டத்தில் மாதா கோயிலுக்குச் செல்லும் பாதையைச் செப்பனிடுதல்.

247—வினா எண் 9858—திரு. கே. உச்சி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டத்தில் அப் பேரூராட்சிக்குச் சொந்தமான மாதா கோயிலுக்குச் செல்லும் பாதையை தார் சாலையாக மாற்ற அனுமதி கொடுக்கப்படுமா?

(ஆ) அரசு அதற்காக அப்பேரூராட்சிக்கு நிதி உதவி செய்யுமா?

(இ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 33,094 செலவில் தார் சாலையாக மாற்றப்பட்டு, இந்த சாலைப் பணி 2—11—1985-ல் முடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மற்றும் (இ) ஏற்கனவே தார் சாலையாக மாற்றப் பட்டுவிட்டதால் இந்த வினாக்களுக்கு இடமில்லை.

**நீலகிரி மாவட்டத்தில் தொழிற்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு கடன் உதவி அளித்தல்.**

248—வினா எண் 11050—திரு. கே. உச்சி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தொழிற்படிப்புகள் பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் கடன் உதவித்தொகை பெற்றுள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) நீல்கிரி மாவட்டத்தில் தொழிற்படிப்புகள் பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களில் ஒரு மாணவர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையிலிருந்து கடன் உதவித் தொகை பெற்றுள்ளார்.

**தமிழ்நாடு மின் வாரியத்தில் கம்ப்யூட்டர்கள்.**

249—வினா எண் 11186—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின் வாரியத்தில் முக்கிய தகவல்களை சேகரிக்க கம்ப்யூட்டர் புகுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?





விடை—

(அ) ஆம்.

(ஆ) 'சூப்பர்-16' என்னும் சிறுரக கம்ப்யூட்டர் பொறி மத்திய அரசு நிறுவனமாகிய "எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா"-விடம் இருந்து பெறப்பட்டு, தமிழ்நாடு மின்வாரிய தலைமையகத்தில் 10—3—1986-ல் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவு ரூ. 30 இலட்சம் ஆகும்.

**பொன்னேரி அருகில் உள்ள பெருமாள் கோயிலில் சிலை திருட்டு.**

250—வினா எண் 5301—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், பொன்னேரி அருகில் உள்ள பெருமாள் கோயிலில் கடந்த மே மாதம் ரூ. 20 லட்சம் பெறுமான சிலைகள் திருடுபோனது உண்மையா ?

(ஆ) சிலையை மீட்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) களவாடப்பட்ட 3 சிலைகள் உள்பட 11 பொருட்களில், 3 சிலைகள் மட்டும் மீட்கப்பட்டு அருள்மிகு ஹரிகிருஷ்ணப்பெருமாள் கோயிலில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு உள்ளது. மீதமுள்ள 8 பொருட்கள் கண்டுபிடிக்க முடியவில்லை என காவல் துறையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கிண்டி காமராஜ் நினைவாலயத்தைப் பராமரித்தல்.**

251—வினா எண் 8515—திரு. அ. எஸ். ஏ. [illegible] மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, கிண்டியில் இருக்கும் பெருந்தலைவர் காமராஜர் நினைவாலயத்தை நல்ல முறையில் பராமரித்து மக்கள் [illegible] தரிசிக்கும் வகையில் சீர்திருத்தம் செய்ய அரசிடம் செயல்திட்டம் உள்ளதா ?

விடை—

சென்னை கிண்டியிலுள்ள காமராசர் நினைவாலயத்திற்கு என தனியாக சீர்திருத்த திட்டம் எதுவும் இல்லை. ஆனால், காந்தி மண்டப வளாகத்திற்கு ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டம் ஒன்று ரூ. 100 லட்சம் செலவில் (இரண்டு கட்ட பணியாக) மேற்கொள்ள அரசின் பரிசீலனையில் உள்ளது. அதில் முதல் கட்டத்தில் காமராசர் நினைவாலயத்தை மாற்றியமைத்து புதுப்பித்தல் போன்ற வேலைகளுக்கு ரூ. 5 லட்சம் ஒதுக்கி திட்டம் நடைமுறைப்படுத்த அரசு தனிக்கவனம் எடுத்துள்ளது.

### ஆதி திராவிட காலனிகளுக்கு சாலை.

252—வினா எண் 9332—**திரு. த. பழனி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு வட்டத்தில் அரும்பாக்கம், வேம்பி ஆகிய ஆதி திராவிட காலனிகளுக்கு சாலை எப்போது அமைத்துத் தரப்படும்?

விடை—

ஆற்காடு வட்டம் அரும்பாக்கம் கிராமத்தில் வசிக்கும் கிராம மக்கள் பயன்படுத்தி வரும் பாட்டை வசதியாக உள்ளது. இந்த பாதை சற்று சுற்றுதலாக உள்ளதால், குறுக்கு பாதை அமைக்கும்படி ஆதி திராவிடர் மக்கள் கோருவதால், தேவையான நிலங்களை கையகப்படுத்தி பாதை அமைக்கவும், வேம்பி கிராமம் ஆதி திராவிடர் மேட்டுக் காலனிக்கு புதிதாக பாதை அமைப்பதற்கு பதிலாக இக்காலனி மக்கள் ஏற்கனவே பயன்படுத்திவரும் பாதையினை அகலப்படுத்தி தார் ரோடு போடுவதற்கும், வட ஆற்காடு மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.



### அரசு மருந்தகத்திற்கு புதிய கட்டிடம்.

253—வினா எண் 9436—**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள குணமங்கலம் அரசு மருந்தகத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(இ) திட்டம் எப்போது துவக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

### ஜெயங்கொண்டம் நகரிலுள்ள பால் குளிரூட்டும் நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம்.

254—வினா எண் 9437—**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் நகரிலுள்ள பால் குளிரூட்டும் நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(இ) திட்டம் எப்போது துவங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) வினா எழவில்லை.

ஊனமுற்றோர் சுயவேலை வாய்ப்பு திட்டம்.

255—வினா எண் 9740—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சமூகநலம், சமூகநலம் மற்றும் உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் ஊனமுற்றோர் சுயவேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் 1985-86 ஆம் ஆண்டில் எத்தனை பேர்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது?

(ஆ) எவ்வளவு நிதி உதவி அளிக்கப்பட்டது?

விடை—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் ஊனமுற்றோர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1985-86 ஆம் ஆண்டில் பெட்டிக்கடை அமைக்க உதவி பெற்றவர்கள் 96 பேர்கள். சுயமாகத் தொழில் செய்ய வங்கிக் கடனுதவி பெற்றவர்கள் 140 பேர்கள்.

| | | |
|---|---|---|
| (ஆ) | 1. பெட்டிக்கடை அமைக்க நிதிக்கடன் | ரூ. 1,19,000 |
| | 2. சுயமாகத் தொழில் செய்ய வங்கிக் கடன் | ரூ. 2,94,994 |
| | மொத்தம் .. | ரூ. 4,13,994 |

வடகாடு பஞ்சாயத்தில் காவல் நிலையம்.

256—வினா எண் 9804—திரு. த. புஷ்பராஜ: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் வடகாடு பஞ்சாயத்தில் காவல் நிலையம் ஆரம்பிக்கப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

(அ) மற்றும் (ஆ) அரசாணை நிலை எண் 911, உள்துறை, நாள் 3—4—1987-இல் புதுக்கோட்டை மாவட்டம் வடகாடு கிராமத்தில் காவல் நிலையம் ஏற்படுத்துவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

வேகவதி ஆற்றில் படகு விடும் திட்டம்.

257. வினா எண் 10049—திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் வேகவதி ஆற்று கரையை ஆழப்படுத்தி இரு புறங்களிலும் பூங்காக்கள் அமைத்து படகு விடும் திட்டம் 1980-ல் தீட்டப்பட்டு செயல்படுத்தப்படாமல் உள்ளதை மீண்டும் செயல்படுத்தப்படுமா?

விடை—

திட்டம் செயல்படுத்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

சூரங்காடு கிராமத்தில் ஆரம்பப் பள்ளி.

258. வினா எண் 10104—திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி சூரங்காடு கிராமத்தில் ஆரம்பப்பள்ளி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை தொகுதி, சூரங்காடு கிராமத்தில் புதிய ஆரம்பப்பள்ளி தொடங்குவதற்கு ஆரம்பக் கல்வி இயக்குநரால் செப்டம்பர் 1986-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசின் ஆணை இதற்குத் தேவையில்லை.

## சிறுமுகையில் காவல் நிலையம் அமைத்தல்.

259. வினா எண் 10276—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலுக்கா, சிறுமுகையில் ஒரு காவல் நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 911, உள்துறை, நாள் 3—4—1987-ல் கோவை மாவட்டம், மேட்டுப் பாளையம் தாலுகா, சிறுமுகையில் காவல் நிலையம் ஏற்படுத்து வதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## சென்னையில் வீட்டுவசதி வாரியத்தின்கீழ் இயங்கிவரும் திருமணக் கூடங்கள்.

260. வினா எண் 10586—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் வீட்டுவசதி வாரியத்தின்கீழ் இயங்கி வரும் திருமணக் கூடங்கள் எத்தனை ?

(ஆ) அதன்மூலம் 1985-ம் ஆண்டு கிடைத்த வருமானம் எவ்வளவு ?

விடை—

(அ) சென்னை நகரில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் கீழ் 15 திருமணக் கூடங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) 1985-ம் வருடம், ரூ. 7,11,698.00 வாடகை வசூலிக்கப் பட்டுள்ளது.



## நீலகிரி மாவட்டத்தில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் இல்லாத உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்.

261. வினா எண் 10869—திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் இல்லாத உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அப்பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக் கூடங்களை நிறுவும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

(அ) ஆம். உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன.

(ஆ) அறிவியல் ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கான திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும், சில உயர்நிலைப் பள்ளிகள் பயன்பெறுகின்றன. நீலகிரி மாவட்டத்தில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் இல்லாத பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடங்கள் அமைப்பது குறித்து 1987-88-லும், பின் ஆண்டுகளிலும் அரசின் நிதி நிலைக் கேற்ப பரிசீலிக்கப்படும்.

## நீலகிரி மாவட்டத்தில் நுகர்வோர் தரச் சோதனை ஆய்வுக்கூடங்கள்.

262. வினா எண் 10899—திரு. கே. உச்சி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில், நுகர்வோர் தரச் சோதனை ஆய்வுக்கூடங்கள் உள்ளதா ?

(ஆ) இல்லை எனில், நடப்பு கூட்டுறவு ஆண்டில் இவை ஏற்படுத்தப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் நீலகிரி கூட்டுறவு நிறுவனத்தில் ஆய்வுக்கூடம் நிறுவப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்கூடத்திற்கு தர நிர்ணய ஆய்வாளர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, தரச் சோதனைப் பணி நவம்பர் 86 திங்களில் துவக்கப்பட்டுள்ளது.

**ஏலக்காய் பயிரிடுவதற்கு நிலங்களை குத்தகைக்கு விடுதல்.**

263. வினா எண் 10956—திரு. கே. உச்சி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஏலக்காய் பயிரிடுவதற்கு நிலங்களை குத்தகை விடுவதன் மூலம் 1984-85 ஆம் ஆண்டு அரசுக்கு கிடைத்த வருமானம் எவ்வளவு?

விடை—

தமிழ்நாட்டில் ஏலக்காய் பயிரிடுவதற்கு வன நிலங்களை குத்தகை விடுவதன் மூலம் 1984-85-ம் ஆண்டு ரூ. 2,41,281.65 வருவாய் கிடைத்துள்ளது.

**எச்.ஏ.டி.பி. மூலம் உதகை வட்டம், கெந்தொரை கிராமத்தில் இருந்து தும்மனட்டி செல்ல பாதை அமைக்கும் திட்டம்.**

264. வினா எண் 11023—திரு. கே. உச்சி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், கெந்தொரை கிராமத்திலிருந்து தும்மனட்டி செல்ல பாதை அமைக்கவும் அப்பகுதியில் ஒரு பாலம் அமைக்கவும் எச்.ஏ.டி.பி. மூலம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?



விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**சட்டப் பட்டதாரிகளுக்கு பயிற்சி.**

265. வினா எண் 11052—திரு. கே. உச்சி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சட்டப் பட்டதாரிகளுக்கு பயிற்சி அளித்தல் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த பயனடைந்த சட்டப் பட்டதாரி பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் எத்தனை பேர்?

விடை—

இந்தத் திட்டத்தின்கீழ் பயன்பெறக் கூடிய, சட்டப் பட்டதாரிகளின் வயது வரம்பு பற்றி உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பின் பேரில், இந்தத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப் பட்டு வருகின்றன. ஆகவே, இத் திட்டம் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. நடைமுறைப்படுத்தப்படும்போது, இப்பயிற்சியில் சேர எல்லா மாவட்டங்களைப் போல் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த சட்டப் பட்டதாரிகளுக்கு வாய்ப்புகள் வழங்கப்படும்.

**சென்னை பண்பலை ஒலிபரப்பு திறனை அதிகரித்தல்.**

266. வினா எண் 11439—திரு. கே. உச்சி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பண்பலை ஒலிபரப்பை தமிழகம் முழுவதும் உள்ள மக்கள் கேட்டு பயனடையும் விதத்தில் ஒலிபரப்பு திறனை அதிகரிக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

விடை—

சென்னையில் தற்போது 3 கிலோவாட்ஸ் திறன்கொண்ட பண்பலை டிரான்ஸ்மிட்டர் (எப்.எம்.) உள்ளது. பண்பலை வரிசை ஒலிபரப்பை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது ஏதும் இல்லை.

## நத்தம் காவல் நிலையத்திற்கு வாகன வசதி.

267. வினா எண் 11592—**திரு. மெ. ஆண்டி அம்பலம்**: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதிக்கு உட்பட்ட நத்தத்தில் உள்ள காவல் நிலையத்திற்கு வாகன வசதி (ஜீப்) செய்து கொடுக்கவும் கூடுதலான காவலர்களை நியமிக்கவும் அரசு முன்வருமா?

**விடை—**

அண்ணா மாவட்டத்தில் உள்ள நத்தம் காவல் நிலையத்திற்கு கூடுதல் காவலர்களை நியமிப்பது குறித்தும், வாகன வசதி செய்து கொடுப்பது பற்றியும் கருத்துரு ஏதும் தற்போது இல்லை.

## வீட்டு மனைப் பட்டா.

268. வினா எண் 11598—**திரு. மெ. ஆண்டி அம்பலம்**: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் காந்தி நகரில் வசிக்கும் அரிசன, காலணி தைக்கும் தொழிலாளர்களுக்கு வீட்டு மனைப் பட்டா எப்போது வழங்கப்படும்?

**விடை—**

அண்ணா மாவட்டம், நத்தம் வட்டம், நத்தம் கிராமம் காந்தி நகரிலுள்ள ஆதி திராவிட காலணி தைக்கும் தொழிலாளர்களுக்கு வீட்டுமனைக்காக தகுந்த இடம் தேர்ந்தெடுத்து கையகப்படுத்த முன்மொழிவுகள் அனுப்புமாறு மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர், திண்டுக்கல் அலகு 1 தனித் தாசில்தாரைப் பணித்துள்ளார். அவரது அறிக்கையைப் பெற்று நத்தம் காந்தி நகரிலுள்ள ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைக்காக நிலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



## பேரூர் தொகுதியில் மயானம் அமைத்தல்.

269. வினா எண் 11705—**திரு. ஆ. நடராசன்**: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, எம்.ஜி.ஆர். நகரில் மயானம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

## தஞ்சை மாவட்டம், தலைஞாயிறில் சித்த மருத்துவமனை.

270. வினா எண் 11915—**திரு. மா. மீனாட்சிசுந்தரம்**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தலைஞாயிறில் சித்த மருத்துவ மனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது தஞ்சை மாவட்டத்தில் உள்ள தலைஞாயிறில் சித்த மருத்துவமனை ஏற்படுத்துவது குறித்து செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[1987 நவம்பர் 18

### கோவை மாவட்டம், குறிச்சி வீட்டுவசதி வாரியத்தின் அருகிலுள்ள பூச்சி மருந்து தொழிற்சாலை.

271. வினா எண் 11991—**திரு. ஆ. நடராசன்**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், குறிச்சி வீட்டுவசதி வாரியத்தின் அருகில் இருக்கும் பூச்சி மருந்து தொழிற்சாலையை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) கோவை மாவட்டம், குறிச்சி வீட்டுவசதி வாரியத்தின் அருகில் இருக்கும் பூச்சி மருந்து தொழிற்சாலையை வேறு இடத்திற்கு மாற்றும்படி அத்தொழிற்சாலைக்கு எந்தவித ஆணையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் பிறப்பிக்கப் படவில்லை.

(ஆ) எழவில்லை.

### தேர்வாணைக் குழுவின் மூலமாக நியமிக்கப்பட்ட கிராம நிருவாக அலுவலர்கள்.

272. வினா எண் 11930—**திரு. மா. மணிமாறன்**: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம நிருவாக அலுவலர்களாக தேர்வாணைக் குழுவின் மூலமாக நியமிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில் ஆதி திராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை விழுக்காடு?



1987 நவம்பர் 18]

விடை—

(அ) கிராம நிருவாக அலுவலர்களாக தேர்வாணைக் குழுவின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 9,041 பேர்கள்.

(ஆ) அதில் ஆதி திராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் 18 விழுக்காடு.

### போக்குவரத்துப் பாலம் கட்டுதல்.

273. வினா எண். 12029—**திரு. மு. இராசாங்கம்**: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் ஒன்றியம் நரசிங்கன்பேட்டையையும் 67 சாத்தனூரையும் இணைக்கும் வகையில் வீரசோழன் மஞ்சவாய்க்கால் இடையில் போக்குவரத்துப் பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள இரண்டு ஆறுகளின் குறுக்கே பாலம் கட்டவும், சாலையைப் பேருந்து வழித்தடமாக மேம்பாடு செய்யவும் தோராயமாக ரூ. 50 இலட்சம் தேவைப்படும். இப்பணி இதுவரையில் அரசு ஒப்புதல் பெற்ற திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை. இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலைக்கேற்ப தக்க தருணத்தில் மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

### தஞ்சை மாவட்டத்தில் பேரூராட்சிகளை ஊராட்சிகளாக மாற்றல்.

274. வினா எண்: 12043—**திரு. மு. இராசாங்கம்**: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் எத்தனை பேரூராட்சிகள் ஊராட்சிகளாக மாற்றும் நிலையில் உள்ளது?

(ஆ) எத்தனை ஊராட்சிகள் பேரூராட்சிகளாக மாற்றும் நிலையில் உள்ளது?

விடை—

(அ) தஞ்சை மாவட்டத்தில் பேரூராட்சிகள் ஏதும் ஊராட்சிகளாக மாற்றும் நிலையில் இல்லை.

(ஆ) தஞ்சை மாவட்டதில் ஊராட்சிகள் பேரூராட்சிகளாக மாற்றும் நிலையில் தற்போது ஏதும் இல்லை.

### ஆலயத் திருப்பணி

275. வினா எண். 12051—திரு. மூ. இராசசிங்கம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தாலுக்கா, அம்மன்குடியில் உள்ள துர்க்கா பரமேஸ்வரி ஆலயம் 1986 ஆம் ஆண்டில் குடமுழுக்கு செய்யப்பட்டும், மற்ற வேலைகள் செய்யப்படாமல் உள்ளதைப்பூர்த்தி செய்கின்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டம், அம்மன்குடி அருள்மிகு துர்க்காபரமேஸ்வரி திருக்கோயில் குடமுழுக்கு 30—4—1986-ல் செய்யப்பட்டுள்ளது. பூர்த்தி செய்யப்படாத எஞ்சிய வேலைகள் விரைவில் முடிக்கப்பட்டுவிடும்.

### சுரண்டையில் காவல் நிலையம் அமைத்தல்.

276. வினா எண். 12073—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தாலுகா சுரண்டையில் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இப்போது பரிசீலனையில் இல்லை.



### பேருந்துகளில் முதலுதவிப் பெட்டி.

277. வினா எண். 12080—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேருந்துகளில் முதலுதவிப் பெட்டி வைக்க வேண்டும் என்ற விதியின் அடிப்படையில் தமிழக அரசு நடத்தும் பேருந்துகளில் ஒவ்வொரு கழகத்திலும் எத்தனை பேருந்துகளில் முதலுதவிப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளது?

விடை—

தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள் 1940-ன்படி போக்குவரத்துக் கழக அனைத்துப் பேருந்துகளிலும் மருந்துகள் அடங்கிய முதலுதவிப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

### வாடிப்பட்டி வட்டம், காடுபட்டி கிராமத்தில் காவல் நிலையம்.

278. வினா எண் 12144—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவேகானந்தர் நினைவு மண்டபத்திற்கு மக்கள் போய்வர கூடுதலாக படகு வசதி செய்துதர பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுக்குமா?

விடை—

120 பயணிகளை ஏற்றிச் செல்லும் திறன்கொண்ட இரண்டு படகுகள் தற்பொழுது உள்ளன. இவை போதுமானதென்று கருதப்படுகிறது. எனினும், இவைகளில் ஒன்றிற்கு மாற்றுப் படகு [illegible] பற்றிய கருத்துரு மத்திய அரசின் சுற்றுலாத்துறையின் பரிசீலனையில் உள்ளது.

[1987 நவம்பர் 18]

**வாடிப்பட்டி வட்டம் காடுபட்டி கிராமத்தில் காவல் நிலையம்.**

279. வினா எண். 12172—**திரு. ஆ. சந்திரசேகரன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், காடுபட்டி கிராமத்தில் ஒரு புறக்காவல் நிலையம் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 911, உள்துறை, நாள் 3—4—1987-இல் மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், காடுபட்டி கிராமத்தில் காவல் நிலையம் ஏற்படுத்துவதற்கு ஆணை வெளியிடப்பட்டு உள்ளது.

**வாடிப்பட்டி வட்டத்தில் புறக்காவல் நிலையம்.**

280. வினா எண். 12197—**திரு. ஆ. சந்திரசேகரன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், குருவித்துறை கிராமத்தில் புறக்காவல் நிலையம் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், குருவித்துறை கிராமத்தில் புறக்காவல் நிலையம் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.



1987 நவம்பர் 18]

**பாலமேடு கிராமத்தில் புறக்காவல் நிலையம்.**

281. வினா எண். 12201—**திரு. ஆ. சந்திரசேகரன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், பாலமேடு கிராமத்தில் புறக்காவல் நிலையம் திறக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், பாலமேடு கிராமத்தில் புறக்காவல் நிலையம் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**வாடிப்பட்டி வட்டத்தில் புதிய பேருந்து விடுதல்.**

282. வினா எண். 12236—**திரு. ஆ. சந்திரசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், சோழவந்தானிலிருந்து நகரி, ரிசபம் வழியாக அண்ணா பஸ் நிலையத்திற்கு புதிய பேருந்துகளை விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மேற்குறிப்பிட்ட புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கும் கருத்துரு ஒன்று பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திடம் பரிசீலனையில் உள்ளது.

[1987 நவம்பர் 18

### குடவாசல் ஒன்றியம், அரசலாற்றின் குறுக்கே உடைப்பான் கரையில் புது தலைப்பு கட்டுதல்.

283. வினா எண். 12296—திரு. **பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம் அரசலாற்றின் குறுக்கே துக்காச்சிக்கும் 90 கடலங்குடிக்கும் இடையே உடைப்பான்கரையில் புது தலைப்பு அமைத்து கடலங்குடிக்கு அதிக பாசனம் தரச் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

### குத்தாலம் ஒன்றியம், மேலையூர் ஊராட்சி மகிமலையாற்றின் குறுக்கே பீங்கான் வாய்க்கால் தலைப்பு அருகே ஒரு பெட்டாம் கட்டும் திட்டம்.

284. வினா எண். 12297—திரு. **பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், மேலையூர் ஊராட்சி மகிமலையாற்றின் குறுக்கே 73/01-ல் ஊமை, பீங்கான் வாய்க்கால் தலைப்பு அருகே ஒரு பெட் டாம் அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

திட்டம் ஏதும் இல்லை.



1987 நவம்பர் 18]

### திண்டுக்கல் கிழக்குப் பகுதிக்கு தனி காவல் நிலையம்.

285. வினா எண். 12312—திரு. **ஆர். பிரேம்குமார்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகர் கிழக்கு பகுதிக்கென தனி காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

திண்டுக்கல் நகர் கிழக்கு பகுதிக்கென தனி காவல் நிலையம் ஏற்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

### திண்டுக்கல் சிறுமலையில் அவுட் போஸ்ட் காவல் நிலையம்.

286. வினா எண். 12316—திரு. **ஆர். பிரேம்குமார்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் சிறுமலையில் அவுட் போஸ்ட் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

சிறுமலை கிராமம் திண்டுக்கல் வடக்கு காவல் நிலையத்திலிருந்து 25 கி.மீ. தூரத்தில் சிறுமலை குன்றின்மீது அமைந்துள்ளது. இவ்விடத்தில் காவல் அவுட் போஸ்ட் அமைக்க எவ்வித அவசியமும் இல்லை என கருதப்படுகிறது.

### மதுரையிலிருந்து திருமாஞ்சோலைக்கு பேருந்து விடுதல்.

287. வினா எண். 12336—திரு. **க. பாரமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையிலிருந்து திருப்புவனம், மடப்புரம், தேனி, ஏனாதி வழியாக திருமாஞ்சோலைக்கு பேருந்து விட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

[1987 நவம்பர் 18

விடை—

இல்லை. மடப்புரத்திற்கப்பால் ஏனாதி செல்லும் சாலை பேருந்து விடுவதற்கு ஏற்றதாக இல்லை. எனவே, மதுரையிலிருந்து திருமாஞ்சோலைக்கு மேற்கண்ட ஊர்கள் வழியாக பேருந்து விட இயலாது.

## கூடக்கோவிலில் புறக்காவல் நிலையம்.

288. வினா எண். 12422—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் தொகுதியில் கூடக்கோவிலில் புறக்காவல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படுமா ?

விடை—

திருமங்கலம் தொகுதியில் உள்ள கூடக்கோவிலில் புறக்காவல் நிலையம் ஏற்படுத்துவதற்கான கருத்துரு ஏதும் தற்சமயம் இல்லை.

## ஓமலூரில் அண்ணா போக்குவரத்துக் கழக பணிமனை.

289. வினா எண். 12444—திரு. கே. அன்பழகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் ஓமலூரில் அண்ணா போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

ஆம்.



1987 நவம்பர் 18]

## திருமயத்தில் தீரர் சத்தியமூர்த்தி சிலை.

290—வினா எண். 12538—திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில் தீரர் சத்திய மூர்த்தி நூற்றாண்டு விழாவின்போது தீரர் சிலை அமைக்கப்பட உள்ளதா ?

விடை—

தீரர் சத்தியமூர்த்தியின் நூற்றாண்டு விழாவினையொட்டி புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் அரசின் சார்பில் தீரர் சத்தியமூர்த்தி அவர்களின் 8 அடி உயர வெண்கல சிலை அமைக்கப்பட உள்ளது.

## பனைத் தொழிலாளர்களுக்கு தனி நபர் விபத்து காப்பீட்டு நிதி.

291—வினா எண். 12640—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பனைத் தொழிலாளர்கள் நலனுக்கு தனி நபர் விபத்து காப்பீட்டு நிதி தொடங்க அரசு உத்தேசித்துள்ளதா ?

விடை—

கதர் வாரியம் ஒரு கருத்துருவை அரசுக்கு அனுப்பியுள்ளது. இந்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1987 நவம்பர் 18

## பத்மநாபபுரம் நகரப் பகுதியில் மினி பஸ்கள் விடும் திட்டம்.

292—வினா எண். 12683—திரு. **வை. பாலசந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் நகரப் பகுதியில் மினி பஸ்கள் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## துரிதப் பேருந்து விடும் திட்டம்.

293—வினா எண். 12703—திரு. **எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோயிலிலிருந்து சென்னைக்கு சாத்தான்குளம் வழியாக துரிதப் பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது விடப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) தேவைக்கேற்ப உரிய நேரத்தில் பேருந்து வசதிகள் செய்யப்படுகின்றன. தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.



1987 நவம்பர் 18]

## ஆர்.எம்.டி.சி. பேருந்தினை நத்தம் ஒன்றியம் குடகிப்பட்டி வரை நீட்டிக்கும் திட்டம்.

294. வினா எண் 12735—திரு. **மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்லிலிருந்து குரும்பப்பட்டி வரும் ஆர்.எம்.டி.சி. பேருந்தினை நத்தம் ஒன்றியம் குடகிப்பட்டி வரை நீட்டிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

செந்துறையிலிருந்து திண்டுக்கல் வழியாக பழனி வரை வேறு பேருந்துகள் உள்ளன. இவை மூலம் குடகிப்பட்டி மக்கள் நேரடியாக திண்டுக்கல், பழனி முதலான ஊர்களுக்கு பயணம் செய்ய வசதியுள்ளது. எனவே, குரும்பப்பட்டி வரும் பேருந்தை நீட்டிக்க வேண்டிய அவசியமில்லை எனக் கருதப்படுகிறது.

## நத்தம் ஒன்றியம், மங்களப்பட்டிக்கும் செந்துறைக்கும் நடுவிலுள்ள பாலாற்றின் மீது பாலம்.

295—வினா எண். 12737—திரு. **மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், மங்களப்பட்டிக்கும் செந்துறைக்கும் நடுவில் உள்ள பாலாற்றின் மீது பாலம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் அமைக்க தோராயமாக ரூ. 10 இலட்சம் தேவைப்படும். அரசின் நிதி பற்றாக்குறையின் காரணமாக இப்பணியை தற்சமயம் மேற்கொள்ள இயலவில்லை.

[1987 நவம்பர் 18

**கரும்பு சாலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் சாலை செப்பனிடல்.**

296—வினா எண். 12836—**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், பெரும்பண்ணையூர், திருவிடைச்சேரி சேதனிபுரம் சாலை, செப்பனிட கரும்பு சாலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டும், இதுவரை வேலை துவங்கப்படாத நிலைமை அரசின் கவனத்திற்கு தெரியுமா?

**விடை—**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள சாலைப் பணி கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இதுவரை எடுத்துக்கொள்ளப் படவில்லை.

**வழுவூர் கிராம பாசனத்திற்காக ரெகுலேட்டர் கட்டும் திட்டம்.**

297—வினா எண். 12846—**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், முருகன் தோட்டம், வழுவூர் கிராம பாசனத்திற்காக கடலாழி ஆற்றில் சாக்கியாம்பள்ளி தலையில் ஒரு ரெகுலேட்டர் அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

தற்போது திட்டம் ஏதுமில்லை.

**நத்தம் தொகுதி, சடையம்பட்டி கிராமத்திற்கு போக்குவரத்து வசதி.**

298. வினா எண். 12906—**திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம் சடையம்பட்டி கிராமத்திற்கு போக்குவரத்து வசதி செய்ய அரசு முன்வருமா?



1987 நவம்பர் 18]

**விடை—**

சடையம்பட்டி கிராமத்தை, ஆலம்பட்டி-வடமதுரை பிரதான சாலையுடன் இணைக்கும் இணைப்பு சாலையின் இருகரைகளும் வலுவில்லாமல் இருப்பதால், இந்நிலையில் பேருந்து செலுத்த இயலவில்லை.

**சத்துணவு மையம் அமைக்கும் திட்டம்.**

299—வினா எண் 12923—**திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம், கம்பளியம்பட்டி ஊராட்சி நிலைப்பட்டி, நிலைப்பட்டிபுதூர் ஆகிய இடங்களில் சத்துணவு மையம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

மேற்குறிப்பிட்ட இடங்களில் புதிதாக சத்துணவு மையங்கள் திறக்க வாய்ப்பு இல்லை.

[குறிபபு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

**2. கவன ஈர்ப்பு.**

**(அ) பயிர் ஈட்டுறுதித் திட்டத்தில் கையாளப்படும் முறைகளிலுள்ள குறைபாடுகள்.**

* **திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின் (Crop Insurance Scheme) மூலம் விவசாயிகளுக்கு தற்போது ஈட்டுத் தொகை (Compensation) வழங்க பொறுக்காய்வு (Random Check up) என்ற முறையில் மதிப்பீடு செய்வதில் கையாளப்படும் முறைகளில்

உள்ள குறைபாடுகள் குறித்தும், அந்த முறைகள் எளிதாக்கப்பட வேண்டிய அவசியம் குறித்தும்" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

**அறிக்கை.**

தற்பொழுது தமிழ்நாட்டில் இந்திய அரசு நிர்ணயித்துள்ள வழிமுறைகள் அடிப்படையில், வட்டாரத்தை அடிப்படையாகக் கொண்டு ( Area approach ) ஒருங்கிணைந்த பயிர் காப்பீட்டுத் திட்டம், நெல், இறவை மற்றும் மானாவாரி சோளம், கம்பு, இராகி, மணிலா, எள் மற்றும் சூரியகாந்தி ஆகிய பயிர்களில் செயல்படுத்தப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் அறிவிக்கப்பட்ட வட்டாரங்களில், அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களுக்கு, இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கூட்டுறவு வங்கிகள், வணிக வங்கிகள், மண்டல கிராமிய வங்கிகளின் மூலம் பயிர் கடன் பெறும் விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்க்கப்படுகிறார்கள்.

அறிவிக்கை செய்யப்பட்ட வட்டாரத்தில், அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களின் வட்டார சாரசரி விளைச்சல், மத்திய அரசின் தேசீய மாதிரி ஆய்வு நிறுவனம் வகுத்துள்ள வழிமுறைகளை பின்பற்றி மாநில புள்ளி இயல் துறையால், மேற்கொள்ளப்படும் பயிர் அறுவடை பரிசோதனைகள் மூலம் கணிக்கப்படுகிறது. இவ்வாறு கணிக்கப்பட்ட வட்டார சாரசரி விளைச்சல், உறுதி செய்யப்பட்ட வட்டார விளைச்சலை விட (Threshold yield) குறைவாக இருப்பின், இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள அந்த வட்டார விவசாயிகளுக்கு ஈட்டுத்தொகை வழங்கப்படுகிறது. ஒரு வட்டாரத்திற்கான உறுதி செய்யப்பட்ட விளைச்சல் விவரம், அந்த வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்ட பயிர் அறுவடை பரிசோதனைகள் மூலம் கணிக்கப்பட்ட குறைந்தபட்சம்





முந்தைய (மூன்று) ஆண்டுகளில் சராசரி விளைச்சல்களின் விவரங்களை அடிப்படையாகக் கொண்டு, மத்திய வேளாண்மைப் புள்ளி இயல் கழகத்தால் கணிக்கப்படுகிறது.

மத்திய அரசு நிர்ணயித்துள்ள அளவுகோலின் அடிப்படையில் அறிவிக்கை செய்யப்பட்ட வட்டாரத்தில், அறிவிக்கப்பட்ட பயிரில், எட்டு கிராமங்கள் எதேச்சை முறையில் தேர்வு செய்யப்பட்டு, தேர்வு செய்யப்பட்ட கிராமத்தில் இரண்டு வயல்கள் வீதம் 16 வயல்கள் எதேச்சை முறையில் தேர்வு செய்யப்பட்டு, அவற்றில் 16 பயிர் அறுவடைப் பரிசோதனைக் களங்கள் அமைத்து, அப்பரிசோதனைகளின் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, விவரங்களை அடிப்படை மூலம், கிடைக்கப்பெற்ற விளைச்சல் யாகக் கொண்டு வட்டார சராசரி விளைச்சல் கணிக்கப்படுகிறது. இந்த வட்டார சராசரி விளைச்சல் விவரங்கள் பொதுக் காப்பீட்டுக் கழகத்துக்கும் மாநில அரசுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. இச்சராசரி விளைச்சல், ஏற்கனவே உறுதி செய்யப்பட்ட விளைச்சலை விட குறைவாக இருப்பின் கீழ்க்கண்ட முறைப்படி ஈட்டுத்தொகை வழங்கப்படுகிறது :—

**விளைச்சலில் குறைவு**

உறுதியளிக்கப்பட்ட விளைச்சல் × ஈட்டுறுதி செய்த தொகை

உறுதியளிக்கப்பட்ட விளைச்சல் — சராசரி விளைச்சல் =

விளைச்சலில் குறைவு.

தற்பொழுது பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் பின்பற்றப்படும் பயிர் அறுவடைப் பரிசோதனைகள் வழிமுறைகளின்படி மேற்கொள்ளப்படுவதற்காக, யதேச்சை முறையில் தேர்வு செய்யப்படும் கிராமங்களில், அந்த கிராமங்களிலுள்ள அனைத்து விவசாயிகளின் வயல்களையும் மாதிரிப் பட்டியலாக எடுத்துக் கொண்டு. (Sampling Frame) அவற்றிலிருந்து இரு வயல்களை யதேச்சை முறையில் தேர்வு செய்து, அவற்றில் பயிர் அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொண்டு. பயிரின் விளைச்சல் விவரம் சேகரித்து, அதன் அடிப்படையில் வட்டார சராசரி விளைச்சல் கணிக்கப்படுகிறது. இம்முறைப்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கிராமத்தில் பயிர் ஈட்டுறுதித் திட்டத்தில் சேராத விவசாயிகளின் வயல்கள், பயிர் அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொள்ள தேர்வு செய்யப்படக்கூடிய சாத்திய கூறுகள் உள்ளன. இந்த பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ், பயிர் வழிமுறையை மாற்றி,

அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதற்காக, தேர்வு செய்யப்படும் கிராமங்களில், இத்திட்டத்தில் சேர்ந்துள்ள விவசாயிகளை மட்டும் மாதிரிப் பட்டியலாகக் கொண்டு, அப்பட்டியலிலிருந்து, எதேச்சை முறையில், இரண்டு விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் வயல்களில் எதேச்சை முறையில் இரண்டு பரிசோதனைத் திடல்கள் அமைத்து, விளைச்சல் விவரம் சேகரிக்கப்பட உள்ளது.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள இந்த நடைமுறைப்படி மாநில புள்ளியியல் துறைதான் வயல்களைத் தேர்வு செய்து, அதிலே பயிர் அறுவடை பரிசோதனைகளை—கிராப் கட்டிங் எக்ஸ்பரிமெண்டைச் செய்து வருகிறது. அப்படி மாநில புள்ளி இயல் துறையானது இந்தப் பரிசோதனைகளைச் செய்கிறபொழுது அங்கேயிருக்கிற அந்த ஃபைனான்சிங் பேங்குகளுக்கு இதைத் தெரியப்படுத்தி அதன் உதவியோடு வயல்களைத் தேர்ந்து எடுப்பதோ அல்லது இந்தப் பரிசோதனைகளை நடத்துவதோ இல்லை என்பதுதான் இப்பொழுதுள்ள குறைபாடு. அந்தக் குறைபாட்டைப் போக்கு கின்ற வகையில், தற்போதுள்ள நடைமுறையில் சிறு மாற்றங் களைச் செய்து—அதை மாற்றம் என்று கூட நான் சொல்ல மாட்டேன்—துறைகளுக்கிடையே ஒரு கோஆர்டினேஷன் (Co-ordination) வேண்டும் என்பதற்காக அப்படிப் பரிசோதனை செய்கின்றபொழுது இருக்கின்ற அந்தக் குறைபாடு களைக் களைவதற்கு பைனான்சிங் பேங்குகளுக்கே இந்த வயல் களைத் தேர்ந்தெடுக்கும் உரிமைகளைக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்து, பயிர் அறுவடை பரிசோதனையை மாநில புள்ளி இயல் துறை வேளாண்மைத் துறை உதவியோடு, நம்முடைய பைனான்சிங் பேங்குகளுக்கு அதைத் தெரியப்படுத்தி, அவர்கள் தேர்வு செய்கிற அந்த அடிப்படையில் இந்த முறைகளை மாற்றுவது பற்றிப் பரிசீலிப்பதற்கு மாண்புமிகு நிதியமைச்ச ரவர்கள் துறையை அறிவுறுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் ஓரளவுக்கு இருக்கின்ற சூழ்நிலைகள் எடுத்துத் தெரிவிக்கப்பட்டு இருக் கின்றன. அவ்வப்பொழுது ஏற்படுகின்ற கஷ்டங்களையும்





குறைகளையும் தீர்ப்பதற்கு அவ்வப்பொழுது சில பல மாற்றங் களும் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. அதிலே ஏதாவது இடர்ப் பாடுகள் இருந்து அந்த இடர்ப்பாடுகளை நிவர்த்திக்க வேண்டும். இப்படிப்பட்ட ஏற்பாடுகளின் மூலம் நோக்கத்திலே மாறுபாடு ஏற்படாது, குறைபாடு ஏற்படாது ; மாற்றங்கள் எளிமையையும் முழுமையையும் ஏற்படுத்துவதற்குப் பயன்படும் என்கின்ற சூழ் நிலை ஏற்படுமேயானால் மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற இந்த ஆலோசனையை ஆராய்ந்து பார்த்து தக்க நடவடிக்கைகளை முறைப்படி எடுக்கலாம்.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்திருக்கின்ற இந்த விளக்க அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதுபோல தற்போது ஏழு பயிர் வகைகளுக்கு மட்டுமே பயிர் காப்புத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. நம்முடைய அரசில் இன்னும் கூடுத லாக பணப் பயிர்களுக்கும், இந்தப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தை நீட்டிக் கொடுக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசினுடைய அனுமதியின் பேரில்தான் இவற்றை நீட்ட வேண்டும். ஏற்கனவே இரண்டு, மூன்று பயிர் வகைகளுக்குத்தான் இருந்தது. அண்மையிலே மத்திய அரசினிடத்திலே கேட்டு, அதனுடைய அனுமதியைப் பெற்று, ஜி.ஐ.சி. யினுடைய அனுமதியையும் பெற்று, நாம் பெறு கின்ற அத்தகைய சூழ்நிலையைப் பெற்றோம். வேறு என்னென்ன பயிர்கள் என்று வேளாண்மைத் துறை கூறுகின் றதோ அதை மத்திய அரசுக்கு எழுதி, மத்திய அரசு இணைத்துக் கொள்ளும்படி பணிக்குமேயானாலும், அல்லது வேறு பல நிலைகளிலே இருக்கின்ற சூழ்நிலையை ஒட்டியும் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

[1987 நவம்பர் 18

## (ஆ) திருச்சி மாவட்ட நியாயவிலைக் கடைகளில் கட்டாய மளிகைப் பொருள் விற்பனை.

**திரு. கி. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி மாவட்டத்தில் உள்ள நியாய விலைக் கடைகளில் மளிகைப் பொருள்களை வாங்கினால்தான், அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்கும் என்ற நிலை இருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

### அறிக்கை.

திருச்சி மாவட்டத்தில் உள்ள நியாயவிலைக் கடைகளில் மளிகைப் பொருட்களை வாங்கினால்தான் அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கும் என்ற நிலை நிலவுவதாகக் கவன ஈர்ப்புப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது குறித்து கூட்டுறவுத் துறை அலுவலர்கள் மூலமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. நியாயவிலைக் கடைகளில் கட்டாய மளிகைப் பொருட்கள் விற்பனை ஏதும் நடைபெற்றதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. எனினும், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மக்களுக்குக் கட்டுப்பாட்டுப் பொருட்களை விற்பனை செய்யும்போது அத்துடன் கட்டுப்பாடற்ற மளிகை பொருட்களும் கட்டாயமாக விற்பனை செய்யப்படுவதாக முறையீடு ஏதும் அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டால் சம்பந்தப்பட்ட விற்பனையாளர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அனைத்து நியாயவிலைக் கடை விற்பனையாளர்களுக்கும் தெரிவிக்குமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் சுற்றறிக்கையொன்று அனுப்பியுள்ளார்.

2. திருச்சி மாவட்டத்தில் மொத்தம் 1409 நியாயவிலைக் கடைகள் உள்ளன. அவற்றில் 1,388 நியாயவிலைக் கடைகள் ஏற்கனவே கூட்டுறவுத் துறையில் இருந்தன; புதியதாக 21 நியாய





விலைக் கடைகள் 1—10—1987 முதல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் இருந்து கூட்டுறவுத் துறைக்கு மாற்றப்பட்டன.

**திரு. கி. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் கட்டாய மளிகைப் பொருள்கள் விற்பனை ஏதும் நடைபெற்றதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லையென்ற விவரம் இருக்கிறது. ஆனால், திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரி அவர்கள் அங்கே இருக்கிற விற்பனையாளர்களுக்குச் சுற்றறிக்கை எண். 762/85, தேதி 30—9—1987-ன்படி 10 நிபந்தனைகளை விதித்திருக்கிறார்கள். அதில் ஒன்று மளிகைப் பொருள்கள் கார்டு ஒன்றுக்கு ரூ. 5-க்குக் குறையாமல் விற்பனை செய்ய வேண்டுமென்று வலியுறுத்துவதோடு, சமையல் எண்ணெய் விற்பனைக்கு வாரப் பதிவேடு பதிந்த, குடும்ப அட்டைதாரரின் கையொப்பத்தினைப் பெற வேண்டுமென்ற நிலையினை வற்புறுத்தியிருக்கிறார்கள். குடும்ப அட்டைதாரர்கள் வந்து அவர்களே கையொப்பம் இட்டு வாங்க வேண்டுமென்ற நிலையும் இப்படிக் கட்டாயமாக மளிகைப் பொருள்கள் வாங்கினால்தான் அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்கும் என்ற நிலையும் இருக்கிறது. இதனை மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடி நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற அத்தகைய குறைபாடுகள் அரசினுடைய நேரடி கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. இப்பொழுது அவர்கள் கூறுவதைப் பற்றி எழுதித் தருவார்களானால், மற்ற மாவட்டங்களில் இல்லாத நிலை திருச்சி மாவட்டத்தில் ஏன் இருக்கிறது என்று அதுபற்றி விசாரித்தறிந்து, தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளலாம்.

**திரு. கி. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரி அவர்களால் வழங்கப்பட்டிருக்கிற அறிக்கையினைத் தங்கள் மூலமாக மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்து கொடுப்பதோடு, அங்கே இருக்கிற மக்கள் நியாய விலைக் கடைகளிலே விற்பனைக்குச்

செல்கின்ற பொருள்களின் அளவு குறைந்திருப்பதால் விற்பனை
யாளர்கள் விற்கிறபொழுது அதைச் சரி செய்கிற நோக்கோடு,
அங்கேயிருக்கிற பொதுமக்களுக்குக் கொடுக்கிற அந்த விற்பனை
பொருள்களுடைய அளவைக் குறைத்து விடுகிறார்கள். இதனைச்
சரி செய்வதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளிலே
எடைகள் குறையாமல் இருக்க வேண்டும், சரக்குகளும் நல்லவை
யாக இருக்க வேண்டுமென்ற கொள்கையினுடைய அடிப்படையிலே
தான் அவையெல்லாம் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.
அங்கே எடை குறைந்த சூழ்நிலை இருக்குமானால் மேலதிகாரிக
ளுடைய கவனத்திற்கு ஆங்காங்கு இருக்கிற பொதுமக்கள்
கொண்டு வரலாம். அதன் மீது தக்க நடவடிக்கைகள் எடுப்ப
தற்கு வழிமுறைகள், விதிமுறைகள் செய்யப்பட்டிருக்கின்றன.
நியாயவிலைக் கடைகளிலே விற்கப்படுகின்றபொழுது எல்லாம்
கட்டுப்படுத்தப்பட்ட பொருள்களின் விலையின் அடிப்படையிலே
வழங்குவதன் காரணமாக, அந்தக் கடைகளை நடத்திச் செல்
வதிலே இருக்கிற சிரமங்களை எல்லாம் குறைக்க வேண்டுமென்ப
தற்காகத்தான் சாதாரணமாக மற்றைய பொருள்களை எல்லாம்
அங்கே விற்பனை செய்வதன் மூலமாக, அந்தக் கடைகளிலே
வேலை செய்கிறவர்களுக்கு ஓரளவுக்கு அதிகமான அளவுக்குச்
சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற வாய்ப்பை ஏற்படுத்த வேண்டு
மென்பது நோக்கம். அந்த நோக்கத்தினுடைய அடிப்படையில்
தான் 5, 6 பொருள்கள் கட்டுப்பாட்டிலிருக்கும்போது, 50, 60
பொருள்கள் மற்றைய கடைகளில் விற்பதைப்போல விற்போ
மானால் ஓரளவுக்கு லாபம் அடைய முடியும். அந்தக் கடை
வாடகை கொடுக்க, அதிலே வேலை செய்கின்றவர்களுக்குக்
கொடுக்கின்ற சம்பளம் போதவில்லை, போதவில்லை என்று சொல்
கின்றபொழுது, பெறுகின்ற லாபத்தைக் கொண்டு கணிசமாகக்
கொடுக்கின்ற சூழ்நிலை ஏற்பட முடியும். அதிலே லாபம் வருகின்ற
சூழ்நிலை இல்லாவிட்டால், அது முடியாது. அதிலே வருகின்ற
லாபத்தைக் கொண்டுதான் பணியாளர்களுக்கு ஊதியம் கொடுக்க
முடியும். அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மற்றைய
பண்டங்களை விற்கும்படியாகச் சொல்கிறோமே தவிர, அட்டை

தாரர்கள் கட்டாயமாக வாங்கியே தீர வேண்டுமென்று வற்புறுத்துகிற நிலை இருக்கக்கூடாது என்பதுதான் அரசினுடைய கொள்கை. அதைத்தான் குறிப்பிட்டோம். அப்படி வற்புறுத்துகின்ற அளவுக்குச் சூழ்நிலை எங்காவது இருக்குமானால் அதை விசாரித்தறிந்து அப்படிப்பட்ட நிலைமை இல்லாத அளவுக்குச் செய்வதற்கு அரசு முயற்சி செய்யலாம். ஆனால், எடை குறைவு, மற்றைய தவறுகள் இருக்குமானால்—விதிமுறைப்படி. அப்படி தவறுகள் செய்யக் கூடாது—அப்படிச் செய்பவர்கள் யாராவது இருந்தால் அவர்கள்மீது முறைப்படி நடவடிக்கை எடுக்கலாம்.

(முற்பகல் 10-10)

## (இ) வால்பாறை டீ எஸ்டேட்ஸ் ஆப் இந்தியா கம்பெனித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்.

**திரு. வி. தங்கவேலு**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் உள்ள டீ எஸ்டேட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட் கம்பெனியைச் சேர்ந்த தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் 10,000 பேர் வேலை நிறுத்தம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

டீ எஸ்டேட்ஸ் இந்தியா லிமிடெட் என்ற நிர்வாகத்திற்குச் சொந்தமாக கோவை மாவட்டத்தில் மட்டும் 5-எஸ்டேட்கள் உள்ளன. அவை மோனிக்கா, இஞ்சிப்பாறை, ஸ்டேன்மோர், சிறுகுன்றா மற்றும் நல்லகாத்து எஸ்டேட் ஆகியனவாகும். இதில் நல்லகாத்து எஸ்டேட் என்ற நிறுவனத்தில் 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தொழிலாளர்கள் ஏற்கனவே செய்து வந்த வேலை முறையை மாற்றி பிளாக் முறையில் கொழுந்து எடுக்கும் முறையை அறிமுகம் செய்தனர். தொழிலாளர்கள் இத்திட்டத்தில் வேலை செய்ய மறுத்ததைத் தொடர்ந்து தொழிற் சங்கங்களினால் 1986-ஜூன் மாதத்தில் வேலை நிறுத்த அறிவிப்பு வழங்கப்பட்டது. இப்பிரச்சினை குறித்து கோவை, தொழிலாளர் துறை உதவி ஆணையர் (சமரசம்) 3-ன் முன் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் மேற்படி பிரச்சினையை

வலியுறுத்தி 30—6—1986 முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். எனவே இப்பிரச்சினை குறித்து கோவை, தொழிலாளர் துறை இணை ஆணையர் முன் பல்வேறு தேதிகளில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பலனாக 5—8—1986 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் பிளாக் முறையில் கொழுந்து எடுக்கும் பிரச்சினையை தொழிற் தகராறு சட்டப் பிரிவு 10-ஏ-ன்படி சென்னை தொழிலாளர் துறை ஆணையர் திரு. எஸ். ராஜாசுப்பிரமணியன், இ.ஆ.ப., அவர்களின் நடுவர் தீர்ப்பிற்கு விடவும், அவரது முடிவு இரு தரப்பினரையும் கட்டுப்படுத்தும் என்றும், இருதரப்பினராலும் ஒருமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12(3)-ன் கீழ் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. மேற்படி ஒப்பந்தத்தின்படி மற்றும் அரசுக்கு அனுப்பப்பட்ட நடுவர் தீர்ப்பு ஒப்பந்தத்தின்படி (Arbitration Agreement) திரு. எஸ். ராஜா சுப்பிரமணியன், இ.ஆ.ப., தொழிலாளர் துறை ஆணையர், சென்னை, அரசு ஆணை எண் 2155 மற்றும் 2156, தொழிலாளர் துறை, நாள் 30—10—1986-ன் படி நடுவராக நியமிக்கப்பட்டார்.

2. இப்பிரச்சினையில் இருதரப்பினரின் வாதங்கள், எதிர் வாதங்கள், சாட்சிகள் மற்றும் இப்பிரச்சினை சம்பந்தப்பட்ட தேவையான ஆவணங்கள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்து ஐ.டி.எண். ஆ1/81343/86 நாள் 31—3—1987-ன் படி 'நிர்வாகத்தால் புகுத்தப்பட்ட பிளாக் பிளக்கிங் முறை நியாயமானதே' என நடுவர் தீர்ப்பு அளிக்கப்பட்டது. இந்த நடுவர் தீர்ப்பினை எதிர்த்து தமிழ்நாடு பிளான்டேஷன் ஓர்க்கர்ஸ் யூனியன், வால் பாறை; ஹில் பிளான்டேஷன் ஓர்க்கர்ஸ் யூனியன், வால்பாறை; மற்றும் ஆனமலை பிளான்டேஷன் ஓர்க்கர்ஸ் யூனியன், வால்பாறை ஆகிய தொழிற் சங்கங்கள் சென்னை உயர் நீதி மன்றத்தில் இடைக்கால தடை உத்தரவு கோரி ரிட் மனு தாக்கல் செய்தன. சென்னை, உயர் நீதிமன்றம் முதலில் இடைக்கால தடை உத்தரவு வழங்கியது. பின்னர் இந்த இடைக்கால தடை உத்தரவு விலக்கப்பட்டு உத்தரவிடப்பட்டது. இந்த உத்தரவை எதிர்த்து தொழிற் சங்கம் சென்னை உயர்நீதிமன்ற பெஞ்சுக்கு தாக்கல் செய்த மேல்முறையீடு மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே, சென்னை உயர்நீதி மன்றத்தின் உத்தரவைத் தொடர்ந்து நல்லகாத்து எஸ்டேட்டில் அனைத்துத் தொழிலாளர்களும் 31—8—1987 முதல் பிளாக் பிளக்கிங் முறையில் வேலை செய்து வருகின்றனர்.



3. தற்போது 21—9—1987 முதல் ஸ்டேன்மோர் எஸ்டேட்டில் பிளாக் பிளக்கிங் முறை புகுத்தப்பட்டது. இவ்வாறு பிளாக் பிளக்கிங் முறை ஸ்டேன்மோர் எஸ்டேட்டில் புகுத்தப்பட்டதை ஆட்சேபித்து, இந்திரா நேஷனல் பிளான்டேஷன் ஜெனரல் ஓர்க்கர்ஸ் யூனியன், வால்பாறை என்ற தொழிற் சங்கத்தால் சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட்மனு எண். 9443/87-ல் சென்னை உயர்நீதி மன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தது. பின்னர் நிர்வாகத்தால் மேல்முறையீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சென்னை உயர்நீதி மன்றத்தால் ஏற்கனவே வழங்கிய தடை உத்தரவு விலக்கப்பட்டது. மேற்படி தடை உத்தரவு விலக்கப்பட்டதைத் தொடர்ந்து நிர்வாகம் 8—10—1987 முதல் மீண்டும் பிளாக் பிளக்கிங் முறையை அமுல் படுத்தியது. இதனை ஆட்சேபித்து தாங்கள் முன்பு போல் சால் வரிசையில் தான் வேலை பார்ப்போம் எனத் தெரிவித்து ஸ்டேன்மோர் எஸ்டேட் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

4. ஸ்டேன்மோர் எஸ்டேட்டில் பிளாக் முறையில் கொழுந்து எடுப்பதைத் தடுந்து நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்டதைத் தங்களுக்கும் பொருந்தும் என்ற எண்ணத்தில் வால்பாறை யிலுள்ள சிறுகுன்றா எஸ்டேட் மற்றும் இஞ்சிப்பாறை எஸ்டேட் ஆகியவற்றில் உள்ள தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் பிளாக் முறையில் கொழுந்து எடுக்க ஆட்சேபித்து 3—10—1987 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குச் செல்ல அறிவுரைகள் வழங்குமாறு கோவை தொழிலாளர் துறை உதவி ஆணையர் (சமரசம்)-3 அவர்களால் தொழிற் சங்கத்தினருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

5. இஞ்சிப்பாறை எஸ்டேட்டைப் பொறுத்தமட்டில் தொழிலா ளர்களில் ஒரு பகுதியினர் பிளாக் பிளக்கிங் முறையிலும், மற்றொரு பகுதியினர் சால் வரிசையிலும் (Gang Row Flucking) வேலை பார்த்து வருகின்றனர். சிறுகுன்றா எஸ்டேட்டைப் பொறுத்தமட்டில் அனைத்துத் தொழிலாளர்களும் பிளாக் பிளக்கிங் முறையிலேயே 1986 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் வேலை பார்த்து வந்தனர். இந்த இரு எஸ்டேட்

தொழிலாளர்களும் தாங்கள் சால் வரிசையில்தான் வேலை பார்ப்போம் என்று தெரிவித்தும், மேலும் போனஸ் மற்றும் பண்டிகை முன்பணம் வழங்கக் கோரியும் 3—10—1987 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்த வேலை நிறுத்தத்திற்கு முக்கிய காரணமே உயர் நீதிமன்றம் ஸ்டேன்மோர் எஸ்டேட்டிற்கு பிறப்பித்த தடை உத்தரவு மேற்கூறப்பட்ட இரு எஸ்டேட்களுக்கும் பொருந்தும் என தவறாக பிரச்சாரம் செய்யப்பட்டதே ஆகும்.

6. இப்பிரச்சினையின் தீவிரத்தைக் கருத்திற்கொண்டு கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் கோவை தொழிலாளர் இணை ஆணையர் ஆகியோரால் வழங்கப்பட்ட அறிவுரையின்படி கோவை, தொழிலாளர் துறை உதவி ஆணையர் (சமரசம்)-3, அவர்கள் 7—10—1987 அன்று நிர்வாகத்தினர் மற்றும் தொழிற் சங்கத் தலைவர்கள் ஆகிய இருதரப்பினரையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். தொழிலாளர்களுக்கு போனஸ், பண்டிகை முன்பணம் ஆகியவை வழங்குவதுடன் சால் வரிசை முறையையும் அமுல்படுத்தாவிடில் பஸ் மறியல் போராட்டம் நடத்தப் போவதாகத் தொழிலாளர்களின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை விலக்கிக் கொண்டு பணிக்குத் திரும்பிய பின்னரே போனஸ் மற்றும் முன்பணம் வழங்க இயலும் என நிர்வாகத்தின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்பேச்சுவார்த்தையின் போது தொழிலாளர்களுக்கு போனஸ் மற்றும் முன்பணம் வழங்குவது குறித்த கோரிக்கைகள் குறித்து முறைப்படி தொழிற் தாவா எழுப்புமாறு உதவி ஆணையர் (சமரசம்)-3 அறிவுரைகள் வழங்கியுள்ளார். ஸ்டேன்மோர் எஸ்டேட்டில் பிளாக் பிளக்கிங் முறையைத் தடை செய்து சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்காலத் தடை உத்தரவு விலக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டதாக நிர்வாகத்தின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் உயர்நீதிமன்றம் தடை உத்தரவை விலக்கி பிறப்பித்த ஆணையின் நகலை (Carbon copy) நிர்வாகம் தாக்கல் செய்தால் மட்டுமே நிர்வாகத்தின் வாதத்தை நம்ப முடியும் எனத் தெரிவித்துள்ளார். எனவே, ஸ்டேன்மோர், இஞ்சிப்பாறை மற்றும் சிறுகுன்றா எஸ்டேட் ஆகியவற்றில் வேலை நிறுத்தம் தொடர்கிறது. 12—10—1987-ல் சில தொழிலாளர்கள் ஸ்டேன்மோர் எஸ்டேட்டுக்குச் சென்று அங்கு பிளாக் பிளக்கிங்கில் வேலை செய்து வந்த





தொழிலாளர்களை பிளாக் பிளக்கிங்கில் வேலை செய்யக் கூடாது என மிரட்டியுள்ளனர். பின்னர் இஞ்சிப்பாறை எஸ்டேட்டிற்குச் சென்று அங்கும் இதே போல் நடந்து கொண்டனர். இதனால் கைகலப்பு ஏற்பட்டு வன்முறையில் ஈடுபட்ட தொழிலாளர்கள் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

7. ஏற்கெனவே கைது செய்யப்பட்ட தொழிலாளர்களை விடுவித்தல், சால் வரிசை முறையை அமுல்படுத்துதல் மற்றும் போனஸ் மற்றும் முன்பணம் ஆகிய மூன்று கோரிக்கைகளையும் வலியுறுத்தி 13—10—1987 அன்று வால்பாறை காவல் நிலையம் முன் தொழிலாளர்களில் ஒருபகுதியினர் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். அன்று இரவு 7-30 மணிக்கு கோவை மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை கண்காணிப்பாளர், கோவை, தொழிலாளர் துறை இணை ஆணையர் மற்றும் தொழிலாளர் துறை உதவி ஆணையர் (சமரசம்)-3 ஆகியோர் வால்பாறை சென்று ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளனர். அப்போது மறுநாள் (அதாவது 14—10—1987 அன்று) கோவையில் தனது அலுவலகத்தில் வைத்து நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளுமாறு கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப்பட்ட அறிவுரையைத் தொடர்ந்து, ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் கலைந்து சென்றனர். 14—10—1987 ஆம் தேதிய பேச்சுவார்த்தையின் முடிவில் கீழ்க்கண்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டன :—

1. சென்னை உயர் நீதிமன்றம் தடை உத்தரவை விலக்கிப் பிறப்பித்த ஆணையின் கார்பன் காப்பியை தாக்கல் செய்யும் வரையில் ஸ்டேன்மோர் எஸ்டேட்டில் சால் வரிசை முறைதான் அமுல்படுத்தப்படவேண்டும். கார்பன் காப்பியை தாக்கல் செய்த பின் பிளாக் பிளக்கிங் முறையை அமுல்படுத்தலாம்.

2. இஞ்சிப்பாறை எஸ்டேட்டில் தற்போது நடைமுறையில் உள்ளது போன்று சால் வரிசையில் வேலை பார்ப்பவர்கள் சால் வரிசையிலும் பிளாக் பிளக்கிங்கில் வேலை பார்ப்பவர்கள் பிளாக் பிளக்கிங்கிலும் வேலை செய்யலாம்.

3. சிறுகுன்றா எஸ்டேட்டில் 1986 ஜூன் முதல் பிளாக் பிளக்கிங் நடைமுறையில் உள்ளதால் இந்த எஸ்டேட்டில் உள்ள அனைத்துத் தொழிலாளர்களும் பிளாக் பிளக்கிங் முறையிலேயே வேலை செய்யலாம்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 18

4. வேலை நிறுத்தத்தை விலக்கிக் கொண்டு பணிக்குத் திரும்பிய இரண்டாவது நாள் போனஸ் தொகை பட்டுவாடா செய்யலாம்.

மேற்படி ஆலோசனைகளை, நிர்வாகம் ஒப்புக் கொண்டது. ஆனால் தொழிலாளர்கள் பிளாக் பிளக்கிங் முறையில் வேலை செய்ய மாட்டார்கள் என வலியுறுத்தப்பட்டதால் பேச்சு வார்த்தையில் எவ்வித சுமுகமான முடிவும் ஏற்பட வில்லை. பிளாக் பிளக்கிங் முறை குறித்து ஏற்கனவே செய்யப்பட்டுள்ள பிரச்சாரம் மற்றும் பணிக்குத் திரும்பினால் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் சிலரால் தாக்கப்படக்கூடும் என்ற அச்சம் ஆகியவற்றின் காரணமாக மற்ற தொழிலாளர்கள் தயங்கு கின்றனர் என்பது தெரிய வருகிறது. இந்நிலையில் காவல் துறை சட்டம் பிரிவு 30(2)-ன் கீழ் வால்பாறையில் உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதாகவும், நிலைமை அமைதியாக உள்ளது என்றும் தெரிய வருகிறது.

14—10—1987 அன்று நடந்த பேச்சு வார்த்தையில் எந்தவித சுமுகமான முடிவும் ஏற்படாததால், 6—11—1987 மற்றும் 7—11—1987 ஆகிய தேதிகளில் இணை ஆணையர் (சமரசம்) முன் சென்னையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அப்போது நிர்வாகத்தின் சார்பில் ஒருவரும் தொழிற்சங்கத்தின் சார்பில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள். இருந்த போதிலும், நாளைவரை அனைவருடனும் ஒருமித்த இணக்கம் கொண்டுவர ஒரு சூழ்நிலை இல்லாத பட்சத்தில் பேச்சு வார்த்தைகள் ஒத்திவைக்கப்பட்டு இணை ஆணையர் (சமரசம்) முன்பு நிலுவையிலுள்ளன. அரசு இந்தப் பிரச்சினையை சுமுக மாக தீர்ப்பதற்காக நல்ல கவனம் செலுத்தி மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. வி.தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, பிளாக் சிஸ்டம் என்று சொல்லக்கூடிய இந்தக் கறுப்புச் சட்டமானது மலையகத் தேயிலைத் தோட்டத் தொழி லாளர்களை, குறிப்பாக பெண் தொழிலாளர்களைக் கொத்தடிமை களாக மாற்றக்கூடிய ஒரு சட்டம் என்பதை இந்த மாண்புமிகு



1987 நவம்பர் 18] [திரு. வி. தங்கவேலு]

மகாசபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அன்று பாஞ்சாலி எழுந்தாள், கௌரவர் அழிந்தனர்; சீதை எழுந்தாள், ராவணன் வீழ்ந்தான்; கண்ணகி எழுந்தாள், மதுரை எரிந்தது, ஜான்சி ராணி எழுந்தாள், வெள்ளையர் மிரண்டனர் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள், இது ஒன்றும் சரித்திரம் அல்ல. (குறுக்கீடு)

திரு. வி. தங்கவேலு : அந்தக் கொத்தடிமைச் சட்டத்தைப் போக்குவதற்கு அரசு ஏதேனும் தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் விவரமாகவும், அதனுடைய தொடர் வரலாறுகளை யும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் தேயிலைத் தோட்டத்தில் தேயிலை பறிக்கும் முறையில் நீண்டகாலமாக ஒரு முறை பின்பற்றப்பட்டு வருகிறது. இப்போது நவீன காலத்தில், உற்பத்தியைப் பெருக்கவேண்டும், அதன் மூலம் தொழில் வளர்ச்சி அடையவேண்டும், அதன் மூலம் தொழிலாளர்களுக்கான ஊதியங்கள் பெருகவேண்டும் என்கின்ற அடிப்படையில் அந்த நிர்வாகத்தினர் ஒரு புதிய முறையை அதிலே புகுத்தியிருக் கிறார்கள். அதாவது, இதற்கு முன்னாலே தொடர்ந்து வரிசை யாக அந்தத் தொழிலாளர்கள் நின்று அந்தத் தேயிலைக் கொழுந் துகளைப் பறிப்பது என்பது பழைய முறை. அவர்கள் புகுத்து கின்ற முறை—ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள்ளே நின்று ஒவ்வொரு தொழிலாளியும் தனித்தனியாக தங்களுக்கு விடப் பட்ட பகுதிகளிலேயிருந்து கொழுந்துகளைப் பறிப்பது என்பது புதிய முறை. 'பிளாக் ப்ளக்கிங் முறை' என்று சொல் கிறார்கள். இதற்கு முன்னாலே இருப்பது 'கேங்க் ப்ளக்கிங் முறை' என்று சொல்கிறார்கள். ஆகவே, இது தொடர்பாக அவர்களிடத்திலே இருக்கிற 5 தோட்டங்களில் ஒரு தோட்டத்தில் 1985 ஆம் ஆண்டிலேயிருந்து நடைமுறைக்குக் கொண்டு வந்து ஏறாவ்டுக் காலம், அந்தத் தோட்டத்திலே, அந்த நடைமுறை தொழிலாளர்களாலே ஏற்றுக் கொள்ளப்பட்டு, இருந்து வருகிறது.

அதற்குப்பிறகு, 1986 ஆம் ஆண்டிலே அடுத்த தோட்டத்திலே அந்த முறையைப் புகுத்துகிற நேரத்திலே தொழிலாளர்களிடத்திலே அதற்கான ஒரு எதிர்ப்பு உருவாகி, அதற்குப் பிறகு வேலை நிறுத்தம் என்று தொடங்கி அதை நம்முடைய தொழிலாளர் நலத்துறையும், அந்தப் பிரதிநிதிகளும் உட்கார்ந்து விவாதித்து, அதற்கான ஒரு இறுதி முடிவைப் பிறப்பிக்கின்ற அதிகாரத்தை இரு தரப்பாருமே சேர்ந்து தொழிலாளர் நலத்துறை ஆணையரிடம் ஒப்படைத்தார்கள். அந்த ஆணையர், இரு தரப்பாரையும் விசாரித்து நடைமுறைகளையெல்லாம் கேட்டறிந்து இப்போது புகுத்தப்பட்ட முறை தவறானது அல்ல, அது தொழிலாளர்களுக்குத் தீமை பயக்காது என்கின்ற அந்தக் கருத்தை வெளியிட்டார். அதை அரசும் ஏற்றுக்கொண்டு ஆணை பிறப்பித்து இருக்கிறது.

ஆனால் எந்தத் தொழிற்சங்கத்தினர் அவருடைய ஆணைக்குக் கட்டுப்படுவோம் என்று ஒப்புதல் வழங்கினார்களோ, அவர்களே நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். நீதிமன்றம் முதலிலே உடனடியாக வழக்கம்போல் தடை விதித்தது. அதற்குப் பிறகு, நிர்வாகத்தினர் மேல்முறையீடு செய்தபிறகு அந்தத் தடையாணை ரத்து செய்யப்பட்டுவிட்டது. இப்படி தொடர்ந்து நீதிமன்றத்திலே தடையாணை ரத்து செய்யப்பட்டு விட்டதையொட்டியும், இந்த இரு தரப்பாரும் சேர்ந்து ஏற்றுக்கொண்ட அந்த நடுவருடைய தீர்ப்பையொட்டியும் அந்த நிர்வாகம் தொடர்ந்து மற்ற தோட்டங்களிலே அந்த முறையைப் புகுத்த ஆரம்பித்தது. அதற்குப் பிறகு அங்கே இருக்கின்ற தொழிற்சங்கங்கள் அல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்புள்ள ஒரு சங்கத்தின் பெயராலே இப்போது கிளர்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, வேலைநிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இருவரையும் அழைத்துப் பல நேரங்களிலே பேசியிருக்கிறார்கள். அப்படிப் பேசி வருகின்றபோது சில முடிவுகள் எடுக்கப்பட்டு, அந்த முடிவுகள் என்ன என்பதும் இந்த அறிக்கையிலே விவரிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகும் 1 ஆம் தேதி கடைசியாக அவர்கள் அழைத்துப் பேசப்பட்டிருக்கிறார்கள். இரண்டு வாரங்களுக்குள்ளே எப்படியும் ஒரு நல்ல சுமுகமான முடிவை நாங்கள் உருவாக்குவோம் என்று நிர்வாகம் தெரிவித்திருக்கிறது. ஆகவே ஒரு புதிய முறை





புகுத்தப்பட்டிருக்கிறது. இதனாலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சான்றுகள் காட்டியதைப்போல கொத்தடிமை முறை உருவாகிறதா என்பது தெரியவில்லை. ஏனென்றால் இதை தொழிற்சங்கத்தினர் அனைவருமே ஏற்றுக்கொண்டு ஒரு முடிவுக்கு நாங்கள் கட்டுப்படுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்; ஓராண்டுக் காலம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; இன்னும் பல தோட்டங்களிலே பகுதிகளாக நடைபெற்றுக்கொண்டும் இருக்கிறது; ஆகவே, இதிலே உணர்ச்சியை மாத்திரம் அடிப்படையாகக் கொள்ளாமல் தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கின்ற வகையிலும், அதே நேரத்திலே, அந்தத் தொழில் வளரவேண்டிய அந்த அடிப்படையிலும், உலகச் சந்தையிலே நம்முடைய தேயிலைக்கு இருக்கின்ற மதிப்பை உயர்த்துகின்ற வகையிலும், அந்தத் தொழில் வளர்ந்தால் தொழிலாளர்களும் வளர்வார்கள், நலம் பெறுவார்கள் என்கின்ற உணர்வோடும் அரசு இதிலே மிகுந்த அக்கறை செலுத்துகிறது என்பதை மாத்திரம், தலைவர் அவர்களே உங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இந்த அவைக்கும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. தங்கவேலு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'ஆர்பிட்ரேஷன்' என்று சொல்லக்கூடிய அவார்ட் காப்பியானது, போடப்பட்ட ஒப்பந்தம், டீ எஸ்டேட்ஸ் ஆப் இண்டியா லிமிடெட் என்று சொல்லக்கூடிய நிறுவனத்திற்கு, நல்லகாத்து எஸ்டேட் என்று சொல்லக்கூடிய அந்த ஒரே ஒரு எஸ்டேட்டுக்கு மட்டும்தான் பொருந்தும். இந்த ஒரே ஒரு எஸ்டேட்டுக்கு பொருந்தக்கூடிய அந்தச் சட்டத்தை இன்றைக்கு முதலாளிகள் நல்லகாத்து எஸ்டேட்டுக்கு மட்டுமல்லாமல் நீலகிரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய தேவர்சோலா போன்ற எஸ்டேட்டுக்கும், மதுரை மாவட்டத்திலே இருக்கக்கூடிய பச்சகோமாச்சி போன்ற எஸ்டேட்டுகளுக்கும், கிட்டத்தட்ட 15 எஸ்டேட்டுகளுக்கு இந்தக் கறுப்புச் சட்டத்தை அமுலாக்கம் செய்து பெண் தொழிலாளர்களை, குறிப்பாக மலையகத்திலே இருக்கக்கூடிய பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மலைவாழ் பெண் தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக மாற்றி ஆட்குறைப்பு செய்யக்கூடிய இந்தச் சட்டப்படி எஞ்சி இருக்கும் 14 எஸ்டேட்டுகளுக்கும் அமுலாகாது

[திரு. வி. தங்கவேலு] [1987 நவம்பர் 18

ஆனால் முதலாளிகள் இப்படி சொல்கிற காரணத்தினால் தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லக்கூடிய ஒரு தவறான கருத்தை நமது புனித ஆட்சி மாற்றி அமைக்குமா என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 தோட்டங்களுக்கு உரிமையுள்ளது ஒரு கம்பெனி. அதிலே ஒரு தோட்டத்திலே ஒரு ஆண்டிற்கு மேலாக இந்தப் புதிய முறை சுமுகமாக நடைபெற்று வருகிறது. இன்னொரு தோட்டத்திலேதான் அந்தப் பிரச்சினை எழுப்பப் பட்டது. அந்த எழுப்பப்பட்ட பிரச்சினைக்காக நீதிமன்றத் திற்குச் சென்றார்கள். நீதிமன்றம் தடை ஆணை கொடுத்து அதைப் பிறகு விலக்கிக் கொண்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல இந்த ஒரு தோட்டத்தைப் பொறுத் துத்தான் பிரச்சினைகள் எழுந்து இருக்கின்றன என்றால் மற்ற 4 தோட்டங்களிலும் நிர்வாகம் ஏற்கெனவே அமல்படுத்தியிருக கின்ற அந்த முறையைத் தொடர்ந்து பின்பற்றுவதிலே அவர் களுக்கு தடையில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே ஒரு வழக்கறிஞர், அவரே—இதை ஏற்றுக்கொண்டதாக ஆகிவிடும். ஆகவே சட்டத்தை இங்கே புகுத்தினால் அது நம்மைப் பலவினப் படுத்திவிடும் என்பதை நான் தொழிலாளர்களின் சார்பிலும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே ஒரு தோட் டத்திலே மாத்திரம்தான் அந்தப் பிரச்சினை. மற்ற தோட்டங் களிலே, இல்லையென்றால் நிர்வாகம் உடனே பதில் அளித்துவிடும். என்னென்றால், நான் இன்னொரு தோட்டத்திலே அமல் படுத்திக் கொண்டிருக்கிறேன். அங்கே பிரச்சினை இல்லை, அங்கே இது கறுப்புச் சட்டமாக இல்லை, ஆகவே நான் மற்ற தோட்டங்களி லேயும் தொழிலாளர்களுடைய நலன் கருதியும், தொழிலினுடைய முன்னேற்றம் கருதியும் அமல்படுத்துகிறேன் என்று விளக்கிப் பார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களை, தலைவர் அவர்களே உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன், இது தொழி லாளர்களுக்கு நன்மை பயக்கின்ற முறையா, தொழில் வளர்ச்சிக்கு உகந்த முறையா என்பதை அடிப்படையாக வைத்து அரசு இதிலே கவனமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அருள் கூர்ந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 நவம்பர் 18]

## (ஈ) திருப்பூர் தனலட்சுமி 'ஏ' மற்றும் 'பி' மில்கள் இயங்காமலுள்ளதால் தொழிலாளர் பாதிப்பு.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் தனலட்சுமி 'ஏ' மற்றும் 'பி' மில்கள் கடந்த மே மாதம் முதல் இயங்காமலுள்ளதால் சுமார் 1,900 தொழிலாளர்கள் வேலை யிழந்துள்ளதால் தொழிலாளர் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

### அறிக்கை.

திருப்பூர், தனலட்சுமி மில்ஸ் 'ஏ' ஆலையில் 993 தொழிலாளர் களும் 'பி' ஆலையில் 398 தொழிலாளர்களும் பணிபுரிகின்றனர். இந்த ஆலையில் கீழ்க்கண்ட தொழிற்சங்கங்கள் இயங்கி வருகின்றன :—

(1) பஞ்சாலை அண்ணா தொழிலாளர் சங்கம், கோவை (அண்ணா தொழிற்சங்கப் பேரவையுடன் இணைக்கப்பட்டது).

(2) கோவை, பெரியார் மாவட்ட திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம், கோவை (தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையுடன் இணைக்கப்பட்டது).

(3) கோவை மாவட்ட மில் லேபர் யூனியன், கோவை (இந்திய தொழிற்சங்க மையத்துடன் இணைக்கப்பட்டது).

(4) கோவை மாவட்ட மில் தொழிலாளர் சங்கம், கோவை (அனைத்து இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் உடன் இணைக்கப் பட்டது).

(5) தேசியப் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், கோவை (தமிழ்நாடு தேசிய தொழிற்சங்க காங்கிரஸ்/தேசிய தொழிலாளர் சங்கத்துடன் இணைக்கப்பட்டது).

(6) கோவை ஜில்லா பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் (ஹிந்து மஸ்தூர் சங்கத்துடன் இணைக்கப்பட்டது).

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 18

தொழிலாளர்களுக்கு ஏப்ரல் மாத சம்பளம் வழங்கப்பட
வில்லை என்ற கோரிக்கையை வலியுறுத்தி 'ஏ' மில் தொழிலா
ளர்கள் 16—5—1987 லிருந்தும், 'பி' மில் தொழிலாளர்கள்
14—5—1987 லிருந்தும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.
இப்பிரச்சனையில் கோவை, தொழிலாளர் துறை இணை
ஆணையர் தலையிட்டு பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டு
27—7—1987 அன்று இருதரப்பினரும் ஏற்றுக்கொண்ட கீழ்க்
காணும் அறிவுரைகளை வழங்கினார்.

(அ) வேலைப்பளு மற்றும் சிக்கன சீரமைப்பு குறித்து
ஆலையில் இயங்கும் அனைத்து தொழிற்சங்கங்களும் நாளைய
தேதியிலிருந்து (28—7—1987) 15 நாட்களுக்குள் நிர்வாகத்துடன்
நேரடியாகப் பேசி புதிய வேலைப்பளுவை முடிக்க வேண்டும்.

(ஆ) வேலைப்பளு மற்றும் சிக்கன சீரமைப்பு குறித்து
பேசிமுடித்த மூன்று நாட்கள் கழித்து அதாவது 12—8—1987-க்
குள் இரு தரப்புக்கும் உடன்பாடு ஏற்பட்டால், 16—3—1987
அன்று நிர்வாகம் ஆலையைத் திறந்து ஓட்டவேண்டும். தொழி
லாளர்கள் அனைவரும் பணிக்குத் திரும்ப வேண்டும். வேலை
நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களும் தங்களது வேலை
நிறுத்தத்தைக் கைவிட்டுப் பணிக்குத் திரும்ப வேண்டும்.

(இ) ஆலை மீண்டும் இயங்கத் துவங்கிய தேதியிலிருந்து
3 அல்லது 4 நாட்கள் கழித்து அதாவது 20—8—1987 அன்றோ
அதற்கு முன்னரோ தொழிலாளர்களுக்கு ஏற்கனவே பணிபுரிந்த
நாட்களுக்கு சேரவேண்டிய சம்பளத்தில் 15 நாட்கள் சம்பளத்தை
வழங்கவேண்டும்.

(ஈ) வேலை நிறுத்த நாட்கள் மற்றும் ஆலை இயங்காத
நாட்களுக்கு தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்கப்பட
மாட்டாது.

(உ) அதுபோல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதற்காக
தொழிலாளர்கள் மீது எந்தவித பழிவாங்கும் நடவடிக்கையும்
நிர்வாகம் எடுக்கக் கூடாது. வேலைநிறுத்த காலத்தில் நடை
பெற்ற சம்பவங்களுக்காக தொழிலாளர்கள் மீது தற்காலிக வேலை
நீக்கம் போன்ற நடவடிக்கைகள் நிர்வாகம் எடுத்திருந்தால்
அதனை ரத்து செய்து அந்தத் தொழிலாளர்களையும் நிர்வாகம்
பணிக்கு அனுமதிக்கவேண்டும்.



1987 நவம்பர் 18] [திரு. ஆர். எம். வீரப்பன்]

(ஊ) கோவை மாவட்டத்தில் சில ஆலைகள் நீண்டகால
மாக மூடப்பட்டுள்ள நிலையில் இருப்பதால் இந்த ஆலையை
மீண்டும் நல்ல முறையில் நடைபெற இருதரப்பினரும் ஒத்து
ழைப்பு நல்கி வேலைப்பளு மற்றும் சிக்கன சீரமைப்பு பற்றி
பேசி முடித்து ஆலையை சகஜ நிலையில் இயங்க ஒத்துழைப்பு
நல்க வேண்டும்.

(எ) இந்த அறிவுரைகளை அமுல்படுத்துவதில் சிக்கல்கள்
ஏற்பட்டால் இருதரப்பினரும் கோவை தொழிலாளர் துறை
இணை ஆணையாளர் அவர்களை அணுக வேண்டும்.

ஆனால் இந்த ஷரத்துக்களின்படி 12—8—1987 க்குள் இருதரப்
பினருக்கும் இடையே வேலைப்பளு மற்றும் சிக்கனச் சீரமைப்புப்
பிரச்சினையில் ஒரு முடிவு ஏற்படவில்லை. அதனால் தொழிலா
ளர்களின் வேலை நிறுத்தமும் விலக்கிக்கொள்ளப்படாமல்
தொடர்ந்து நடைபெறுகிறது.

நேரடிப் பேச்சுவார்த்தைகளில் இணை ஆணையரது அறிவு
ரைப்படி வேலைப்பளு மற்றும் சிக்கனச் சீரமைப்பு பிரச்சினை
களில் முடிவு ஏற்படாததால் மீண்டும் கோவை, இணை ஆணையர்
இந்தப் பிரச்சினையில் பேச்சுவார்த்தை மேற்கொண்டார். அவர்
முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது 'ஏ' மில் தொழி
லாளர்களின் வேலைப்பளு குறித்து நேரடிப் பேச்சுவார்த்தையின்
பயனாக முடிவு ஏற்பட்டுள்ளதாகவும், 'பி' மில் தொழிலாளர்
களின் வேலைப்பளு குறித்து முடிவு ஏற்படவில்லை எனவும்
இணை ஆணையருக்குத் தெரிவிக்கப்பட்டது. 'ஏ' மில்லைப்
பொறுத்தவரை வேலைப்பளு மற்றும் சம்பளம் பிரச்சினையில்
இணக்கம் ஏற்பட்டபோதிலும், தற்சமயம் ஆலை இயங்கவில்லை.
'பி' மில் பிரச்சினையில் பேச்சுவார்த்தை நிலுவையில் உள்ளது.
எனவே, அனைத்துப் பிரச்சினைகளிலும் இறுதியாக, சட்ட
பூர்வமாக ஒரு முடிவு ஏற்படும்பொருட்டு இணை ஆணையர்
தொடர்ந்து சமரச முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்.

தற்சமயம் ஆலைகளில் வேலை நடைபெறவில்லை. நிலைமை
அமைதியாக உள்ளது.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிக்கையின்மீது விளக்கம் பெறுவதற்கு முன்னர் ஒரு தவறான தகவல் அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருப்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். "இயங்காமல் உள்ளது குறித்து" என்றுதான் நான் கவன ஈர்ப்புத் தீர்மானமே கொடுத்துள்ளேன். ஆனால் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தொழிலாளர்களுக்கு ஏப்ரல் மாத சம்பளம் வழங்கப்படவில்லை என்று கோரிக்கையை வலியுறுத்தி 'ஏ' மில் தொழிலாளர்கள் 16—5—1987-லிருந்தும், 'பி' மில் தொழிலாளர்கள் 14—5—1987-லிருந்தும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கே 7 சங்கங்கள் இருக்கின்றன. அவற்றில், இரண்டு சங்கங்கள்தான், ஏ.டி.எம்.கே., டி.எம்.கே., சங்கங்கள் மட்டும்தான் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டன. மற்ற சங்கங்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவில்லை. ஆனால் 1,900 பேர் வேலை செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலையில் 300 பேர்கள் மட்டுமே வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். 1,600 பேர்களை பிரதிநிதித்துவப்படுத்துகிற தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவில்லை என்பது இதிலே குறிப்பிடப்படவில்லை. ஆகவே இந்தத் தவறான தகவலை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 10-20)

'ஏ' மில்லைப் பொறுத்தவரையிலும் பிரச்சினைகள் தீர்ந்து விட்டன என்று சொல்லப்பட்டிருக்கிறது. நடைமுறையில் 'ஏ' மில்லை ஓட்டுவதற்கான தேதியை பேச்சு வார்த்தையின்போது மேனேஜ்மென்ட் ஒப்புக்கொண்டது. அப்படி ஒப்புக்கொண்ட அடிப்படையிலே—ஜே.சி.எல். முன்னால் ஒப்புக்கொண்ட அடிப்படையில்—தொழிற்சாலையைத் திறக்கவில்லை. இறுதியாகக் கிடைத்திருக்கிற தகவல், பாரத (ஸ்டேட்) வங்கியினர் கடன் கொடுப்பதற்கு முன்னால், நிர்வாகம் ஒரு தொகையைக் கட்ட வேண்டுமென்று வலியுறுத்தியபோது, நிர்வாகம் அந்தத் தொகையைக் கட்ட முடியாது என்று சொன்னதால்தான்; நிதியைப் பெற முடியாத நிலைமை இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இப்போது பிரச்சினை முடிக்கப்பட்டிருப்பதால் 'ஏ' மில்லை உடனடியாகத்



தொடங்கிடவும், பி—மில்லைப் பொறுத்த வரையில் நடைமுறையில் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் நிர்வாகத்தை நிர்ப்பந்திக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்த எடுப்பிலேயே அரசுத் தரப்பிலிருந்து தவறான தகவல் தரப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு தலைவர் அவர்களே, அவருடைய தவறான வார்த்தைகளைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு விளக்கத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். அவர் இங்கே குறிப்பிட்ட தகவல் இந்த அறிக்கையிலே இல்லை என்று தெரிவித்திருக்க வேண்டுமே தவிர இங்கே தந்திருக்கிற தகவல் தவறான தகவல் என்று ஒட்டு மொத்தமாக சொல்வது சரியல்ல. வேலைநிறுத்தம் காரணமாகத்தான் அந்த ஆலை மூடப்பட்டிருக்கிறது. அந்தப் பிரச்சினையை ஒட்டித்தான் இன்றைக்கு இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானமே வந்திருக்கிறது. ஆகவே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். வேலை நிறுத்தம் காரணமாக அந்த ஆலை மூடப்பட்டிருக்கிறது. இப்போது அது குறித்து பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன என்றும் இங்கே தகவலைத் தந்திருக்கிறோம். ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிற தகவல் எங்களுக்கு இப்போது புதிதாக இருக்கிறது. அதில் எந்த சங்கம் கலந்து கொண்டது, எந்தச் சங்கம் கலந்துகொள்ளவில்லை என்றெல்லாம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிலே ஒரு மகிழ்ச்சி, என்னவென்றால் நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் தகராறு என்று வருகிற போது, பல சங்கங்கள் அந்த நிர்வாகத்தில் இருக்கிற காரணத்தால்—சில சங்கங்கள் சில பிரச்சினைகளை வைப்பதும், சில சங்கங்கள் அந்தப் பிரச்சினைகளை ஏற்றுக் கொள்வதற்கு மறுப்பதும், இப்படி அவர்களுக்குள்ளேயே யார் அதிக அதிகாரம் எடுத்துக்கொள்வது, செல்வாக்கை, பெருமையைப் பெறுவது என்ற அடிப்படையில் செயல்படுவதால் தான் நிர்வாகமே சிக்கலிலே இருக்கிற சூழ்நிலை நாட்டில் வளர்ந்து வருகிறது என்ற காரணத்தால் ஒரு தொழிற்சாலைக்கு, ஒரு நிர்வாகத்திற்கு ஒரு தொழிற் சங்கம் என்ற சிறந்த இலட்சியத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு

கொள்கையாகவே வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இதிலே தொடர்புள்ள சங்கம் எதைச் சார்ந்த சங்கம் என்று எங்களுக்குத் தெரியாது. ஆகவே இதிலே இன்னொரு உண்மையும் தெரிய வருகிறது. இரண்டு சங்கத்தைச் சார்ந்தவர்கள் ஒரு 300, அல்லது ஒரு 300 சொச்சம் பேர்களைத் தவிர மற்றவர்கள் வேலை செய்யத் தயாராக இருக்கிறார்கள். இதுதான் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, மற்றவர்களும் ஈடுபட வேண்டுமென்று தூண்டுகிறார்கள். அப்படித் தூண்டுகிறவர்கள் குறைவாகக்கூட இருக்கிறார்கள். அதிகமான தொழிலாளர்கள் எப்படியாவது வேலை நடக்கவேண்டும், தொழில் நடக்க வேண்டும், தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும், நம் வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் குறைவான எண்ணிக்கையில் உள்ளவர்கள் அதிகமான தொழிலாளர்களைத் தடுத்து நிறுத்துகிற போக்குதான் தமிழகத்தில் சில நேரங்களில் சில இடங்களில் காணப்படுகிறது. இதுதான் தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்களுக்குள்ளே இருக்கிற பிரச்சினையாகும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் இங்கே ஒரு உண்மையைத் தெரிவித்திருக்கிறார்கள். அவருக்கு நான் உங்கள் மூலமாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எந்தச் சங்கம் இதிலே ஈடுபடுகிறது என்பதல்ல பிரச்சினை. இப்போது பேசி முடிவுக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிற அந்தக் காரியம் நடைபெற்று முடிந்திருக்கிறது. கோவை இணை ஆணையர் முன்னால் ஏ-மில்லின் வேலைப் பளு, மற்றும் சம்பளம் குறித்து 9—11—1987 அன்று ஒரு இணக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதன்படி, ஆலை மீண்டும் 23—11—1987 முதல் செயல்பட வேண்டுமென்றும் 7—12—1987 க்குள் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வேலை அளிக்கப்பட வேண்டுமென்றும், 10—12—1987 க்குள் புதிய வேலைப்பளு மற்றும் ஊதியம் அமுலுக்கு வரும் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. பி—மில்களைக் குறித்த முடிவு 7—12—1987 க்குள் இரு தரப்பினரும் பேசி முடித்துக் கொள்ள ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.



**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக ஒரு மொத்தமாக சொல்வது சரியல்ல. வேலைநிறுத்தம் காரணமென்றுதான் இந்த வினாவைத் தொடுக்கிறேன். தமிழ்நாட்டில் 23 பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அவ்வாறு மூடப்பட்டிருக்கிற ஆலைகளில் பெரும் பகுதியானவை, நிர்வாகத்தினுடைய வரம்பற்ற ஆசையின் காரணமாகவே மூடப்பட்டிருக்கின்றன. அவர்கள், மில்லை உடனடியாக மூடிவிட்டு இனி தொழிலாளர்கள் அதிகமான வேலைப் பளுவை ஏற்றுக்கொள்ள வேண்டும், சம்பளத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும், ஆட்குறைப்புக்கு ஒப்புக் கொள்ள வேண்டும் என்று சட்டவிரோதமாக நிர்ப்பந்திப்பதன் காரணமாகத்தான் இந்த நிலைமைகள் ஏற்படுகின்றன. பஞ்சாலைகளைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் மிக வேகமாக இப்படித்தான் மூடப்பட்டு வருகின்றன. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்க விரும்புவது இதுதான். இத்தகைய சட்டவிரோதமாக, தொழிலாளர்கள் மீது நிர்ப்பந்தங்களைத் திணிக்க முற்படுகிற ஆலை முதலாளிகளின் சதிச் செயலை முறியடிக்க ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து இவ்வாறு தொழிற்சாலைகளை மூடுவதைத் தடை செய்ய மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிற்சாலையை மூடியதற்குப் பிறகோ அல்லது வேலை செய்யமாட்டோம் என்று தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்த பிறகோதான் தொழிலாளர் துறை அதற்குள்ளே நுழையும். அதற்குப் பிறகு அவர்களை சமாதானம் பேசி, சண்டை சச்சரவுகளை தீர்த்து வைத்து மீண்டும் வேலை செய்ய தொடங்கிவிட்டால் நாங்கள் வெளியே வந்துவிடுவோம். மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற கேள்விக்குரிய விவரங்களையெல்லாம் சொல்லுவதற்குரிய துறை கைத்தறி, பஞ்சாலைத் துறை அல்லது தொழில் துறை. இந்தத் துறைகளிடம் அவர்கள் கேட்டால், அதற்குத் தக்க கொள்கை விளக்கத்தை அல்லது சரியான பதிலை வழங்குவார்கள்,

ஆனால் தமிழக அரசைப் பொறுத்த வரைக்கும், தொழிலாளர்களுக்குத் தீங்கு பயக்கின்ற இந்தக் காரியங்களை எந்த நிறுவனங்களாக இருந்தாலும், எவ்வளவு பெரிய நிறுவனமாக இருந்தாலும் சரி கண்டுபிடித்தால் அதைக் கண்டிப்பாக கடுமையாக எதிர்க்கும், தடுக்கும் என்பதை மாத்திரம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பிலே இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) செங்கை மாவட்ட திருநீர்மலை கல் குவாரியைத் தனியாருக்குக் குத்தகைக்குக் கொடுத்தது குறித்து.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கல்பட்டு மாவட்டம், சர்வே எண் 234/2-ல் உள்ள திருநீர்மலை கல் குவாரியை திருநீர்மலை இந்து ஆதி திராவிடர் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுக்காமல் மாவட்ட ஆட்சித் தலைவர் தனியாருக்குக் கொடுத்ததால் ஆதி திராவிடர் கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

செங்கற்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம், திருநீர்மலை கிராமத்திலுள்ள ச.எண். 234/2 (78.78 ஏக்கர்கள்)-ல் உள்ள கல் குவாரியின் குத்தகை உரிமம், அதே கிராமத்தைச் சேர்ந்த திரு. கே. அருணாசலம் என்பவர் வசம் இருந்தது. இக்குவாரியின் முந்தைய குத்தகைதாரர் திரு. கே. அருணாசலம், தமக்கு மேலும் மூன்று ஆண்டுகளுக்கு (1397 லிருந்து 1399 பசலி வரை) உரிமத்தை புதுப்பித்துத் தர முன்பு விண்ணப்பித்து இருந்தார். செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் தமது நடவடிக்கைகள் ந.க.எண். 564/87/க்யூ, நாள் 3—8—1987 வாயிலாக மேற்படி விண்ணப்பதாரர் குத்தகை நிபந்தனைகளை மீறியதாகவும்; கிராமத்தாரிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபணைகளாலும் குவாரி உரிமத்தை புதுப்பிக்க மறுத்து ஆணைகள் இட்டார்.





மேற்படி திரு. கே. அருணாசலம் என்பவர் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணைகளுக்கு எதிராக தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத்துறை இயக்குநர் முன்பாக தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளின்படி மேல்முறையீடு செய்து கொண்டார். மாவட்ட ஆட்சித்தலைவரின் மேலே குறிப்பிட்ட ஆணைகள் சரியல்ல என கருதப்பட்டதால் அவ்வாணைகளை ரத்து செய்தும், தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளிலுள்ள விதி எண். 9(1)-ல் உள்ளவைகளைக் கருத்தில் கொண்டு அவரது உரிமம் புதுப்பிக்கக் கோரும் விண்ணப்பத்தின்மீது ஆணையிடுமாறு தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் ஆணைகள் இட்டிருந்தார். செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் தமது ந.கோ. எண். 564/87/க்யூ, நாள் 18—9—1987 வாயிலாக, மேற்படி குவாரிக்கு விண்ணப்பங்கள் கோரி தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளின் விதி எண். 8(1) (ஏ)-ன்படி விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு விட்டது எனவும், திரு. கே. அருணாசலத்தின் கோரிக்கை விதி 8 (1) (ஏ)க்கு உட்பட்டதல்ல என்பதாலும் அவருடைய குவாரி உரிமம் புதுப்பிக்கக் கோரும் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டதாக அவருக்குத் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் செங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் தமது நடவடிக்கை ந. கோ. எண். 564/87/க்யூ-4, நாள் 13—10—1987 வாயிலாக மேற்கண்ட விதி எண். 8(1)-ன் கீழ் செய்யப்பட்ட விளம்பரத்தையொட்டி பெறப்பட்ட ஐந்து விண்ணப்பதாரர்களில் இலங்கை அகதியான திரு. எம். ஆறுமுகம் என்பவர், குறிப்பிடப்பட்ட குவாரி குத்தகையை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்து அக்குவாரி குத்தகை உரிமத்தை திரு. எம். ஆறுமுகம் என்பவருக்கு மூன்று ஆண்டுகளுக்கு விட முடிவு செய்து இருப்பதாக அறிவித்தும், மேற்படி குவாரி குத்தகை தொடர்பாக செலுத்த வேண்டிய குத்தகைத் தொகை ரூ. 1,50,000—உள்ளூர் வரி, உள்ளூர் உபரி வரி தொடர்பாக ரூபாய் 4,42,500—மேலும் இதர வரிகளை 10 தினங்களில் செலுத்துமாறும் குத்தகை உரிம ஒப்பந்த பத்திரம் நிறைவேற்றித் தருமாறும் ஆணைகள் இட்டுள்ளார். மேற்கண்ட மாவட்ட ஆட்சித் தலைவரின் நடவடிக்கை ஆணைகளுக்கு எதிராக திருநீர்மலை இந்து ஆதி திராவிட தொழிலாளர் ஒப்பந்த கூட்டுறவு சங்கத்தின் தலைவர் திரு. [illegible] 1987 நாளிட்ட [illegible]

மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளது. அதேபோல் இக்குவாரியின் முந்தைய குத்தகைதாரர் திரு. கே. அருணாசலம் என்பவர் மேற்கண்ட மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணைகளில் தனது விண்ணப்பத்தை நிராகரித்து இட்ட ஆணைகளை ஆட்சேபித்து மேல்முறையீடுகள் செய்துள்ளார். தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் தமது கடிதம் ந.க. எண் 18216/கவ. 2/87-1, நாள் 22—10—1987 வாயிலாக திரு. எம். ஆறுமுகம் என்பவருக்கு குத்தகை உரிமம் அளித்து ஆணையிட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவரின் 13—10—1987 நாளிட்ட ஆணையை தடைசெய்தும், மேல்முறையீடுகள் மீது இறுதி ஆணைகள் பிறப்பிக்கும்வரை அதில் குவாரி வேலை செய்யக்கூடாது எனவும் ஆணையிட்டுள்ளார்.

மேற்கண்ட திருநீர்மலை இந்து ஆதி திராவிட தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மேல்முறையீடு மீதும், திரு. கே. அருணாசலம் என்பவரின் மேல்முறையீடு மீதும் வரும் 23—11—1987 ஆம் நாளன்று நேரடி விசாரணைக்கு தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் ஆணைகள்படி மனுதாரர்களுக்கும், எதிர்மனுதாரர்களுக்கும், தகவல் அளிக்கப் பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரின் தொடர்புடைய கோப்புகள் மேல்முறையீடு தொடர்பாக இயக்குநரால் பெறப் பட்டுள்ளது. மேல்முறையீடு மீதான நேரடி விசாரணை முடிந்தவுடன், மேல்முறையீடுகள் மீது இறுதி ஆணைகளை தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் பிறப்பிப்பார்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை படித்தேன். தமிழக முதல்வர் இதய தெய்வம், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் தவறு செய்யக்கூடிய அதிகாரிகளைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை நான் கொண்டு வருகிறேன்.

திருநீர்மலை கல் குவாரியை 1—7—1984 முதல் 30—6—1987 முடிய திரு. அருணாசலம் என்பவர் குத்தகைக்கு எடுத் திருந்தார் * *

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.





**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அதிகாரிகள் மீது குற்றம் சாட்டு கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை அமைச்சரிடம் எழுதிக் கொடுங்கள். கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** இல்லை, ஆதாரம் இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்கள் விசாரித்து நடவடிக்கை எடுக் கலாம்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலிருந்து அவற்றை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்ட மாதிரி நீக்கப்படுகிறது. கேள்வி யாகக் கேளுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, நானே பொறுப்பேற்கிறேன். ஆதாரத்தைத் தருகிறேன், பேரவைத் தலைவரே விசாரிக்கலாம். ஆதாரம் இல்லாமல் சொல்ல மாட்டேன். ஆட்சிக்கு அல்லவா இதனால் கெட்ட பெயர் வருகிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இருக்கலாம். ஆனால் ஒரு அதிகாரி மீது, மற்றவர்கள் மீது குற்றச்சாட்டு சொல்லும் போது அதற்கான ஆதாரங்களை முதலிலே கொடுத்துவிட்டு, அதன் மீது பேரவைத் தலைவருடைய அனுமதியைப் பெற்று விட்டுத்தான் சொல்ல வேண்டும். விளக்கம் பெறுவதற்கு வினாக்கள் எழுப்பலாம். மற்றவைகளைச் சொல்லக் கூடாது என்று இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இது பற்றி விளக்கங்களை எழுதித் தாருங்கள், நடவடிக்கை எடுக்கிறேன் என்று எடுத்துச் சொல்லுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இதைப் பொறுத்தவரைக்கும் அப்பீல் செய்யப்பட்டு இன்டஸ்ட்ரீஸ் டைரக்டரிடம் அப்பீல் இருக்கிறது. * * ஆதாரம் கிடையாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** என் கையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரத்தை அமைச்சரிடம் கொடுத்துவிடுங்கள். கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, தொழில் வணிகத் துறை இயக்குநர் ஸ்டே கொடுத்திருக்கிறார். ஸ்டே கொடுத்த அதே தேதியில் திரு. சக்கரையின் பினாமியான ஆறுமுகம் என்பவருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி கொடுத்திருக்கிறார். ஆகவே நல்ல முறையிலே விசாரித்து அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே சம்பந்தப்பட்டவர்கள் அப்பீல் செய்திருக்கிறார்கள். இது விசாரணை அறிக்கையிலே இருக்கிறது. அப்பீல் தொழில் துறை இயக்குநரிடத்திலே இருக்கிறது. அந்த அப்பீலுக்கு விடை கண்டதற்குப் பிறகு இதற்கான விடை சொல்லப்படும்.

(முற்பகல் 10-30)

(திரு. இரா. தாமரைக்கனி எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுத்துவிடுங்கள். இரண்டுக்கு மேலே கேட்கக்கூடாது. ஆதாரத்தை அமைச்சர் அவர்களிடம் கொடுத்துவிடுங்கள். அடுத்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாமையால், அவருக்குப் பதிலாக திரு. எஸ். என். இராமசாமி அவர்கள் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்தை ஈர்ப்பார்கள்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.





## (ஊ) கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறையிலிருந்து பேருந்துகள் விடப்படாதது.

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், குழித்துறையிலிருந்து ஒரு பேருந்துகூட விடப்படாதது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

### அறிக்கை.

குழித்துறை நகராட்சியில் தொடுவெட்டி ஒரு முக்கிய இடமாக இருப்பதால் இந்நகராட்சியிலிருந்து செல்லும் எல்லாப் பேருந்து களும் தொடுவெட்டியிலிருந்து புறப்படுகின்றன. இவ்வாறு இங் கிருந்து புறப்படக்கூடிய மேற்கு, தெற்கு மற்றும் வடக்கு திசை களில் செல்லும் எல்லா பஸ்களும் குழித்துறை வழியாகச் செல் கின்றன. தொடுபட்டி மற்றும் களியக்காவிளை பேருந்து நிலை யங்களுக்கு இடைப்பட்ட பகுதியாக உள்ள குழித்துறை இட வசதியற்றதாக உள்ளதால் இங்கிருந்து பேருந்துகள் புறப்பட இயலாது. எனினும் அப்பகுதி மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க 2 புறநகர் பேருந்துகளும், 3 நகர பேருந்துகளும் குழித் துறையிலிருந்து புறப்பட்டுச் செல்கின்றன. குழித்துறை நக ராட்சிக்கு என புதியதாக 'பேருந்து நிலையம்' அமைப்பதற்கான இடம் ஆய்வில் உள்ளது. இது குறித்து தீர்வு செய்யப்பட்டவுடன் குழித்துறையிலிருந்து பேருந்து விடுவது பற்றி பரிசீலிக்கப் படும்.

## (எ) சென்னை, பைராகி மடம், வெங்கடேச பெருமாள் கோயில் நிலத்தைத் தனியாருக்குக் குறைந்த குத்தகைக்குக் கொடுத் துள்ளது குறித்து.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, "சென்னை, என். எஸ். சி. போஸ் சாலையில் உள்ள அருள்மிகு பைராகி மடம், வெங்கடேச பெருமாள் திருக் கோயிலுக்குச் சொந்தமான 107 கிரவுண்டுகள் கொண்ட ஒரு காலி

பீடத்தை தனியார் ஒருவருக்கு குறைந்த விலையில் குத்த கைக்குக் கொடுக்கப்பட்டுள்ளதால் அறநிலையத் துறைக்கு ஏற் பட்டுள்ள வருவாய் இழப்புக் குறித்த" அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

## அறிக்கை.

சென்னை ஜெனரல் முத்தையா முதலித் தெருவில் அமைந்துள்ள பைராகி மடம் அருள்மிகு திருவேங்கடமுடையான் திருக் கோயிலுக்கு என். எஸ். சி. போஸ் ரோட், நெ. 113-ல் உள்ள 1800 சதுர அடி கொண்ட காலி மனை சொந்தமானது. இந்த திருக் கோயிலுக்கு பரம்பரை அறங்காவலரான மகந்த் (மடாதிபதி) தாமோதரதாஸ், 1981-ல் திரு. நரேந்திர கோத்தாரி என்பவருக்கு மேற்படி காலி மனையினை மாதம் ரூ. 1,000 வாடகைக்கு பதினைந்து ஆண்டுகளுக்கு, தன் சொந்த செலவில் கட்டிடம் கட்டிக்கொள்ள குத்தகை ஒப்பந்தம் செய்து கொண்டார். இந்த ஒப்பந்தம் இந்துசமய அறநிலையங்கள் நிர்வாகச் சட்டம் பிரிவு 34-ன் கீழ் ஆணையரது முன் அனுமதி பெறாததால், இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து, ஆலய மேலாளர் 1981-ல் சிவில் வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கில், ஆலயத்திற்கு சாதகமாகவும் மேற் படி குத்தகைதாரர் திரு. நரேந்திர கோத்தாரிக்கு எதிராகவும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதனை எதிர்த்து மகந்த் மற்றும் குத்தகைதாரர் ஏ. எஸ். எண். 495/84 மற்றும் 496/84-ல் மேல்முறையீடு செய்தனர். அப் போது, மேற்படி திருக்கோயிலின் நிர்வாகத் திட்டத்தின்படி, இத் திருக்கோயிலுக்கு மேலாளர் ஒருவரை மட்டுமே நியமிக்க முடியு மென்றும், செயல் அலுவலர் ஒருவரை ஆணையர் நியமித்தது செல்லத்தக்கதல்லவென்று அறிவிக்கக்கோரி, மகந்தால் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ரிட் மனு எண் 5365/83, மகந்தின் சார்பில் முடிவடைந்து, செயல் அலு வலர் நியமனம் செல்லத்தக்கதல்லவென்று தீர்ப்பாகியது. இந்த



நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, மேலே கண்ட மேல் முறை யீடுகளில் திருக்கோயில் சார்பில் வழக்கு நடத்த செயல் அலு வலருக்கு அருகதையில்லை என்று கூறி மகந்த் தாமோதரதாஸ் இத்திருக்கோயிலின் பரம்பரை அறங்காவலர் என்ற முறையில் ஏ. எஸ். எண் 495/84 மற்றும் ஏ. எஸ். எண் 496/86 ஆகியவற்றை குத்தகைதாரர் கோரியபடி அனுமதிக்கலாம் என எழுதிக் கொடுத்துவிட்டார். ஆகவே மேற்படி மேல்முறையீடுகள் திருக் கோயிலுக்கு எதிராக அனுமதிக்கப்பட்டன.

இதற்கிடையில், மேற்படி குத்தகைதாரர் திரு. என். கே. கோத்தாரி சட்டப் பிரிவு 23-ன்கீழ் ஆணையர் முன் ஒரு மனு தாக்கல் செய்தார். அதில் திருக்கோயிலின் நிதி இப்பொருளின் பல வழக்குகள் மூலம் தொடர்ந்து செலவழிக்கப்படுவதைத் தவிர்க்க மேற்படி 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1 ஆம் நாளில் மகந்த் எழுதிக் கொடுத்தபடி இந்த மனையைக் குத்தகை க்கு அளிக்கவும் தொடர்ந்து தான் கட்டிடம் கட்டவும், மாதம் ரூ. 1,000 வாடகையாக வழக்கு முடியும்வரை செலுத்துவதாகவும், வழக்கு முடிவிற்குக் குத்தகைதாரரின், குத்தகைக் காலம் முடிந்த பின், கட்டிட உரிமையை திருக்கோயிலுக்கோ அல்லது மடத் திற்கோ சேரும்வகையில் விட்டுவிடுவதாகவும், எனவே மேற் கண்ட நிபந்தனைகள்படி உத்திரவு வழங்கக் கேட்டுக்கொண்டார். தனிப்பட்ட முறையில் தான் பைராகி மடத்தினையோ, திருக் கோயிலையோ வெவ்வேறு அறநிலையமாகக் கருதவில்லை என்றும், பைராகி மடத்தில் அதன் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில், சாதுக்களுக்கு உணவும் உறைவிடமும் அளித்து, அங்கே யுள்ள ராம் லட்சுமணர் சீதாதேவி கோயிலுக்கு பூஜைகள் செய்யப் போதுமான நிதி வசதி அளித்தாலே போதும் என்று கூறி, இந்த வகையில் மனு ஒன்றையும் மகந்த் சென்னை துணை ஆணை யரிடம் கொடுத்தார். மடத்திற்குச் சொந்தமானது என்று இது வரை மகந்த் வழக்காடிய அந்த சொத்தினை, திருக்கோயில் வசம் ஒப்படைப்பதாகவும் இந்தச் சொத்தில் திருக்கோயிலில் கட்டப் படவுள்ள கட்டிடத்தினை திரு. நரேந்திர கோத்தாரி உபயதாரர் வேலையாகச் செய்து தருவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் திருக்கோயிலின் நலனை உத்தேசித்து, திரு. கோத்தாரி மூலம் மேற்படி இடத்தில் உபயதாரர் வேலையாகக் கட்டிடம் கட்ட சில நிபந்தனைகளுக் குட்பட்டு அனுமதிக்கலாம் என சென்னை துணை ஆணையரால் ஆணையருக்குப் பரிந்துரைக்கப்பட்டது.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 நவம்பர் 18

அருள்மிகு பைராகிமடம் மகந்த் செயல் அலுவலர் நியமனத்தின் மீது செய்து கொண்ட ஏ. எஸ். 495/84 வழக்கில், திரு. கோத்வலர் நியமனம் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், திரு. கோத்தாரி செய்து கொண்ட மேல்முறையீட்டை அனுமதிக்க சம்மதம் அளித்து திரு. நரேந்திர கோத்தாரிக்கு சாதகமாக வழக்கு முடிவுற்றது. இதன் மீது மறுபரிசீலனைக்கு மனு சமர்ப்பிக்கப்படின், காலதாமதம் வீண் விரையம் ஏற்படக்கூடிய நிலையில் மகந்த் திரு தாமோதரதாஸ் அவர்களே சொத்தின் உரிமையை திருக்கோயிலின் சார்பில் விட்டுக்கொடுத்து, தான், வருவாயில் மூன்றில் ஒரு பகுதி உரிமைப்படி பங்கு பெற சம்மதித்தார். இதனால் திருக்கோயில் எந்த உரிமைக்காக வழக்குத் தொடர்ந்தார்களோ அந்த உரிமையை வழக்கு தொடராமல் பெறக்கூடிய சாதக நிலை ஏற்படுகிறது எனவும், இது திருக்கோயில், நலன்களுக்கும், உரிமைகளுக்கும் உகந்தது எனவும், தற்போது இந்த உரிமை குறித்து ஏதும் வழக்கு நிலுவையில் இல்லையெனவும் ஆணையருக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கெனவே துணை ஆணையர் 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 ஆம் தேதியில் சில நிபந்தனைகளுக்குட்பட்டு திரு. நரேந்திர கோத்தாரி அருள்மிகு பைராகி மடம் வெங்கடேசப் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான கதவு எண். 113 பழைய எண் 167-ல் உள்ள 1,800 சதுர அடி பரப்பில் தொடர்ந்து கட்டிடம் கட்டிக் கொள்ள சட்டப் பிரிவு 23-ன் கீழ் பரிந்துரைத்தும், மேற்படியாருக்கு 15 ஆண்டுகட்கு குத்தகைக்கு விடவும் பரிந்துரைத்துள்ளதையும், தீவிரமாக பரிசீலித்து, திருக்கோயில் நலன்களைக் கருதியும், மேற்கொண்டு வழக்குகள் தொடர்வதால் ஏற்படும் நிதி இழப்பு மற்றும் இதனால் இடம் காலியாக வைக்கப்பட்டு அதனால் ஏற்படும் இழப்புகளையும் கருத்தில் கொண்டு, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மேற்படி சொத்தினை திரு. நரேந்திர கோத்தாரிக்கு, 15 (பதினைந்து ஆண்டுகள் மட்டும்) ஆண்டுகட்கு, நீண்ட காலக் குத்தகைக்கு விட, சட்டப் பிரிவு 34-ன் கீழ் உரிய நமுனாவுடன் விண்ணப்பம் செய்ய திருக்கோயிலின் மேலாளர் நடவடிக்கை எடுக்க 1987 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6 ஆம் நாளில் ஆணையரால் உத்திரவிடப்பட்டது.

(1) பைராகி மடத்தின் மகந்திடமிருந்து, என். எஸ். சி போஸ் ரோடு, கதவு எண் 113-ல் உள்ள 1,800 (ஆயிரத்து எண்ணூறு சதுர அடி மட்டும்) சதுர அடி பரப்புள்ள மனையை, திருக்கோயிலிடம் ஒப்படைப்பதற்குப் பத்திரம் எழுதிப் பெற வேண்டும்.



1987 நவம்பர் 18] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

(2) திருக்கோயிலுக்குச் சொந்தமான மேற்படி மனை தேவையான மதிப்பீடு மற்றும் வரைபடம் ஆகியவற்றையும் இதர உரிமங்களையும் சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் திருக்கோயில் பெயரிலேயே பெற்று திருக்கோயிலின் தேவைக்கேற்பவும் அதன் உசிதப்படியும் கட்டிடம் கட்டிக் கொள்ளலாம்.

(3) மேலே சொன்னபடி கட்டப்படுகிற கட்டிடத்தை, திருக்கோயில், திரு. நரேந்திர கோத்தாரியின் உபயத்தின் மூலம் உபயதாரர் வேலையாகக் கட்டிடம் கட்டிக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

(4) திரு. நரேந்திர கோத்தாரியின் உபயமாக கட்டப்படுகிற, இந்தக் கட்டிடத்தை ஆணையர் உத்திரவு தேதியிலிருந்து, 9 மாதங்கட்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும்.

(5) ஆணையர் உத்தரவு தேதியிலிருந்து திரு நரேந்திர கோத்தாரி திருக்கோயிலின் கட்டிட வாடகைதாரராகவே கருதப்படுவார்.

(6) ஆணையர் உத்திரவு தேதியிலிருந்து முதல் 9 மாதங்கட்கு மாதம் ரூ. 1,500-யை (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்) திரு. நரேந்திர கோத்தாரி செலுத்த வேண்டும். பத்தாவது மாதம் முதல், தொடர்ந்து 5 ஆண்டுகட்கு, மாதம் ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்) மாத வாடகையாகவும், அடுத்து 5 ஆண்டுகட்கு, மாதம் ரூ. 4,000 (ரூபாய் நாலாயிரம் மட்டும்) மாத வாடகையாகவும், கடைசி 5 ஆண்டுகட்கு மாதம் ரூ. 5,500 (ரூபாய் ஐயாயிரத்து ஐநூறு மட்டும்) மாத வாடகையாக திரு. நரேந்திர கோத்தாரி செலுத்த வேண்டும்.

(7) குத்தகைக் காலம் முடிந்ததும், திரு. நரேந்திர கோத்தாரி மேற்படி கட்டிடத்தை காலி செய்து திருக்கோயிலிடம் ஒப்படைக்க வேண்டும்.

(8) கட்டிடத்தின் மேல் மாடியில் திரு. மகந்தின் சொந்த உபயோகத்திற்கு 10' × 10' பரப்புள்ள ஒரு அறையும் சாதுக்கள் தங்குவதற்கு 200 சதுர அடி பரப்பில் ஒரு கூடமும் தேவையான வசதிகளுடன் திரு. நரேந்திர கோத்தாரி அமைத்துக் கொடுக்க வேண்டும்.

(9) கட்டிடத்தின் நகராட்சி வரியை திருக்கோயிலே கட்ட வேண்டும். தண்ணீர்க் கட்டணம், மின் கட்டணம் போன்றவற்றை, வாடகைக்கு இருப்பவரான திரு. நரேந்திர கோத்தாரியே செலுத்த வேண்டும்.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 நவம்பர் 18

(10) இந்தச் சொத்தின் மீது நடைபெற்று வரும் வழக்குகளில், தன்னால் கோரப்படும் உரிமைகளை. திரு. மகந்த் விட்டுக் கொடுத்து, சொத்தையும் திருக்கோயில் வசம் ஒப்படைப்பதால் ஓ. பி. 413/1956-ல் கூறப்பட்டுள்ளபடி, இந்தச் சொத்திலிருந்து வரும் வருமானத்தில், மூன்றில் ஒரு பங்கை, திரு. மகந்த் பெறுவதற்கு உரிமை உடையவராகிறார்.

மேலே கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, திரு. நரேந்திர கோத்தாரியின் ஒப்புதல் பெற்று, பரம்பரை அறங்காவலர் தீர்மானத்துடன், சட்டப்பிரிவு 34-ன் கீழ் ஆணையரின் உரிய அனுமதிக்கு மேலாளர் விண்ணப்பிக்க வேண்டும். அவ்வுத்திரவு மீது, மேற்படி நிபந்தனைகளை உள்ளடக்கி, மகந்த் தீர்மானத்துடன் இந்த மனையை திரு. நரேந்திர கோத்தாரிக்கு 15 ஆண்டுகளுக்கு நீண்ட காலம் குத்தகைக்கு விட, மேற்படி திருக்கோயில் மேலாளர் சட்டப்பிரிவு 34-ன் கீழ் மனு சமர்ப்பித்துள்ளார். சென்னை, துணை ஆணையரும் 1987 ஆம் ஆண்டு மே மாதம் 6-ஆம் நாளில் குறிப்பு மூலம், சட்டப்பிரிவு 34-ன் கீழ் உத்திரவை பிறப்பிக்கவும், அது பிறப்பிக்கப்படும்வரை, திரு. நரேந்திர கோத்தாரியினை, இந்த இடத்தில் கட்டிடம் கட்ட அனுமதிக்கக் கூடாது எனவும், ஆலய மேலாளருக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

மேற்கண்ட அறநிலைய மேலாளரின் பரிந்துரையின் மீது, சட்டப்பிரிவு 34-ன்கீழ் நடவடிக்கை தொடரப்பட்டு, கருத்துரைகள் மற்றும் மறுப்புரைகள் கோரி அறிவிப்பு ஒரு நாளிதழிலும் மற்றும் விதிகளின்கீழ் பிரசுரம் செய்யவும் வெளியிடப்பட்டுள்ளது. இதன் மீது விசாரணை 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம் நாள் அன்று ஆணையர் முன் நடைபெற்றுள்ளது. மேலும் இந்த பரிவர்த்தனைக்கு ஆட்சேபனை தெரிவித்து திரு. கருணாகரன் என்பவர் ஒரு மனு சமர்ப்பித்துள்ளார். சட்டப்பிரிவு 34-ன் அனுமதி வழங்குவது ஆணையரின் பரிசீலனையில் உள்ளது. மேற்படி இடத்தில் திரு. நரேந்திர கோத்தாரி தொடர்ந்து கட்டிடம் கட்டுவதாக ஆணையர் கவனத்திற்கு கொணரப்பட்டது. துணை ஆணையர் தனது 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் நாள் அறிக்கையில், தான் மேற்படி இடத்தினை 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் நாள் அன்று பார்வையிட்டதாகவும், அப்போது நிலத்தில், கட்டிடம் கட்டி வருவது தெரியவந்ததெனவும், 14 கடைகள் வருகிற வகையில் தடுப்புச்சுவர்களை வைத்து, கண்ணமடிக்கும் வேலை நடைபெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார். அதன் மீது திரு. நரேந்திர கோத்தாரி மீது 16-வது சிட்டி சிவில் கோர்ட்டில் துணை



1987 நவம்பர் 18] [திரு. வி. வி. சுவாமிநாதன்].

ஆணையாளர் வழக்கு தொடர்ந்து ஓ. எஸ். எண். 6324/87-ல் ஐ. ஏ எண். 14148/87-ல் கட்டட பணிகள் எதுவும் செய்யக்கூடாதென 1987 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20 ஆம் நாள் முடிய தடையுத்தரவு பெற்றுள்ளார். வழக்கு நிலுவையில் உள்ளது. 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ஆம் நாள் மேற்படி கட்டடத்திற்கு மெட்ரோவாட்டர் நிறுவனத்திலிருந்து தண்ணீர் இணைப்பு பெறவும், மின்சாரத் துறையிலிருந்து மின் இணைப்பு பெறவும் மனு செய்துள்ளதாகத் தெரிய வந்தது. இக்கட்டட வேலை ஆணையரின் அனுமதி பெறாத திருக்கோயில் நலன்களுக்குக் குந்தகமான முறையற்ற வேலை என்பதால் மின் இணைப்பு, தண்ணீர் இணைப்பு அளிக்க வேண்டாமென மெட்ரோ வாட்டர் மற்றும் தமிழ்நாடு மின் வாரியத் தலைவர்களுக்கு 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் நாளில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது

**திரு. சைதை சா. துரைசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவர அறிக்கையை முழுமையாகப் படித்துப் பார்த்தேன். அந்த விவர அறிக்கையிலே பல சந்தேகங்களைக் கேள்வியாக நான் கேட்க வேண்டும். கேள்வியாகக் கேட்டால் பதில் தருவதற்குக் காலதாமதமாகும் என்பதால், முழுமையாக எனது அறிக்கையை, எனது புகார் மனுவைத் தருகிறேன். அது குறித்து மாண்புமிகு அமைச்சரவர்கள் விசாரணை செய்து, தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்**: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுக்கிற அந்த அறிக்கையின்மீது உரிய நடவடிக்கை குறிப்பிட்ட காலத்தில் எடுக்கப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான், அந்த புகாரினை நாளையே தர இருக்கிறேன். ஆகவே அந்தப் புகாரின்மீது எத்தனை நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்**: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, [illegible] நடவடிக்கை எடுக்கப்படும்.

[1987 நவம்பர் 18

## 3. தகவல் கோரல்.

### (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர்கள் காணாமல் போனது குறித்து.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு, ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்தேன். என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் 12 மீனவர்கள்—1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் தேதி 5 பேரும், 1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் தேதியன்று 3 பேரும், 1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் தேதியன்று 4 பேரும், ஆக 12 பேர்கள்—காணாமல் போயும், அவர்களைத் தேடுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று அரசை அணுகும் போது, 5 பேர்களுக்கு அதிகமானவர்கள் காணாமல் போனால் தான் அவர்களைத் தேடுவதற்கு ஹெலிகாப்டர் உதவி தர முடியு மென்று அரசு ஆணை இருக்கிறது. எனவே ஒருவர் காணாமல் போனால் அந்த உதவி தர முடியாது என்று சொல்லி விடுகிறார்கள். அதைத் தளர்த்தி ஒரு நபர் காணவில்லை என்று சொன்னாலும், அரசு ஹெலிகாப்டர் உதவியைத் தருவதற்கு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சரவர்கள் . . . (குறுக்கீடு) நேற்றைய தினம் பேசியது அவைக் குறிப்பில் இருக்கிறது. அமைச்சரவர்கள் நேற்று அதற்குப் பதில் சொல்லி விட்டார்கள். இப்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்ல இருக்கிறார்கள். (குறுக்கீடு). இதே பொருள் குறித்து திரு. எப். எம். இராசரத்தினம் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். முதலிலேயே அனுமதி கேட்டார்கள். அதுவும் அவைக் குறிப்பிலே வந்துவிடும். இருவரும் பேசியதாகவே கருதப்படும். (குறுக்கீடு).

**திரு. எப். எம். இராசரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் காணாமல் போய்விடுகிறார்கள் என்ற செய்தி அடிக்கடி வந்து கொண்டிருக்கிறது. தற்போது 5 மீனவர்களுக்குமேல் காணாமல் போனால்தான் ஹெலிகாப்டர் உபயோகிக்க முடியும் என்று அரசு ஆணை இருக்கிறது. [illegible] அந்த அரசு ஆணையை மாற்றி [illegible] ஒரு மீனவர் [illegible]



1987 நவம்பர் 18] [திரு. எப். எம். இராசரத்தினம்]

பிடிக்கச் செல்லும்போது காணாமல் போனால்கூட, ஹெலிகாப்டர் பயன்படுத்தப்படுமென்று அரசு ஆணை பிறப்பிப்பதோடு, குமரி மாவட்டத்தில் இதற்காக விசைப் படகு ஒன்றை ஒதுக்கீடு செய்ய அரசு முன் வர வேண்டும். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மக்களுக்குச் சேவை செய்வதில் ஏற்படக்கூடிய சிறிய ஆர்வம் அவ்வளவுதான். வேறு ஒன்றுமில்லை. (குறுக்கீடு). எழுப்பியாகிவிட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் . . . (குறுக்கீடு) உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்களுக்கு நல்ல வாய்ப்பு கொடுத்து விட்டேன். தயவு செய்து உறுப்பினர்கள் அமருங்கள். உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. அமைச்சர் அவர்களும் இப்போது பதில் சொல்ல இருக்கிறார்கள். (குறுக்கீடு)

(டாக்டர் தே. குமாரதாஸ், திரு. எஸ். ரெத்தினராஜ், திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் மற்றும் திரு. ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் எழுந்து நின்றனர்)

நீங்கள் உட்காருங்கள். உறுப்பினர் அவர்களுடைய ஆர்வம் கருதித் தான் நான் இதை அனுமதித்தேன். காலையிலே அவர்கள் வந்து கேட்டார்கள். அவர் ஆர்வம் கருதி நான் அனுமதித்தேன். ஒத்துழையுங்கள். போதும், போதும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே விரிவாகப் பதில் சொல்லியிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர்கள் காணாமல் போகிறார்கள் என்றும் தேடுவதற்கு விமானத்தை அனுப்பி அவர்களைக் கண்டுபிடிப்பதற்கு போடப்பட்டிருக்கின்ற உத்தரவை மாற்றவேண்டும் என்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே அவையில் கிளப்பியிருக்கின்றார்கள். ஐந்து பேர்கள் காணாமல் போனால்தான் விமானம் அனுப்பப்படும் என்று உத்தரவு போடப்பட்டிருந்தது. அந்த உத்தரவை மாற்றி ஒருவர் காணாமல் போனாலுங்கூட விமானம் அனுப்பவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள் என்ற செய்தியை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மற்றும் ஒரு செய்தியை மாண்புமிகு உறுப்பினர்கள் [illegible]

[திரு. ப. உ. சண்முகம்] [1987 நவம்பர் 18

தற்கு இருக்கின்றார்கள். அதைப் பற்றி கேட்பதற்குத்தான் துடிக்கிறார்கள் என்று கருதுகிறேன். இரண்டு ஸ்பீட் படகுகள் இருக்கின்றன. ஒன்று சென்னையிலேயும், மற்றொன்று தூத்துக்குடியிலேயும் வைத்திருக்கிறோம். ஏதாவது படகுகள் காணாமல் போனால் ஸ்பீட் போட்ஸ் அனுப்பித் தேடுவதற்கு என்று வைத்திருக்கிறோம். அதற்குப் பயன்படுத்த என்று இரண்டு ஸ்பீட் போட்ஸ் இருக்கின்றன. அதிலே ஒரு ஸ்பீட் போட் தூத்துக்குடியிலே இருப்பதைத் தற்காலிகமாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் இருப்பதை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு என்று நிரந்தரமாக வேண்டும் என்று அவர்கள் அதைக் கோரிக்கையாக வைத்து என் அறையிலே வந்து காலையிலே என்னிடம் கேட்டார்கள். மாவட்டத்திற்கு என்று தனியாக ஒதுக்க முடியாது. தேவைப்படுகிறபோது அங்கே அனுப்புகிறோம் என்று சொல்லியிருக்கிறேன். ஏனென்றால் கடற்கரை நீண்ட கடற்கரையாக இருக்கிறது. ஆதலால் ஒதுக்க முடியாது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு காணாமல் போனாலுங்கூட அதைக் கண்டுபிடிப்பதற்கு அரசு ஆகிறது. அப்படி வாங்குவதற்கு இயலாது. ஏற்கெனவே இரண்டு ஸ்பீட் போட்ஸ் வைத்திருக்கிறோம்.

இன்னொரு ஸ்பீட் போட் வாங்குவதைப் பற்றி அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. அதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துகொண்டு பேசிய பிறகு முடி வெடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மீனவர் ஒருவர் காணாமல் போனாலுங்கூட அதைக் கண்டுபிடிப்பதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்கும். அந்த நேரத்தில் பயன்படுத்த விமானத்தை அனுப்புவோம் என்பதையும் தெரிவித்துக்கொள் கிறேன். (குறுக்கீடு)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நான் 'தேங்க்ஸ்' தான் சொல்லப் போகிறேன். வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரும்பத் திரும்ப கேள்வி கேட்க முடியாது. இது ஒரு விசேஷ சலுகை என்று டாக்டர் குமாரதாஸ் அவர்களுக்குக் கொடுத்தேன். [illegible] கிறீர்கள். (குறுக்கீடு) அதைச் சொன்னாலும் கேட்கவில்லை



1987 நவம்பர் 18]

களா? அமருங்கள். நல்லது செய்தால்கூட பிரச்சினைதான். அமைச்சர் அவர்களை பதில் சொல்ல வைத்து உங்களைத் திருப்திபடுத்திய பிறகும்கூட பிரச்சினையை எழுப்புகிறீர்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** உங்களை நான் மனதார பாராட்டு கிறேன். இதோடு இன்னொன்று . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காணாமல் போன மீனவர்களைப் பற்றிக் கேட்கிறார்கள். அப்படி அவர் கேட்பதற்குக் காரணம் என்ன என்று எனக்குப் புரிகிறது. கூட்டுறவுத் துறையில் பதிவு செய்து இருக்கின்ற மீனவர்களுக்கு, காணாமல் போனால், மத்திய அரசி லிருந்து நிதி உதவி வாங்கி அதை அவர்களுக்குக் கொடுக் கிறோம். பதிவு செய்யாத மீனவர்களுக்கு நிதி உதவி அளிப்ப தில்லை என்று இருக்கின்றதை மாற்றி முதலமைச்சர் நிதியி லிருந்து கொடுப்பதாக முதலமைச்சர் அவர்கள் அதற்கும் சேர்த்து ஆணையிட்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக ஊர்வலம் வந்த மாணவர்கள் மீதான வழக்கு குறித்து.

**திரு. பொன் முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 12 ஆம் தேதியன்று இலங்கையிலே இன்னல்களுக்குள்ளான தமிழர்களுக்காக தங்களது கல்லூரி களுக்கு முன்னாலே கறுப்புக்கொடி ஏற்றி வைத்து ஊர்வலமாக வந்த மாணவர்களை டி-2 காவல் சாவடிக்குப் பக்கத்திலே கடுமையாகத் தாக்கி அவர்களில் 10 பேர்கள் மீது இந்திய தண்ட னைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். எனவே அப்படி வழக்குத் தொடர்ந்த காவல் துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதோடு இலங்கைத் தமிழர்களுக்கு ஆதர வாக ஊர்வலம் நடத்திய மாணவர்கள் மீது போடப்பட்ட வழக்கை வாபஸ் பெற இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய முழு விவரங்கள் அரசிடத்தில் இல்லை. இன்றையதினம் எத்தனையோ ஊர்வலங் கள் நடைபெறுகின்றன. எதற்காக நடைபெறுகின்றன என்பது கூட அல்ல. இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டு மென்ற உணர்வை வெளிப்படுத்தி பல்வேறு அரசியல் கட்சிகளும்,

மற்றவர்களும் தங்களுடைய உணர்வை ஒவ்வொரு ஊரிலும் வெளிப்படுத்தி வருகிறார்கள். எங்கே பார்த்தாலும் அமைதியாக வும், சிறப்பாகவும் அவை நடைபெறுகின்றன. இப்படி சங்கிலித் தொடர் மற்றும் கூட்டங்கள் எல்லாம்கூட ஒழுங்காக வும், சிறப்பாகவும் நடைபெற்று வருகின்றன. ஆகவே, ஊர்வலத் தில் தடியடி நடத்தித்தான் தீர வேண்டும் என்பது போலீசா ருடைய கொள்கை அல்ல. எவ்வளவோ ஊர்வலங்கள் எல்லா ஊர் களிலும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. மதுரையிலே என்ன ஏற்பட்டது, அதற்கு என்ன காரணம் என்பது தெரிய வேண்டும்.

அந்தக் காரணம் இப்போது நம்மிடத்தில் இல்லை. தடியடி நடத்த வேண்டிய அளவில் என்று சொன்னால், வன்முறை அல்லது வேறு செயல்கள் நடைபெற்றால்தான் போலீஸ் தலை யிட்டிருக்கும். என்ன நடைபெற்றது என்று திட்டவட்டமாக இப்போது சொல்ல முடியாது. விசாரித்துத்தான் சொல்ல வேண்டும். வழக்கு தொடரும் அளவுக்கு என்ன நடைபெற்றது என்பதையும், வழக்கிலே தங்களுடைய நிலைமையை வாதாடி எடுத்துச்சொல்லி நீதி பெறவும் வாய்ப்பு இருக்கிறது. திருந் தாவும் முழுமையாக ஆய்ந்து பார்த்து, மாண்புமிகு உறுப்பினர் பிரச்சினையை எழுப்பியிருப்பதன் காரணமாக முழு விஷயங் களையும் ஆராய்ந்துப் பார்த்து, அதன்மீது எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை ஆராய்ந்துப் பார்த்து, தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதையும், அதனுடைய நிலைமைகளைப் பார்த்து எடுக்கக் கூடியவைகளை அரசு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அவையில் வைக்கப்பெறாதது குறித்து.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப விரும்பு கிறேன். இங்கே அரசு உறுதிமொழிக் குழுவின் ஈர்த்தாவது அறிக்கை வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள், ஆனால் அது வைக்கப்படவில்லையே, அது பற்றி விளக்கம் பெற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழு வின் தலைவர் அறிக்கையை அவையில் அளிக்கும்போது உறுப் பினர்களுக்குக் கொடுக்கப்படும்.



(ஈ) எடுத்துக் கொள்ளப்பெறாத கவன ஈர்ப்புத் தீர்மானங் களுக்கான பதில்கள்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே எடுக்கப்படாத கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்குப் பதில்கள் வந்த உடன், உறுப் பினர்களுடைய இல்லங்களுக்கு அவை அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அறிவிப்புகள்

### (அ) சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு இச்சட்ட மன்றப் பேரவையிலிருந்து 6 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்ப தற்கான நியமன தாள்கள் கோரப்பட்டன. இதற்கு 13 உறுப் பினர்கள் தங்கள் நியமனத் தாள்களைக் கொடுத்துள்ளார்கள். 17—11—1987 ஆம் நாள் 3 மணிக்குள் நியமனத் தாள்களைத் திரும்பப் பெறுகிறவர்கள், திரும்பப் பெற வேண்டுமென்ற அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இதுவரையிலும் ஒருவரும் தங்களது நியமனத் தாள்களைத் திரும்பப் பெறவில்லை. உறுப் பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு 13 உறுப்பினர்களிடமிருந்து நியமனத் தாள்கள் வந்துள்ளதாலும், இன்று பேரவையின் கூட்டம் இறுதி நாளாக இருப்பதாலும், இதற்கான தேர்தல் அடுத்த பேரவை கூட்டத் தொடரில் நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) பொதுக் கணக்குக் குழு

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் கீழ்க்காணும் அறிக்கை களை குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்:—

“(1) 1978-79 ஆம் ஆண்டிற்கான [illegible] பெற்ற [illegible] ஒதுக்கீடுகளிலும் [illegible] மானியங்களிலும், சட்டப்பேரவை [illegible] குழு (1982-84) [illegible] யாகச் செலவழித்த தொகை பற்றி

இருபத்தாறாவது அறிக்கையில் (ஏழாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி மேற்படி குழுவின் அறுபத்தி மூன்றாவது அறிக்கை.

(2) 1979-80 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாகச் செலவழித்த தொகை பற்றி குழு (1984-85) அளித்த முப்பத்தி இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி மேற்படி குழுவின் அறுபத்தி நான்காவது அறிக்கை."

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**திரு. கே. குப்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கைகளை குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்:

(1) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் செயல்முறை குறித்து பொது நிறுவனங்கள் குழு (1983-84) அளித்த நாற்பத்து மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் ஐம்பத்தி ஏழாவது அறிக்கை.

(2) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1978-79 ஆம் ஆண்டிற்கான (வணிகம்) அறிக்கையின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1982-83) முப்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் ஐம்பத்தெட்டாவது அறிக்கை.

### (இ) அரசு உறுதிமொழிக் குழு.

**திரு. சி. பழனிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் கீழ்க்காணும் அறிக்கையை குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்:



ஐந்தாவது (எட்டாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை.

அறிக்கையை அச்சிட்டு வழங்குவதற்கு தேவையான அவகாசம் இல்லாத காரணத்தால் ஐந்து நகல்கள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்ற நூலகத்தில் வைக்கப் பெற்றுள்ளன. அறிக்கை அச்சிடப்பெற்ற பின்னால் அச்சிடப் பெற்ற பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப் படும்.

### (ஈ) மனுக்கள் குழு.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனுக்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கைகளை குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்:

(i) நான்காவது அறிக்கை;

(ii) ஐந்தாவது அறிக்கை.

### (உ) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கையை குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்:

நான்காவது அறிக்கை.

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு என்ற முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

* 16—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அடுத்து இருக்கின்ற இரண்டு சட்ட முன்வடிவுகளும் நிதி ஒதுக்கம் பற்றியவைதான்; அவற்றின் எண்கள்தான் மாறியிருக்கின்றன. ஆகவே, அவற்றையும் சேர்த்து, மொத்தமாக விவாதிக்க அனுமதிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்று பில்களையும் சேர்த்து விவாதித்துவிட்டு, நிறைவேற்றும்போது தனித்தனியாக நிறைவேற்றிக் கொள்ளலாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவுகளை நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த சட்ட முன்வடிவுகளிலே எல்லாத் துறைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டுமென்பது இந்த நிதி ஒதுக்க மசோதாக்களின் நோக்கம். எனவே தங்களுடைய அனுமதியோடு ஏற்கெனவே நிதி ஒதுக்க சட்டங்கள் மூலம் பல் வேறு துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணம் எப்படி சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி மேலும் தவறுகள் வராமல் இருப்பதற்கு இந்த அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்கிற உரிமை எதிர்க்கட்சிகளுக்கு உண்டு. அந்த அடிப்படையிலே உங்கள் மூலம் மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்களின் கவனத்திற்கு சில விவரங்களைக் கொண்டுவர விரும்புகிறேன்.

* * *

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர். ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட் என்பது பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியின் விவாதத்திற்கு உட்பட்டது. அதை அடிப்படையாக வைத்து குற்றச்சாட்டு சொல்வது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவரவர்களே, கடந்த பத்து ஆண்டுகளாக இந்த சபையிலே வைக்கப்பட்ட ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட் சம்பந்தமாக அரசாங்கம் பதில் சொல்லாத காரணத்தாலும் ஆடிட் ரிப்போர்ட்டால் பதில் வரவில்லை என்ற



குறிப்பு இருப்பதாலும் அவையில் வைக்கப்பட்ட ஆடிட் ரிப்போர்ட் இந்த அவையினுடைய சொத்து என்பதாலும் அதன் மீது அரசாங்கத்திடம் சில கேள்விகள் கேட்க மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையிலே வைக்கப்படுகிற தாள்களின் மீதும் விவாதம் என்றாலும்கூட விதி 31-ன் கீழ் நோட்டீஸ் கொடுத்துத்தான் அனுமதி பெற வேண்டும். மேலும் அதைத் தவிர அரசு பதில் சொல்ல வேண்டுமென்று வற்புறுத்துகிற வாய்ப்பு பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலே இருக்கிற எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் இருக்கிறது. அப்போதுதான் தெளிவான விளக்கத்தைப் பெற முடியும். எனவே இந்த நிலையில் இங்கே ஒரு குற்றச்சாட்டாகச் சொல்வது முறையா என்பதற்காகத்தான் தங்கள் தீர்ப்பை நான் எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை பி.ஏ.சி.-யிலே விவாதிக்கலாம்.

**திரு. அ. ரகுமான்கான்** பேரவைத் தலைவரவர்களே, தங்களைப் பார்த்து நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் இதுவரையில் 10 ஆண்டுக் காலத்தில் நாம் தொடர்ந்து ஆடிட் ரிப்போர்ட் அடிப்படையில் எல்லாத் தரப்பிலும் பேசி இருக்கிறோம். ஆனால் புதியதாக ஒரு உரிமை பறிக்கப்படுகிறது. இன்னொன்றையும் நான் தெரிந்துக்கொள்கிறேன். ஆடிட் ரிப்போர்ட் என்ற வார்த்தையை எடுத்து விடுங்கள். ஆடிட் ரிப்போர்ட்டிலே இருந்து சொல்கிறேன் என்ற அந்த வாசகத்தை எடுத்துவிட்டு இப்போது நான் சில விளக்கங்களை அரசிடமிருந்து கேட்கிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** ** * இதுபற்றி பி.ஏ.சியிலே வந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து விசாரிக்க முடியும். இப்போது அமைச்சரிடத்திலே அந்த விவரங்கள் எல்லாம் கையிலே இருக்காது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[1987 நவம்பர் 18

**திரு. அ. ரகுமான்கான்**: தலைவர் அவர்களே, பதில் சொல்ல வேண்டியவர்கள் அமைச்சர்கள். எங்களுக்குக் காலம் இல்லை, எனவே விசாரித்துச் சொல்கிறோம் என்பது வேறு விவகாரம். ஆனால் அதிகாரிகள்தான் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள். எனவே கமிட்டியிலே கேட்டுக் கொள்ளுங்கள் என்று சொன்னால் சட்டசபை கூட்டப்பட வேண்டிய அவசியமே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: கமிட்டியிலே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து * * என்பதை விசாரிக்கலாம். இப்போது கேட்டால் பதில் வராது. எனவே பி.ஏ.சியிலே எழுப்பி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து விசாரிக்கலாம்.

**திரு. அ. ரகுமான்கான்**: தலைவர் அவர்களே. கமிட்டியிலே விசாரிப்பது கமிட்டியோடு போய்விடும். சபைக்கு வந்ததற்குப் பிறகு அரசாங்கம் பதில் சொல்ல முயற்சிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன் நீங்கள் சொல்கிற விளக்கமும் எனக்குப் புரிகிறது. அதிகாரிகள் உதவி இருந்தால்தான் அமைச்சர் பதில் சொல்ல முடியும். அதற்கான குறிப்புகள் இல்லை என்று சொன்னால் இங்கே பேசப்படுவதன் மூலம் அந்தக் குறிப்புக்களை எழுதி வைத்துக்கொண்டு அதற்கான பதில்களை உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்தாலும் சரி, அல்லது சபையிலேயே வைத்தாலும் சரி, அறிக்கை மூலம் வைத்தாலும் சரி நாங்கள் அதை வரவேற்கத் தயாராக இருக்கிறோம். This is the proper forum to raise our questions. ஆகவேதான் இங்கே எழுப்புகிறோம். எனவே தகவல்களை அதிகாரிகள் மூலம் பெற்று அரசாங்கம் பதில் சொல்லட்டும். இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே . . . . .

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் எழுதித் தராமல் அவராக்வே இங்கே சொன்ன அந்தக் குற்றச்சாட்டை சபைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



1987 நவம்பர் 18] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

** சொல்லியிருக்கிறார். அதை நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பி. ஏ. சியிலே எழுப்ப வேண்டுமென்று சொன்னேன். ஆகவே அது அவைக் குறிப்பிலே இருக்கத் தேவையில்லை. மீண்டும் பி. ஏ. சி. யிலே முடிவெடுத்த பிறகு அவையிலே அது வைக்கப்படும். அப்போது இதுபற்றி விவாதித்துக் கொள்ளலாம். ஆகவே, இன்றைக்குத் தேவையில்லை. அதனை நீக்கும்படி நான் உத்தர விடுகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்**: பேரவைத் தலைவர் அவர்களே, இது ஜனநாயக உரிமையைப் பறிக்கிற ஒன்று. நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆடிட் ரிப்போர்ட்டிலே உள்ளதை

* * *

இதோ ஆடிட் ரிப்போர்ட். நான் கேட்கிறேன். இந்த ரிப்போர்ட்டைப் பற்றி சபையிலே பேசலாமா? பேசக் கூடாதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: பேரவைத் தலைவர் அவர்களே, ஆடிட் ரிப்போர்ட்டிலே குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கலாம். அதற்குப் பதில் வரவில்லை என்று சொல்லியிருக்கக் கூடும். ஆனால் ஆடிட் ரிப்போர்ட்டிலே ** என்றோ இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இல்லாததைக் குறிப்பிட்டுக் குற்றம் சாட்டுகிறார். அது முறையல்ல. அப்படிப் பேசித்தான் தீர வேண்டும் என்று சொன்னால் அதேபோல் பதில்தான் திரும்ப வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: விதி 191.

If an Appropriation Bill is in pursuance of a supplementary grant in respect of an existing service the discussion shall be confined to the items constituting the same and no discussion shall be raised on the original grant nor the policy underlying it save in so far as it may be necessary to explain or illustrate a particular item under discussion.

அது இதிலே வரவில்லை. இந்த ஆடிட் ரிப்போர்ட் இதிலே வரவில்லை. விதி 191-ல் வரவில்லை.

---

(**) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

நடைமுறையில் இருக்கும் ஓர் பணிக்கான துணை மானியக் கோரிக்கை ஒன்றின் தொடர்பான ஒரு நிதி ஒதுக்க சட்ட முன் வடிவாயின், விவாதம் அதற்குள் அடங்கிய இனங்கள் பற்றியதாக மட்டும் இருத்தல் வேண்டும். ஆகவே இது அதில் வரவில்லை. மேலும் விவரத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட இனத்தை விளக்கு வதற்கு அல்லது எடுத்துக் காட்டுவதற்கு அவசியமாக இருந்தால் அன்றி மூல மானியம் அல்லது அதிலே ஒட்டிய கொள்கை பற்றிய விவாதம் எதுவும் எழுப்புதல் கூடாது, என்பது விதி 191. ஆகவே இதிலே வரவில்லை.

**திரு. அ. ரகுமான்கான்** : பேரவைத் தலைவர் அவர்களே, அப் பிரோப்பிரியேஷன் என்ற ஹெட்ஸ்-ஸை எடுத்து நீங்கள் பார்ப்பீர் களேயானால் * * ஒவ்வொரு துறைக்கும் கல்வி, விவசாயம், மீன் வளம், நிதித்துறை என்று பல்வேறு துறைகளுக்கும் ஹெட்ஸ் கள் இருக்கின்றன. சில ஹெட்ஸ்களிலே ஒதுக்கீடு உண்டு. சில ஹெட்ஸ்களிலே ஏற்கெனவே ஒதுக்கீடு உண்டு. ஏற்கனவே ஒதுக் கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து தான் புதிய ஒதுக்கீடும், சாண் டரும் இருக்கின்றன. இவையெல்லாம் அப்பிரோப்பிரியேஷன் சம்பந்தப்பட்டதுதான். அதனுடைய தொடர்புடையதுதான். அந்த அடிப்படையில்தான் நான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப்போது விவாதிப்பது பிரசன்ட் அப்பிரோப்பிரியேஷன் மேலே நடைபெறுகிறது.

This is for the present appropriation for the current year. You are referring to past appropriation.

**திரு. அ. ரகுமான்கான்** : பேரவைத் தலைவர் அவர்களே, உங்களை நான் கேட்பது எல்லாம், இந்த அப்பிரோப்பிரியே ஷனுக்கும், போன அப்பிரோப்பிரியேஷனுக்கு ஏற்பட்ட கதி மாதிரி ஏற்பட்டு விடக்கூடாது. ** இதிலே அது கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகவே இப்போது அப்பிரோப்பிரியேஷன் பண்ணுவது மிஸ்-அப்பிரோப்பிரியேஷன் என்று ஆகிவிடக் கூடாது * * எனவே தான் கடந்த கால உதாரணங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன



**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மிஸ்-அப்பிரோப்பிரியேஷன் என்ற வார்த்தை கூட இங்கே வராது. Misappropriation means taking of money for one's own use. ஆகவே இதை எடுத்துக் கொள்வது தனி மனிதனுக்கு. That word will not apply in the case of the Government.

**திரு. அ. ரகுமான்கான்** : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நேரம் போகிறது. * * * ஆகையினால் உங்களிடத்திலே கேட்கிறேன். 10 வருஷமாக இங்கே பேசிக் கொண்டிருக்கிறோம். நான் பேசுவது இர்ரெல வண்ட் என்று சொன்னால், நீங்கள் அதை அவைக்குறிப்பிலே யிருந்து நீக்குவது பற்றி எனக்கு கவலை இல்லை. ஆகவே உங்களைக் கேட்கிறேன். ஆடிட் ரிப்போர்ட் என்பதை சட்ட சபையிலே சுட்டிக் காட்டக் கூடாதா? ஏற்கனவே அப்பிரோப் பிரியேட் பண்ணியது என்ன ஆனது என்று சபையிலே கேட்கக் கூடாதா? இன்னும் சொல்லப் போனால், இதுதான் சட்ட சபை யின் விதிகளா இல்லையா என்பதை, ஏற்கெனவே நீங்கள் நீக்கி விட்ட காரணத்தினாலே நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடிட் ரிப்போர்ட்டிலே, இந்த கணக்குகளை கொடுக்க வில்லை; இதற்கான தஸ்தாவேஜுகளை அதிகாரிகள் கொடுக்க வில்லை என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அதைக் கொடுத் தார்களா கொடுக்கவில்லையா, இன்னும் கொடுக்கிற வாய்ப்பு இருக்கிறதா என்று நிர்ப்பந்திக்கிற முழு உரிமையும் பொதுக் கணக்குக் குழு பெற்றிருக்கிறது. ** என்று அவரே ஒரு கன்குளுஷனுக்கு வருவது, பொதுக் கணக்குக் குழுவினுடைய உரிமைகளை பறிக்கிற வகையில் இருக்கிறதா இல்லையா என் பதைப் பற்றி உங்களிடம் ஒரு தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப்போது ஒதுக்கியிருக்கிற கரண்ட் ஒதுக்கீடுகளைப் பற்றி விவாதிப்பதற்காகத்தான் இந்த விவாதம்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1987 நவம்பர் 18

Past appropriation need not be discussed here. It is a post-mortem. Postmortem is done by the Public Accounts Committee நானும் பார்க்கிறேன். 20 வருடமாக உள்ள கணக்குகளைப் பார்க்கும்போது அவ்வளவு இர்ரெகுலாரிட்டியும் அப்படியேதான் போகிறது. அதிகாரிகள் தப்பித்துக் கொண்டுதான் போகிறார்கள். பி.ஏ.சி. கணக்குகளை எல்லாம் எடுத்துப் பாருங்கள். அதிலே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து எப்போதாவது யாரிடமாவது வசூலித்திருக்கிறார்களா இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அப்படிச் சொல்லவில்லை. உங்கள் காலத்திலேயிருந்து, காங்கிரஸ் காலத்திலேயிருந்து, தொன்றுதொட்டு பி.ஏ.சி. ரிப்போர்ட்டை படித்துப் பாருங்கள். இதுவரையில் வசூல் பண்ணியதாகவே இல்லை. Nobody has put an iron hand on it.

திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல காலமாகத் தொடர்ந்து இந்தத் தவறுகள் நடைபெற்றுக் கொண்டே வந்துக் கொண்டிருந்திற காரணத்தினாலே அந்தத் தவறுகள் திருத்தப்படக் கூடாது அல்லது திருத்தப்பட மாட்டாது என்ற உணர்வுக்கு அல்லது முடிவுக்கு நீங்கள் வந்திருக்கிறீர்களா என்பதை நான் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்காகத்தான் சொன்னேன். பி.ஏ.சி. என்றால் போஸ்ட் மார்ட்டம் என்று சொன்னேன். போஸ்ட் மார்ட்டத்திற்கு பிறகு ஃபைண்டிங்கை வைத்து என்ன செய்வது?

(முற்பகல் 11-00)

திரு. அ. ரகுமான்கான் : I want to know whether this Hon. House is competent to discuss the Report which has been placed on the Table.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைப்படி நீக்கப்பெற்றன.



1987 நவம்பர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'காம்பிடென்ட்' என்ற வார்த்தையே கிடையாது. ஹவுஸ் சுப்ரீம் என்று ஆயிரம் தடவை சொல்லியிருக்கிறேன். The house can do anything. இங்கே கேட்பது பி.ஏ. சி. பற்றி, நீங்கள் பழையதையெல்லாம் படித்துச் சொல்லுங்கள். வேண்டுமானால் ஒரு நாள் விவாதமே வைப்போம். இத்தனை ஆண்டுக் காலமாக நடைபெற்ற பி.ஏ.சி. யிலே என்ன பண்ணியிருக்கிறீர்கள் என்று பார்ப்போம.

திரு. அ. ரகுமான்கான் : This House is the Supreme body. That is why I have decided to bring all these facts to the notice of the Members of the House as well as the Cabinet, in the interest of the public. There is no different intention. ஆகவே நான் உங்களை கேட்பதெல்லாம் . . . .

THE HON. VEDASANDUR THIRU V. P. BALASUBRAMANIAN (Deputy Speaker) : The Audit Report is not a conclusive decision. It requires further scrutiny by the Public Accounts Committee. Sir, I want a ruling in this regard. He cannot come to any conclusion. That is my contention.

Thiru K. MANOHARAN: Then, what for is this Report?

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : அதற்கு பி.ஏ.சி. இருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஆடிட் ரிப்போர்ட்டில் மேற்கொண்டு விளக்கங்கள் கேட்டிருக்கிறார்கள். அந்த விளக்கங்களை அரசாங்கம் கொடுக்கும்.

திரு. அ. ரகுமான்கான் : அதை எப்போது கொடுக்கும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எப்போது கொடுக்குமென்றால், அதைக் கொடுக்காமல் போக முடியாது. அதுவரையில் ஆடிட் ரிப்போர்ட்டில் அப்ஜெக்ஷன்ஸ், ஆட்சேபணைகள் இருந்து கொண்டே இருக்கும். மறைந்து விடாது. அந்த ஆட்சேபணைகளுக்கு பதில் சொல்லியே தீரவேண்டும். அவற்றை எடுத்து விட முடியாது. எப்போதாவது ஒரு காலக்கட்டத்தில் அந்த ஆட்சேபணைகளுக்கு பதில் சொல்லியே தீரவேண்டும். அதைப்பற்றி விவாதிப்பது கூட குற்றமல்ல. நான் கேட்டுக் கொள்வதெல்லாம், ஆடிட் ரிப்போர்ட்டின் அத்தாட்சியை

வைத்துப் பேசும்போது அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த வார்த்தையைத்தான் பயன்படுத்த வேண்டும். அதற்கு அப்பால் போய் தனக்கே உரிய வார்த்தைகளைப் பயன்படுத்திக் கொண்டு போனால் அது முறையல்ல. அதேவகையில் பதில் திருப்பி வரும் என்று தான் திரும்பவும் சொல்கிறேன்.

**திரு. கி. மனோகரன் :** தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்கள் பேசும்போது அது திருத்தப்படும். நிச்சயமாகத் திருத்தப்படுமென்று எல்லாம் சொன்னார்கள். இதுவரையில் திருத்தப்படவில்லை என்று சபாநாயகர் சொல்கிறீர்கள். யாரை நம்புவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே நீங்கள் என்னை விவாதத்திற்கு இழுக்கிறீர்கள். இது நீங்கள் பேசவேண்டியது. நீங்கள் கேள்வி கேட்டு அவர்கள் பதில் சொல்ல வேண்டியது. அவர்கள் சொல்லாததால்தான் நான் சொல்கிறேன். Only to apprise the facts before the House தான் நான் சொன்னேன். என்னை இழுப்பதாக இருந்தால் இதெல்லாம் நான் பேசமாட்டேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது ஆட்சேபணைகளுக்குப் பதில் அரசாங்கம் கொடுத்தாக வேண்டுமென்று சொன்னேனே தவிர வேறொன்றும் அல்ல. சபாநாயகர் அவர்கள் அதைப்பற்றி சொல்லவில்லை. அவர் வேறொரு விவகாரத்தைச் சொன்னார். அது வேறு விவகாரம். ஆட்சேபணைகள் எழுப்பப்பட்டால் அதற்கு அரசாங்கம் நிச்சயமாக பதில் கொடுத்துத் தான் ஆகவேண்டும். நிதியமைச்சராக இருந்த அவரே திருப்பி கேட்கிறார் என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, * * ஆடிட் ரிப்போர்ட் பற்றியெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றியெல்லாம் அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளும். * *

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க ... நீக்கப்பெற்றன.





**டாக்டர் கே. சௌரிராஜன் :** தலைவர் அவர்களே, பொதுக் கணக்கு குழுவினுடைய அறிக்கை இப்போதுதான் அவைக்குத் தரப்பட்டிருக்கிறது. இதைப்படித்து விட்டு அவசியமானால் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் கேட்டால், நீங்கள் அனுமதி வழங்கினால் அதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். அதிலே என்ன இருக்கிறது என்பதை நாங்கள் எல்லாம் இன்னும் படிக்கவே இல்லை. ஒருவேளை மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்கள் ஏற்கனவே அந்தக் குழுவில் இருக்கிறாரோ. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆடிட் ரிப்போர்ட் அது பி.ஏ.சி., ரிப்போர்ட் அல்ல.

**Dr. K SOWRIRAJAN:** The Audit Report is not a conclusive thing. The Government can aldays answer the points raised in the Audit Report. After the Government has given its reply, it can be taken up for discussion. Simply because a charge has been made in the Audit Report, it does not become final and it does not become an authority. We have not heard the other side, namely, the side of the Government. Before hearing the Government, how can we come to a conclusion? How can we take it as a charge before the Government has given its replies to the Audit Report?

ஒவ்வொரு முறையும் ஆடிட் ரிப்போர்ட் வருகிறபோது, the Government always gives its explanation. அந்த எக்ஸ்ப்ளனேஷன் கொடுக்காமல் தாங்களே முடிவு கொடுப்பது என்பது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** I quote from Koul and Sakhder—page 386: "Normmally, no question on the Audit Report is permitted to be raised in the House until the Public Accounts Committes has considered the Report." We have not considered the Report.

**திரு. அ. ரகுமான்கான் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆடிட் ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிற தகவல் இங்கே சபையிலே வைக்கப்பட்டிருக்கிறது. அதை அப்படியே திருப்பி வாசிக்க எனக்கு உரிமை உண்டு. ஆகவே இங்கே பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொன்றை நான் இந்த அரசாங்கத்தின் மூலம் தகவலாகப் பெற விரும்புகிறேன். உங்களுக்கெல்லாம் தெரியும். 1980-ம் ஆண்டு 100 டன் எடையுள்ள டெஸ்ட்ட்ரெயிலர், பாலம் பலமானதாக இருக்கிறதா . . . .

**மாண்புமிகு திரு. வே. சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்களிடம் ஒரு தீர்ப்பை எதிர்பார்த்தேன். இது இன்னும் அக்கவுன்ட்ஸ் கமிட்டியினுடைய ஸ்குருட்டினிக்கு வரவேண்டும். அப்படி வருகிறபோது நான் அரசாங்கத்திற்குப் பதில் சொல்வதற்கான வாய்ப்பிருக்கிறது. இந்த நேரத்தில் திரு. ரகுமான் கான் அவர்கள் ஒரு தீர்ப்பை உங்களிடம் கேட்கிறார்கள், கேன் ஐசைட் இட், அதைச் சொல்ல முடியுமா என்று. பி.ஏசி-க்குப் போவதற்கு முன்பு ஆடிட் ரிப்போர்ட்டைப் பற்றிச் சபையிலே பேசவே கூடாது, அப்படிப் பேசினால் அதை அவைக்குறிப்பிலேயிருந்து எடுப்போம் என்று 20—5—1987 அன்று மேற்கு வங்காளத்தினுடைய சபாநாயகர் மாண்புமிகு ஹலீம் அவர்களே தீர்ப்பு அளித்து, அதை ஏற்க மறுத்த ஒரு உறுப்பினரை வெளியேற்றிருக்கிறார். (குறுக்கீடுகள்).

THIRU A. RAHMANKHAN: In Delhi also . . . .

Mr. SPEAKER: Each House is different. This House is supreme.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது துணை மானியக் கோரிக்கைகளைப் பொறுத்த ஒதுக்கீடு மசோதா. ஏற்கனவே வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட செலவினங்களுக்கு மேலாக இந்த அவையினுடைய அனுமதியைப் பெறாமல் இடையிலே நடைபெற்ற செலவினங்களுக்கு இந்த அவையினுடைய அனுமதியைப் பெறுவதற்காகத்தான் துணை மானியக் கோரிக்கை வருகின்றன. இந்தத் துணை மானியக் கோரிக்கையில் சொல்லப்பட்டவைகள் அத்தனையும் நடைபெற்று முடிந்த செலவுகள். ஆகவே பட்ஜெட் மாதிரி எதிர்காலச் செலவுகள் அல்ல. பட்ஜெட்டிலே 1987-88-க்கு என்று சொல்லி, ஓர் ஆண்டு காலத்திற்கு எந்தெந்தத் துறைகளிலே எவ்வளவு செலவழிக்கப் போகிறோம்





என்று போடுகிறோம். துணை மானியக் கோரிக்கை என்பது, ஏற்
கெனவே இடையில் நடைபெற்றவைகளுக்காக இந்த அவையி
னுடைய முழு அனுமதியையும் பெறுவதற்காக வைக்கப்படுகின்
றவை. இவைகளைப் பொறுத்து ஏற்படுகின்ற செலவுகளுக்கு நிதி
ஒதுக்கீடு வேண்டும் என்று கேட்கிறோம். இதைப்பற்றிப் பேசு
கின்றபோது, ஒதுக்கீடு செய்யப்பட்ட இனங்களைப் பற்றிப் பேச
வேண்டுமே தவிர, 1980-லே நடைபெற்ற விவரங்களை இங்கே
கொண்டு வந்து பேசுவது பொருந்தாது. இந்த அவையின் முன்
ஏராளமான ஏடுகள் பல்வேறு வகைகளில், பல்வேறு நிலைமை
களில் வைக்கப்படுகின்றன. அவைகள்பற்றி எல்லாம் உரிய
பொழுதில், உரிய நோக்கில், உரிய வகையில், உரிய முறையில்
விவாதிப்பதற்கு இடமுண்டு. ஆகவே, வைக்கப்பட்டுவிட்ட
காரணத்தாலே அதைப்பற்றி எப்பொழுதும், எந்த நேரத்திலும்,
எப்படியும் பேசலாம் என்பதல்ல. இதைப்பற்றித்தான்
மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களும் பேரவைத் தலைவர்
அவர்களும் குறிப்பிட்டார்கள். ஆகவே இந்தத் துணை
மானியக் கோரிக்கையின் மீது சொல்ல வேண்டிய கருத்துக்
களைச் சொன்னால், நான் பதில் சொல்ல முடியும். இல்லாவிட்
டால், அதற்கு பதில் சொல்ல இயலாது. வேறு வகையிலேதான்
பேச்சு போகும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொதுக் கணக்குக் குழு
இதுபற்றி விவாதிக்க இருப்பதாலும், விதி 191 இதைப்பற்றிக்
குறிப்பிட்டுச் சொல்வதாலும், பொதுக் கணக்குக் குழுவில்
விவாதிப்பதற்கு முன், ஆடிட் ரிப்போர்ட்டில் குறிப்பிட்டுள்ள
தைப் பற்றி சபையில் விவாதிக்கக்கூடாது என்று 'கவுல் அன்ட்
ஷக்தரில்' தெளிவாகச் சொல்லியிருப்பதாலும் இந்தக் குற்றச்
சாட்டுகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்

**திரு. சோ. மா. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்
களே, ஆடிட் ரிப்போர்ட்டை வைத்து பேசக்கூடாது என்று
சொல்கிறீர்கள். ஆடிட் ரிப்போர்ட்டை வைத்து பார்லிமெண்
டிலே கூடப் பேசியிருக்கிறார்கள் . . . அதற்கு உடனடியாக
பதிலைச் சொல்லாமல் . . .

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** என்னுடைய தீர்ப்புக்கு மேலே விவாதிப்பது முறையல்ல. நாம் எந்த மன்றத்தையும் பின்பற்ற வேண்டிய நிலைமையில் இல்லை. This House is sovereign.

***திரு. அ. ரகுமான்கான் :*** பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்களிடமிருந்து மிகத் தெளிவாகக் கேட்க விரும்புகிறேன். இங்கே இந்த மேசையிலே வைக்கப்பட்டிருக்கிற பல்வேறு அறிக்கைகள், இன்குளூடிங் ஆடிட் ரிப்போர்ட் பற்றி, நாங்கள் பேசுகிற போது அவைகளை ரெபர் செய்யலாமா, ரெபர் செய்யக்கூடாதா?

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** கடந்த கால குற்றச்சாட்டுகளைக் குறித்து, கடந்த கால செலவினத்தைக் குறித்து, இன்றைக்குக் கொண்டு வரப்பட்டு இருக்கக்கூடிய நிதி ஒதுக்க மசோதாவில், இந்த ஆண்டு செலவினத்தோடு பேசி விவாதிப்பது சரியல்ல, அது முறையல்ல. (குறுக்கீடு). அவை மேசை மீது வைக்கப்பட்ட அத்தனை ஏடுகளைப் பற்றியும் நாம் விவாதிப்பது கிடையாது. சில ஏடுகளைப் பற்றி விவாதிக்கவேண்டும் என்றால் கூட, உதாரணத்திற்குச் சொல்கிறேன், பெரிய பெரிய குழுக்கள் கொடுக்கக்கூடிய அறிக்கைகள் மீது ஒரு விசேஷ விவாதம் தேவை என்றால், அலுவல் ஆய்வுக் குழுவிலே விவாதித்த பிறகுதான் இங்கே கொண்டு வருவது வழக்கம்.

**Thiru PON. MUTHURAMALINGAM :** Can I refer to or quote from a matter or reference from the papers placed on the table of the House. I request to be enlightened on this.

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** பி.ஏ.சி.-க்குப் போனபிறகு தான் இந்த அவையிலே அதைப்பற்றி விவாதிக்க முடியும். பி.ஏ.சி.-யிலே வைத்த பிறகுதான் . . . (குறுக்கீடு).

(முற்பகல் 11-10)

***திரு. அ. ரகுமான்கான் :*** Whether I can refer it or not?

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** This is not a final document. It is only an observation in the Audit Report. The P.A.C. is going to examine the Audit Report.



***திரு. அ. ரகுமான்கான் :*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் கற்றறிந்த வழக்கறிஞர். தங்கள் கவனத்திற்கு ஒன்றை கொண்டு வருகிறேன். உங்களுக்குத் தெரியும், பி.ஏ.சி. கமிட்டியாக இருந்தாலும் மற்ற கமிட்டிகளாக இருந்தாலும் அங்கே எல்லா விசாரணைகளும் நடந்து அறிக்கைகளை இங்கே சமர்ப்பிக்கிறார்கள். ஆடிட் ரிப்போர்ட்டைப் பொறுத்தவரையில், ஒரு தனி இண்டிபெண்டண்ட் அமைப்பு தன்னுடைய ரிப்போர்ட்டைத் தருகிறது. அதை அரசு வாங்கி, உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளுங்கள் என்று மேசையில் வைக்கிறார்கள். பிறகு அது இந்த சபையினுடைய ப்ராப்பர்ட்டியாகி விடுகிறது. இந்த சபையினுடைய ப்ராப்பர்ட்டியாகி * * சபையிலும் அது இருப்பதாகத்தான் பொருள். அதற்குப் பிறகு அதை நீக்க வேண்டும் என்று சொல்லுவது எப்படி முறை?

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** இந்த ஆடிட் ரிப்போர்ட்டை இது சரியா தவறா என்று ஆடிட் செய்வதே பி.எ.சி. தான் ஆகவே, it is not a sacred document. This Audit Report is not a final document. It is not a sacred document and it is not a Judgment.

(குறுக்கீடு) நான் பொதுவாகச் சொல்லுகிறேன். பி.ஏ.சி.-யில் விவாதிக்கப்பட்ட பிறகுதான் பி.ஏ.சி., முடிவுக்கு வந்த பிறகு தான் அந்த ரிப்போர்ட் சரியா? தவறா? என்று அங்கே பதில் சொல்லி இந்த அவைக்குத் தெரிவிக்க முடியும். அதுவரை இது நிலுவையில்தான் இருக்கிறது.

***திரு. பொன் முத்துராமலிங்கம் :*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அவையில் வைக்கப்பட்டுள்ள இந்த ஆவணங்களில் உள்ள சாரத்துக்களை நாங்கள் விவாதிப்பதற்காக எடுத்து கையாளலாமா கையாள முடியாதா?

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1987 நவம்பர் 18

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். தணிக்கை அறிக்கையைப் பொறுத்தவரையிலும் அதை பி.ஏ.சி. என்பது இந்த அவையினுடைய அவையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழு. அந்தக் குழுவுக்கு இந்த அவைதான் அதிகாரம் அளித்து இருக்கிறது. அது முடிவு செய்கிற வரைக்கும் அதைப்பற்றி விவாதிக்கக் கூடாது என்று தெளிவாக இருக்கின்ற தன்மைகளை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். (குறுக்கீடு) என்னைப்பேச விடுங்கள். இந்த அவையில் மேசையின் மீது வைக்கப்படுகின்ற ஏடுகள் பற்றி பேச வேண்டும் என்றாலும் யாரும் பேசி விட முடியாது. இதைப்பற்றி நான் பேசுகிறேன் என்று ஒரு தீர்மானம் கொண்டு வர வேண்டும். அந்த தீர்மானத்தினுடைய அடிப்படையில்தான், பேரவைத் தலைவர் அவர்கள் ஒப்புக்கொண்ட பிறகு தான் பேச வேண்டுமே தவிர எந்த ஒரு அறிக்கையின் மீதும் யாரும் எடுத்து எதையும் பேசி விட முடியாது. ஆனால் வைக்கப் படுகின்ற ஏடுகளில் இருப்பதை ஆதாரமாக, எடுத்துக் காட்டாக எடுத்துச் சொல்லுவதில் தவறு இல்லை. ஆவணங்களிலிருந்து எடுத்துச் சொல்லலாம். ஆனால் ஆடிட் ரிப்போர்ட்டிலிருந்து எடுத்துச் சொல்லக் கூடாது என்று தெளிவாக இருக்கும்போது அதை எடுத்துச் சொல்லக்கூடாது என்பதுதான்.

**திரு. அ. ரகுமான்கான் :** கடந்த 10 ஆண்டு காலமாக எப்படி அனுமதித்தீர்கள் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல விதி 31-ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"Any paper laid on the Table of the House under any provision of law may be discussed by the House on an appropriate motion given by any Member as provided for in these rules and odmitted by the Speaker."

இது வந்து வெறும் பேப்பருக்கே. இங்கே அவையின் முன் வைக்கப்படுகின்ற ஏடுகளுக்கே, பேப்பர் லேய்டு ஆன் தி டேபிளுக்கே இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. This is a Report. If it has to be debated a consensus has to be arrived at in the Business Advisory Committee Meeting.



1987 நவம்பர் 18]

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொல்லுகின்ற அந்த விதியை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வீட்டு வரி உயர்வு சம்பந்தமாக இங்கே ஒரு அறிக்கையை வைத்தார்கள், தனி நபர் தீர்மானம். அது டேபிளில் பிளேஸ் செய்யப்பட்டிருக்கிறது. அதிலே விவாதம் வேண்டும் என்றால் தங்களிடத்திலே அனுமதி பெற்ற பிறகுதான் விவாதிக்க முடியும். ஆனால் அதேநேரத்தில் நான் சொல்ல விரும்புவது, ஒரு மானியம் நடந்து அதற்கு ஒரு தொகை ஒதுக்கப்பட்டு அதிலே இப்படி குறிப்பிடப்பட்டு இருக்கிறதே என்று கேள்வி கேட்பது தப்பு அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் சொல்லுவது ஒரு குற்றச்சாட்டாக அமைந்த காரணத்தால்தான். ஆரம்பத்திலேயே நீங்கள் ஒரு 'பாசிங் ரெப்பரன்ஸ்' என்று சொல்லியிருந்தால்கூட இவ்வளவு விவகாரம் வந்து இருக்காது. ஆகவே இவ்வளவு வந்துவிட்ட பிறகு அது அவைக் குறிப்பில் இருப்பது நல்லது அல்ல. இவ்வளவு தூரம் நாம் விவாதித்து விட்டோம். விதிகள் 191, 31 மற்றும் கவுல் அண்டு சக்தர், இவற்றில் தெளிவுபடுத்தப் பட்டிருக்கிறது. பி.ஏ.சி. என்றால் என்ன என்று நமக்கு எல்லாம் நன்கு தெரியும். ஆகவே இதை பி.ஏ.சி.-க்கு விட்டு விடுவோம். அங்கே போய்விட்டு இங்கே வரட்டும். பிறகு இங்கே நாம் விவரமாக விவாதத்தை வைத்துக்கொள்ளலாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டாக சொல்லக்கூடாது என்பதை நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் டேபிளில் வைத்துள்ள ஆடிட் ரிப்போர்ட்டில் * * ஏற்கெனவே டேபிளில் வைத்து விட்டார்களே, பல்வேறு பேப்பர்களில் போட்டு விட்டார்களே, ஜனங்களுக்குப் போய்விட்டதே, பழையபடி அந்த வார்த்தையை ரிப்பீட் செய்யக்கூடாது என்று ஏன் சொல்லுகிறீர்கள் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. தணிக்கை அறிக்கையிலே குறிப் பிடப்பட்ட குறைபாடுகளுக்கோ தவறுகளுக்கோ, மற்றவை

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

சொல்லி, ஏன் கடிதம் எழுதி இருக்கிறீர்கள்? ஆக இதிலிருந்து என்ன தெரிகிறது? முதலமைச்சருடைய இந்த ஸ்டேட்மெண்டிற்குப் பிறகு, யாரையோ திருப்திப்படுத்துவதற்கு இதுபோன்ற காரியங்கள் எல்லாம் நடைபெறுகின்றன. அந்தப் படத்தை எடுப்பதற்கு எவ்வளவு செலவாயிற்று? அந்தப் படத்தினால் public excheques க்கு எவ்வளவு நஷ்டம்? நான் கேட்கிறேன். மக்களுடைய வரிப் பணத்தை இப்படி விணடிக்கக் கூடாது. ஆனால் முதல்வர் அவர்களை திருப்திப்படுத்துவது என்பது வேறு. அவருடைய கட்சிக்கு 'லாயலாக' இருப்பது என்பது வேறு. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு ஒரு பில்லிலே விவாதிக்கிற போது நீங்கள் பில்லிற்கு வெளியிலே பேச வேண்டாம் என்று மிகக் கட்டுப்பாடாக செய்யப்பட்டது. ஆனால் இன்றையதினம் இந்த விவாதம் எங்கெங்கோ போய்க் கொண்டிருக்கிறது. இது சரிதானா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றையதினம் இந்தக் கூட்டத்தின் கடைசி நாளாக இருக்கின்ற காரணத்தினால்தான் நான் இடையிலே குறுக்கிடாமல் இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** இறுதி நாளாக இருப்பதனால் எதை வேண்டுமானாலும் பேசுவது என்பது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனால் தான் சொன்னேன். நிதி ஒதுக்க மசோதாவைப் பற்றி மட்டும் பேசி உடனே முடித்து விடுங்கள் என்று. நீங்கள் அரை மணி நேரமாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இதிலே இன்னும் 4 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. எனவே உடனே பேசி முடித்து விடுவது தான் நல்லது.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நாவலர் அவர்கள் பதில் சொல்வதற்கு சௌகரியமான சில கேள்விகளை மட்டும் கேட்கிறேன். [illegible] கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் என்னவாயிற்று? [illegible]





முதலமைச்சர் திரு. ராமாராவ் சொல்கிறார்கள். 'க்ளியரன்ஸ்' பாதி தொகையைக் கொடுக்காவிட்டால் தண்ணீர் வராது என்று சொல்கிறார்கள். எவ்வளவோ வருஷமாகிவிட்டது. வருஷமெல்லாம் கிருஷ்ணா வரும் வரும் என்று சொல்கிறார்கள்.

(மூற்பகல் 11-20)

அடுத்து இந்த காவிரி நீர் பிரச்சினை பற்றி ட்ரிபியூனலுக்கு விடுவதாகச் சொன்னார்கள். நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கூட இப்போது கொஞ்சம் தண்ணீர் கர்நாடகத்திலே வாங்கி குறுவை சாகுபடிக்குத் தருகிறேன் என்று சொல்கிறார்கள். எவ்வளவு வருடத்திற்கு கெஞ்சுவது? ஆயிரம் கோடி ரூபாயிலே நீர்ப்பாசனத் திட்டம் கர்நாடகத்திலே கொண்டு வரப்போகிறார்கள். குறுக்கே அணை கட்டுகிறார்கள். ட்ரிபியூனல், ட்ரிபியூனல் என்று சொல்லியாகிவிட்டது. இப்போது சங்கரானந்தும் போய்விட்டார். அந்த போஃபார்ஸ் சம்பந்தமாக விசாரிக்கின்ற கமிட்டிக்குத் தலைவராக. இப்போது பிரதமர் தான் அந்தத் துறையிலே இருக்கக்கூடியவர். நான் கேட்கிறேன். இந்த ட்ரிபியூனலுக்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?. . . (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய நேரத்தை எடுத்துக் கொண்டுவிட்டார்கள்.

அடுத்து இன்னொன்று. அந்த காவேரி நீர்ப் பிரச்சினை என்னாவாயிற்று என்று தெரியவில்லை. நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே மகாநதியிலிருந்து, குடி தண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக தண்ணீர் கொண்டு வருகிறேன் என்று சொன்னார்கள். ஒரு கப்பல் கம்பெனி அதற்கெல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டதாகக்கூட கேள்விப்படுகிறேன். தண்ணீர் தகராறு . . . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, தற்போது தண்ணீர் தரப்பட்டுக்கொண்டிருக்கிறது. மகாநதி தண்ணீர் தேவையில்லை, ஆகவே விவகாரம் இல்லை.

**திரு. அ. ரகுமான்கான்:** வறட்சி இருந்தபோது கப்பல் ஏன் நின்றது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, தண்ணீர் இருந்தால் தானே [illegible] வரும். மேற்கொண்டு கப்பல் எப்படி வரும்?

[1987 நவம்பர் 18

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, நான் பேசியது ஐந்து நிமிடங்கள்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் இப்படிச்சொல்லக் கூடாது. நீங்கள் பேசியதைக் குறிப்பேட்டில் எடுத்துப் பாருங்கள். அதிக நேரம் பேசி இருக்கிறீர்கள். கைண்ட்லி கோ-ஆப்பரேட் வித் மி.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் பொது மக்களின் நலன் கருதி நல்ல ஒரு செய்தியை வெளியிட்டு, அரசு அதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கூறினார்கள். அதை ஏற்று நிவர்த்தி செய்வது தவறு அல்ல. அந்தப் பள்ளியைப் பொறுத்த வரைக்கும், அப்பள்ளியின் ஒரு குறிப்பிட்ட பகுதி மாணவர்கள் தங்கிப் படிக்க கூடிய அளவிற்குத் தகுதியற்றது. ஸ்டேபிலிட்டி சர்ட்டிபிகேட் வாங்காத ஒன்று. குழந்தைகளுக்கு ஆபத்து உருவாகக்கூடிய நிலை இருந்த காரணத்தால், அது தெரிவிக்கப் பட்டும் மீண்டும் தொடர்ந்து, அந்தப் பள்ளிக்கூடத்தில் ஆபத்தான சூழ்நிலையில் குழந்தைகளை அமர்த்திய காரணத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்தக் குறை மீண்டும் நிவர்த்தி செய்யப்பட்டு, மாநகராட்சியினுடைய ஆணையாளர் மூலமாக தற்போது சரி செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டிடம் ரொம்ப மோசம், நடத்தக்கூடாது என்று சொன்னால், ஆரம்பத்திலேயே வராண்டாவிலே நடத்தக் கூடாதென்று உத்தரவு போட்டிருக்கலாம். அந்த ஸ்கூலை மூடச் சொல்லியிருக்கலாம். அதேமாதிரி, வேலூரிலே கஸ்பாவிலே ஒரு ஸ்கூல், அங்குள்ள ஹெட்மாஸ்டரையும் சஸ்பெண்டு பண்ணி விட்டார்கள். ஏனென்றால், ஐந்து வருடமாக எலக்டிரிசிட்டி இல்லை என்ற தகவலை அவர் சொல்லி 'தினமலர்' பேப்பரிலே போட்டுவிட்டார்கள். எலக்டிரிசிட்டி கொடுக்க முயற்சி . . . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு தகவல்களுமே சரியான தகவல்கள் அல்ல. அங்கு அந்தக் குறிப்பிட்ட பள்ளியினுடைய எலக்டிரிசிட்டியில் தொகை குறிப்பிட்ட அந்த அளவுக்கு கட்டுவதற்குப் பாக்கி யிருக்கிறது என்பதை சம்பந்தப்பட்ட துறைக்குத் தெரிவிக்கத்



1987 நவம்பர் 18] [திரு. சி. பொன்னையன்]

தவறிய காரணத்தால், அங்கு மாணவர்களுக்கு இன்னல் ஏற்பட்டது. அந்தச் செய்தியை 'தினமலர்' பத்திரிகை வெளி யிட்டது. 'தினமலர்' பத்திரிகை செய்தி வெளியிட்ட காரணத் தால் அது தவறு என்று சொல்லக்கூடாது. அதை ஆய்ந்தோம், உண்மை இருந்தது, அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுத் தோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** போதும், அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, இன்றைக்கு நடக்கிற இந்த விவாதத்திலே, 1987 ஆம் வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து துவங்கக்கூடிய ஆண்டில் ஏற்கனவே இந்த அவையினாலே வழங்கப்பட்டிருக்கும்படியான நிதிக்கு மேல், புதிதாக மேலும் அதிகச் செலவு என்று நமது நிதியமைச்சர் அவர்கள் கேட்டுள்ள நிதி சம்பந்தமாகத் தான் நான் பேச விரும்புகிறேன்.

தொழில்கள் சம்பந்தப்பட்ட வகையில், அரசாங்கத்தினுடைய நடவடிக்கையில் சரியான பாதையைக் கடைப்பிடிப்பதில்லை என்பது எங்களுடைய திட்டவட்டமான கருத்து, தொழில்கள் மூடப்படுவதைத் தடுப்பதற்கு——நாடு முழுவதும் இருக்கிற நெருக்கடிதான் அதனுடைய பிரதான அடிப்படைக் காரணம், மத்திய அசாங்கத்தினுடைய தொழில் கொள்கை அதற்கு பிரதானமாக, அடிப்படையாக உள்ளது என்பதெல்லாம் சரி யானதுதான். ஆனால் மாகாண அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலும் தொழில்களில் தங்களுடைய சக்திக்குட்பட்டு என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யவேண்டிய பொறுப்பு மாநில அரசாங்கங்களுக்கு இருக்கிறது.

உதாரணமாக, 23 பஞ்சாலைகள் பூட்டிக் கிடக்கின்றன, அது இன்றைக்கு, நேற்றைக்கு அல்ல, கிட்டத்தட்ட மேட்டூர் மில்கள் மூடப்பட்டது, 3 வருடங்களுக்கு முன்பிருந்து. அதற்குப் பிறகு தான், பல்வேறு மில்கள் இப்படி பூட்டப்பட்டுள்ளன. அரசாங்கம் எடுத்து நடத்தக்கூடிய தேசியமயம் ஆக்கப்பட்ட பஞ்சாலைகளில் இப்படிப்பட்ட முறையில் பூட்டப்படவில்லை, நெருக்கடி ஏற்படவில்லை. அப்படியானால் நிர்வாகங்களினு

[திரு. கு. ரமணி] [1987 நவம்பர் 18

டைய மிஸ்மானேஜ்மென்ட்—அதிலிருந்து கிடைக்கிற பணத்தை
வேறு தொழிலுக்கு மாற்றுவது போன்ற தவறுகள்தான்
பிரதான் காரணமாக இருக்கின்றது. அது ஒன்று.

இரண்டாவது, இன்றைக்கு இந்த அவைக்கு முன்னாலே வந்த
ஒரு செய்தி முக்கியமானது. சில மில்களிலே இருக்கிற
நிர்வாகங்கள் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, ஓடுகிற
மில்கள் கூட, எங்களுக்குப் பண நெருக்கடி என்று ஒரே ஒரு
காரணத்தைச் சொல்லி மில்லை நிறுத்தி, இருக்கிற தொழிலாளி
களைப் பட்டினிபோட்டு, கம்பெல் பண்ணி, கடைசியாக நிர்வாகம்
விரும்பக்கூடிய ஒரு இடத்திற்கு அவர்களைக் கொண்டு சேர்க்
கின்றன். உடனடியாக வேலைப்பளுவை உயர்த்தவேண்டும்,
குறிப்பிட்ட நம்பர் தொழிலாளர்களை வெளியேற்றவேண்டும்
என்று இப்படிப்பட்ட நிலைகள் ஏற்பட்டிருப்பது, மாநில
அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கக்கூடிய சட்டங்
களையும் மீறி அவர்கள் இந்த நடவடிக்கையை எடுக்கிறார்கள்.
இன்றைக்கு அரசாங்கம் வைத்திருக்கக்கூடிய சட்டத்தைக்
கொண்டு இது பூராவையும் சமாளித்து விடமுடியும் என்று
சொல்லவில்லை.

அதை எதிர்த்து ஹைகோர்ட்டுக்கோ, மற்ற இடங்களுக்கோ
போனால், தடுத்து நிறுத்தமுடியும். ஆனால் அரசாங்கத்தினுடைய
ஒரு தார்மீக ஆதரவு அல்ல, நடைமுறையிலே அரசாங்கத்
தினுடைய ஆதரவு தொழிலாளர்கள் நடத்தும்படியான இயக்கங்
களுக்கு, பூட்டுகிற மில்லைத் திற என்று நடத்தும்படியான
இயக்கங்களுக்கு பக்கபலமாக இருக்குமேயானால், அந்த
நிர்வாகங்களை நிர்ப்பந்தித்து மில்களைத் திறக்கமுடியும். அந்த
நடவடிக்கைகளில் அரசாங்கம் தோல்வி அடைகிறது என்பது
தான் என்னுடைய கருத்து.

அதை மாற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன். பிடிவாதமாக இருக்கக்கூடிய அவர்களை
வழிக்குக் கொண்டு வருவதற்கு நடக்கக்கூடிய இயக்கங்களுக்கு
ஆதரவு கொடுத்து சட்டப்படி, மூடிய மில்களைத் திறக்க
வேண்டும் என்று வற்புறுத்தும்படியான நடவடிக்கையை
அரசாங்கம் எடுக்கவேண்டும். அது அல்லவிட்டால், பல்லாயிரக்
கணக்கான தொழிலாளர்கள் பட்டினி கிடப்பது மட்டுமல்ல, மில்



1987 நவம்பர் 18] [திரு. கு. ரமணி]

பட்டினி கிடந்துதான் செத்தானா என்று
மூடி, அதனால் அவர்களுக்கு பிரயோசனம் இல்லை.
திரும்பிக் கேள்வி கேட்டுப் தற்கொலை பண்ணிக்கொள்ளக்
வாழ்க்கை நடத்தமுடியாமல் எங்கேயோ போய், பல பக்கம் தேடி,
கூடிய நிலையும் இருக்கிறது. ஒரு இடத்தில் விழுந்து சாகிற
ஒன்றும் முடியாமல் கடைசியிலே அந்த அபாயத்தைத் தடுக்க, தொழில்கள்
நிலை இருக்கிறது. அநியாயமாக திடீரென்று மூடப்
சம்பந்தப்பட்ட வரையில், அதற்கு வேண்டிய உறுதியான
படுவதைத் தடுக்கவேண்டும். இன்றைக்கு இருக்கிற சட்டங்களிலே
நடவடிக்கை வேண்டும். அதற்கான இடம் இல்லை என்று சொன்னால்,
போதிய அளவிற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்.
அவற்றைத் திருத்துவதற்கு

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

(முற்பகல் 11-30)

அதுமாதிரிதான் கைத்தறித் துணிபற்றி அரசாங்கத்தி
லிருந்து ஒரு அறிக்கை வந்தது, கூட்டுறவில் இருக்கும்படியான
பிரைமரி கைத்தறி சங்கங்கள் 1,300 சங்கங்கள் தமிழ்நாட்டில்
மூடப்பட்டிருக்கின்றன என்று. அப்படியானால் அரசு துறை
யில்லாமல் தனியார் துறையில் இருக்கும்படியான சங்கங்களில்
சுமார், 5, 6 இலட்சம் கைத்தறித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்
அவர்களுடைய குடும்பங்களினுடைய ஜனத்தொகை கிட்டத்தட்ட
1½ கோடி வருகிறது. அவர்களுடைய வாழ்க்கை நிலை என்ன
வாகும்? போன வருஷம் மட்டும் 160 கோடி ரூபாய்க்கு
மேற்கொண்டு நூலை இங்கு இருக்கக்கூடிய முதலாளிகள்
ஏற்றுமதி செய்தார்கள். அந்த நூல் இங்கு கிடைக்கவில்லை
என்பதுதான் தொழிலாளர்களுடைய கோரிக்கை. அந்த
நூலுக்கு ஏற்பட்ட அளவுக்கு மிஞ்சிய விலையேற்றம்தான்
அந்த நூலை வாங்க முடியாமல் போனதற்குக் காரணம்.
அளவுக்கு மிஞ்சிய இலாபத்தை எடுக்க, இந்த நெருக்கடியைப்
பயன்படுத்தி முதலாளிகள் செய்திருக்கக்கூடிய பெரும் தவறை
அரசு நிர்ப்பந்தம் செய்து, இப்படிப்பட்ட கொள்ளை இலாபம்
அடிக்கக்கூடிய நிலையைத் தடுப்பதற்கான நடவடிக்கையை அரசு
முன்வந்து எடுத்திருக்க வேண்டும். இதனால் பல ஆயிரக்
கணக்கான நெசவாளர்கள் போராடி சிறைக்குச் சென்றார்கள்.
அந்தச் சமாச்சாரமும் இன்னும் முடியவில்லை. கைத்தறித் துணி
இன்னும் ஏராளமாகத் தேங்கிக் கிடக்கின்றன. அரசும் அந்தத்

[திரு. கு. ரமணி] [1987 நவம்பர் 18

துணிகளை விற்பதற்கு பல வழிகளை மேற்கொண்டு, மானியம் எல்லாம் கொடுத்து பார்த்தாலும்கூட விற்க முடியவில்லை. நூல் வாங்கி தறியும் ஓட்ட முடியவில்லை. தேங்கிக் கிடக்கின்ற துணி களைவிற்று செலவழிக்கவும் முடியவில்லை. அப்படிப்பட்ட நெருக்கடி இருக்கிறது.

இதேமாதிரிதான் விசைத் தறிகளினுடைய நிலையும் இருக்கிறது. விசைத்தறி முழுவதும் இன்றைக்கு ஓட்டமுடியாமல் 10,000-க்கும் மேற்பட்ட விசைத்தறிகள் மூடிக் கிடக்கின்றன. இதுசம்பந்தமாக வரக்கூடிய பிரச்சினைகளும் வேறு இருக் கின்றன. பஞ்சாலைகள், கைத்தறி, விசைத்தறி இவை மூன்றும் சேர்ந்தால்தான் டெக்ஸ்டைல்ஸ். பஞ்சாலைகள், கைத்தறி, விசைத்தறி மூன்றும் சேர்ந்த இந்த டெக்ஸ்டைல்ஸ் பற்றிய பாலிசியை, புதிய கொள்கையை மத்திய அரசாங்கம் அறிவித்த அன்றைக்கே இந்தியத் தொழிலாளி வர்க்கம் இதை பகிரங்கமாக எதிர்த்துச் சொல்லி இருக்கிறது. இந்த அரசுக்கும் அது தெரியும். இந்த அரசும், அந்தக் கொள்கை சரியில்லை என்கிற கருத்தைச் சொன்னது நமக்குத் தெரியும். ஆனால் மத்திய சர்க்காரை வற்புறுத்தி, இந்தக் கொள்கையில் மாற்றம் ஏற்படுத்தி, பூட்டப் படுகின்ற, நிறுத்தப்படுகின்ற மில்களினுடைய நிர்வாகத்தை, இந்த அரசு ஏற்று நடத்துவதற்கு, மத்திய அரசு பண உதவி செய்யவும், அதை எடுத்து நடத்தவுமான ஒரு முனைப்பான நடவடிக்கையை நமது அரசாங்கம் எடுக்க வேண்டும். அப்படி எடுக்காத வரையில் கைத்தறியைக் காப்பாற்ற முடியாது; விசைத்தறியைக் காப்பாற்ற முடியாது. பஞ்சாலைகள் அடைகின்ற கொள்ளை இலாபத்தின் காரணமாக, இவைகள் பூட்டப்படும்படியான அபாயத்தையும் தடுக்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்; எடுக்கவேண்டுமென்று சொல்கிறோம்.

அதேமாதிரி, சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் நகருவது இல்லை. அதுசம்பந்தப்பட்ட வரையில், இதே அவையில் முன்பு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்து, இப்போது ஹெல்த் டிபார்ட்மெண்டினுடைய அமைச்சராக இருக்கக்கூடிய நமது மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதியை இந்த அவையிலே கொடுத்தார்கள். நான் எழுப்பிய வினாவிற்குத்தான் அவர் அந்த வாக்குறுதியைத் தந்தார். என்ன வாக்குறுதி என்றால், நகராட்சிகளில் பல இடங்களில் ஆயிரக்கணக்கான



1987 நவம்பர் 18] [திரு. கு. ரமணி]

குடிசைகள் இருந்து, சுகாதாரமே சீர்கெட்டு நாசமாகிறது. அடிப்படைத் தேவைகள் அங்கே பூர்த்தியாவது இல்லை. ரோடு, லைட், சாக்கடை, குடிநீர், கழிப்பிடங்கள் போன்ற அடிப்படை வசதிகளே இல்லை. இப்படி கன்ஜஸ்ட்டடாக இருக்கும்படியான நிலையை மாற்றி அமைப்பதற்கு அரசே முன்வந்து நடவடிக்கை எடுக்கும் என்றார். அப்படிப்பட்ட இடங்களை விற்பனை செய்யக்கூடியவர்கள், இந்த அடிப்படை வசதிகளை ஏற்படுத்து வதற்கு வேண்டிய பணத்தைக் கட்டாமல் தப்பித்து விடுகிறார் கள். அங்கே குடியேறிய மக்கள். 10 வருஷம், 15 வருஷம் ஆனதற் குப் பிறகும் மோசமான நிலையிலே இருக்கிறார்கள். அவர்களு டைய கோரிக்கை நமக்கு வருகிறது. ஆகவே அப்படிப்பட்ட இடங்களிலே அடிப்படை வசதிகளைச் செய்வதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று சொன்ன காலத்தில், இதற்கென்று அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு நாங்கள் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம், அது சீக்கிரத்திலே கொண்டுவரப்படும் என்று அன்றைக்குச் சொன்னார்கள். ஆனால் அந்தச் சட்டம் இன்றுவரையில் வரவில்லை. மேலும் 10 வருடங்களுக்குப் பிறகோ, 12 வருடங் களுக்குப் பிறகோ, அரசினுடைய உத்திரவு பெறாமல் கட்டப் பட்ட வீடுகள் முழுவதையும் அந்தந்த நகராட்சிகளிலிருந்து விவரங்களை எடுத்து, அவைகளுக்கு வேண்டிய சீராக்கும் பணிகளைச் செய்து, அதற்கென்று ஒரு விசேஷமான வழியை, அதற்குச் செலவழிக்கின்ற பணத்தை ஈடுகட்டுகின்ற வகையில், ஒரு வரியை அந்தப் பகுதிகளில் இருப்பவர்களுக்கு விதித்து, அந்தக் காரியங்களைச் செய்யவேண்டும். அப்படிப்பட்ட காரியங் களும் செய்யப்படவில்லை. அப்படி செய்யாததால், இந்த ஏரியாக்கள் முழுவதும் கன்ஜஸ்ட்டட் ஏரியாக்களாக, மோசமான சுகாதாரத்தோடு, அங்குள்ள மக்கள் வாழ்கிறார்கள் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அந்தச் சட்டத்தை அரசு கொண்டுவரவேண்டுமென்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்ததாக, சாலைகளும் பாலங்களும் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அநேகமாக, முனிசிபாலிட்டிகளில் மட்டும் சில இடங்களில் இருக்கும் ரோடுகள் கொஞ்சம் பரவாயில்லை. அதேமாதிரி நெடுஞ்சாலைகளில் கொஞ்சம் நல்ல முறையில் ரோடுகள் பல இடங்களில் இருக்கின்றன. ஆனால்

[திரு. கு. ரமணி] [1937 நவம்பர் 18

கிராமப்புறங்களில் இருக்கும்படியான, பல ஆயிரக்கணக்கான மைல்களுக்கு ரோடுகள் உடைந்து, சீரழிந்து போய் அவற்றின் மேல் தார் போடவும், சுத்தப்படுத்தவும் வழி இல்லாதபடிக்கு இருந்து வருகின்றன. இதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர் களையும் சந்தித்து, மற்ற சம்பந்தப்பட்ட துறை அதிகாரி களிடத்திலும் நாங்கள் விஷயங்களை எடுத்துச் சொல்லி கேட்கிற காலத்தில் அல்லது மனு கொடுக்கிற காலத்தில், இதற்குப் பணம் இல்லை என்ற ஒரே பதிலைத்தான் எங்களுக்குத் தருகிறார்கள். நாங்கள் என்ன செய்யட்டும், அரசாங்கம் இதற்குப் பணம் சேங்ஷன் செய்ய மாட்டேன் என்கிறார்களே என்று சொல்லுகிறார்கள். இந்த நிலைமை சரியல்ல. இதனால் கிராமப் புறத்தில் உள்ள மக்களிடத்திலும், நகர்புறத்தில் உள்ள மக்களிடத்திலும்—எங்கெங்கே சாலை வசதிகள் சரியாக இல்லையோ, அங்கெல்லாம்—மிகக் கடுமையான எதிர்ப்பு இருக்கிறது.

அதைப் போலவே என்னுடைய கோவை கிழக்குத் தொகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக பல ஆண்டு களுக்கு முன்னாலேயே பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள பைப்புகளைப் புதைத்து வைத்தும்கூட கடந்த 4, 5 ஆண்டு களுக்கு மேலாகவே அதற்கான பணி தடைப்பட்டு நிற்கிறது. அந்தப் பணி தொடங்கப்படவில்லை. காரணம் அதிலிருந்து வருகிற கழிவு நீரை முழுவதுமாகப் பயன்படுத்துவதற்கான ஒரு பண்ணை ஏற்படுத்துவதற்கு இடம் தேர்ந்தெடுத்து, அதற்கு எதிர்ப்பு ஏற்பட்டு அதுவும் சமாளிக்கப்பட்ட பிறகும்கூட பல ஆண்டுகளாக அந்தக் காரியம் நடைபெறாமலேயே இருக்கிறது. அகவே அரசாங்கம் இதிலெல்லாம் மிகுந்த முனைப்போடு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய தினம் அதிகாரிகளின் இஷ்டம்போல்தான் காரியங்கள் நடக் கின்றன. இந்த நிலைமை உடனடியாக மாற்றப்பட வேண்டும். அந்த வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது)

விரைவில் முடித்துக் கொள்கிறேன். அடுத்து, தொழிலாளர் களின் போராட்டங்களைப் பொறுத்தவரையிலும் இப்போது அவை அதிகமாகிக் கொண்டு வருகின்றன. இதற்குக் காரணம் முதலாளிகள் ஆலைகளை மூடுவதும் தொழிலாளர்களை வேலை



1937 நவம்பர் 18] [திரு. கு. ரமணி]

யிலிருந்து நீக்குவதும்தான். இதுதான் பிரதானமான காரணமாக இருக்கிறது. சென்னை நகரத்தில் இருக்கிற பின்னி எஞ்சினியரிங் கம்பெனி மூடப்பட்டு எத்தனைக் காலமாகி விட்டது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே நன்கு தெரியும். நாங்களே இரண்டு மூன்று தடவை இது சம்பந்தமாக அமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசியதும் அவருக்குத் தெரியும். இப்போது ஒரு புதிய நிர்வாகம் வந்திருக்கிறது. லேபர் கமிஷனர் முன்னால் பேச்சுவார்த்தைகள் நடந்து ஒப்புக் கொள்ளப்பட்ட பிரச்சினை கூட அமுலாக்கப்படாமல், அது கிடப்பில் போடப் பட்டிருக்கிற நிலைமை இருக்கிறது. அமைச்சர் அவர்களும் லேபர் டிபார்ட்மெண்டுக்கு எடுத்துச் சொல்லி நடவடிக்கை எடுத்தும்கூட அந்த நிர்வாகம் இன்னும் ஆள்குறைப்பு செய்ய வேண்டும், தொழிலாளர்களை வெளியேற்ற வேண்டும் என்ற காரணத்திற்காக நிலைமையை நீடித்துக் கொண்டே வருகிறார்கள். இங்கே இருக்கிற பஞ்சாலைக்காரர்கள்தான் அந்தக் கம்பெனியையும் நடத்துகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் லேபர் கமிஷனர் முன்னால் ஒப்புக் கொள்ளப்பட்ட பிரச்சினைகளின் அடிப் படையில் மீண்டும் அந்தக் கம்பெனியை விரைவில் திறக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதன் காரணமாக இன்றைக்கு 1,300 தொழிலாளர்களுக்கு மேல் வேலையில்லாமல் ஓராண்டு, ஒன்றரையாண்டுக் காலமாகப் பட்டினியாக இருக்கிறார்கள். அதைத் திறக்க வேண்டும். இப்படிப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு பிரத்தியேகமான கவனத்தோடு அரசாங்கம் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மக்களுக்குத் தேவையான இத்தகைய காரியங்களைச் செய்வதற்காக அரசு மத்திய அரசாங்கத்திடம் அதிகமான நிதியைக் கேட்டாக வேண்டும். அப்படி மத்திய அரசாங்கத்திடம் நிதி கேட்பதில் மாநில அரசாங்கம் தயக்கம் காட்ட வேண்டிய தில்லை. அதற்கு அவசியமில்லை. அரசியலில் உங்களுக்கும் அவர் களுக்கும் இருக்கிற சம்பந்தம் வேறு. அதை அரசியல் துறையில் பேசிக் கொள்ளுங்கள். ஆனால் மக்களுக்குச் செய்ய வேண்டிய தேவையான காரியங்களைச் செய்தாக வேண்டும். இத்தகைய காரியங்களை அரசாங்கம் செய்ய வேண்டுமென்றால் இதற்கு அதிகமாகப் பணம் தேவை. காரணம் மக்களுக்கு இது

[திரு. கு. ரமணி] [1987 நவம்பர் 18

தேவையான காரியம். நம்முடைய மக்களின் வரிப்பணமும் சேர்ந்துதான் மத்திய அரசாங்கத்திற்குப் போகிறது. எனவே எங்களுக்குச் சரியான தொகையைக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி மேலும் அதிக நிதியைப் பெற மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் இருக்கிற நிலைமைகளுக்காக நாம் மாநில அரசைத்தான் குறை சொல்ல வேண்டி இருக்கும் என்று கூறி, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். முதலாவதாக கல்வி என்ற தலைப்பைப் பொறுத்த வரையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னால் வரையில் ஆசிரியர்கள்—இந்தியா முழுவதும்—போராடினார்கள். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்திய நாடு முழுவதும் போராடினார்கள். ஆனால அப்படிப்பட்ட போராட்டத்தின்போது நம்முடைய மாநில அரசு மட்டும்தான் மற்ற மாநில அரசுகள் கடைப்பிடித்த அணுகுமுறையிலிருந்து வேறுபட்டு மிகவும் கடுமையான முறையில் கடைப்பிடித்தது. நடைமுறையில் நாம் அதைப் பார்த்தோம்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் போராட்டம் முடிந்து எல்லா மாநிலங்களிலும் ஆசிரியர்கள் இழந்த நேரத்தை ஈடுகட்டுவதாக ஒப்புக் கொண்டுவிட்டதன் காரணமாக அவர்களுக்குச் சம்பளத்தில் பிடித்தம் எதும் செய்வதில்லை. என்று அங்கெல்லாம் ஒப்புக் கொள்ளப்பட்டுவிட்டது. ஆனால் நம்முடைய மாநில அரசு மட்டும்தான் "நோ ஓர்க், நோ பே" என்ற நிலையை மேற்கொண்டிருக்கிறது. இது சரியல்ல.

கல்லூரி ஆசிரியர்கள் இழந்த காலத்தை, கோடை விடுமுறையின்போது குறைந்துக் கொண்டாவது முடித்துவிடுகிறோம் என்றும் சம்பளத்தில் பிடித்தம் வேண்டாம் என்றும் ஒரு நியாயமான கோரிக்கையை வைத்தபோது மாநில அரசு ஏன் நிராகரிக்க வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன். இது வழக்கமான ஒன்று. மேலும் அவர்கள்மீது போடப்பட்ட வழக்குகள் இதுவரை வாபஸ் வாங்கப்படவில்லை. பிரச்சினை



1987 நவம்பர் 18] [திரு. கே. சுப்பராயன்]

பேசி முடிக்கப்பட்ட பின்னர் ஆசிரியர்கள் வேலைக்கும் திரும்பி விட்டார்கள். இந்த நிலையில் அவர்கள்மீது போடப்பட்ட வழக்குகளையும் அவர்களுக்கு ஆதரவாக உண்ணாவிரதம் இருந்தவர்கள்மீது தொழிற்சங்க ஊழியர்கள்மீது—போடப்பட்ட வழக்குகளையும் மாநில அரசு இதுவரை வாபஸ் வாங்கவில்லை. அதை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

இந்த போராட்டங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுவதில் நீங்கள் காட்டுகிற வேகத்தை, கல்வி கற்றுக் கொடுப்பதற்காக உள்ள கல்விக் கூடங்கள், ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், ஆகியவற்றுக்குப் போதுமான கட்டிடங்கள் இல்லை என்பதால் அவற்றை உருவாக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, மிக முக்கியமான பிரச்சினை, தொழிற்சாலைகளைப் பற்றியது. கடந்த இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானத்திலேயே குறிப்பிட்டேன். தமிழ்நாட்டில் என்றுமே இல்லாத அளவிற்கு நிலைமை முற்றிப் புரையோடியிருக்கிறது. மாநில அரசாங்கம் என்ற ஒன்று செயல்படுகிறதா, நடைமுறையில் இருக்கிறதா என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது. இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பேசுகின்றபோதுகூட மாநில அரசாங்கத்தினுடைய நிலைமைகளைப் பற்றி மிக ஆரவாரமான முறையில் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். நான் கேட்க விரும்புகிறேன்—இந்த மாநில அரசாங்கத்திற்குத் தொழிலாளர்களின் மீது உண்மையான பற்று இருக்குமானால் தொழிலாளர்கள் ஒடுக்கப்படுவது தடுக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள் வாட்டப்படுகிறார்கள் என்பதற்கு ஆயிரக்கணக்கான உதாரணங்களை நம்மாலே கொடுக்க முடியும். 23 பஞ்சாலைகள் மூடிக் கிடப்பது, பெரும்பகுதி நிர்வாக முறைகேட்டின் காரணமாகத்தான். நன்றாக ஓடிக் கொண்டிருக்கின்ற ஆலைகளை, நலிந்த ஆலைகள் என்று நடைமுறையில் அவற்றைக் கொன்று, மாநில, மத்திய அரசாங்க, வங்கிகளின் நிதியுதவியைப் பெறுவதற்காக ஒரு வஞ்சகத்தனமான தந்திரோபாயத்தை பஞ்சாலை முதலாளிகள் தமிழ்நாட்டில் மேற்கொள்கிறார்கள். தொழிற்சாலைகளை மூடியதற்குப் பின்னால், அந்த தொழிற்

[திரு. கே. சுப்பராயன்] [1987 நவம்பர் 18

சாலையில் ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்றால், ஐநூறாக குறைக்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கிறார்கள், சம்பளம் ஆயிரம் ரூபாய் என்றால், முன்னூறு ரூபாயாகக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதைப் போல வேலைப் பளுவைக் கூட்டிக்கொள்ள வேண்டும் என்று, சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், இந்த அமைச்சரவையின் சார்பாக பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது நியாயம்தானா? ஓடுகின்ற தொழிற்சாலையை மூடிவிட்டு மீண்டும் தொழிற்சாலையை திறக்க வேண்டுமானால், ஆளைக் குறைத்துக்கொள், சம்பளத்தைக் குறைத்துக்கொள், வேலைப் பளுவை கூட்டித்தான் செய்ய வேண்டும் என்று இந்த மாநில அரசாங்கம் வாதாடும்போது எப்படி எல்லோரும் அமைதியாக கட்டு மரங்களைப் போல அமர்ந்திருக்க முடியும்? தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகள் சட்டவிரோதமாகப் பறிக்கப்படுகிற போது மாநில அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கிறது? அதிலே ஏன் தலையிடவில்லை? தொழிலாளர்கள் மீது அளவற்ற அக்கரை என்று சொல்லுகிறவர்கள் வார்த்தைகளை மட்டும் வாரித் தால் பயன் இல்லை. வாழ்க்கையில் தொழிலாளர் வர்க்கத்திற்கு என்ன செய்திருக்கிறார்கள்? இன்னும் குறிப்பிட்டுச் சொல்லு கிறேன். திருப்பூரில் நான்கு மில்கள் மூடிக் கிடக்கின்றன. திருப்பூர் காட்டன் ஜின்னிங் மில்லில் தொழிலாளிகளிடம் வசூல் செய்த தொழில் வரியைப் பஞ்சாயத்துக்குக் கட்டவில்லை, மின்சார வாரியத்திற்குப் பணம் கட்டவில்லை, தொழிலாளர் களிடம் வசூலித்த பி.எஃப். பணத்தைக் கட்டவில்லை, ஈ.எஸ்.ஐ.க் குக் கட்டவில்லை. ஆனால் மில்லை மூடிவிட்டுப் போகி றார்கள். தொழிலாளிகள் போராடுகிறபோது போலீசார் சும்மா இருப்பார்களேயானால்—மாநில அரசாங்கம் தொழிலாளிகளின் உரிமைகளைப் பெற்றுத் தர வேண்டும் என்று விரும்புகிறது என்பது உண்மையானால், தொழிலாளர்கள் போராட்டத்தில் போலீஸ் தலையிடாது என்று அறிவித்தால், அந்த நிர்வாகத்தை எந்தவிதமான வன்முறையும் இல்லாமல், எந்தவிதமான ஆயுதங் களும் இல்லாமல் பணிய வைக்க முடியும்.



1987 நவம்பர் 18] [திரு. கே. சுப்பராயன்]

மாநில அரசாங்கத்தை ஒன்று கேட்க விரும்புகிறேன். மூடப் பட்டுள்ள பஞ்சாலைகளை நாட்டுடைமையாக்க ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டும். மேலும் தொழிற்சாலைகள் மூடப்பட்டி ருந்தால் அதன் முதலாளிக்குச் சிறைத்தண்டனை வழங்க வேண்டும் என்று சட்டத்திலே வகை செய்யப்பட வேண்டும். அதைச் செய்யாமல் தொழிலாளி போராடுவதற்கு எதிராக தண்டத்தைத் தூக்குவதில் காட்டுகிற வேகத்தை முதலாளிக்கு எதிராகக் காட்டுவதில்லை. இதற்கு என்ன காரணம்? அவற்றை மாநில அரசு வெளிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருப்பூர் காட்டன் மில் மற்றும் எஸ்.ஆர்.சி. மில் நீண்ட காலமாக மூடப்பட்டுக் கிடக்கின்றன. மூடப்பட்டுக் கிடக்கிற மில் தொழிலாளி என்ன செய்வது? பற்றி எரிகிற பசியோடு படுத்துக்கொள்ளலாம். சட்டம், ஒழுங்கு பற்றித்தான் அரசு கவலைப்படுகிறது. தொழிலாளிகளின் உயிரோடு முதலாளிகள் விளையாடுகிறார்கள். அப்படி விளையாடுகிறபோது—பசி வந்தால் பத்தும் பறந்து போகாதா? அவர்களுக்கு என்ன தீர்வு காண வேண்டுமோ அந்தத் தீர்வை செய்ய மாநில அரசு என்ன நடவடிக்கையை எடுக்கிறது? ஒன்றும் எடுக்கவில்லை. எடுக்க வேண்டும்.

திருப்பூர் பனியன் தொழிற்சாலையில் இரண்டாயிரம் தொழி லாளர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். இந்த அரசு அந்த தொழிலாளர்களுக்காக என்ன செய்து கொண்டிருக்கிறது? ஒன்றும் செய்யவில்லை, அமைதியாக நடந்து கொண்டிருக்கிறது. இந்த நடைமுறை தொழிலாளி வர்க்கத்தைச் சீண்டி விடுகிறது. மேலும் தாக்குதலை அதிகப்படுத்த, முதலாளிகளுக்குப் பச்சைக் கொடி காட்டுவது, இந்தத் தாமதம், மௌனம் சாதிப்பது, இந்த அமைதிதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிநீரைப் பொறுத்த வரையில் மாநில அரசாங்கம் மிகச் சிறந்த உதாரணம். எந்தத் திட்டங்களையும் அறிவிப்பார்களே தவிர நிறைவேற்றமாட்டார்கள். இந்த மாநில அரசு அக்கறையோடு நிறைவேற்றுவதில்லை, எந்தத் திட்டத்தையும் முனைந்து நிறைவேற்றுவதில்லை என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம் சொல்ல விரும்புகிறேன்.

திருப்பூருக்கு இரண்டாம் குடிநீர் திட்டம் வழங்குதல் என்று சொல்லி 1983 டிசம்பர் மாதம் 13 ஆம் தேதி அடிக்கல் நாட்டப் பட்டது. இன்றைக்கு 4 வருடங்கள் ஆகின்றன. முதலமைச்ச ரவர்கள் அடிக்கல் நாட்டிய திட்டத்திற்கு இன்றையவரை இடம் கையகப்படுத்தப்படவில்லை, பவானி ஆற்றங்கரையில், அவ்வப் போது அறிக்கை விடுகிறார்கள். ஆனால் 4 வருடங்கள் கழித்தும் கூட, அந்தக் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்படவில்லை என்றால் என்ன அர்த்தம்? என்ன நியாயம் இன்றைக்கு குடிநீர் விநி யோகம் செய்கிறார்கள். ஆனால் 4 வருடங்களாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக் கப்படுகிறது. இத்தகைய ஒரு நடைமுறை, மக்களின் தேவை களை உணர்ந்து செயல்படும் பொறுப்புள்ள அரசின் நடவடிக்கை யல்ல. இந்த மாநில அரசு பொறுப்பை உணர்ந்து நடவடிக்கை எடுத்திருந்தால், உடனடியாக அதற்குரிய நிலத்தைக் கையகப் படுத்த வேண்டும். முதல்வரவர்களே அடிக்கல் நாட்டுகிற ஒரு திட்டத்திற்கு இடமே வாங்காமல் அடிக்கல் நாட்டுகிறார்கள். இடமே வாங்காமல் அடிக்கல் நாட்டினால் எப்படித் திட்டம் நிறைவேறும்? அது நிறைவேறாமல் தாமதமாகிறது. இது சரியல்ல என்பதைத்தான் இங்கே குறிப்பாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இறுதியாக ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரையில் * * ஒரு சின்ன தூறல் விழுந்தால்கூட ரோடுகள் அடிபட்டுப் போகின்றன. அப்படி ரோடுகளைப் போடுகிறார்களா அல்லது ரோடுகள் போடுவதுபோல் பாசாங்கு செய்கிறார்களா என்பது கேள்விக்குரியதாக இருக்கிறது. எங்கேயாவது ரோடு ஒழுங் காக இருக்கிறதா? மாநிலத்தில் எந்தப் பாதையும் ஒழுங்காக இல்லை * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ரோட்டைப் பற்றிப் பேசுங்கள். ரோடு இல்லை என்று சொல்லுங்கள். (குறுக் கீடு).

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றன.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் மற்றைய மாநிலங்களை எல்லாம் பார்த்துவிட்டு வர வேண்டும். மேற்கு வங்கத்தில் ரோடுகள் எப்படி எப்படி இருக்கின்றன, மற்ற மாநிலங்களில் ரோடுகள் எப்படி இருக்கின்றன என்று பார்த்து விட்டு வந்தால் தமிழ்நாட்டுப் பாதைகள், மற்றவைகள் எல்லாம் எப்படி இருக்கின்றன என்பது தெரியும். எங்கேயாவது ஒன்றிரண்டு இடங்கள் சரியில்லை என்றால், தமிழ்நாட்டு ரோடுகள் எல்லாம் பாழ் என்றால் எப்படி? * * என்று எப்படிச் சொல்லலாம்? (பலத்த கரவொலி).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கட்சி பற்றி சொன்ன உதாரணம் வேண்டாம், * * என்று சொன்னதை நீக்குகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆரவாரமாகக் கைத்தட்டி விடுவதால். . . (குறுக்கீடு)

**திரு. கி. மனோகரன்:** துணைத் தலைவரவர்களே, அவை முன்னவர் அவர்கள் பேசும்போது, விவகாரங்களைப் பற்றிப் பேசியதைப் பற்றி ஒன்றும் கவலையில்லை. உதாரணம் பேசி அவரவர்கள் திருப்திபடக்கூடாது. அது வேறு. ஆனால் கட்சியை இழுத்து வைத்துக்கொண்டு பேசுவது என்பது முறை யான காரியமல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசும் போது அமைதியாக இருந்தீர்கள். . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, * * அது தப்பு என்றால் இதுவும் தப்பு, அது சரி என்றால் இதுவும் சரி. (பலத்த கரவொலி) (குறுக்கீடு) அமைதியாகத்தான் நான் எப்போதும் பேசுவேன். இப்படிப் பேச வேண்டிய அளவுக்கு வைத்துவிட் டார்கள்.

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றன.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒரு விஷயத்தைச் சொல்லும்போது, அந்த விஷயத்திற்கு உதாரணம் சொல்வது ஒன்றும் மரபுக்கு விரோதமல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மரபு முறையாக இருக்க வேண்டும். ** என்று சொல்லக்கூடாது. ஆகவே இரண்டு பேரும் கட்சி பற்றிச் சொன்னதை நீக்கிவிடுகிறேன். விஷயத்தைச் சொல்லுங்கள். நடவடிக்கை எடுப்பது போன்று ஏதாவது பேசுங்கள்.

**திரு. கே. சுப்பராயன் :** துணைத் தலைவரவர்களே, நடவடிக்கைகள் எடுப்பதில்லை என்ற முடிவோடு. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ரோடே சரியில்லை என்று சொன்னீர்கள். பல மாநிலங்கள் பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். பல இடங்களிலே இருப்பதைப் பார்த்தால் இங்கே சிறப்பாக இருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மேற்கு வங்கம் பற்றி எல்லாம் குறிப்பிட்டார்கள். வசதிக்குத் தக்கபடி மேற்கு வங்கத்தை மேற்கோள் காட்டக்கூடாது. கர்நாடகம் ஒரு விஷயத்தில் நல்ல உதாரணமாக இருக்கிறது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அங்கே கொடுத்திருக்கிறார்கள். மாநில அரசு போல பட்ஜெட் போட்டு, மிகக் குறைந்த நேரத்தில் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நிதியைத் தந்திருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு நாவலர் அவர்கள் எழுந்து பதில் சொல்வார்களா? கர்நாடகாபோல் இந்த மாநிலத்திலும் கொண்டுவருவோம் என்று சொன்னால் பாராட்டலாம்.

(முற்பகல் 11-50)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திட்டங்களைச் சொல்லுங்கள். கேள்வி மட்டும் கேட்காமல் இந்தமாதிரியெல்லாம் கொடுங்கள் என்று நீங்கள் வேண்டுகோள் வைக்கலாம். இங்கே இருக்கின்ற பல ஸ்கீம்கள் மற்ற மாநிலத்திலே இல்லை

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





என்று அவர்களும் சொல்வார்கள். அந்த மாநிலங்களில் இருக்கின்ற மாதிரி செய்யுங்கள் என்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பற்றி ஒரு கொள்கை முடிவு எடுக்கலாம். அதை அவர்கள் பண்ணுவார்கள். ஆனால் கேள்வி கேட்டு பதில் சொல்லுங்கள் என்று கேட்பதால் நேரம் போகிறது. விவாதம் நீண்டு கொண்டு போகிறது.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி பதில் அளிக்கின்ற போதாவது சொல்லவேண்டும். கர்நாடகாவில் என்ன நடைமுறையில் இருக்கின்றதோ அதுபோல உள்ளாட்சியில் வேலைகள் இங்கே செய்ய முடியவில்லை. தீர்மானங்கள் போட்டால் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு அதிகாரம் இல்லை. அதிகாரம் பறிக்கப்பட்டது. நிதியும் சுருக்கப்பட்டுவிட்டது. ஆகவே மக்களின் பிரச்சினைகள் காலத்திலே தீர்ப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதால் நிதி உதவியை அதிகப்படுத்தி, அதிகாரம் அதிகப்படுத்தி கொடுக்கவேண்டும். அதற்குப் பொருத்தமான சட்டமுன்வடிவை மாநில அரசு கொண்டு வருமா என்று கேட்டு நன்றி கூறி முடிக்கிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்டத்தின் மீது ஜனதா கட்சியின் சார்பாக நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கல்வித் துறைக்காக வேண்டி அதிகமாக 11 கோடி ரூபாய் இதிலே ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே 600 கோடி ரூபாய்க்குமேல் அனுமதி கொடுத்து இருக்கிறோம். மேற்கொண்டு 11 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த 11 கோடி ரூபாய் எதற்காக செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன். காரணம் பள்ளிகளிலே அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை. பள்ளிகளிலே உட்காருவதற்குத் தரை கிடையாது. பள்ளிகளிலே மேலே கூரை கிடையாது. பள்ளிகள் இடிந்து விழுகின்ற நிலையில் இருக்கின்றன. தரை இல்லை என்று நான் சொல்வது என்ன என்றால் தரையில் சிமெண்ட் பூசியதே போய்விட்டது என்பது தான். சிமெண்ட் போட்டது ஒரு மாதம்கூட நிற்கவில்லை என்கின்றது. அந்த அளவிலே காண்ட்ராக்ட் வேலை நடந்து

கொண்டிருக்கின்றது. அதையெல்லாம் நான் இங்கே சொல்ல வேண்டியிருக்கிறது. கல்விக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை. அதுபோலவே கிராமங்களிலே இருக்கக் கூடிய பள்ளிகளிலே 85 மாணவர்கள் இருக்கக்கூடிய இடத்திலே இரண்டு ஆசிரியர்களை வைத்து நடத்துகின்றார்கள். இன்னொரு ஆசிரியர் போடவேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது இன்னும் நடைபெறவில்லை. இதையெல்லாம் கல்வித்துறையிலே செய்யவில்லை. கல்வித் துறையிலே செய்யவேண்டிய காரியங்கள் எத்தனையோ இருக்கின்றன. உங்களுடைய பட்ஜெட்டிலே ஏறத்தாழ ஆறில் ஒரு பங்கு பணம் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கணக்குச் சொல்கின்றார்கள். அது எல்லாம் சம்பளத்திற்கே போய்விடுகிறதா? பற்றவில்லையா என்று எனக்குத் தெரியவில்லை. அதைப் பற்றித் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பொதுச் சுகாதாரம் பற்றிச் சொல்கிறேன். நீங்கள் அதைப்பற்றி கவலைப்படவில்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. எங்குமே சுகாதார வசதி இல்லை. நகர்ப்புறம் மட்டுமல்ல, கிராமப் புறங்களிலும் அப்படித்தான் இருக்கிறது. ஊர் நடுவிலே சாக்கடை சென்று கொண்டிருக்கிறது. அந்த சாக்கடைகளை எந்த முறையில் அகற்றுவது, எப்படி மக்களுக்கு சுகாதார வசதிகளைச் செய்து கொடுப்பது என்று நீங்கள் போட்டிருக்கின்ற திட்டமே சரியாகப் போடப்படவில்லை என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். இதற்கு ரூ. 32 லட்சம் செலவழித்திருப்பதாகச் சொல்கின்றார்கள்.

வேளாண்மைத் துறையில் 7 கோடி ரூபாய் செலவழிப்பதாகச் சொல்கின்றார்கள். கேரளாவிலே செல்கின்ற ஆறுகள் மேற்கு நோக்கிப் பாய்ந்து நீர் கடலிலே வீணாகப்போய் விழுகிறது. அதை கிழக்கு நோக்கித் திருப்பி தென் மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் பயன் அடைகின்ற வகையிலே பேச்சு நடப்பதாக மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்தில் 6 மாதத்திற்கு முன்பு சொல்லி இருக்கின்றார்கள். அதன்பிறகு என்ன பேச்சுவார்த்தை நடந்தது என்று தெரியவில்லை. என்ன பேசினார்கள்? இங்கிருந்து அமைச்சர் அவர்கள் சென்று அங்கே பேசினார்களா? அங்கேயிருந்து அமைச்சர்கள் வந்து இங்ேயுள்ள அமைச்சரோடு பேசினார்களா? இதுபற்றி





மத்திய அரசிடம் பேசினார்களா? அந்த விவரங்கள் எதுவும் எனக்குத் தெரியவில்லை. வேளாண்மைத் துறைக்காக ஒதுக்கப்படும் தொகையெல்லாம் வீணாக ஆகி இருக்கிறது. கண்மாய்களை ஆழப்படுத்துவதாகச் சொன்னார்கள். அந்தக் கண்மாய்களை ஆழப்படுத்துவது கோடைக்காலத்திலே தான் இருக்கவேண்டும். மழைக்காலத்திலே ஆழப்படுத்துவது என்பது சரியாகாது. மழைக்காலம் வரும்போது ஆழப்படுத்துவதாக சொல்லி டெண்டர் விட்டு டெண்டர் பணத்தை கான்ட்ராக்டர்கள் வாங்கிக்கொண்டு சென்றுவிடுகிறார்கள். வேலை ஆரம்பித்த உடனே தண்ணீர் வந்துவிடுகிறது. தண்ணீர் வந்துவிட்டதால் வேலை நின்றுவிடுகிறது. ஆனாலும் பணம் அவர்களுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டது. வேலைகள் எல்லாம் நின்று விட்டது. இப்படித் தான் நடந்து கொண்டிருக்கிறது.

இன்னொன்று சொல்லும்போது, பல இடங்களில் பல திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. பெரியாறு திட்டம், 152 அடி அதன் கொள்ளளவு. நமக்கு அதில் உரிமை இருக்கிறது. 136 அடி கொள்ளளவு நீர்தான் இருக்கின்றது. இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பல ஆண்டுகள், 10 ஆண்டுகள் ஆகிவிட்டது. இன்னும் அது முடியவில்லை. ஆனால் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, இந்த பிரச்சினையிலே டெண்டர் முடிவாகவில்லை. இதிலே பிரச்சினை என்ன? அந்த டெண்டர் முடிவு ஏன் காலதாமதமாகிறது? காரணம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. துறையினுடைய நிலைமை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாக தெரியும். இந்தத் துறை மூலம் பயன்பெற வேண்டிய மக்கள் மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் லட்சக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். பொதுப்பணித் துறை இன்னும் விறுவிறுப்பாக நடந்துகொள்ள வேண்டும். காரணம் இன்றைக்கு நாட்டிலே 70 சதவிகிதம் பேர் விவசாயிகள். மேலும் அவர்களுக்கு கடன் வழங்குவதில் முன்னுரிமை வழங்க வேண்டும்.

அடுத்து கைத்தறித் துறை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். இத்துறைக்கு 12 லட்சம் ரூபாய் புதிதாக ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த அரசு கைத்தறித் துறையைப் பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. இன்றைக்கு ஏறத்தாழ 30 லட்சம் பேர் இந்தத் துறையில் பணியாற்றிக்

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1987 நவம்பர் 18

கொண்டிருக்கிறார்கள். ஆனால் உள்ளபடியே அவர்கள் எந்தப் பயனையும் அனுபவிக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் பலருக்கு அடுத்தவேளை சாப்பாட்டுக்கு வழியில்லை. நூல் சரியாகக் கிடைப்பதில்லை. கூலி சரியாகக் கிடைப்பதில்லை. துணி சரியாக விற்பனை இல்லை. கோவாப்டெக்சிலிருந்து சரியாக அவர்களுக்குப் பணம் கொடுப்பதில்லை. ரிபேட்டும் சரியாகக் கிடைப்பதில்லை. இப்படி அவர்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தேர்தலையும் நடத்தாமல் இருக்கிறீர்கள். தனி அதிகாரிகள் பலவிதமான தவறுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு சேலம் மாவட்டத்திலுள்ள அம்மாப்பேட்டை கோவாப்பரேட்டிவ் சொசைட்டியில் ஏற்பட்ட தவறுகள் பற்றி சென்ற கூட்டத்தொடரின்போது எடுத்துச் சொன்னேன். அதுகுறித்து விசாரணை நடத்துவதாக அப்போது சொன்னார்கள். விசாரணையும் நடந்தது. ஆறு மாதம் ஆகிவிட்டது. இன்னும் அறிக்கை வைக்கப்படவில்லை. அது என்ன ஆயிற்று? அதுபற்றி ஒன்றும் தெரியவில்லை. இத்துறையிலுள்ள குறைபாடுகளை நல்லமுறையில் சீர்தூக்கிப் பார்த்து ஏழையெளிய மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, ச மூக நலத் துறைக்கு ரூ. 4 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். முதியோர்களுக்கு 35 ரூபாய் பென்சன் அளிக்கும் திட்டம் வரவேற்கத்தக்கது. ஆனால் சிறிய வீட்டுக்கே இன்றைக்கே 25 ரூபாய் குடக்கூலி கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அதுவும் விலைவாசி அதிகமாகிவிட்ட நிலையில் அவர்கள் வாழ்க்கை நடத்துவது கஷ்டமாக இருப்பதால் இன்னும் அதிகமாக அதை உயர்த்திக் கொடுக்க வேண்டும். திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் அமைச்சராக இருந்த நேரத்தில் இதுபற்றி கேட்டபோது அதிகமாகக் கொடுப்பது பற்றிப் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். இதுகுறித்து கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1987 நவம்பர் 18] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

அடுத்து, சத்துணவுக் கூடங்களைப் பொறுத்தவரையில் சின்ன குழந்தைகள் தவிர, மற்றும் மேல் கூரை பழுதுபட்டுள்ளதால் உள்ளே போய் வர முடியாத அளவுக்கு நிலைமை இருக்கிறது அதுமாத்திரமல்லாமல் அங்கே எல்லாம் உடைந்த நிலைமையில் காணப்படுகின்றன. அதை எல்லாம் சரி பண்ண வேண்டுமென்று கேட்டாலும் சரி, எதைப்பற்றி கேட்டாலும் சரி, உடனே பணம் இல்லையென்று சொல்கிறார்கள். எப்போது பணம் வரும்?

அடுத்து, நுகர்பொருள் துறைக்கு 50 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் சலுகை விலையில் பொது மக்களுக்கு உணவுப்பொருள்களை வழங்குகிறது. ஆனால் அங்கே என்ன நடக்கிறது? சிவில் சப்ளைஸ் விற்பனையை கூட்டுறவுத் துறைக்கு மாற்றியிருக்கிறார்கள். சிவில் சப்ளைசில் பணியாற்றிக் கொண்டிருந்த ஊழியர்கள் இன்றையதினம் போராட்டம் நடத்துகிறார்கள். நோட்டீஸ் எல்லாம் ஒட்டினார்கள். ஏதோ சாம்ராஜ்யத்தையே இழந்துவிட்டது மாதிரி அவர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இந்த ரேஷன் கடைகளில் ஒழுங்காக அத்தியாவசியப் பொருள்கள் வினியோகிக்கப்படுகிறதா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். ஏதோ கொஞ்சம் அரிசியைக் கொடுத்துவிட்டு, நிறுத்திவிட்டு போட்டாச்சு என்று சொல்லிவிடுகிறார்கள். அதுபோல் பாமாயிலையும் சரியாகக் கொடுப்பதில்லை. எந்தெந்த சரக்குகளுக்கு வெளி மார்க்கெட்டில் விலை கூடுதலோ அதை எல்லாம் மக்களுக்கு அவர்கள் சரியாக விநியோகிப்பதில்லை. இதிலே போதிய கவனம் செலுத்தி, மக்களுக்கு நல்லமுறையில் உணவுப் பொருள்கள் கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சாலைகளும் பாலங்களும் என்று பார்த்தால் அவற்றுக்காக 1 கோடியே 20 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது போதாது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் எதற்கெடுத்தாலும் நிதி ஆதாரங்கள் இல்லை என்று இங்கே சொல்கிறார்கள். எப்போது நிதி ஆதாரங்கள் வரும் என்றும் தெரியவில்லை. உடனடியாக விழுப்புரத்திலே உள்ள ரயில் லெவல் கிராசிங்கில் இரண்டு மேம்பாலங்களையும்

[திரு. எ. எஸ். எ. ஆறுமுகம்] [1987 நவம்பர் 18

கட்ட வேண்டும். அதுபோல உளுந்தூர்பேட்டையிலுள்ள மேம்பாலத்தையும் கட்ட வேண்டும். இவற்றை கட்டாததனால் இருவழிகளிலும் பஸ்கள் 10-க்கு மேற்பட்டவை வரிசையாக அங்கே நிற்கின்ற நிலைமை இருக்கிறது. அதுபோல விருதுநகரில் உடனடியாக ரெயில்வே மேம்பாலம் கட்டப்பட வேண்டும். மேம்பாலம் அங்கே கட்டப்படாததால், மாவட்டத் தலைமை மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக வருகிற நோயாளிகள், ரயில்வே கேட்டுக்கு பக்கத்திலேயே செத்துப் போகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே உடனடியாக அங்கே ரெயில்வே மேம்பாலத்தை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

அடுத்து, ஊரகத் தொழிலைப் பொறுத்தவரையில் எல்லோரும் கிராம ராஜ்யம் ஏற்பட வேண்டுமென்று சொல்கிறோம். அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் கூட ஒன்றைச் சொன்னார். கர்நாடக மாநிலத்தில் கிராம ராஜ்யம் ஏற்பட முழு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோல தமிழகத்திலேயும் கிராம ராஜ்யம் ஏற்படக் கூடிய அளவிலே உள்ளாட்சித் துறைக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இருக்கிற அதிகாரத்தையும் பறிக்கின்ற நிலைமை கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். கிராமங்களில் உண்மையிலேயே கிராம ராஜ்யம் ஏற்பட வேண்டும். கர்நாடகத்தில் அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டு கிராமங்கள் கிராம ராஜ்யங்களாக விளங்குகின்றன. இங்கேயும் கிராமங்களுக்கு அதிக அதிகாரம் கொடுப்பதோடு, அதிகத் தொகை ஒதுக்கீடு செய்து, கர்நாடகத்தில் செய்திருப்பதைப்போல செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஊரகத்தொழில் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். அங்கே சாலைகள் போடப்படவில்லை; போடப்பட்ட சாலைகளும் சரியான முறையில் போடப்படவில்லை. ஊரகத் துறையிலிருந்து எந்த விதமான தொழிலும் கிராமங்களில் நிறைவேற்றப்படவில்லை. 4 இலட்சம் ரூபாய்தான் இதற்கு ஒதுக்கியிருக்கிறீர்கள். இதைப் பார்க்கும்போது கிராமங்களைப் பற்றி



1937 நவம்பர் 18] [திரு. எ. எஸ். எ. ஆறுமுகம்]

நீங்கள் கவலைப்படவில்லை என்பது தெரிகிறது. இன்றைக்கு இந்தியாவில் இருக்கிற மக்களில் 85 சதவிதம் பேர் கிராமங்களில் தான் வாழ்கிறார்கள். அப்படி இருந்தும் ஏன் ஊரகத் தொழில்களில் கவனம் செலுத்தவில்லை என்பது தெரியவில்லை. இனி மேலாவது உரிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கர்நாடகத்தில் இருப்பதைப்போல இங்கேயும் உள்ளாட்சித்துறைக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர் பிரச்சினை இருக்கிறது. குடிநீருக்காக 25 கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறீர்கள். அதுவும் எப்படி செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் வறட்சி வந்தவுடன் லாரி மூலம் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டிருக்கிறது. லாரிகள் மூலம் எப்படித் தண்ணீர் வந்தது? அதைச் சொல்வதற்கே ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. யாரும் வேலைக்குப் போக முடியவில்லை. வேலைக்குப் போகாமல் காத்திருந்து தண்ணீர் பிடிக்க வேண்டி இருந்தது. ஏனென்றால் ஒரு நாள் காலையில் 6 மணிக்குத் தண்ணீர் வரும், ஒரு நாள் 12 மணிக்கு வரும்; ஒரு நாள் மாலை 6 மணிக்கு வரும். இப்படி வந்தால் எப்படி வேலைக்குப் போக முடியும்? தண்ணீர்ப் பிரச்சினையினால் தாய்மார்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். லாரிகள் மூலமாகத் தண்ணீர் சப்ளை செய்ததில் பல பிரச்சினைகள் வந்தன, சொல்வதற்கு நேரமில்லை.

கடைசியாக கிருஷ்ணா நதி தண்ணீர்த் திட்டம். ஏறத்தாழ 40 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள். இன்னும் அதுபற்றி பேச்சு மூச்சு கூட இல்லை. சென்னை மாநகர மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்று கேட்டு, முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையிலே ஒன்றும் நடக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பொதுவான குற்றச்சாட்டைச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் முதன் முதலாக, தஞ்சை மாவட்டத்தில் தாளடி பயிர் விதைக்கப்பட்டு, நல்லமுறையில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. தண்ணீர் விடப்பட்டிருக்கிறது; விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்

[திரு. சு. இராசாராம்] [1987 நவம்பர் 18

கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கிற அந்த மாவட்டத்தில் கூட நல்ல மழை பெய்து எல்லாக் கண்மாய்களும் நிரம்பி, விவசாய வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஒரு வேளை அதிகமாக நடக்கவில்லை என்று குறிப்பிடுகிறார்களா என்பது தெரியவில்லை.

அதோடு மானாவாரி சாகுபடிக்கு என்று எல்லா வங்கிகளிலும் 500 ரூபாய், 600 ரூபாய் கடன் தந்துகொண்டிருக்கிறார்கள். மேலும், ஏறத்தாழ 4.25 கோடி ரூபாய் அளவுக்கு உரமும் பூச்சிக் கொல்லி மருந்தும் கொடுத்திருக்கிறோம். அதற்கு மத்திய அரசின் உதவியைப் பெற்றிருக்கிறோம். வேளாண்மைத் துறையில் இதைவிட என்ன செய்ய முடியும் என்று அவர்கள் எதிர் பார்க்கிறார்கள் என்பது தெரியவில்லை.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கர்நாடகம், கர்நாடகம் என்று சொல்கிறார்கள். அங்கே என்ன நடக்கிறது என்று எனக்கும் தெரியும். குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக இல்லை. கிராமப்புறங்களிலும் சரி, மற்ற இடங்களிலும் சரி, தாய்மார்கள் குடிநீருக்காக அலையக்கூடாது என்று சொல்லி தமிழ்நாட்டில் ஏராளமான குழாய்கள் போட்டிருக்கிறோம்.

**திரு. எஸ். வேணுகோபால் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் துணைமானியக் கோரிக் கைகள் பற்றிய மசோதாக்கள்மீது பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கிற பிரச்சினைகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால். குறிப்பாக மாநகராட்சிகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், எனக்கு முன்னாலே பேசியவர்கள் பல பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டினார்கள். கார்ப்பரேஷன் களில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. போதாத குறைக்கு தற்போது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தனியாக ஒரு 'பில்' கூட கொண்டுவந்திருக்கிறார்கள். அதிலே கொடுக்கப்பட்டிருக்கிற அறிவிப்பைப் பார்க்கும்போது சென்னை மாநகர மக்களும், கோவை மாநகர மக்களும், மதுரை மாநகர மக்களும் மிகவும் துன்பத்திற்கு ஆளாவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1987 நவம்பர் 18] [திரு. எஸ். வேணுகோபால்]

காரணம் என்னவென்றால் இப்போதே இந்த மூன்று மாநகரங்களிலும் இருக்கிற மக்கள் வீட்டுவரி பிரச்சினையில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். வீட்டுவரி நிர்ணயிக்க வருகிற அசசர்களுக்கு அதிகமாக கையூட்டு கொடுத்தால்தான் வரியை குறைத்து நிர்ணயிக்கிறார்கள். பெயரை மாற்ற வேண்டுமென்று சொன்னால் கூட கையூட்டு கொடுக்க வேண்டிய நிலைமை இருக் கிறது. இன்னும் வரியை உயர்த்தினால் ஏழை எளிய மக்கள், சாதாரண மக்கள், நடுத்தர மக்கள்தான் அதிகமாகப் பாதிக்கப் படுவார்கள். வீட்டுச் சொந்தக்காரர்கள் வாடகைக்கு இருப் பவர்கள் தலையிலேதான் அதைச் சுமத்துவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. மூன்று மாநகர மன்றங்களுக்கும் இன்னும் தேர்தல் நடத்தவில்லை. தேர்தலை நடத்த வேண்டும், தேர்தலை நடத்த வேண்டும் என்று நாங்கள் சொல்லிக்கொண்டி ருக்கிறோம். நாம் தோழமைக் கட்சிகள் என்பதால் அந்த உணர்வோடு சொல்கிறேன்; தயவுசெய்து தவறாக நினைக்க வேண்டாம். இந்தக் காரணத்தினால் அவை நம்முடைய கைக்கு வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகரத்தின் பிரச்சினைகள் பெருகிக் ஏனென்று சொன்னால் கொண்டே இருக்கின்றன. பல்வேறு பிரச்சினைகளால் மக்கள் துன்பப்படுகிறார்கள். அதோடு வீட்டுவரி உயர்வு பிரச்சினையும் வரப்போகிறது. சட்டத்தின் விதிகளைப் பார்க்கும்போது பல கட்டுப்பாடுகளை எல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். அட்டை போட வேண்டும்; கையெழுத்துப் போட வேண்டும்; வாடகைக்கு இருப்பவரும் கையெழுத்துப் போட வேண்டும் என்றெல்லாம் இருந்தாலும் வீட்டுச் சொந்தக்காரர்கள் இந்த வரி உயர்வை வாடகைக்கு இருப்பவர்கள் தலைமேல்தான் சுமத்துவார்கள் என்பதை அரசாங்கம் மறந்துவிடக் கூடாது. இது ஏழைகளின் அரசு, ஏழைகளைப் பாதுகாக்கிற அரசு என்று பெருமையோடு சொல்லிக்கொள்கிற காலக் கட்டத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலை உருவாக வேண்டாம் என்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எங்களுடைய தொகுதியில் கொருக்குப்பேட்டை பாலம் ஒன்று இருக்கிறது. திருவொற்றியூர் ரோட்டையும், கொருக்குப்பேட்டை ரோட்டையும் இணைக்கிற ஒரு பாலம் அது. மத்திய சர்க்கார் கட்டிக் கொடுத்து இரண்டு மூன்று ஆண்டுக் காலம் ஆகிவிட்டது. ஆனால் மாநில சர்க்கார் அதைக் கண்டு கொள்ளவே இல்லை. அங்கே இருக்கிற பிரச்சினை தீர்க்கப் படவே இல்லை. கேட்டால் சிக்கல் என்று சொல்கிறார்கள். உடனடியாக அப்படிப்பட்ட பாலங்களைக் கட்டி, மக்களுடைய நல்வாழ்வுக்குப் பயன்படக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தண்ணீர்ப் பிரச்சினை சென்னையிலே தீர்ந்துவிட்டது என்று சொன்னார்கள். உண்மையிலேயே நன்றாகச் செய்தார்கள். நாங்களும் சட்டமன்றத்திலே பாராட்டினோம்; வாரியத் தலைவர் திரு. ஜேப்பியார் அவர்களைப் பாராட்டி னோம். 15 ஆம் தேதிக்குப் பிறகு மழை வந்துவிட்ட காரணத் தாலே பல இடங்களில் தண்ணீர் விடப்படவில்லை என்று சொல்கிற புகார் வந்திருக்கிறது. டேங்குகள் காலியாக இருக் கின்றன. தண்ணீர் ஊற்றப்படவில்லை. தண்ணீர் வண்டி களில் கொண்டுவரப்படவில்லை. ஏன் என்று கேட்டால் ப்ரஷர் அதிகமாக்கியிருக்கிறோம், அதனால் தண்ணீர் ஊற்று வதை நிறுத்தி விட்டோம் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து ஆவன செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். தண்ணீர் வரவில்லை, தண்ணீர் கிடைக்கவில்லை என்ற நிலைமை யில் மக்கள் குரல்வளை வெதும்பி, உள்ளங்கள் கொதித்து எழுந்து மக்களே சாடுகிற கட்டத்திற்கு ஆளாகிவிடுவார்கள் என்று இந்தக் காலகட்டத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இருக்கிற பிரச்சினை நுகர்பொருள் வாணிபக் கழகத் திலே இருக்கின்ற கூட்டுறவுப் பண்டகசாலைக் கடைகளில் கலப் படம் அதிகமாக்கப்பட்டிருப்பதால் ஏழை எளிய மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். * * என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. (குறுக்கீடு)

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நியாய விலைக் கடைகள் எல்லாவற்றிலும் * * என்று சொல்வது சரியல்ல. எந்தக் கடை என்று சொன்னால் அமைச்சர் அதுகுறித்து நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே பொது வாகச் சொல்வது சரியல்ல. எந்தக் கடை என்று ஸ்பெசிஃபிக் காக எழுதிக்கொடுங்கள். நீங்கள் சொல்வதைப் பார்த்தால் தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கடைகளும் என்று வந்துவிடும். ஆகவே அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படு கின்றன.

**திரு. எஸ். வேணுகோபால் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் கொடுத்திருக்கின்ற கருத்துக்கு நன்றி. நான் சொல்வது சென்னை மாநகரத்திலே குறிப்பாக வடசென்னையில் வண்ணாரப்பேட்டை கூட்டுறவு பண்டகசாலைக் கடைகளை எடுத்துக்கொண்டால் அங்கே கார்டுகள் அதிகமாகி விட்டன. அதாவது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எடுத்துக் கொண்டபின் கார்டுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு விட்டன. ஒரு கடைக்கு 1,000 கார்டுகள், 1,500 கார்டுகள் என்று அதிகமாக்கப்பட்டுவிட்ட காரணத்தால் மக்கள் அவதிப்படு கிறார்கள். காலையிலே கடைக்குப் போகிற தாய்மார்கள் மாலையில், வேலைக்குச் சென்ற கணவன் திரும்பி வருகிற வரையில் வீடு வந்து சேரவில்லை. கணவன் வந்து மனைவியை எங்கே காணோம் என்று கேட்டால் மனைவி ரேஷன் கடையிலே நிற்கிறாள். மனைவி மட்டுமா நிற்கிறாள்? மனைவி ஒரு இடத் தில் நிற்கிறாள். மகன் ஒரு இடத்தில் நிற்கிறான். தந்தை ஒரு இடத்தில் நிற்கிறான். இப்படி பகிர்ந்து நிற்பது சிரமங்களை ஏற்படுத்தி நமது அரசுக்குக் கெட்ட பெயரை உருவாக்கிவிடும் என்பதைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே சொல்லியாகவேண்டும். முன்பு மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களிடத் திலே ஒரு புகார் கொடுத்தோம். உடனடியாக அவர்கள் 5 பேர் மீது நடவடிக்கை எடுத்தார்கள். அவ்வாறு நடவடிக்கை எடுத்

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

கப்பட்டதே தவிர, பிறகு மறுபடியும் அவர்கள் வேலைக்குச் சேர்ந்துவிட்டார்கள். அங்கே பாமாயிலில் கலப்படம், அரிசியில் கலப்படம், எடைக் குறைவு என்று இப்படிப்பட்ட பிரச்சினைகள் தினந்தோறும் ஏற்படுவது இந்த அரசுக்குக் கெட்டபெயரை உருவாக்கிவிடும். நான்கூட 19—10—1987-லே **உண்ணாவிரதம்** இருந்தேன். அவ்வாறு உண்ணாவிரதம் இருந்தது **அதிகாரிகள்** செய்த தவறைக் கண்டிக்க வேண்டும் என்பதற்காகத்தான். நடைமுறையில் அதிகாரிகள் கவனிக்கிறேன் என்று சொல்கிறார் களே தவிர, நடைமுறையில் அவர்கள் என்ன செய்தார்கள்? மக்களின் குறை தீர்ந்திடவில்லை. இந்த அரசு ஏழை எளிய வர்கள் பொருட்களை வாங்குகிற உணவுப் பங்கீட்டுக் கடைகளில் கவனம் செலுத்தவேண்டும். அதிகாரிகள் போய்ச் சோதனை செய்ய வேண்டும். அவ்வாறு சோதனை செய்து—உள்ளே பல கடைகளில் ஆட்கள் இருக்கிறார்கள்—குறிப்பிட்ட சம்பவங்கள் குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து வண்ணாரப்பேட்டை கூட்டுறவுச் சங்கங்களில் அழுகிய வெங்காயத்தையும், உருளைக்கிழங்கையும் போடுகிறார் கள். வாங்கியே தீரவேண்டும் என்று சொல்கிறார்கள். என்னுடைய கார்டு போகிறது. அவர்கள் அதற்கு அவ்வாறு கூறுகிறார்கள். நான் எனக்காகச் சொல்லவில்லை. மக்களின் பொதுநலனுக் காகச் சொல்கிறேன். போட்டே தீருவேன் என்கிறார்கள். எத்தனை அதிகாரிகள் சொன்னாலும் சரி, ஏ.சி., சொன்னாலும், டி.சி., சொன்னாலும். அங்கே கூட்டுறவுப் பண்டகசாலையிலே இருக்கின்ற நிர்வாகிகள் கேட்க மறுக்கிறார்கள். இதற்கு என்ன பொருள்? அரசு இதற்கு ஒத்துழைக்கிறதா என்றால் இல்லை, ஆனால் மேலே இருக்கிற அதிகாரிகள் ஒத்துழைக்கிற காரணத் தால் அரசுக்குக் கெட்ட பெயர் வரும் என்பதால் தயவு கூர்ந்து இப்படிப்பட்ட பிரச்சினைகளில் கவனம் செலுத்தவேண்டும் என்று கூறி வாய்ப்பு தந்ததற்கு நன்றி கூறி முடித்துக்கொள் கிறேன்.





(பிற்பகல் 12-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டு முதல் துணை மானியக் கோரிக்கைகளின் மீது கொண்டு வரப் பட்ட நிதி ஒதுக்கீடு சட்டமுன்வடிவின் மீது மாண்புமிகு உறுப் பினர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். பொதுவாக துணை மானியக் கோரிக்கைகளின் மீது விவாதத்தில் பேசியதற்குப் பிறகு, பொதுவாக நிதி ஒதுக்கீடு மசோதாவிலே சாதாரணமாகப் பேசுவதில்லை; விவாதமும் நடைபெறுவதில்லை. சாதாரண மாக அப்படியே நிதி ஒதுக்கீட்டை ஏற்றுக்கொள்வதுதான் நடைமுறையாகவும் இருந்து வந்திருக்கிறது. அப்படியே இருந் தாலும்கூட இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்கள் கருத்துக்களை மன்றத்திலே எடுத்து வைக்க வேண்டும் என்கிற ஆர்வத்தின் காரணமாகப் பொது விவாதத்தின் போது எடுத்து வைக்க வேண்டிய கருத்துக்களையும், மானியக் கோரிக்கைகளின் மீது எடுத்து வைக்க வேண்டிய கருத்துக்களையும், இந்தத் துணை மானியக் கோரிக்கைகளிலே, ஒதுக்கீடு செய்யாவிட்டாலும் கூட, அந்தத் தலைப்பின் கீழ் எடுத்து வைக்கலாம் என்ற அளவுக்குப் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அவைகள் எல்லாம் கவனிக்கப்பட வேண்டியவைகள் அல்ல என்று நான் சொல்ல வரவில்லை. இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி அதற்கு உடனடியாகப் பரிகாரம் காண இயலுமா என்பதுதான் கேள்வி. ஆக அந்த வகையிலே உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் ஒரு பொது விவாதமாக வும், பொதுத்தன்மை கொண்டதாகவும் அமைந்திருக்கிற காரணத்தால், அந்தக் கருத்துக்கள் அத்தனைக்கும் பல்வேறு நுணுக்கமான தன்மைகளில் பதிலை எடுத்துச் சொல்ல வேண்டும் என்றால் முன்கூட்டியே அந்தந்தத் துறையைச் சார்ந்தவர்கள் அதனுடைய அடிப்படைத் தன்மைகள் மற்றவைகளை எல்லாம் கூர்ந்து ஆராய்ந்து அறிந்து எடுத்துச் சொன்னதற்குப் பிறகு தான், அவைகளை இங்கே எடுத்துச் சொல்ல முடியும். ஆக அந்த வகையிலே இந்தத் துணை மானியக் கோரிக்கை இங்கே எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னேன். 252 கோடியே 42 லட்சம் ரூபாய்க்கு துணை மானியக்

கோரிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான விவரங்களை எல்லாம் நான் எடுத்துச் சொன்னேன். பொது வரவு-செலவுத் திட்டத்தில் 1987-88 க்கு ரூ. 3,782 கோடிக்கு கொடுத்ததற்குப் பிறகு கூடுதலாகச் செலவு ஆக வேண்டிய நிலைமைகள் என்ன ஏற்பட்டன என்பதற்கான காரண காரியங்களை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

வறட்சியின் காரணமாக நாம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாகவும், புதிய நல வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாகவும் மின்சார வாரியத்திற்கு ஏற்படுகிற இழப்புகளை ஈடுகட்டவும் புதிய திட்டங்கள் என்று சிலவற்றை நிறைவேற்ற வேண்டிய இன்றியமையாத நிலைமை ஏற்பட்டதன் காரணமாகவும், நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு நாம் ஈடு கட்ட வேண்டிய அளவுக்குப் பொருள்கள் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாகவும், பல்கலைக் கழகத்தினுடைய நடப்புகளுக்கு அதிகமான அளவுக்கு தொகை ஒதுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாகவும், நியாய விலைக் கடைகளைக் காப்பாற்றுவதற்கும் அவற்றைச் சரிப்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய தன் காரணமாகவும், மருத்துவமனைகளுக்காக 7 அடுக்கு மாடிகள் கொண்ட கட்டிடம் கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டதாலும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குக் குடியிருப்புகளுக்காக ஒதுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதாலும் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அது பற்றிய குறிப்புகள் எல்லாம் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலபேர் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி குற்றச்சாட்டுகளைச் சொல்லுகிற அளவுக்கு சில மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் ஆதாரம் இல்லாமல் வீசி எறியப்படுபவைகள் எல்லாம் என்றைக்கும் வீழ்ந்தேதான் தீரும், நியாயத்தின் அடிப்படையில் எடுத்து வைக்கப்படுபவைகள்தான் நிலைபெற்று நிற்கும் என்பதையும் கருத்தில் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் இவ்விவாதத்திலே தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





முறைகேடுகள் இருக்கக்கூடும். ஆங்காங்கு சிலபல குற்றங்கள் நிகழக் கூடும். இருக்கிற சில குறைகளையும், குற்றங்களையும் எடுத்து ஒட்டு மொத்தமாக இதுதான் மொத்த உருவம் என்று வைத்துவிடுவோமேயானால், அது மொத்த உருவமாக ஏற்படுகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தாது. ஆக எதுவுமே நடைபெறவில்லை, எந்தத் துறையும் நடைபெறவில்லை, இந்த அரசே செயலற்று விட்டதா, அரசே நடக்கிறதா இல்லையா என்று கேள்விகள் கேட்பார்களேயானால், சாதாரணமாக அறிந்த, தெரிந்த, புரிந்த, பொறுப்பு வாய்ந்தவர்கள் அப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்க மாட்டார்கள் என்றுதான் படித்தவர்கள் உலகமும் அறிந்தவர்கள் உலகமும் எண்ணக்கூடும். உள்ளபடியே சிறந்த பல நிலைமைகளை ஆராயும்போது அங்கே ஒரு சில குறைபாடுகள் இருக்கக் கூடும். பல கோடிக்கணக்கான மக்களுடைய பொறுப்பினுடைய அடிப்படையில் நிகழ்கிற நிர்வாகத்திலே சில இடங்களில் சிலபல குறைபாடுகள் ஏற்படக் கூடும். குறைபாடுகளைச் சுட்டிக் காட்ட வேண்டிய பொறுப்பு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அமைந்திருக்கிறது. அப்படிச் சுட்டிக் காட்டப்பட்டதன் மூலம் அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு அரசுக்கும் வழி வகை ஏற்படுகிறது. குற்றங்களைக் களைவதற்கும் அரசுக்கு வழிவகை ஏற்படுகிறது.

இங்கே பல்வேறு தன்மைகளை எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசுகிறபோது தொழிலாளர்கள் பிரச்சினையை எடுத்துப் பேசினார்கள். மற்றவர்களும் பேசினார்கள். அதிலே இருக்கிற பல்வேறு சங்கடங்களைப் பொறுத்தவரையில், தொழிற்சாலைகள் மற்றவைகளை மத்திய அரசும், மாநில அரசும் முழுப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் வழங்குவது, அதிலே ஆதிக்கம் செலுத்துவது, கன்ட்ரோல் வைத்துக் கொள்வது, நூல் விலை, பஞ்சு விலை ஆகியவற்றை நிர்ணயிப்பது, அதற்குக் கடன் கொடுக்கிற வங்கிகள் அதனுடைய ஆதிக்கமெல்லாம் மத்திய அரசின் கீழ் இருக்கிறது.

காலையில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப்போல பிணக்குகள் என்று ஆரம்பித்ததற்குப் பிறகு மாநில அரசு சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுகிற நிலை வருகிறபோது கூப்பிட்டு [illegible]

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 நவம்பர் 18

இருசாராரையும் சமாதானப்படுத்தி ஒரு அமைதி நிலை ஏற்படுத்துகிற கட்டம் வருகிறபோது, ஆலை அதிபர்கள் சார்பிலோ அல்லது தொழிலாளர்கள் சார்பிலோ ஒரு பிரச்சினை ஏற்பட்டு முற்றிவிட்டதற்குப் பிறகு, பிரச்சினையைத் தீர்த்து வைப்பது என்ற நிலை வருகிறபோது சிலபல சங்கடங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இருக்கிற சட்டத்தின் அடிப்படையில் பார்க்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப் போல தீர்த்து வைக்க முடியாத அளவிற்கு சிலபல சட்டங்களும் மற்றவைகளும்கூட இருக்கின்றன. இவற்றைப் பொறுத்தவரையில், தொழிலாளர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய அத்தனை உரிமைகளும் கிடைக்க வேண்டுமென்பதைத்தான் இந்த அரசு விரும்புகிறது என்பதை நாம் நன்றாக அறிவோம். தொழிலாளர் நலத் துறையின் மானியக் கோரிக்கை வருகிறபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக எடுத்துச் சொல்வார்கள். இந்த அவையிலே பல தடவை எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுடைய நலன் பற்றி இயற்றப்பட்ட பலவேறு சட்டங்களின் இயல்புகள் அனைத்தையும் பலதடவை விவாதித்து இருக்கிறோம். அதனுடைய தன்மைகளை எல்லாம் விவாதித்து இருக்கிறோம். அவற்றை நடைமுறைப்படுத்துகிறபோது கூடுமானவரையில் நன்றாக இருக்கவேண்டும். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் பெரிய பெரிய ஆலைகள் மூடப்பட வேண்டிய சூழ்நிலையில் அல்லது மூடப்பட்ட சூழ்நிலையில் இருக்கின்றன. குஜராத், மகாராஷ்டிரம், வங்காளம், டெல்லி இப்படி வேறு பல மாநிலங்களில்கூட இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. இங்கே அப்படிப்பட்ட நிலை வருகிறபோது மாநில அரசு கூப்பிட்டு வைத்துப் பேசுகிறது. சில மாதங்களுக்கு இந்தப் பொறுப்பை வைத்துக்கொண்டு இருந்தபோது நான் அறிவேன். மாநில அரசு இயன்ற உதவிகளைச் செய்ய முடியும். 5, 6 மாதங்களுக்கு விற்பனை வரியை வசூலிக்காத அளவிற்கு, அந்த ஆலையை நடத்துகிற அளவிற்கு வாய்ப்புக் கொடுக்க முடியும். மின்வெட்டு ஏற்படாத வண்ணம் பார்த்து அதன்மூலம் அந்த ஆலையை உயிர்ப்பிக்க முடியுமென்றால் அந்த உதவியைச் செய்ய முடியும். அல்லது அந்த ஆலையைத் தொடர்ந்து நடத்த முடியுமென்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு அதற்கு உத்தரவாதத்தைத் தருகிற சூழ்நிலையில் வங்கிகளுக்கு ஒரு



1987 நவம்பர் 18] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கோடி அல்லது அரை கோடி அல்லது 30 லட்சம் அல்லது 20 லட்சம் என்று வருகிறபோது கேரண்டி, உத்திரவாதம் நாங்கள் தர முடியுமென்ற அளவிற்கு இந்த வசதிகளைத்தான் மாநில அரசு செய்ய முடியும். அப்படிச் செய்கிறபோது சிலபல நேரங்களில் தொழிலாளர்கள் தங்களுடைய ஒத்துழைப்பைத் தருகிறார்கள்.

கோயம்புத்தூரைப் பொறுத்தவரையில் கேள்விப்படுகிறேன், தொழிலாளர்களுடைய எண்ணிக்கையைக் குறைப்பதற்குப் பதிலாக சில இடங்களில் 3 ஷிப்டை 4 ஷிப்ட்டாகக் கூட சில மாதங்களுக்கு வைக்க ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். அப்படி வைத்தும்கூட அவர்கள் சொல்வதைப்போல பிடிவாதமாக சிலபேர் புதிய ஆலைகளை ஏற்படுத்திக்கொண்டு, பழைய ஆலை என்னவானாலும் சரி, அது தங்களுக்கு நஷ்டமல்ல, தங்களுடைய கைப் பொறுப்பல்ல, யாருக்கோ வருகிற நஷ்டமென்று இருப்பதைத் தடுப்பதற்கு இப்போது சட்ட திட்டங்கள் இல்லை.

அப்படிச் சொல்கிறபோது, குறிப்பாக மேட்டூரைப் பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி கூப்பிட்டு வைத்துப் பேசுகிறபோது, பாங்குகள் எல்லாம் சொல்கிறபோது 7½ கோடி ரூபாய் அளவிற்குக் கடன் வைத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதை ஏற்று நடத்துவதற்கு முடியுமா என்றால் அது வயபிளாக இல்லையென்று நம்முடைய அதிகாரிகளும் மற்றவர்களும் சொல்கிறார்கள். அரசு ஏற்று நடத்தினால் மக்களுடைய வரிப்பணம் 7½ கோடி ரூபாயைக் கொண்டு போய்ப் போட முடியுமா என்று தயக்கம் ஏற்படுகிறபோது, நடத்த முடியாத அளவிற்கு ஏற்பட்டு விடுகிறது. இப்படிப்பட்ட சிக்கல்கள் எல்லாம் இருந்தாலும் சிலபல ஆலைகளை ஏற்று நடத்த முடிந்தது. சிலபல ஆலைகளை ஏற்று நடத்த முடியாத நிலை வந்தபோது. நாள் ஏற ஏற, காலம் கடக்க கடக்க அதனுடைய வலிவு அதிகமாகி நடத்த முடியாத தன்மை மேலும் ஓங்குவதற்கு இல்லாமல் தடுத்து நிறுத்த வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலைகளைப் பரிசீலித்து மத்திய அரசைக் கேட்கிறபோது மத்திய அரசு திட்டவட்டமாக ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து விட்டது. எந்த ஒரு ஆலையையும் இனிமேல் மத்திய அரசு ஏற்று நடத்துவதில்லையென்ற முடிவுக்கு வந்த பின்னால் மாநில அரசு அதற்குப் போடுகிற

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 நவம்பர் 18

பணத்தை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாங்கள் ஒதுக்குகிற பணத்திலிருந்து அதைக் கழித்துக்கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். அதை நம்முடைய தலையிலே கட்டி, நம்முடைய பணத்தையே அதற்குப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலைகள் வருகின்றன. அதைத்தான் தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டிலே, கலந்துகொள்கிறபோது, நம்முடைய தொழிலமைச்சர் அவர்கள் மத்திய அரசிடத்திலே இப்படிப்பட்ட சங்கடங்களை எல்லாம் எடுத்து வைத்து இதற்கு ஒரு பரிகாரம் காணவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆகவே இந்தச் சங்கடங்கள் எல்லாம் நீங்கி, எப்படியேனும் தொழிலாளர்களுடைய வாழ்வு மங்காத அளவிற்கு, அவர்களுடைய வாழ்க்கை தொடர்ந்து நடைபெறுவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்ற காரணத்தினாலேதான், பல்வேறு தன்மைகளைக் கொண்டு, இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(பிற்பகல் 12-20)

கைத்தறி நெசவாளர்களைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். கூடுமான வரையில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து வருகிறோம். 15 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்கள் சொன்னார்கள். இந்த துறை மானியக் கோரிக்கையில் இவ்வளவுதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களுக்காக எடுத்து வருகிற பல்வேறு நடவடிக்கைகளை நீங்கள் நன்றாகக் காணலாம். அவர்களுக்கு என்று தனிச் சலுகை தரவேண்டும் என்பதற்காகத்தான் 10 கோடி ஒதுக்கப்பட்டு, வேஷ்டி சேலை வாங்கித் தரப்பட்டு இருக்கிறது என்றும் தற்போது தேவைப்படுகின்ற அளவிற்கு அவர்களால் கொடுக்க முடியாத காரணத்தால், அவர்கள் கால அவகாசம் கேட்கிறார்கள் என்றும், இன்னும் 4 மாதங்கள் அவகாசம் கொடுத்தால், மீதியுள்ள 6 கோடி ரூபாய்க்கு நாங்கள் நெய்து தருகிறோம் என்றும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவேதான் இன்னும் 4 அல்லது 5 மாத காலத்திற்கு நிலம் இல்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு வேஷ்டி, சேலை கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று நான் நேற்றே குறிப்பிட்டேன். தற்போது நூல் விலை ஏறிவிட்டது; அதனால் இப்படி இடர்



1987 நவம்பர் 18] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

களில் நெசவு இல்லாத நிலைமை இருப்பதன் காரணமாக அவர்களுக்குச் சிலபல சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் தேக்கத்தைப் போக்க வேண்டும் என்று நாம் சொல்லியிருக்கிறோம். மக்களுடைய விருப்பம் அறிந்து, தேவை அறிந்து, 'வேண்டுவார்க்கு வேண்டுவன ஈவான் கண்டாய்' என்பதற்கு இணங்க, அவர்களும் மக்களுடைய தேவையை அறிந்து நெய்து தரவேண்டுமே தவிர, 40 ஆண்டுகளுக்கு, 30 ஆண்டுகளுக்கு முன்பு என்ன நெய்தார்களோ, அதையே இப்போதும் நெய்வதால்தான் தற்போது மார்க்கெட்டிலே தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்த டிசைன்களை எல்லாம் ஊருக்கு ஊர் மாற்றி, மக்களுடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு கொண்டு வருகிற அளவிற்குத்தான் தற்போது கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மும்முரமாக ஈடுபட்டு ஓரளவிற்கு வெற்றியும் பெற்றுக் கொண்டு வருகிறது. அந்த அளவிற்குச் சலுகைகளை நாம் கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

கல்வித்துறையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லி இருக்கிறார்கள். கல்விக்கு நாம் ஏற்கனவே 600 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம். இப்போது 11 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். என்றாலும் கூட, பரவலான கல்வியை எல்லோருக்கும் கொடுக்கவேண்டும் என்கிறபோது, முழு நிறைவோடு, முழு வசதி வாய்ப்போடு எல்லா இடத்திலேயும் நாம் செய்து முடித்துவிட்டோம் என்று சொல்வதற்கு இல்லை. இன்னும் 1,500 பள்ளிக்கூடங்களுக்கு கற்கட்டிடமே இல்லாமல் அவைகள் கூரைக் கட்டடத்திலே இயங்கி வரவேண்டிய நிலைமை இருக்கிறது. ஒன்று புதிதாக பள்ளிக்கூடங்கள் உற்பத்தியாகாமல் இருக்கவேண்டும், அல்லது இருக்கிற வசதிகள் குறைவாக இருந்தாலும், ஏழை எளியவர்களுடைய குழந்தைகளைக் கட்டாயமாக படிக்க வைக்கவேண்டும் என்கிற இந்த இரண்டு திட்டங்களைப் பார்க்கிறபோது—மரத்தடியிலே பல பேர்கள் படித்திருக்கிறார்கள், வசதியற்ற நிலையில் சில பேர்கள் படித்திருக்கிறார்கள் என்கிறபோது—எழுதப் படிக்கத் தெரியாத மக்கள் ஏராளமான பேர்கள் அதிகமாக இருக்கிற நாட்டில், அதற்கு அதிக முக்கியத்துவம் தரவேண்டும் என்ற காரணத்தாலேதான், வசதிகளை ஏற்படுத்திவிட்டு பள்ளிக்கூடங்களைத் திறப்பதா அல்லது பள்ளிக்கூடங்களை எல்லாம் அமைத்துவிட்டு, வசதிகளைக் கொஞ்சம் கொஞ்சமாக ஏற்படுத்துவதா என்ற பிரச்

சினைகள் வருகிறபோது நாம் இவைகளைப் படிப்படியாகச் செய்து கொண்டு வருகிறோம். மற்ற இலாக்காக்களைவிட கல்வி இலாக்காவிற்குத்தான் நாம் அதிகமாக ஒதுக்கீடு செய்கிறோம். அப்படி ஒதுக்கீடு செய்வதிலேகூட ஆரம்பக் கல்விக்குத்தான் நாம் மிக அதிகமாக ஒதுக்கீடு செய்கிறோம். இந்த ஆரம்பக் கல்விக்கு ஒதுக்கீடு செய்வதும் கிராமப்புற மக்களுக்குத்தான் போகிறது.

அதைப்போல சத்துணவுத் திட்டத்தைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். இந்தத் திட்டத்திற்கு 185 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்கிறோம் என்றாலும், முறையாக, நல்லபடியாக யாருக்குப் போய்ச் சேரவேண்டும் என்று நாம் கருதுகிறோமோ, அவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதற்கு பொது மக்களும் மற்றவர்களும் முழு ஆதரவும் தரவேண்டும் என்று தான் சொல்கிறோம். பொதுமக்களுடைய விழிப்புணர்ச்சியும் ஆதரவும் இல்லாமல் இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற முடியாது. எனவே பரந்த அளவிலே 63,000 சொச்சம் சமையல் கூடங்களை வைத்து நடத்துகின்ற பணி, கிட்டத்தட்ட 92 லட்சம் குழந்தைகளுக்குக் கொடுக்கின்ற ஒரு பணி, அன்றாடம் நடை பெறுகிற ஒரு பணி, 365 நாட்களும் நடைபெறுகின்ற பணிகள்தான் இவைகள். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், இதிலே நாணயமானவர்கள், சிறப்பானவர்கள், எப்படி நடப்பார்கள் என்ற ஐயப்பாட்டுக்கு உரியதாக இருக்கும் போது, சிலபல குறைபாடுகள், மற்றவைகள் ஆங்காங்கு இருக்கும்போது, பொதுமக்களுடைய ஒத்துழைப்பும், பொதுமக்களுடைய ஆதரவும் அதிலே இருக்க வேண்டும். அந்த வகையிலே ஆங்காங்கே இருக்கின்ற ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள்— அவர்களுக்கு எல்லாம் அதிகமாகப் பொறுப்பிருக்கிற காரணத் தால்—அவர்கள் எல்லாம் ஆங்காங்கே இருக்கின்ற சமையல் கூடங்களை, சத்துணவுக் கூடங்களைப் பார்வையிடுகின்ற அள விற்கு அவர்களுக்கு அதிகாரங்கள் கொடுத்தால் கூட நன்றாக இருக்கும். எவ்வளவு பேர்கள் வந்தார்கள், எவ்வளவு பேர் களுக்குச் சோறு போட்டார்கள் என்பதை எல்லாம், அரசாங்க அதிகாரிகளுக்குப் பதிலாக இவர்கள் சென்று பார்க்கவும், அங்கே கம்ப்ளெயின்ட் கொடுக்கவும், அங்குள்ள நோட்டுப் புத்தகத்திலே அதை எழுதிவைக்கவுமான ஒரு முறையை ஏற்படுத்தினால் 32 பேர்களுக்குச் சோறு போட்டுவிட்டு, 92 பேர்களுக்கு போட்





டோம் என்ற குற்றச்சாட்டுக்கள் எல்லாம் வராது. இவைகளை எல்லாம் தினமும் டி.இ.ஓ., சி.ஈ.ஓ., மற்றும் கலெக்டர் அல்லது ஆர்.டி.ஓ. போன்றவர்கள் பார்ப்பது இயலாத ஒன்று. இப்படிப் பட்ட ஏற்பாட்டைச் செய்யலாம் என்று சத்துணவு அமைச்சர் அவர்களிடம்கூட நான் சொல்லி இருக்கிறேன். அதிலே ஆங் காங்கே இருக்கிற பெண்கள், படித்தறிந்த பெண்கள், ஊருக்கு ஊர், வாரத்திற்கு ஒரு நாளாவது சென்று இந்தச் சத்துணவுக் கூடங் களை மேற்பார்வையிடுவது போன்றவைகளைச் செய்ய வேண்டும். தினமும் அவர்கள் பண்ணவேண்டியதில்லை. அது முடியாது. அல்லது மாதத்திற்கு ஒவ்வொருவர் ஒருநாளும் அல்லது வாரத் திற்கு ஒவ்வொருவர் ஒரு நாளும் என்ற அளவுக்கு முறை வைத்துக் கண்காணிப்பாளர்களானால்கூட நல்லதுதான். நாம் ஒதுக்குகிற பணம் நம்மை விட்டுப் போய்விடுகிறது. அந்த 185 கோடி ரூபாய் யாருக்குப் போய் சேரவேண்டுமோ அவர்களுக்குப் போய் சேர வேண்டும் என்ற வகையில் உதவி செய்வார்களானால் நல்லது.

இந்தத் திட்டத்தைப் பாராட்டிய டாக்டர் மால்கம் ஆதிசே சய்யா அவர்கள்கூட, முதலில் இந்தத் திட்டம் வெற்றி பெறுமா என்று சந்தேகப்பட்டவர் கூட, ரோட்டரி கிளப் மீட்டிங்கில் பேசுகிறபோது நான் முதலில் சந்தேகப்பட்டேன், ஆனால் இதனால் முழுமையான பலன் இருக்கிறது என்பதை அறிந்து கொண்டேன் என்று புகழ்ந்துள்ளார்கள்.

அது மட்டும் அல்லாமல், 1½ மாத காலத்திற்கு முன்னால் உலக வங்கியினர் இங்கே வந்து மேற்பார்வையிட்டபோதுகூட பிற நாடுகள் இந்தத் திட்டத்தை பின்பற்றவேண்டும் அல்லது வளர்கிற நாட்டைச் சேர்ந்தவர்கள் தன்னுடைய எதிர்காலச் சந்ததியினரை மிகச் சிறப்பாக ஆக்குவதற்காக இந்தத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்றுகூட அவர்களே எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள்.

இங்கே கொருக்குப்பேட்டை பாலத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தப் பாலத்தை விரைவில் முடிக்கவேண்டும் என்ற அளவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள்.

அடுத்து நியாயவிலைக் கடைகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். சிலபல குறைபாடுகளை அவர்கள் என்னிடத்திலே கொடுத்தார்கள். அதை விசாரிக்கும்படி நான் அதிகாரிகளுக்கு எடுத்து தெரிவித்து இருக்கிறேன். நியாய விலைக் கடைகள் கிட்டத்தட்ட 4 மாவட்டங்களிலே நுகர்பொருள் வாணிபக் கழகத்திலும் மற்ற மாவட்டங்கள் அனைத்திலும் கூட்டுறவுத் துறையிலும் இருந்து கொண்டு வருகிற காரணத்தால்தான் ஏதேனும் ஒரு துறையின் கீழ் வரலாம் என்ற ஒரு முடிவின் அடிப்படையில் கூட்டுறவுத் துறையில் ஏராளமான பண்டகசாலைகள் இருப்பதன் காரணமாகவும், மூவாயிரத்து எண்ணூற்று சில்லறை பண்டகசாலைகளை நடத்துவதன் காரணமாகவும், 16 ஆயிரத்து சில்லறை அங்காடிகளை நடத்துகின்ற வாய்ப்பு இருப்பதாலும் கூட்டுறவுத் துறைக்கு 4,655 கிராம கூட்டுறவு வங்கிகளை வைத்து நடத்துகின்ற வாய்ப்பு, வசதிகள் இருப்பதாலும் கூட்டுறவுத் துறையே ஏற்று நடத்துவது சரியாக இருக்கும். பெரும்பாலான மாவட்டங்களில் கூட்டுறவுத் துறையின் கீழ் இருப்பதால் 4 மாவட்டங்களில் இருப்பதையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று ஒரு கொள்கை முடிவு எடுத்து அதிலே வேலை செய்பவர்களுக்கு கூட ஒரு வாய்ப்பு தந்து அதிலே வேலை பார்த்தாலும் சரி அல்லது கூட்டுறவுத் துறைக்கு மாற விரும்பினாலும் அதற்கு ஒரு குறிப்பிட்ட நாள் கொடுத்து அந்த குறிப்பிட்ட நாளுக்குள் சொல்ல வேண்டும் என்று சொல்லி, உயர்நீதிமன்றத்திற்குப் போய், உயர்நீதிமன்றமும் சொல்லி, இத்தனை நாளுக்குள் நீங்களே இதிலே இருக்கிறீர்களா, அதிலே இருக்கிறீர்களா என்று சொல்லிவிட வேண்டும் என்ற முறையின் அடிப்படையில்தான் அதுவும் செய்யப்பட்டது. அந்த நியாய விலைக் கடைகளில் ஏற்பட்டு இருக்கிற நிலைமையைப் பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவைகள் களையப்பட வேண்டும். அதன் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்கான முயற்சிகளையும் அதற்கான நன்மைகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது. அதுவும் கிட்டத்தட்ட 22 ஆயிரத்து சில்லறை கடைகள் எங்கு பார்த்தாலும் வைத்திருக்கிறோம். அதையும் கண்காணிப்பது என்பதிலே சிரமமும் இருக்கிறது. அவர்களுக்கு 180 ரூபாய்தான் சம்பளம் கொடுத்துக் கொண்டு வருகிறோம். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலைகள்



எல்லாம் வருகிறபோது கண்காணிப்பு என்பது மிக சிரமமாகத்தான் இருக்கும். அதற்கும் பொதுமக்களுடைய ஒத்துழைப்பும் ஆதரவும் மிக சிறப்பாகவும் அமைய வேண்டும்.

மற்றைய பொதுவாக பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆகவே பொதுத் தன்மைகளைப் பற்றி, பல்வேறு துறைகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களைப் பற்றி அந்த அந்த துறையைச் சேர்ந்த அமைச்சர்கள் அந்தந்த மானியக் கோரிக்கைகள் வரும்போது விரிவாக எடுத்துச் சொல்லுவார்கள். அதை அந்தந்த துறையைச் சேர்ந்தவர்கள் கவனத்தில் வைத்துக் கொண்டு தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்று எடுத்துச் சொல்லி இந்த நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவுகளை நிறைவேற்றித் தரும்படி இந்தப் பேரவையை கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 55/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 55/1987) நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(ஆ) நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு, 1987.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 61/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

(பிற்பகல் 12-30)

பிரிவுகள் 2, 3 மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 61/1987) நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

* 17—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





**(இ) நிதி ஒதுக்க (எண். 5) சட்டமுன்வடிவு 1987.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 62/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 62/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

* 17-11-1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

**(ஈ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.**

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 46/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1959 ஆம் ஆண்டு, 1978 ஆம் ஆண்டினுடைய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் சட்டத்தையும் வரன்முறை செய்வதற்கு இதிலே கொடுத்திருக்கிறீர்கள். 1959 ஆம் ஆண்டில் 8 ஆம் பிரிவையும், 1978 ஆம் ஆண்டு 5 ஆம் பிரிவையும் திருத்துவதற்குக் கொடுத்திருக்கின்ற தீர்மானத்தின் மீது ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல நான் விழைகிறேன்.

வேளாண் விளைபொருள் சந்தைகளைப் பொறுத்தவரையில், அந்த சந்தைக்கு, கொள்முதல் செய்வது, கொள்முதல் செய்த பொருள்களை விற்பனை செய்வது, இவற்றில் கமிஷன் பெறுவது போன்றவற்றை அந்த சந்தையினுடைய கடமையாக வைத்திருக்கிறீர்கள். இன்றைக்கு சந்தைகள் நிறுவுவதில், முறையாக நிர்வகிப்பதில், இவைகளையெல்லாம் பார்த்தால், அதில் குறிப்பாக எங்கெங்கு வியாபாரிகள் பொருள்களை வாங்க முடியாமல், உற்பத்தி செய்த விவசாயிகளை இழப்புக்கு ஆளாக்காமல் தடுப்பதற்கான அந்த நல்ல நோக்கத்திற்காக நிறுவப்பட்ட இந்தச்

---

* 13—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





சந்தைகள் 1959 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டு, இந்தச் சட்டம் 1978-ல் உங்களுடைய ஆட்சியிலேதான் ஒரு மாற்றத்தை உருவாக்கியிருக்கிறது. அதற்கு முன்னால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், பொறுப்பிலே இருந்த காலம் மாறி, உங்களுடைய காலத்திலேதான் 1978-க்குப் பின்னர் தனி அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். அந்தத் தனி அதிகாரிகளின் காலத்தை மேலும் நீட்டிப்பதற்கு ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் கேட்பதெல்லாம் இந்த மாமன்றமாக இருந்தாலும், வெளியிலாக இருந்தாலும், ஆளும் கட்சித் தரப்பிலே இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியில் இருந்தாலும் சரி, ஒட்டுமொத்தமாக இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய அனைத்து உறுப்பினர்களும், அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்று இங்கே பட்டியல் போட்டுக் காட்டுகிறார்கள். எங்கெங்கு எதை எடுக்கிறார்கள், அங்கே எடுத்து ஏப்பம் விடுகிறார்கள் என்று காட்டுகிறார்கள். அப்படிக் காட்டியும் ஏப்பம் விடுகின்ற அதிகாரிகள் இருப்பதை நீங்களே சுட்டிக் காட்டுகின்ற நேரத்தில், மேலும் இப்படி வேளாண் விளைபொருள்களை உற்பத்தி செய்கின்ற அந்த விவசாயிகள் இழப்பிற்கு ஆளாகின்ற நிலையில், விவசாயிகளுடைய பொருட்களை விற்பதற்கு இன்றைக்கு நீங்கள் தனி அதிகாரிகளைத் தேடுங்கள் என்று சொன்னால், மேலும் இப்படிப்பட்ட ஊழல்கள் உருவாக வேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்களா? இந்த அரசு ஊழலை உருவாக்குவதன் காரணமாக விவசாயிகள் உற்பத்தி செய்த வேளாண் பொருள்கள் எல்லாம் இழப்பு ஏற்பட வேண்டும் என்று கருதுகிறதா?

உங்களுக்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் என்ற பெயரிலே இருக்கக்கூடிய அந்தச் சந்தையிலே, பொழுது போகின்ற நேரத்தில், இருக்கின்ற அதிகாரிகள் பேரம் பேசுகிறார்கள். வாங்க வருகின்றவர்களிடத்திலே பேரம் பேசி அவர்களிடத்தில் கமிஷன் பெற்று விலையைக் குறைப்பதற்கு ஆராய்கிறார்கள்.

குறிப்பாக, பருத்தி மார்க்கெட்டிற்கு வருகிறது என்று சொன்னால், அந்தப் பருத்தியை வாங்குகின்ற முதலாளிகள், பருத்தியைப் பார்த்து தனி அதிகாரியிடம் பேசி, இது சப்-குவாலிட்டி, தரம் தாழ்ந்தது என்று அவர்களே முத்திரையிட்டு அதைக் குறை

வாக வாங்குவதற்கு இன்றைக்குக் காரணமாக இருக்கிறார்கள். உண்மையான நல்ல சரக்குகளை விற்க முடியாமல் இன்றைக்கு வேளாண் பெருங்குடி மக்கள் எல்லாம் மிகச் சிரமத்திற்கு ஆட்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எடுத்த எடுப்பிலே ஊழல் குற்றச் சாட்டுகளையெல்லாம் சொல்கிறார்கள். எந்தச் சந்தையில் எந்த அதிகாரி அப்படி நடந்து கொண்டார் என்று குறிப்பாக குற்றச் சாட்டு சொல்வார்களானால் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

**திரு. மா. மணிமாறன் :** துணைத் தலைவர் அவர்களே, எந்த அதிகாரி பேரம் பேசினார் என்பதை வீடியோவில் எடுக்க முடியாது, டேப்பில் எடுக்க முடியாது. அவர்கள் வாங்கிய காசினைக்கூட நாம் எல்லாம் வீடியோ எடுக்க முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுக்கு வேண்டுமென்றால் சொல்ல முடியுமே தவிர யதார்த்தமான உண்மை இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, இப்போது ஈரோட்டிலே மஞ்சள் மார்க்கெட் இருக்கிறது. மஞ்சள் மார்க்கெட்டில் வியாபாரிகள் வருகிறார்கள். மஞ்சள் சேம்பிள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. நெரவலாக வைக்கப்பட்டிருக்கிறது. வருகின்றவர்கள் மஞ்சளைப் பார்க்கிறார்கள். ஆளாளுக்கு ஒரு விலை எழுதுகிறார்கள். 12 மணியிலிருந்து 1 மணி வரை என்று நேரம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு பெட்டி வைக்கப் படுகிறது. அந்தப் பெட்டியிலே, அவர்களுக்குத் தேவையான விலையை எழுதி போட்டு விடுகிறார்கள். யார் அதிக விலை கோருகிறார்களோ அவர்களுக்கு அந்த மஞ்சள் தரப்படுகிறது. இதிலே பேரம் எப்படி வருகிறது? எப்படி அதிகாரிகளை அணுக முடியும்? எப்படி அதிகாரிகள் பேரத்திலே ஊழல் செய்ய முடியும் என்பதெல்லாம் எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிந்தால் சொல்லலாம்.





**திரு. மா. மணிமாறன் :** துணைத் தலைவர் அவர்களே, வருகின்ற வியாபாரிகளிடத்தில் அவர்கள் பேரம் பேசுகிறார்கள். தரத்தைப் பார்க்கிறார்கள். பார்த்ததற்குப் பின்னாலே எது சப்-குவாலிட்டி, எது நல்ல குவாலிட்டி என்று பார்க்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். விலை குறிப்பிடப்பட்டு பெட்டியிலே போடப்படுகிறது.

**திரு. மா. மணிமாறன் :** துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் தரத்தைப் பார்த்து, எது தரம் குறைந்தது, எது தரமானது என்று முத்திரை குத்துகின்ற நேரத்தில், வருகின்ற வியாபாரிகளிடத்தில், அதிகாரிகள், இது தரம் தாழ்ந்தது என்று சொல்வதற்கு ஆதாரமாக இருக்கிறார்கள். அதன் காரணமாக விலையைக் குறைத்து பட்டியல் எழுதி பெட்டியிலே போடுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** துணைத் தலைவர் அவர்களே, நூற்றுக்கணக்கான வியாபாரிகள் வந்து பார்க்கிறார்கள். அதிலே எப்படி தரத்தை குறைத்து அதிகாரிகளாலே சொல்ல முடியும்/ தரத்தைப் பார்ப்பதே வியாபாரிகள்தான். வியாபாரிகளுக்குள்ளே போட்டி வைத்து அவர்களே போட்டி போட்டுக் கொண்டு வந்து விலையை நிர்ணயிக்கிறார்கள். ஆகவே அதிலே தவறு நடக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. இரண்டு மூன்று விற்பனைக் கூடங்களுக்கு நானே போய்ப் பார்த்தேன். எப்படி நடக்கிறது என்று கண்காணித்தேன். அது சரியாக நடக்கிறதா என்று எல்லோரையும் கேட்டேன். விவசாயிகள் மகிழ்ச்சி அடைகிறார்கள். வியாபாரிகள் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

**திரு. மா. மணிமாறன் :** துணைத் தலைவர் அவர்களே, இப்படி ஊழல் இல்லை என்று சொல்கிறார்களா அமைச்சர் அவர்கள்? அல்லது தனி அதிகாரிகளே தொடர்ந்து இருக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் . . . .

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** துணைத் தலைவர் அவர்களே, தனி அதிகாரிகள் இருக்க வேண்டும், இல்லை என்பது வேறு பிரச்சினை. ஆனால் இருக்கின்ற இடத்தில் தவறு நடப்பதில்லை.

திரு. மா. மணிமாறன்: துணைத் தலைவர் அவர்களே, பரவாயில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அரசிலே இருக்கின்ற அதிகாரிகள் எல்லோரும் திறமாக பணியாற்றுகிறார்கள் என்று சொன்னதற்கு மெத்த நன்றி. ஆனால் கொஞ்சம் முன்னால் ஆதாரங்களை ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் கொடுத்தார்கள். * *

மாண்புமிகு திரு. க. இராசாராம்: துணைத் தலைவர் அவர்களே, திரு. மணிமாறன் அவர்கள் திரும்பப் புரிந்துகொள்ள வேண்டும். எல்லோரும் நல்லவர்கள் என்று நான் சர்டிபிகேட் கொடுக்கவில்லை. இந்தத் துறையில் இருப்பவர்கள் நல்லவர்களாக இருக்கிறார்கள்.

திரு. மா. மணிமாறன்: துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், அவர்களுடைய துறையிலே இருக்கின்ற அனைத்து அதிகாரிகளும் நல்லவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லி தனக்குப் பாதுகாப்பு மட்டும் அல்ல; இருக்கின்ற விவசாயிகளுக்கு ஒரு பாதகமான நிலை… உருவாக்க வேண்டாம் என்று மெத்த பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதிகாரிகள் மேலே குறிப்பிட்டு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். அமைச்சர் சொல்கிறார், சரியாக இருக்கிறது என்று. நீங்கள் இல்லை என்று சொல்லி எழுதிக் கொடுத்தால் நடவடிக்கை எடுப்பார்.

திரு. மா. மணிமாறன்: துணைத் தலைவர் அவர்களே, ஏன் உங்களுக்கு அந்தச் சங்கடம்? தேர்தலை நடத்துங்கள் என்று தான் கேட்கிறேன். தேர்தலை நடத்துவதற்கு எவ்வளவு நாள் இங்கே அவகாசம் எடுத்துக்கொள்வது? 10 ஆண்டுக்காலமா எடுத்துக்கொள்வது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால், தனியாக, ஸ்பெசிபிக்காக இந்… இடத்தில் இவர்கள் பண்ணுகிறார்கள் என்று சொன்ன…

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





அமைச்சர் நடவடிக்கை எடுப்பார். அப்படிச் சொல்லவும் பயம். என்ன செய்யச் சொல்கிறீர்கள்? எழுதிக் கொடுத்தால், நாங்கள் விசாரிக்கச் சொல்லலாம். அதுவும் மாட்டீர்கள். இப்போது நேரம் போகிறது.

திரு. மா. மணிமாறன்: துணைத் தலைவர் அவர்களே, பரவாயில்லை. எப்படியும் நீங்கள் தவறுகளுக்கு ஒரு பாதுகாப்பு தேடுவது . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பாதுகாப்பு அல்ல. குற்றச்சாட்டு சொல்ல முடியவில்லை உங்களால். சொல்ல பயப்படுகிறீர்கள் என்று சொன்னால் நீங்கள் சங்கடப்படுவீர்கள். ஸ்பெசிபிக்காக ஒரு ஆபீசர் என்று சொன்னால் அமைச்சர் பதில் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. கேள்வி மூலம் கேட்கலாம். இதில் எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. நீங்கள் பாதுகாப்பு தேடுகிறோம் என்று சேரைப் பார்த்துச் சொன்னால் குற்றச்சாட்டு சொல்வதற்கு உங்களிடம் ஆதாரம் இல்லை என்று சொல்லவேண்டி இருக்கும் அல்லது அதிகாரிகளைச் சொல்வதற்கு பயப்படுகிறீர்கள் என்று அப்படித்தான் சொல்லவேண்டியிருக்கும். அதனாலே நீங்கள் சொல்வதென்றால் சொல்லுங்கள் என்றுதான் சொல்கிறோம். ஸ்பெசிபிக்காக இருந்தால், We will allow. அதில் தொல்லையே இல்லை.

(பிற்பகல் 12-40)

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு ஒன்றும் சங்கடம் இல்லை. எந்த அதிகாரியிடமும் போய் நாங்கள் பங்கு விகிதம் கேட்கவில்லை. அதனாலே நாங்கள் ஒன்றும் சங்கடப்படவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அவர்களிடம் பயப்பட வேண்டிய அவசியமும் எங்களுக்கு இல்லை (குறுக்கீடு) மாண்புமிகு . . . .

மாண்புமிகு திரு. க. இராசாராம்: துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த விவாதத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் குறுக்கிட்டதற்கே காரணம், நிறைய விவசாயிகள் இந்தச் சந்தைகளைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற நல்ல நோக்கம் எனக்கு இருக்கிறது. ஏனென்று கேட்டால் அவர்களுக்கு நல்ல விலை கிடைக்கவேண்டும். இடைத்தரகர்கள்

[திரு. க. இராசாராம்] [1987 நவம்பர் 18

நிறைய பணத்தைப் பெற்றுக் கொண்டு போய்விடுகிறார்கள். அது மாற்றப் படவேண்டும் என்பது என்னுடைய எண்ணம். நீங்கள் பேசி முடித்ததற்குப் பிறகு விடையைத் தருகிறேன். அது எந்த அளவிற்கு வளர்ந்து இருக்கிறது, வளர்ந்ததற்கு என்ன ஆதார பூர்வமான எண்ணங்களைக் கொண்டு இருக்கிறேன், அதை எப்படிச் செயல்படுத்தவிருக்கிறேன் என்பதைத் தெரிவிக்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே இரண்டு பொருட்கள், ஒன்று நெல், அடுத்தது பருத்தி. அவை இரண்டும் உற்பத்தியாகின்ற பொருட்களில் மிக அதிகமாக இருக்கின்றன. நெல்லை நீங்களே ஒரு விலை கொடுத்து வாங்கிக் கொள்கிறீர்கள். பருத்திக்குத்தான் மார்க்கெட்டுக்குப் போகிறார்கள், மார்க்கெட்டுக்குப் போகிற போதுதான் நல்ல பருத்தி, சப்-குவாலிட்டி—தரம் குறைந்தது என்று முத்திரை குத்தப்படுவதன் காரணமாக இழப்பு ஏற்படுவதைப்பற்றி நான் சொல்கிறேன். நெல்லுக்கு ரூ. 105 கொடுக்கிறீர்கள். அரசாங்கத்திலே நீங்கள் கொள்முதல் பண்ணிக் கொள்கிறீர்கள், நெல்லை.

தஞ்சை மாவட்டம், தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு பகுதி, திருச்சி மாவட்டத்தில் ஒரு பகுதி—ஆகிய மூன்று இடங்களில் அரசே கொள்முதல் செய்வதன் காரணமாக, 60 கிலோகிராம் மெஷர் கொண்ட மூட்டை 105 ரூபாய்க்கு விற்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் எஞ்சியுள்ள பகுதிகளில் 60 கிலோகிராம் கொண்ட அதே நெல்லை ஏறத்தாழ 180, 190, 200 ரூபாய் அளவிற்கு விற்கிற நிலை இந்த அரசால் நீடித்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் நெல்லுக்கு நியாய விலை வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை ஆட்சிக்கு வந்ததிலிருந்து வற்புறுத்திக் கொண்டு வருகிறீர்கள். வற்புறுத்துவதைத்தான் இந்த அரசாங்கத்தின் தலையாய கடமையாகக் கருதிக் கொண்டு வற்புறுத்தியே வருகிறீர்கள். ஆனால் வாங்கித் தருவது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. நீங்களும் அரசாங்கத்திலிருந்து நெல்லிற்கு 200 ரூபாய் குவிண்டாலுக்கு கேட்டு வருவதாக அறிவிக்கிறீர்கள். அப்படி அறிவித்துவிட்டு, மத்திய அரசாங்கத் திடமிருந்து வாங்கிக் கொடுக்க முடியாமல் ஒரு அரசாங்கம் தமிழகத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்றால் விவசாயி களுடைய நிலை என்ன என்பதைப் பற்றி எண்ணிப்பாருங்கள்.



1987 நவம்பர் 18] [திரு. மா. மணிமாறன்]

அதற்கு உற்பத்தியாகிற செலவு என்ன என்பதை எண்ணிப் பாருங்கள். அதுவும் குறிப்பாகவும், சிறப்பாகவும், தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற விவசாயிகள் எல்லாம் மெத்தவும் பாதிக்கப்படுகிறார்கள். சிரமத்திற்கும் ஆட்படுகிறார்கள். ஒரு காலத்தில் நீங்கள் சொன்னீர்கள்... "அவர்கள் எல்லாம் காலாலே மடை திறக்கக்கூடியவர்கள்; தண்ணீர் தானாக வந்து வயலிலே நிரம்பும்" என்று சொல்லிக் கொண்டிருந்தீர்கள். இன்றைக்கு அப்படிப்பட்ட நிலை தஞ்சை மாவட்டத்தில் இல்லை. ஏனைய மாவட்டங்களைப் போல்தான் தரையிலிருக்கிற தண்ணீரை எடுத்து இன்றைக்கு விவசாயம் செய்து வருகிறார்கள். ஆற்றுத் தண்ணீரை நம்பிப் பயன் இல்லை. மழை பொழிந்தால் விளைகிறது. அல்லது தரையில் இருக்கிற தண்ணீரை வைத்து விவசாயம் செய்கின்ற நிலை தஞ்சை மாவட்டத்தில் இன்றைக்கு இருக்கிறது. ஏனைய மாவட்டங்களில் இருக்கிற நிலைதான் தஞ்சை மாவட்டத்திற்கும். ஆனால் தஞ்சை மாவட்ட விவசாயி களுக்கு மட்டும், 60 கிலோகிராம் நெல்லை 105 ரூபாயைக் கொடுத்து நீங்களே வாங்குகிறீர்கள். ஆனால் வெளி மாநிலங் களிலிருந்து வாங்குகிற நெல்லை நீங்கள் எந்த விலைக்கு வாங்குகிறீர்கள் என்றால் ஏறத்தாழ, 200, 205 ரூபாய் அளவிற்கு குவிண்டால் நெல்லுக்கு விலை கொடுத்து வாங்கி இருக்கிறீர்கள். 1983-லேகூட, நீங்கள் ஏறத்தாழ 260 ரூபாய் அளவிற்கு விலை கொடுத்து வாங்கியிருக்கிறீர்கள்.

ஆனால் உங்கள் மாநிலத்திலே இருக்கக்கூடியவர்கள், உங்கள் தேவையில் 50 சதவிகிதத்தை நிறைவு செய்யக்கூடியவர்களாலே உற்பத்தியாகிற நெல்லிற்கு நியாயமான விலையை உங்களாலே வாங்கிக் கொடுக்கமுடியவில்லை. ஆனால், நீங்கள் வற்புறுத்து வதாகச் சொல்கிறீர்கள். மத்திய அரசாங்கத்திடம் வாதாடு கிறோம், மத்திய அரசாங்கத்திடம் கேட்டு வருகிறோம் என்றெல்லாம் சொல்கிறீர்கள். மெத்தப் பணிவோடு, நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது, 'தாளிலே தண்ணீர் என்று எழுதிக் காட்டுவதன் காரணமாக தாகம் தீர்ந்து விடுமா' என்பதைத் தயவு செய்து எண்ணிப் பாருங்கள். இப்படி உங்கள் ஆட்சிக் காலம் முடியும் வரையில் வற்புறுத்துவதுதான் உங்கள் வேலை என்று சொன்னால், உற்பத்தி செய்யப்படுகின்ற நெல்லை ஏன் நீங்கள் வாங்குகிறீர்கள்? தஞ்சை மாவட்டம் தவிர,

திருச்சி மாவட்டத்தில் ஒரு பகுதி தவிர, தென்னாற்காடு
மாவட்டத்தில் ஒரு பகுதி தவிர எஞ்சியிருக்கின்ற மாவட்டங்
களிலுள்ள மக்கள் எல்லாம் தாங்களே தங்கள் விருப்பத்திற்கு
விற்கிறார்கள். உற்பத்தி செய்கின்றவர்களுக்குத்தான் விலையை
நிர்ணயிக்கின்ற உரிமை, நெல்லைத் தவிர மற்றைய பொருள்களுக்கு
எல்லாம் வைத்திருக்கிறார்கள். ஆனால் நெல்லுக்கு மட்டும்தான்
அரசாங்கம் நிர்ணயிக்கிறது. அதுவும் நிர்ணயிக்கிற விலை
தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும்தான். எஞ்சிய மாவட்டங்களுக்கு
அல்ல. இந்தப் பாதகமான சூழ்நிலையை என் உருவாக்கு
கிறீர்கள்? அவர்களுக்கு என்ன சிரமங்கள் என்பதை மாண்புமிகு
அமைச்சர் அவர்களே நேராகக்கூட பார்த்தார்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தஞ்சை மாவட்டத்திற்கு
எல்லா உதவிகளும் செய்யப்படுகின்றன. தண்ணீர் தரப்படு
கிறது. இன்னும் சொல்லப்போனால், தஞ்சை மாவட்டத்திலே
விவசாயிகள், 'எங்களுடைய நெல்லைக் கொள்முதல் செய்ய
அதிகாரிகளை அனுப்புங்கள்' என்று வேண்டுகோள் விடுக்கி
றார்கள்.

**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே உள்ள சிரமங்களை
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்து பார்த்தார்கள். பார்க்
கின்ற நேரத்தில், நீங்கள் எல்லாம் நேரடி விதைப்பிற்கு விட
வேண்டும் என்று அரசாங்கத்தில் அறிக்கை விட்ட நேரத்தில்,
எத்தனை முறை, களிமண்ணைப் பண்படுத்த வேண்டும் என்ற
சிரமத்தை எல்லாம் அமைச்சர் அவர்கள் பார்த்தார்கள் என்ப
தையும், அப்படி பார்த்ததற்குப் பின்னாலேயும்கூட சிரமம்
இல்லை என்பது நியாயமா என்பதை எண்ணிப் பாருங்கள்.
நீங்கள் ஒரு குவிண்டாலுக்கு கூடுதல் விலையாக ரூ. 35 கொடுக்கி
றீர்கள். தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற விவசாயிகள், ஏறத்
தாழ 5, 6 ஆண்டுக்காலமாக 50 ரூபாயாக அதை ஆக்கிக் கொடுக்க
வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறார்கள். இன்றைக்குவரை
இந்த அரசாங்கம் அதில் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை.
நான் உங்களை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்வது எல்லாம்,
அரசாங்கம் 35 ரூபாய் கொடுக்கின்ற ஒரு குவிண்டால், ஏறத்தாழ
அதையும் சேர்த்தால் ஒரு மூட்டை அளவிற்கு ரூ. 105-தான் வரு





கிறது, 60 கிலோ கிராம் கொண்ட ஒரு மூட்டைக்கு. வெளி மார்க்
லத்திலே அந்த நெல்லை 180 ரூபாய், 200 ரூபாய்க்கு விற்கிற
நேரத்திலே உங்களைக் கேட்பதெல்லாம், 15 ரூபாய் கூடுதலாக
அவர்கள் கேட்கிறார்கள். 60 கிலோ கிராமுக்கு 120 ரூபாய்
கொள்முதல் விலை கேட்கிறார்கள். 200 ரூபாய் நிர்ணயிக்க
வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தைக் கேட்கின்ற நீங்கள்,
பெரிய மனது வைத்து, தாராளமான மனப்பான்மையோடு 15
ரூபாய் கூடுதலாகக் கொடுக்கலாம். விலை நிர்ணயிக்கின்றபோது
இன்னொரு 15 ரூபாயைக் கூட்டிக் கொடுப்பதாக அறிவிக்கவேண்டு
மென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நமது வேளாண்மைத் துறை அமைச்சர்
அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் திருத்தத்தின் மீது
நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். ஒன்பது
ஆண்டு, 6 மாதங்கள் என்ற சொற்களுக்குப் பதிலாக, 10 ஆண்டு,
6 மாதங்கள் என்ற சொற்கள் அமைக்கப்பட வேண்டுமென்று
சொல்லி, 1987 டிசம்பர் 5 ஆம் தேதிக்குமேல், மேலும் ஒரு ஆண்டு
கால அளவிற்குத் தனி அதிகாரிகளுடைய காலத்தை நீட்டிக்க
அரசு ஒரு முடிவு செய்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னொன்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மேற்சொன்ன
சட்ட முன்வடிவு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலுக்காக
ஆளுநர் அவர்களால் அனுப்பப்பட்டதற்குப் பின்னால், குடியரசுத்
தலைவரின் இசைவு பெறுவதற்காக, இந்திய அரசுக்கு அனுப்பப்
பட்டுள்ளது. மேலும், அந்தச் சட்ட முன்வடிவிற்கான குடியரசுத்
தலைவரின் இசைவு இன்னும் எதிர்பார்க்கப்படுகிறது என்றும்
குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக, இன்றைக்குத் தனி அதிகாரி
களுடைய காலத்தை 10 ஆண்டுக் காலத்திற்கு மேலாக நாம்
நீட்டித்துக்கொண்டே வருகிறோம். இது எந்த அளவிற்குச் சரி
என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் எதிர்காலத்திலே
சிந்திப்பது நல்லது. குறிப்பாக நமது நாடு பெரிதும் வேளாண்
மையைக் கொண்ட நாடு. குறிப்பாக, தமிழ்நாட்டில் 80 சதவீதம்
கிராமப்புறங்களில் பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்யக்
கூடிய மாநிலம் நமது மாநிலம். அப்படி உள்ள மாநிலத்தில்
இந்த விவசாயப் பொருள்கள் வாங்கக்கூடிய அந்தச் சந்தையை
தனி அதிகாரிகளிடமே ஒப்படைத்து வருவது என்பது அவ்வளவு

[திரு. பொ. உத்திராபதி] [1987 நவம்பர் 18

நல்லதல்ல என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.
காரணம், தேர்வு நடத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள்
இருந்தால்தான், அந்தக் கமிட்டியும் செயல்பட்டால்தான், அந்த
நிர்வாகத்தில் சில தவறுகள் ஏற்படுமாயின் அந்த அமைப்புகளை
திருத்துவதற்கு, அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்வதற்கு ஒரு
இடைப்பட்ட பாலமாக அமைய முடியும். அந்த அமைப்புகள்
இல்லாததால் இன்றைக்கு அந்த அதிகாரிகள், எல்லா அதிகாரி
களும் என்று சொல்ல விரும்பவில்லை, அமைச்சர் அவர்கள்
சொல்வதுபோல் ஒருசில அதிகாரிகள் இருக்கிறார்கள்.

இன்றைக்கும் தஞ்சையில் பருத்தி இப்போதுதான் தயார்
செய்து கொண்டு வருகிறார்கள். காரணம் நெல்லை நம்பி இனி
மேல் வாழ முடியாது. மாற்று பயிர் இனிமேல் செய்ய வேண்டு
மென்ற உணர்வு இன்றைக்கு தஞ்சையில் மேலோங்கி அநேகமாக
பருத்தி போடக்கூடிய ஒரு வேகமான சூழ்நிலையில் கடலை,
போன்ற பல்வேறு பொருள்களைப் போடுகிறார்கள். பருத்தி
போடுவதுபற்றிச் சொல்லும்போது, அதிகாரிகள் இந்தப்
பருத்தியை வாங்குவதில், தேக்க நிலை இருக்கிறது என்று
சொன்னார்கள். அந்தத் தேக்கநிலையால் பருத்தி உற்பத்தி
செய்வதற்காகக் கடன் கொடுக்கிறார்கள். அதிகமான வட்டிக்குக்
கடன் கொடுக்கிறார்கள். கடன் கொடுக்கும் அந்த வியாபாரிகளே
விவசாயிகளாக மாறி, அந்தப் பருத்தியைக் குறைந்த விலைக்கு
வாங்கி, அந்த விவசாயினுடைய பெயரே, அந்த அதிகாரிகளிடம்
கொடுக்கப்பட்டு, இப்படி இடையில் மறைமுகமான தவறுகள்
நடைபெற்று வருகின்றன. அதற்குக் காரணம் விவசாயிகள்
உற்பத்தி செய்யக்கூடிய காலங்களில் அவர்களுக்கு நேரடியாகச்
சர்க்கார் கொடுக்கக்கூடிய கடன், இன்ன பிற சலுகைகள் காலத்
தோடு கிடைக்காததால், அந்தக் காலப் பருவத்தில், விவசாயிகள்
பருத்தி போடவேண்டிய அவசியம் ஏற்படுகிறபோது, அந்த
வியாபாரிகளிடத்திலே அணுகவேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலை
ஏற்பட்டு. அதற்காகவே காத்திருக்கக்கூடிய வியாபாரிகள்
பணத்தை அவர்களிடம் கொடுத்து, அந்தப் பணத்தைப் பெற்ற
விவசாயிகள் பருத்தி விவசாயத்தைத் தொடங்குகிறார்கள்.
பருத்தி எடுக்கக்கூடிய காலங்களில், அந்த வியாபாரிகளே விவசாயி
களாக மாறி, அந்த விவசாயிகளுடைய பெயர்களே பருத்தி கொள்
முதல் செய்யக்கூடிய அதிகாரிகளிடத்திலே கொடுக்கப்பட்டு,



1987 நவம்பர் 18] [திரு. பொ. உத்திராபதி]

இப்படி இடைத்தரகர்கள் இதிலே புகுந்து விவசாயிகளுக்கு வரக்
கூடிய இலாபத்தை இன்றைக்குத் தட்டிப் பறித்துச் செல்கி
றார்கள். இதை, அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திற்கு
வரும்போது, பருத்தி பயிரிடும் விவசாயிகளிடம், உங்களுக்குக்
கடன் எப்படிக் கிடைக்கிறது, எப்படி அந்தப் பருத்தியை
உற்பத்தி செய்கிறீர்கள், எப்படி இந்தப் பருத்தி நேரடியாக
அதிகாரிகள் மூலமாக சந்தைக்குப் போகிறது என்பதைப்பற்றி
யெல்லாம் விசாரணை செய்து, இப்பேர்ப்பட்ட தவறுகள் நடை
பெறாமல் அமைச்சர் அவர்கள், கூர்மையாகக் கவனித்துக் கேட்டு,
இவற்றைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவை நாங்கள் ஆரம்பத்திலே எதிர்த்
தோம். காரணம் இதை 10 ஆண்டுக்காலமாக நீட்டித்து வருவது
நல்ல மரபல்ல என்பதற்காகத்தான். ஆகவே வருகின்ற ஆண்டு
களிலாவது அமைச்சர் அவர்கள் ஜனாதிபதியினுடைய அங்கீகாரத்
தைப் பெற்று, அந்தச் சந்தைகளுக்குத் தேர்தல் நடத்துவதற்குத்
துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில்
நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-50)

தஞ்சை ஜில்லாவில் இன்றைக்கு வரலாறு காணாத அளவுக்கு
இந்த ஆண்டு ஜூன் மாதம் கிடைக்க வேண்டிய தண்ணீர் நவம்பர்
மாதம் 9 ஆம் தேதி திறந்துவிடப்பட்டு 13 ஆம் தேதிதான் விவ
சாயத்திற்குக் கிடைத்திருக்கிறது. அரசாங்கத்தின் வேண்டு
கோளுக்கு இணங்க 12 ஆம் தேதி சட்டமன்றம் ஒத்தி வைக்கப்
பட்டு, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள்கூட
சனிக்கிழமை 13 ஆம் தேதியே விசேஷமாக தஞ்சை ஜில்லா
வுக்கு வந்து சட்டமன்ற உறுப்பினர்களையும், பொதுப்பணித்
துறை அதிகாரிகளையும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி
களையும் மாவட்ட ஆட்சித் தலைவரையும் சந்தித்து, தண்ணீரை
நாம் எவ்வளவு காலத்திற்குப் பயன்படுத்த முடியும், எப்படியெல்
லாம் நாம் விவசாயத்தை நடத்த முடியும் என்று ஆலோசனை
செய்து வந்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் அமைச்சர்

[திரு. பொ. உத்திராபதி] [1987 நவம்பர் 18

அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது இதுதான். நேரடியாக விதைப்பு விதைத்தவர்களுக்கு ரூ. 200 வரை உரம், பூச்சி மருந்து போன்ற பொருள்கள் இனாமாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் உண்மையில் என்ன நடக்கிறது என்றால் ஒவ்வொரு விரிவாக்கப் பணியாளரும் 3 அல்லது 4 பஞ்சாயத்து ஏரியாவுக்குள் 50 ஹெக் டேருக்கு மேல் கணக்குக் கொடுக்கக்கூடாது, அதற்கு உட்பட்டு தான் கணக்குக் கொடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு அந்த விரிவாக்கப் பணியாளர்களும் அந்த முறையைத்தான் கையாளுகிறார்கள். அப்படிப்பட்ட முறையைக் கடைப்பிடித் தால் விதை விதைக்கிற விவசாயிகள் அத்தனை பேருக்கும் இதன் பலன் கிடைக்காது. எனவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர் களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் இதுதான். அப்படி அதிகாரி களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தால் உடனடியாக அவர்களைக் கைவிடும்படி செய்து, நேரடியாக விதைத்திருப்பவர்கள் அனை வருக்கும் இந்தச் சலுகை கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்றைக்கு மேட்டூரில் தண்ணீர் அளவு 74 அடிக்கு வந்துவிட்டது. (குறுக்கீடு) நான் அதை ஏற்கெனவே சொல்லி விட்டேன். இது ஒரு தொடர் கதைபோல் இருப்பதால் நான் சொல்ல வேண்டியிருக்கிறது. தண்ணீர் மட்டம் 74 அடிக்கு வந்துவிட்டது. 10 லட்சம் ஏக்கருக்கு மேல் ஒரு போக சாகுபடி நடைபெற்றிருக்கிறது. 4 லட்சம் ஏக்கருக்கு மேல் விதை விதைத்து களை எடுக்கும்படியான நிலைமை இருக்கிறது. இந்த நிலையில் தண்ணீர் மட்டம் 74 அடிக்கு வந்துவிட்டதால் : . . .

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அவைக்கு ஒரு அறிவிப்பு. பேரவை இன்று மாலை 4 மணிக்குக் கூடும் என்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்** : தயவுசெய்து தொடர்ந்து நடத்தி விடுங்கள். மாலையில் வைத்துக்கொண்டால் நாங்கள் எல்லாம் எப்படி ஊருக்குப் போவது . . . .



1987 நவம்பர் 18]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : வேறு வழி யில்லை. நிறைய பில்கள் இருக்கின்றனவே. (குறுக்கீடு) ஆறு மணிக்குள் முடித்துவிடலாம் (குறுக்கீடு) 2 மணி நேரம்தான் (குறுக்கீடு) அதுதான் முடியவில்லையே. காலையிலேயே சீக்கிரம் முடித்துவிடலாம் என்றுதான் நினைத்தோம் (குறுக்கீடு) நீங்கள்தான் இருக்கிறீர்களே, நேரமாகிவிடுகிறது. எனவே 2 மணி நேரத்தில் முடித்துவிடலாம். 6 மணிக்குள் உறுதியாக முடித்து விடலாம்.

**திரு. கு. ரமணி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையை கன்டினுவஸ் ஆக கண்டக்ட் பண்ணுங்கள். அது இல்லையென்றால் அதற்கு லிமிட்டே இருக்காது. நாங்கள் பலபேர் ரிசர்வு பண்ணி வைத்திருக்கிற டிக்கெட்களையெல்லாம் கேன்செல் செய்தாக வேண்டும். அதனால் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : சரி நீங்கள் சுருக்கமாகப் பேசி முடியுங்கள். 6 மணிக்குள் முடித்துவிடலாம்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987—தொடர்ச்சி.

**திரு. பொ. உத்திராபதி**: மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, எனவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவ னத்திற்குக் கொண்டு வருவதெல்லாம் இப்படி 14 லட்சம் ஏக்கரில் தீவிரமாக விவசாயம் செய்திருக்கும்போது 74 அடிக்குத் தண்ணீர் குறைந்துவிட்டது. ஆகவே அமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறையில் மிகுந்த கவனம் செலுத்துகிறவர்கள் என்பதனால் கர்நாடக அரசோடு பேசி ஒரு இடைக்கால ஏற்பாடாக பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதி வரை தண்ணீர் கொடுக்கும்படி செய்ய வேண்டும். ஏனென்றால் மார்கழி—தை மாதத்தில்தான் கதிர் எல்லாம் முற்றி கீழ் சாய்கிற நேரம், அந்த நேரத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டால் பயிரெல்லாம் பதராக மாறிவிடும்.

[திரு. பொ. உத்திராபதி] [1987 நவம்பர் 18

பிறகு சர்க்கார் எதிர்பார்க்கக்கூடிய உணவு தானியம் உற்பத்தி யாவது கஷ்டம். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கிற 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/87) முன்மொழியப்பட்ட போதே நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அதை ஆட்சேபித்திருக்கிறேன், இந்தச் சட்ட முன்வடிவை முன் மொழியக் கூடாது என்று. அதைத் தொடர்ந்து ஒரு சில கருத் துக்களை நான் கூறி என்னுடைய உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். முதலாவதாகச் சொல்ல வேண்டுமென்றால் இதற் கான காரண நோக்கங்களின் விளக்க உரையில் 3-வது பகுதியாக ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது "வேளாண் விளை பொருள் கொள்முதல் செய்தல், விற்பனை செய்தல் ஆகியவற்றை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும், மேலும் தமிழ்நாடு முழுவது முள்ள வேளாண் விளை பொருள்களுக்கான சந்தைகளை நிறுவு வதற்கும், அவற்றை முறையாக நிர்வகிப்பதற்கும் தொடர்பான சட்டங்களைத் திருத்தி ஒருங்கிணைக்கவும் தற்போது உள்ளதை விட சிறந்த வகையில் செய்வதற்கும்" என்று சொல்லப்பட்டு இருக்கிறது. மேலும் தனியதிகாரிகள் பொறுப்பில் இருப்பதை— 1987 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ஆம் தேதி வரையில் இருப் பதை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து 1988 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ஆம் தேதி வரையில் கேட்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

குறிப்பாக புதுக்கோட்டை சங்கத்தினுடைய தனி அதிகாரி யின் காலம் 8 ஆண்டுகளிலிருந்து 9 ஆண்டுகளுக்கும், மற்ற சங்கங்களில் தனி அதிகாரிகளின் காலம் 9 ஆண்டுகளில் இருந்து 10 ஆண்டுகளுக்கும் நீட்டிக்கப்படும் என்ற முறையில்



1987 நவம்பர் 18] [திரு. கோ. வீரய்யன்]

இந்தத் திருத்தச் சட்டத்தை இங்கே மொழிந்திருக்கிறார்கள். இந்த சந்தைக் குழு என்பது விவசாயிகளால் தேர்ந்தெடுக்கப் படக்கூடிய ஒரு நிர்வாகக் குழுவால் செயல்படுத்துவதாகும். தனி அதிகாரிகளால் செயல்படுத்துவது சரிதானா என்பதுதான் பிரதான கேள்வியாகும். அதிகாரிகள் நல்லவர்களா கெட்டவர் களா, அவர்கள் தவறு செய்கிறார்களா, சரியாகச் செய்கிறார்களா என்ற ஆராய்ச்சிக்குள், சர்ச்சைக்குள் நான் போக விரும்ப வில்லை.

விவசாயிகளுடைய விளைபொருள்களை தனிப்பட்ட வர்த்தக சூதாடிகள், வியாபாரிகள் கொள்ளையடித்து மிகப் பெரிய அள விற்கு மோசம் ஆகாமல் இருப்பதற்காக விவசாயிகளை உறுப்பி னர்களாகக் கொண்டு அவர்களே பங்குதாரர்களாக இருந்து தங்க ளுடைய உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்க ஒரு ஏற்பாடு என்ற முறையில் அமைக்கப்பட்டதுதான் இந்த விற்பனைக்கூடங்கள். அந்த உறுப்பினர்கள் தாங்களே ஒரு குழுவைத் தேர்ந்தெடுத்து, ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்து அதன் மூலமாக அந்த சந்தைக் குழுக்களை நிர்வகிக்க வேண்டும் என்பதுதான் மூலச் சட்டம். அந்தச் சட்டத்தினுடைய நோக் கங்களை நிறைவேற்றுவதற்குப் பதிலாக, அதை ஒழுங்குபடுத்து கிறோம் என்ற பெயரால், அதில் உள்ள சீர்கேடுகளைச் சீர்படுத்த தனி அதிகாரிகளிடம் ஒப்படைக்கிறோம். அதற்கு உரிய முறை யிலே சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றுகிறோம் என்று சொல்லி 9 ஆண்டுக் காலமாக கூறிக்கொண்டே வருவது என்பது ஒரு தொடர்கதையாக இருக்கிறது. முற்றுப்புள்ளி இல்லாத அளவிற்குத் தொடர்கதையாக நீட்டிப்பது என்பது சரியல்ல.

இப்போது அரசு ஒரு காரணத்தைச் சொல்லுகிறது. 1983-ம் ஆண்டு கூட்டுறவு ஒருங்கிணைப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தது. 1983 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டத்திற்கு விதிகள் இன்னும் இயற்றப்படவில்லை. எனவே இது நீட்டிக்கப் படுகிறது என்று சொல்லக்கூடிய காரணம் சரிதானா என்பதை இந்த நேரத்திலே கேட்க விரும்புகிறேன்.

இன்றைக்கு பூமியை ஒரு நாளைக்கு மூன்று முறை சுற்றும் அளவிற்கு விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது. சென்னையிலிருந்து சில மணி நேரங்களில் உலகம் முழுவதும் பேச வாய்ப்பு இருக்கும் போது, நம்முடைய அரசுக்கு 1983 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்

[திரு. கோ. வீரய்யன்] [1987 நவம்பர் 18

பட்ட சட்டத்திற்கு கடந்த நான்காண்டுகளாக விதிகளை இயற்ற முடியவில்லை என்று சொல்லுவது வேடிக்கையாக இருக்கிறது. எங்களால் இதைப் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது. இந்த விதியைக் காட்டி விவசாயிகளின் விதியோடு விளையாடுகிறார்கள். இது நியாயம் அல்ல. சரியல்ல.

அமைச்சர் அவர்களை ஒன்று கேட்டுக்கொள்கிறேன். திருப்பூர், தஞ்சை, விழுப்புரம், திண்டிவனம், திருச்செங்கோடு திண்டுக்கல் மார்க்கட்டுகளை வந்து பாருங்கள். விவசாயிகள் வடிக்கக்கூடிய கண்ணீர், வேதனை ஆகியவற்றைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழு இல்லாத சூழ்நிலையில் தனி அதிகாரிகள் நிர்வாகத்தை நடத்து வதால் விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களை, அந்த அதிகாரிகளால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவற்றைத் தெரிந்துகொண்டும் சிலர் அவற்றைத் தீர்க்க முடியாத சூழ்நிலை யிலே இருக்கிறார்கள். திருச்செங்கோடு மார்க்கெட்டிங் சொசைட்டியின் கிளை சொசைட்டியான கொங்கனாபுரம் சொசைட்டியில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மிகக் குறைந்த சம்பளம் வழங்கப்படுகிறது. பெண்களுக்குக் குறைந்தபட்சம் எட்டு ரூபாய் கூலி கொடுக்க வேண்டும். அதற்குக் குறைவாக கொடுக்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. ஆனால் இந்த கொங்கனாபுரம் கிளையில் வேலை செய்யும் பெண்களுக்கு ஐந்து ரூபாய்க்கு மேல் கொடுக்காத நிலை இருக்கிறது. சேலத்திலே சிறப்பாக நடக்கிறது. நானும் அதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் சில இடங்களில் பெரும் பகுதி மோசமாக இருக்கிறது. எனவேதான் இப்படியே போவது சரியல்ல, இதைத் திருப்பித் திருப்பி நீட்டிக்காதீர்கள் என்று நாங்கள் கேட்டுக்கொண்டே இருந்தாலும், நீங்கள் அதன் ஆயுட்காலத்தை நீட்டித்துக் கொண்டே போவது எந்த வகையிலும் நியாயமில்லை. நான் மீண்டும் கேட்டுக்கொள்வது, விதி இயற்றவில்லை என்று காரணம் காட்டி நீட்டிப்பது சரியல்ல.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) :** ஒரு தடவை சொன்னாலே போதும். அத்துடன் முடித்துக் கொள்ளுங்கள். அடுத்து திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம், 3 நிமிடங் களில் முடித்துக் கொள்ள வேண்டும்.



1987 நவம்பர் 18]

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாற்றுத் தலைவர் அவர்களின் அதிகாரம் பலமாகக் கொடி கட்டிப் பறக்கிறது. மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தை சட்டத் திருத்தத்திலே ஜனதா கட்சி சார்பிலே எனது கருத்துக் களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு வேளாண் விளை பொருள் சந்தை சட்டம் வருடாவருடம் திருத்தப்பட்டு, வந்து கொண்டிருக்கிறது. மக்கள் பிரதிநிதிகள் பல ஆண்டுக்காலமாக அதிலே இல்லை. இதிலே போட்டிருக்கிறது 8 வருடங்கள் என்று. இதை இப்போது 9 வருடங்களாக்குகிறார்கள். சட்டத் திருத் தத்தை வருடத்திற்கு ஒரு முறை போட்டுத்தான் ஆக வேண்டு மென்ற கட்டாய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால்தான் வருடா வருடம் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை. ஒரு வாய்ப்பு இருந்தால், இந்த ஆட்சி தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த 1984 டிசம்பர் 28-லிருந்து 1989 டிசம்பர் 28 வரை போடக்கூடிய வாய்ப்பு இருந்தால், அப்படியும் போட்டு இருப்பார்களோ என்ற அச்சம் இருக்கிறது.

இதை வருடா வருடம் நீட்டித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தேர்தல் நடத்துவதிலே என்ன சிரமம் இருக்கிறதென்று தெரிய வில்லை. வேளாண் விளைபொருள் சந்தைகளுக்கு முறையான மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவதில் என்ன சிரமம் என்று தெரியவில்லை. அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேளாண் விளைபொருள் சந்தை என்று சொன்னால், அங்கே விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் அந்த வேளாண் விளைபொருள் சந்தைகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன? அங்கே வருகின்ற சரக்குகளை விற்றுக் கொடுக்கிறார்கள். விற்றுக் கொடுப்பதில் என்ன முறையைக் கையாள்கிறார்கள்? வணிகர்கள் அங்கே வந்து, 'பிட்' எழுதிக் கொடுக்க வேண்டும். 'பிட்'-லே கூடுதல் விலை கொடுக் எழுதிக் கொடுக்க வேண்டும். 'பிட்'-லே கூடுதல் விலை கொடுக் கிறவர்களுக்கு அந்தச் சரக்குகளைக் கொடுப்பார்கள். ஆனால் அங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது? வெளிச் சந்தையிலே உள்ள விலையைவிட ஒரு குவிண்டால் மிளகாய்க்கு 50 ரூபாய் குறைவாகக் கிடைக்கிறது. ஆனாலும்கூட அங்கே வாங்குகிறவர் களுக்குப் பல சலுகைகள் இருக்கின்றன. அங்கே வரி

கிடையாது. வாங்குகிற சரக்குகளுக்கு விற்பனை வரி
கிடையாது. இப்படிப்பட்ட சலுகைகள் இருந்தாலும்கூட, அங்கே
ஒரு குவிண்டால் மிளகாய் வற்றலுக்கு 50 ரூபாய் குறைவாகத்
தான் வருகிறது என்றால் என்ன அர்த்தம்? இந்த வேளாண்
விளை பொருள் சந்தைகளில் ரொக்கமாகப் பணத்தைக் கேட்கி
றார்கள். 'பிட்' அவர்களுக்கு விழுந்துவிட்டால், சரக்கை எடை
போட்டவுடனே, வணிகர்கள் பணம் கட்ட வேண்டும். ஆனால்
பஜாரிலே வணிகர்கள் வாங்குகிற சரக்குகளுக்கு ஒரு வாரம், 10
நாள், ஒரு மாதம் வரை தவணை கொடுக்கப்படுகிறது. அந்தச்
சலுகை இங்கு இல்லாத காரணத்தால் பல வணிகர்கள் இங்கே
வருவதில்லை. அவர்கள் வணிகத்தை ரொட்டேஷன் முறையிலே
செய்து வருகின்ற காரணத்தால், வேளாண் விளை பொருள் சந்தை
களுக்குப் போக விரும்பவில்லை. பணமுள்ள பெரும்
முதலாளிகள், ரொக்கமாக வைத்துள்ள முதலாளிகள் மட்டும்
தான் வேளாண் விளைபொருள் சந்தைகளுக்குள் நுழைய முடி
கிறது. இந்தக் காரணத்தாலே விவசாயிகள் வருடம் பூராவும்
பாடுபட்டு சேர்த்துக்கொண்டு வந்த மிளகாய் வற்றல், மல்லி
போன்றவற்றிற்கு எல்லாம் குவிண்டால் ஒன்றுக்கு 50 ரூபாய்,
40 ரூபாய் குறைவாகக் கிடைக்கிறது. இதுதான் விவசாயி
களுக்குச் செய்யும் நன்மையா?

வேளாண் விளைபொருள் சந்தைகள் மூலம் அவர்களுக்கு ஏன்
சலுகைகளைக் கொடுக்க முடியவில்லை என்றால், அங்கே பணம்
இடையாது. விற்கின்ற சரக்குகளுக்கு வணிகர்களிடம் வாங்கித்
தான் பணம் கொடுப்பார்கள். இந்தக் காரணத்தால் விலை குறை
வாக இருக்கிறது. இன்னும் ஒன்று செய்கிறார்கள். மிளகாய்
போன்ற சரக்குகளைக் கீழே கொட்டி வைத்து, தரமாகக் கொடுக்
கிறோமென்று சொல்லுகிறார்கள். வாஸ்தவம்தான். அப்படிக்
கொடுக்க வேண்டியதுதான். மேலே உள்ள ஆஸ்பெஸ்டாஸ்
அல்லது தகரம் காரணமாக ஒரு குவிண்டால் மிளகாய் வற்றலில்
5 கிலோ காய்ந்து போகிறது. இதெல்லாம் தேவைதானா?
விவசாயிகளுக்கு நீங்கள் என்ன சலுகை செய்கிறீர்கள்? இப்படிச்
செய்தால் விவசாயிகளுக்கு எப்படி நன்மை வரும்? வணிகர்
களுக்குத்தான் நன்மை போய்ச் சேரும். அங்கே 50 ரூபாய்கூட,
இங்கே 50 ரூபாய் குறைவு, அங்கே பணம் உடனே கொடுப்பார்கள்,
இங்கே வியாபாரிகளிடம் வாங்கித்தான் கொடுப்பார்கள். இங்க
சிரமங்கள் இருக்கின்றன.





இன்னும் ஒன்று, ரெகுலேட்டட் மார்க்கெட்டிங் கமிட்டி இருக்
கிறதல்லவா, அதிலே என்ன செய்கின்றார்கள்? அது இயங்கு
கின்ற இடத்திலேதான் வரி வசூல் செய்ய வேண்டும். அது இயங்
காத இடத்தில் எல்லாம் ரெகுலேட்டட் மார்க்கெட்டுக்கு என்று
வரி வசூலிக்கிறார்கள். நூற்றுக்கு 45 பைசா வசூலிக்கிறார்கள்.
இதிலே ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒரு லைசன்ஸ் இருக்கிறது.
திருச்சி மாவட்ட லைசன்சை வைத்துக்கொண்டு காமராஜ் மாவட்
டத்தில் வியாபாரம் செய்ய முடியாது. காமராஜ் மாவட்டத்திற்கு
ஒரு லைசென்ஸ். திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஒரு லைசென்ஸ்.
இப்படியெல்லாம் விற்பனை வரியைவிடக் கொடுமையான வரி
வசூலிக்கப்படுகிறது. இந்தப் பணத்தையெல்லாம் என்ன செய்
கின்றார்கள் என்று தெரியவில்லை. மக்கள் மன்றம் தேர்ந்தெடுக்
கப்படுவதற்கான வேலைகளைச் செய்யவேண்டும். வருடா
வருடம் தனி அலுவலர்கள் காலத்தை நீடித்துக்கொண்டு போவது
சரியல்ல. நியாயம் அல்ல என்று சொல்லி வாய்ப்பு அளித்ததற்கு
நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டத்தைப் பொறுத்த
வரையில் ஓராண்டு தனி அலுவலருக்கு நீடிப்பு கொடுக்கின்ற
ஒரே ஒரு விவகாரம்தான். இதிலே பல்வேறு பிரச்சினைகளை
எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள்.
திரு. மணிமாறன் அவர்கள் இதிலே தவறு நடக்கிறது என்று
குறிப்பிட்டார்கள். இந்த வேளாண்மைப் பொருள்கள் சந்தை
களைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டில் எல்லா அதிகாரி
களையும் அழைத்து, திருச்சியிலே மாவட்ட மகாநாடு
நடத்தினேன். எல்லா இடங்களிலும் எந்தக் குறைபாடும்
இதுவரையிலும் சொல்லப்படவில்லை. இனி சொன்னால் அதன்
மீது தக்க நடவடிக்கையை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

தஞ்சையைப் பொறுத்தவரையில் தவறு நடக்கிறது என்று
திரு. மணிமாறன் அவர்கள் குறிப்பிட்டார்கள். துறைக்கு எந்த
விதமான புகாரும் வரவில்லை என்பதை நான் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நன்றாக நடைபெறுகிறது
என்பதற்குச் சொல்கிறேன். இது எவ்வளவு வசதியாக விவசாயி
களுக்கு இருக்கிறது என்று சொன்னால்; இதிலே வருகின்றவர்
களுக்கு அவர்கள் கமிஷன் மட்டும்தான் எடுத்துக்கொள்கின்
றார்கள். வருடம்தோறும் ரூ. 259 லட்சம்தான் இதிலே வந்து

[திரு. க. இராசாராம்] [1987 நவம்பர் 18

கொண்டிருந்தது. விவசாயிகளிடத்திலே பிரச்சாரம் செய்து,
ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்றால் நல்ல
விலை உங்களுக்குக் கிடைக்கும் என்று எடுத்துச் சொன்னதன்
காரணமாக இப்போது 566 லட்சம் ரூபாய் இதிலே வசூலாகிக்
கொண்டிருக்கிறது. இந்தத் துறையிலே ரூ. 16 கோடியே 87
லட்சம் அரசுக் கணக்கிலே வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அள
வுக்கு அந்தத் துறை பாடுபட்டிருக்கிறது. நல்லபடியாக வேலை
நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் பல இடங்களில் இடங்
களைத் தேடி கட்டவேண்டும் என்று ஆங்காங்கு இடங்களைப்
பார்த்துக்கொண்டிருக்கிறோம். விவசாயிகளுக்கு நல்ல விலை
கிடைக்க வைக்க முடியும். அதற்கான பாதுகாப்பான ஏற்பாடு
களை இப்போது செய்துகொண்டிருக்கிறோம்.

இன்னொன்றையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்
நாங்கள் போய்ப் பார்த்ததில் எல்லா இடங்களிலேயும்
வியாபாரிகள் வந்து சரக்கைப் பார்க்கின்றார்கள். உங்களுக்குச்
சொல்லிக்கொள்கிறேன். ஈரோடு மஞ்சள் மண்டி பற்றி
குறிப்பிட்டார்கள். மஞ்சளுக்கு இந்தியாவிலேயே நல்ல விலை
தமிழகத்திலேதான் கிடைக்கிறது. நல்ல விலை இங்கே
கிடைக்கிறது என்றுதான் ஆந்திராவிலே இருந்து மஞ்சள்
ஈரோட்டுக்கு வருகிறது, கர்நாடகாவிலேயிருந்து மஞ்சள்
ஈரோட்டுக்கு வருகிறது. நல்ல விலை கிடைப்பதாலேயே, அங்கே
எந்தத் தவறும் நடக்காததாலேயேதான் அங்கே கொண்டு
வருகிறார்கள். நீங்கள் வேண்டுமானால் போய்ப் பார்க்கலாம்.
அங்கே போய்ப் பார்த்தால் தெரியும். நல்ல விலை
கிடைக்கிறது. ஆகவே வருகின்றார்கள். விலையை எழுதி
வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் சுற்றிப் பார்த்து அவர்
களிடத்திலே நான் கலந்து பேசினேன். ஆங்காங்கு விளை
பொருள்களை எல்லாம் அவர்கள் சுற்றிப் பார்த்தார்கள். அப்படிப்
பார்த்ததிலே இன்றைக்கு நல்ல விலை கிடைப்பதற்கு என்ன
செய்வது என்று எண்ணிப் பார்த்ததில் நம்முடைய திரு.
வீரய்யன் அவர்கள் விஞ்ஞானம் பற்றியெல்லாம் சொன்னார்கள்.
விஞ்ஞானத்தைக் கொண்டு வரலாம் என்று நானும் கணக்குப்
போட்டுப் பார்த்து 'டெலக்ஸ்' கொண்டு வந்திருக்கிறேன். எல்லா
இடங்களுக்கும்—16 விளைபொருள் சங்கங்களுக்கும்— டெலக்ஸ்
வைக்க ஏற்பாடு செய்கிறோம் (குறுக்கீடு).



1987 நவம்பர் 18]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர்
அவர்கள் பேசி முடித்து விடட்டும். பிறகு திரு. வீரய்யன் கேட்க
லாம்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: உறுப்பினர் அவர்கள்
'டெலக்ஸ்' வேண்டாம் என்கின்றாரா? டெலக்ஸ் அங்கே வைக்
கிறோம்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நான் டெலக்ஸ் வேண்டாம் என்று சொல்ல
வில்லை. ஒயர்லெஸ்ஸே வைக்கவேண்டும் என்றுதான் சொல்
கிறேன். நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, பூராவும்
இயக்குநர் குழு மூலமாக இந்த மஞ்சள் குழு செயல்பட வைப்ப
தற்கு இருக்கின்றார்களா? அது சரியா தப்பா என்ற சர்ச்சைக்
குள்ளே நான் போகவில்லை. தனி அதிகாரிகள் மூலமாகவே
நடப்பது சிறப்பானது என்றும் இயக்குநர் குழுவை வேண்டாம்
என்றும் அரசு கருதுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இயக்குநர் குழு வேண்டாம்
என்று அல்ல. இப்போது ஈரோட்டிலே இயக்குநர் குழு போடப்
பட்டிருக்கிறது. புதுக்கோட்டையிலே இயக்குநர் குழு போடப்
பட்டிருக்கிறது. ஏற்கெனவே குழுக்கள் போட்டிருக்கிறோம்.
போடத்தான் போகிறோம். அதற்கான சட்டதிட்டங்கள்
வந்தாக வேண்டும். அதில் இருக்கின்ற குறைபாடுகளை
எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதை விளக்க அறிக்கையிலே
சொல்லியிருக்கிறோம். அதற்கு டெலக்ஸ் வைக்கிறோம் என்று
சொன்னால் இந்தியாவிலே எந்த மார்க்கெட்டிலே என்ன சரக்கு,
என்ன விலைக்கு விற்கிறது என்று பார்த்துச் சொல்ல வேண்டும்.
அந்த விவரம் தினசரி காலையிலேயே அந்த அதிகாரிகளுக்கு
வந்து விட வேண்டும் என்று ஏற்பாடு பண்ணியிருக்கிறோம்.
ஆகவே விலை குறைவாக இங்கே வாங்க முடியாது.
எங்குமே வாங்க முடியாது. இனிமேல் இந்த விலை வேறு
எங்கேயும் கிடைக்காது. எந்த மார்க்கெட்டிலேயும் கிடைக்காது.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி
அவர்கள் மார்க்கெட்டிலே இருப்பவர்கள் எல்லாம் எப்படி பறித்து
வியாபாரிகளுக்குக் கடன் கொடுத்துவிட்டுப் போய்விடுகிறார்கள்

[திரு. க. இராசாராம்] [1987 நவம்பர் 18

என்று சொன்னார்கள். அவருடைய ஜில்லாவிலே கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். தர்மபுரி ஜில்லாவில் மாம்பழத்திற்குப் பணத்தைக் கொடுத்து மாம்பழத்தினைக் குறைந்த விலைக்கு வாங்குகின்றார்கள் என்று பார்க்கிறோம். ஏமாறுகின்றவர்கள் இருக்கின்றவரைக்கும் ஏமாற்றிக்கொண்டுதான் இருப்பார்கள். நாம் ஒன்றும் தடுக்க முடியாது. அவர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ரெகுலேட்டட் மார்க்கெட்டுக்குக் கொண்டு வந்தால் நாங்கள் அவர்களுக்கு நல்ல உயர்ந்த விலையை வாங்கித் தர வேண்டும் என்றுதான் பாடுபடுகிறோம். உயர்ந்த விலை கிடைக்கும். இடைத் தரகர்கள் நிலைமையெல்லாம் மாறும். விவசாயிகளுக்குக் கை நிறையக் காசு கிடைக்கும். இதற்குத்தான் இந்த விளைபொருள் மார்க்கெட்டை நாங்கள் உருவாக்கியிருக்கிறோம். அது நல்லபடியாக நடக்கிறது. தமிழ்நாட்டிலே அற்புதமாக நடைபெற்று வருகிறது. எல்லோரும் வந்து பார்த்துவிட்டுப் போகிறார்கள்; பாராட்டுகிறார்கள். ஓராண்டுக்காலம் நீடிப்பதாக இது வருகிறது. புதிதாக டெலக்ஸ் முறையை ஏற்பாடு பண்ணியிருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்கள்கூட இன்றைக்குப் போன் பண்ணி என்னென்ன விலை என்று கேட்டு அறிந்து கொள்ளலாம். மஞ்சள், பருத்தி போன்ற 50, 53 பொருள்களை இப்போது வாங்க, விற்க சேர்த்திருக்கிறோம். அந்த வகையில் இப்போது பல்வேறு நல்ல நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்றைக்கு 70 கோடி ரூபாய் மதிப்புள்ள எண்ணெய். நெய், தேன், மசாலா போன்ற உணவுப் பொருள்கள் எல்லாம் தரம் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

(பிற்பகல் 1-10)

திருச்செங்கோட்டில் சம்பளம் குறைவு போன்ற நிலைமைகள் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரய்யன் குறிப்பிட்டார். அதைப்பற்றி நான் கவனிக்கத் தயாராக இருக்கிறேன். ஏனென்றால் தொழிலாளர்கள் கெட்டுப் போக வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. அதுபோல விவசாயிகளின் விதியோடு விளையாடுகிறீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரய்யன் குறிப்பிட்டார். விவசாயிகளுடைய விதியோடு விளையாடி அவர்களுக்கு நாங்கள் நன்மைகளைச் செய்து கொண்டிருப்பதால்தான் இன்றையதினம் விவசாயம் நல்ல முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. விவசாயிகளுக்கு



1987 நவம்பர் 18] [திரு. க. இராசாராம்]

நேரடிப் பயிர் பாதுகாப்பு முறை, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் அந்தக் காலத்திலிருந்தே இல்லை. ஆனால் அதை இப்போது நாங்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

அதுபோல தண்ணீர் விடுவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி ஒன்றை எடுத்துச் சொன்னார். அதற்கும் இந்த விவாதத்திற்கும் சம்பந்தமில்லை என்றாலும் அதுபற்றி ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஒன்பதாம் தேதி தண்ணீரை திறந்து விட்டிருக்கிறோம். அந்தத் தண்ணீர் கடைமடைக்குப் போய்ச் சேர்ந்தவுடனே திறந்திருப்பதை நிறுத்தி விடுவோம் என்பதை இப்போதே தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி நிறுத்தினால்தான் திரும்ப ஒரு மாதம் அல்லது 15 நாள் கழித்து நாம் தண்ணீரைத் திறந்து விட முடியும். காரணம் மழை இனி மேல் பெய்யுமா இல்லையா என்பதும் நமக்குத் தெரியாது. விவசாயிகளுக்கு நாங்கள் ஏற்கெனவே வாக்கு கொடுத்திருக்கிறோம். அதன்படி அதிகாரிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. இன்றைக்கு தஞ்சையிலுள்ள விவசாயிகளே தண்ணீர் விடுவதை நிறுத்தச் சொல்லியிருக்கிறார்கள். தண்ணீர் போதும், மழை வேறு பெய்திருக்கிறது என்றும், இன்னும் 15 நாட்களுக்குப் பிறகு பயிர்களில் பால் பிடித்த பிறகு திறந்து விடுங்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் இந்த அரசு விவசாயிகளின் நலன் கருதி ஒவ்வொன்றையும் நன்றாகப் பார்த்து ஆய்ந்து செய்து கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வேளாண் விளைபொருள் சந்தைகள் திருத்தம் மற்றும் தனி வகை முறைகள் திருத்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தமட்டிலும் ஓராண்டுக் காலம் மேலும் நீட்டித்துக் கேட்டிருக்கிறோம். அருள்கூர்ந்து இச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்)

[1987 நவம்பர் 18

திருத்தச்சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 46/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 46/1987) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

### 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) பேரவை அலுவல்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவைக்கு ஓர் அறிவிப்பு. அனைத்து உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, சட்ட முன்வடிவுகள் நிறைவேறும்வரை தொடர்ந்து அவை நடைபெறும்.

### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.



1987 நவம்பர் 18]

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

**திரு. பொன் முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், நில ஆக்கிரமிப்பாளர்கள், மருந்துக் குற்ற வாளிகள் ஆகியோர்களைத் தண்டிக்கின்ற அடிப்படையில் உருவான அந்தச் சட்டத்தில் இன்றையதினம் திருத்தம் கொண்டு வரப்பட்டு இங்கே விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தச் சட்டத்தின்மீது என்னுடைய சில கருத்துக் களை மட்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இதிலே பிரதான மாக ஒன்றை இச்சட்ட திருத்தத்தின் மூலம் சேர்த்திருக்கி றார்கள். அது சம்பந்தமாக இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தின் மூலமாக எக்சி கியூட்டிவ் அதாரிட்டி என்கின்ற நிர்வாக இயந்திரத்திடம் ஜுடி சியல் பவர் என்கின்ற நீதி வழங்குகின்ற அதிகாரத்தை வழங்கு கின்ற நோக்கிலே மிகவும் ஜாக்கிரதையாக வழங்க வேண்டும். இச்சட்டத்தின் மூலம் நீதித்துறையினுடைய அதிகாரத்தை எடுத்து நிர்வாகத் துறைக்கு வழங்குகின்றோம், அப்படி வழங்கு கின்றபோது மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்பதை இச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். அதிலே அதிகாரிகள் தவறாக அதிகாரத்தைப் பயன் படுத்தக்கூடிய சூழ்நிலை நிச்சயம் உருவாகும் என்பதை இந்த மன்றத்தின் மூலம் எச்சரிக்க விரும்புகிறேன்.

---

* 16—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு. பொன் முத்துராமலிங்கம்] [1987 நவம்பர் 18

ஏற்கனவே பல்வேறு சட்டங்கள் இன்றைக்கு அமலில் இருக்
கின்றன. வனத்திலே குற்றம் செய்பவர்களைத் தண்டிக்க
சட்டம் இருக்கிறது; அதைப்போன்று கள்ளச்சாராயம் காய்ச்சு
பவர்களைத் தண்டிக்க சட்டம் இருக்கிறது; விபச்சாரம் செய்பவர்
களைத் தண்டிக்கச் சட்டம் இருக்கிறது. நில ஆக்கிரமிப்பு குற்ற
வாளிகளைத் தண்டிக்கச் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டங்
களை எல்லாம் விட்டுவிட்டு, தனியாக இப்படிப்பட்ட ஒரு சட்
டத்தை உருவாக்கி, அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்பது
அரசின் நோக்கமாக இருக்கும் என்று கருதுகிறேன். 'கிங் ஆஃப்
கிங்ஸ்' என்று சொல்வதைப்போல அப்படிப்பட்ட குற்றவாளி
களைத் தண்டிக்க இப்படிப்பட்ட ஒரு சிறப்புச் சட்டத்தை அரசு
விரும்புகிறது என்று கருதுகிறேன்.

இந்தச் சட்டத்தை உருவாக்கி, அப்படிப்பட்டவர்களைத் தண்
டிப்பதற்கு முன்பாக அந்தக் குற்றங்கள் நடக்காமல் இருப்பதற்கு
ஆட்சியில் இருப்பவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்பதை
சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தத் திருத்தச் சட்டத்தின்
மூலமாக வனக் குற்றவாளிகள் இதிலே சேர்க்கப்பட்டிருக்கி
றார்கள். வனங்களிலே இருந்து இன்றைக்கு சந்தன மரங்கள்
மற்றும் விலை ஏறிய மரங்களை எல்லாம் வெட்டி கடத்து
கிறார்கள் என்பது உண்மை என்றாலும் வனத்துறை அதிகாரிகள்
இந்தக் குற்றவாளிகள் இந்தக் குற்றங்களைச் செய்யாமல் தடுக்க
என்ன முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்
என்பதை அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு
முன்பாக எண்ணிப் பார்த்திருக்க வேண்டும்.

வனம் என்று சொல்லுகிறபோது மேற்குத் தொடர்ச்சி மலையி
லிருந்து தொடங்கி காடுகள் மற்றும் வனத்துறைக்குச் சொந்த
மான இடங்கள் எல்லாம் உள்ளடங்கும். இவ்வளவு பரந்த
இடத்தில் இந்தக் குற்றங்கள் நடக்காமல் இருப்பதற்கு அரசு
எந்த அளவுக்கு இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்
என்கிறபோது அரசு ஒன்றைக் கவனிக்க வேண்டும். 'கம்யூனிக்
கேஷன் நெட் ஒர்க்' என்று சொல்வார்கள்.
அதிகாரிகள் இருக்கிறார்கள். எல்லாப் பகுதிகளையும் ஒரே
நேரத்தில் அவர்கள் கண்காணிக்க முடியாது; இயலாது. ஆனால் இன்றைக்கு வன
ஒரு இடத்தில் குற்றம் நடக்கிறது என்றால் குற்றவாளிகளின்
எண்ணிக்கை, அவர்களுடைய பலம் அதிகமாக இருந்தால் அந்த



1987 நவம்பர் 18] [திரு. பொன் முத்துராமலிங்கம்]

அளவுக்கு அதிகாரிகளுடைய பலத்தை அதிகமாக்கிக்கொள்ள 'கம்யூனிக்கேஷன் நெட் ஒர்க்' இந்த வனத்துறை அதிகாரிகளிடம் இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

காரணம், மேற்குத் தொடர்ச்சி மலை பல நூற்றுக்கணக்கான மைல் நீளமுடையது. காட்டுப் பகுதிகள் பல ஆயிரம் சதுர மைல்கள் கொண்டதாக இருக்கின்றன. வனத்திலே ஒவ்வொரு பகுதிக்கும் தனித் தனியாக அதிகாரிகளை நியமிப்பது இயலாது என்றாலும் ஒரு அதிகாரியை வைத்து, செய்தி தொடர்பு மூலமாக ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து அந்த அதிகாரி வந்து சேர, அதற்கான 'கம்யூனிக்கேஷன்' இருக்கிறதா என்றால் இல்லை. அதனால் தான் வனத்திலே இப்படிப்பட்ட குற்றங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசு இப்படிப்பட்ட ஒரு சிறப்புச் சட்டத்தைக் கொண்டுவரக் காரணம், ஏற்கெனவே 'நேஷனல் செக்யூரிட்டி ஆக்ட்' (என்.எஸ்.ஏ.) தேசியப் பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின்கீழ் யாரையாவது கைது செய்தால் மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். தமிழக சிறப்புச் சட்டத்தின் மூலம் கைது செய்தால் மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. மாறாக இந்த அரசால் நியமிக்கப்படுகின்ற ஒரு குழுவின் முன்னால் குற்றவாளிகளாகக் கருதப்படுகிறவர்கள் ஆஜர்படுத்தப்படுவார்கள். அந்தக் குழு விசாரித்து, தேவைப்பட்டால் அவர்களைச் சிறையில் அடைக்க உத்தரவிடுவார்கள்; சிறையில் அடைக்கப்படுவார்கள்; இல்லை என்றால் விட்டு விடுவார்கள். சிறையிலே அடைக்கப்பட்ட குற்றவாளிகளாக இருந்தால் அவர்களை விசாரித்து, மேலும் அவர்களை சிறையிலே வைக்கப் போதுமான காரணங்கள் இருந்தால் மேலும் கால நீட்டிப்பு செய்வார்கள்; இது ஓராண்டு தொடரும் என்று இருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்திலே நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் குழு அரசாங்கத்தாலே நியமிக்கப்படுகிற ஒன்று. குற்றவாளிகள் என்று சொல்லப்படுகிறவர்கள் வாதாட, (காரண காரியங்களை எடுத்துச்சொல்ல வழக்கறிஞர்களை நியமித்துக்கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. ஆகவே, இந்தச்

[திரு. பொன் முத்துராமலிங்கம்] [1987 நவம்பர் 18

சட்டத்தைப் பயன்படுத்தி, அதிகாரிகள் அதிகமான அதிகாரத்தைப் பெற்று, பெருத்த தவறு செய்கின்ற சூழ்நிலை இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு இப்படிப்பட்ட சிறப்புச் சட்டத் திருத்தத்தை அமல்படுத்துகின்ற நேரத்தில் ஒருசில குறிப்பிட்ட கால வரையறைக்குப் பின்னாலே அரசாங்கமே ஒரு குழுவை நியமிக்கவும், இந்தச் சட்டம் எந்த அளவுக்கு அமல்படுத்தப்பட்டிருக்கிறது, இந்தச் சட்டத்தினுடைய நோக்கங்களை, எண்ணங்களை அமல்படுத்துகிறபோது அதிகாரிகள் ஒழுங்காக செய்திருக்கிறார்களா என்பதைக் கண்காணிப்பதற்கான வாய்ப்பினை அந்தக் குழுவிற்கு ஏற்படுத்திக் கொடுக்கவும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்தால் அரசாங்கத்தினுடைய எண்ணங்கள், நோக்கங்கள் சரியான முறையிலே நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்பதை எண்ணிப் பார்க்க வாய்ப்பு இருக்கும். அப்படிப் பார்க்கின்றபோதுதான் இது பொது மக்களுக்குத் தொல்லை கொடுப்பதாக இருக்கிறது அல்லது இந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறது என்று தெரிந்தால் உடனடியாக இந்தச் சட்டத்தை வாபஸ் பெற்றுக்கொள்ளும் சூழ்நிலை ஏற்படும்.

(பிற்பகல் 1-20)

ஆனால் இதுவரையிலும் அரசாங்கம் இப்படி ஒரு எண்ணத்தை எண்ணிப் பார்த்ததாகத் தெரியவில்லை. ஆங்காங்கே உள்ள அதிகாரிகள் எல்லாம் அந்தத் தொடர்புடைய சட்டங்கள் மூலமாக தண்டனை வழங்குவதற்குப் பதிலாக அதிலே உள்ள சிரமங்களை எண்ணிப் பார்த்து, நடைமுறையை எண்ணிப் பார்த்து சுருக்கமாக்க வேண்டும். சில நேரங்களில் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இவர்கள் எந்தக் குற்றமும் செய்யாதவர்கள்மீது கூட இப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு விடுகிறார்கள் என்கிற அச்சம் எங்களுக்கு இருக்கிறது என்று ஏற்கெனவே 1982 ஆம் ஆண்டு இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது எங்கள் கட்சியின் சார்பாகத் தெரிவிக்கப்பட்டது. அந்த அச்சமும் தொடருகிறது. இன்றைக்கு அந்த நடவடிக்கைகளும் தொடர்ந்துகொண்டு இருப்பதன் காரணத்தால் இந்தச் சட்டத்தினுடைய நோக்கங்கள் இன்றைக்கு பாழடிக்கப்படுகின்றன. இந்தச் சட்டத்தினுடைய நோக்கங்களின் முனை



1987 நவம்பர் 18] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

முறிக்கப்படுகிற காரணத்தால் இந்தச் சட்டத்தை மாற்றி இன்றைக்கு மக்களுக்குத் தேவையான அடிப்படையில் இதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தச் சட்ட முன்வடிவை நான் மனதார வரவேற்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவைச் சட்டமாக இயற்றினால் மட்டும் போதாது. இதனை நடைமுறைப்படுத்துகிறபோது இந்தச் சட்டத்தின் ஷரத்துக்கள் இரும்புக் கரம் கொண்டு தயவு தாட்சண்யம் இன்றி அரசியல் மாச்சர்யங்களுக்கு அப்பாற்பட்டு கண்டிப்பாகக் கடுமையாக நிறைவேற்றப்பட வேண்டும். அந்த வகையில் தண்டனை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தின் காடுகளைப் பொறுத்த வரையில் வன விலங்குகளே இல்லை என்ற நிலை விரைவில் வந்துவிடும் என்ற அச்சம் இங்கே இருக்கிற நமக்கெல்லாம் ஏற்பட்டு இருக்கிறது. அந்த நிலை ஏற்பட்டுவிடக்கூடாது. இந்த வன விலங்குகள் நல்லபடியாக இருக்க வேண்டும். அவற்றை வெகு விரைவில் பெருக்கி வன விலங்குகள் அதிகமான அளவில் காடுகளில் இருக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடுதான் இந்த அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

சத்தியமங்கலத்தைச் சேர்ந்த காடுகளில் வன விலங்குகள் வேட்டையாடப்படுவது நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே இருக்கிறது. அவ்வாறு அவர்கள் கொள்ளை அடிக்கின்ற அந்தப் போக்கு வெளிப்படையாகவே அதிகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் சத்தியமங்கலம் காடுகளில் ஆண் யானைகளே இல்லை என்ற நிலைமை உருவாகிக்கொண்டு இருக்கிறது. இரண்டு அங்குலம் அளவுக்கு தந்தம் முளைத்தால்கூட அந்தத் தந்தங்களுக்காக அந்த ஆண் யானைகள் கடத்தப்படுகின்றன. ஆகவே இதைக் கண்டிப்பாகத் தடுத்தாக வேண்டும். இன்னும் சொல்லப் போனால் சத்தியமங்கலம் காடுகளில் இருக்கிற பெண் யானைகள் எல்லாம் இன விருத்தி செய்ய முடியாமல் ஆண் யானைகளைத் தேடிக்கொண்டு கேரளா மற்றும் கர்நாடகத்தின் காடுகளுக்குச் சென்று கொண்டு இருக்கிற நிலைமைதான் இப்போது அங்கே இருக்கிறது.

இன்னும் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். சமீப காலங்களில் அதாவது இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பாக மேட்டூரைச் சேர்ந்த வீரப்பன் என்பவருடைய தலைமையில் இருக்கிற கொள்ளை கோஷ்டி இருக்கிறது. அவர்கள் பல வருட காலமாக இதைச் செய்து வருகிறார்கள். கடந்த இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பாக ஒரு யானையைக் கொன்று அதன் தந்தத்தை அறுத்துக்கொண்டிருக்கிறபோது வனத்துறை அதிகாரிகளும் வனத்துறைக் காவலர்களும் சுற்றி வளைத்துப் பிடித்தார்கள். ஆனால் அந்தக் கோஷ்டியினர் எதற்கும் பயப்படாமல் துப்பாக்கியை எடுத்து படபட என்று சுட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள். தப்பி ஓடிவிட்டார்கள். ஏன் இந்த நிலைமை என்று அதிகாரிகளைக் கேட்கிறபோது பழைய துப்பாக்கியை வைத்துக்கொண்டு நாங்கள் குறிபார்த்துச் சுடுவதற்குள்ளாக அவர்கள் கையில் வைத்திருக்கின்ற நவீனமான ஸ்டென் கன் மூலமாக எங்களைச் சுட்டுவிட்டுத் தப்பி ஓடிவிடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். எனவே வனத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு நாம் ஏன் மிக நவீனமான துப்பாக்கிகளை வழங்கக்கூடாது என்றுதான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பஞ்சாபிலே இருக்கிற தீவிரவாதிகள், உலகின் சில பகுதிகளில் இருக்கின்ற சிலர், உளவு இட்டவர்களையோ, அடைக்கலம் தந்தவர்களையோ எதிர்த்து அப்பாவி மக்களைக் கேடயமாக்கிக்கொண்டு திருட்டுச் சண்டை போடுகிறவர்கள் எல்லாம் இன்று நவீனமான ஆயுதங்களை வைத்துக்கொண்டு இருக்கும்போது நாம் ஏன் வனத்துறைக்கு அப்படிப்பட்ட நவீனமான இயந்திரங்களை அளிக்கக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் இந்தச் சம்பவம் நடந்தபிறகு அந்தக் கொள்ளைக் கோஷ்டியைப் பிடிப்பதற்காக வனத்துறையைச் சேர்ந்தவர்களும், காவல் துறையைச் சேர்ந்தவர்களும் ஏறத்தாழ 300 பேர் அந்தக் காட்டையே சுற்றி வளைத்துச் சல்லடை போட்டுத் தேடினார்கள். இருந்தாலும் அந்தக் கொள்ளைக் கோஷ்டியைப் பிடிக்க முடியவில்லை. காரணம், அவர்கள் காட்டுப் புதர்களிலும், மரங்களிலும் மற்றும் வனத்திலே இருக்கின்ற மறைவிடங்களிலும் மறைந்து சென்றுவிடுகிறார்கள். ஆகவே அவர்களைப் பிடிப்பதற்கு மிகவும் சங்கடமாக இருக்கிறது என்று கூறினார்கள். ஆகவே நான்





இங்கே கேட்டுக் கொள்வதெல்லாம் அந்த வனத் துறை அதிகாரிகளுக்கு அத்தகைய கயவர்களையும் கொள்ளையர்களையும் பிடிப்பதற்கு ஹெலிகாப்டர் போன்ற வசதிகளைத் தந்து உதவினால் தான், இந்த செய்பவர்களைப் பிடிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோலத்தான் காடுகளிலே இருக்கிற சந்தன மரங்களை வெட்டுபவர்களுடைய திருட்டுத்தனமான செயல்கள் மிக அதிகமாக இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலை இப்படியே நீடிக்குமேயானால் வருங்கால குழந்தைகளுக்கும், வருங்கால சந்ததியினருக்கும் எல்லாம் சந்தனம் என்பதையும், சந்தன மரம் என்பதையும் ஒரு காட்சிப் பொருளாகக் காண்பித்து, ஒரு காலத்திலே இவை தமிழகத்தில் இருந்தன என்று சொல்ல வேண்டிய நிலைமைதான் வரும். ஆகவே அதை எல்லாம் தடுப்பதற்கு இந்தச் சட்டத்தில் வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இந்தக் குற்றங்களும் வன இலாகாவிலே நடப்பதற்கு சில அதிகாரிகளும் துணை போகிறார்கள் என்று நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் அந்த வனத்துறை அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு இல்லாமல் தந்தத்தை கொள்ளை அடிப்பதும் சரி, மரங்களை அறுப்பதும் சரி, சந்தன மரங்களை கடத்துவதும் சரி கண்டிப்பாக நடைபெற முடியாது. ஆகவே அவர்களுடைய ஒத்துழைப்போடுதான் அத்தகைய செயல்கள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அத்தகைய அதிகாரிகள் அந்தக் கடத்தல்காரர்களையும் கொள்ளைக்காரர்களையும் விட்டு விட்டு, ஏதோ தலைச்சுமையாக சுள்ளிகளையும், காய்ந்துபோன மரங்களையும் எடுத்துக்கொண்டு செல்கிற ஏழை எளிய மக்களை மிரட்டி கையூட்டு பெறுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே அத்தகைய நிலைமை மாற்றப்பட வேண்டும்; இந்தச் சட்டத்தின் மூலமாக அந்த ஏழை எளிய மக்களுக்குத் துன்பங்கள் துடைக்கப்பட வேண்டும் என்பதிலே இந்த அரசு மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

கடைசியாக கள்ளச் சாராயக்காரர்கள் இந்தச் சட்டத்திலே புகுத்தப்பட்டிருக்கிறார்கள்; அவர்களைப்பற்றி ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். கள்ளச் சாராயத்தைக் காய்ச்ச

[திரு. ஈ. வெ. கி. ச. இளங்கோவன்] [1987 நவம்பர் 18

பவர்களை, உண்மையாக அந்தத் தொழிலிலே ஈடுபடுபவர்களைக் கண்டிப்பாகக் கைது செய்ய மாட்டோம் என்ற நிலையைக் காவல் துறையினர் எடுத்திருக்கிறார்கள். மாறாக ஒன்றுமே தெரியாத சாராயம் என்றால் கருப்பா வெள்ளையா என்று தெரியாத அப்பாவி மக்களை எல்லாம் சாராயம் காய்ச்சியதாகவும் சாரா யத்தை வைத்திருந்ததாகவும் இந்தச் சட்டத்தின் கீழ் சில அதிகாரிகள் . . . .

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வன இலாகா அதிகாரிகள் மீது பொத்தம் பொதுவாக சில குற்றங்களை சுமத்தினார்கள். இப்போது கள்ளச் சாராயம் தயாரிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது பற்றி பொதுவாகச் சொல்லி வருகிறார்கள். இப்படிப் பொத்தம் பொதுவாகச் சொல் லாமல், குறிப்பிட்டு இன்ன அதிகாரி இன்ன இடத்தில், இப்படி என்று சொன்னால் நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கி றோம். தமிழ்நாட்டில் நடப்பதுபோல் வன இலாகாவிலோ, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் மீதோ வேறு எந்த மாநில அரசாங்கமும் நடவடிக்கை எடுக்கவில்லை.

**திரு. ஈ. வெ. கி. ச. இளங்கோவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியது போல் நான் வன இலாகாவைப்பற்றிப் பேசும்போது ஒட்டு மொத்தமாக எல்லா அதிகாரிகளையும் சொல்லவில்லை. மிகக் குறைந்த அளவில் இன்னும் சொல்லப்போனால் 5 சதவீதம் அதிகாரிகள்தான் அத்தகைய செயல்களிலே ஈடுபட்டுக் கொண்டி ருக்கிறார்கள் என்பதைக் கூறிக்கொண்டு, அதேபோல காவல் துறையைச் சார்ந்தவர்கள் எல்லோரையும் நான் குறிப்பிட விரும்பவில்லை; ஆனால் அவர்கள் எவன் எவன் கள்ளச் சாரா யத்தை காய்ச்சுகிறானோ அவனை விட்டு விட்டு அப்பாவி மக்க ளைப் பிடிக்கின்ற வகையில்தான் இன்றைக்கு நிலைமை இருக் கிறது. நான் இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் கண்டிப்பாக, இந்த அரசின் மீது குற்றம் சாட்ட வேண்டும் என்றோ அரசு துறைகள் மீது குற்றம் சுமத்த வேண்டும் என்றோ சொல்லவில்லை. இந்தச் சட்டம் முழுமையாக, முழு மனத் தோடு இரும்புக் கரம் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட



1987 நவம்பர் 18] [திரு. ஈ. வெ. கி. ச. இளங்கோவன்]

வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் கூறு கிறேன் என்று சொல்லி இந்தச் சட்டத்தை மனமார வரவேற்று, இதுபோன்ற நல்ல சட்டங்கள் பல வரவேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, குண்டர்கள் சட்டம் என்ற பெயராலே நாட்டிலே தெரியப்படக் கூடிய இந்தச் சட்டம் இப்போது கள்ளச் சாராயக்காரர்களைப் பிடிப்பதிலும் மற்ற மறைமுகமான குண்டர்களைப் பிடிப்ப திலும் இருந்து வன இலாகாவிலே ஏற்படக்கூடிய குற்றங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பொறுத்த அளவிலே, அதன் காரணமாக [illegible] ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டி அதிலிருந்து பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் சில கருத்துக்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் அவையின் நேரம் நீடிக்கப்படுகிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வன இலாக்கா அதிகாரிகளைப் பொறுத்தவரையில் ஒரு பயங்கரமான [illegible] நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். குறிப்பாக, இன்றைக்கு வனங்களில் வன ராஜாக்கள் என்று சொல்லப்படக்கூடியவர்கள் மரங்களைப் பல இடங்களில் வெட்டிக்கொண்டு செல்கிறார்கள்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் மதுரை மாவட் டத்தில் வத்ராப்போட் என்ற இடத்தில் அப்படிப்பட்ட நடவ டிக்கைகள் நடக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் வெள் ளறுக்குகாணி என்ற இடத்தில் அப்படிப்பட்ட நடவடிக்கைகள் நடக்கின்றன. சென்ற ஆண்டு வன இலாக்கா மானியத்தில் பேசுகிறபோது வெள்ளறுக்குகாணியில் எப்படி ஒரு சிலர் சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டு, அந்தப் பகுதியில் உள்ள காணி சமுதாயத்தைச் சார்ந்தவர்களை அடித்து விரட்டி, வன இலாக்கா அதிகாரிகளின் உதவியோடு கள்ளச் சாராயம் காய்ச்சுவது உள்பட பல்வேறு சமூக விரோதச் செயல்களில் ஈடு

படுகிறார்கள் என்பதை சுட்டிக்காட்டி இருக்கிறேன். இன்றைக்கு இப்படிப்பட்டவர்களைப் பாதுகாத்து, வன இலாக்கா அதிகாரிகள் அப்பாவி மக்கள் மேல் புகார்களைக் கொடுத்து, அவர்களைப் போலீஸ் வைத்து இம்சை செய்கிற நிகழ்ச்சிகள் எல்லாம் இந்த மாவட்டத்தில் நடந்திருக்கின்றன. நான்கூட பத்மநாபபுரம் அசிஸ்டெண்ட் கலெக்டர் அவர்களை நேரில் சந்தித்து இப்படிப்பட்ட நடவடிக்கைகளைச் சொல்லி புகார் கொடுத்து இருக்கிறேன். நான் எதற்கு இதைச் சுட்டிக் காட்டுகிறேன் என்றால் இன்றைக்கு வனத்தில் நடைபெறுகிற கொள்ளையைத் தடுப்பதைப் பற்றி யாருக்கும் கருத்து வேறுபாடில்லை. அங்கே நடக்கக்கூடிய அக்கிரமங்களைத் தடுப்பதைப்பற்றி யாருக்கும் ஆட்சேபணைகள் கிடையாது. அதற்குக் கடுமையான சட்டத்தைப் போடுவதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு இன்றைக்கு வன இலாக்கா அதிகாரிகள் கையில் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை அல்லது அதிகாரத்தைக் கொடுப்பது என்பது கொஞ்சம் யோசிக்க வேண்டியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு ஏழை மக்கள் அவர்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்காக வனங்களுக்குள்ளே போய், சில மரங்களின் கீழே விழுந்து கிடக்கிற விறகுகளைக் சேகரித்துக் கொண்டு செல்கிறார்கள். அதை இன்றைக்கு வன இலாக்கா அதிகாரிகள் தடுக்கிறார்கள். அவர்களைப் பிடித்து உதைக்கிறார்கள். அவர்களைத் துன்பப்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை ஒரு பக்கம் எடுத்துக்கொண்டு, சமூக விரோதிகள் மரங்களை வெட்டுவதற்குக் கைகாட்டி விடுகிற நிகழ்ச்சிகள் நடக்கின்றன.

அதற்கு எடுத்துக்காட்டாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறைக்குப் பக்கத்தில் சேனங்கோடு என்ற இடத்தில் பஞ்சாயத்துக்குச் சொந்தமான ஒரு ரோடு இருக்கிறது. அந்த ரோட்டிலே இன்றைக்கு வன இலாக்கா அதிகாரிகளால் ஒரு செக் போஸ்ட் போடப்பட்டிருக்கிறது. இதுபற்றி வனத்துறை அமைச்சர் அவர்களுக்கு ஏற்கனவே எழுதி அவரும் ஒரு பதிலை கொடுத்தார்கள். அங்கே செக் போஸ்ட் போட மாட்டார்கள்; அப்படி போட்டிருந்தால் அது அகற்றப்படுமென்று சொன்னார்கள், ஆனால் இன்றுவரையில் அந்த செக் போஸ்ட்டை





அகற்றுவதற்கு அவர்கள் தயாராக இல்லை. அங்கே டிஸ்ட்ரிக்ட் பாரஸ்ட் ஆபீசரைப் பார்த்து பேசினால் அதை மாற்ற முடியாது என்றும் அங்கே செக் போஸ்ட் இருந்தால்தான் வனத்திலிருந்து வருகிற மரங்களைத் தடுக்க முடியுமென்றும் சொல்கிறார்கள். ஆனால் உண்மையில் என்ன நடக்கிறதென்றால் செக்போஸ்ட்டை ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பக்கத்தில் நூற்றுக்கணக்கான விவசாயிகள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் விவசாயத்திற்கு வேண்டிய உரம் மற்றவைகளை எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்காமல் இந்த வன இலாக்கா அதிகாரிகள் தகராறு பண்ணுகிறார்கள். கேட்டால் நாங்கள் கேட் போட்டிருக்கிறோம், வாட்ச்மேன் போட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்த வாட்ச்மேனுக்கு 25 ரூபாய், 50 ரூபாய் தினம் கொடுத்தால்தான் கேட் திறந்து விடப்படுகிறது. இதன்காரணமாக விவசாயிகள் பெரும் கஷ்டப்படுகிறார்கள். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூட இந்தப் பிரச்னையை எழுப்பி, தகுந்த நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டோம். டிஸ்ட்ரிக்ட் பாரஸ்ட் ஆபீசர் அவர்கள் தகுந்த நடவடிக்கையெடுத்து விவசாயிகளுக்குக் கஷ்டம் இல்லாத முறையில் இதை அமைத்துக் கொள்வோம் என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னாலும் நடைமுறையில் உரம் கொண்டு போக வேண்டுமென்றால், கூலி ஆட்களை அழைத்துப் போக வேண்டுமென்றால் அந்த செக் போஸ்ட்டைத் திறந்து விடுவதற்கு அவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இன்றைக்கு வனத்திலே உள்ள பொருட்களை அல்லது வனத்தைப் பாதுகாக்கவேண்டும் என்ற முறையில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில், ஏழை மக்களுக்கு, நடுத்தர மக்களுக்குக் கஷ்டத்தை ஏற்படுத்தக்கூடிய முறையில் இந்த விஷயம் அமையக் கூடாது. இன்றைக்கு காவல்துறையிலே உள்ளவர்கள், குண்டர்கள் சட்டத்தை எப்படித் தவறாகப் பயன்படுத்தி, தங்களுக்கு வேண்டாதவர்கள் மீதெல்லாம் வழக்குகளைப் போடுகிறார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். இது சம்பந்தமாக நான் போன தடவை பேசுகிறபோது, ஒருசில எடுத்துக்காட்டுக்களைக்கூடக் குறிப்பிட்டுச் சொன்னேன். இந்தச் சட்டத்தினுடைய உண்மையான நோக்கத்தை நிறைவேற்றவேண்டுமானால், மரத்தை தனியாக வெட்டிக்கொண்டு செல்கிற நேரத்தில், தகவல் கொடுத்தாலும்கூட,

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1987 நவம்பர் 18

வன இலாக்கா அதிகாரிகளைப் பொறுத்தவரையில் உடனடி
யாகப் போய் அந்தத் திருட்டைத் தடுப்பதற்கு அவர்களால்
முடியவில்லை. இதற்கு நான் ஒரு உதாரணத்தைச் சொல்ல
விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள குலசேகரம் என்ற இடத்
திலே ஒரு ரேஞ்ச் ஆபிசர் இருக்கிறார். அந்த இடத்திற்கு
அருகாமையில் உள்ள காடுகளில் இருந்து மரங்களை வெட்டி
எடுத்துச் செல்கிற நேரத்தில், அந்த ரேஞ்சருக்குத் தகவல்
கொடுக்கப்பட்டது. அவர் ஒரு டாக்சியைத் தேடி, அதைப்
பிடித்துக்கொண்டு போவதற்கு முன்னால், திருடியவர்கள் கேரள
மாநிலத்திற்குச் சென்றுவிட்டார்கள். கேரள மாநிலத்தை
யொட்டியுள்ள தமிழக எல்லையோரக் காடுகளில் இப்படிப்பட்ட
நிகழ்ச்சிகள் நடக்கின்றன. ஆகவே இதைத் தடுக்கவேண்டும்
என்ற எண்ணத்தில், வன இலாக்காவினுடைய மேல் அதிகாரி
களைச் சந்தித்து பேசியபோது, அவர்கள் என்ன சொல்கிறார்கள்
என்றால், பாரஸ்ட் ஸ்குவார்டு என்ற ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டு
இருக்கிறது, அவர்களுக்குத் தகவல் கொடுத்தால், அவர்களுடைய
வாகனத்தைப் பயன்படுத்தி, இப்படிப்பட்ட திருட்டைத் தடுத்
துக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள்,
தடிக்காரன்கோணத்திலோ அல்லது அதற்குப் பக்கத்திலே உள்ள
வீரப்புலியிலோதான் இருக்கிறார்கள். அங்கே சென்று தகவல்
களைச் சொல்ல முடியவில்லை. ஆகவே தமிழக எல்லையோரப்
பகுதியில் உள்ள வனங்களுடைய திருட்டைத் தடுப்பதற்கு,
அந்தப் பகுதியில் உள்ள வன இலாக்கா அதிகாரிகளுக்கு வேக
மாகச் செல்லக்கூடிய வாகன வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க
வேண்டும். அதற்கான வாகன வசதிகளை, அதற்கான கம்யூனி
கேஷன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது இன்றியமையாத
தேவையாக இருக்கிறது. எனவே அந்த முறையில் உள்ள
நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அதேபோல்,—இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில்,—வன
இலாக்கா அதிகாரிகள், மலைவாழ் மக்களைக் கஷ்டப்படுத்தக்
கூடிய முறையில், அவர்களைத் துன்புறுத்தக்கூடிய முறையில்
இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தாமல் இருப்பதற்கு உள்ள பாது
காப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன். இன்று மலைவாழ் மக்களுடைய இடங்களை



1987 நவம்பர் 18] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

எல்லாம் பாரஸ்ட் இலாக்காவினுடைய அதிகாரிகள் பிடுங்கி
ஊரிலே உள்ளவர்களுக்கு விவசாயம் பண்ணுவதற்குக் கொடுத்து,
இன்றைக்கு அதிலேயிருந்து அவர்கள் பணத்தைச் சம்பாதித்துக்
கொண்டு இருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே
இப்படிப்பட்ட ஒரு கடுமையான சட்டத்தை நாம் ஏற்படுத்தக்
கூடிய நேரத்தில், இதனால் மலைவாழ் மக்களுக்கு எந்தவிதமான
பாதிப்பும் ஏற்படாது என்ற முறையில் உள்ள நடவடிக்கைகளை
அரசு எடுக்கவேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை
முடிக்கிறேன், வணக்கம்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர்
அவாகளால் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற 1888 ஆம் ஆண்டு
தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்ற
வாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில
ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கை
களைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவின் மீது ஜனதா
கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க
விரும்புகிறேன். இங்கே நோக்க-காரண விளக்கவுரையில் என்ன
சொல்லப்பட்டிருக்கிறது என்றால், காடுகளில் கள்ளத்தனமாக
மரங்களை வெட்டுவதும், வகைதொகையின்றி வன விலங்குகளை,
அதிலும் குறிப்பாக யானைகளைச் சாகடிப்பதும், இந்த
மாநிலத்தில் அதிகரித்து வருகின்றது. அவ்வாறு கள்ளத்தன
மாக மரங்களை வெட்டுவதும், வகைதொகையின்றி வன விலங்கு
களைச் சாகடிப்பதும், நபர்களுக்கும், சொத்துக்கும் மற்றும்
அப் பகுதியில் உயிரின வாழ்க்கைச் சூழல் முறைக்கும் ஆபத்தை
விளைவிப்பதோடு, பொது அமைதியையும் குலைக்கின்றன.
எனவே அவர்களைத் தடுப்புக் காவல் சட்டத்திலே பிடிப்பதற்காக
இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதாகச் சொல்லியிருக்
கிறார்கள். இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, இந்த
வனங்களில் உள்ள மரங்களை எல்லாம் வெட்டுவது யார்?
அப்படி வெட்டுகின்றவர்களைப்பற்றி அரசால் நியமிக்கப்பட்
டிருக்கிற வன இலாக்கா அதிகாரிகளுக்குத் தெரியாதா? அங்கே
உள்ள ரேஞ்சர்களுக்குத் தெரியாதா? அது எப்படி நடந்து
கொண்டிருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனாலும்
கூட அவர்களை எல்லாம் விட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1987 நவம்பர் 18

சொன்னால் என்ன காரணம்? அவர்களுக்குள்ளே ஒரு உடன் பாடு இருக்கிறதோ என்றுகூட எங்களுக்கு ஐயப்பாடு தோன்று கிறது. இதை நான் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே பேசியதைப்போல * * இப்படித்தான் இந்த வன இலாகா வினுடைய செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோல் வன விலங்கைப்பற்றி சொல்லியிருக்கிறீர்கள். இன்னும் கள்ளச் சாராயத்தைப்பற்றி சொல்லியிருக்கிறீர்கள்.

(பிற்பகல் 1-40)

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எப்போது சொன்னாலும் பொத்தாம் பொதுவிலேதான் சொல்லி குற்றம் சாட்டுகிறாரே தவிர * * *அதைப்பற்றி நீங்கள் வன இலாக்கா தலைமை அதிகாரிக்குத் தெரிவித்து இருக்கிறீர் களா? எனக்குத் தெரிவித்து இருக்கிறீர்களா? * * என்று சொல்லுவதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் நிறைய முறை சொல்லியிருக்கிறேன். ஸ்பெசிபிக்காகச் சொன்னால் பிரயோசனமாக இருக்கும். ஆகவே அதை நீக்க வேண்டும் என்று ஆணையிடுகிறேன். குறிப்பிட்டுச் சொல்லுங்கள். எல்லா வன இலாக்கா அதிகாரிகளையும் சொல்லுகிறீர்கள். அதை எடுத்து விடலாம். சரியாகச் சொன்னால் நடவடிக்கை எடுக் கிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே சரியாகச் சொல்லுங்கள்.

**திரு. ஆ. நடராசன் :** ஸ்பெசிபிக்காகச் சொன்னால் ஆதாரம் வேண்டும் என்று சொல்லுவீர்களே.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** நான் முழுமையாகச் சொன்ன பிறகு அவைக் குறிப்பிலிருந்து எடுப்பதைப்பற்றிச் சொல் லுங்கள். இதே வார்த்தையை இதே சட்டமன்றத்திலேயே சென்ற கூட்டத் தொடரில் பேசி அது அவைக் குறிப்பில் இருக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றன.



1987 நவம்பர் 18] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

அப்படியானால் நீங்கள் சொல்லுவதிலே என்ன அர்த்தம்? இந்த அரசு என்ன செய்ய இருக்கிறது என்பதுதான் என்னுடைய கேள்வி. சென்ற சட்டமன்றக் கூட்ட அவைக் குறிப்பிலே இருக்கிற ஒரு செய்தியை இந்தக் கூட்டத்தொடர் அவைக் குறிப்பி லிருந்து எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னால் என்ன முறை இது? அப்போது இந்த விளக்கத்தை ஏன் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** குறிப்பிட்ட ஒரு அதிகாரி என்று சொன்னால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** முன்பு சொன்னீர்கள், பால் வளத்தில் பெருந்தலைவர் போடுவதாக சொன்னீர்கள். ரெக் கார்டை எடுத்துக் கொண்டு வந்து வைத்து இருக்கிறேன். பெருந் தலைவர் போடுவது பற்றிச் சொல்லும்போது, இல்லை என்று சாதித்தீர்கள். இப்போது கொண்டு வந்து வைத்து இருக்கி றேன். அதைக் கொடுக்கிறேன். அதேபோல் நடக்கிறதைத் தான் நாங்கள் சொல்லுகிறோம். அதிகமாக எங்களைப் பேச விடுவது இல்லை. ஏன் என்றால் குறையைத்தான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. வேறு வழி இல்லை. ஆனால் பேச விடமாட்டீர்கள் போல் தெரிகிறது எனக்கு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒவ்வொரு பில்லிலும் நீங்கள் பேசுகிறீர்கள். மற்றவர்கள் சொன்னால்கூட கொஞ்சம் நியாயம் இருக்கிறது. பேசும்போது, பேச்சோடு சேர்த்து நாங்கள் பேசவிடவில்லை என்ற குற்றச்சாட்டை எங்கள் மீது சொல்லக்கூடாது. நிறையப் பேசுகிறீர்கள். பேசும்போது விவரமாகக் குறிப்பிட்டு எந்த அதிகாரி என்று சொன்னால் உங்களுக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது. ஒட்டு மொத்தமாகச் சொன்னால் நல்ல அதிகாரிகளும் கெட்டுவிடு வார்கள். நீங்கள் நல்ல அதிகாரிகளைப் பாராட்ட வேண்டும் இல்லையா? இன்னார் செய்தார்கள் என்று சொல்லுங்கள், அப்போது நடவடிக்கை எடுப்பார்கள்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1987 நவம்பர் 18

அவர்கள் வீட்டு வரி பற்றி அறிவிக்கும்போது நாங்கள் பாராட்டி னோம். எதையெல்லாம் பாராட்ட வேண்டுமோ அதை நாங்கள் பாராட்டத்தான் செய்கிறோம்.

அதேபோல் குண்டர் ஆக்டில் போடுவதுபற்றிச் சொல்லு கிறீர்கள். என்ன செய்கிறீர்கள் நீங்கள்? குண்டர் ஆக்ட்டில் போடுவதற்கு எஸ். பி. சிபாரிசு செய்ய வேண்டும். அதன் பிறகு கலெக்டர் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதை எல்லாம் எடுக்கவிடுகிறீர்களா? அதிகாரம் படைத்தவர்கள் பல பேர் இருக்கிறார்கள். முதலில் இங்கே எஸ்.பி.-யை மிரட்டு கிறார்கள். அதன் பிறகு கலெக்டரிடம் போய் ரெப்பரசென்ட் செய்கிறார்கள். என்ன செய்கிறீர்கள்? குண்டர் ஆக்ட்டில் போடுவதற்கு யாரை யார் விடுகிறார்கள்? வாஸ்தவத்திலே குண்டர் ஆக்ட்டில் போடுகிறவர்களை போட விடுவது இல்லை. யாராவது அப்பாவிகளைப் பிடித்துப் போடுவதுபோல் எங்க ளுக்கு செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. எஸ்.பி. அங்கே பயமுறுத்தப்படுகிறார். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லப்படுகிறது. இதை எல்லாம் பார்க்கும்போது இது சட்ட மாகத்தான் இருக்குமே தவிர நடைமுறையில் இது சரியாக நடக்காது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * பொறுப்பேற்காத முறையிலே மாண்புமிகு உறுப்பினர் மரியாதைக்குரியவர் இப்படி பேசுவது உகந்தது அல்ல. எந்த மாவட்ட ஆட்சித் தலைவர், எந்த எஸ்.பி. யாரை தடுப்புக் காவல் சட்டத்தில் போட வற்புறுத்தப் பட்டார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டும். நான் *பொறுப்பேற்காதவர் என்று சொன்னதற்காக வருத்தப்படக்கூடாது. ஆனால் முக்கியமாக இதுபோன்ற பிரச்சினைகளைப் பொறுத்தவரைக்கும், அரசைப் பொறுத்த வரைக்கும் எந்த ஒரு பிரச்சினையிலும் அரசாங்கம் தலையிடுவது கிடையாது. தடுப்புக் காவல் சட்டத்திலே கைது செய்யப்பட்டு இருக்கிறவர்கள் கிட்டத்தட்ட 60-க்கும் மேற் பட்டவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக் கிறார்கள் என்பதை நான் அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டி ருக்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க மாற்றப்பெற்றது.



1987 நவம்பர் 18]

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவ்வாறு சொல்வது சரிதானா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்கு அவர் வருத்தப்படுகிறேன் என்று சொல்லிவிட்டாரே, அதோடு முடிந்தது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொறுப்பேற்காமல் என்ற அர்த் தத்தில்தான் சொன்னேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொறுப் பேற்காத என்று அமைச்சரவர்களே திருத்திவிட்டார்கள்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராஜபாளையத்தில் குண்டர் ஆக்டில் போடச் சொல்லி, பல பேருக்கு எஸ்.பி. பரிந்துரை செய்திருக்கிறார்கள். உங்கள் ரிக்கார்டுகளை எடுத்துப் பாருங்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இதைத்தான் பொறுப் பேற்காத என்று வகையில் சொன்னேன். அரசைப் பொறுத்த வரைக்கும் தடுப்புக் காவல் சட்டத்தில் யாரையும், இவர்களைக் கைது செய்யுங்கள் அல்லது வேண்டாம் என்று சொல்லாமல் இதுகாறும் பாரபட்சமற்ற முறையில் செயல்பட்டு வருகிறது.

1982-லே 144 பேர், 1983-லே 249 பேர், 1984-லே 550 பேர், 1985-ல் 476 பேர், 1986-ல் 458 பேர். தற்போது 1987-லே 421 பேர். இந்த 421 பேரிலே கிட்டத்தட்ட 60 பேர்கள் அண்ணா தி.மு.க. வைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லும்போது பொறுப்புமிக்க மாண்புமிகு உறுப்பினர் அரசினுடைய அணுகு முறையை மதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சொன்னதை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று கருது கிறேன். அரசின் மீது மட்டும் குறை சொல்லவில்லை. அதிகாரம் படைத்தவர்களை சொல்கிறேன். நான் சொல்ல விரும்புவது, அவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள். காமராசர் மாவட் டத்தைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு

எம்.பி. சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இன்னும் குண்டர்கள் ஆக்டில் போடப்படவில்லை. அது ஏன் என்பதுதான் என்னுடைய கேள்வி. அரசை மட்டும் தப்பு என்று நான் சொல்லவில்லை. அதிகாரம் படைத்தவர்களைப் பற்றி சொல்கிறேன். அதிகாரம் படைத்தவர்களின் அதிகாரம் கொடி கட்டிப் பறக்கிறது. அரசை மட்டும் குறை சொல்லவில்லை. அரசை மட்டும் சொல்கிறேன் என்று நீங்கள் நினைக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தடுப்புக் காவல் சட்டத்திலே ஒருவரைக் கைது செய்யவேண்டுமென்றால், ஐ.பி.சி. கிரிமினல் புரோசிஜர் கோடையொட்டி கைது செய்வது என்பது முடியாது. காரணம், மாண்புமிகு உறுப்பினருக்கு அதை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Thert should be disturbance to public tranquility. பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய அளவிற்கு தடயங்களைப் பெறுகின்றபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தப் பொறுப்பை ஏற்று, தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் ஒருவரைக் கைது செய்ய முடியும். அப்படி அந்தத் தடயங்களோடு பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய நிகழ்ச்சிகள் இருந்தால், அப்படி ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அல்லது மாவட்டக் காவல் அதிகாரியிடம் சொல்லி நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அதை எழுத்து மூலமாகத் தரவும். கட்டாயம் அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: அதைப்பற்றித்தான் நான் சொன்னேன். சென்ற வருடமே காமராசர் மாவட்டத்தில் 5 பேரைத் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் போடும்படி சிபாரிசு செய்திருக்கிறார்கள். மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் முறைப்படிதான் செய்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி, குறைபாடுகள், குற்றங்கள் எல்லாம் இருந்துதான் செய்திருப்பார்கள் என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அதைத்தான் சொன்னேன். ஐ.பி.சி. கிரிமினல் புரோசிஜர் கோட் குற்றவியல் சட்டத்திற்கு உட்பட்ட வழக்குகளையும் தடுப்புக் காவல் சட்டத்தில் போடுங்கள் என்று பல இடங்களில் மாவட்ட ஆட்சி





தலைவர்களுக்கு எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் தடுப்புக் காவல் சட்டத்தின், குற்றவியல் சட்டத்திற்கு உட்பட்ட வழக்குகளை, தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கொண்டுவர முடியாது. மாவட்ட ஆட்சித் தலைவர் விளக்கம் கேட்டிருப்பார். அதனால்தான் தாமதம் இருக்கும். அந்தத் தகவல்களைத் தாருங்கள். நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து விளக்கம் கேட்கிறோம். நீங்கள் சொல்வது சரியாக இருந்தால் நடவடிக்கை எடுப்போம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதற்கு நன்றி. உரிய நடவடிக்கை எடுப்பதற்குச் சான்றுகளைத் தருகிறேன்.

சட்ட முன்வடிவின்மீது பேசுவதற்கும், விளக்கம் தந்த அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவை கொண்டு வந்திருக்கிறார்கள். திருத்தத்திற்கான நோக்கம் காடுகளில் கள்ளத்தனமாக மரங்களை வெட்டுவதும், வகைதொகையின்றி பல விலங்குகளை, அதிலும் குறிப்பாக யானைகளைச் சாகடிப்பதும் இந்த மாநிலத்தில் அதிகரித்து வருகின்றது. அவ்வாறு கள்ளத்தனமாக வெட்டுவதும், வகைதொகையின்றி வன விலங்குகளைச் சாகடிப்பதும், நபர்களுக்கும், சொத்துக்கும் மற்றும் அப்பகுதியில் உயிரின வாழ்க்கைச் சூழல் முறைக்கும் ஆபத்தை விளைவிப்பதோடு, பொது அமைதியையும் குலைக்கின்றன என்கின்ற வகையில் இந்தச் சட்டத்தை திருத்தி, குண்டர் ஆக்டில் அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் நான் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த நோக்கக் காரண விளக்க உரையிலே அமைச்சரவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலுள்ள மலைகளிலேயுள்ள மரங்கள் அழிக்கப்படுகின்றன. நமது தமிழகத்தில் இருக்கின்ற மலைகளிலேயுள்ள வனவிலங்குகள் இல்லாமல் போய்விட்டன. அதுமட்டுமல்ல. நான் 1979 ஆம் ஆண்டில் மதிப்பீட்டுக் குழுவில் பல்வேறு மலைகளைச் சுற்றிப் பார்த்தேன். அப்போது மு

[திரு. பொ. உத்திராபதி] [1987 நவம்பர் 18

மலைக் காட்டில் யானைகள்தான் நான்கு, நான்கு பேர்களை
ஏற்றி, அந்த மலைக்குள்ளே கொண்டு போயிற்று. அந்த அள
விற்கு எங்களுக்குக் காண்பிக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான
மரங்கள். யானையே உள்ளே நுழைந்து போக முடியாது.
மலையிலே ஏறி அந்த யானை கீழே இறங்குகின்றபோது கண்
கொள்ளாக் காட்சிகளாகப் பார்த்து வந்தோம். அவ்வளவு
யானைகளும், மிருகங்களும், மரங்களும் இருந்தன. ஆனால்
அதே காட்டிற்கு 1987-ஆம் ஆண்டு மதிப்பீட்டு குழுவில் நாங்கள்
சென்று பார்த்தோம். ஒரு மரம் கூட இல்லை. வன விலங்குகள்
மற்றும் யானைகளைப்பற்றிக் கேட்டோம். அங்கொன்றும்
இங்கொன்றுமாக அலைந்து கொண்டிருந்தன. அந்த அதிகாரி
யைப் பார்த்து கேட்டபோது சொன்னார்கள், அந்தக் காட்டில்
உள்ள யானைகள் எல்லாம் கேரளாவிற்குச் சென்று விட்டன
என்று சொன்னார்கள். இது நான் கண்கூடாகப் பார்த்த கட்சி.
அப்போது நான் அங்கு பார்த்ததை, இப்போது காரண நோக்க
விளக்கங்களில் அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டிருக்கி
றார்கள். இப்போது சட்டம் வந்திருக்கிறது. இந்தச் சட்டத்தை
வரவேற்போம்.

(பிற்பகல் 1-50)

குண்டர்கள் ஆக்ட்டில் மட்டும் அல்ல. இப்படி வன இலாக்காவில்
இருக்கக்கூடிய மரங்களை வெட்டக்கூடியவர்கள், இந்தக் காடு
களில் இருக்கக்கூடிய மிருகங்கள் எல்லாம் தங்குவதற்குக்கூட
வசதி இல்லாமல் பிற மாநிலங்களுக்கு ஓடக்கூடிய அபாயத்தை
உருவாக்கக்கூடியவர்களுக்கு, அவர்களைக் கண்டுபிடித்து
விட்டால் உண்மையிலேயே அவர்களுக்கு இந்தத் தண்டனை
போதாது. ஒருவன் கொலை செய்துவிட்டால் தூக்கு தண்டனை
கிடைக்கின்றதே, அப்படிப்பட்ட தூக்கு தண்டனையைக்கூட
அரசாங்கம் கொண்டு வந்தால் நான் ஆதரிப்பேன். காரணம்
இன்றைக்குத் தமிழகத்தில் உள்ள அத்தனை மரங்களும் அழிக்கப்
பட்டுவிட்டன. மலையில் உள்ள மரங்கள் அழிக்கப்பட்டுவிட்ட
தால் மழை பொய்த்துவிட்டது. மழை பொய்த்துவிட்டதால்
இன்றைக்குத் தமிழக மக்கள் வறட்சிக்கு ஆட்பட்டு இருக்கிறோம்
என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே இந்த குண்டர்கள்
ஆக்டின்கீழ் இதுவரையிலும் மரம் திருடியவர்கள் எத்தனை
பேர்கள் அகப்பட்டிருக்கிறார்கள்? எத்தனை பேர்களுக்கு
தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது? இதிலே எத்தனை



1987 நவம்பர் 18] [திரு. பொ. உத்திராபதி]

அதிகாரிகள் உடந்தையாக இருக்கிறார்கள் என்பதைப்பற்றி
அமைச்சர் அவர்கள் எதிர்காலத்திலே இதுவரையிலும் நாம்
எப்படி போய் இருந்தாலும் எதிர்காலத்தில்—இதைத் தீவிரமாக
விசாரணை செய்ய வேண்டும். எங்களுடைய இளைஞர் மன்றம்
கூட சென்று மாதம் 10,000 பேர்கள் ஒரே கோரிக்கையை வைத்து
நிதியமைச்சரிடம் மகஜர் கொடுத்திருக்கிறார்கள். எதிர்காலத்
திலே இந்த வன இலாக்காவைப் பாதுகாப்பதற்கும், வன
இலாக்காவில் அழிக்கப்பட்ட மரங்களை மீண்டும் உற்பத்தி செய்
வதற்கும், அந்த மரங்கள் அழிக்கப்பட்டதற்குப் பிறகு வேறு
மாநிலங்களுக்குப்போன மிருகங்களை கொண்டுவருவதற்கும்
அமைச்சர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கள்ளச் சாராயத்தைப் பற்றி இங்கே சொல்லப்பட்டு
இருக்கிறது. 1982-லே சட்டம் கொண்டு வந்தோம். நமது முதல்
அமைச்சர் அவர்கள் கூட அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்த
தற்குப் பிறகு ஒரு அறிவிப்பை அறிவித்தார்கள். தமிழகத்தில்
தாய்க்குலத்தின் கண்ணீரைத் துடைக்க வேண்டும். சர்க்காருக்கு
250 கோடி ரூபாய் வருமானம் இழப்பு ஏற்பட்டாலும், அந்தச்
சாராயத்தையும், கள்ளுக் கடைகளையும் ஒழிக்க வேண்டும் என்று
ஜனவரி மாதம் 1-ந் தேதி அறிவிக்கப்பட்டது. அந்த கள்ளச்
சாராயத்தை ஒழிப்பதற்கு தனி போலீஸ் படை. ஒரு ஐ.ஜி.,
அவருக்குக் கீழே அதிகாரிகள் என்று ஒவ்வொரு தாலுக்கா நகரங்
களிலும் காவல்துறை மாதிரி இன்னொரு காவல்துறை அமைக்கப்
பட்டு செயல்பட்டு வருகிறது. இன்றைக்கு மக்களுடைய வரிப்
பணம் கோடிக்கணக்கான ரூபாயை ஒரு பக்கம் செலவழிக்
கின்றோம். ஆனால் கள்ளச் சாராயம் ஒழிக்கப்பட்டிருக்கிறதா?
இரண்டு மூன்று முறை சொன்னார்கள். இங்கே ஒரு லட்சம்
லிட்டர் பிடிக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஒரு லட்சம் லிட்டர்
அழிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறதே தவிர
உண்மை அதுவல்ல. நான் ஒரு சட்டமன்ற உறுப்பினர். சம்பந்தப்
பட்ட அதிகாரியிடத்தில் நானே போய்ச் சொன்னேன்.
என்னுடைய வீட்டுக்குப் பின்னாலே கொண்டு போனார்கள்.
இன்னின்ன இடத்தில் இருக்கிறது என்று சொன்னேன். இன்னும்
நடவடிக்கை எடுக்கவில்லை. இப்போது என்ன நிலைமை இருக்
கிறது என்று சொன்னால் கள்ளச் சாராயத்தைப் பற்றி யாராவது
சொன்னால் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. நானே சொன்
னேன். ஆனால் இதுவரை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை

[திரு. பொ. உத்திராபதி] [1987 நவம்பர் 18

அதுவும் இன்றைக்கு கள்ளச் சாராயத்தை ஒழிப்போம் என்று ஒரு சட்டத்தை குண்டர்கள் ஆக்ட்டில் கொண்டு வந்தபோதும் கூட அந்தக் கள்ளச் சாராயம் கரை புரண்டு ஓடுகிறது. சாராய சாம்ராஜ்யமாக மாறி வருகிறது. நான் அமைச்சர் அவர்களிடம் கவலைப்பட்டு, வருத்தத்தோடு சொல்ல விரும்புகிறேன். இந்த வனு இலாக்காவை அமைத்திருக்கிறோமே, அவர்களுக்கு என்ன வழி செய்துகொண்டிருக்கிறீர்கள். உண்மையிலேயே நடவடிக்கை எடுக்கிறார்களா? இல்லை. அவர்கள் ஒரு பக்கம் சொல்லப் போனால்—அமைச்சர் அவர்கள் குறுக்கிடுவார்கள். நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் இன்றைக்கு கோடிக்கணக்கான ரூபாயை நாம் கொடுத்தும்கூட அந்தக் கள்ளச் சாராயம் ஒழிவதற்குப் பதிலாக வளர்ந்து கொண்டே வருகிறது. இது இப்படி வளருமேயானால் எதிர்காலத்திலே ஒரு கள்ளச் சாராய ஆட்சி நடக்கிறது என்ற அவப் பெயர் வரும், அது இந்த ஆட்சிக்கு வரக்கூடாது என்பதற்காகத்தான் நான் வருத்தத் தோடு சொல்ல விரும்புகிறேன். இன்றிலிருந்தாவது அந்த ஐ.ஜி. அவர்கள் தலைமையில் உள்ள அமைப்பின் மூலம் உண்மையிலேயே ஒரு வார காலத்தில், இந்த ஆட்சியில் கள்ளச் சாராயத்தை ஓரளவிற்கு ஒழித்திருக்கிறோம் என்ற இந்த பெயர் கிடைக்கக் கூடிய அளவிற்கு அமைச்சர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காடுகளில் கள்ளத்தனமாக மரங்களை வெட்டுவதும், வகைதொகையில்லாமல் வன விலங்குகளை, குறிப்பாக, யானைகளை தனதத்திற்காக சாகடிப்பதும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது என்று காரணம் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் இதனாலேயே மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் சொன்னதுபோல், "அரசாங்கமே ஒத்துக்கொண்டது, அதிகமான மரங்கள் வெட்டப் படுகின்றன. யானைகள், மற்ற விலங்குகள் இல்லவே இல்லை" என்று சொல்வது பொருத்தமில்லாதது ஆகும்..

இந்தச் சட்டம் கொண்டு வரப்படுவதற்குக் காரணம். ஏற்கனவே 1977-லிருந்து '79, '81, '82, '84 என்று பல்வேறு ஆண்டு களில் பல்வேறு திருத்தச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டு இருக் கின்றன. அவ்வப்போது விதிகளும் திருத்தப்பட்டு, 'எக்சிக்யூடிவ்



1987 நவம்பர் 18] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

ஆர்டர்ஸ்' என்ற முறையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 139 இடங்களில் செக்போஸ்ட்கள் இருக்கின்றன. அதுமாத்திரம் அல்லாமல், 'ஷெட்யூல் ஆப் டிம்பர்' என்று ஒரு பட்டியல் போட்டு, அந்தப் பட்டியலில் இருக் கின்ற எந்தெந்த மரங்களைத் திருடுவது கடுமையான குற்றத் திற்கு ஆளாக்கப்படும் என்ற ஒரு பட்டியல் போடப்பட்டு, அந்தப் பட்டியலில் உள்ள மரங்களைத் திருடுபவர்களுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்ட தண்டனையைவிட அதிகமாக கொடுக்கப்பட வேண்டும் என்றுகூட போடப்பட்டு இருக்கிறது.

தமிழ்நாட்டில் இதுவரையில் பல்வேறு வழக்குகள் போடப்பட்டு இருக்கின்றன. வனக் குற்றங்கள் மாத்திரம், 1984-85-இல் 38,513 வழக்குகளாகப் போடப்பட்டிருக்கின்றன. 1985-86-இல் வனக் குற்றங்கள் 38,619 வழக்குகளாகச் செய்யப்பட்டு கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. அதைப்போல், 1982 முதல் 1986-87 வரையில் சந்தன மரம் திருடுகிற வழக்குகள் மாத்திரம் 2672 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 5165 பேர் மீது வழக்குகள் போடப்பட்டி ருக்கின்றன. அதில் சம்பந்தப்பட்ட சந்தன மரங்களின் மதிப்பு மாத்திரம் ரூ. 1 கோடியே 67 இலட்சம் ஆகும். ஏற்கெனவே 1974-75 காலத்தில், கம்பவுண்டிங் என்று சின்ன குற்றங்களை வனத்திலே புரிபவர்களிடம் வசூல் பண்ணிய தொகை ரூ. 16 இலட்சம் ஆகும். ஆனால், இன்றையதினம் அது ரூ. 41 இலட்ச மாக அதிகரித்திருக்கிறது.

மரங்கள் வெட்டப்பட்டன என்று சொல்வதை ஒத்துக் கொள்ளக்கூடாது என்பதற்கு நான் சொல்கிற காரணம், 1974-75-இல் வனத்தின் மூலமாக வந்த வருமானம் ரூ. 9 கோடியே 21 இலட்சம் ஆகும். ஆனால் இன்றையதினம் 1986-87-இல் அரசிற்கு வனத்துறை மூலம் வருகிற வருமானம் ரூ. 30 கோடியே 37 இலட்சம் ஆகும். இப்படி கம்பவுண்டிங் செய்கிறதன் மூலம் வருகிற வருமானம் மற்றும் வனத்துறை மூலம் வருகிற வருமானம் ஆகியவை இரண்டு பங்கு, மூன்று பங்கு அதிகமாக ஆகியிருக் கின்றன. சட்டங்களையும், 1979-ல் ஆக்ட் 45/79 என்று போட்டி ருக்கிறோம். அதே 1979 இல் ஆக்ட் 68 என்ற ஒன்று கொண்டு வந்திருக்கிறோம். பின்னர் 1981 ஆம் ஆண்டு ஆக்ட் 41 என்று கொண்டு வந்திருக்கிறோம். அதுமாத்திரம் அல்லாமல், நமது சி.ஐ.டி. போலீஸ் என்று தனியாக ஒன்று வைத்து அவர்கள் மூலம் 1985-86-இல் 37 சோதனைகள் நடத்தப்பட்டு, அதன்மூலம் சர்க்காருக்கு ரூ. 3 இலட்சம் வருமானம் வந்திருக்கிறது. அதைப்

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 நவம்பர் 18

போல், 1986-87-ல் 71 சோதனைகள் நடத்தப்பட்டு, 28 இலட்சம் ரூபாய் வருமானம் வந்திருக்கிறது. அது சம்பந்தப்பட்ட குற்றங்கள், பாம்புத் தோல், சந்தனம் கைப்பற்றுதல் ஆகியவை ஆகும். நடப்பு ஆண்டில், 1987-இல் ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையில் கூட, 35 சோதனைகள் செய்யப்பட்டு, ரூ. 7 இலட்சம் வருமானம் சர்க்காருக்குக் கிடைத்திருக்கிறது. சர்க்கார், இந்தக் குற்றங்களைத் தடை செய்வதற்கு, கட்டுப்படுத்துவதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது. ஏற்கனவே இருந்த ஆயுதங்களின் எண்ணிக்கை 194 ஆகும், 1977-ல் இருந்த ஆயுதங்கள். ஆனால் இன்றையதினம் 297 ஆயுதங்கள் புதிதாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அது போதாது என்று நவீனமயமான ஆயுதங்களைக் கொடுத்து, தேவையான மருந்துகளையும் கொடுப்பதற்காக ரூ. 22 இலட்சத்திற்கு அரசு அனுமதி வழங்குவதற்கு முதல்வர் அவரிடம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். நம்முடைய திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் போக்குவரத்து தொடர்பு வெகு வேகமாக நடக்கவேண்டும், அதற்கு இடைவெளி அதிகமாக இருக்கக்கூடாது, குற்றம் புரிந்தவர்கள் என்ற தகவல் கிடைத்தவுடன் குற்றம் புரிந்தவர்களைப் பிடிக்க வேகமான தகவல் தொடர்பு வேண்டும் என்று சொன்னார்கள்.

(பிற்பகல் 2-00)

இந்தியாவிலே வேறு எங்கும் இல்லாத அளவிற்கு நீலகிரி மலையில், 17 இலட்சம் ரூபாயில், இந்தியாவின் பாதுகாப்பு இலாக்காவினுடைய அனுமதியுடன், கம்பித் தொடர்பு இல்லாத, இந்த தகவல் தொடர்பு நிலையம் ஒன்றை அங்கு ஏற்படுத்தி இருக்கிறோம். அதை சேலத்திற்கும் விஸ்தரிக்கவேண்டுமென்று இப்போது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதுவுமில்லாமல், வன இலாக்காவைக் காப்பாற்றுவதற்கென்று 12 பாரஸ்ட் ப்ரடக்ஷன் ஸ்குவாட்ஸ் இருக்கின்றன. 3 பறக்கும் படைகள் இருக்கின்றன. மூன்று டிடெக்டிவ் ஃபிளையிங் ஸ்குவாட்ஸ் இருக்கின்றன. அதுவுமில்லாமல், அதிரடிப்படைகள் என்ற முறையில், சேலத்தில் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ் என்ற அளவில் ஒருவரை தனியாக, எஸ்.பி. டி.எஸ்.பி.-க்களை வைத்து இந்த வனக் குற்றங்களைத் தடுக்கிறோம். இருந்தாலும் வனக் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன.



1987 நவம்பர் 18] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

ஆண் யானைத் தந்தம்போல் பெண் யானைக்கும் சிறிய தந்தம் இயற்கையிலே இருக்கும். அதன்மீது அயல் நாட்டினர் இப்போது மோகம் கொண்டுள்ளனர். பெரிய யானைத் தந்தங்களைக் கடத்துவது கஷ்டம் என்று இப்போது பெண் யானைத் தந்தத்தை, சிறியதாக இருக்கிறது என்று, அதன்மீது ஒரு மோகம் வந்து, பெண் யானைத் தந்தங்களை இப்போது சில ஊர்களிலிருந்து, தமிழ்நாட்டில் தென் பகுதிகளிலிருந்து, பம்பாய்க்கு, பாலில் உறையூற்றி, தயிராக்கப்பட்டு அந்தத் தந்தத்தை அதனுள்ளே வைத்து அனுப்புகிறார்கள் என்ற தகவல் கிடைத்து, அதன்பேரிலும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

சந்தன மரத்தினுடைய விலை உலகத்திலேயே இதுவரையில் விற்காத அளவிற்கு இப்போது ஒரு டன் 1 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய்க்கு விற்றிருக்கிறது. உலகத்திலேயே தமிழ்நாட்டிலேதான் அதிகமான சந்தன மரங்கள் இருக்கின்றன. உலகத்திலேயே அதிக மணம் தரக்கூடிய சந்தன மரங்கள் இங்குதான் இருக்கின்றன. உயரமான, பருமனான மரங்களும், அதிக எடையுள்ள மரங்களும் இங்குதான் இருக்கின்றன. ஆகவே, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் கொண்டுவராத நேரத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களுடைய வழிகாட்டிக் கொள்கையினால், அறிவுரையினால், குண்டர்கள் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. காரணம், பல்லாயிரக்கணக்கான வழக்குகளைப் போடுகிறோம். இதை எதிர்த்து வழக்கு தொடுக்கிறார்கள். சென்னை உயர்நீதி மன்றத்தில் மாத்திரம், வன் இலாக்கா சம்பந்தமாக நாம் போட்ட வழக்குகளை எதிர்த்து போடப்பட்ட ரிட் மனுக்களின் எண்ணிக்கை 555 ஆகும். உச்சநீதி மன்றத்தில் 22 வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. 170 வாகனங்கள் குற்றங்களின் அடிப்படையில் பிடிக்கப்பட்டால், மாஜிஸ்டிரேட் கொடுக்கக்கூடாது என்று சட்டத்திலே இருக்கிறதே தவிர, ஹைகோர்ட் நீதிபதிகள் மாஜிஸ்டிரேட்டுகள் அல்ல, ஆகவே நாங்கள் இந்தச் சட்டத்தின்கீழ் வரமாட்டோம் என்று சொல்லி அந்தக் குற்றங்களில் சம்பந்தப்பட்ட வாகனங்களை, 100-க்கும் மேற்பட்ட வாகனங்களை விடுவித்து விட்டார்கள்.

இந்த வன இலாக்காவினால் எடுக்கப்பட்ட பல்வேறு ஆயிரக்கணக்கான வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் எளிதிலே ஜாமீனில் வந்துவிடுகிறார்கள். ஆகவேதான், இந்த வன இலாக்கா சம்பந்தமான குற்றங்களில், மரங்களை வெட்டினாலும் அல்லது

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 நவம்பர் 18

அபூர்வமான விலங்குகளை அழித்தாலும், அவர்களைத் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கொண்டு வருவது நல்லது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுறுத்தியதன்மீது இந்தச் சட்டம் இப்போது கொண்டுவரப்படுகிறது. வனத்தைப் பாதுகாப்பதோடு, மக்களுடைய இயற்கைச் சூழ்நிலையை, உயிரினங்களுடைய இயற்கைச் சூழ்நிலையை, 'எக்காலஜி' என்கிறார்களே அந்தப் பாதுகாப்பதற்கு இது நன்றாகப் பயன்படும் என்ற முறையிலேதான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்களும், பல்வேறு கட்சிகளைச் சார்ந்த நண்பர்களும் இந்தச் சட்டத்தை வரவேற்றார்கள். ஆனால் இந்தச் சட்டம் அமல்படுத்தப்படுவதில் அதிகாரிகள் பாரபட்சம் இல்லாமல் நடந்துகொள்ள வேண்டும், அப்பாவிகள் இதிலே மாட்டிக்கொள்ளக் கூடாது என்றும் சொன்னார்கள். இதிலே அரசு மிகவும் கவனமாக இருக்கிறது. மாதத்திற்கு ஒரு முறை, இந்த குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் யார் யார் கைது செய்யப்படுகிறார்கள், மாவட்டவாரியாக யார் யார் கைது செய்யப்படுகிறார்கள் என்ற விவரங்கள் முதல் அமைச்சர் அவர்களால் ஆய்வு செய்யப்படுகிறது. ஆகவே ஒவ்வொரு மாதமும், வழக்குகள் தவறாகப் போடப்படுகிறதா அல்லது அதிகாரிகள் துஷ்பிரயோகம் செய்திருக்கிறார்களா என்ற ஆய்வு நடக்கிறது. அதுவுமல்லாமல், தனியாக ஒரு குழு போட்டு, அந்தக் குழுவும் ஆய்வு செய்து, அப்படித் தெரியாமல் யாராவது அப்பாவிகள் இதிலே கைது செய்யப்பட்டால் அவர்களை, சென்னை உயர்நீதி மன்றம் விடுதலை செய்வதற்கும் வழிவகை இருக்கிறது. இருந்தாலும் நாம் இதில் கவனமாக இருக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களோடு நாமும் ஒத்திருக்கிறோம். அந்த முறையில் இந்தச் சட்டம் வந்திருப்பதை நீங்கள் எல்லோரும் ஆதரித்திருப்பதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வன இலாக்கா சம்பந்தமாகத் தனிப்பட்ட முறையில் ஏதாவது குற்றங்கள் நடந்திருந்தால், அதைப்பற்றி ஸ்பெசிபிக்காகக் குறிப்பிட்டு, குற்றம் சாட்டப்பட்டு கடிதம் கொடுக்கப்பட்டால் அதன் மீது, அதிகாரிகளாக இருந்தாலும், வேறு யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும்.



1987 நவம்பர் 18] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

முழுவதும் மக்களைப் பலாத்காரமாக அடித்துவிட்டு வேறு ஒருவரை அங்கே குடி வைத்திருக்கிறார்கள், பயிர் செய்துவிடுகிறார்கள் என்றெல்லாம் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுவுமல்லாமல், சில செக்போஸ்ட்களை எடுக்கச் சொல்லியும் எடுக்கவில்லை என்றும் சொன்னார்கள். அதுபற்றியெல்லாம் நான் வனத்துறை மாநில அதிகாரிகளிடம் கலந்து பேசி உரிய நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல—எந்தக் கட்சிப் பாகுபாடும் இல்லாமல் குண்டர்கள், விபசாரம் சம்பந்தமாக குற்றங்களைச் செய்பவர்கள், நிலங்களை ஆக்கிரமிப்பு செய்பவர்கள், கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்கள் போன்ற 5 பிரிவினர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இந்தச் சட்டம் பிரயோகிக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்போது பல வழக்குகள் போட்டும் பலர் கைது செய்யப்பட்டும்கூட இந்தக் குற்றங்கள் தொடர்ந்து கடுமையாக நடைபெற்று வருவதாலும், இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவர வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

சத்தியமங்கலம் பகுதியில் யானைத் தந்தம் எடுத்துச் செல்லப்படுகிறது என்று கேள்விப்பட்டு சிதம்பரம் என்ற அந்த நல்ல இளைஞர்—அவர் அங்கே துப்பாக்கியுடன் செல்லவில்லை—அதுதான் துரதிருஷ்டமானது—துப்பாக்கியோடு மட்டுமல்லாமல், சென்றவர் 4 அல்லது 5 பேராகச் சென்றிருக்க வேண்டும்—அப்படிச் செல்லாததால் உயிரிழந்திருக்கிறார். குற்றம் புரிகிறவர்கள் 5 அல்லது 10 பேராக வருகிறார்கள். ஆகவேதான் அவர் அவர்களிடம் மாட்டிக்கொண்டு உயிரிழக்க நேர்ந்தது.

அதைப்போலவே வண்டலூர் அண்ணா உயிரியல் பூங்கா அருகில் ஒரு ரேஞ்சர்—திரு. இராஜசேகரன் என்பவர்—இறந்துவிட்டார். அவர் சம்பந்தப்பட்ட 7 பேர்களை இதுவரை போலீசார் பிடித்துவிட்டார்கள். ஆனால் திரு. சிதம்பரம் என்ற அந்த நபர் கொலை செய்யப்பட்ட வழக்கில் நம்முடைய மாநில ஐ.ஜி. அவர்களாலும், கருநாடக மாநில ஐ.ஜி. அவர்களாலும் வீரப்பன் என்ற நபர் தேடப்பட்டு வருகிறார். அவர் விரைவில் கண்டுபிடிக்கப்படுவார் என்று போலீஸ் தரப்பில் தகவல் தந்திருக்கி

றார்கள். இதனால்தான் இதுபோன்ற தனிப்பட்ட மனிதர்கள் மாத்திரமல்ல, பொதுஜன அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துகிற மக்களின் ஆரோக்கியமான உயிரின வாழ்க்கைக்குப் பாதகம் ஏற்படுத்துகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதில் வனத்துறை சம்பந்தமான குற்றங்களைச் செய்பவர்களையும் சேர்த்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 முதல் 7 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்





தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 52/1987) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(ண) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.**

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 54/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரி சம்பந்தமாக 3, 4 சட்ட முன்வடிவுகள் இருப்பதால் அவற்றிற்கெல்லாம் சேர்த்தே கருத்தைச் சொல்லிவிடலாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கருத்தைப் பொறுத்தவரையில் எல்லாவற்றையும் சேர்த்தே சொல்லி விடுங்கள். நிகழ்ச்சி நிரலில் உள்ளபடி அவற்றை எடுத்துக் கொள்ளும்போது தனித் தனியாக பாஸ் செய்து விடலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** என்டர்டெயின்மென்ட் டாக்ஸ் பற்றியும் ஒரு பில் இருக்கிறதே அதையும் சேர்த்துச் சொல்லலாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சேல்ஸ் டேக்ஸ் பொறுத்தவரையில் கருத்தைச் சொல்லுங்கள்.

---

* 16—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

(பிற்பகல் 2 10)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விற்பனை வரி சம்பந்தமாக ஒரு சில சட்டத் திருத்தங்களை அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இதிலே சுருக்கமாக ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கெனவே 10 ரூபாய் என்று இருந்த ரிஜிஸ்ட்ரேஷன் பீஸை 100 ரூபாய் என்று உயர்த்தி 1986 ஜூன் 17 ஆம் தேதியிலிருந்து அமுலுக்குக் கொண்டு வரப்படுகிறது. ஒரு சிலர் இந்த வரி உயர்வு சரியல்ல என்று முறையீடு கொடுத்ததன் காரணமாக அந்தக் காலத்திலே அவர்கள் ஃபீஸ் செலுத்தவில்லை. ஆனால் அரசு, பெருவாரியான ஆட்கள் செலுத்தி விட்டார்கள், ஆகவே 1986 ஆம் ஆண்டு ஜூன் 17 ஆம் தேதியிலிருந்து எந்தச் சலுகையும் செய்ய முடியாது என்ற கருத்தை ஏற்படுத்திக்கொண்டு அதற்கு மேலே 1986 எப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து முன்தேதியிட்டு இந்தச் சட்டத்தை அமுல்படுத்த விரும்புகிறார்கள்.

இந்த விஷயத்தில் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வியாபாரிகளைப் பொறுத்தவரையில் ஓர் இடத்தில் மட்டுமல்லாமல் பல இடங்களில் கடைகளை வைத்து வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தக் கட்டணத்தால் பாதிப்பு ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே பல கடைகளை வைத்து நடத்துகிறவர்களுக்கு இதன் காரணமாகப் பாதிப்பு ஏற்படுத்தாத முறையில் ஒரு சில சலுகைகளைச் செய்வது பற்றி அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னுமொரு பக்கத்திலே இன்றைக்கு ஒரு சில பொருள்களுக்குப் புதிதாக விற்பனை வரியைக் கொண்டு வரக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக, கறுப்புக்கட்டியோடு சேர்த்து, பனை பொருட்கள் சிலவற்றுக்கும் விற்பனை வரி போட்டிருக்கிறார்கள். இன்றைக்கு கிராமப் பகுதிகளில் குறிப்பாக நெல்லை மாவட்டம், குமரி மாவட்டம், சேலம் மாவட்டம் போன்ற பகுதிகளில் பனை பொருள்களை மக்கள் பெரிதும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பொருள்களின் மீது இப்படி விற்பனை வரி போடுவதன் காரணமாக அவர்களுக்குச் சில பாதிப்புகள் இருக்கின்றன.





(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதேபோல நைலான் டையர் மற்றும் டியூப்ஸ் மோட்டார் வாகனங்களுக்குப் பயன்படுகின்றன. அநேகமாக டையர், டியூப்களை அரசு போக்குவரத்துக் கழகங்களும் பயன்படுத்துகின்றன. ஆகவே இப்படிப்பட்ட பொருள்களின் மீது விற்பனை வரி போடும் போது நாளாவட்டத்தில் மக்களை பாதிக்கக்கூடிய முறையில் கட்டண உயர்வு ஏற்படுவதற்கு ஒரு காரணமாக ஆகாதா என்ற ஐயப்பாடு இருக்கிறது. ஆகவே இந்த விற்பனை வரிகளைக் குறைக்க வேண்டும்.

இந்த வரிச சலுகைகளைப் பொறுத்தவரையில் சென்ற வருடத்தில் சட்டமன்றத்திலே ஒரு சில கருத்துக்களை எடுத்து வைத்து, வரிச் சலுகை கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டோம். ஆனால் சட்டமன்றத்திலே முடியாது என்று சொல்லிவிட்ட பிறகு அரசு எந்தக் காரணத்தாலோ—எந்தக் காரணம் என்று எங்களுக்குத் தெரியாது. வெளியே பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. அந்தக் காரணங்களை நான் இங்கே சொல்ல விரும்பவில்லை—வியாபாரிகளைக் கூப்பிட்டு வைத்துப் பேசி அதற்குப் பிறகு குறைத்துக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பிரச்சினைகளைப் பொறுத்த வரையில் சட்ட மன்றத்திலே எடுத்து வைக்கும் கருத்துக்களை முன்னிட்டு அப்படிப்பட்ட சலுகைகளைப் பொறுத்தவரையில் அரசு பரிசீலிக்க வேண்டும், நடுத்தர மக்களைப் பாதிக்காத முறையில் இந்த விற்பனை வரி அமைய வேண்டும் என்று சுட்டிக் காட்டி அமர்கிறேன்.

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டுள்ள 3 சட்ட முன்வடிவுகளின் மீதும் ஜனதா கட்சியின் சார்பாக என்து கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். வணிக வரித் துறையிலே வணிகர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டினுடைய ஜீவநாடியானவர்கள் வணிகர்கள். அரசாங்கத்தினுடைய வருமானத்திலே ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு வணிகர்களாலே செலுத்தப்படுகிறது, வரியாக. அரசாங்கம் [illegible] நிலை [illegible] லேயே அதை [illegible] குறிப்பிட்டிருக்கிறது. வணிகர்கள் வரியை முறையாக [illegible] அரசு [illegible]

[illegible]

தேதியிலே வங்கிகளிலோ அல்லது சம்பந்தப்பட்ட இடத்திலோ செலுத்துகிறார்கள். இதற்கெல்லாம் அரசு எந்தவிதமான ஊதியமும் அவர்களுக்குக் கொடுக்கவில்லை. பில் கலெக்டர்களைப் போல முறையாகப் பணத்தை வசூல் செய்து கட்டுகிறார்கள். எந்தவிதமான லாபமும் இல்லாமல், வருமானமும் இல்லாமல் பொதுநல நோக்கோடு அவர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்கள் செலுத்துகின்ற வரிதான், ஏற்கெனவே நான் சொன்னது போல, மூன்றில் ஒரு பங்கு வருமானமாக அரசுக்குக் கிடைக்கிறது. ஆனாலும்கூட, அரசு அந்த வணிகர்களுக்கு என்ன செய்திருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். சென்ற வருடம் 10 ரூபாயாக இருந்த ரெஜிஸ்டிரேஷன் பீஸை 100 ரூபாய் ஆக்கினீர்கள், 5 ரூபாயாக இருந்த கோடவுன் லைசன்ஸ் பீசை 20 ரூபாய் ஆக்கினீர்கள். அதைப் பற்றி சட்ட மன்றத்திலே பல்வேறு கருத்துக்களைச் சொல்லி, எதிர்ப்புகளைச் சொன்னேன். 10 ரூபாய் என்பதை ஏன் ஒரே நேரத்தில் 100 ரூபாய் என்று ஆக்கினீர்கள், 6 மாதங்களுக்கு முன்பு இருந்ததைவிட இப்போது 10 மடங்கு விலைவாசி ஏறிவிட்டதா என்று நான் கேட்டேன். அதை ஒத்துக்கொள்ளவில்லை. இப்போது வந்துள்ள சட்டத்தில் 1—4—1987 லிருந்து போடுகிறோம் என்று சொல்லுகிறீர்கள். இப்படி வணிகர்களைக் கசக்கிப் பிழிவதால் இந்த அரசுக்கு என்ன லாபம் என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து கணக்குகளை ஒரு மாதம்தான் வைத்துக் கொள்ளலாமென்று சட்டம் இருக்கிறது. அதை 3 மாதம் வரை வைத்துக் கொள்ளலாம் என்று சட்டத் திருத்தத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு மாதம் என்று இருப்பதே மிகக் கடுமையான, தேவையில்லாத ஒன்றாக இருந்துகொண்டிருக்கிறது என்று வணிகர்கள் கருதும் நிலை இருக்கும்போது, 3 மாதம் வரை வைத்துக்கொள்ளலாம் என்று சட்டத் திருத்தம் செய்வது எந்த வகையிலே நியாயம் என்று கேட்க விரும்புகிறேன். இங்கே ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. வணிகர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கணக்குகள், பதிவேடுகள், பதிவுருக்கள், ஆவணங்கள் ஆகியவை அடுத்த உயர் அதிகார அமைப்பின் அனுமதியுடன் அல்லாமல் ஒரே காலத்தில், முப்பது நாட்களுக்கு மேலாக இருத்தி வைத்திருக்கப்படுதல் கூடாது. அந்த கணக்குகள், பதிவேடுகள், பதிவுருக்கள், ஆவணங்கள் ஆகியவற்றை அந்த உயர் அதிகார அமைப்பின் அனுமதியுடன் முப்பது நாட்களுக்கு மேலாக, ஆனால் தொண்ணூறு நாட்களுக்கு மிகாமல் இருத்தி வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது





எந்த வகையிலே நியாயம் என்று கேட்க விரும்புகிறேன். கணக்குப் புத்தகங்களை எடுத்துச் சென்றால், அதிலே தவறுகள் இருந்தால் அதற்குரிய விளக்கங்களை உடனே கேட்க வேண்டியதுதான் நியாயம். 3 மாதங்கள்வரை வைத்துக்கொள்ளலாம் என்றால், அது எப்படி நியாயமாகும்? அந்தக் கணக்குகளை அப்படி வைத்துக்கொண்டால், வணிகர்கள் என்ன செய்வார்கள்? கணக்குப் புத்தகத்தை நீங்கள் வைத்துக்கொண்டு, பிரச்சினைகளை வளர்த்துக்கொண்டே வந்தால், அவர்கள் அந்தக் கணக்குப் புத்தகங்களை வாங்க வணிக வரி அலுவலகத்திற்கும், கடைக்கும் அலைவார்களா அல்லது வியாபாரத்தைச் செய்வார்களா? வியாபாரம் செய்தால்தான் அரசுக்கு வரி அதிகமாகக் கிடைக்கும் இதையெல்லாம் அரசு கவனிக்க வேண்டும்.

(பிற்பகல் 2-20)

இன்னும் ஒன்று சொல்லியிருக்கிறார்கள். பல விற்பனை வரி வீதங்களை 1.10 முதல், 1.9 முதல் வெவ்வேறு இனங்களுக்கு மாற்றி இருக்கிறார்கள். இதன்மூலம் அரசாங்கத்திற்கு வருமானத்தைத்தான் பெருக்க வழி தேடி இருக்கிறார்களே தவிர, இதன்மூலம் வருமானம் கூடுமா என்பதுதான் கேள்வி. நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, ஏற்கெனவே சொன்னது போலவே முறையாக வரிகளை, குறைந்த அளவுக்கு வரிகளை அனைத்துப்பொருள் வரிகளை ஒரு முனை வரியாக நீங்கள் விதித்தாகவேண்டும். உங்களுக்கு வருகின்ற ரூ 1200 கோடியிலிருந்து ரூ. 1500 கோடி வரை வரி கிடைக்கும் என்று வணிகர்கள் சொல்கின்றார்கள். இரண்டு சதவிகிதம் வரி போட்டாலும். ரூ. 1,500 கோடிக்கு வரி முறையாகவே கிடைக்கும். எந்தவிதமான சோதனை சாவடியும் தேவையில்லை. எந்தவிதமான நிர்ப்பந்தமும் தேவையில்லை. எந்தவிதமான கணக்குகளையும் கடைகளிலே செக் பண்ணி, அவசரப் படைகள் வைத்து பறிக்கவேண்டியதில்லை. ரூ. 1500 கோடி வரும் என்று வணிகர்கள் சொல்கிறார்கள். ஏனென்று சொன்னால் ஏற்கெனவே ஒரு சதவிகிதம் வரியிலேயே ஏறத்தாழ 200 கோடி ரூபாய் வந்திருக்கிறது. இதிலே என்னவென்றால் இப்போது பல மடங்குகள் வரிகள் கூடியிருக்கின்றன. பல மடங்குகள் விவசாயம் பெருகியிருக்கின்றது. பல மடங்கு விலைகள் கூடியிருக்கின்றன; அப்படி இருந்தும் ரூ. 1200 கோடிதான் என்றால் என்ன அர்த்தம்? வரிகள் ஏமாற்றப்படுகின்றன. நீங்கள் போட்டிருக்கின்ற வரிவிதிப்பு முறையினால் வரிகள் ஏமாற்றப்படுகின்றன

என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த முறையில் வரிவிதிப்பை வகுக்கவேண்டும். இரண்டு சதவிகிதம் வரி விதித்தால் யாருமே மறைப்பார்கள். ஏமாற்றம் செய்வதற்கு வாய்ப்பு இல்லாத முறையில் வரி வசூல் செய்யவேண்டும் என்றால், இதைக் குறைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பல்வேறு சட்டதிட்டங்களைப் போட்டுப்போட்டு வணிகர்களைத் துன்புறுத்தக்கூடாது என்று கேட்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த ஐந்தாம் திருத்தச் சட்ட முன்வடிவினைப் பொறுத்தமட்டில் வரிவிதிப்பை எதிர்த்து வணிகர்கள் மேல்முறையீடு செய்கின்றபோது, துறைக்குப் பாதுகாப்பான தீர்ப்பை மேல் முறையீட்டிலே வழங்குகின்றபோது, அவர்கள் 90 தினங்களுக்குள், அந்த தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு 90 தினங்களுக்குள் தனி நேர் முறையீடு செய்யவேண்டும் என்ற நிலை இருக்கிறது. அப்படி ஏதாவது காலதாமதம் ஏற்படுமானால் அந்தக் காலதாமதத்தினைக் காட்டி மேல் முறையீடு செய்வதற்கான வாய்ப்பு இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலை இருந்துகொண்டிருக்கின்றது. அதனாலேயே அரசுக்கு பெருத்த இழப்பு ஏற்படுகின்றது என்ற வகையில் ஒரு தீர்ப்பு ஆயம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையிலே மேல் முறையீடு செய்வதற்குக் கால அவகாசம் வேண்டும் என்று கேட்கின்ற அளவிலேதான், 90 நாட்களுக்கு மேலே போனாலும்கூட, அந்தத் துறை அப்பீல் செய்கின்ற கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற வகையிலே இந்தத் திருத்தத்திலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

இன்னொன்று வணிகர்கள் அவர்களுடைய கணக்குகளை, பதிவேடுகளை அலுவலர்கள் கைப்பற்றுகிறபோது, அந்த அதிகாரிகள் மேல் அமைப்புகளுக்கு 30 தினங்களுக்குள்ளாகவே அனுப்பி வைக்கவேண்டுமென்ற நிலை இருக்கிறது. அப்படி ஒரு நிலை இருக்கின்ற காரணத்தினாலேயே அவசர அவசரமாக வரிவிதிப்புகளை அதிகமாகச் செய்யக்கூடிய சூழ்நிலைகூட வந்துவிடும். ஆகையால் மிகவும் அவசரமான அளவிற்கு இல்லாது மிகுந்த ஆய்வு செய்து வரிவிதிப்புகளைச் செய்யவேண்டும் என்ற நிலை இருக்கின்றதால் 30 தினங்கள் என்பது போதாமல் இருக்கிறது. ஆக 30 தினங்களுக்கு மேலாக 90 தினங்களுக்குட்பட்டு நிலை இருக்கவேண்டும். இந்த கால அவகாசம் 90 தினங்களுக்குக் கீழே





வைத்துக்கொள்ளலாம். அந்த கால அவகாசத்தை வைத்துக் கொள்ளலாம் என்ற அளவிலே இந்த சட்ட திருத்தத்திலே வகை செய்யப்பட்டிருக்கின்றது என்பதை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பதிவுக் கட்டணம் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ரூ. 10 பதிவுக் கட்டணம் என்பதே 1959 ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட கட்டணம். இன்றைய தினம் பொருள்களுடைய விலை ஏற்றம் ஏற்பட்டிருக்கின்றது. எந்த அளவுக்கு உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. 1987 ஆம் ஆண்டு இப்போது நடந்துகொண்டு இருக்கின்றது. சுமார் 28 ஆண்டு காலமாக இந்த ரூ. 10 தான் பதிவுக்கட்டணமாக இருக்கின்றது. அப்படியே உயர்த்தப்படாமல் இருக்கின்றது. வணிகர்கள் தங்களுடைய வணிகத்தைச் செய்வதற்கு, பதிவு செய்வதற்கு ரூ. 10 என்று இருந்ததை ரூ. 100 ஆக உயர்த்த அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அதைப்போலவே கிளை நிலையங்கள் வைத்திருக்கின்றவர்கள், தொழில் செய்கின்றவர்கள் பிராஞ்ச் என்று வைத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு அந்த பிராஞ்ச் பதிவு கட்டணம் ரூ. 5 என்று இருந்ததை இப்போது ரூ. 20 ஆக மாற்றி இருக்கிறோம். 17—6—1986 முதல் திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்திருந்தாலும் 1—4—1986 முதல் வணிகர்கள் தாங்களாக வந்து வரியைக்கட்டுகின்ற நிலைமையும், அதிகாரிகள் நேரில் சென்று வசூலிக்கின்ற தன்மையும் இருக்கிறது. 17—6—1986-ல் இருந்து அறிவிக்கப்பட்டிருந்தாலும் 1—4—1986-ல் இருந்து வணிகர்கள் கட்டணம் செலுத்திய காலத்திலிருந்து இதனை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற அடிப்படையில் இச்சட்டமுன்வடிவில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில் (59/87) இன்றையதினம் பல்வேறு நிலைகளிலே தனக்கு இருக்கிற அதிகாரத்தை வைத்துக் கொண்டு இந்த அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 59 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் முதலாவது மற்றும் ஐந்தாவது இணைப்புப் பட்டியல்களில் ஒருமுனை வரிக்கு உட்பட்ட சரக்குகள் இடம் பெற்றுள்ளன. அரசின் வருவாய்க் கணக்கின்கீழ்

[திரு. த. இராமசாமி] [1987 நவம்பர் 18

மேற்படி இணைப்புப் பட்டியலை அவ்வப்போது மாற்றியமைக்கவும், திருத்தியமைக்கவும் அரசுக்கு அவசியம் ஏற்படுகிறது. சட்டத்தின் 59 (1) வது பிரிவில் அரசுக்கு அதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் முதல் இணைப்பு பட்டியலிலுள்ள வரிசை எண் 3, 21, 59, 103, 106, 106ஏ, 166 மற்றும் 166ஏ ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள இனங்களை மாற்றவோ, திருத்தவோ, கூட்டவோ அல்லது நீக்கவோ அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு அதிகாரம் வழங்கியதற்குச் சட்ட உருவம் கொடுக்கும் வகையில் இச்சட்டமுன்வடிவு இங்கே நிறைவேற்றப்படுவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்கள் இன்றையதினம் வணிகர்கள் கசக்கி பிழியப்படுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் அவரும் ஒரு வணிகர்தான். அவருக்கு இந்த நேரத்தில் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1977 ஆம் ஆண்டு தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள்வதற்கு முன் பல்வேறு கட்சிகள் ஆட்சியில் இருந்துள்ளன. தங்கத் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக பொறுப் பேற்ற பிறகுதான் வணிகர்களுக்கு இருந்த பல்வேறு சிரமங்கள் இடைஞ்சல்கள் அகற்றப்பெற்று பல்வேறு சலுகைகளை வழங்கி யிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்த அரசுக்கு யாரையும் கசக்கிப் பிழிய வேண்டிய நோக்கம் கொஞ்சமும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அவர்கள் பிரச்சினை மீது கருணையைக் காட்டுகின்ற முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம். அந்த வகையில் வணிகர்களுக்கு ஏராளமான சலுகைகளைப் பல்வேறு நிலைகளில் வழங்கியிருக்கிறது இந்த அரசு. வணிகர்களுக்கு ஆதரவு தருகிறோம் என்பதால் சாதாரணமாக வாங்கிச் சாப்பிடுகிற மக்களைக் கவனிக்கவில்லை என்று பொருளல்ல. வாங்குகிறவர்களும், விற்கிறவர்களும் எந்த வகையிலும் சிரமத்திற்கு ஆளாகக் கூடாது என்கிற எண்ணத்தில் இந்த அரசு செயல்படுகிறது என்பதற்கு ஆதாரமாகக் கடந்த காலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1987 நவம்பர் 18] [திரு. த. இராமசாமி]

(பிற்பகல் 2.30)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசும்போது பொதுவாக இன்றையதினம் ஏதோ சட்டமன்றத்தில் நாங்கள் இந்தந்த வரிகள் கூடாது என்று குரல் எழுப்பினாலும், கடைசியில் நிறைவேற்றி விடுகிறீர்கள்; பிறகு வழியில் சம்பந்தப் பட்டவர்களோடு பேசி ஏதோ ஒரு காரியத்தை நீங்கள் நடத்தி விடுகிறீர்களோ என்று சந்தேகிக்கும்படியாக நிலைமைகள் இருக்கின்றன என்று இங்கே குறிப்பிட்டார்கள். அவர்கள் பல்வேறு நிலைமைகளை, குறிப்பாக கள்ளச்சாராயம் பற்றி எல்லாம் இங்கே சொன்னார்கள். மதுவிலக்கை அமுல்படுத்திய காரணத்தால் 250 கோடி ரூபாய் அளவுக்கு இந்த அரசுக்கு இழப்பு ஏற்படும் நிலையில், அந்த இழப்பைச் சரிகட்டும் வகையில், மக்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் ஏதாவது ஒன்றை அமுல்படுத்த வேண்டியது ஒரு மக்கள் நல அரசின் தலையாய கடமை. அந்த வகையில் நமக்குப் பெரிய பொருளாதார இழப்பு என்கிற நிலை ஏற்பட்டதால் மாற்று வழிகளின் மூலம் நாம் வருமானத்தைத் தேடியாக வேண்டிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம். அரசு சில நடவடிக்கைகளை நடத்தி வருகிறபோது, அதனால் பாதிப்பு இருக்கிறது, பாது காப்பு வேண்டும் என்று சம்பந்தப்பட்டவர்கள் கோரிக்கை வைக்கிறபோது அவர்களை அழைத்துப் பேசுவது அரசாங்கத் தினுடைய கடமையாக இருக்கிறது. அந்த வகையிலே தாய் உள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள் வணிகர் பெரு மக்களை அழைத்துப் பேசி, அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டார்கள். இதிலே சந்தேகத்திற்கு எங்கே இட மிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எதிலும் சந்தேகம், சந்தேகம் என்று சொல்வது நடைமுறைக்கு ஏற்றதல்ல என்பதை உரையாற்றுபவர்கள் உணர்ந்து, கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும். இன்னும் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். அரசாங்கம் அவற்றை எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்து, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 54/1987) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(எ) தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்டமுன்வடிவு 1987.**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 56/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

* 17—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கிற தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்டத்தின் மூலம் வழங்கப்படத்தக்க உதவித் தொகையை நாங்கள் வரவேற்கிறோம். 150 ரூபாயாக இருந்த உதவித் தொகையை 250 ரூபாயாக உயர்த்தி, அதிலும் குறிப்பாக 1987 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அமலாக்கப்படும் என்று கூறியிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம்.

அதோடு தமிழ் அறிஞர்களுக்கு இந்த உதவித் தொகையை வழங்கும்போது பாரபட்சம் ஏற்பட்டுவிடாமல் அனைத்துத் தமிழறிஞர்களுக்கும் இந்த உதவித்தொகை கிடைக்கக்கூடிய வகையில்—வெளியிலே பாரபட்சம் காட்டப்படுகிறதோ என்று கேட்கும் நிலைமை இருக்கிறது; அது இல்லாமல் அனைத்துத் தமிழறிஞர்களுக்கும் கிடைக்கின்ற வகையில்—அரசு பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழறிஞர்கள் என்று சொல்லக்கூடிய விளக்கத்திலே பல நாடகக் கலைஞர்கள், கிராமியக் கலைஞர்கள், பல்வேறு கலைத் துறைகளில் தேர்ச்சி பெற்று இப்போது வயது முதிர்ந்து வறுமையில் மிகவும் வாடிக்கொண்டிருக்கிற கலைஞர்கள் மனுக்கள் கொடுத்து, அவை அரசின் பரிசீலனையில் இருக்கின்றன; இதுவரையில் தீர்வு காணப்படவில்லை. அந்த மனுக்களை எல்லாம் நல்லமுறையிலே பரிசீலனை செய்து, அனைத்துக் கலைஞர்களும் கஷ்டம் இல்லாமல், வயது முதிர்ந்த காலத்தில் நிம்மதியான வாழ்வு பெற்றார்கள் என்ற முறையிலே தீர்வு காண வேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. தமிழறிஞர்களுக்கு 150 ரூபாய் உதவித் தொகை தரப்படும் என்கின்ற மூலச்சட்டத்தை மாற்றி அவர்களுடைய வாழ்க்கை நிலையினைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு, 250 ரூபாய் அவர்களுக்கு உதவித் தொகை வழங்குகின்ற சட்டமாக இது அமைந்திருக்கிறது. ஆகவே, இதை எதிர்க்கட்சி என்ற முறையில் எதிர்க்காமல் வரவேற்கிறோம்.

[திரு. அ. ரகுமான்கான்] [1987 நவம்பர் 18

அதேநேரத்தில் இங்கே இன்னொரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது இந்தி ஆதிக்க எதிர்ப்பில் ஈடுபட்டு சிறை சென்ற தியாகசீலர் களுக்கு எல்லாம் மானியம் வழங்க எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது முயற்சி எடுக்கப்பட்டு, உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஆனால் அதேநேரத்தில் இங்கே இருக்கக்கூடிய சிலர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு போட்டு இந்த மானியம் தரப்படக் கூடாது, இது இந்தியாவினுடைய தேசிய ஒருமைப்பாட்டுக்கு, இந்தியாவின் ஒற்றுமைக்கு விரோதமானது என்று வழக்கு தொடர்ந்தார்கள். ஆனால் சென்னை உயர்நீதிமன்றம் இது அரசியல் சட்டத்திற்கு விரோதமானதல்ல, இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரில் உயிர்நீத்த தியாகிகளுக்கும், சிறை சென்ற தியாகச் செம்மல்களுக்கும் மானியம் வழங்குவது சட்டபூர்வ மானதுதான் என்று தீர்ப்பு வழங்கினார்கள். ஆனால் அதற்கும் மேலாக உச்ச நீதிமன்றத்திற்குப் போனார்கள். சுப்ரீம் கோர்ட் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து சிறைச்சாலை சென்ற தியாகி களுக்கோ அல்லது மாண்டவர்களுடைய குடும்பத்தினருக்கோ இந்த மானியத் தொகை கொடுப்பது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்று சொல்லி இந்தியாவினுடைய அரசியல் சட்டத்தினுடைய 351-வது பிரிவைச் சுட்டிக்காட்டினார்கள்.

"It shall be the duty of the Union to promote the spread of the Hindi language to develop it so that it may serve as a medium of expression for all the elements of the composite culture of India."

இந்தியாவிலே பல்வேறு கலாச்சாரங்களுடைய மக்கள் வாழ் கிறார்கள். எனவே மத்திய சர்க்கார் இந்தியைப் பரப்புவதும், இந்தியை வளப்படுத்துவதும் அதனுடைய 'It shall be the duty of the Union' என்று சொல்லி, அது மத்திய சர்க்காரின் கடமை என்று நீதிபதி சுட்டிக்காட்டி, இந்த மாதிரி தமிழ் அறிஞர் களுக்கோ, தியாகிகளுக்கோ அல்லது அதைப்போலவே அவர் களுடைய குடும்பத்தினருக்கோ இந்த மானியத் தொகை வழங்குவது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்று



1987 நவம்பர் 18] [திரு. அ. ரகுமான்கான்]

தீர்ப்பு வழங்கிவிட்டார்கள். எனவே இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தினர் தமிழ் மொழியைப் பாதுகாப்பவர்கள்; தமிழ்ப் பண்பாட்டைப் பாதுகாப்பவர்கள்; மொழிப் பண்பாட்டு உணர்வைக் காப்பவர் களிடத்திலே அக்கறை காட்டுபவர்கள். இவர்களுடைய குடும் பத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாதம் 150 ரூபாய் வழங்க வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்து இப்போது அதை 250 ரூபா யாக ஆக்கி இருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற விலைவாசி நிலைமை உங்களுக்குத் தெரியும். இன்னும் சொல்லப்போனால் பால் கட்டணம் உயர்த்தப்பட்டு இருக்கிறது; பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டு இருக்கிறது; அதைப்போல மின் கட்டணம் உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதுகுறித்து அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அவசியத் தேவைப் பண்டங்களின் விலைகள் எல்லாம் ஏறியிருக்கின்றன. எனவே இந்தக் காலக் கட்டத்தில் 250 ரூபாய் என்பது போதுமானதல்ல.

பல்வேறு காரியங்களில் பல்வேறு செலவுகளை எல்லாம் எவ்வளவோ செய்கிற காலகட்டத்தில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துச் சிறை சென்ற தியாகிகளுக்கும், மாண்டவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் கொடுக்கிற தொகையை இன்னும் அதிகப்படுத்திக் கொடுத்து தமிழ் மொழி உணர்வை, இன உணர்வை, இந்தி ஆதிக்க எதிர்ப்பு உணர்வைப் பாராட்டுகிற வகையில் அண்ணா பெயரில் நடைபெறுகிற அரசாங்கம் ஏற்பாடு களைச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இதிலே இருக்கின்ற மிகப்பெரிய வேடிக்கை என்னவென்றால் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரில் உயிர்நீத்த தியாகிகளுக்கும், மாண்டவர்களுடைய குடும்பத்தினருக்கும், இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரில் சிறை சென்ற தியாகச் செம்மல்களுக்கும் இந்தத் தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு பல ஆண்டுகள் உருண்டு ஓடிவிட்டன. திருமணம் முடிந்தும் சாந்தி முகூர்த்தம் நடக்கவில்லை என்று சொல்வதைப்போல இங்கே அறிவிப்புகள் செய்துவிட்டோம்; சட்டங்கள் போட்டுவிட்டு [illegible] என்று இந்த அரசாங்கம் சொல்கிறதே தவிர இதுவரை [illegible] இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரில் உயிர்நீத்த தியாகிகளின்

குடும்பத்தினருக்கோ போராட்டத் தியாக தீபங்களுக்கோ எந்தத் தொகையையும் கொடுக்கவில்லை. முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பு இன்னும் காற்றிலே கலந்து இருக்கிறதே தவிர, கரை சேராத ஓடமாக இருக்கிறதே தவிர, கற்பனையாக இருக்கிறதே தவிர இன்னும் கொடுக்கப்படவில்லை. வெறும் சட்டங்கள் எந்தப் பயனையும் தராது. அரசியலுக்கு வேண்டுமானால் அது உதவலாம். நடைமுறைப்படுத்தப்படுகிற வரைக்கும் அது வெறும் எலும்புக்கூடாகத்தான் இருக்கும். அதற்குச் சதையும், ரத்தமும் வேண்டுமானால் நடைமுறைப் படுத்தியாக வேண்டும். இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பது அண்ணாவின் கொள்கை. அவர்களுக்கு உதவி செய்வதாக சட்ட அறிவிப்பு வந்தாகிவிட்டது. ஆகவே நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன் . . .

டாக்டர் கே. [illegible]: பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய ஆதிக்கம் என்று சொல்கிறார்கள். அதாவது இந்தி ஆதிக்கம் என்பதற்குப் பதில் இந்திய ஆதிக்கம் என்று சொல்கிறார்களோ . . . .

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் மொழியைப் பாதுகாப்பவர்கள் என்ற வார்த்தை இருக்கிறது. That is against the imposition of Hindi. பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நாட்டிலே ஒரு இந்தி ஏகாதிபத்தியமே இருக்கிறது. பாரதமாதாவின் பிள்ளைகள் என்று சொல்லிவிட்டு நாமெல்லாம் ஒரு கொடியில் பூத்த மலர்கள் என்று சொல்லிவிட்டு, இங்கே தமிழை மத்திய சர்க்காரின் ஆட்சி மொழியில் உள்ள ஒரு மொழியாக ஆக்காமல் வடக்கே இருக்கக்கூடிய உத்தரப்பிரதேசத்திலும், மத்தியப் பிரதேசத்திலும் இருக்கிற மக்கள் பேசுகின்ற ஒரு மொழியை ஆட்சிமொழியாக ஆக்குவதும், அந்த மொழியிலே [illegible] எழுதினால்தான் இங்கே இருக்கக் கூடிய சென்ட்ரல் பேங்க், தபால் [illegible], இன்னும் அலுவலகம் போன்றவற்றில் [illegible] பிரமோஷன்—அதாவது பதவி உயர்வு கொடுக்கப்படும் என்று சொல்வதும் எந்த வகையில் நியாயம்? Is it not discrimination on the basis of language?





மதத்தின் பெயரால் வேறுபாடு கூடாது என்று சொல்கிற போது, இனத்தின் பெயரால் வேறுபாடு கூடாது என்று சொல்கிற போது, மொழியின் பெயரால், அந்த இன அடிப்படையிலே வேறுபாட்டை உருவாக்கி இரண்டாந்தர குடிமக்களாக்குவதுதான் இந்தி ஆதிக்கம், அதற்குப் பெயர்தான் இந்தி ஆதிக்கம். அந்த ஆதிக்கத்தை ஒழிக்க அழிப்பதில், ஆயிரம் அடி கல்லறை கட்டத் தோண்டுவது, அதற்காக எந்தப் பதவியையும் இழந்து தியாகம் செய்வது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அடிப்படைக் கொள்கையாகும். ஆகையினாலே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றுகூட இந்த சபையிலே பேசும்போது சொன்னேன். இந்தி மொழியிலேதான் பாங்குகளிலே இருக்கக்கூடிய பைல்கள் எல்லாம் இருக்கின்றன. ஆங்கிலத்தோடு இந்தி டிரான்ஸ்லேஷன் இருக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். எவ்வளவோ பெரிய இழப்புகளுக்கு பிறகு எங்கள் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பலர் போராட்டம் நடத்தியதற்குப் பிறகு, பதவிகளை இழந்ததற்குப் பிறகு, பல பேர் ரத்தம் சிந்தியதற்குப் பிறகு, அண்ணாவும், பெரியாரும் அதற்காகக் கடுமையான போராட்டங்களை நடத்தியதற்குப் பிறகு இன்னும் அந்த இந்தி ஆதிக்கம் இருந்துகொண்டிருக்கிறது.

(பிற்பகல் 2-40)

ஆகையினால்தான் நான் சொல்ல விரும்புவது [illegible] வழியிலே, பெரியார் வழியிலே போராட்டங்களில் [illegible] அந்தத் தியாகிகளின் [illegible] [illegible] சட்டங்களால் பயன் [illegible] [illegible] வேண்டும். எனவேதான் நான் [illegible] அவர்களே, பழைய சட்டம் 1983-லேயே வந்தது. அதற்கு பல பேர் மனு போட்டும்கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய இறுதிப் பேச்சில் உடனடியாக அந்த தியாகிகளுக்கும், அந்த [illegible] 200 ரூபாய் [illegible] [illegible]

[திரு. அ. ரகுமான்கான்] [1987 நவம்பர் 18

அவையின் தலைவர் அவர்களே, இதிலேயும் ஒரு சிக்கல் இருப்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அந்தத் தொகையைப் பெறுபவர்கள் 3 மாதம் பெர்மனன்ட்டாகத் தமிழகத்தில் இருக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. மூன்று மாதம் தமிழகத்தில் பெர்மனன்ட்டாக இருக்க வேண்டும் என்றால், நான் கேட்கிறேன். வயதான பெற்றோர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய பையன் பம்பாயிலோ அல்லது வேறு எங்கோ வேலை பார்க்கலாம். அவர்கள் தியாகிகளாக இருக்கலாம். அவர்கள் பையனோடு குடும்பம் நடத்த பம்பாய்க்குச் சென்றிருக்கலாம். அங்கே வாழ வேண்டிய அவசியம் ஏற்படலாம், அதனால் அவர்களுக்கு இந்த மானியம் இல்லை என்று சொல்வது என்ன நியாயம்? அல்லது 4 மாதம் 5 மாதம் வெளியூரிலே, வேறு மாநிலங்களிலே இருக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம்; அவர்களுக்கு இந்த மானியம் இல்லை என்று சொல்வது என்ன நியாயம்?

அது மட்டும் அல்ல; தமிழ்நாட்டிலே 3 மாதம் அவர்கள் ரெசிடென்ட்டாகத் தொடர்ந்து இருந்தார்கள் என்பதற்கு என்ன ஆதாரத்தை வைத்து, எப்படிக் கண்டு பிடிப்பார்கள்? உடனே சான்றிதழ் வாங்கிக் கொடுத்தால் போதும் என்று சொல்லலாம். இந்த நாட்டிலே சான்றிதழ்கள் பணத்திற்காக அன்றாடம் விற்கப் படுவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து இங்கே 3 மாதம் இருந்தார் என்று சர்டிபிகேட் கொடுத்தால் மானியத்திற்கு எலிஜிபிலிட்டி ஆகிவிடுகிறது. இது சரியல்ல எனவே அந்தப் பிரிவை எடுத்து விட்டு, தொகையை அதிகரித்து, அண்ணா வழியில், பெரியார் வழியில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்த அந்தத் தியாகச் சுடர்களுக்கு; இந்த மானியம் உடனடியாக வழங்கப்படும் என்று இந்த சபையிலேயே அறிவித்தால் தமிழர்களின் சார்பாக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வணக்கம்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவையின் தலைநாயகர் அவர்களே, தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குகிற சட்ட முன்வடிவிலே பேசுவதற்கு வாய்ப்பினை தந்தமைக்கு நான் உள்ளபடியே மகிழ்வெய்துகிறேன். தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை [illegible] ஒரு சிறப்பான பணியை, ஏற்று இருக்கிற இந்த அரசு, தமிழ் மொழியை



1987 நவம்பர் 18] [திரு. ஜி. கே. ஜெ. பாரதி]

அரியணையில் ஏற்றி அழகாக செங்கோல் ஓச்சுகிறது என்று இந்த அரசை பாராட்டுவது கடமை என்ற கருத்தினால், இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று உளம் மகிழ்வெய்துகிறேன்.

தமிழ் அறிஞர்களுக்கு கொடுத்து வந்த 150 ரூபாய் பொற் காசுகளை 250 பொற்காசுகளாக ஆக்கி மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். விலைவாசி வளர்ந்து வருகிற நிலையில், இந்த வறட்சியான சூழ்நிலையில் சற்று தாராளமாக தமிழ் அறிஞர்களுக்கு அள்ளி தந்திருக்கலாம். ஏனோ அவர்கள் அதிகமான தொகை வந்து விடுமோ என்று அச்சப்படுகிறார்கள் போல் இருக்கிறது. 13 லட்சம் ரூபாய்க்கு இழப்பு வந்து விடுமோ என்ற காரணத்தினாலே வெறும் 250 ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள். நம்முடைய இந்திய நடுவண் அரசு இந்திய விடுதலை வீரர்களுக்கு 500 பொற் காசுகளை அள்ளித் தருவதுபோல நீங்களும் குறைந்தது ஒரு மனிதனுடைய வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவையான 500 பொற்காசுகளைத் தருவீர்களேயானால் அது பாராட்டுக்கு உரியது என்ற வகையில் பொன் மலர் நாற்றம் உடைத்து என்ற உணர்விலே அதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் கள்வர்களாலும், கயவர்களாலும் திருடப்படாமல் எழு பிறவிக்கும் வருகிற இந்த தொட்டனைத்து ஊறும் மணற் கேணியினுடைய அறிவு ஊற்றினைத் தோண்டித் தோண்டி அருமையான அற்புதமான அறிவு நீரை இந்தப் பரந்த உலகம் முழுவதும் பகிர்ந்து பகிர்ந்து, யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற இயல்பான சிந்தனையை ஊற்றுவிக்கும் அந்தத் தமிழ் அறிஞர்களுடைய உள்ள உணர்வினை, பாங்கினை அந்த அறிவு ஊற்றுகளில் எழுகிற புதிய சிந்தனைகளையெல்லாம் தமிழை வளர்ப்பதற்கு, தமிழை நாற்றங்கால் பயிராகப் பெருக்கி மகிழ்வதற்கு ஏற்ற நிலையை உருவாக்கி இருக்கிற இந்த மாண்புமிகு அமைச்சருடைய கரங்களுக்கு மனதாரப் பொற்காப்பிட்டு மகிழ்கிறேன் என்ற உணர்விலே சொல்லுகிறேன், இந்தத் தொகையை மேலும் ஊக்குவிக்க வேண்டும்.

[திரு. ஜி. கே. ஜெ. பாரதி] [1987 நவம்பர் 18

இந்தத் தமிழ் வளர்த்த நல்லறிஞர் பெருமக்கள் நல்ல குழந்தைகளைப் பெற்றிருப்பார்கள். கல்வியிலே ஊன்றுகோலுடன் இருந்த நிலை மாறி அவர்கள் மேல் கல்வி படிக்கின்ற போது, அந்த இளைஞர்களுக்குக் கல்வியில் உதவித் தொகை பெறுகின்ற தமிழ் அறிஞர்கள் என்று நீங்கள் ஒரு காலத்தை உருவாக்க வேண்டும். அந்தக் காலத்தைக் குறிப்பிட்டால் அந்த மாணவச் செல்வங்களுக்கு, அந்த இளம் தளிர்களுக்கு, தமிழ் ஆய்ந்த குடும்பங்களில் விளைந்த அந்த விளை பயிருக்கு, உங்களுடைய உதவி நீடிக்கும் அதற்குப் புதிய ஊக்கத்தைத் தருகிற ஒரு நல்ல வாய்ப்பை நீங்கள் உருவாக்க வேண்டும். இந்தப் பணி இவருக்கு வாய்த்தது என்ற தகுதியை உருவாக்கு வதற்கு அந்தத் தமிழ் அறிஞர் குடும்பங்களுக்கு நீங்கள் விளக்கு ஏற்றுகிற சூழ்நிலையில் அந்தக் குழந்தைச் செல்வங்களுக்கு, நீங்கள் ஊன்றுகோலாக மாறவேண்டும். அந்தத் தமிழ் ஆய்ந்த அறிஞர்கள் அவர்களுடைய அறிவினை, அறிவிற்கு எல்லை இல்லை, வயதில்லை என்ற நிலையில் பரந்து விரிந்திருக்கிற அந்த அறிவினை, ஆராய்ச்சி மையங்களை வைத்து ஒன்றாகத் தொகுத்து, நல்ல அற்புதமான நூல்களை வடிக்க வேண்டுமென்றும் சொல்கிறேன். சாவிலும் தமிழ் படித்துச் சாகவேண்டும்; என்னுடைய சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும் என்ற உணர்வால் சாம்பல் கூட தமிழ் மணம் பரப்ப வேண்டுமென்ற உணர்வைத் தந்திருக்கிறார்கள்.

'பைந்தமிழ் பின் சென்று பச்சை பசும்பொன்னாரே' என்று சொன்ன ஆழ்வாருடைய உணர்வுகளைப் போற்றி, தமிழ் பின்னாலே இறைவன் செல்கிறான் என்று திருஞானசம்பந்தர் சொல்வதை எண்ணிப் பார்க்கவேண்டும். 'நாளும் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர்' என்று அற்புதமாக இறை வழிபாட்டின் மூலமாக இயல் தமிழை வளர்த்த அறிஞருடைய உணர்வை எல்லாம் நெஞ்சார எண்ணி மகிழ்கிற தமிழ் அறிஞர்களுக்கு அதிகமாக தொகை தரவேண்டும். அவர்களுக்கு அழகாக இல்லங்கள் அமைத்துக் கொடுப்பதில் ஆர்வம் காட்ட வேண்டுமென்று எண்ணுகிறேன்.

[illegible] இல்லங்கள் கொடுப்பதால் அவர்களுடைய உணர்வுகள் செழுமையாக [illegible] [illegible] மாங்களாகக் குலுங்கும் செம்மை பொருந்திய [illegible] [illegible]ரம் படிந்த, வறட்சியில்லாத சூழ்நிலையில் இருக்கும். சேர்ந்தே



1987 நவம்பர் 18] [திரு. ஜி. கே. ஜெ. பாரதி]

இருப்பது எதுவென்று கேட்டால் வறுமையும், புலமையும் என்று புலவர்கள் சொல்வார்கள். அப்படி, சேர்ந்தே இருக்கிற அந்த வறுமையையும், புலமையையும் வேறுபடுத்த வேண்டும். அப்படி வேறுபடுத்தி அவர்களுடைய வாழ்வின் தரத்தை உயர்த்துகிற ஒரு பெருமையை நீங்கள் பெற்றாக வேண்டும். நம்முடைய தமிழ் எப்படிப்பட்டது என்பதற்கு, அது இளமை, ஆற்றல், செம்மை, மணம், இறைத்தன்மை என்றெல்லாம் சொல்வார்கள். தமிழ் மொழிக்கு எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பு உண்டு என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் மெய் எழுத்து என்று க, ங, ச, ஞ என்று சொல்வார்கள். கவும், ஞவும் ஒன்று சேருமானால் அதனுடைய உணர்வுகள் செம்மைப்படுவதுபோல, கோபப்பட மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அங்கு, இங்கு என்று இழுத்து சொல்கிறதைப் போல புலவருடைய வறுமைபேட்டில் ஒன்றாகச் சேர்ந்து வாழ்கிற ஒரு தன்மையை உருவாக்குவதுபோல தமிழ் அறிஞருடைய வாழ்வில் சேர்ந்திருக்கிற வறுமையை அகற்று வதற்கு ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டும். மேலும் இங்கே உதவித் தொகை அளிக்கிறபோது வளர்ந்து வரும் சமுதாயத்தினரின் வாழ்வில், ஒரு செம்மை பொருந்திய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். மேலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், முன்பு ஆட்சிக் கட்சியில் இருந்தவர் சற்று ஆவேசமாக, தமிழ்த்தாய் ஏதோ அவர்களுடைய கொல்லைப்புறத்தில்தான் வேலை செய்வதாக எண்ணி இறுமாந்திருக்கிற தன்மையர்கள் இந்தி ஆதிக்கம் என்று சொல்லி ஏதோ எங்களை, தாங்கிரஸ் இயக்கத்தை சற்று வேகமாகப் பேசுகிறார்கள் என்று எண்ணமாட்டேன்: சற்று தாண்டி விடுகிறார்கள் என்றுதான் எண்ணுகிறேன். நாங்கள் இந்தி ஆதிக்கம் என்று சொல்கிற ஏதோ ஒரு தன்மையில் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவாரானால் அவர்கள் தங்களைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவினுடைய நடுவண் அரசுக்கு ஒரு மொழியினுடைய தன்மையில் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்ற உணர்வு வருகிறபோது அந்த ஆட்சிமொழியை வளர்ப்பதற்கு [illegible] இருப்பதில் தவறில்லை. ஆனால் தமிழை வளர்க்கவேண்டுமென்று [illegible] [illegible] சார்ந்த எண்ணம் [illegible] போன்றவர்களுக்கு

[திரு. ஜி. கே. ஜெ. பாரதி] [1987 நவம்பர் 18

இருக்கும் உணர்வை மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணம் தருமென்று உணர்வைத் தந்திருக்கிற அந்த இயக்கத்தைச் சார்ந்திருக்கிறவர்களும் உணர வேண்டுமென்று மெத்தப் பணிவோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தி மொழி ஒரு ஆதிக்க வெறி உணர்வோடு இங்கே திணிக்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் வேகமாகச் சொன்னார்கள். ஆனால் இந்தி மொழியை ஒருபோதும் திணிக்க மாட்டார்கள். நேரு அவர்களும், அன்னை இந்திரா காந்தி அவர்களும், அதைப்போல எங்களின் அற்புதத் தலைவன், தமிழகத்தின்மீது தனிப்பற்று வைத்திருக்கிற தலைவன் ராஜீவ் காந்தி அவர்களும்கூட தங்களுடைய உணர்வால், சிந்தனையால் இந்தியாவினுடைய மொழிகளைச் செம்மை பொருந்திய மொழிகளாக சிறப்பாக எண்ணவேண்டுமென்று சொல்கிறார்கள். குறிப்பாக, தமிழ் மொழி மீது தனியாக அன்பு வைத்திருக்கிறார்கள். ஆகவே இங்கே ஆதிக்கம் ஒன்றும் வந்துவிடவில்லை. ஆதிக்கம் என்ற பெயராலே . . .

(பிற்பகல் 2-50)

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாரதி அவர்கள், இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், இந்தித் திணிப்பு தமிழகத்திலே கிடையாது என்று சொன்னார்கள். அப்படி உண்மையிலேயே இருக்குமானால் நான் வரவேற்கிறேன். ஆனால் அவரிடமிருந்து ஒன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற வரைக்கும், ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும் என்று முன்னாள் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்களே, அந்த வாக்குறுதியை அரசியல் சட்டத்திலே திருத்தமாக இணைப்பதற்குத் தங்கள் கட்சி தீர்மானம் போடுவதற்குத் தயாராக இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** **Convention has the force of Law.** என்பது நம்முடைய வழக்கறிஞர் நண்பருக்குத் தெரியும். மரபு என்பது இந்தியாவினுடைய நடுவண் அரசினுடைய தலைமை அமைச்சராக இருக்கக்கூடியவர்கள் தங்களுடைய வார்த்தைகளைச் சொன்னாலே, அந்த வார்த்தையே வடிவாக, [illegible]



1987 நவம்பர் 18] [திரு. ஜி. கே. ஜெ. பாரதி]

உணர்வாக, நெறியாக, முறையாக எண்ணுகின்ற மரபினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்வார்கள். அதற்குச் சட்டம் ஒன்றும் தேவையில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, மரபு என்பது, வாக்குறுதி என்பது, அதிலும் குறிப்பாக பிரதமர் பதவியில் இருப்பவர்கள் தருகிறபோது, அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால், அவர்களே, வாக்குக் கொடுத்தவர்களே, பார் உள்ளவரையும், கடல் உள்ளவரையும் இருந்துவிட முடியாது. மனிதனுடைய வாழ்க்கை அதிகபட்சம் 100 ஆண்டுக்காலம். நாளைக்கே வேறு ஒருவர் பிரதமராக வரலாம். நாளைக்கு வருகின்றவர் மிகப் பெரிய இந்தி ஆதிக்க வெறியராகக் கூட இருக்கலாம். ஆகையினாலே அரசியல் சட்டத்திலே இணைத்து விட்டால் சிக்கலே இருக்காது. அப்படி இணைப்பதிலே என்ன சிரமம்?

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** பேரவையின் தலைநாயகர் அவர்களே, நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன், இந்தியாவினுடைய நடுவண் அரசினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறவர்கள், காங்கிரஸ் பேரியக்கத்திலே இருப்பவர்கள்தான் தொடர்ந்து, நீர் உள்ளவரையிலும், இந்தக் கதிரவன் இருக்கிற வரையிலும் தொடர்ந்து இருப்பார்கள் என்று நான் சொல்லவில்லை. இந்த நாட்டினுடைய, மொழியினுடைய எண்ணங்களை உணர்ந்தவர்கள்தான் இந்தியாவினுடைய ஜனநாயக மரபிலே, தலைமைப் பொறுப்பிலே வர முடியும். ஆகவே வருகின்றவர்கள் கூட அத்தகைய எண்ணங்களைத்தான் பிரதிபலிப்பார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய உணர்வுகளைப் பகிர்ந்துகொள்வதில் தவறு ஒன்றும் இல்லை.

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவர் அவர்களே, ஜனநாயக நாட்டிலே தேர்தல் நடைபெறுகிறபோது, தொடர்ந்து ஒரு கட்சி ஆளும் கட்சியாகவும் அல்லது எதிர்க்கட்சியாகவும் மாறி மாறி பொறுப்புக்கு வர முடியும். நேற்று வரைக்கும் கேரளாவிலே, சிக்கிமிலே, அஸ்ஸாமிலே, ஆந்திராவிலே, கர்நாடகத்திலே மாற்றத்தைப் பார்க்கிறோம். எனவே இன்னார்தான் தொடர்ந்து வருவார்கள் என்று அரசியல் சட்டத்திலே இல்லை. நடை

[திரு. அ. ரகுமான்கான்] [1987 நவம்பர் 18

முறையிலும் மக்களுடைய தீர்ப்பு அப்படியிருக்காது. நான் உறுப்பினர் அவர்களைக் கேட்பதெல்லாம், இந்தி ஆதிக்கத்திலே, அவர்களுக்கு இஷ்டம் இல்லை. மத்திய சர்க்காரிலே இருப்பவர்களுக்கு, காங்கிரஸ்காரர்களுக்கு இஷ்டம் இல்லை என்றால்—அப்படி ஒரு அபாயம் வரக்கூடாது என்ற காலகட்டத்திலே—அதை அரசியல் சட்டத்திலே இணைப்பதிலே உங்களுக்கு என்ன சிக்கல் இருக்கிறது? அரசியல் சட்டத்திலே இணைத்துவிட்டால், அது ஒரு பாதுகாப்பு. அதைத்தான் அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆகையினாலேதான் கேட்கிறோம். ஏற்கனவே பல வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார்கள், பல்வேறு மாநிலங்களில், உதாரணத்திற்குச் சொல்கிறேன் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு கட்சிக்காரர்களும் பாராளுமன்றத்திலே விவாதிக்க வேண்டிய விவகாரம். இதை இங்கே விவாதிக்க முடியாது. இதை விவாதிக்க வேண்டிய இடம் பாராளுமன்றம்.

**திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மொழி விவாதம் என்று சொன்னால், பேரவைத் தலைவர் அவர்கள் நேரத்தை அதிகமாக ஒதுக்குகிறார்கள், பரவாயில்லை. நானும் மொழியைப் பற்றித்தான் சொல்ல விரும்புகிறேன். இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பாரதியை கேட்டார்கள். நானும் கேட்க விரும்புகிறேன், இந்த அரசை. மற்ற மாநிலங்களிலே எல்லாம் மும்மொழிக் கொள்கை என்று வைத்திருக்கும்போது, இந்த மாநிலத்திலே மட்டும் இரு மொழிக் கொள்கையை ஏன் வைத்திருக்கிறீர்கள், அதை விரும்புகின்றவர்கள் படிக்கின்ற வகையில் விட்டால் என்ன என்பதுதான் என்னுடைய கேள்வி, அதை இந்த அரசு செய்யுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாரதி சீக்கிரம் முடித்துவிடுங்கள். (குறுக்கீடு). நீங்கள் பேசுகிற பிரச்சினை வேறு.

**திரு. அ. ரகுமான்கான்:** திரு. ஆறுமுகம் அவர்கள் கேட்கிற கேள்வி வேறு. நான் கேட்கிற கேள்வி வேறு.





1987 நவம்பர் 18]

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு பேரவையின் தலைநாயகர் அவர்களே, தம்முடைய தமிழ் அறிஞர்களுக்கு தொகை அளிப்பதைப் பற்றி எல்லையில்லா மகிழ்ச்சி அடைகிறோம். அதே நேரத்திலே, தமிழகத்திலே காலம் காலமாகப் பல்வேறு மொழியைச் சேர்ந்தவர்கள், அவர்கள் திராவிட மொழியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, ஏன் இந்தி மொழியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அல்லது சமஸ்கிருதத்திலே புலமை பெற்றவர்களாக இருந்தாலும் சரி, அவர்களுடைய அறிவினை ஆராய்ந்து, 'நுண்மாண் நுழைபுல'த் தன்மைகளை எடுத்து ஆராய்ந்து, அவர்களுக்கும் சேர்த்து, இந்த உதவித் தொகையை அளிக்கின்ற வகையில் ஒரு பரந்த உள்ளத்தோடு, 'யாதும் ஊரே, யாவரும் கேளீர்' என்று கனியன் பூங்குன்றனார் அவர்களுடைய மரபிலே வந்த காரணத்தாலே அவர்களுக்கும் இந்த உதவித் தொகையை அளிக்கவேண்டும் என்ற உணர்வினை நான் சொல்ல விரும்புகிறேன்.

மேலும் நம்முடைய மொழிக் கொள்கையிலே என்ன சர்ச்சைகள் இருந்தாலும், என்ன வேறுபாடுகள் இருந்தாலும், ஒரு மொழியைக் கற்றுக் கொள்வதிலே தவறு ஒன்றுமில்லை, என்று நான் எண்ணுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்த மொழி நன்றாகத் தெரியும். இருந்தாலும் நம்முடைய எல்லையைக் கடந்து போகின்றபோது, 4 கோடி தமிழர்களும் தமிழகத்திலே வாழ்ந்துவிட முடியாது. ஆகவே பரந்து இருக்கின்ற . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குவது சம்பந்தப்பட்டது இந்த மசோதா. இந்த மசோதா சம்பந்தப்பட்டவற்றை மட்டும் பேசுங்கள். மொழி விவாதம் வேண்டாம்.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றும் அதிகமாகப் பேசவில்லை. முடித்து விடுகிறேன். ஒரு மொழியைக் கற்றுக்கொள்ளுவதில் தவறு ஒன்றும் இல்லை என்று எண்ணுகிறேன். ஆகவே ஒரு மொழியைக் கற்றுக் கொண்டால் தமிழ் வளமாக வாழ்வதற்கு, வளமான வாழ்வை நோக்கிச் செல்வதற்கு பல்வேறு மொழிகளைக் கற்று ஆய்ந்து செம்மைப்படுத்துவதற்கு வழி கோலும் என்று சொல்லி நான் அதிகமான நேரத்தைப் பசியோடு இருக்கிற காரணத்தால் பேரவையில் எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்லி இந்தத்

தமிழ் அறிஞர்களுக்குத் தொகை அளிப்பதிலே நான் பகையாளி அல்ல, அந்தத் தொகையை மேலும் பெருக்க வேண்டும் என்று சொல்லி என்னுடைய பேச்சை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு சட்டத்தின் அடிப்படையில் தமிழ் மொழிக்காக தமது ஆர்வத்தை அல்லது தமிழ் மொழி வளர்ச்சியை அல்லது தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியைப் பேணிக் காப்பதற்காகப் பேரார்வம் பூண்டும் சான்றாண்மையைப் புலப் படுத்திய தமிழ் அறிஞர் பெருமக்களுக்கு உதவித் தொகை வழங்குவதற்கு ஏற்கனவே மாண்புமிகு டாக்டர் பொன்மனச் செம்மல் அவர்கள் முடிவு எடுத்து சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது இந்த அரசு. அப்போது 150 ரூபாய் அவர்களுக்கு உதவித் தொகையாக வழங்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. அதை 250 ரூபாயாக உயர்த்தித் தரவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு எடுத்ததை ஒட்டி, தற்போது இந்தத் திருத்தத்தை அரசு கொண்டு வந்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகிற போது இந்த நிதி உதவித் திட்டத்தைப் பொறுத்த வரைக்கும் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்று தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் இந்தி மொழி எதிர்ப்பு என்பது அல்ல. இதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். சட்ட ரீதியாக எழுந்த பிரச்சினைகள் முன்னர் என்ன என்பதைப் பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்காக தமது தியாகப் பாங்கினை அல்லது சான்றாண்மையினை எவ்வகையிலேனும் வெளிப்படுத்தியவர்களுக்கு இந்த உதவித் தொகை வழங்க வேண்டும் என்ற முடிவில்தான் இது கொண்டு வரப்பட்டிருக் கிறது. விரைவில் இது சட்டமானவுடன் மிக விரைவில் சிறிதும் காலதாமதமின்றி இத்தகைய தமிழ்ச் சான்றோர்களுக்கு இந்த உதவியை வழங்க அரசு துரித நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அன்புச் சகோதரர் திரு. பாரதி அவர்கள் பேசுகிறபோதும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசுகிற போதும் மும்மொழித் திட்டத்தை இந்த அரசு ஏற்குமா என்ற ஒரு வினாவைத் தொடுத்துவிட்டு விட்டார்கள். பதில் அளிக்க வேண்டியது அரசின் சார்பில் எனது கடமை. இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையான 2 மொழிக் கொள்கையைத் தொடர்ந்து கடைபிடிக்கும். அதிலே சிறிதும் நழுவாது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பிலும், அரசின் சார்பிலும் நான் ஆணித்தரமாக இங்கு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தி திணிப்பு என்பது இல்லை என்று மாண்புமிகு உறுப் பினர் திரு. பாரதி அவர்கள் கூறினார்கள். அரசின் சார்பில் அதை நான் மறுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசியல் சட்டத் திலேயே இந்தியைப் பரப்புவதற்கு, கட்டாயமாகப் பரப்புவதற்கு இந்திய துணைக் கண்டத்தினுடைய கலாச்சாரப் பண்பாடு களுடன் இந்தி மொழியைப் பரப்பவேண்டும் என்பது அரசியல் சட்டத்திலேயே தெளிவாக்கப்பட்டிருக்கிற உண்மையினை மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரதி அவர்கள் மறுக்க மாட்டார் கள் என்று நான் கருதுகிறேன். இந்த நிலையில் இந்திய அரசைப் பொறுத்த வரைக்கும், மத்திய அரசைப் பொறுத்த வரைக்கும் பல்வேறு காலக்கட்டங்களில் எந்த அளவுக்கு இந்தி யைத் திணித்து வருகிறது, அதைத் திணிப்பதிலே தீவிரத்தைக் காட்டி வருகிறது என்பதை நாடு அறியும். வானொலியாக இருந்தாலும் சரி, தொலைக்காட்சியாக இருந்தாலும் சரி, மத்திய அரசினுடைய அமைப்புகளாக இருந்தாலும் சரி, மாநிலத்தில் இருக்கிற மத்திய அரசின் அமைப்புகளாக இருந்தாலும் சரி, ஒட்டுமொத்தமாக மாநிலத்தில் தற்போது இருக்கிற நிர்வாகத் திற்கு வேண்டிய ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.ஏ.எஸ். அண்டு அலைடு எக்சாமினேஷனுக்கு வேண்டிய தேர்வுகளாக இருந்தாலும் சரி, அங்கு எந்த அளவுக்கு அவர்கள் இந்தியைப் பரப்பி வருகிறார்கள் என்பது வெட்ட வெளிச்சமான ஒரு உண்மை, இந்த நாட்டுக்குத் தெரிந்த உண்மை. எனவே நமது அரசைப் பொறுத்தவரைக்கும் அரசியல் சட்டத்திலே இருக்கிற விதிகளைப் பயன்படுத்திக் கொண்டு மத்திய அரசு இந்தி மொழியைக் கட்டாயமாகப் பரப்ப வேண்டும் என்று இருக்கிற விதியைப் பயன்படுத்திக்கொண்டு ஒரு புறம் இந்தி மொழியைப் பரப்பிக்கொண்டு வருகிறார்கள்.

[திரு. சி. பொன்னையன்] [1987 நவம்பர் 18

இந்தி மொழியைத் திணிக்கமாட்டோம் என்று பண்டித நேரு அவர்கள் வாக்குறுதி கொடுத்து இருந்தும், பண்டித நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதியைச் சிறிதும் மதிக்காமல் அதை உதாசீனப்படுத்திவிட்டு, புறக்கணித்துவிட்டு, பண்டித நேரு அவர்களுடைய காலத்திற்குப் பிறகு படிப்படியாகத் தொடர்ந்து இந்தி கட்டாயமாக அனைத்து மட்டத்திலும் திணிக்கப்பட்டு வருகிறது என்பதுதான் இந்த அரசினுடைய திண்ணமான முடிவு. அதை இந்த அரசு எல்லாவிதத்திலுமே எதிர்த்து வருகிறது. தொடர்ந்து எதிர்க்கும் என்பதையும் நான் இங்கே தெளிவு படுத்த விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் அதைத்தான் கேட்டார்கள். இருமொழிக் கொள்கையைத் தொடர்ந்து அரசு கடைப்பிடிக்குமா என்று கேட்டார்கள். இரு மொழிக் கொள்கையைத்தான் இந்த அரசு என்றும் தொடர்ந்து கடைப்பிடிக்கும். இந்தியத் துணைக் கண்டத்திலே பிறந்திருக்கின்ற மக்களும், எழு மாநிலங்களைச் சார்ந்த குழந்தைகள், மாணவர்கள் மட்டும் இருமொழிகளைப் படிக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்கியிருக்கிற அரசியல் சட்டம், இந்தியத் துணைக் கண்டத்தினுடைய பிற மாநிலங்களிலே இந்தி பேசாத மாநிலங்களிலே இருக்கின்ற குழந்தைகள் மூன்று மொழிகளைப் படிக்கக் கூடிய ஒரு கட்டாய நிலையை உருவாக்கியிருப்பது, ஒரு கண்ணிலே வெண்ணெயையும் மறு கண்ணிலே சுண்ணாம்பையும் வைத்து, பாரத மாதாவினுடைய குழந்தைகளுக்குள்ளாகவே பாகுபாட்டை அனைத்துத் துறையிலேயும் எதிர்காலத்திலே உருவாக்கக் கூடிய ஒரு நிலையை உருவாக்கும். இதை மைய அரசுக்கு அவ்வப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்ணா வழி நின்று, தங்களுடைய கருத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். இந்தக் கருத்தை அரசு தொடர்ந்து வலியுறுத்தும் என்பதனையும் எடுத்துச் சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவினை அவை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

(பிற்பகல் 3-00)

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் கல்வியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம், இந்திய [illegible] அரசாங்கம் இங்கே திணிப்பதற்கான முயற்சிகளை எடுப்பதை [illegible] என்று சொல்கிறார்கள். அதேபோன்று தமிழை அகில இந்தியா முழுமைக்கும் பரப்புவதற்கு நம்முடைய துறை



1987 நவம்பர் 18] [திருமதி டி. யசோதா]

எந்த அளவிற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளது என்பதைக்கூட தெரிவித்தால், கொஞ்சம் நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசைப் பொறுத்தவரைக்கும் 7 மாநிலங்களுக்கு மட்டுமே சொந்தமான இந்தி மொழியை மீதமுள்ள 22 மாநில மக்கள் மீது திணிக்கவேண்டுமென்ற உணர்வோடு, இந்தி வெறி உணர்வோடு, திணித்து வருவதற்கு அரசியல் சட்டத்திலே அவர்கள் அதிகாரத்தை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகிற போது, நேரு பண்டிதர் அவர்கள் கொடுத்த உறுதிமொழியைச் சட்டமாக்க வேண்டுமென்று சொன்னதற்குக் காரணம் இதுதான். 351 ஆவது பிரிவிலே,

It shall be the duty of the Union to promote the spread of the Hindi language, to develop it so that it may serve as a medium of expression for all the elements of the composite culture of India.

மாண்புமிகு உறுப்பினர்களாக இங்கே இருக்கின்றவர்கள் அனைவரும் தமிழர்கள், யாருமே இந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் அல்ல. இந்த அளவிற்கு விபரீதமான ஒரு பிரிவு அரசியல் அமைப்புச் சட்டத்தின் 351 ஆவது பிரிவிலே இருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும்.

It shall be the duty of the Union to promote the spread of the Hindi language, to develop it so that it may serve as a medium of expression.

என்று தெளிவாக்கப்பட்டிருக்கிறது. நாளடைவில் ஏற்கனவே நான் அவையிலே சொன்னதுபோன்று, குழந்தை பிறக்கும் போதே பெற்ற தாயை அம்மா என்று அழைப்பதற்குப் பதிலாக 'மா' என்று அழைப்பதற்கும், வளர்கின்ற குழந்தைகள் அப்பா என்று அழைப்பதற்குப் பதிலாக "பிதாஜி" என்றுகூட அழைப்பதற்குமான நோக்கத்தில்தான்—

to serve as a medium of expression for all the elements of the composite culture of India

என்று தெளிவாக்கப்பட்டிருப்பதை வைத்துக்கொண்டுதான் நேரு பண்டிதர் தந்த உறுதிமொழியைச் சட்ட ரீதியாக அரசியல் சட்டத்திற்கு 351 ஆவது பிரிவிற்கு திருத்தத்தைக் கொண்டுவர மைய அரசு இணங்கவில்லை.

[திரு. சி. பொன்னையன்] [1987 நவம்பர் 18

தமிழகத்தில் இருக்கின்ற தமிழன் தன் 'தாய்மொழியைக் காக்க வேண்டும். இந்தி மொழித் திணிப்பைத் தடுக்க வேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் இந்த உணர்வோடு மத்திய அரசை அணுக வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். 351 ஆம் பிரிவைப் பயன்படுத்திக்கொண்டு, ஒருபுறம் இந்தி மொழியைத் திணிக்கவில்லை என்று வாயளவில் சொல்லிக்கொண்டு, வெளிப்படையாக இந்தி மொழியைச் சந்துபொந்துகளில் எல்லாம் திணிக்கக்கூடிய பாங்கினை 351 பிரிவு செலுத்துகிறது. ஆனால் ஒரு மாநில மொழியினை. மாநில மொழியிலிருந்து பிற மாநில மொழியில் பரப்புவதற்கு அரசியல் சட்டத்தில் நமக்கு இந்த வசதி இல்லை. 351 ஆவது பிரிவைத் திருத்தி—இதைத்தான் நாங்கள் கேட்கிறோம். இதைத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்கிறார்கள். இதைத்தான் மறைந்த நம்முடைய அண்ணா அவர்களும் கேட்டார்கள். 351 ஆவது பிரிவைத் திருத்தி

**"It shall be the duty of the Union Government to promote the spread of the Hindi language"**

என்பதற்குப் பதிலாக இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற ஆங்கிலத்தையும் உள்ளடக்கிய இணைப்பை அதுவும் இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற ஆங்கிலோ-இந்தியர்களுடைய தாய்மொழி என்ற காரணத்தால் பல நாடுகளாக இருந்த இந்தியாவை ஒரு நாடாக உருவாக்கி ஒற்றுமையை உருவாக்கிய மொழி ஆங்கில மொழி என்ற காரணத்தால் அதையும் சேர்த்து

**"It shall be the duty of the Union Government to promote the spread of all the fifteen languages, including the English language"**

என்று அரசியல் சட்டத்தை மைய அரசு திருத்தும் என்றால், மாண்புமிகு உறுப்பினர்களும், இந்திய தேசிய காங்கிரஸைச் சேர்ந்தவர்களும் மத்திய அரசை வலியுறுத்தி அப்படித் திருத்துவீர்கள் என்றால், தமிழ் மொழியை இந்தியத் துணைக் கண்டத்தினுடைய அனைத்துப் பகுதிகளுக்கும் பரப்பக்கூடிய வாய்ப்பு உருவாகும். அந்த வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று இந்திய தேசிய காங்கிரஸைத் தமிழக அரசின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.



1987 நவம்பர் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 56/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 56/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

### (ஏ) தமிழ்நாடு கடன் நிவாரண (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 57/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

*17—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

திரு. எம். செல்லமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் நிவாரண திருத்தச் சட்டத்தில், அதனுடைய காரண-நோக்கத்தில் இந்த 1982 ஆம் வருடம் இயற்றப்பட்ட சட்டத்தினுடைய நோக்கங்களை இன்னும் கிராமபுறத்தில் இருக்கக்கூடிய மக்கள் சரியாகப் புரிந்துகொள்ளாத காரணத்தினால் மேலும் ஓர் ஆண்டு நீட்டக்கூடிய இந்தச் சட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களை எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்தச் சட்டத்திலே குறிப்பிட்டதுபோல, 5 ஆண்டு காலத்தில் இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தைப் புரிந்துகொள்ளாமல் கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களைப் புரிய வைப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன, அவைகளினுடைய பயன்கள் என்ன விளைவுகளைத் தந்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தை அறிந்துகொள்வது ஒருபுறம் இருந்தாலும், இந்தச் சட்டத்தினால் பயன்கள் கிடைக்கவில்லை என்று கருதினால்கூட இந்தச் சட்டங்களுக்கான மனுக்களைக் கொடுப்பதிலே சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவே அந்தச் சிக்கல்களையெல்லாம் நிவர்த்தி செய்து, ஏழை எளிய மக்களுக்கு ஒரு சீரான கடன் நிவாரணம் கிடைக்கக்கூடிய வகையில் சட்டத் திருத்தத்தை அமைக்க வேண்டும் எனக் கேட்டு வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

திரு. பொ. உத்திராபதி: பேரவைத் தலைவர் அவர்களே, கடன் நிவாரணம் வழங்கும் சட்டம் மேலும் 1987 ஆகஸ்ட் 23-க்கு அப்பால் ஒரு ஆண்டிற்கு நீட்டித்துக் கொடுப்பது என்ற ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறீர்கள். இந்தச் சட்டத்தை நாங்கள் முழுவதுமாகத் தொடர்ந்து ஆதரித்து வருகிறோம். இதிலே எதிர்ப்பே கிடையாது. ஏழை எளிய மக்களுக்கு கடன் பட்டவர்களுக்கு, [illegible] அட்டு [illegible]வர்களுக்கு, திரும்ப அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதுதான் இந்தச் சட்டத்தினுடைய நோக்கம். [illegible] நிறைவேற்றப்பட்டு வந்திருக்கிறது என்பதைப் பார்ப்போமானால், இன்னும்





கிராமப்புறத்தில் உள்ளவர்களுக்கு இந்த விவரம் தெரிந்துகொள்ள முடியாத ஒரு நிலை இருப்பதால் இதை மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டித்துக் கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது.

(பிற்பகல் 3-10)

சாதாரண மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால், அங்காங்கு இருக்கக்கூடிய வட்டாட்சியர்கள் அல்லது அவர்களுக்குக்கீழ் பணியாற்றக்கூடியவர்களுக்கு அந்த மனு கொடுக்கப்பட்டு, அது விசாரணைக்கு வருகிறபோது, ஒரு குடும்பத்தில் விவசாயத் தொழிலாளர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு, இன்றைக்கு சர்க்கார் கொடுக்கக்கூடிய அந்த விவசாயக் கூலி ரூ. 11-ஐக் கணக்கில் எடுத்து—ஒரு ஆண்டில் அவர்களுக்கு வேலை கிடைக்கிற நாள், இதற்கு முன்பு 4 மாதம் கிடைத்தது, இப்போது அவர்களுக்கு ஒரு மாதம்கூட வேலை தொடர்ந்தாற்போல் இல்லை—ஆனால் வட்டாட்சியர்கள் அந்த மனுவைப் பெற்றவுடன் கணக்குப் போடுவது, அந்த ஒரு நாள் கூலி ரூ. 11-ஐக் கணக்குப் போட்டு, அந்தக் குடும்பத்தில் எத்தனை பேர் இருக்கிறார்களோ, ஆண்கள், பெண்கள்—அதையும் அதாவது [illegible]ஐயும், 6-ஐயும் கூட்டி, மொத்தக் கணக்கைப் போடுகிறபோது, அந்தக் கடன் சலுகை அந்தக் குடும்பத்திற்குக் கிடைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதனாலேதான் கிராமப்புற மக்கள் மனுவை அதில் கொடுத்துக் கொடுத்து, பல தடவை அலைந்து பார்த்துவிட்டு அதில் பலன் இல்லை என்று தெரிந்ததற்குப் பிறகு அதற்கு ஏன் கொடுத்து, ஒரு நாள் வேலை வேறு கெட்டுப் போக வேண்டும் என்று நினைக்கிற அவல நிலை இருக்கிறது. அதனால்தான் மனுக்கள் தாலுக்கா அலுவலகத்திற்கு வருவது நின்றுவிட்டது. ஆகவே, அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, குடும்ப அடிப்படையில் வருமானத்தைக் கணக்குப் போடாமல், ஒரு விவசாயத் தொழிலாளர் கடன் பெற்று இருந்தார் என்றால் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்களுக்கு எத்தனை நாள் ஒரு ஆண்டில் வேலை இருக்கிறது என்று அந்தக் கணக்கை எடுக்க வேண்டுமே தவிர, ஒரு ஆண்டுக் கணக்கைப் போட்டால், அந்தப் பணத்தைக் கூடுதலாகப் போடுகிறபோது சர்க்கார் கொடுக்கிற சலுகை அவர்களுக்குக் கிடைப்பது இல்லை. அதனாலே அவர்கள் அலைந்து பார்த்துவிட்டு, இந்த

சலுகை நமக்கு இல்லை, ஆகவே நாம் ஏன் அலையவேண்டும் என்ற நோக்கத்தில்தான் இன்றைக்கு கிராமத்திலிருக்கிற வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள் அந்த மனுக்களைக் கொடுக்காமலேயே நின்றுவிட்டார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து வைத்து, கிராமப்புறத்தில் பாதிக்கப்படக்கூடியவர்கள், சலுகை பெறக்கூடிய மக்கள், இந்தச் சலுகையை ஏன் பெறாமல் நின்று விட்டார்கள், அதற்கு என்ன அடிப்படைக் காரணம், அதிகாரிகளுக்கும், சம்பந்தப்பட்ட பாதிக்கப்பட்டவர்களுக்கும் உறவு முறையில் என்ன சிக்கல் என்கிற நிலவரத்தைப் பற்றி பேசி அதில் ஏற்பட்டிருக்கக்கூடிய அந்தத் தடங்கலை நீக்கினால் உண்மையிலேயே அந்தக் கிராமப்புற ஏழை-எளிய மக்களுக்குச் சர்க்கார் கொடுக்கிற சலுகை போய்க் கிடைக்கும். இல்லாவிட்டால் இதை ஒவ்வோர் ஆண்டும் நாம் நீட்டித்துக்கொண்டே போவோமே தவிர, இந்தச் சட்டத்தினுடைய பலன் கோடிக்கணக்கான மக்களுக்குக் கிடைக்காத அவல நிலைதான் ஏற்படும். அதை அமைச்சரவர்கள் எதிர் காலத்தில் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

திரு. எ. எஸ். எ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான ஒரு சட்ட முன்வடிவு இப்போது அவையிலே மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கிறது. இதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், காரண—நோக்க விளக்கத்தில், கிராமப்புறப் பகுதியில் உள்ள எந்த மக்கள் நலனைக் கருதி சட்டம் இயற்றப்பட்டதோ, அந்த மக்கள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைப் பற்றியும், அதன் கீழ் நிவாரணம் பெறுவதற்காக வட்டாட்சியரிடம் விண்ணப்பங்களை அவர்கள் எந்தக் கால அளவில் செய்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் இன்னமும் அறியாமல் இருப்பதை இது காட்டுகிறது' என்று சொல்லி இருக்கிறது. அந்த நோக்க—காரண விளக்கம் சரியில்லை என்பது என்னுடைய கருத்து.

அரசு இப்போது வானொலிப் பெட்டிகள் மட்டுமல்ல, டி.வி. யையும் கொடுத்து இருக்கிறது கிராமங்களுக்கு. ஒவ்வொரு செய்தியும் அன்றாடம் கிராம மக்களுக்குச் சென்றடைந்து விடு கிறது. ஆனால் நீங்கள் சொல்கிறீர்கள் 1982 ஆம் வருடத்





திலிருந்து 1987 ஆம் வருடம் வரை இன்னும் கிராமத்தில் இருக்கிற மக்கள் அறிவு பெறவில்லை என்று சொல்கிறீர்கள். இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்தச் சட்டத்தின் காரண நோக்க விளக்கத்தில் வேறு மாதிரி போடலாம். நாங்கள் என்ன சொல்ல விரும்புகிறோம் என்றால், 'அரசு ஏழைகளுக்கு, கடன்பட்டவர்களுக்கு நிவாரணம் செய்ய விரும்புகிறது' என்று நீங்கள் போட்டிருந்தால் ஒத்துக்கொள்ளலாம். இன்னும் அறிவு பெறவில்லை, தெரிந்துகொள்ளவில்லை என்று சொன்னால் அது சரியாக இல்லை என்பது என்னுடைய கருத்து.

நீங்கள் நிவாரணம் செய்ய விரும்புகிற அரசாக இருந்தால், ஏழைகளுக்கு நிவாரணம் செய்ய விரும்புகிறது என்று போட்டிருந்தால் சரியாக இருக்கும். அதேபோல் யார், யார் எல்லாம் இதிலிருந்து நிவாரணம் பெறுகிறார்கள் என்று சொன்னால், அடகுக் கடைக்காரர்கள், அடகு பிடிப்பவர்கள் எல்லாம், லைசென்சு வைத்துக்கொண்டிருப்பவர்களுக்குக் கவலை கிடையாது; லைசென்சு இல்லாமல் இருப்பவர்களைத்தான் பாதிக்கும். ஏழைகளை எப்படி பாதிக்கிறது என்று சொல்கிறோமோ அதே மாதிரி இவர்களையும் பாதிக்கும்.

சாதாரணமாக ஒரு விதவைப் பெண்மணி, வயதான மூதாட்டி இரண்டு பால் மாடுகளை வைத்து சம்பாதியம் பண்ணிக்கொண்டிருப்பார்கள். அந்த அம்மாவிடம் ஆயிரம், இரண்டாயிரம் மிச்சப்பட்டிருந்தால் அவர்களிடம் கொடுத்து வைத்து இருப்பார்கள். அதைத் திருப்பி வாங்க முடியவில்லை, இந்தச் சட்டம் வந்ததனால், பணம் போச்சு. அந்தமாதிரி ஒரு கஷ்டம் இருக்கிறது. அதை நீங்கள் பார்க்கவேண்டும். அவர்கள் ஏழைகள். அதை வாங்கித்தான் அவர்கள் சாப்பிட முடியும். அதுவும் போச்சு. இந்தச் சட்டத்திலே இன்னொரு திருத்தம் இருக்கிறது. என்ன இலாபம் இருக்கிறது, விவசாயிகளுக்கு, ஏழைகளுக்கு என்றால், வசதி படைத்த பணக்காரர்கள் இருக்கிறார்களே, அவர்கள் வட்டாட்சியரைப் போய்ப் பார்த்து, எனக்கு இவ்வளவுதான் நிலம் இருக்கிறது என்று எழுதிக் கொடு ஐயா என்று வாங்கி, கோர்ட்டிலே புரொட்யூஸ் பண்ணி விடுகிறார்கள். 25 ஆயிரம் ரூபாய்க்குக் கீழே இருந்தால் அவர் ஒன்றும் செய்ய

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1987 நவம்பர் 18

முடியாது; ஆனால் அவர் 1 லட்சத்திற்கு மேல் வைத்திருப்பார். இன்னொரு வேடிக்கையான விஷயம் என்னவென்றால், 22 ஆயிரம் ரூபாய்க்கு பாண்டியன் கிராம வங்கியில் அடமானம் வைத்திருக்கிறார். ஆனால் அவருக்கு சொத்து 10 ஆயிரம் ரூபாய்க்குத்தான் இருக்கிறது என்று சொல்லி, கிராம நிர்வாக அதிகாரி மற்றும் வட்டாட்சியர் சான்றிதழ் கொடுக்கிறார்கள். 22 ஆயிரம் ரூபாய்க்கு பாண்டியன் கிராம வங்கியிலே சொத்து அடமானம் வந்தால், அது 50 ஆயிரம் ரூபாய் வரைக்கும் விலை போகும். ஆனால் அவருடைய சொத்தின் மதிப்பு 10 ஆயிரம் ரூபாய் என்று சான்றிதழ் கொடுக்கப்படுகிறது. இப்படிப்பட்டவர்கள்தான் இந்தச் சட்டத்தின் மூலமாகப் பலன் பெறுகிறார்கள். வசதி படைத்தவர்கள், திட்டம் போட்டு வாங்கிய பணத்தை மோசடி செய்பவர்கள்தான் வட்டாட்சியரின் சான்றிதழ் வாங்கி, அவர்கள்தான் பலன் பெற்று வருகிறார்களே தவிர, ஏழைகளுக்கு இது முறையாகக் கிடைக்கவில்லை.

இன்னொன்றும்கூட நான் சொல்வேன்; நீங்கள், லைசன்ஸ் எடுத்திருப்பவர்களை மட்டும் ஏன் விட்டு வைத்திருக்கிறீர்கள்? இந்த அரசு என்ன சொல்லியிருக்கிறது? 200 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். எழுதி வைத்திருப்பதைத் தள்ளுபடி செய்கிறீர்கள்; அசலைத் தள்ளுபடி செய்யவில்லையே. ஏன் அதை மட்டும் விடாமல் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்? பிப்ரவரி மாதத்திற்குப் பிறகு வட்டி உண்டு என்கிறீர்கள். அதை ஏன் தள்ளுபடி செய்ய மாட்டேன் என்கிறீர்கள்? சாதாரண ஏழை மக்கள், வணிகப் பெருமக்கள் போன்றவர்களைப் பாதிக்கிறது இந்தச் சட்டம். இந்தச் சட்டத்தினாலே ஏழைகள் பயன் பெறவில்லை. விவரம் தெரிந்த விவசாயிகள், விவரம் தெரிந்தவர்கள்தான் இதனால் பயன் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சட்டமே சரியாக இல்லை. எனவே, இந்தச் சட்டத்தை வேறு மாதிரியாகத் திருத்தவேண்டுமென்று சொல்வதோடு, இந்தச் சட்ட திருத்தத்திலே நீங்கள் சொல்லியிருக்கிற, இன்னும் கிராமங்களிலே இருக்கிறவர்களுக்கு விவரம் தெரியவில்லை என்று சொல்லியிருக்கிற ஷரத்தை நீங்கள் எடுக்கவேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, உரையை முடிக்கிறேன்.



1987 நவம்பர் 18]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்களும் பிறரும் பேசுகிறபோது இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும், ஏழைகளின் நலன் கருதி, இன்னும் சில மாற்றங்களோடு இது கொண்டுவரப்படுகிறபோது அதிக பலனை இது சேர்க்கும் என்ற கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். 4,800 ரூபாய்க்கு மேல் இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தின் அடிப்படையில், கிட்டத்தட்ட 66 லட்சத்து 21 ஆயிரம் ரூபாய் வரைக்கும் இதுவரையும் 23,646 நபர்களுக்கு ஒட்டுமொத்தமாக வழங்கப்பட்டிருக்கிறது. இங்கே இருக்கின்ற பிரச்சினை இந்தச் சட்டத்தின் அடிப்படையில், நலிந்த பிரிவிலே இருக்கின்ற மக்கள் அறியாமையின் காரணமாக, அப்பாவித்தனத்தின் காரணமாக வளம் படைத்தவர்களால் நசுக்கப்பட்டிருக்கின்ற மக்கள் இதனுடைய பலனைப் பெறவேண்டுமென்ற நோக்கோடுதான் ஒவ்வொரு ஆண்டும் இது நீட்டிக்கப்படுகிறது. இதற்குப் போதிய விளம்பரம் ஆண்டுக்காண்டு செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் ஆலோசனை கூறியிருக்கிறார்கள், தொலைக்காட்சி வானொலியைப் பயன்படுத்த வேண்டுமென்று. இதில் இன்னும் சற்று அதிகமான முறையிலே விளம்பரத்திற்காக நிதியை ஒதுக்கி பட்டிதொட்டிகளில் இருக்கின்ற மக்களுக்கு இதனுடைய முக்கியத்துவத்தைத் தெரிவிக்கக்கூடிய அளவிற்கு, விளம்பரத்திற்கு நடவடிக்கைகளை அரசு எடுக்க இருக்கிறது. இந்தச் சட்டம் நீட்டிப்பு தரப்படவில்லையென்றால் லட்சக்கணக்கான ஏழைகள், நலிந்த பிரிவு மக்கள், குறிப்பாக வட்டிக்குக் கடன் தருகின்ற வட்டிக் கடைக்காரர்களிடமிருந்து பணத்தைப் பெற்று, அது வட்டியும் முதலுமாகச் சேர்ந்து பலவாகப் பெருகி அவர்கள் மிகவும் வேதனையான சூழ்நிலைக்கு உள்ளாக்கப்படக்கூடிய நிலை இருக்கின்றது. அவர்களுக்கு ஒருவித பாதுகாப்பும் இல்லாத நிலை உருவாகி அவர்கள் அடகு வைத்திருக்கின்ற பொருள்கள் அல்லது எந்தப் பொருளின் மேல் பணத்தைப் பெற்றிருக்கிறார்களோ அந்தப் பொருள்கள்கூட இழக்கக்கூடிய ஒரு சூழல் கட்டாயம் உருவாகிவிடும் என்ற காரணத்தாலும், அந்த நிலை கூடாது என்பதற்காகவும் மேலும் தொடர்ந்து இந்தச் சட்டம் நீட்டிக்கப்படுகிறது. இதனால் அறியாமையில் இருக்கிற மக்கள் விழிப்புணர்வு பெற்று, சட்டத்தைப் பயன்படுத்தி பலனைப் பெறவேண்டுமென்ற நோக்கோடும் இந்தச் சட்டம்

[திரு. சி. பொன்னையன்] [1987 நவம்பர் 18

கொண்டு வரப்பட்டிருக்கிறது; நீட்டிப்பு தரப்பட்டிருக்கிறது. விதிகளிலே தக்க திருத்தங்களைக் கொண்டு வந்து, ஏழை மக்களுக்கு இன்னும் அதிக எண்ணிக்கையில் அதன் பலன் சென்று சேரக்கூடிய அளவிற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ அதை அரசு எடுக்கும். இன்னும் ஒரு விரிவான—காம்ப்ரெஹென்சிவ் லெஜிஸ்லேஷன்—சட்டத்தைக் கொண்டு வந்து நலிந்த ஏழைகளுக்கு, வளம் படைத்தவர்களால், குறிப்பாக வட்டிக்கடைக்காரர்களால் பாதிப்புக்குள்ளாகி இருக்கிற ஏழை மக்களுக்கு நிவாரணம் தரக்கூடிய ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 3-20)

அப்படி ஒரு காம்ப்ரெஹென்சிவ் லெஜிஸ்லேஷன்—விரிவான சட்டம் ஒன்றை மக்கள் நலன் கருதி கடன் நிவாரணம் அளிப்பதற்காகவே அரசு கொண்டுவரும் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை அவை ஏற்று நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 57/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.



1987 நவம்பர் 18]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 57/1987) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## (ஐ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 58/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

---

* 17—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 58/1987) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(ஒ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.**

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 59/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 59/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

---

* 17—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



**(ஒ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (செல்லத்தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவு, 1987.**

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (செல்லத்தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 60/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (செல்லத்தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 60/1987) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

---

* 17—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 18

(vi) அரையாண்டு ஒன்றிற்கு தற்போது செலுத்தப்பட்டு வரும் வரித் தொகை;

(vii) வரி விதிப்பிற்குரிய இனமானது குடியிருப்பு நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றதா/குடியிருப்பு அல்லாத நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றதா;

(viii) வரி விதிப்பிற்குரிய இனமானது சொந்தக்காரரால் முழுமையாக வாடகைக்கு விடப்பட்டுள்ளதா அல்லது ஒரு பகுதி சொந்தக்காரரின் குடியிருப்பிலிருந்து ஒரு பகுதி வாடகைக்கு விடப்பட்டுள்ளதா என்பது; மற்றும்

(ix) ஒவ்வொரு ஆண்டுக்கும் வாடகையாகவோ அல்லது குத்தகையாகவோ பெறப்படும் தொகை.

2. நபரெவரேனும், அறிவிக்கை செய்யப்பட்ட காலத்திற்குள் விவர அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்யத் தவறினால், வரிவிதிப்பிற்குரிய இனத்திற்குள் உள்ளே நுழைந்து அதை ஆய்வு செய்யவும், விவர அறிக்கையினைத் தயாரிக்கவும் வரித் தண்டலர் (Bill Collector) படி நிலைக்குக் குறையாத நபரெவருக்கும் ஆணையரானவர் அதிகாரம் அளிக்கலாம்.

3. ஆணையர், பின்வருவனவற்றைக் கருத்திற்கொண்டு, சொத்திற்கு வரிவிதிப்பு செய்தல் வேண்டும், அதாவது—

(1) 1978 அக்டோபர் 1-ம் நாளன்று வரிவிதிப்பிற்குரிய இனத்தின் ஆண்டு மதிப்பு;

(2) தாக்கல் செய்யப்பட்ட விவர அறிக்கையில் கொடுக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில், சொந்தக்காரரால் அல்லது குடியிருப்பாளரால் செலுத்தப்படத்தக்க சொத்து வரி; மற்றும்

(3) மன்றத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறி முறைகள் எவையேனுமிருப்பின் அவற்றின் அடிப்படையில் சொந்தக்காரரால் அல்லது குடியிருப்பாளரால் செலுத்தப்படத்தக்க சொத்து வரி.

4. (1) வரிவிதிப்பிற்குரிய இனம் தொடர்பான எல்லா விவரங்களும் செலுத்தப்படத்தக்க சொத்து வரித் தொகையும் உள்ளடங்கியதாக இருக்கவேண்டிய ஒரு சொத்து வரி அட்டை (Property tax card) இந்த விதியின்படி விவர அறிக்கையைத்



1987 நவம்பர் 18] [திரு. ஆர். எம். வீரப்பன்]

தாக்கல் செய்திருக்கிற சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுதல் வேண்டும், மற்றும் அத்தகைய அட்டையானது அத்தகைய சொந்தக்காரருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு அஞ்சல் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) ஆணையர், சொத்து வரி அட்டையில் குறித்துரைக்கப்பட்ட சொத்து வரியைப் பெற்றுக் கொள்ளுதலும், மேற்சொல்லப்பட்ட அட்டையிலும் மற்றும் மாநகராட்சியால் பேணப்பட்டு வரும் வரிவிதிப்புப் புத்தகத்திலும் தேவையான பதிவுகளைச் செய்தலும் வேண்டும்.

(3) சொத்து வரி அட்டையில், சொத்து வரியில் திருத்தம் எதுவும் செய்யப்பட்டதை ஒட்டியோ, அல்லது ஆணையரின் ஆணைக்கு எதிராக மேல்முறையீட்டில் பிறப்பிக்கப்பட்ட ஆணையொன்றை ஒட்டியோ திருத்தம் ஏதேனும் செய்யப்படுவதாக இருப்பின், அத்தகைய திருத்தம எதுவும், சொத்துவரி அட்டையிலும், வரிவிதிப்புப் புத்தகத்திலும் ஆணையராலோ அல்லது இதன் பொருட்டு அவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் எவராலுமோ செய்யப்பட்டுச் சான்றொப்பமிடப்படுதல் வேண்டும்.

(4) சொத்துவரி அட்டையானது, ஒரு பொதுத் திருத்தத்தின் போதோ (General Revision) அல்லது இதன் பொருட்டு அரசு பணிக்கலாகிறவாறு அதற்கு முன்னரோ வரி விதிப்பானது திருத்தப்படுகின்ற வரையிலும் செல்லத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

(5) ஆணையர், வரிவிதிப்பிற்குரிய ஒவ்வோர் இனத்தைப் பொறுத்தும் ஒரு பொதுத் திருத்தத்தை அடுத்து பின்பும் மற்றும் அடுத்த பொதுத் திருத்தமொன்றிற்கு முன்பும், சொந்தக்காரரால் அல்லது குடியிருப்பாளரால் தாக்கல் செய்யப்பட்ட விவர அறிக்கையில் கொடுக்கப்பட்ட விவரங்களைச் சரிபார்க்கப்படுவதற்கு (Verification) ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(6) 5 ஆம் விதியின்படி சரிபார்த்தல் செய்யப்பட்டதன் விளைவாக, சொந்தக்காரரால் அல்லது குடியிருப்பாளரால் தாக்கல் செய்யப்பட்ட விவர அறிக்கையில் அளிக்கப்பட்ட விவரங்களில் முரண்பாடு ஏதேனும் காணப்பட்டால், ஆணையர்,

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 18

அத்தகைய சொந்தக்காரருக்கு அல்லது குடியிருப்பாளருக்குக் கேட்கப்படுவதற்கு நியாயமான வாய்ப்பொன்றை அளித்ததற்குப் பின்பும் அவரிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபணை ஏதேனுமிருப்பின் அதைப் பரிசீலித்ததற்குப் பின்பும் எந்தத் தேதியில் வரிவிதிப்பு செய்யப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து அந்த வரிவிதிப்பை மாற்றியமைத்து, வரி நிலுவைகளை வசூலிக்கலாம்".

(2) இருந்துவரும் V ஆம் பாகத்திற்குப் பதிலாக, பின்வருவன அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :—

### V-ஆம் பாகம்

### வரிவிதிப்பைத் திருத்துதல்.

12. (1). மாற்றல் தீர்வை (Transfer duty) மற்றும் மாக்கட்டை மீதான வரி தொடர்பான ஆணைகளல்லாத, இந்தச் சட்டத்தின்படி ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட பிற வரிவிதிப்பு ஆணையால் மனநிறைவு கொள்ளாத நபர் எவராலேனும் முன்னிடப்பட்ட மேல்முறையீட்டை விசாரிப்பதற்கும் முடிவு செய்வதற்குமாக, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வரிவிதிப்பு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் (இதன் பின்பு இந்தப் பாகத்தில் "தீர்ப்பாயம்" எனக் குறிப்பிடப்படுவது) இருத்தல் வேண்டும்.

(2) தீர்ப்பாயம், சார்நீதிபதி படிநிலைக்குக் குறையாத ஒரு நீதித் துறை அலுவலரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) தீர்ப்பாயத்தின் வரையறைகளும் நிபந்தனைகளும் அரசினால் தீர்மானிக்கலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

(4) தீர்ப்பாயத்திற்கு வழங்கப்படத்தக்க சம்பளமும் பிற படித்தொகைகளும், மாநகராட்சியின் நிதியங்களிலிருந்து செலவிடப்படுதல் வேண்டும்.



1987 நவம்பர் 18] [திரு. ஆர். எம். வீரப்பன்]

13. I பாகத்தில் உள்ள 1-C விதியின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட காலத்திற்குள் விவர அறிக்கையைத் தாக்கல் செய்யத் தவறுகிற நபர் எவரும், ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட வரிவிதிப்பு ஆணை எதற்கும் எதிராக மேல்முறையீடு செய்வதற்கு உரிமைத் தகுதியுடையவராகமாட்டார்.

14. மேல்முறையீடு எதுவும், இருந்துவரும் வரியையும், மற்றும் இருந்துவரும் வரிக்கும் திருத்தத்தின்போது ஆணையரால் விதிக்கப்பட்ட வரிக்கும் இடையே உள்ள வேறுபாட்டில் ஐம்பது விழுக்காட்டையும் மேல்முறையீட்டாளர் மாநகராட்சியில் வைப்பீடு செய்தாலன்றி, தீர்ப்பாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படுதலாகாது.

15. தீர்ப்பாயத்தின் முடிவுக்கு எதிராக மேல்முறையீடொன்று, ஆணையின் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் மாநகர் உரிமையியல் நீதிமன்ற முதன்மை நீதிபதியிடம் தாக்கல் செய்யப்படலாம்.

16 (1). இந்தப் பாகத்தின் கீழ் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடு ஒவ்வொன்றும் தீர்ப்பாயத்தால் இந்த நோக்கத்திற்காகப் பேணப்பட்டுவரும் ஒரு பதிவேட்டில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) தீர்ப்பாயம், மேல்முறையீட்டொன்றைத் தாக்கல் செய்கின்ற நபருக்கு, மேல்முறையீட்டின் விசாரணைக்கான இடம், தேதி மற்றும் நேரத்தைக் குறித்துரைக்கின்ற எழுத்துருவிலான அறிவிப்பொன்றைக் கொடுத்தல் வேண்டும்.

(3) தீர்ப்பாயமானது, மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து ஐந்து மாதங்களுக்குள் அந்த மேல்முறையீட்டை முடிவு செய்தல் வேண்டும்.

(4) மேல்முறையீட்டை முன்னிடுகின்ற நபர் எவரும், தீர்ப்பாயத்தின் முன்பு, தாமே நேரடியாகவோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவர் மூலமாகவோ ஆஜராகலாம்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 18

(5) மேல்முறையீடொன்றில் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் சாரமானது (Gist) அந்தப் பதிவேட்டில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்; அது அந்தத் தீர்ப்பாயத்தால் உரியவாறு சான்றொப்பமிடப்படுதல் வேண்டும்; மற்றும், அந்த ஆணையின் படியொன்று (நகல்) அந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்படுதல் வேண்டும்."

(6) VI 3 ஆம் பாகத்தில் 21 ஆம் விதிக்குப் பின்பு பின்வரும் விதி புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :—

"21-எ இந்தப் பாகத்தில் உள்ள விதி எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், 98 ஆம் பிரிவின்படி சொத்துவரி எதையும் விதிப்பதற்கும் வசூலிப்பதற்கும் அறிவிப்பு எதையும் ஆணையர் சார்வு செய்யத் தேவையில்லை".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : சென்னை, மதுரை, கோவை என்ற 3 மாநகராட்சிகள் சம்பந்தப்பட்டவையாக இருப்பதால் ஒட்டுமொத்தமாக உறுப்பினர்கள் பேசலாம். பிறகு ஒவ்வொன்றாக வாக்கெடுப்பிற்கு விடலாம்.

**டாக்டர் கே. சௌரிராஜன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பங்கேற்க வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறுகிறேன்.

இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்று கூட தெரியாத சூழ்நிலையில் இன்று நான் தத்தளித்துக் கொண்டிருக்கிறேன். ஒருபுறத்திலே மகிழ்ச்சி, ஒருபுறத்திலே வருத்தம். எத்தனையோ உள்ளாட்சித் துறை அமைச்சர்களைக் கடந்த ஏழாண்டுக் காலத்திலே பார்த்திருக்கிறேன். மாநகராட்சி சீரழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. எங்கே பார்த்தாலும் குப்பை, கூளங்கள் இருக்கின்றன. பாதைகள் சரியாகச் செப்பனிடப்படவில்லை, விளக்குகள் எரிவதில்லை, குடிநீர் வருவதில்லை, குப்பை கூளங்களால் சுகாதாரச் சீர்கேடுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று ஆண்டுதோறும் மானிய விவாதத்தில் பேசும்போது எடுத்துச் சொல்லி எதிர்ப்பக்கத்திலே உள்ள நாங்கள், இதற்கு ஏதாவது வழிவகை செய்ய வேண்டும், அவசிய



1987 நவம்பர் 18] [டாக்டர் கே. சௌரிராஜன்]

மானால் முனிசிபல் சட்டத்தைத் திருத்துங்கள் என்று எத்தனையோ முறை பல உள்ளாட்சித் துறை அமைச்சர்களிடம் முறையிட்டோம். யாரும் செய்ய முடியாமல் இருந்தது. இடையிலே புதிதாகப் பொறுப்பேற்றுள்ள உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வேக வேகமாகச் செயல்பட்டிருக்கிறார்கள், பதவி ஏற்ற ஒரு மாத காலத்திற்குள்ளாக என்று நினைக்கும்போது உள்ளபடியே மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. அவர்கள் ஆராய்ந்து பார்த்து, காரணத்தைக் கண்டுபிடித்து விட்டார்கள் என்றுதான் நினைக்கிறேன். இந்த மாநகராட்சியில் சீர்கேடுகள் மலிந்துள்ள நிலையில் சீரழிவு நிலவுகிறது; காரணம் மாநகராட்சிக்கு நிதி இல்லை என்று சொன்ன காரணத்தால் உடனடியாக நிதி வசதியைப் பெருக்க வேண்டும்; அரசாங்கத்திலிருந்து பணம் கடன் கொடுக்க அல்லது மானியமாகக் கொடுக்க வழிவகை இல்லாத காரணத்தால் இதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று சொல்லி, அதிகாரிகள் சொன்ன யோசனையின் பேரில் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்காமல் அவசர அவசரமாக அள்ளித் தெளித்த கோலம் போல இந்தத் தீர்மானத்தை வைத்திருக்கிறார்களே என்று நினைக்கும்போது வருத்தமாக இருக்கிறது.

ஏனென்றால் இந்த மாநகராட்சிகளுடைய சொத்து வரியை உயர்த்த வேண்டுமென்று சொல்லி இதற்கு முன்பு ஒரு ஆணையை பிறப்பிக்கப்பட்டபோது, அதாவது பாப்புலவு கணக்கைக் கொண்டு, பிளின்த் ஏரியாவை கணக்கில் கொண்டு சொத்து வரி விதிக்க வேண்டும் என்று உத்தரவிட்டபோது, அதை எதிர்த்து கோர்ட்டில் வழக்காடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வழக்கே இன்னும் முடியவில்லை. (The matter is sub-Judice). ஆனால் திடீரென்று இப்போது நாம் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவதன் மூலம் இது சரியாக இருக்குமா என்பதைத்தான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 3-30)

இன்னும் ஒரு புறத்தில் என்ன வருத்தம் என்று சொன்னால், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் Has brought in a new concept in this process of making legislation. நான் 7 ஆண்டு காலமாக இந்தச் சட்டமன்றத்திலே இருந்து வருகிறேன். சாதாரணமாக சட்ட முன்வடிவுகள் உருவாக்கப்பட்டு, அவைகள் எல்லாம் இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்

[டாக்டர் கே. சௌரிராஜன்] [1987 நவம்பர் 18

பெற்று, ஏற்போர் 'ஆம்' என்க, மறுப்போர் 'இல்லை' என்க என்று சொல்லப்பட்டு, வாக்குக்கு விடப்பட்டு, பிறகு சட்டமாக ஆக்கப்படுவதைத்தான் பார்த்திருக்கிறேனே ஒழிய, ஏதோ திடீரென்று ஞானோதயம் வந்தவுடன் . . .

* **மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதை ஒரு தீர்மான வடிவத்திலே அவையில் தெரிவிக்கப்பட்ட அந்த நிலையைக் கருதி, நமது மாண்புமிகு உறுப்பினரவர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். நான் முதலிலேயே விளக்கிவிட்டால், பின்னாலே பேசுகிறவர்களுக்கு அது கொஞ்சம் வசதியாக அமையும். இது சட்டத் திருத்தமல்ல, சென்னை மாநகராட்சியினுடைய 1919 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிற சட்டத்தின்படி இந்த விதிகளைத் திருத்துவதற்கு அரசாங்கத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கிற அனுமதியின்படி எந்த விதிகளையாவது அரசாங்கம் திருத்தினால், அந்த விதிகளை, ரூல்சைத் திருத்துகிற விதிகளை அவையின் முன் வைத்து ஒப்புதல் பெறப்பட்டதற்குப் பிறகுதான் அமல்படுத்தப்பட வேண்டுமென்பது மாநகராட்சிச் சட்டத்திலே இருக்கிற பிரிவு. ஆகவே விதிகளைத் திருத்துகிறோம். மற்ற சட்டங்களுக்கு எப்படி இருக்கிறதென்றால், அந்த விதிகளைத் திருத்துவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கும். அரசாங்கம் அந்த விதிகளை எல்லாம் திருத்திவிட்டு அதைச் சட்டமன்றத்தினுடைய கவனத்திற்கு இங்கே வைப்பார்கள். ஆனால் என்ன காரணம் என்று தெரியவில்லை. ஒருவேளை மாநகராட்சி என்பது அடானமஸ் பாடி. அதனாலே அன்றைக்கு அந்தச் சட்டத்தை உருவாக்கியவர்கள், அரசாங்கம் நினைத்தபோதெல்லாம் விதியைத் திருத்திவிடக் கூடாது என்ற எண்ணத்திலோ என்னவோ, விதியைத் திருத்துகிறபோது அதை அவையினுடைய முன் அனுமதி பெற்றுக் கொண்டு, தீர்மான வடிவில் அனுமதி பெற்றுக்கொண்டு திருத்த வேண்டுமென்று இருக்கிறது. ஆகவேதான் இங்கே தீர்மான வடிவத்திலே வந்திருக்கிறது.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்வர்களே, அமைச்சரவர்களே சொன்னார்கள். (It is an autonomous body) என்று. அவர்களுக்கு என்று சில அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அட்டானமஸ் பாடியே இல்லாமல் இருக்கும்போது, சட்டப்படி தேர்தலே நடக்காமல் அங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட



1987 நவம்பர் 18] [டாக்டர் கே. சௌரிராஜன்]

உறுப்பினர்கள் இல்லாமல் இருக்கும்போது, நாம் தனி அதிகாரியை வைத்து மாநகராட்சியை நிர்வகித்துக்கொண்டிருக்கும்போது, நாம் இந்த அடிப்படையிலே திடீரென்று விதிமுறைகளைத் திருத்திக்கொண்டு போனால், பிறகு வருங் காலத்தில் மாநகராட்சித் தேர்தல் நடந்து, அதிலே உறுப்பினர்கள் வந்து சேர்ந்து, அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லிவிட அதிகாரம் இல்லாவிட்டாலும், அதற்கு அவர்கள் கண்டனம் தெரிவித்து, அங்கே தீர்மானம் போடுவார்களானால், What will be the position of the Government at that time? சட்டத்திலே நமக்கு விதிகளைத் திருத்துவதற்கு அதிகாரம் இருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக . . .

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசாங்கம் விரும்புகிறவாறு சட்டத்தை, விதிகளைத் திருத்திக்கொள்ளலாம் என்று சட்டமே சொல்கிறது. ஆகவே சட்டத்தின்படிதான் நாம் இங்கே நிறைவேற்றி இருக்கிறோம். இதை மீறி தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்ற மாநகராட்சியினுடைய எந்த மன்றமும் செயல்பட முடியாது.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நானே மாநகராட்சியினுடைய உறுப்பினராக இருந்திருக்கிறேன். எத்தனையோ முறைகள் அரசாங்கம் கொண்டு வந்துள்ள சட்டங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றும், மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும், எங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். . . .

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று மாநகராட்சி மன்றம் கேட்கலாம். அதைப் பரிசீலனை செய்யும் அதிகாரம் அரசாங்கத்திடத்திலேதான் இன்றைக்கும் இருக்கிறது, அன்றைக்கும் இருக்கும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் நீண்ட விவாதத்திற்குப் போக வேண்டாமென்பதற்காகச் சொல்கிறேன். இன்றைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றம் இல்லை என்ற காரணத்தால் மாநகராட்சி மன்றம் நடைபெற வேண்டுமென்று விரும்புகிறார்களா; வரி வசூல் நடைபெற வேண்டுமென்று விரும்புகிறார்களா; ரோடுகள் எல்லாம் பழுது பார்க்கப்பட வேண்டும், புதிதாகப் போட வேண்டும், தண்ணீர் கொடுக்க

வேண்டும் அல்லது சாக்கடை வசதி அமைக்க வேண்டும் என்று விரும்புகிறார்களா ; இல்லை, தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றம் வந்த பிறகுதான் இவையெல்லாம் நடைபெற வேண்டும், அதுவரை நாம் படுத்து சுகமாக உறங்கிக் கொண்டிருக்கலாம் என்று சொல்லுகிறார்களா ? அதைச் சொல்லிவிட்டு, அதற்கு மேலே விளக்கம் அளித்தால் அது சரியாக இருக்கும்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை நகரத்திலே உள்ள ஒவ்வொருவரும் சாக்கடை சீர்பட வேண்டும், சாலைகள் பழுது பார்க்கப்பட வேண்டும் என்றுதான் நினைக்கிறார்கள். இதில் எந்தவித ஐயப்பாட்டுக்கோ அல்லது இரண்டுவிதமான அபிப்பிராயங்களுக்கோ இடமே இல்லை. இருந்தபோதிலும்கூட சட்டத்திற்கு உட்பட்டு, பொது மக்களைக் கலந்துகொண்டு, அதன்மூலமாகத் திருத்தங்கள் கொண்டுவருவோமானால், நிச்சயமாக வருங் காலத்தில் நாம் மக்கள் மத்தியிலே செல்கிறபோது நமக்குச் சில பாதகங்கள் வாராமல் இருக்கும் என்ற அந்த அடிப்படையிலே தான் சொல்கிறேன்.

* **மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பேச்சிலே நான் குறுக்கிடவேண்டுமென்று குறுக்கிடவில்லை. அவர்கள் சட்டம் படித்த வழக்கறிஞர் அல்ல. டாக்டர். பொது வாழ்விலே விவரம் தெரிந்த ஒரு உறுப்பினர். நீண்ட காலமாகவே பொது வாழ்க்கையிலே இருப்பவர்கள். இப்போது கொண்டு வந்து இருப்பது திருத்தம். முன்னாலே உள்ள ஒரு சில விதிகளுக்குத் திருத்தங்கள். இந்த விதிகளுக்குத் திருத்தங்கள் என்பது எப்படி நம்முடைய மாநகராட்சி சொத்துக்களுக்கு வரி விதிப்பது, அதற்கு அடிப்படையாகக் கையாளப்படவேண்டிய முறைகள் என்ன என்பதற்குத்தான் தீர்மானம். தீர்மானம் விவரமாகவே இருக்கின்றது. நான் அவர்களிடத்திலே அன்போடு கேட்டுக்கொள்வது, இப்போது கொண்டு வந்திருக்கின்ற இந்த முறைகள், நடைமுறைகள் சரியாக இருக்கின்றனவா, இதனாலே பலன் ஏற்படுமா, ஏற்படாதா என்கின்ற கருத்தைச் சொன்னால் இது பொருத்தமாக இருக்கும். இல்லை மக்களுக்கு இதனாலே எப்படி எப்படிப் பாதகம் என்பதைப் பற்றித் தெரிவித்தால் நன்றாக இருக்கும்.





**டாக்டர் கே. சௌரிராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த தீர்மானத்திலே எத்தனை ஓட்டைகள், உடைசல்கள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்பதுதான் என்னுடைய குறிக்கோள். அதற்கு முன்பு இந்த தீர்மானத்தைக் கொண்டு வராமல், இதை ஒரு அறிஞர்கள் அல்லது அனுபவஸ்தர்கள் ஆய்விற்கு விட்டு கொண்டு வந்திருந்தால் இன்னும் சரியாக இருந்திருக்குமே, நல்ல முறையிலே இருந்திருக்குமே என்றுதான் சொல்கிறேன். நான் குறை சொல்லவேண்டுமென்றோ, குற்றம் சொல்ல வேண்டுமென்றோ சொல்லவில்லை. நல்ல எண்ணத்தின் அடிப்படையிலேதான் சொல்கிறேனே தவிர வேறல்ல.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்கவேண்டும். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். அவர்கள் அறிஞர்களிடத்திலே அல்லது புத்திசாலிகளிடத்திலே விசாரிப்பதற்காகச் சொல்கின்றார்கள். அதைத்தான் செய்துகொண்டு இருக்கிறோம். அவர் புத்திசாலி. அவர் சொன்னாலே போதும். அவர் ஒரு தொகுதிக்கு ஒரு சட்ட மன்ற உறுப்பினராக இருக்கின்றார்கள். அவர் தொகுதி மக்களைக் கலந்து ஆலோசித்துக்கூடச் சொல்லலாம். அவர்கள் சொல்கின்ற விளக்கமே போதும்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'Part I-A Assessment of Property Tax' என்று எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். மாநகராட்சியிலே பல விதத்திலே வருவாய் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. முக்கியமாக சொத்துவரி ஒன்றுதான். மற்றதற்குப் போனால் எத்தனையோ இடங்களிலே ... Property Tax, Cycle Tax, Advertisement Tax were all there originally. Octroi was there—you have been representing for bringing this back some time ago. இன்னும் பல வரிகள். இவைகள் மூலமாக எல்லாம் வருவாயைப் பெருக்கமுடியும். ஆனால் இந்த சொத்து வரியை மட்டும் நாம் எடுத்துக்கொண்டு இங்கே அந்த மாத்திரம் நாம் விவாதித்துக்

[டாக்டர் கே. சௌரிராஜன்] [1987 நவம்பர் 18

கொண்டிருக்கின்ற காரணத்தினாலேயே இதைப்பற்றி நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே உள்ள சில ஐட்டைகளை மாத்திரம் எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

"The name of the division and the street in which it is situated and the door number; the description of the assessable item like number of storeys, plinth area in each storey and the extent of vacant land;"

நம்முடைய அமைச்சர் அவர்கள் என்ன விரும்புகிறார்கள்? இந்த நகரத்திலே உள்ள சொத்துக்கள் உரிமையாளர்கள் எல்லாம் திடீரென்று கையிலே ஒரு டேப்பை எடுத்து வைத்துக்கொண்டு எத்தனை அடி நீளம் எத்தனை அடி அகலம் என்றெல்லாம் கணக்கு எடுத்துக்கொண்டு, அதை மாநகராட்சியிலே கொண்டு வந்து கொடுக்கவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக் கின்றார்கள் என்று நினைக்கிறேன். எத்தனையோ சொத்து உள்ளவர்களுக்கு அவர்களுக்கு எத்தனை கிரவுண்ட் இருக் கின்றது. பிளின்த் ஏரியா என்றால் என்ன, ஸ்கொயர் பீட் என்றால் என்ன என்று தெரியாதவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கின்றார்கள். ஆகவே இதை மாற்றி, ஏன் இந்த Licensed Surveyors of the Corporation— மாநகராட்சியிலே லைசென்ஸ் பெற்ற சர்வேயர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு இவ்வளவு தான் கட்டணம் என்று சொல்லி அவர்கள் மூலமாக வரை படத்தைத் தயார் செய்து அதை சப்மிட் செய்யவேண்டுமென்று சொன்னால் அது சரியாக இருக்காதா? சில நேரங்களில் தவறுகள் ஏற்படலாம். எனக்கு மூவாயிரம் சதுர அடி இருக்கிறது. ஆனால் நான் நேற்று கணக்குப் பார்க்கிறபோது 2,400 சதுர அடிதான் இருக்கிறது என்ற நிலை வரலாம். அல்லது மாநகராட்சியிலேயிருந்து வந்து பார்த்துவிட்டு 2,400 சதுர அடி என்று சொல்லியிருக்கின்றீர்களே 3,000 சதுர அடி இருக்கிறதே என்று சொல்லி அதற்காக அவர் மீது பீனல் ஆக்ஷன் கொண்டு வந்தால் 'My defence will not be there'; அறிவாற்றல்



1987 நவம்பர் 18] [டாக்டர் கே. சௌரிராஜன்]

கூடியவராக இருந்தாலும் என்ஜினியரிங் படித்தவராக இருக்க முடியாது. ஆகவே அந்த நிலை ஏற்படுகின்றபோது, இந்த qualified licensed Surveyor மூலமாக அளந்து வரை படத்தை 'சப்மிட்' செய்யவேண்டும் என்று வைத்திருக்கக் கூடாதா என்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடி யாகப் பார்க்கிறபோது

"The name of the owner; The name of the occupier; The year in which the assessable item was last assessed and the amount of annual value fixed by the Commissioner;"

A quinquennial revision was not done for a long time.

பல ஆண்டுகள் இந்த குவின்குவின்னியல் ரெவிஷன் செய்யப் படாததன் காரணமாகத்தான் இந்த விளைவுகள். இன்று இந்த அவலமான நிலையில் மாநகராட்சி இருந்துகொண்டிருக்கின்றது. இன்றுங்கூட எனக்குப் புரியவில்லை. எப்போது என்னுடைய வீட்டை, எந்த வருடத்திலே வந்து அசெஸ்மெண்ட் செய்தார்கள் என்று எனக்கே ஞாபகம் இல்லை.

Then there is a question of "Whether the assessable item is used for residential or non-residential purpose?"

எனக்கே தெரியாத ஒரு தகவலை நீங்கள் நாட்டு மக்களிடம் கேட்டால் அவர்கள் எப்படி அந்தத் தகவலை கொடுக்க முடியும்?

(பிற்பகல் 3-40)

அடுத்து, "Whether the assessable item is wholly rented or partly occupied by the owner and party rented:" ............

என்று சொல்லியிருக்கிறீர்கள். அதாவது, அந்தக் கட்டடத்திலே பாதியை வாடகைக்கு விட்டு விட்டு, பாதியில் தான் குடியிருந்தால் என்ன நிலைமை என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர தானே முழுமையாக கட்டடத்தில் குடியிருந்தால் அப்படிப் பட்டவர்கள் விஷயத்தில் வரிவிதிப்பு குறித்து கடைபிடிக்க வேண்டிய அணுகுமுறைகளைப் பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை.

[டாக்டர் கே. சௌரிராஜன்] [1987 நவம்பர் 18

"Whether it is wholly owned by him—Wholly occupied by the owner ?"

"What is the amount of rent received ?"

இப்படிப் பல கேள்விகள் கேட்கப்படக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அதுமட்டுமல்ல, வீட்டுச்சொந்தக்காரர் இதற்கு முன்பு வரி பாக்கி ஏதாவது வைத்திருக்கிறாரா என்று விசாரிப்பதற்குரிய வழிவகையும் இல்லை.

"Whether there is any arrears of tax ?"

இன்னொன்றையும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்.

There is another body called the M.M.D.A. They have got certain Rules and Regulations called 'the Development Control Rules'. Plan permission is given by the M.M.D.A. There are so many unauthorised buildings in Madras.

அந்த டெவலெப்மெண்ட் கன்ட்ரோல் ரூல்ஸ் பிரகாரம் சென்னை மாநகராட்சியை எடுத்துக்கொண்டால் பிளான் அனுமதி பெறாமல் பல கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. சட்டப்படி அனுமதியில்லாமல் கட்டடம் கட்டப்பட்டால் பலவகைகளிலும் நடவடிக்கை எடுக்க வழிவகை இருக்கிறது.

They can levy a fine and collect property-tax at 4 times the rate.

அந்த மாதிரி கட்டப்படும் கட்டடங்களுக்கு 4 மடங்கு வரி விதிக்க முடியும். எவ்வளவு வேண்டுமானாலும் வரி விதிக்க முடியும். பீனல் டாக்ஸ் போட முடியும். கட்டடத்தையே இடித்துத் தள்ளும் அளவுக்கு அதிகாரம் இருக்கிறது. இந்த மாதிரி உள்ள கட்டடங்கள் சம்பந்தமாக இந்த கொஸ்டியனைரை பில் அப் பண்ணிக்கொடுத்தால், They will be regularised. இது சரிதானா? Unauthorised buildings have come up in plenty in the State. They have all escaped tax. They are already facing penal action.





1987 நவம்பர் 18] [டாக்டர் கே. சௌரிராஜன்]

அதைப்பற்றி எல்லாம் கேட்காமல் விட்டுவிட்டோம் என்றால், அவர்கள் இந்த கொஸ்டியனைரை பில் அப் பண்ணிக் கொடுத்தால், once we levy tax, we cannot take any penal action. வரி விதிக்க முடியும். அதை எதிர்த்து அவர்கள் வாதாட முடியும். அவர்கள்மீது சட்டப்படி நம்மால் பிறகாலத்தில்கூட நடவடிக்கை எடுக்க முடியாத பல சங்கடங்கள் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, Commissioner may authorise any person not below the rank of a bill collector to enter upon and make inspection என்று இருக்கிறது. சாதாரணமாக பில் கலெக்டரை அனுப்பினால் அவர் கேட்கும் விவரங்களைக் கொடுக்க வேண்டுமென்று வகுத்திருப்பது சரிதானா? இப்போது ஏற்பட்டிருக்கிற கோளாறுகளுக்கு எல்லாம் காரணமே இந்த பில் கலெக்டர்கள் தான். Why not send a person, Senior Officer, a man who is incorruptible, a man of higher status who knows at least Engineering ? குறைந்தபட்சம் ஒரு உதவிப் பொறியாளர் அங்கே சென்று சட்டப்படி பிளான் இருக்கிறதா, வரைபடம் இருக்கிறதா, அதன்படி வீடு கட்டப்பட்டிருக்கிறதா என்பதை எல்லாம் அறிந்து பார்க்க வழிவகை செய்திருக்கலாம்.

அதுமாத்திரமல்ல 3-வது பிரிவிலே ஒன்றை சொல்லியிருக்கிறீர்கள். The annual value of assessable item as on 1st of October 1978 என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் வேல்யூ என்பதற்கு என்ன பொருள்? ஆனுவல் ரென்டல் வேல்யூ என்ற ஒன்று இருக்கிறது. ஆனால் ஆனுவல் வேல்யூ என்று சொன்னால் என்ன அர்த்தம்? அப்படி ஏதாவது கட்டடத்திற்கு மதிப்பு உண்டா? கட்டடத்திலிருந்து வருகிற வாடகைக்கு ரென்டல் வேல்யூ என்று தான் பெயர். 1978 ஆம் ஆண்டில் இருந்த ஆனுவல் வேல்யூவை எப்படி நிர்ணயிக்க முடியும்? அதற்கு ஏதாவது ஸ்பெசிபிக்காக கெய்டலைன்ஸ் வைத்திருக்கிறீர்களா? அன்றைக்கு இருந்த வீட்டின் நிலைமை என்ன, இன்றைக்கு இருக்கின்ற வீட்டின் நிலைமை என்ன, மதிப்பு என்ன என்பதற்கு புள்ளிவிவரம் வைத்திருக்கிறீர்களா? கடைசியில் With reference to the guide-lines issued by the Council or the State Government can be added.

என்று போட்டிருக்கிறீர்கள். அப்படி "ஆட்" பண்ணாமல் இவ்வளவு அவசர அவசரமாக இத்தீர்மானத்தைக் கொண்டு வந்து இவ்வளவு குழப்பத்தை உண்டு பண்ணுகிறீர்கள். எனக்குத் தெரிந்த சட்ட அறிவை வைத்துக்கொண்டு சொல்கிறேன். நாளைக்கே இந்தத் தீர்மானத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு கோர்ட்டுக்குச் சென்றால் நிச்சயம் ஸ்டே வாங்கிவிடுவார்கள்.
They will get stay and land all of us in a soup.
Some more careful consideration could have been given before giving the guidelines
ஆகையினால்
என்று தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.
இன்னும்கூட செய்திருக்கலாம். நாம் கொடுக்கப் போகிற "கைட்லைன்ஸ்"—இதற்கு "publicity" கூட கொடுக்காமல்
you could have directed the Corporation in your own ordinary communication itself. This need not have been placed before the House. That could have served the purpose much more than actually giving a publicity for this and thereby getting into more problems. This can he circulated just as a direction to the Corporation authorities themselves because they are under your control.
இப்படி செய்திருக்கலாம் என்று சொல்லி,
I request you to once again reconsider the whole resolution to make it more perfect and see that there is no loophole or lacuna, so that nobody will go to Court of Law and get a stay, stating that it is unconstitutional or violative of the laws of the state or the Fundamental Rights enshrined in our Constitution. Thank you very much.

**திரு. சோ. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தனித் தீர்மானத்தை, வரி விதிப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நான் முதலிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னை மாநகரைப் பொறுத்த மட்டில் பல பிரச்சினைகளை, விளக்கங்களைக் குறிப்பிட்டார்கள். இன்றையதினம் சுகாதாரப் பிரச்சினையும் தண்ணீர் பிரச்சினையும் இருக்கிற இந்த நேரத்தில்





புதிதாகப் பதவி ஏற்ற அமைச்சர் அவர்கள் திறம்படச் செயல்பட வேண்டுமென்று நாங்கள் எல்லாம் நினைத்துக்கொண்டிருந்த நேரத்தில் ஏன் இந்தத் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நாங்கள் அதிர்ச்சி அடைந்துள்ளோம்.

அவர்களுடைய விளக்க உரையிலே குறிப்பிட்டிருப்பதைப் போல—எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட இங்கே சில விளக்கங்களைச் சொன்னார்கள். எப்படி எல்லாம் நிகழ்ச்சிகள் ஏற்படும், தடைபடும் என்று சொன்னார்கள். நானும் சொல்ல விரும்புகிறேன். இங்கே, வீட்டுக்குச் சொந்தக்காரர் அடிமனை எவ்வளவு, பில்ட் அப் ஏரியா எவ்வளவு, வாடகைதாரர் எவ்வளவு வாடகை தருகிறார் என்பதை எழுத்து மூலமாக மாநகராட்சிக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே இருக்கிற பெரிய சிரமம் என்னவென்றால், 20 ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து என்னுடைய உறவினர் வீட்டில் கூட சில வாடகைதாரர்கள் இருக்கிறார்கள். ஆயிரம் சதுர அடி கொண்ட ஒரு வீட்டில் 200 ரூபாய், 300 ரூபாய்க்கு வாடகைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்போதுள்ள வரி விதிப்பு பிரகாரம் அவர்கள் அந்த வீட்டிற்கு இரட்டிப்பு அல்லது அதற்கு மேலே வாடகை கொடுக்க வேண்டிவரும். அதைப் போன்று புதிதாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ஒரு வீட்டில் வீட்டுச் சொந்தக்காரரே குடியிருந்தால், அதே ஆயிரம் சதுர அடி கொண்ட வீட்டுக்கு எவ்வளவு வரி செலுத்த வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்படவில்லை. ஆகவே, மாநகராட்சியில் இருப்பவர்கள் என்ன வரி விதிப்பார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஒரே தரத்தில் இருக்கிற, ஆயிரம் சதுர அடி வீட்டில் 20 ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து இருக்கிற வாடகைதாரர் 300 ரூபாய் தருகிறார் என்றால் அதே அளவுள்ள வீட்டில் இருக்கிற சொந்தக்காரர் ஆயிரம் ரூபாய் கட்டவேண்டிய நிலைமை வரும் என்று நினைக்கிறேன். இது எந்த வகையில் பொருந்தும் என்று கேட்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. சென்னை, மதுரை, கோவை மாநகராட்சிகளில் இருக்கிறவர்கள் இன்றையதினம் என்ன தவறு செய்தார்கள் என்று தெரியவில்லை. இந்த மூன்று மாநகராட்சிகளுக்கு மட்டும் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

[திரு. சோ. மா. இராமச்சந்திரன்] [1987 நவம்பர் 18

இந்தத் தீர்மானத்திலே இன்னொன்றையும் சொல்ல விரும்பு கிறேன். ஏற்கெனவே நகராட்சிகளுக்கு கொண்டுவந்த தீர்மானத் தின்படி இரண்டு மடங்கு, மூன்று மடங்கு வரி விதிப்பைக் கூட்டி யிருக்கிறார்கள். அதிலேயும் சில தவறுகள் இருப்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கிற செங்கற்பட்டு நகராட்சியில் வேதாசலம் நகர் இருக்கிறது. இந்த நகரிலே ஒருவர் 10 கிரவுண்டிலே 12,000 சதுர அடியில் வீடுகள் அமைத்தி ருக்கிறார். அவருக்கு 140 ரூபாய்தான் வரி செலுத்தவேண்டி யிருக்கிறது. இப்போதுள்ள வரி விதிப்பின் பிரகாரம் அவர் கூடுதலாக 100 ரூபாய் செலுத்த வேண்டும். இரண்டாவதாக அவருக்குப் பக்கத்திலே ஒருவர் வீடு கட்டியிருக்கிறார். 2,800 சதுர அடியில்தான் வீடு கட்டியிருக்கிறார். அந்த வீட்டிற்கு 660 ரூபாய் வரி செலுத்த வேண்டும். இன்றையதினம் விதிக்கப்பட்டி ருக்கிற வரி உயர்வின் காரணமாக அவர் 6,600 ரூபாய் செலுத்த வேண்டியிருக்கிறது. ஒரே இடத்திலே, பக்கத்து பக்கத்து இடத்திலே இருக்கிறவர்களுக்கு இந்த மாறுபாடு ஏற்பட்டிருக் கிறது. நீங்கள் விதித்திருக்கிற வரி விதிப்பு சதவிகிதத்தின் அடிப் படையில்தான் இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவரவர்களே, நேற்று முன்தினம் அறிவித்த வரி விதிப்புக் கொள்கையின்படி இது விதிக்கப்பட்டது அல்ல. இது ஏன்றய நிலைமை. இந்தக் குழப்பத்தை எல்லாம் தீர்ப்பதற்குத்தான் இந்தப் புதிய கொள்கை அறிவிப்பே வெளியிடப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 3-50)

**திரு. சோ. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ... வரி விதிப்பு என்று சொல்கிறார்கள். நேற்றையதினம் கொண்டு வந்த அந்தச் சட்டத்தின் வடிவைப் பார்க்கிறபோது வாடகைக் குடியிருப்பாக இருந்தால், அதற்கு 100 ரூபாய் வரி என்று இப்போது இருந்தால் அது 200 ரூபாயாக அதிகரிக்கப்படும் என்றும், அதிலே சொந்தக் குடியிருப்பாக இருந்தால் 100 பெர் சன்ட் என்றும் இருக்கிறது. இதன் காரணமாக 140 ப்ளஸ் 100, 240 ரூபாய் என்றிருந்தால் அதற்கு எந்த வரியை விதிப்பார்கள் என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.



1987 நவம்பர் 18] [திரு. சோ. மா. இராமச்சந்திரன்]

ரூ. 6,600 என்பதைப் பொறுத்தவரையில் இப்போது எந்த சதவீதத்தில் வரி விதிக்க முடியும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அந்த 660 உடன் மேலும் ஒரு 660 ரூபாய் சேரும், அவ்வளவுதான்.

**திரு. சோ. மா. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர் களே, 660 என்றிருந்ததை 6,600 என்று ஏற்றியிருக்கிறார்கள். அப்படியே இருந்தாலும் 12,000 சதுர அடியிலே வீடு கட்டி இருப்பவர்களுக்கு 140 ரூபாயும், 2800 சதுர அடியிலே வீடு கட்டி இருப்பவர்களுக்கு 660 ரூபாயும் என்று இருந்தால் இவர்களுக்கு எந்த விதியின் மூலம் இதைச் சீர்செய்ய முடியும் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் 140 என்பது இன்க்ளுடிங் சொந்த மனை என்றால் 100 பெர்சன்ட் வரி விதிக்க முடியும். அதேபோல் இதற்கு 660. இந்தச் சட்டத்தின் பிரகாரம் 100 பெர்சன்ட் வரி விதிப்பு என்பது அதிகமாகத்தானே வருகிறது. ஆகவே எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் சொன்னது போல் இதனை பரிசீலனை செய்து அதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வரி விதிப்பினை சென்னை மாநகராட்சிக்கும், இதர மாநகராட்சிகளுக்கும் கொஞ்சம் நிறுத்தி வைத்தால் நல்லது. ஏனென்றால் தண்ணீர்ப் பிரச்சினை இருக்கிறது. நான் என்னு டைய சொந்தக் கருத்தாகவே சொல்கிறேன். அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. சென்னையிலே உள்ள நிலைமை குறித்து இன்றைக்கு டி.வி.-யிலே கூடக் காட்டுகிறார்கள். டி.வி. யிலே கூட, நடைபாதையிலே எப்படி எப்படி எல்லாம் குப்பை களைக் கொட்டுகிறார்கள் என்பதைக் காட்டுகிறார்கள். அப்படி எல்லாம் எடுத்துக் காட்டுகிற இந்த நேரத்திலே பொது மக்களுக்கு நீங்கள் நன்மையைச் செய்துவிட்டு இந்த வரியைக் கொண்டு வந்தால் அவர்கள் மனம் உவந்து கொடுப்பார்கள் என்பதைச் சொல்லி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லி, விடைபெறு கிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நேற்று இரவில் 11 மணிக்கு என்னுடைய அறையிலே கொண்டு வந்து கொடுத்தார்கள். ஆகவே நான் இப்போது இந்த தீர்மானத்திற்கு உள்ளே போய் விவாதிக்கக் கூடிய நிலையிலே இல்லை. இந்த தீர்மானத்தைப் படித்து அதன் பேரில் காரியங்கள்

செய்வதற்கு இருக்கக்கூடிய சந்தர்ப்பமே இல்லாத நிலையில் இங்கே வந்திருக்கிறேன் என்பதை உங்களுக்குச் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். நேற்று இரவு 11 மணிக்கு அந்தத் தீர்மானம் வந்தது. இன்றைக்கு காலையில் இருந்து இதுவரையில் சாப்பிடக் கூட இல்லாமல் இங்கே நாம் உட்கார்ந்து விவாதித்துக் கொண்டிருக்கிறோம். எத்தனை சட்டங்களை நாம் இங்கே நிறைவேற்றி இருக்கிறோம்? எதற்காக சொல்கிறேன் என்று சொன்னால், கண்ணைக் கட்டிக் கொண்டு சட்டம் நிறைவேற்றும்படியான நடைமுறைகள் இருக்கிறதே, அதை இங்கே நாம் திருத்திக் கொள்ள வேண்டும் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவரமாக எல்லா உறுப்பினர் களும் இங்கே பேசிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே விவரமாக விவாதித்துதான் பில்கள் பாஸ் ஆகின்றன. அதனால் அப்படிச் சொல்லக் கூடாது. . .

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வதற்கும், நாங்கள் சொல்வதற்கும் இந்த விஷயத்திலே பெரிய வித்தியாசம் ஏற்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே என்ன பெரிய வித்தியாசம்? இவ்வளவு நேரம் காலையில் 10-30-லிருந்து சட்டங்கள்தான் எடுத்துக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீங்கள் பசியாக இருக்கிறீர்கள். ஆனால் பசியாக இருக்கக் கூடிய மக்களிடமிருந்துதான் வாக்குகளைப் பெற்று உள்ளே வந்து அமர்ந்திருக்கிறீர்கள்.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, தயவுசெய்து வேறு சப்ஜெக்ட்டுக்கு டைவர்ட் பண்ணவேண்டாம். நான் நடந்திருக்கிற உண்மைகளைத்தான் சொன்னேன். ஜனங்களிடத்திலேயிருந்து ஓட்டு வாங்காமல், ஆகாயத்திலேயிருந்து பொட்டலமாகவா வருகிறது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சாப்பாட்டிற்குக் கஷ்டப் படக்கூடிய மக்களிடமிருந்து வாக்குகளைப் பெற்று வந்திருக் கிறோம் என்றுதான் சொன்னேன். வேறு ஒன்றும் சொல்ல வில்லை.





**திரு. கு. ரமணி :** அது மக்களுக்கும் தெரியும், உங்களுக்கும் தெரியும், எங்களுக்கும் தெரியும். நான் என்ன சொல்கிறேன் என்றால், இன்றைக்கு இந்த நேரத்திற்குள்ளாக விரிவாக விவாதம் பண்ணித்தான் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன என்பது உங்கள் கருத்து. அந்தக் கருத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இங்கே வைக்கப்பட்டிருக்கிற சட்டங்கள் அவரவர்களுடைய உள்ளத்திற்கு ஏற்றவாறு, கருத்துக்கு ஏற்றவாறு, குறைந்தபட்சம் அந்தக் கருத்துக்களை எக்ஸ்பிரஸ் பண்ணுவதற்குக்கூட நேரம் இல்லாதபடிக்குத்தான் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதைத்தான் நான் சொல்கிறேன். அதை எப்படி நீங்கள் மறுக்க முடியும்? அது உண்மை நிலைமை. நேற்று ராத்திரி 11 மணிக்கு இந்த தீர்மானங்கள் எல்லாம் வந்து சேர்ந்தன. நல்லவேளை இந்தத் தீர்மானத்தில் இருக்கும்படியான விஷயங்களை நம்முடைய அமைச்சர் அவர்கள் சுருக்கமாகக் குறிப்பிட்டார்கள். அது நல்லது. இந்த உள்ளாட்சித் துறையில் வரி விதிப்பு சம்பந்தமாக கைட் லைன்ஸ் இல்லாமல் இதுவரையில் முனிசிபாலிட்டிகளும் மற்ற ஸ்தல ஸ்தாபனங்களும் இஷ்டம் போல் வரி விதிக்கக் கூடிய தன்மை இருந்தது. அந்த வரி விதிப்பினாலே அதிகப்படியான ...ளு, வீடு வைத்திருப்பவர்களுக்கும், அதேபோன்று கட்டிட சொத்துக்கள் வைத்திருப்பவர்களுக்கும் ஏற்பட்டிருக்கும்படியான சங்கடங்களைக் குறைப்பதற்கு இந்த கைட் லைன்ஸ்ஸை ஏற்பாடு செய்து அதன் கொள்கையைக் கூட இங்கே விவாதம் நடக்கும் போதுதான் நம்முடைய அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். அதற்கு மேலே எங்களுக்கு சஃபிஷியன்ட் டைம் வேண்டும். இது ஒரு முறை சட்ட புத்தகத்திலே ஏறி விட்டால், அதை மறுபடியும் நிரந்தரமாக ரத்து பண்ணும் வரையில் அங்கே சட்ட புத்தகத்திலேயே இருக்கும். அதன்படிதான் ஜனங்களுடைய நடவடிக்கையும் அவர்களுக்கு வரக்கூடிய லாப நஷ்டங்களும் இருக்கின்றன. அதனால்தான் சட்டங்களை பாஸ் பண்ணும்போது தேவையான நேரம் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறேனே தவிர, சபையினுடைய டைமை உயர்த்த வேண்டும் என்று நான் சொல்லவில்லை.

அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இப்போது கைட் லைன்ஸ் வந்திருக்கிறது என்று. அந்த கைட் லைன்ஸ் அடிப்படையில் 3 மாநகராட்சிகளுக்கும் கோல்டினர் இருக்கிறது. அந்தக் கோல்டினர்களுக்கெல்லாம் பதில் கிடைக்க வேண்டும்.

[திரு. கு. ரமணி] [1987 நவம்பர் 18.

அந்தப் பதிலை வைத்துக் கொண்டு மேற்கொண்டு நடவடிக்கை நடத்த வேண்டிய பொறுப்பு அந்தந்த ஸ்தாபனங்களுக்கும் உண்டு. தேர்ந்து எடுக்கப்பட்ட கவுன்சில்கள் 3 முனிசிபாலிட்டிகளுக்கும் கிடையாது. அட்வைசரி கமிட்டி போட்டிருக்கிறதா என்று சந்தேகம்தான் வரும். கோயம்புத்தூர் முனிசிபாலிட்டியிலே இல்லை. அட்வைசரி கமிட்டி வேண்டும் என்று இதே சட்ட சபையிலே பல தடவை சொல்லியும் கூட அது நிறைவேறவில்லை. நான் இதைக் கேட்ட போது நமது ஹெல்த் மினிஸ்டர் அவர்களே எனக்கே இங்கே அதற்கு வாக்குறுதி தந்தார்கள், நிறைவேற வில்லை. அவருக்கு முன்னால் இருந்தவர்களும் வாக்குறுதி தந்தார்கள்; நிறைவேறவில்லை. பிறகு இப்போது கடைசியாக அதனுடைய பிரபோசல் தயாரிக்கப்பட்டு, கோயம்புத்தூரிலே யிருந்து இங்கே வந்தும்கூட இன்று வரையில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை.

அப்படியானால் என்ன இருக்கும் இந்த ஸ்தாபனங்களிலே? கமிஷனர் இருப்பார்கள். என்ஜினீயர்களும் மற்றவர்களும் கொண்ட ஒரு குழு இருக்கும் அங்கே. அவர்கள்தான் நிர்வாகத்தை இன்றைக்கு நடத்திக் கொண்டு வருகிறார்கள். பல கோடிக்கணக்கான பணம் வருவாய் வரும் அந்த நிர்வாகத்திலே நீங்கள் இப்போது அந்த கைட் லைன்ஸ் எல்லாம் கொடுத்தால், அந்த கைட் லைன்ஸ் முறையாக இம்பிளிமெண்ட் ஆகிறதா; அந்த சலுகைகள் முறையாகக் கிடைக்கிறதா என்று யார் பார்ப்பது? வரிகள் நிர்ணயிக்கும்போது யதார்த்தமான சூழ்நிலையைக் கணக்கில் எடுப்பதில், எஸ்டிமேட் பண்ணுவதில், எப்படி வித்தியாசங்கள் ஏற்படுகின்றன? இதையெல்லாம் கவனிப்பது அப்படிப்பட்ட ஒரு அதிகாரிகள் கவுன்சிலே தவிர தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல.

(மூதலை 4-00)

ஆகவே அப்படி வரும்போது ஒரு முரண்பாடு ஏற்படுகிறது. அது என்னவென்றால் மற்ற தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இருக்கிற இடங்களில் அதைப் பரிசீலிக்க பொதுஜனங்களின் பிரதிநிதிகள் இருந்து கவனிப்பார்கள். அதிகாரிகள் தலைமை வகித்து அப்பீல் கமிட்டியெல்லாம் நடத்தினாலும்கூட அவர்கள் பிரதிநிதிகள் மெஜாரிட்டியாக இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இங்கே [illegible]



1987 நவம்பர் 18] [திரு. கு. ரமணி]

அப்படிப்பட்ட நிலைமை இல்லை. இங்கே அதிகாரிகள் மட்டும் தான். இந்தமாதிரி கைட்லைன்ஸ் கொடுத்தால் அதை இம்ப்ளிமெண்ட் ஆக்கும்போது குறைந்தபட்சம் பொதுஜனங்கள் பிரதிநிதிகள் அதிலே பங்கெடுத்துக்கொண்டு அதனுடைய நடைமுறையை கரெக்ட்டாகப் பார்த்து அந்தச் சொத்துக்கள், முன்பு கட்டிய வரி, அதிலே இன்கிரீஸ் பண்ணியிருக்கிறதா, இல்லையா, எவ்வளவு சொத்துக்கள் வைத்திருக்கிறார்கள், குடியிருக்கிறவர்கள் யார் என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும். இவற்றை ஒழுங்காக கவனிப்பதற்கு உத்தரவாதம் கிடையாது. அதுதான் கஷ்டம். இந்தப் புதிய சட்டத்தில் சில சலுகைகள் கொடுத்தாலும், வரி ரொம்பவும் ஏறிப் போகாமல் கொஞ்சம் குறைவாகக் கொண்டு வருகிற சாத்தியக்கூறுகள் இருந்தாலும் கூட அதைச் செய்வதற்கு இன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத ஒரு சூழ்நிலையில் இதைக் கொண்டு வருவதுதான் நமக்கு இருக்கக்கூடிய பெரிய ஆட்சேபணை. இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற நிலைமையில் கிட்டத்தட்ட 15 மாதங்கள்தான் ஆகின்றன. நம்முடைய உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் சொன்னதைப்போல பல விஷயங்கள் இந்தப் பட்டியலில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு அப்பாற்பட்டும் சில விஷயங்கள் கொடுக்க வேண்டியிருந்தால் அப்போது என்ன செய்வது? அதை யோசித்து நாங்கள் ஆலோசனை சொல்ல வேண்டும். அது சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் செய்யவேண்டிய கடமை. அதற்கும் நேரம் இல்லாமல் ஒரு நிலைமை வந்ததை ரொம்பவும் வருத்தத்தோடு எடுத்துக் காட்ட வேண்டிய நிலை வந்தது. எதிர் காலத்தில் சட்ட நடைமுறைகளை, சட்டங்களை நிறைவேற்றுவதில் இப்படிப்பட்ட அர்ஜென்சி இருக்கக்கூடாது. ரோடு ரோலர் மாதிரி உருண்டு கொண்டே போகிற ஒரு நிலைமை இல்லாமல், போதிய அவகாசம் கொடுத்துச் செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தமாதிரி வார்த்தைகளைச் சொல்ல வேண்டாம். ரோடு ரோலர் என்று சொன்னால் திரும்ப அதற்கு பதில் சொன்னால் It will wound your [illegible] காலையில் 9-30 மணியிலிருந்து நேரம் இருந்திருக்கிறது. எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் [illegible]

Do you want Entrance Test to be [illegible] for M.L.A.s?

இனிமேல் எம்.எல்.ஏ.-க்களுக்கு நாளைத் தேர்வுதான் நடத்த வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் ரோடு ரோலர் என்று சொல்கிறீர்கள். எவ்வளவு நேரம் கொடுத்திருக்கிறேன்? காலை 10-30 மணியிலிருந்து ஆரம்பித்து இப்போது 4-00 மணியாகி விட்டது. (குறுக்கீடு) அந்த வார்த்தையைச் சொல்லக் கூடாது. எவ்வளவு வேகமாக ஒன்றும் நிறைவேற்றப்படவில்லை. அதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

**திரு. கு. ரமணி:** அந்த வார்த்தை கூடாது என்று சொல்கிறீர்கள். அது என்ன அன்பார்லியமெண்டரி வார்த்தையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட முன்வடிவுகள் வேகமாக நிறைவேற்றப்படவில்லை. நீங்கள் அந்த வார்த்தையைச் சொன்னால் வெளியே வேறு மாதிரி வரும். வேகமாக மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன என்று எழுதுவார்கள். (குறுக்கீடு) காலை 10-30 மணியிலிருந்து இப்போது 4-00 மணி வரையில் எவ்வளவு நேரம் ஆகியிருக்கிறது? ஐந்து பில்கள்தான் பாஸ் ஆகியிருக்கின்றன. ஒரு பில்லுக்கு ஒரு மணி நேரம். (குறுக்கீடு) Dou you want a day for a Bill? அப்படியாவது சொல்லுங்கள். ஒரு நாளைக்கு ஒரு பில் என்று கொண்டுவருவோம். அடுத்த கூட்டத்திலிருந்து அப்படிச் செய்வோம். (குறுக்கீடு) நீங்கள் இப்படிச் சொல்லிவிட்டுப் போனால் நாளைக்கு வெளியே வருகிறபோது வேகமாக மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன என்று எழுதுவார்கள். யாரும் அந்தக் குறைக்கு ஆளாகக் கூடாது. அதனால்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) மசோதாக்கள் வேகமாக நிறைவேற்றப்படுகின்றன என்று நீங்கள் சொன்னது தவறு. அப்படிச் சொல்லக் கூடாது.

**திரு. கு. ரமணி:** அந்த வார்த்தை அன்பார்லியமெண்டரியா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு அன்பார்லியமெண்டரி வார்த்தைகள் சிலவற்றைக் காண்பிக்கட்டுமா? It will wound your heart. அதைச் சொல்லாதீர்கள். எந்த காண்டெக்ஸ்ட்டில் பேசுகிறீர்கள் என்பதைப் பாருங்கள். (குறுக்கீடு) நீங்கள் அமருங்கள், சொல்கிறேன். இன்றைக்கு காலை 10-30 மணியிலிருந்து எல்லா மசோதாக்களும் படிப்படி-



யாக, எல்லோரையும் பேசவிட்டு, இங்கே அவர்கள் எடுத்துக் கொண்ட நேரத்திற்கேற்ப ஒவ்வொன்றாக நிறைவேற்றப்படுகின்றது. இதிலே எந்தக் குறைபாடும் கிடையாது. இதிலே நீங்கள் ஏதாவது குறை கண்டால் இனிமேல் ஒரு நாளைக்கு ஒரு பில் என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும். (குறுக்கீடு) அப்படித் தான் சொல்ல வேண்டும். நீங்கள் சொன்ன ரோடு ரோலர் என்ற வார்த்தை It is a sweeping remark on the entire Members.

**திரு. கு. ரமணி:** அந்த வார்த்தை அன்பார்லியமெண்டரி அல்ல. அந்த வார்த்தையில் உண்மை இருக்கிறதா, இல்லையா என்றுதான் நீங்கள் பரிசீலிக்க வேண்டும். ஒரு நாளைக்கு 12 சட்டங்களுக்கு நீங்கள் லிஸ்ட் போட்டு 9 சட்டங்கள் பாஸ் பண்ணியிருக்கிறீர்கள். ஒரு நாளைக்கு எத்தனை சட்டங்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எவ்வளவு மசோதாக்களை பாஸ் பண்ணலாம் என்று சொல்லுங்கள். (குறுக்கீடு) You tell me ஒரு நாளைக்கு ஒரு பில்லை பாஸ் பண்ணலாமா? (குறுக்கீடு) சட்டத்தினுடைய தன்மையைப் பொறுத்துச் சொல்லுங்கள். இதிலே வேறு எதுவும் சொல்லக் கூடாது என்பதற்காகத்தான் சொன்னேன். அந்தந்த உறுப்பினர்கள், அவரவர்களுடைய திறமைக்கு ஏற்றவாறு பேசலாம். (குறுக்கீடு). ஒவ்வொரு உறுப்பினரும் படித்து விட்டு வந்து பேசலாம். எவ்வளவு நேரத்தைக் கொடுப்பது என்பது, அந்தந்தச் சட்டத்திற்கு ஏற்ப, மசோதாவிற்கு ஏற்ப நாம் கொடுப்பது, இன்றைக்கு அதிகமான நேரம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, சட்டத்திற்கு ஏற்பத்தான் டைம் ஒதுக்கவேண்டும் என்பது கரெக்ட். இந்தச் சட்டம், தமிழகத்தில் இருக்கக்கூடிய கார்ப்பரேசன், முனிசிபாலிட்டி மற்றும் உள்ள பல்வேறு உள்ளாட்சி ஸ்தாபனங்களுக்கு ஸப்சேர்பனட்சக்கணக்கான மக்கள் வரி கட்டக்கூடிய ஒரு வொதிப்புள்ள காரியம் சம்பந்தப்பட்டது. அப்படிப்பட்ட ஒரு விஷயத்தைப் பற்றி விவாதிக்கும்போது, 3 மணி நேரம் 4 மணி நேரம் அல்லது 2 மணி நேரம் என்று சொல்வதைவிட [illegible] பேசி அல்லது நமது கமிட்டியிலேயாவது இதைப்பற்றி பேசி அதிகமான நேரத்தை ஒதுக்கியிருக்கலாம்.

அப்படிச் செய்ய ஆட்சேபணை இல்லை. நீங்கள் அப்படிச் செய்ய வில்லை என்று சொன்னால், இது ஒருவிதமான நெருக்கடியிலே ஓடிக்கொண்டிருக்கிறது என்றுதான் அர்த்தம். அப்படித்தான் வருகிறது. அதைத்தான் சொல்கிறோமே தவிர, நான் சொல்லக் கூடிய வார்த்தை அன்-பார்லிமெண்டரி அல்ல. அதை நீக்குவது என்றால் உங்களுடைய சொந்தப் பொறுப்பிலே நீக்குவதாகத் தான் அர்த்தம். நான் இதை ஒத்துக்கொள்ளவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் நீக்கவில்லை. அது இருக்கட்டும். உங்களுக்கு அதிக நேரம் கொடுத்திருக்கிறேன். அவ்வளவுதான். உங்களுக்கு சப்ஜெக்ட் தெரியவில்லை என்றால் அதற்கு நான் என்ன பண்ண முடியும்?

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, எனக்கு அதிக நேரம் கொடுத்ததைப் பற்றி ரொம்ப சந்தோஷம். பிரச்சினை என்ன வென்றால் எங்களுடைய கஷ்டங்களை நீங்கள் உணரவேண்டும் என்பதுதான். காரணம் என்னவென்றால், கோயம்புத்தூர் முனிசிபாலிட்டியிலே இந்த வரி விதிப்பு சம்பந்தமாக ஜனங் களுடைய தாக்குதலுக்கு ஆளாகிக்கொண்டு இருப்பவர்கள் நாங்கள். அங்கே ஒரு கன்சல்டேடிவ் கமிட்டி கூட கிடையாது. அப்படிப்பட்ட நிலைமையிலே இந்த கைட்லைன்ஸ் அடிப் படையிலே இவைகள் ஒர்க் அவுட் பண்ணி வருகிறபோது, எப்படிப் பரிசீலனை நடக்கும், எப்படி இந்த விவகாரங்கள் நிறைவேறும் என்பது மோஸ்ட் இம்பார்டன்ட். இதுதான் நாங்கள் வருத்தத்தோடு சொல்வதற்குக் காரணம். அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே விளக்கம் கொடுக்கிறேன் என்று சொல்லி விட்டார்கள். இது சாதாரணமாக மற்ற சட்டங்களைப்போல வராது. இந்தச் சட்டத்திலே, கொடுக்கும்படியான கைட்லைன்சை ஒத்துக்கொண்டு, இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு, ரூல்ஸ் தயாரிக்கப்பட்டு, திரும்ப சட்டசபையில் வைத்து, சட்டசபை ஒத்துக்கொண்டதற்குப் பிறகுதான் இந்த ரூல்சை இஷ்யூ பண்ணவேண்டும் என்ற மாதிரி ஒரு நிலை இருக்கிறது. ஆனால் அவ்வாறு இல்லாமல், இதனுடைய கைட்லைன்சிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்று சொல்லி, இப்போது விஷயம் முடிவுக்கு வருகிறது. இதைப்பற்றி இன்னும் தெளிவாக விளக்க விளக்கவேண்டும்.



கோவை மாநகராட்சியிலிருந்து வந்திருக்கக்கூடிய புரப்போசல்கு அடிப்படையிலே—மாநகராட்சியிடமிருந்தோ, அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்தோ வந்திருக்கிறது என்று நினைக் கிறேன்—இந்த ஆலோசனைக் குழுவை அமைக்க வேண்டும். காரணம், வருடக்கணக்காக கொடுத்த வாக்குறுதிகள் நிறை வேற்றப்படாமல் இருக்கின்றன. அந்தமுறையிலே ஜனங்களுக்கு நியாயம் வழங்குவதற்கு பிரதிநிதிகளாக இருக்கிற எங்களுக்கு நீங்கள், சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். அந்த முறையிலே உங்களுடைய பதிலை எதிர்பார்த்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற தனித் தீர்மானத்தின்படி, சென்னை, மதுரை, கோவை மாநகராட்சிகள் வரி விதிப்புகளைச் செய்வதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றன என்பது குறித்து இங்கே விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே மாநகராட்சியின் உள்ள ஆணையாளரால் அறிவிக்கை செய்யப் பட்ட நாளிலிருந்து ஒரு திங்களுக்கு மேற்படாத கால அளவிற்குள் எழுத்து மூலமாக கோரலாம் என்பது போன்ற பல பிரச்சினைகள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. இதிலே மிக முக்கியமான ஒன்று இருக்கிறது. 'வரி விதிப்பிற்குரிய இறுதியான கடைசியாக வரி விதிக்கப்பட்ட ஆண்டு மற்றும் ஆணையாளரால் நிர்ணயம் செய்யப்பட்ட ஆண்டு மதிப்பின் தொகை' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. கடைசியாக வரி விதிக்கப்பட்ட ஆண்டு எது என்பது, அங்குள்ள மாநகராட்சியின் ஆணையாளருக்கு ரெக்கார்டு மூலமாகத் தெரியும். ஆனால் சாதாரண மக்களுக்குக் கடைசியாக மாநகராட்சி வரி விதித்த ஆண்டு எது என்பது எப்படித் தெரியும்? இது என்ன கேள்வி, இதற்கு எப்படி பதில் கொடுப்பது என்று எனக்குத் தெரிய வில்லை. பதில் கொடுக்காவிட்டால் அவர்கள் மேல் முறையீடு செய்ய முடியாது என்று சட்டத்திலே இருக்கிறது. இந்த மாதிரியான பதிலை அவர்கள் பூர்த்தி செய்து அனுப்பாவிட்டால், அவர்கள் மேல்முறையீடு செய்ய முடியாது என்று சொல்கிறீர்கள்.

நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம்—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதிலை இப்போதுதான் பதிலுக்கு வந்திருக்கிறார்கள்—ஏற்கெனவே நகரமன்றத்திலே

[1987 நவம்பர் 18

இருக்கிற பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்து ஓரளவாவது நிவாரணம் தரவேண்டும் என்று நான் நேற்று முன்தினமே பேசும்போது சொன்னேன். இதற்கும் ஏதாவது ஒரு முறை வைத்து, மாநகராட்சியின் வருமானத்திற்கு நீங்கள் வழி செய்திருக்கலாம். ஆனால் தனித் தீர்மானமாக கொண்டு வந்து இந்த 3 மாநகராட்சிகளுக்கு என்ன செய்ய இருக்கிறீர்கள் என்பது தெரியவில்லை. இதில் 7, 8 கேள்விகளைப் போட்டு, அந்த கேள்விகளுக்கு விடை அளிக்கவேண்டும் என்று சொல்லி, ஏன் பாமர மக்களை சிரமப்படுத்துகிறீர்கள்?

(மாலை 4-10)

இன்னும் ஒன்று, ஆணையாளர் கொடுத்தது 30 தினங்கள் என்று சொன்னால் அவர் கொடுக்கின்ற தேதி ஒன்று இருக்கிறது, சர்வ் ஆகிற தேதி என்று ஒன்று இருக்கிறது. விவரம் தெரியாத, ஏழை மக்கள் அதைப் பார்த்து, தேதி போட்டு வாங்க முடியாது. 1—10—1987 முதல் நகராட்சிகளுக்கு அமல் ஆகின்ற வரிக்கான டிமாண்டு நோட்டீஸ் 30—9—1987-ல் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் 30—10—1987-ந் தேதி போட்டு அச்சிட்டு கொடுக்கப்படுகிறது நகராட்சி மன்றங்களில். இதற்கு எல்லாம் என்ன காரணம்? மாநகராட்சியில் 1—12—1987 என்று போட்டு கொடுப்பார்கள். அவர்கள் சர்வ் 1—1—1988-ல் செய்து இருப்பார்கள். எதை வைத்து டிமாண்டு நோட்டிஸை 30 நாட்களுக்குள் கொடுங்கள் என்று சொல்லுவது? இதில் எல்லாம் பெரிய நிர்வாகச் சிக்கல்கள் இருக்கின்றன.

இந்த நேரத்தில் இன்னும் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே இங்கே உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தவரிடம் அப்போதே சொன்னோம், மக்கள் பிரதிநிதிகள் அங்கே இல்லை என்று. அதனால் இந்த 3 மாநகராட்சிகளுக்கும் ஆங்காங்கு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களையும், மாநகராட்சிகளுக்கு உட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களையும் மற்றும் சில கட்சிகளின், பிரதிநிதித்துவமாக உள்ள கட்சிகளின் பிரதிநிதிகளையும், பொதுமக்களின் பிரதிநிதிகளையும் சேர்த்து ஒரு கமிட்டி அமைப்பதாக, நாங்கள் சொன்னது அல்ல, அரசாங்கம் சொன்னது. இந்த அரசாங்கம் சொன்னதை நம்பி



1987 நவம்பர் 18] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

சென்னை மாநகராட்சிக்குக்கூட எங்களுடைய பிரதிநிதிகளையும் சேருங்கள் என்று சொல்லி, இந்தக் கமிட்டி உடனே போடப் பட்டு விடும் என்று நம்பி நாங்கள் எல்லாம் பெயர்களை எழுதிக் கொடுத்து இந்த மாவட்டத்திலுள்ள எங்களுடைய கட்சியில் இருப்பவர்களின் பெயர்களை எழுதிக் கொடுத்தோம். பொது மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எங்களுடைய பிரதிநிதிகளையும் போடுங்கள் என்று எழுதிக் கொடுத்தோம். ஆனால் ஒரு ஆண்டு ஆகிவிட்டது, இன்னும் போடப்படவில்லை. சென்ற ஆண்டுக்கு முந்தைய ஆண்டு சொல்லப்பட்டது, இன்னும் போடப்படவில்லை. இதை எப்போது போட இருக்கிறீர்கள்? இந்த மாதிரி நிர்வாக சிக்கல்களும், நிர்வாகத்தில் மிக மிக தாமதமும் இருக்கின்றன.

இப்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நாம் 5 சட்ட முன்வடிவுகளைத்தான் முடித்து இருக்கிறோம் என்று சொன்னார்கள். 11 சட்ட முன்வடிவுகள் இன்றைக்கு நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. அதை வேண்டாம் என்று நான் சொல்ல வில்லை. கேட்டால் என்ன சொல்வீர்கள்? அலுவல் ஆய்வுக் குழுவில் இதைப் பற்றி பேசியிருக்கலாம் அல்லவா என்று சொல்லுவீர்கள். ஒத்துக்கொள்ளுகிறேன். அலுவல் ஆய்வுக் குழுவில் இன்றைக்குள் சட்டமன்றக் கூட்டத்தொடரை முடித்துக் கொள்ளலாம் என்று பேசி இருக்கிறோம். ஒத்துக்கொள்ளுகிறேன். அது நாங்களும் ஒத்துக் கொண்டதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சட்ட முன்வடிவுகளைப் பற்றி மட்டும் பேசினால் நல்லது. அலுவல் ஆய்வுக் குழுவில் நடந்ததைப் பற்றி எல்லாம் இங்கே பேசுவது முறை அல்ல. முறையைப் பின்பற்றி கொஞ்ச நேரத்தில் முடித்து விடுங்கள். கடைசியில் கூட்டத்தை முடித்துவிட்டு போகும் நாளில் நல்லபடியாகப் போகலாம்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது நான் சொல்லுவது என்ன என்றால் இத்தனை சட்ட முன்வடிவுகளைக் கொண்டுவரப் போகிறோம் என்று முன்கூட்டியே எங்களுக்குத் தெரிவித்தால் என்ன? இதை அரசிடம்தான் நான் கேட்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவரை நான் கேட்கவில்லை. 25, 30 சட்ட முன்வடிவுகளை

கொண்டு வந்து 3 நாட்களில் முடிக்கவேண்டும் என்று சொன்னால் என்ன அர்த்தம்? நான் கேட்பது அரசாங்கத்தை, மாண்புமிகு பேரவைத் தலைவரை அல்ல. 30 சட்ட முன்வடிவுகளை இப்படி கொண்டு வந்தால் எப்படி விவாதிப்பது? என்ன அர்த்தம்? நேற்று இரவு 8 மணி வரை கூட்டத்தை நடத்தி உட்கார்ந்து பேசியிருக்கிறோம். இன்றைக்கு சாப்பிடவே போகாமல் பேசிக்கொண்டிருக்கிறோம். கேட்டால் சாப்பிடாதவர்களுடைய ஓட்டை வாங்கித்தான் இங்கே வந்து பேசுகிறீர்கள் என்று சொல்லுகிறீர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அலுவல் ஆய்வுக் குழுவில் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். (குறுக்கீடு) மன்னிக்கவேண்டும். நீங்களும், மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் அலுவல் ஆய்வுக் குழுவில் சொல்லி இன்னும் சட்டப்பேரவையை 4 நாட்கள் நீட்டிக்கலாம் என்று முடிவு எடுத்து இருந்தால் அதோடு பிரச்சினை முடிந்து இருக்கும்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தனை சட்டங்கள் வருகிறது என்று நீங்கள் அங்கே சொல்லியிருந்தால் நாங்கள் சொல்லியிருப்போம். அது சொல்லப்படவில்லை. இதுதான் எங்களுடைய பிரச்சினை. அரசினர் அலுவல்கள் என்றால், அது என்னய்யா அரசினர் அலுவல்கள், அது எப்படி எங்களுக்குத் தெரியும்? இங்கே உள்ள எல்லோரிடமும் கேளுங்கள். அரசினர் அலுவல்கள் என்ன என்று நாங்கள் எப்படிப் பார்ப்பது? 30, 35 சட்ட முன்வடிவுகளைப் போட்டு 3 நாளில் முடிக்கவேண்டும் என்றால் எப்படி? ஒரு சட்ட முன்வடிவுக்கு ஒரு மணி நேரம் கொடுக்கவேண்டாமா? என்ன பேசப் போகிறோம் இங்கே? இப்போதைக்குத் தவிர வேறு எப்போது பேசப் போகிறோம்? இப்போது 8 நாளில் முடித்து விட்டோம். அடுத்து பிப்ரவரியோ, மார்ச்சோ, ஏப்ரலோ தெரியாது. (சிரிப்பு) என்னய்யா அர்த்தம்? (சிரிப்பு) (குறுக்கீடு) பாவாயில்லை. இன்னும் பேசுவதற்கு என்ன இருக்கிறது? எல்லாம் பேசிவிட்டேன்.

இந்தச் சட்டம் தேவையில்லாத ஒன்று எற்கெனவே நகராட்சி கொடுத்தப் போட்டதைப் போல ஏதோ ஒரு 50 சதவீதம், 100 சதவீதம் என்று போட்டு வரி வசூல் செய்தால் மாநகராட்சிகள் நன்றாக நடக்கும். மாநகராட்சியினுடைய





நிர்வாகம் நன்றாக நடக்கும். இந்தத் தனித் தீர்மானத்தை இப்போது வாபஸ் பெற்றுக் கொண்டு புதிதாக அடுத்த சட்ட மன்றக் கூட்டத் தொடர் வரும்போது செய்யலாம். இப்போது தான் அமைச்சர் அவர்கள் புதிதாக வந்திருக்கிறார்கள். அவர்கள் கெட்ட பெயர் வாங்கக்கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன். அவருக்காகச் சொல்லுகிறேன். இந்த அரசுக்குச் சொல்லுகிறேன். ஏதோ 50 சதவீதம் கூட்டுங்கள். கூட்டி மாநகராட்சியினுடைய வருமானத்தைப் பெருக்கி நன்றாகச் செய்யுங்கள். மாநகராட்சிக்கு வருமானம் கண்டிப்பாக வேண்டும். நகராட்சிகளுக்கு வருமானம் வேண்டும். அதில் எங்களுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. இப்போது பிரச்சினையை உண்டாக்கினால் இதில் லஞ்ச லாவண்யம் உள்ளே தலையிட்டு விடும். உங்களுக்கு அது நன்றாகப் புரியும். உங்களால் முழுமையாக அதைப் போக்கி செய்ய முடியாது. பல்வேறு சிக்கல்கள் இதில் இருக்கின்றன. 25 ஆயிரம் ரூபாய் போடுகிறேன், என்ன சொல்லுகிறீர்கள், என்று இப்படிப் பிரச்சினைகள் வரும். எப்படிப் பார்ப்பீர்கள் நீங்கள்? ஆகவே இதை வாபஸ் பெற்றுக்கொண்டு 50 சதவீதம், 100 சதவீதம் வரியைக் கூட்டி மாநகராட்சிகள் நன்றாக நடப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் காலை யிலிருந்து நிறைய சட்டமுன்வடிவுகளை எல்லாம் நிறைவேற்றி பல கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் மூலம் பல செய்திகளை எல்லாம் அவர்கள் தொகுதிகளுக்காகப் பெற்றுக்கொண்டு, ஊர் திரும்பு கின்ற நோக்கில், நல்ல பசியோடு அவர்களை உட்கார வைத்து, கடைசி நோக்கிலே அவர்கள் மத்தியிலே நான் வந்து நின்று கொண்டிருக்கிறேன். அதனால்தான் வழக்கமாக அமைதியாக வும், நல்ல கருத்துக்களை எல்லாம் தெளிவாகவும் எடுத்துச் சொல்லுகின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி போன்ற வர்கள்கூட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறுக்கிடு கின்ற அளவிற்குக் கொஞ்சம் வேகமாக சில வார்த்தைகளை இங்கே பயன்படுத்தினார்கள். இங்கே எத்தனை சட்டமுன் வடிவுகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டன, அதற்கு எங்களுக்கு எல்லாம் அவகாசம் இருக்கிறதா என்று மாண்புமிகு உறுப் பினர்கள் கேட்டார்கள்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 18

நான் இங்கே அறிமுகப்படுத்தியிருக்கின்ற இந்தத் தீர்மானத்தைப் பொறுத்த வரையில், அதிலே ஒன்றும் யாரும் அஞ்சுகின்ற அளவிற்கு எந்த விஷயமும் இல்லை. எப்படியோ, என்னுடைய அதிருஷ்டம். முதல் முதலிலே டாக்டர் கௌரிராஜன் பேச ஆரம்பித்ததாலே பின்னாலே பேசுகின்ற உறுப்பினர்கள் எல்லாம் அதிலே ஏதோ ஒரு பெரிய பூதத்தைக் கொண்டு வந்து, உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கடைசி நேரத்தில் அவசர அவசரமாக நம்மிடத்திலே கொண்டுவந்து திணிக்கிறார்கள் போலிருக்கிறது என்று எண்ணிக்கொண்டார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. திரு. ரமணி அவர்கள் இல்லை என்கிறார்கள். திரு. எ. எஸ். எ. ஆறுமுகம் அவர்கள் அதை அப்படி ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. சோ. மா. இராமச்சந்திரன் அவர்கள் எப்படியோ மாநகராட்சியிலே ஒரு திருத்தம் அல்லது சீர்திருத்தம் அல்லது முன்னேற்றம் கொண்டு வருகிறது . அரசு என்றாலே, அது அவர்களுக்குக் கொஞ்சம் கசப்பாகத்தான் இருக்கும். மன்னிக்கவேண்டும், அரசியல் நோக்கத்தோடு. ஏனென்றால் அவர் சட்டமன்ற உறுப்பினர், அந்தத் தொகுதியிலே இருக்கின்றவர் என்று எண்ணிப் பார்த்தால் இருக்கின்ற கஷ்டங்கள் எல்லாம் அவருக்குத் தெரியும். ஆகவே பரிகாரத்தை எப்படி விரைவிலே காண்பது என்று அவர்கள் எண்ணுவார்கள். அந்த அளவிற்கு நல்ல மன வளம் படைத்தவர். ஆனால் சில நேரத்திலே இப்படி அவசரமாக, துரிதமாக சில முடிவுகளை எடுத்து, அரசாங்கம் காரியத்திலே ஈடுபடுகின்ற நேரத்திலே குற்ற சொல்வதற்கு ஒன்றும் இல்லாமல் போய்விடுமே என்று அவர்கள் ஒரு அரசியல்வாதியைப்போல் எண்ணி, இந்தத் தீர்மானத்தை மறுக்கிறேன் என்று தெரிவித்திருக்கிறார்கள். நான் இதற்கெல்லாம் மிகத் தெளிவாகச் சொல்லிவிடுகிறேன்.

இப்போது இருந்து கொண்டிருக்கின்ற முறையிலேயிருந்து, மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்ற, மக்களாலே குற்றம் சொல்லப்படுகின்ற, கடந்த ஒரு மாத காலமாக தமிழகம் முழுவதும் அல்லோலகல்லோலப்பட்ட, அந்த அதிகாரிகள் 50 மடங்கு, 100 மடங்கு, சில இடங்களிலே 600 மடங்கு, 700 மடங்கு வரிகளை உயர்த்தியிருக்கிறார்கள் என்கிற, குற்றச்சாட்டுக்கள் எல்லாம் வந்ததற்குப் பிறகு, மிகக் கூர்மையாகப் பரிசீலனை



1987 நவம்பர் 18] [திரு. ஆர். எம். வீரப்பன்]

செய்து, இதிலே நமக்கு இழப்பு ஏற்பட்டாலும் சரி, அதிகப்படியான வரி விதிக்கவில்லையானாலும் சரி, எப்படியாவது ஒரு குறைந்தபட்சமாவது இந்த வரியை உயர்த்தி, மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று, மிகச் சிறந்த உணர்வோடு, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மன்றத்தின் மூலம் மற்றவர்கள் இதைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் நேற்று முன்தினம் நான் இங்கே வைத்த அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். நம்முடைய பத்திரிகைகள், குறிப்பாக சென்னையிலேயிருந்து வெளிவருகின்ற தமிழ் பத்திரிகைகளிலே பல, அவர்கள் அதைப் புரிந்து கொள்ளவில்லையா அல்லது புரிந்து கொண்டு அப்படிப் போடவேண்டுமென்று போட்டார்களா என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஆங்கிலப் பத்திரிகைகள் சரியாகத் தலைப்பு போட்டிருக்கிறார்கள். தமிழ்ப் பத்திரிகைகளிலே ஒரு பத்திரிகையைத் தவிர, சில பத்திரிகைகள் வீட்டு வரி உயர்வு என்று போட்டிருக்கிறார்கள். ஒரு பத்திரிகை திட்டமிட்டு, இங்கே அறிவிப்பிலே, அறிக்கையிலே இல்லாத ஒன்றை, சட்டமன்றத்திலே நடைபெறாத ஒன்றை வீட்டு வரி 3 மடங்கு, 4 மடங்கு உயர்த்தப்பட்டிருக்கிறது, எதிர்க்கட்சிகள் எல்லாம் கண்டனம் என்று போட்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஜனதா கட்சித் தலைவர் பாராட்டுவதாக என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் எதிர்க்கட்சிகள் எல்லாம் கண்டனம் என்று அவர்கள் செய்தியை எட்டுக் காலத் தலைப்பிலே வெளியிட்டு மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு—பத்திரிகைகளுக்கு—நான் இதை விளக்குவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இது அரசியல் அல்ல. பொதுமக்கள் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினை. அதனாலேதான் மாண்புமிகு உறுப்பினர் ஏன் இவ்வளவு அவசரத்திலே இங்கே கொண்டு வருகிறீர்கள் என்ற கவலையைத் தெரிவித்திருக்கிறார்கள். நான் அவசரத்திலே கொண்டுவருவதற்குரிய விஷயமே தவிர இதிலே சிக்கல் நிறைந்த விஷயம் ஒன்றும் இல்லை என்பதை விளக்கிவிடுகிறேன்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 18

(மாலை 4-20)

15 ஆண்டுகளாக, 17 ஆண்டுகளாக தமிழகத்திலே சொத்து வரிகள் இதை வீட்டு வரி என்று சொல்வதே தவறு. நான் பத்திரிகைகளுக்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இது வீட்டு வரி அல்ல. இது சொத்து வரி. இந்தச் சட்டத்திலே இதற்குக் கூறப்பட்டிருப்பது ஒரு மனிதன், ஒரு குடிமகன் வைத்திருக்கின்ற சொத்துக்கு வரியே தவிர, வீட்டு வரி என்று நாம் புறத்திலே சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதைப் பத்திரிகைகள் சட்ட மன்றத்திலே என்ன நடைபெறுகிறது என்பதைத் தெளிவாக சொல்ல முடியாமல் அல்லது சொல்ல விரும்பாமல் வீட்டு வரி, வீட்டு வரி என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஒரு கல்யாண மண்டபம் என்பது வீடு அல்ல. ஒரு நர்ஸிங் ஹோம் நடத்துவது என்பது வீடு அல்ல. வியாபாரங்களுக்காக வைக்கப்பட்டு இருக்கின்ற கட்டிடங்கள் வீடு அல்ல. ஆகவே சொத்துக்களுக்குள்ளே வீடும் அடங்குகின்றதே தவிர இது வீட்டு வரி மாத்திரம் அல்ல. நம்முடைய நிர்வாகத்திலே யிருக்கின்ற உறுப்பினர்களுக்கெல்லாம் தெரியும். இதை ப்ராபர்டி டாக்ஸ் என்று ஆங்கிலத்திலே சொல்கிறார்கள். சொத்து வரி என்று தமிழிலே சொல்கிறோம். ஆகவே வைத்துக் கொண்டிருக்கின்ற சொத்துக்கு விதிக்கப்படுகின்ற வரி 18 ஆண்டுகளாக உயர்த்தப்படவில்லை. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை இது சீரமைக்கப்பட்டு இருக்க வேண்டும். பல காரணங்களாலே தள்ளிப் போடப்பட்டே வந்து கொண்டிருக்கிறது. ஆகவே நகராட்சிக்கு வருமானம் இல்லை. மாநகராட்சிக்கு வருமானம் இல்லை. நான் நகராட்சி பற்றி சொல்ல விரும்பவில்லை.

மாநகராட்சியைப் பொறுத்தவரை, இந்த மூன்று மாநகராட்சிகளுக்காக இங்கே தீர்மானம் கொண்டு வருகிறோமே, இந்த மாநகராட்சிகளுக்கே—மதுரை மாநகராட்சிக்கு 20 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. 22 கோடி ரூபாய் செலவு செய்கிறது. கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 16¼ கோடி ரூபாய் வருமானம் வருகிறது. 16½ கோடி ரூபாய் செலவு செய்கிறது. சென்னை மாநகராட்சிக்கு 54¼ கோடி ரூபாய் வருமானம் வருகிறது. 60½ கோடி ரூபாய் செலவு செய்கிறது. இதிலே சென்னை மாநகராட்சியிலே சொத்து வரியாக வருவது 21 கோடி ரூபாய். மதுரை மாநகராட்சியிலே சொத்து வரியாக வருவது 6 கோடி ரூபாய். கோவை மாநகராட்சியிலே சொத்து வரியாக வருவது 4 கோடி



1987 நவம்பர் 18] [திரு. ஆர். எம். வீரப்பன்]

ரூபாய். நான் இதைச் சொல்வதற்கு காரணம், நகர மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்ய முடியவில்லை. அரசாங்கம் செய்ய வேண்டும். அரசாங்கம் செய்ய வேண்டுமென்றால் அரசாங்கம் ஏதும் பணம் காய்க்கின்ற மரத்தை வைத்துக்கொண்டு இருக்கவில்லை. மக்களிடமிருந்து வாங்கித்தான் அரசாங்கம் மக்களுக்குத் திருப்பித் தருகிறது. இந்த சொத்து வரி என்பதற்கு உள்ள அடிப்படை இலக்கணமே, யார் சொத்து வைத்துக்கொள்கின்ற வசதியிலே இருக்கின்றார்களோ அவர்களிடத்திலே வாங்கி அவர்களுக்கு வேண்டிய வசதியையும் செய்வது, மற்ற ஏழை மக்களுக்கு வேண்டிய வசதிகளையும் செய்வது. இது தான் சொத்து வரிக்கு உள்ள அடிப்படை இலக்கணம். ஆகவே 17 ஆண்டுகளாக வரி விதிக்காமல் நகராட்சி நிர்வாகங்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையில், நீண்டகாலமாக பல முயற்சிகள் எடுத்து எடுத்து நிறுத்தப்பட்டு 1986 ஆம் ஆண்டிலே ஒரு அரசு அலுவலரை நகரமெங்கும் அனுப்பி அவர்களை ஒரு ஆய்வு செய்து அவர்கள் மூலம் கிடைக்கின்ற அந்த அசெஸ்மெண்ட்டை வைத்து வரி விதிக்கலாம் என்று அரசாங்கம் முடிவு எடுத்தது. அப்போது, கிணறு வெட்ட போய் பூதம் புறப்பட்ட கதையாக, அந்த அதிகாரி ஒவ்வொரு நகராட்சியிலேயும் போய்—மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மா. இராமச்சந்திரன் அவர்கள் சொன்னார்களே அதைப்போல—ஒன்றுக்கு 500 மடங்கு அதிகம், ஒன்றுக்கு 50 மடங்கு அதிகம், இருந்ததிலிருந்து குறைவு இப்படிப் பல சிக்கல்களைத் தமிழகமெங்கும் நகராட்சிகளிலே ஏற்படுத்தி விட்டு வந்துவிட்டார்கள். இதனால் ஒரு மாதத்திற்குள்ளே மிகப்பெரிய கூக்குரல் பொது மக்களிடம் ஏற்பட்டு அதைப் பற்றிய முறையீடுகள் முதல்வர் அவர்களுக்கு வந்த உடனே, அவர்கள் உடனடியாக அதைத் தடுத்து நிறுத்தினார்கள். அப்படித் தடுத்து நிறுத்த ஆணை பிறப்பித்ததற்கு முன்பு 1978 ஆம் ஆண்டிலே ஒரு முறை இப்போது வரி உயர்வைப் பற்றிச் சிந்திக்க வேண்டாம் என்று அரசாங்கம் ஒரு ஆணையைப் பிறப்பித்தது. அந்தத் தடை ஆணை அப்படியே இருந்து கொண்டிருக்கிறது. அந்தத் தடை ஆணை இருக்கின்றபோது புதியதாக வரியை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க முடியவில்லை. அதற்காகத்தான் இந்த தனி அலுவலரை அனுப்பி, அசெஸ்மெண்ட் என்கின்ற அந்தக் கணக்கீடுகளைச்

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 18

செய்யச் சொன்னார்கள். அவர்கள் செய்தது இவ்வளவு கொடுமையாக இருந்தது என்று சொன்னவுடன், ஏப்ரல் மாதத்திலே அந்த அசெஸ்மென்ட்டின்மீது வரி விதிப்பதையும் நிறுத்துங்கள் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகம் வந்தது. ஆகவே அவர்கள் முறையாகச் செய்து விடுவார்கள் என்று இந்த அக்டோபர் மாதத்திலிருந்து வரி விதிப்புகளை நீங்கள் தொடரலாம் என்று சொன்னோம்.

ஆனால் எதிர்பாராத விதமாக முன்பு ஒருவர் சுப்ரீம் கோர்ட் வரை போய் இருக்கிறார். 100 ரூபாய் வரி கட்ட மறுத்துவிட்டு 15,000 செலவு செய்து சுப்ரீம் கோர்ட்டுக்கு போகிறார்கள். இது தான் நம்முடைய நாட்டிலே நாம் இன்றைக்கு வளர்த்து வைத்திருக்கின்ற மன இயல்பு.

அப்படி ஒருவர் சுப்ரீம் கோர்ட்டிற்குப் போய், நம்முடைய திரு. சௌரிராஜன் அவர்கள் தெரிவித்தார்களே, இப்போதுகூட வழக்குமன்றத்திலே இருக்கிறது என்று, வழக்குமன்றத்திலே இருக்கிற வரி விதிப்பிற்கும், இதற்கும் சம்பந்தமே இல்லை. அது ஒருவருக்காக விதிக்கப்பட்ட வரியை, முன்பு சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்ததே, அந்த 'ரென்டல் வால்யூ, ஃபேர் ரென்ட்'—அந்த ஃபேர் ரென்டினுடைய அடிப்படையிலே போட்டது செல்லாது என்று ஒருவர் போய் இருக்கிறார். சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளிக்கிறது, "நீ ஃபேர் ரென்ட் வால்யூவிலே போடு" என்று. "ஆனுவல் ப்ராப்பர்ட்டி வால்யூவையும் எடுத்துக்கொள்" என்று. அதன் அடிப்படையிலே இங்கே மாநகராட்சி ஒருவருக்கு வரி விதிக்கிறது. அதை எதிர்த்து உடனே இங்கே ஹைகோர்ட்டிற்கு ஒருவர் போய் இருக்கிறார். அதுதான் நிலுவையிலே நிற்கிறது.

இப்போது அந்த சுப்ரீம் கோர்ட் தீர்ப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற கைட்லைன்ஸ்—அந்த அறிவுரைகள் இன்றைக்குப் பொருத்தமாக இல்லை, ஆகவே அதையும் நாம் நீக்குகிறோம். ஆகவே, அரசாங்கம் விதித்திருந்த தடையை நீக்குகிறபோதும்; சுப்ரீம் கோர்ட் கொடுத்த கைட்லைனை நீக்குகிறபோதும், நம்முடைய தனி அலுவலர் போய், ஒரு முறையைச் சொன்னாரே அதையும் ஏற்றுக்கொள்ளவேண்டாம் என்று சொல்கிறபோதும், அவர்கள் இருட்டிற்குள்ளே நிற்கிறார்கள். அவர்களுக்கு வழி காட்டுகின்ற ஒரு நெறிமுறையை அரசாங்கம் தரவேண்டும்.



1987 நவம்பர் 18] [திரு. ஆர். எம். வீரப்பன்]

அதைத்தான் நேற்று முன்தினம் தமிழகத்திலே இருக்கின்ற [illegible]சிபல் நகரங்களுக்காக, வழிகாட்டுகின்ற நெறிமுறைகளை அரசாங்கம் வழங்கியது. அவர்களுக்கு சட்டப்படி இருக்கின்ற அந்த விதிமுறைகள், அந்த அதிகாரங்கள், அந்த கவுன்சில்களுக்கு இருக்கின்றன. அவர்கள் மெதுவாகச் செய்யலாம். நான் பின்னாலே அந்தக் குறிப்பைப் படிக்கிறேன்.

நீங்கள் ஒன்றைச் சொன்னீர்கள், செங்கல்பட்டிலே, அங்கே மட்டுமல்ல தமிழகத்திலே பல இடங்களிலே இப்படிப்பட்ட— இதை அநியாயம் என்று சொல்வதா, அல்லது அறியாமை என்று சொல்வதா, தெரியவில்லை. அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் ஏற்படுத்தவேண்டும் என்பதற்காகவே திட்டமிட்டுச் செய்ததா என்றுகூட அதை எடுத்துக்கொள்ளலாம். நான் சில குறிப்புக்களை மாத்திரம் இங்கே படிக்கவிருக்கிறேன். ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிந்திருக்கிறது. எல்லா இடங்களிலேயிருந்தும் முதல்வரைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள், இரண்டு நாட்களாக.

ஆனால் நம்முடைய பத்திரிகையாளர்கள் என்ன காரணத்தினாலோ அதைப் புரிந்துகொள்ளவில்லை. அல்லது புரிந்து கொள்ளவும் முயலவில்லை. இது வரி உயர்வு, வரி உயர்வு என்ற ஒரு [illegible] செய்கின்றன. நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன், அன்றைக்கு அகில இந்திய வானொலி கூட, வரி உயர்வு என்றுதான் செய்தியைத் தெரிவித்திருக்கிறதாம். நான் இந்த [illegible] கருத்தையும் உங்கள் மூலம் வானொலிக்குத் தெரிவிக்கிறேன். வானொலி, இந்தச் சட்டமன்றத்திற்கு செய்தியைச் சேகரிப்பதற்காக அவர்களிடத்திலே பணியாற்றுகின்ற நிருபர்களை அனுப்புவது இல்லை. அவர்கள் ஆங்காங்கே ஒரு [illegible] சில நிருபர்களைத் தனியாக இங்கே [illegible] அப்படி வருகிற நிருபர்களுக்கு [illegible] இருக்கிறதோ, என்னவோ எனக்குத் தெரியாது. [illegible] ஏற்றுக்கொள்கிறார்களோ, அதை [illegible] அல்லது, [illegible] இருந்தால் அதை [illegible] "சட்டமன்றத்தில் இன்று" என்று [illegible] அந்த வானொலிச் செய்தியிலேகூட, வரி உயர்வு [illegible] வரி உயர்வு [illegible] இருக்கிறார்கள் [illegible] யிலே விவரங்களைத் தெரிந்துகொள்ள [illegible] என்றால்,

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 18

இங்கேதான் இருக்கிறோம், விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கவேண்டும். அதற்கு முயற்சிக்கவில்லை. ஆகவே, அந்த மூன்று தடைகளையும் நீக்கியதற்குப் பிறகு அவர்களுக்கு வழிகாட்டுகின்ற முறையை ஏற்கனவே, 'டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிட்டிஸ் ஆக்ட்'-டிலே இருக்கிற சட்டத்தின்படி நாம் செய்துவிட்டோம். ஆனால் மாநகராட்சிகளுக்கென்று தனி சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்திலே நாம் அந்த வழிகாட்டுகின்ற நெறிமுறைகளைச் சொல்கிறபோது, இந்தத் தடைகளை எல்லாம் நீக்குகிற நேரத்தில், விதிகளிலே மாறுதல் செய்தாக வேண்டும். இவ்வளவு அவசரமாக இந்த விதித் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு அதுதான் அடிப்படை.

இந்த விதித் திருத்தத்தைக் கொண்டு வருகிறபோது, ஒரு புதிய முறையை அதிலே அறிவித்து இருக்கிறோம். என்னவென்றால், இதுவரை ஒரு ரெவின்யூ இலாகாவைச் சேர்ந்த அதிகாரி போவார். அவர் அந்த வீட்டைப் பார்ப்பார். அந்த வீடு, எவ்வளவு பிளின்த் ஏரியா அல்லது எத்தனை ஏக்கரிலே கட்டப்பட்டிருக்கிறது, எந்தனை கிரௌண்டிலே இருக்கிறது, எவ்வளவு பெரிய வீடு என்பதைப்பற்றியெல்லாம் அவர் கவலைப்படுவதில்லை. அவர் அந்த வீட்டுக்காரரைக் கூப்பிடுவார். இந்த வீட்டிற்கு நான் 2,500 ரூபாய் வரி விதிக்கப் போகிறேன் என்பார். பேசுவதற்கு சாமர்த்தியம் உடைய அதிகாரியாக இருந்தால் அங்கேயே பேசுவார். இல்லையெனில் ஒரு நோட்டீசை அனுப்புவதற்கு முயல்வார். இப்படி நோட்டீசை அனுப்பப் போகிறேன் என்று சொல்வார். அந்த வீட்டுக்காரர் ஏதோ அவர்களுடைய பூர்வீகமாக, அவர்களுடைய தாய்-தந்தையர் தேடி வைத்த அந்த வீட்டிலே வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அவருக்கு வேறு வழியில்லாமல் இவர்களிடத்திலே போய் என்ன செய்வது என்று கெஞ்சுவார். உடனே, அப்படியா, நான் குறைத்துப் பார்க்கிறேன் என்று சொல்வார். குறைப்பதானால் என்னென்ன செய்யவேண்டும் என்ற வகைகளையும் சொல்வார். அந்த வழி வகைகளை எல்லாம் காட்டியதற்குப் பிறகு, 2,500 - 250 ஆகக் கூடும். சில நேரத்திலே அது ஆயிரமாகக் கூட உயரும். இல்லாமல் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிற முறை.



1987 நவம்பர் 18] [திரு. ஆர். எம். வீரப்பன்]

இங்கே அறிவித்திருக்கிற இந்தத் தீர்மானத்தின் மூலம், மாண்புமிகு டாக்டர் சௌரிராஜன் அவர்களுக்கும் சொல்கிறேன் இனிமேல் வீட்டை வைத்து இருக்கிறவர்கள் அல்லது சொத்தின் சொந்தக்காரர்களாக இருப்பவர்கள், 'நான் ஒரு வீட்டை வைத்திருக்கிறேன், அந்த வீடு இந்த அளவு அகலம் உடையது, அல்லது இந்தப் பரப்பளவு உடையது, இவ்வளவு இடத்திலே அது இருக்கிறது, நான் குடியிருக்கிறேன் அல்லது பாதியிலே வாடகைக்கு வைத்திருக்கிறேன் அல்லது வாடகைக்கே விட்டிருக்கிறேன் அல்லது இந்த வாடகை வாங்குகிறேன்' என்று

(மாலை 4-30)

அவரே, 'ரிட்டன்' என்று சொல்லப்படுகிற, அதை நமூனா என்று சொல்வதா அல்லது அறிக்கை என்று சொல்வதா, அதை அவர் பூர்த்தி செய்து கொடுக்கிறார். அந்த மாநகராட்சி அறிவிப்பு செய்கிறது; விளம்பரம் செய்கிறது பத்திரிகைகளிலே. சொத்து வைத்திருக்கிறவர்கள் தங்களுடைய சொத்து விவரங்களை கீழ்க்கண்ட விவரங்கள் அடங்கிய அந்த அறிக்கையை ஒரு மாதத்திற்குள்ளே மாநகராட்சிக்குத் தர வேண்டும். அப்படித் தந்ததற்குப் பிறகு அதை வைத்துக்கொண்டுதான் வரி போடுகிறார்கள்; அதை நம்பிக்கொண்டுதான் போடுகிறார்கள். இன்றைக்கு வருமான வரியிலேகூட ஒரு குறிப்பிட்ட தொகைக்குள்ளே வருமானம் இருந்தால் அந்த அசஸ்ஸி கொடுக்கிற ரிட்டன்-ஐ வைத்துக்கொண்டு விசாரணையில்லாமல் வரி விதிப்பு செய்யலாம் என்று இருக்கிறது. அதற்குமேலே பெரிய தொகைகள் போகிறபோதுதான் அவர்களைக் கூப்பிட்டு விசாரிப்பார்கள். அந்தச் சந்தேகங்களையெல்லாம் கேட்பார்கள். செல்ப்-அசஸ்மெண்ட் என்று அவர்கள் சொல்கின்ற அந்தக் கணக்கை வைத்துக்கொண்டு வரி விதிப்பு செய்வது என்பது இன்கம்டாக்ஸ்-இலே இப்போது இருக்கிறது. அதைப்போல, உண்மை என்று நம்புகிறபோது, அவர் அதன்மீதுதான் வரி விதிப்பார். இல்லை, அதிலே தவறு இருக்கிறதென்றால், இன்றைக்கு யார் செய்கிறார்கள்? பில் கலெக்டர் இடத்திலே இந்த வேலையைக் கொடுக்கிறார்கள் என்றால், இன்றைக்கு அசஸ்ஸர் என்று நாம் அனுப்புகிறோமே அவர் என்ன பெரிய கமிஷனரா அல்லது அசிஸ்டெண்ட் கமிஷனரா அல்லது ரெவின்யூ ஆபீசரா? இவர் என்ன வேலையை

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 18

செய்கிறார்? வாக்காளர்களைக் கணிப்பதற்காக ஆசிரியர்களை அனுப்புகிறோமே அதைப்போல, நீங்கள் கொடுத்து இருக்கிறீர்களே ரிட்டன், இதெல்லாம் சரியா என்று கேட்பதற்கு ஒருவர் நம்முடைய மாநகராட்சியிலே இருந்து போகிறார். அவன் எத்தனை ஆண்டுக்காலம் இருக்கிறான்; அவனுக்கு வீட்டினுடைய அளவும் தெரியாது. எத்தனை காலந்தான் இந்த நாட்டு மக்களை நாம் இருளிலேயே வைத்திருக்கவேண்டுமென்று விரும்புகிறீர்கள். சுதந்திரம் பெற்று நாற்பதாவது ஆண்டு விழாவை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறபோது, சென்னை மாநகராட்சியிலே, மதுரை மாநகராட்சியிலே, கோவை மாநகராட்சியிலே வாழ்கிறவர்கள் தங்களுடைய வீட்டைப்பற்றி விவரம் கொடுக்கத் தெரியாது என்று சொல்வது நமக்கு ஒரு பெருமையா? அப்படி வைத்திருக்கலாமா? அப்படி வைத்திருப்பதனால்தானே அசஸ்சர்களெல்லாம் வந்து அவர்களை குதிரை ஏறிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அடிக்கடி சொல்கிறீர்களே, அதிகாரிகள் ஏமாற்றுகிறார்கள், அதிகாரிகள் மிரட்டுகிறார்கள் என்று; எந்த அதிகாரிகள் மிரட்டுகிறார்கள்? ஆகவே எப்படியோ, தனக்குத் தெரிந்தோ அல்லது தன்வீட்டிலே படித்த தன் பிள்ளைகளை வைத்துக்கொண்டோ, எப்படியோ நாட்டினுடைய நிர்வாகத்திலே பங்குகொள்கிற உணர்வு அவர்களுக்கு வரவேண்டாமா? மாநகராட்சியிலே, சொத்து வைத்திருக்கிறவன், தன்னுடைய சொத்து இன்னது என்று சொல்கின்ற அடிப்படை அறிவைக்கூட பெறவேண்டாமா? அதைக் கொடுக்கிறான்; கொடுத்ததற்குப் பிறகு வரி விதிப்பது எப்படி என்பதற்குத்தான் இலக்கணங்கள். அதுவும் மாநகராட்சி சட்டத்திலேயே இருக்கிறது. நீங்கள் சொன்னீர்களே அது என்ன வேல்யு என்று; சட்டத்திலே இருக்கிற அந்த வார்த்தையை அப்படியே போட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் இப்போது திருத்த வேண்டிய அவசியம் வருகிறது. இப்போது, ஒரு தனி அலுவலர் போய் ஏற்றியிருக்கிறாரே, அதை அரசாங்கம் தடுத்து நிறுத்துகிறதே, அப்படி ஒரு பிரச்சினை வருகிறபோதுதான். இதற்கென்று வழி காண மாநகராட்சி இப்போது மிகப் பெரிய ஆய்வை நடத்திக்கொண்டிருக்கிறது. அந்த ஆய்விலிருந்து வந்திருக்கிற கருத்துத்தான் இங்கே நாம் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானம்.



1987 நவம்பர் 18] [திரு. ஆர். எம். வீரப்பன்]

ஏதோ இந்த அமைச்சர் புதிதாக வந்திருக்கிறார், அதனாலே வேகமாக, அரைகுறையாகச் செய்கிறார் என்று என்னைப் பாராட்டுவதுபோல பாராட்டிவிட்டு, இவன் ஒன்றும் தெரியாதவன் அவசரக்காரன் என்று நீங்கள் "ஹேஸ்டி" என்று சொல்கின்ற அந்த வார்த்தைக்கு பொருள் உள்ளவனாக என்னை மாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். நான் அப்படி பழக்கப்பட்டவன் அல்ல. ஆனால் இந்த நடவடிக்கைகள், நான் இந்த வாரம் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கலாம்; இதற்கு முன்னாலே இருந்த அமைச்சரும், அதற்கு முன்னாலே இருந்த அமைச்சரும் தொடங்கி வைத்து நடந்துகொண்டு வருகின்ற நடவடிக்கைகள். இது ஏதோ நேற்று பெய்த மழையிலே இன்றைக்கு முளைத்த காளான் அல்ல. தொடர்ந்து கடந்த ஓராண்டு, இரண்டு ஆண்டுகளாக இந்தப் பிரச்சினைகள் பரிசீலிக்கப்பட்டு இந்தியாவிலே இருக்கின்ற, பம்பாய் மாநகரம், கல்கத்தா மாநகரம் போன்ற மாநகரங்களிலே எப்படி வரி வசூலிக்கப்படுகிறது, எப்படி வரி விதிக்கப்படுகிறது என்பதையெல்லாம் ஒரு குழு போய் ஆராய்ந்து, பம்பாயிலேயும், கல்கத்தாவிலேயும் இருக்கின்ற அந்த முறைதான், இந்த 'கார்டு சிஸ்டத்தை' இன்றைக்கு நாம் அறிவிக்கப் போகிறோம். இந்த விவரங்களையெல்லாம், இந்த ரிட்டன்-இலே கொடுத்ததற்குப் பிறகு, ஒரு அட்டை தயார் செய்கிறார்கள். அந்த அட்டை இனிமேல் அந்தந்த வீட்டுக்காரர்களிடத்திலே இருக்கும். ஒவ்வொரு 6 மாதத்திற்கும் அவர்களுக்கு டிமாண்ட் நோட்டீஸ் வரவேண்டிய அவசியமே இல்லை. ஒரு தடவை வரி விதித்தால், அடுத்த 5 ஆண்டுகள் வரை அந்தக் கட்டடத்தில் அடிஷனல் வந்தாலோ அல்லது ஆல்டரேஷன் வந்தாலோ வேறு காரணங்களின்றி இந்த வரி விதிப்பு மாற்றப்படாது. 6 மாதங்கள் முடிந்தவுடன், அக்டோபர் மாதம் தொடங்கி, அவர்களே கொண்டு போய்க் கட்டிவிடலாம். மார்ச் மாதம் முடிந்தவுடன், ஏப்ரல் மாதத்திலே தொடங்கி அவர்களே கட்டிவிடலாம், அந்த அட்டையிலேயே வரவு வைத்துத் தந்துவிடுவார்கள். இதற்காக ஒரு டிமாண்ட் நோட்டீஸ்; அந்த டிமாண்ட் நோட்டீஸ் வந்ததா என்று பேரம் பேசுவதற்கு ஒரு இடைக்காலம்; இதெல்லாம் இனிமேல் தேவையில்லை. அந்தந்த வீட்டுக்காரர்களிடத்திலே ஒரு அடையாள அட்டையிருக்கும்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 18

அதன் சொத்து மதிப்பு, அந்தச் சொத்துக்குள்ள வரி விதிப்பு அதிலே குறிப்பிட்டிருக்கும். அந்த அட்டையை வழங்குவதற்குத்தான் இந்தத் தீர்மானம். ஏனென்றால் மாநகராட்சி சட்டப்படி இப்படிப்பட்ட ஒரு நடைமுறையை நாம் திடீரென்று புகுத்திவிட முடியாது. இந்த விவரம் அடங்கிய அட்டையை நாம் வழங்குவதற்காகத்தான் இந்தத் தீர்மானமே தவிர இதனாலே வேறு எந்த பூகம்பமும், வேறு எந்த எரிமலையும் இப்போது வரவில்லை.

இந்தத் தீர்மானத்தை நீங்கள் நிறைவேற்றித் தந்தால் அடுத்து வருபவர்களுக்கு இருக்கும் லாபத்தைச் சொல்லுகிறேன். நான் நேற்றைக்கு முன்தினம் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியோடு ஒரு அறிக்கையைத் தந்தேன். அதாவது 50 மடங்கு, 100 மடங்கு என்றெல்லாம் வீட்டு வரியை உயர்த்தி குழப்பம் செய்து கொண்டிருந்த சூழ்நிலையை மாற்றி மிகத் தெளிவாக, ஏற்கெனவே ரூ. 50 கட்டினால் அது சொந்த வீடு என்றால் இனி அதற்கு ரூ. 100. வாடகை விட்டிருக்கு 150 ரூபாய். அல்லது அது வேறு தொழில் நிறுவனங்களுக்கு விடப்பட்டிருந்தால் அதற்கு 200 ரூபாய் என்று சாதாரண குடிமகன்கூட தெரிந்து கொள்கிற அளவுக்கு ஒரு திட்டத்தை அறிவித்தார்களே அந்தத் திட்டத்தை மாநகராட்சிக்கும் இப்போது நாம் அறிமுகப்படுத்த வேண்டும். ஏனென்றால் இன்றைக்கு வண்டி ஓடாமல் நின்று கொண்டிருக்கிறது அதைக் கொஞ்சம் தள்ளிவிட முயற்சிக்கிறோம். அவ்வளவுதான். இப்படித் தள்ளிவிடுகிற நேரத்தில் எல்லோரும் சேர்ந்தே தள்ளி விடுவோம். தள்ளிவிட்டதற்குப் பிறகு அது ஸ்டார்ட் ஆகிவிடும். அதற்குப் பிறகு ஓடும். அதற்குப் பிறகு நீங்கள் இவரை மாற்றிக் கொள்ளலாம். அதிலே பிரேக் போட்டுக் கொள்ளலாம். அது எங்கேயும் போய் இடித்துவிடாமல் பார்த்துக் கொள்ளலாம். டாக்டர் சௌரிராஜன் போன்றவர்கள் இருக்கிறபோது அது போய் இடிக்குமா? இடிக்க விடுவோமா? ஆகவே தயவு செய்து நீங்கள் வருத்தப்படத் தேவையில்லை. இப்போது அது நின்று கொண்டிருக்கிறது. தேங்கிக் கிடக்கிறது. ஒரு காரியமும் நடைபெறவில்லை. 2 ஆண்டுகளாக அமைச்சர்கள் எடுத்த முயற்சிகள்தான் இன்றைக்கு உருப்பெற்று இருக்கிறது. அதைச் சொல்லுகிற இந்த நேரத்தில் நான் வந்து நிற்கிறேன். வேறு ஒன்றுமில்லை.



1987 நவம்பர் 18] [திரு. ஆர். எம். வீரப்பன்]

ஆகவே இந்த முயற்சி முறையாக ஆய்வு செய்து எடுத்திருக்கிற முயற்சி. அந்த வகையில் இந்தத் தீர்மானத்தின் விளைவாக நடைபெறப் போவது இந்த அட்டை வழங்குவதுதான். ஒவ்வொரு வீட்டுக்காரருக்கும் நாம் வழங்க இருக்கிறோம். தயவு செய்து பத்திரிகை நண்பர்களை உங்கள் மூலமாக அன்போடு கேட்டுக் கொள்ளுவேன். இவ்வளவு கஷ்டப்பட்டு இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொண்டிருப்பது உறுப்பினர்களுக்காக அல்ல. இந்த நாட்டு மக்களுக்குச் செய்தியைத் தெரிவிக்க வேண்டிய நம்முடைய பத்திரிகையாளர்களுக்காகத்தான். ஏனென்றால் அவர்கள் இதையும் புரியவில்லை என்று செய்துவிடக் கூடாது என்பதற்காகத்தான். ஏனென்றால் ஒவ்வொரு நாளும் பர்னிங் பிராப்ளம் இது. எரிந்து கொண்டிருக்கிற பிரச்சினை இது. இதிலே அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் வருகிறதா? அரசாங்கம் வரி வசூல் செய்யாததால் நிதி தட்டுப்பாடு ஏற்பட்டு அதனால் நகராட்சிகள் செய்ய வேண்டிய நன்மைகளைச் செய்யாமல் தடுத்து அதுவும் அரசாங்கத்திற்குக் கெட்ட பெயரைத் தானே ஏற்படுத்தும். நாம் அதைப் பார்த்துக் கொள்ளலாம் என்று தயவுசெய்து மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினையில் விளையாடுவதற்கு யாரும் முன்வர வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். மக்கள் எவ்வளவு தாங்குவார்கள்? எவ்வளவு சுமையைத் தாங்குவார்கள்? அந்த வரியைச் சுமையாக ஆக்காதீர்கள். இதுதான் புரட்சித் தலைவருடைய ஆணை. எவ்வளவு அவர்களால் முடியுமோ அதை அவர்கள்மீது ஏற்றுவோம்; அவர்கள் தாட்டும் என்று சொல்லியிருக்கிறார். 15 ஆண்டுக் காலமாக நாம் வரியை உயர்த்தவில்லை என்றால் அது அவர்களுடைய தவறு அல்லது நிர்வாகத்தினுடைய தவறு. ஆகவே ஒரே நேரத்தில் எல்லா சுமையையும் ஏற்ற முடியாது. அதைத் தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே இந்தத் தீர்மானத்தின் மூலம், நேற்றைய முன்தினம் தமிழகத்தில் இருக்கிற நகராட்சிகளுக்கு நாம் நெறிமுறைகளைச் சொன்னோமே, அந்த நெறிமுறைகளை சென்னை மாநகராட்சிக்கும் கொண்டு வருவோம். அதற்குத்தான் இந்த விதித் திருத்தம் வகை செய்கிறது. அப்படிச் சொல்லுகிறபோது அவர்கள் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு நிரந்தரமான திட்டம் வேண்டும். ஒவ்வொரு அதிகாரியும்போய்

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 18

கிழே இருக்கிறவரை மிரட்டி அவர்கள் ஏதாவது அசெஸ்மெண்ட் செய்துவிடக்கூடாது. அந்த முறையை மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் அறிமுகப்படுத்தப்பட்டது இந்த அற்புதமான திட்டம், கார்டு வழங்கும் திட்டம் அதற்காகத்தான். அதற்காகத்தான் இந்தத் தீர்மானம் என்பதைச் சொல்லி இதுவரை இது எப்படி நடந்து கொண்டிருந்தது என்பதற்கு நான் ஒன்று அல்லது இரண்டு புள்ளிவிவரங்களை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். நேரம் அதிகமாகிவிட்டது. ஆனாலும் இது கொஞ்சம் சுவையாக இருக்கும்.

அதாவது ஏன் இதிலே அரசாங்கம் நுழைந்தது? தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி மன்றத்திலே இருப்பவர்கள் செய்ய வேண்டியதை அவர்கள் செய்து கொண்டிருக்க வேண்டும். அதைச் செய்யாமல், அரசாங்கம் என்ன சொல்லுகிறது அரசாங்கம் என்ன சொல்லுகிறது என்று கேட்டார்கள். அரசாங்கம் எங்களை வரியை உயர்த்தக்கூடாது என்று சொல்லிவிட்டது என்று தமிழகத்தில் இருக்கிற எல்லா நகராட்சி மன்றங்களுமே நாங்கள் வரியை உயர்த்துவதற்கு அனுமதி கொடுங்கள் என்று தீர்மானங்களைப் போட்டார்கள். அந்தத் தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு பரிசீலித்ததற்குப் பிறகுதான் வரியை உயர்த்தாதே என்று 1978 ஆம் ஆண்டு ஒரு தடை ஆணையைப் பிறப்பித்தோமே அதை நீக்கிவிட்டு, நீங்கள் வரியை உயர்த்திக் கொள்ளுங்கள் என்று சொன்னோம்.

வரியை உயர்த்திக் கொள்ளுங்கள் என்று சொன்னபோது எப்படி வரியை உயர்த்துவது என்பதற்கு சுப்ரீம் கோர்ட்டின் ஆர்டர் இருக்கிறது. அதாவது ஆன்யுவல் ரென்டல் வேல்யூ அல்லது மார்க்கெட் வேல்யூ. அங்கேதான் வந்தது வம்பு.

(மாலை 4-40)

அதை வைத்துக் கொண்டு இவர்கள் செய்ய ஆரம்பித்தார்கள். அதனாலே என்ன விளைவுகள், பாதகங்கள் எரிமலையைப் போல கிளம்பியிருக்கின்றன என்பதற்கு காஞ்சிபுரம் நகராட்சியை சான்றாக—ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப்போல—ஒன்று போதும் என்பதால் சொல்லுகிறேன். ஒரு குடிசை வீடு, அவர்களே சொந்தமாக குடியிருக்கிறார்கள். குடிசையை வாடகைக்கா விட முடியும்? 1969-70-ல் அந்த குடி-



1987 நவம்பர் 18] [திரு. ஆர். எம். வீரப்பன்]

சைக்கு விதிக்கப்பட்ட வரி எட்டு ரூபாய் 33 காசுகள். இப்போது புதிதாக உயர்த்தப்பட்ட வரி 44 ரூபாய் ஒரு குடிசைக்கு. புரட்சித் தலைவர் நேற்றைய முன்தினம் அறிவித்த ஆணையின்படி இதற்கு வரியை உயர்த்தக்கூடாது. அந்த எட்டு ரூபாய் 33 காசுகள்தான் இருக்கும். ஏன் குடிசைகளுக்கு வரியையே ரத்து செய்துவிடலாமே என்று கேட்பீர்கள். ஏனென்றால் குடிசை வாழ் மக்களைப்பற்றி கவலைப்படுபவர் புரட்சித் தலைவர்தானே. முன்னால் இருந்தவர்கள் செய்யவில்லை. ஆனால் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் அவர்கள் செய்வார்களே என்று கேட்பீர்கள். ஆனால் ஒரு நகரத்திலே குடிமகனுக்கு சில உரிமைகள் இருக்கின்றன. எனக்குத் தண்ணீர் கொடு, விளக்கு கொடு, மின்சாரம் கொடு, சாக்கடை கொடு என்று கேட்கிற உரிமைகள் அவன் ஒரு வீட்டை வைத்துக்கொண்டு வரியைக் கட்டுகிறான் என்றால்தான் வருகின்றன. ஆகவே ஒரு குடிசையை வைத்துக்கொண்டிருந்தாலும் அவன் ஒரு வீட்டு வரியைக் கட்டுகிறான் என்ற உணர்வோடுதான் இந்த ரூ. 8.33 காசு இருக்கிறது, அதை உயர்த்தாதே என்பது புதிய ஆணை. அதைப்போலவே ஒரு ஓட்டு வீடு. அவர் சொந்தமாக குடியிருக்கிறார். அதற்கு ரூ. 14.10 பழைய வரி. இப்போது உயர்த்தப்பட்ட வரி 175 ரூபாய் 90 காசுகள். இது எத்தனை மடங்கு? அதை நீங்களே பெருக்கிக் கொள்ளுங்கள். இன்றைக்கு போட்டிருக்கிற வரி என்னவென்றால் இன்னுமொரு ரூ. 14.10தான் போடலாம். ஆக 28 ரூபாய் 20 காசுகள் அவருக்கு வரி வரும். நான் உங்களைக் கேட்கிறேன், உங்கள் மூலமாக மற்றவர்களைக் கேட்கிறேன், பத்திரிகையாளர்களை அன்போடு கேட்கிறேன். இது வரி உயர்வா, வரி குறைப்பா?

அடுத்தது ஒரு லாட்ஜ் காஞ்சிபுரத்திலே, வாடகை—அதனாலேதான் சொன்னேன் 'ப்ராப்பர்ட்டி டாக்ஸ்' என்று. லாட்ஜ் என்றால் வீடா? வீட்டுக்கு வரி என்று ஒட்டுமொத்தமாகப் போட்டுவிட்டால் எப்படி? அதற்கு முன்னாலே இருந்த வரி ரூ. 155.30. பிறகு உயர்த்தப்பட்ட வரி ரூ. 3,181.50. இப்போது நம்முடைய புதிய கொள்கையின்படி மூன்று மடங்குதான் உயர்த்தலாம். அதாவது ரூ. 465.90 உயர்த்துகிறோம். அதற்கு மேலும் 155 ரூபாய் சேருகிறது. ஆக மொத்தம் 620 ரூபாய்தான் அவருக்கு வரி. இது காஞ்சிபுரம் நகராட்சியில்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 18

இதைப்போல அம்பத்தூர் நகரியம் ரூ. 3.10 ஆக இருந்த வரியை 23 ரூபாயாக ஆக்கியிருக்கிறார்கள். ஒரு கல்யாண மண்டபத்திற்கு 483 ரூபாய் என்று இருந்ததை 2,485 ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறார்கள்.

அடுத்து, ஆலந்தூர் நகராட்சி சென்னைக்கு அருகிலே உள்ள நகராட்சி. அங்கே ஆலம் சொந்த குடியிருப்பு—பாதி வாடகைப் பகுதி. நாம் முறைப்படியான கொள்கை அறிவிப்பின்படி இருந்து ஒரு மடங்குதான் உயர்த்த வேண்டும். அவருக்கு விதிக் கப்பட்ட பழைய வரி 61.80. பிறகு உயர்த்தப்பட்ட வரி ரூ. 510.90. இப்போது நாம் அதே ரூ. 61.80-ஐ தான் உயர்த்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

குப்புசாமி ஐயங்கார், சொந்த குடியிருப்பு. அவருக்கு போடப்பட்டிருந்த வரி ரூ. 69.50 இதை ரூ. 502.30 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். இன்னுமொரு கல்யாண மண்டபம் ஆலந்தூர் நகராட்சியில். ஆலந்தூர் நகராட்சியில் ஆலந்தூர் நகராட்சியைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மா. இராமச்சந்திரன் அவர்களுக்கு மிகுந்த அக்கறை உண்டு. அவர் தெரிந்து கொள்ள வேண்டும். திதி கல்யாண மண்டபத்திற்கு பழைய வரி 540 ரூபாய். இப்போது ரூ. 11,980. இதிலே ஒரு வேடிக்கை. 1986-87 ஆம் ஆண்டு முதல் அரை யாண்டிற்கு ரூ. 11,980. இரண்டாவது அரையாண்டிற்கு இப்போது நடைபெறுகிற அரையாண்டிற்கு போடப்பட்டுள்ள வரி 13,064 ரூபாய். இந்த சில்லங்கங்கள் வரக்கூடாது என்று தான் மிகத் தெளிவாக கொள்கையை அறிவித்திருக்கிறோம்.

இன்னுமொன்று, பார்த்தால் பூர்ச்சை ஆகிவிடுவோம். பல்லாவரம் நகராட்சி—இதுவும் சென்னைக்கு அருகிலே இருக்கிறது. ஒரு தோல் கம்பெனி குரோம் லெதர் கம்பெனி. அதற்கு இருந்த வரி ரூ. 20,494. அதற்கு இப்போது விதிக்கப் பட்டிருக்கிற வரி 7 இலட்சத்து 98 ஆயிரத்து 406 ரூபாய், சொந்தக்காரர். குரோம் லெதர் கம்பெனிக்கு ஒரு சரித்திரமே உண்டு. செத்து, செத்து பிழைத்துக் கொண்டு இப்போது தான் தவழ்ந்து கொண்டிருக்கிற கம்பெனி. அந்த கம்பெனிக்கு 20,494 ரூபாய் சொத்து வரி. அவன் வருமான வரி கட்டுகிறான்.



1987 நவம்பர் 18] [திரு. ஆர். எம். வீரப்பன்]

விற்பனை வரி கட்டுகிறான். எத்தனையோ வரி கட்டுகிறான். அதிலே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள், ஒரு தொழிற்சாலை. அவன் வைத்துக் கொண்டிருக்கிற கட்டடத்திற்கு 20,494 ரூபாய் வரி. இப்போது 7 இலட்சத்து 98 ஆயிரத்து 406 ரூபாய் என்று உயர்த்தியிருக் கிறார்கள்.

இந்த உதாரணங்களே போதும் என்று கருதுகிறேன். நான் இன்னும் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஒவ்வொரு முக்கியமான நகராட்சிகளிலே உள்ள விவரங்களை வைத்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் இடத்திலே, தமிழகம் முழுவதிலுமிருந்து அத்தனை நகராட்சிகளிலிருந்தும் தகவல்கள் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. இப்படி இந்த கருத்துக்களை யெல்லாம் பரிசீலித்ததற்குப் பிறகுதான் சொந்த வீடு இருந்தால், அதிலே ஒரு பகுதியில் அவர்களே குடியிருந்தாலும் ஒரு 100 சதவிகிதம் என்று போடுகிறார்கள் என்றால், பார்த்தால் ஏதோ பெரிதாகத் தோன்றும். ஒரு மடங்குதான். அதுவே வாடகைக்கு விட்டிருந்தால் 2 மடங்கு. அது தொழில் நிறுவனங்களாக இருந்தால் அது 3 மடங்கு. இப்போது நகர்த்தி விடுகிறோம்.

பதினான்கு இலட்சம் ரூபாய் ஒரு முனிசிபாலிட்டிக்கு வருகிற தென்றால், இந்த வரி விதிப்பின் மூலமாக இன்னும் குறைந்தபட் சம் இருபது இலட்சம் ரூபாய் வரும். 25 இலட்சமும் வரும். 40 லட்சம் ஆகவும் உயரும். இதில் மக்களுக்கு ஒன்றும் தொல்லை யில்லை. அவ்வளவு பேரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு நான் வேறு எங்கேயும் போகவில்லை. குரோம்பேட்டை, சென்னைக்கு அடுத்த நகர்ப்புறப் பகுதி என்று அழைக்கப்படுகிற இடத்திலிருந்து, ஒரு மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர் கடிதம் எழுதுகிறார். டி. ரங்கநாதன், சீஃப் டிக்கட் இன்ஸ் பெக்டர், எக்மோர் ரயில்வே ஸ்டேஷன். அவர் இரயில்வேயிலே பணியாற்றுகிற நடுத்தரமான ஒரு வர்க்கத்தைச் சேர்ந்தவர். "ஐயா, வணக்கம். நான் குரோம்பேட்டையைச் சேர்ந்த நேரு நகரில் வசிக்கிறேன். அந்தப் பகுதியிலே சுமார் 800 ரயில்வே தொழிலாளர்களும், மற்றவர்களும், அவரவர்கள் சொந்த வீட்டில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எங்களுக்கு சமீபத்தில் வீட்டு வரியை அதிகமாக உயர்த்திவிட்டார்கள். உதாரணத்திற்கு நான் 46 ரூபாய் வரி கட்டிக்கொண்டிருந்ததை, 460 ரூபாயாக

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 18

உயர்த்திவிட்டார்கள். நாங்கள் அதைக் கண்டு பயந்து, நின்றுகொண்டிருந்தபோது, வீட்டு வரி சம்பந்தமாக நீங்கள் அறிவித்ததைக் கண்டு நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம். உங்களுடைய கருணை உள்ளத்தால் . . ." என்று எழுதுகிறார். அவருக்குத் தெரியாது, புரட்சித் தலைவர் அவர்களுடைய உள்ளத்திலே கருணையில்லாமல், எங்களுக்குக் கருணை வர முடியாது. ஆகவே அவர், புரட்சித் தலைவருடைய கருணை உள்ளத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு, மிக்க மகிழ்ச்சி அடைகிறோம், எங்கள் நன்றி உங்கள் அரசுக்கு உண்டு—உங்களுக்கு உண்டு, என்று சொல்கிறார், நான் அதை உங்கள் அரசுக்கு உண்டு என்று படிக்கிறேன். இது ரெயில்வேயிலே பணியாற்றுகிற, நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த, சென்னைக்குப் பக்கத்திலே, அருகிலே இருக்கிற ஒருவர் எழுதியது.

இந்த நிலைமையை மாநகராட்சியிலேயும் உண்டாக்க வேண்டுமென்று இந்த விதித் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதே கைட்லைன்ஸை, இதே அறிவுரையை மாநகராட்சிக்கு வழங்கியிருக்கிறோம். உடனடியாக இந்த விகிதத்தில் வரி வசூலிக்கப்படும். இதற்குப் பிறகு இங்கே இருக்கின்ற கணக்கின்படியும், மாநகராட்சியைப் பார்த்த நிபுணர்கள் ஓர் அறிக்கையைத் தரத் தயாராக இருக்கிறார்கள். ஏனென்றால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌந்தரராஜன் அவர்கள் சொன்னதுபோல வழக்கு மன்றத்திற்குப் போவது என்பதுதான் மிகச் சுலபமான வேலை இன்றைக்கு. ஏனென்றால் ரோடு இல்லையே என்றால் அதைப்பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். தண்ணீர் இல்லையே, அதைப்பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். சாக்கடை தேங்கி நிற்கிறதே, அதைப்பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். ஆனால் யாராவது ஒருவரிடம், வசதியானவரிடம் கொஞ்சம் வரி கொடுங்கள் என்று சொன்னால் போதும், உடனே வழக்கு மன்றத்திற்குப் போய்விடுவார்கள். அது சுலபமான வேலை. ஆகவே வழக்கு மன்றத்தை மீறி காரியம் நடைபெறவில்லை. மக்களுக்கு ஒரு நன்மை செய்ய வேண்டும். நின்றுகொண்டிருக்கும் வண்டியைக் கொஞ்சம் நகர்த்தி, அதைத் தள்ளி விடுகிறோம். அதுதான் இந்தத் தீர்மானத்தின் நோக்கம்.

இனிமேல் வீட்டுக்காரர்கள் கையிலே வரி கட்டுகிற அட்டை இருக்கும். அந்த அட்டையிலே எல்லா விவரங்களும் இருக்கும்



1987 நவம்பர் 18] [திரு. ஆர். எம். வீரப்பன்]

தனி அதிகாரிகள் இதற்குள்ளே புகுந்து விளையாட முடியாது. எந்தத் தொல்லைகள் அல்லது எந்த அச்சுறுத்தல்கள் சாதாரண மக்களுக்கு வந்தாலும், இந்த அரசு, குறிப்பாக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அதை அனுமதிக்கமாட்டார்கள்.

இப்போது ஒரு பயம் எழுந்திருக்கிறது. அதுவும் நம்முடைய பத்திரிகையிலே வந்த செய்தியைப் பார்த்துத்தான் அந்த பயம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது தேவையற்ற பயம். வாடகை வீடுகளுக்கு 2 மடங்கு என்ற உடனே, வாடகைகளை எல்லாம் உயர்த்திவிடுவார்களோ என்ற அச்சம் வந்திருக்கிறது. நான் உறுதியாகவும் தெரிவிக்கிறேன், கண்டிப்பாகவும் தெரிவிக்கிறேன், 15 ஆண்டுகளிலே வரிதான் உயரவில்லையே தவிர, வாடகையை உயர்த்தி இருக்கிறார்கள். அந்த விவரங்கள் எல்லாம் இந்த ரிட்டர்ன் வரும்போது வந்துவிடும். அதற்குத்தான் அந்தக் கேள்வியைக் கேட்கிறோம். எப்போது உங்களுக்கு வரி விதிக்கப்பட்டது என்று கேட்கிறோம். அதற்குப் பிறகு இவர் என்ன வாடகை வாங்குகிறார் என்பது தெரியும். சில பேர் ரசீது கொடுத்து, வாடகை வாங்குகிறார்கள். சில பேர் ரசீது கொடுக்காமல், வாடகை வாங்குகிறார்கள். இனிமேல் அப்படி மறைக்க முடியாது. ஆகவே, 15 ஆண்டுக் காலத்தில் வாடகையை உயர்த்தி இருக்கிறார்கள். வரிதான் உயரவில்லை. இப்போது வாடகை வீட்டுக்கு இரண்டு மடங்கு வரி என்று சொல்லி, யாராவது நகராட்சி அல்லது மாநகராட்சிகளில் வாடகையை உயர்த்த முனைந்தால், அவர்கள் கடுமையான நடவடிக்கைகளுக்கு, வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு உட்படுத்தப்படுவார்கள். அதிலே இருந்து அவர்கள் தப்பிக்க முடியாது என்று சொல்ல விரும்புகிறேன்.

மக்களுக்கு நன்மைகளைச் செய்ய, மேலும் நன்மைகளைப் பெருக்குவதற்குத்தான் இந்தத் தீர்மானமே தவிர, வேறு எந்தப் பிரச்சினையும் இந்தத் தீர்மானத்தாலே வரவில்லை. வேறு எந்தப் பாதகமும் வரவில்லை. இருக்கிற தடைகளை நாம் நீக்கிவிட்டால் அவர்கள் கொஞ்சம் நகர்வதற்கு, பயணம் செய்வதற்கு, தொடர்வதற்கு வசதியாக இருக்கும். அரசாங்கத்தினுடைய கைட்லைன்ஸ்-ஐக் கொடுக்க இந்த விதித் திருத்தம் தேவைப்படு

கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், மாநகராட்சியிலே அட்வைசரி கமிட்டி போடவில்லை, வாக்குறுதி அளித்தார்கள் என்று. அளிக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படும். நானும் வாக்குறுதி அளிக்கிறேன்.

(மாலை 4-50)

அவர்கள் சார்பிலேயும் அளிக்கிறேன். நாங்கள் அளித்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பிலே அளிப்பதாகப் பொருள். மக்கள் மன்றத்திலே, மக்களுடைய பிரதிநிதிகள் இருந்து அதைத் தீர்மானிப்பார்கள். அந்த பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கான முயற்சிகளிலே அரசு ஈடுபடும் என்பதைச் சொல்லி, நீங்கள் அருள்கூர்ந்து இவைகள் தேவையில்லாமல் எழுப்பப்பட்ட சந்தேகங்கள் என்று கொள்ளவேண்டும். 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பதைப் போல, நீங்கள் அந்த உணர்வோடு சொல்லியிருப்பீர்கள் என்று நான் ஏற்றுக்கொண்டு, ஏதோ 4½ மணியளவிற்கு உங்களுடைய பசியின் காரணமாகவோ அல்லது எந்த காரணத்தினாலேயோ நீங்கள் கொஞ்சம் வேகத்தோடு இந்தப் பிரச்சினையிலே அணுகி கொஞ்சம் என்னைப்பற்றியும் சில 'ரிமார்க்ஸ்', அது 'நிந்தாஸ்துதி' என்பார்கள், சில நேரங்களிலே 'வஞ்சப்புகழ்ச்சி' என்பார்கள். எப்படி வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். நான் ஒன்றும் மிகுந்த கெட்டிக்காரன் அல்ல. புரட்சித் தலைவருடைய பள்ளியிலே பாடம் பயின்று கொண்டிருக்கின்ற அறிஞர் அண்ணாவின் மாணவன். எனக்கு முன்னாலே இருந்த முன்னோடிகள் என்ன செய்தார்களோ அதை நிறைவேற்றிக்கொண்டிருக்கின்ற கட்டத்தில் நான் உங்களுக்கு முன்னாலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறேன். ஆகவே அருள்கூர்ந்து இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி மாநகராட்சிகள் ஒரு நல்ல எதிர்காலத்தை நோக்கி நடைபெறுவதற்குத் தொடங்கி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: உட்காருங்கள். எல்லாவற்றையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாகவே சொல்லி விட்டார்கள்.





பேரவை முன்னுள்ள கேள்வி :

"1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IV/1919) IV ஆம் இணைப்புப் பட்டியலின் பாகம்— IA பாகம்— V மற்றும் பாகம் VI ஆகியவற்றைத் திருத்தி மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 347 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ், தமிழ்நாடு ஆளுநரால் செய்யப்படவிருக்கின்ற பின்வரும் குறிப்பிட்ட சில திருத்தங்களின் வரைவுக்கு மேற்சொல்லப்பட்ட 347 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவால் கோரப்படுகின்றவாறு ஒப்புதலளிக்கலாம்."

தனித் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

## (இ) 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்ட விதிகளுக்குத் திருத்தம்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன் :

"1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) II ஆம் இணைப்புப் பட்டியலில் பாகம்— II பாகம்— V மற்றும் பாகம்— VI ஆகியவற்றை திருத்தி, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 431 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ், தமிழ்நாடு ஆளுநரால் செய்யப்படவிருக்கின்ற பின்வரும் குறிப்பிட்ட சில திருத்தங்களின் வரைவுக்கு, மேற்சொல்லப்பட்ட 431 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவால் கோரப்படுகின்றவாறு ஒப்புதலளிக்கலாம்."

தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 18

**வரைவுத் திருத்தங்கள்** *

1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான தமிழ்நாடு சட்டம் 15/1971 II ஆம் இணைப்புப் பட்டியலில்,

(1) இருந்துவரும் II பாகத்திற்குப் பதிலாக, பின்வருவன அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது—

"பாகம் II .

சொத்துவரி விதிப்பு.

4. (1) ஆணையரானவர், உள்ளூர் செய்தித் தாள்களில் விளம்பரம் கொடுப்பதன் மூலமாகவும் மற்றபடியாகவும், நிலம் அல்லது கட்டிடம் எதனின் அல்லது அதன் பகுதி ஒன்றின் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளரை, வரி விதிப்பிற்குரிய இனம் ஒவ்வொன்றையும் பொறுத்த அளவில் பின்வரும் விபரங்கள் அடங்கிய விவர அறிக்கை ஒன்றினை, இதுகுறித்து ஆணையரால் அறிவிக்கை செய்யப்பட்ட நாளிலிருந்து ஒரு திங்களுக்கு மேற்படாத கால அளவிற்குள் தாக்கல் செய்யுமாறு கோரலாம், அதாவது—

(i) அது அமைந்துள்ள வட்டம் மற்றும் தெருவின் பெயர் மற்றும் கதவிலக்கம்;

(ii) மாடிக் கட்டட அடுக்குகளின் எண்ணிக்கை. ஒவ்வொரு மாடிக் கட்டட அடுக்கின் கட்டடப் பரப்பு (plinth area); மற்றும் காலி நிலத்தின் பரப்பு போன்ற வரி விதிப்பிற்குரிய இனத்தைப் பற்றிய விவரிப்பு;

(iii) சொந்தக்காரரின் பெயர்;

(iv) குடியிருப்பாளரின் பெயர்;

(v) வரிவிதிப்பிற்குரிய இனமானது கடைசியாக வரி விதிக்கப்பட்ட ஆண்டு மற்றும் ஆணையரால் நிர்ணயம் செய்யப்பட்ட ஆண்டு மதிப்பின் தொகை;

(vi) அரையாண்டு ஒன்றிற்கு தற்போது செலுத்தப்பட்டு வரும் வரித் தொகை;

---

* வரைவுத் திருத்தங்கள் ஆங்கிலத்தில் 453-455-ம் பக்கங்களில் இணைப்பு II- ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 18

இவ்வொருவருக்கும் வழங்கப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய அட்டையானது அத்தகைய சொந்தக்காரருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு அஞ்சல் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) ஆணையர் சொத்து வரி அட்டையில் குறித்துரைக்கப் பட்ட சொத்து வரியைப் பெற்றுக்கொள்ளுதலும், மேற்சொல்லப் பட்ட அட்டையிலும் மற்றும் மாநகராட்சியால் பேணப்பட்டு வரும் வரிவிதிப்புப் புத்தகத்திலும் தேவையான பதிவுகளைச் செய்தலும் வேண்டும்.

(3) சொத்து வரி அட்டையில், சொத்து வரியில் திருத்தம் எதுவும் செய்யப்பட்டதை ஒட்டியோ, அல்லது ஆணையரின் ஆணைக்கு எதிராக மேல்முறையீட்டில் பிறப்பிக்கப்பட்ட ஆணையொன்றை ஒட்டியோ திருத்தம் ஏதேனும் செய்யப் படுவதாக இருப்பின், அத்தகைய திருத்தம் எதுவும், சொத்து வரி அட்டையிலும், வரிவிதிப்புப் புத்தகத்திலும் ஆணையராலோ அல்லது இதன்பொருட்டு அவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் எவராலுமோ செய்யப்பட்டுச் சான்றொப்பமிடப்படுதல் வேண்டும்.

(4) சொத்துவரி அட்டையானது, ஒரு பொது திருத்தத்தின் போதோ (General Revision) அல்லது இதன்பொருட்டு அரசு பணிக்கலாகிறவாறு அதற்கு முன்னரோ, வரிவிதிப்பானது திருத்தப்படுகின்ற வரையிலும் செல்லத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

8. ஆணையர், வரிவிதிப்பிற்குரிய ஒவ்வோர் இனத்தைப் பொறுத்தும் ஒரு பொதுத் திருத்தத்தை அடுத்துப் பின்பும் மற்றும் அடுத்த பொதுத் திருத்தமொன்றிற்கு முன்பும், சொந்தக் காரரால் அல்லது குடியிருப்பாளரால் தாக்கல் செய்யப்பட்ட விவர அறிக்கையில் கொடுக்கப்பட்ட விவரங்களைச் சரிபார்க்கப் படுவதற்கு (Verification) ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

9. 8-ஆம் விதியின்படி சரிபார்த்தல் செய்யப்பட்டதன் விளைவாக, சொந்தக்காரரால் அல்லது குடியிருப்பாளரால் தாக்கல் செய்யப்பட்ட விவர அறிக்கையில் அளிக்கப்பட்ட விவரங்களில் முரண்பாடு ஏதேனும் காணப்பட்டால், ஆணையர்,



1987 நவம்பர் 18] [திரு. ஆர். எம். வீரப்பன்]

அத்தகைய சொந்தக்காரருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு, கேட்கப்படுவதற்கு நியாயமான வாய்ப்பொன்றை அளித்ததற்குப் பின்பும் அவரிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபணை ஏதேனு மிருப்பின் அதைப் பரிசீலித்ததற்குப் பின்பும் எந்தத் தேதியில் வரிவிதிப்பு செய்யப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து அந்த வரி விதிப்பை மாற்றியமைத்து, வரி நிலுவைகளை வசூலிக்கலாம்".

(2) இருந்துவரும் V ஆம் பாகத்திற்குப் பதிலாக, பின்வருவன அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது—

"V ஆம் பாகம்

வரிவிதிப்பைத் திருத்துதல்.

20. (1) மாற்றல் தீர்வை (Transfer Duty) மீதான வரி தொடர்பான ஆணைகளல்லாத, இந்தச் சட்டத்தின்படி ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட பிற வரிவிதிப்பு ஆணையால் மனநிறைவு கொள்ளாத நபர் எவராலேனும் முன்னிடப்பட்ட மேல்முறையீட்டை விசாரிப்பதற்கும் முடிவுசெய்வதற்குமாக, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வரிவிதிப்பு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் (இதன் பின்பு இந்தப் பாகத்தில் "தீர்ப்பாயம்" எனக் குறிப்பிடப்படுவது) இருத்தல் வேண்டும்.

(2) தீர்ப்பாயம், சார்-நீதிபதி படிநிலைக்குக் குறையாத ஒரு நீதித் துறை அலுவலரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) தீர்ப்பாயத்தின் வரையறைகளும் நிபந்தனைகளும் அரசினால் தீர்மானிக்கலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

(4) தீர்ப்பாயத்திற்கு வழங்கப்படத்தக்க சம்பளமும் பிற படித் தொகைகளும், மாநகராட்சியின் நிதியங்களிலிருந்து செலவிடப்படுதல் வேண்டும்.

21. II பாகத்தில் உள்ள 4 விதியின்கீழ் அறிவிக்கை செய்யப் பட்ட காலத்திற்குள் விவர அறிக்கையைத் தாக்கல் செய்யத் தவறுகிற நபர் எவரும், ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட வரி விதிப்பு ஆணை எதற்கும் எதிராக மேல்முறையீடு செய்வதற்கு உரிமைத் தகுதியுடையவராகமாட்டார்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 18

22. மேல்முறையீடு எதுவும், இருந்துவரும் வரியையும், மற்றும் இருந்துவரும் வரிக்கும் திருத்தத்தின்போது ஆணையரால் விதிக்கப்பட்ட வரிக்கும் இடையே உள்ள வேறுபாட்டில் ஐம்பது விழுக்காட்டையும் மேல்முறையீட்டாளர் மாநகராட்சியில் வைப்பீடு செய்தாலன்றி, தீர்ப்பாயத்தால் ஏற்றுக்கொள்ளப் படுதலாகாது.

23. தீர்ப்பாயத்தின் முடிவுக்கு எதிரான மேல்முறையீடொன்று, ஆணையின் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் மாவட்ட நீதிபதியிடம் தாக்கல் செய்யப்படலாம்.

24. (1) இந்தப் பாகத்தின்கீழ் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடு ஒவ்வொன்றும், தீர்ப்பாயத்தால் இந்த நோக்கத்திற்காகப் பேணப்பட்டுவரும் ஒரு பதிவேட்டில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) தீர்ப்பாயம், மேல்முறையீடொன்றைத் தாக்கல் செய்கின்ற நபருக்கு, மேல்முறையீட்டில் விசாரணைக்கான இடம், தேதி மற்றும் நேரத்தைக் குறித்துரைக்கின்ற எழுத்துருவிலான அறிவிப்பொன்றைக் கொடுத்தல் வேண்டும்.

(3) தீர்ப்பாயமானது, மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து ஐந்து மாதங்களுக்குள் அந்த மேல்முறையீட்டை முடிவுசெய்தல் வேண்டும்.

(4) மேல்முறையீட்டை முன்னிடுகின்ற நபர் எவரும், தீர்ப்பாயத்தின் முன்பு, தாமே நேரடியாகவோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவர் மூலமாகவோ ஆஜராகலாம்.

(5) மேல்முறையீடொன்றில் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் சாரமானது (Gist) அந்தப் பதிவேட்டில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்; அது அந்தத் தீர்ப்பாயத்தால் உரியவாறு சான்றொப்பமிடப்படுதல் வேண்டும்; மற்றும், அந்த ஆணையின் படியொன்று (நகல்) அந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்படுதல் வேண்டும்".



1987 நவம்பர் 18] [திரு. ஆர். எம். வீரப்பன்]

(3) VI- ஆம் பாகத்தில் 29 ஆம் விதிக்குப் பின்பு, பின்வரும் விதி புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது—

29-A இந்தப் பாகத்தில் உள்ள விதி எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், 115 ஆம் பிரிவின்படி சொத்து வரி எதையும் விதிப்பதற்கும் வசூலிப்பதற்கும் அறிவிப்பு எதையும் ஆணையர் சார்வு செய்யத் தேவையில்லை".

**(ஈ) 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்ட விதிகளுக்குத் திருத்தம்.**

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) II- ஆம் இணைப்புப் பட்டியலில் பாகம்— II பாகம்— V மற்றும் பாகம்— VI ஆகியவற்றைத் திருத்தி, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 430 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ், தமிழ்நாடு ஆளுநரால் செய்யப்படவிருக்கின்ற பின்வரும் குறிப்பிட்ட சில திருத்தங்களின் வரைவுக்கு, மேற்சொல்லப்பட்ட 430 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவால் கோரப்படுகின்றவாறு ஒப்புதலளிக்கலாம்."

தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

**வரைவுத் திருத்தங்கள்***

1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான தமிழ்நாடு சட்டம் 25/1985 II- ஆம் இணைப்புப் பட்டியலில், (1) இருந்துவரும் II பாகத்திற்குப் பதிலாக, பின்வருவன அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது—

* வரைவுத் திருத்தங்கள் ஆங்கிலத்தில் 830-833 -ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 18

"பாகம் II

**சொத்துவரி விதிப்பு.**

4. (1) ஆணையரானவர், உள்ளூர் செய்தித் தாள்களில் விளம்பரம் கொடுப்பதன் மூலமாகவும் மற்றபடியாகவும், நிலம் அல்லது கட்டிடம் எதனின் அல்லது அதன் பகுதி ஒன்றின் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளரை, வரி விதிப்பிற்குரிய இனம் ஒவ்வொன்றையும் பொறுத்த அளவில் பின்வரும் விபரங்கள் அடங்கிய விவர அறிக்கை ஒன்றினை, இதுகுறித்து ஆணையரால் அறிவிக்கை செய்யப்பட்ட நாளிலிருந்து ஒரு திங்களுக்கு மேற்படாத கால அளவிற்குள் தாக்கல் செய்யுமாறு கோரலாம், அதாவது,—

(i) அது அமைந்துள்ள வட்டம் மற்றும் தெருவின் பெயர் மற்றும் கதவிலக்கம்;

(ii) மாடிக் கட்டட அடுக்குகளின் எண்ணிக்கை. ஒவ்வொரு மாடிக் கட்டட அடுக்கின் கட்டடப் பரப்பு (Plinth area) மற்றும் காலி நிலத்தின் பரப்பு போன்ற வரி விதிப்பிற்குரிய இனத்தைப் பற்றிய விவரிப்பு;

(iii) சொந்தக்காரரின் பெயர்;

(iv) குடியிருப்பாளரின் பெயர்;

(v) வரிவிதிப்பிற்குரிய இனமானது கடைசியாக வரி விதிக்கப்பட்ட ஆண்டு மற்றும் ஆணையரால் நிர்ணயம் செய்யப் பட்ட ஆண்டு மதிப்பின் தொகை;

(vi) அரையாண்டு ஒன்றிற்கு தற்போது செலுத்தப்பட்டு வரும் வரித் தொகை;

(vii) வரிவிதிப்பிற்குரிய இனமானது குடியிருப்பு நோக்கத் திற்குப் பயன்படுத்தப்படுகிறதா? குடியிருப்பு அல்லாத நோக்கத் திற்குப் பயன்படுத்தப்படுகின்றதா?

(viii) வரிவிதிப்பிற்குரிய இனமானது சொந்தக்காரரால் முழுமையாக வாடகைக்கு விடப்பட்டுள்ளதா அல்லது ஒரு பகுதி சொந்தக்காரரின் குடியிருப்பிலிருந்தது ஒரு பகுதி வாடகைக்கு விடப்பட்டுள்ளதா என்பது; மற்றும்



1987 நவம்பர் 18] [திரு. ஆர். எம். வீரப்பன்]

(ix) ஒவ்வொரு ஆண்டுக்கும் வாடகையாகவோ அல்லது குத்தகையாகவோ பெறப்படும் தொகை.

5. நபரெவரேனும், அறிவிப்பை செய்யப்பட்ட காலத்திற்குள் விவர அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்யத் தவறினால், வரி விதிப்பிற்குரிய இனத்திற்குள் உள்ளே நுழைந்து அதை ஆய்வு செய்யவும் விவர அறிக்கையினை தயாரிக்கவும் வரித் தண்டலர் (Bill Collector) படிநிலைக்குக் குறையாத நபரெவருக்கும் ஆணையரானவர் அதிகாரம் அளிக்கலாம்.

6. ஆணையர், பின்வருவனவற்றைக் கருத்திற்கொண்டு, சொத்திற்கு வரிவிதிப்பு செய்தல் வேண்டும். அதாவது—

(1) 1978 அக்டோபர் 1 ஆம் நாளன்று வரிவிதிப்பிற்குரிய இனத்தின் ஆண்டு மதிப்பு;

(2) தாக்கல் செய்யப்பட்ட விவர அறிக்கையில் கொடுக்கப் பட்ட விவரங்களின் அடிப்படையில், சொந்தக்காரரால் அல்லது குடியிருப்பாளரால் செலுத்தப்படத்தக்க சொத்து வரி; மற்றும்

(3) மன்றத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறி முறைகள் எவையேனுமிருப்பின் அவற்றின் அடிப்படையில் சொந்தக் காரரால் அல்லது குடியிருப்பாளரால் செலுத்தப்படத்தக்க சொத்து வரி.

7. (1) வரிவிதிப்பிற்குரிய இனம் தொடர்பான எல்லா விவரங் களும் செலுத்தப்படத்தக்க சொத்து வரித் தொகையும் உள்ளடங்கியதாக இருக்கவேண்டிய ஒரு சொத்து வரி அட்டை (Property Tax Card) இந்த விதியின்படி விவர அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கிற சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய அட்டையானது அத்தகைய சொந்தக்காரருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு அஞ்சல் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) ஆணையர் சொத்து வரி அட்டையில் குறித்துரைக்கப் பட்ட சொத்து வரியைப் பெற்றுக்கொள்ளுதலும், மேற்சொல்லப் பட்ட அட்டையிலும் மற்றும் மாநகராட்சியால் பேணப்பட்டு வரும் வரி விதிப்புப் புத்தகத்திலும் தேவையான பதிவுகளைச் செய்தலும் வேண்டும்.

(3) சொத்து வரி அட்டையில், சொத்து வரியில் திருத்தம் எதுவும் செய்யப்பட்டதை ஒட்டியோ, அல்லது ஆணையரின் ஆணைக்கு எதிராக மேல்முறையீட்டில் பிறப்பிக்கப்பட்ட ஆணையொன்றை ஒட்டியோ திருத்தம் ஏதேனும் செய்யப்படுவதாக இருப்பின், அத்தகைய திருத்தம் எதுவும், சொத்துவரி அட்டையிலும், வரிவிதிப்புப் புத்தகத்திலும் ஆணையராலோ அல்லது இதன்பொருட்டு அவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் எவராலுமோ செய்யப்பட்டுச் சான்றொப்பமிடப்படுதல் வேண்டும்.

(4) சொத்துவரி அட்டையானது, ஒரு பொது திருத்தத்தின் போதோ (General Revision) அல்லது இதன்பொருட்டு அரசு பணிக்கலாகிறவாறு அதற்கு முன்னரோ, வரி விதிப்பானது திருத்தப்படுகின்ற வரையிலும் செல்லத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

8. ஆணையர், வரிவிதிப்பிற்குரிய ஒவ்வோர் இனத்தைப் பொறுத்தும் ஒரு பொதுத் திருத்தத்தை அடுத்துப் பின்பும் மற்றும் அடுத்த பொதுத் திருத்தமொன்றிற்கு முன்பும், சொந்தக்காரரால் அல்லது குடியிருப்பாளரால் தாக்கல் செய்யப்பட்ட விவர அறிக்கையில் கொடுக்கப்பட்ட விவரங்களைச் சரிபார்க்கப் படுவதற்கு (Verification) ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

9. 8 ஆம் விதியின்படி சரிபார்த்தல் செய்யப்பட்டதன் விளைவாக, சொந்தக்காரரால் அல்லது குடியிருப்பாளரால் தாக்கல் செய்யப்பட்ட விவர அறிக்கையில் அளிக்கப்பட்ட விவரங்களில் முரண்பாடு ஏதேனும் காணப்பட்டால், ஆணையர், அத்தகைய சொந்தக்காரருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு, கேட்கப்படுவதற்கு நியாயமான வாய்ப்பொன்றை அளித்ததற்குப் பின்பும் அவரிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபணை ஏதேனுமிருப்பின் அதைப் பரிசீலித்ததற்குப் பின்பும் எந்தத் தேதியில் வரிவிதிப்பு செய்யப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து அந்த வரிவிதிப்பை மாற்றியமைத்து, வரி நிலுவைகளை வசூலிக்கலாம்".



(2) இருந்துவரும் V- ஆம் பாகத்திற்குப் பதிலாக, பின்வருவன அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது—

"V- ஆம் பாகம்

வரிவிதிப்பைத் திருத்துதல்.

20. (1) மாற்றல் தீர்வை (Transfer duty) மீதான வரி தொடர்பான ஆணைகளல்லாத, இந்தச் சட்டத்தின்படி ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட பிற வரிவிதிப்பு ஆணையால் மனநிறைவு கொள்ளாத நபர் எவராலேனும் முன்னிடப்பட்ட மேல்முறையீட்டை விசாரிப்பதற்கும் முடிவுசெய்வதற்குமாக, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வரிவிதிப்பு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் (இதன் பின்பு இந்தப் பாகத்தில் "தீர்ப்பாயம்" எனக் குறிப்பிடப்படுவது) இருத்தல் வேண்டும்.

(2) தீர்ப்பாயம், சார்-நீதிபதி படிநிலைக்குக் குறையாத ஒரு நீதித்துறை அலுவலரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) தீர்ப்பாயத்தின் வரையறைகளும் நிபந்தனைகளும் அரசினால் தீர்மானிக்கலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

(4) தீர்ப்பாயத்திற்கு வழங்கப்படத்தக்க சம்பளமும் பிற படித் தொகைகளும், மாநகராட்சியின் நிதியங்களிலிருந்து செலவிடப்படுதல் வேண்டும்.

21. II பாகத்தில் உள்ள 4 விதியின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட காலத்திற்குள் விவர அறிக்கையைத் தாக்கல் செய்யத் தவறுகிற நபர் எவரும், ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட வரிவிதிப்பு ஆணை எதற்கும் எதிராக மேல்முறையீடு செய்வதற்கு உரிமைத் தகுதியுடையவராகமாட்டார்.

22. மேல்முறையீடு எதுவும், இருந்துவரும் வரியையும், மற்றும் இருந்துவரும் வரிக்குத் திருத்தத்தின்போது ஆணையரால் விதிக்கப்பட்ட வரிக்கும் இடையே உள்ள வேறுபாட்டில் ஐம்பது விழுக்காட்டையும் மேல்முறையீட்டாளர் மாநகராட்சியில் [illegible] வைப்பீடு செய்தாலன்றி, தீர்ப்பாயத்தால் ஏற்றுக்கொள்ளப்படுதலாகாது.

23. தீர்ப்பாயத்தின் முடிவுக்கு எதிரான மேல்முறையீடு [illegible] ஆணையின் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் மாவட்ட நீதிபதியிடம் தாக்கல் செய்யப்படலாம்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 18

24. (1) இந்தப் பாகத்தின் கீழ் தாக்கல் செய்யப்படும் மேல் முறையீடு ஒவ்வொன்றும், தீர்ப்பாயத்தால் இந்த நோக்கத்திற்காகப் பேணப்பட்டுவரும் ஒரு பதிவேட்டில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) தீர்ப்பாயம், மேல்முறையீடொன்றைத் தாக்கல் செய்கின்ற நபருக்கு, மேல்முறையீட்டில் விசாரணைக்கான இடம், தேதி மற்றும் நேரத்தைக் குறித்துரைக்கின்ற எழுத்துருவிலான அறிவிப்பொன்றைக் கொடுத்தல் வேண்டும்.

(3) தீர்ப்பாயமானது, மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து ஐந்து மாதங்களுக்குள் அந்த மேல்முறையீட்டை முடிவுசெய்தல் வேண்டும்.

(4) மேல்முறையீட்டை முன்னிடுகின்ற நபர் எவரும், தீர்ப்பாயத்தின் முன்பு, தாமே நேரடியாகவோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவர் மூலமாகவோ ஆஜராகலாம்.

(5) மேல்முறையீடொன்றில் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் (Gist) அந்தப் பதிவேட்டில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்; அது அந்தத் தீர்ப்பாயத்தால் உரியவாறு சான்றொப்பமிடப்படுதல் வேண்டும்; மற்றும், அந்த ஆணையின் படியொன்று (நகல்) அந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(3) VI. ஆம் பாகத்தில் 29 ஆம் விதிக்குப் பின்பு, பின்வரும் விதி புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது—

"29-A இந்தப் பாகத்தில் உள்ள விதி எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், 117 ஆம் பிரிவின்படி சொத்து வரி எதையும் விதிப்பதற்கும் வசூலிப்பதற்கும் அறிவிப்பு எதையும் [illegible] தேவையில்லை."



1987 நவம்பர் 18]

8. அரசினர் தீர்மானம்.

பேரவை ஒத்தி வைக்கப்பெறுதல்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இக்கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் மாலை 4-53 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அரசமைப்புச்சட்டப்படியுள்ள விதிகளும், ஆணைகளும்.

107. சென்னை சமூக சேவை மையத்திற்கு சொந்தமான டி.சி.எம். 3231 எண்ணுள்ள ஜீப்பிற்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள்(போ. 1) துறையின் 22—9—1959 ஆம் நாளிட்ட 3236 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

108. வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் [illegible]—1987 ஆம் நாளிட்ட (II (1)/CTRE/46 (4.5)/87) ஆம் எண் [illegible] திருத்தமொன்று செய்வது குறித்த வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 24—7—1987 ஆம் நாளிட்ட [illegible] ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

இணைப்பு I.

[759ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க].

## DRAFT AMENDMENTS.

In Schedule IV to the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919),—

(1) for the existing Part I-A, the following shall be substituted, namely :—

### "PART I-A.

*Assessment of Property Tax.*

1-C. (1) The Commissioner may, by giving publicity in the local newspapers and otherwise require the owner or the occupier of any land or building, or a portion thereof to file a return within a period not exceeding one month from the date notified in this behalf by the Commissioner, containing the following particulars with regard to each assessable item, namely :—

(i) The name of the division and the street in which it is situated and the door number ;

(ii) description of the assessable item like number of storeys, plinth area in each storey and the extent of vacant land ;

(iii) the name of the owner ;

(iv) the name of the occupier ;

(v) the year in which the assessable item was last assessed and the amount of annual value fixed by the Commissioner ;

(vi) the amount of tax now being paid per half year.

(vii) whether the assessable item is used for residential or non-residential purpose ;

(viii) whether the assessable item is wholly rented or partly occupied by the owner and partly rented ; and

(ix) the amount received as rent or lease amount per year.

2. If any person fails to file a return within the notified time the Commissioner may authorise any person, not below the rank of a Bill Collector to enter upon and make an inspection of the assessable item and prepare the return.



3. The Commissioner shall assess the property tax having regard to,—

(1) the annual value of the assessable item as on the 1st October 1978 ;

(2) the property tax payable by the owner or the occupier on the basis of the particulars filed in the return ; and

(3) the property tax payable by the owner or the occupier with reference to the guidelines, if any, issued by the council.

4. (1) A property tax card which shall contain all the details relating to the assessable item and the amount of property tax payable shall be supplied to every owner or occupier who has filed the return under this rule and such card shall be sent to such owner or occupier by post.

(2) The Commissioner shall receive the property tax specified in the property tax card and make necessary entry in the said card and in the assessment book maintained by the Corporation.

(3) If any correction is to be made in the property tax card either in pursuance of any revision in the property tax or an order passed in appeal against the order of the Commissioner, such correction shall be made and attested by the Commissioner or any officer authorised by him in this behalf in the property tax card and in the assessment book.

(4) The property tax card shall be valid until the assessment is revised during a general revision or earlier, as the Government may direct in this behalf.

5. The Commissioner shall make arrangements for the verification of the particulars furnished in the return filed by the owner or occupier of every assessable item immediately after a general revision and before the next general revision.

6. Consequent on the verification made under rule 5, if any discrepancy is noticed in the particulars furnished in the return filed by the owner or occupier, the Commissioner may, after giving such owner or occupier a reasonable opportunity of being heard and after considering the objection, if any, received from him, modify the assessment from the date on which the assessment was made and collect the arrears of tax.

(2) For the existing Part V, the following shall be substituted, namely :—

"PART V.

REVISION OF ASSESSMENT.

12. (1) There shall be one or more Taxation Appeal Tribunals (hereinafter referred to in this part as "the Tribunal") for hearing and disposing of an appeal preferred by any person who is not satisfied with the assessment order made by the Commissioner under this Act other than the orders relating to the transfer duty and the tax on timber.

(2) The Tribunal shall consist of a Judicial Officer not below the rank of a Sub-Judge.

(3) The terms and conditions of the Tribunal shall be such as may be determined by the Government.

(4) The salary and other allowances payable to the Tribunal shall be borne from the funds of the Corporation.

13. No person who fails to file the return within the notified time under rule 1-C in Part I-A shall be entitled to appeal against any assessment order made by the Commissioner.

14. No appeal shall be entertained by the Tribunal unless the appellant deposits in the Corporation the existing tax and also fifty per cent of the difference between the existing tax and the tax as assessed by the Commissioner in the revision.

15. An appeal against the decision of the Tribunal may be filed within thirty days from the date of the order to the Principal Judge, City Civil Court.

16. (1) Every appeal filed under this part shall be entered in a register maintained for this purpose by the Tribunal.

(2) The Tribunal shall give to person filing an appeal a written notice specifying the place, date and time of hearing the appeal.

(3) The Tribunal shall dispose of the appeal within five months from the date of filing of the appeal.

(4) Any person preferring an appeal may either appear in person or through an authorised agent before the Tribunal.



(5) The gist of the order passed in an appeal shall be recorded in the register which shall be duly attested by the Tribunal and a copy of the order shall be duly attested by the Tribunal and a copy of the order shall be supplied within ten days from the date of passing of the order to the appellant.".

(3) In Part IV, after rule 21, the following rule shall be inserted, namely :—

"21-A. Notwithstanding anything contained in any rule in this part, it shall not be necessary for the Commissioner to serve any notice for the levy and collection of property tax under section 98".

இணைப்பு II

[810-ம் பக்கத்திலுள்ள அறிக்கை குறிப்பைக் காண்க.]

DRAFT AMENDMENTS.

In Schedule II to the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971),—

(1) for the existing Part II, the following shall be substituted, namely :—

"PART II.

*Assessment of Property Tax.*

4. (1) The Commissioner may by giving publicity in the local newspapers and otherwise require the owner or the occupier of any land or building, or a portion thereof to file a return within a period not exceeding one month from the date notified in this behalf by the Commissioner, containing the following particulars with regard to each assessable thing, namely :—

(i) the name of the division and the street in which it is situated and the door number;

(ii) description of the assessable item like number of storeys, plinth area in each storey and the extent of vacant land;

(iii) the name of the owner;

(iv) the name of the occupier;

(v) the year in which the assessable item was last assessed and the amount of annual value fixed by the Commissioner ;

(vi) the amount of tax now being paid per half year ;

(vii) whether the assessable item is used for residential or non-residential purpose ;

(viii) whether the assessable item is wholly rented or partly occupied by the owner and partly rented ; and

(ix) the amount received as rent or lease amount per year.

5. If any person fails to file a return within the notified time, the Commissioner may authorise any person not below the rank of a Bill Collector to enter upon and make an inspection of the assessable item and prepare the return.

6. The Commissioner shall assess the property tax having regard to,—

(1) the annual value of the assessable item as on the last revision ;

(2) the property tax payable by the owner or the occupier on the basis of the particulars filed in the return ; and

(3) the property tax payable by the owner or the occupier with reference to the guidelines, if any, issued by the Council.

7. (1) A property tax card which shall contain all the details relating to the assessable item and the amount of property tax payable shall be supplied to every owner or occupier who has filed the return under this rule and such card shall be sent to such owner or occupier by post.

(2) The Commissioner shall receive the property tax specified in the property tax card and make necessary entry in the said card and in the assessment book maintained by the Corporation.

(3) If any correction is to be made in the property tax card either in pursuance of any revision in the property tax or an order passed in appeal against the order of the Commissioner, such correction shall be made and attested and the Commissioner or any officer authorised by him in this behalf in the property tax card and in the assessment book.

(4) The property tax card shall be valid until the assessment is revised during a general revision or earlier as the Government may direct in this behalf.



8. The Commissioner shall make arrangements for the verification of the particulars furnished in the return filed by the owner or occupier of every assessable item immediately after a general revision and before the next general revision.

9. Consequent on the verification made under rule 8, if any discrepancy is noticed in the particulars furnished in the return filed by the owner or occupier, the Commissioner may, after giving such owner or occupier a reasonable opportunity of being heard and after considering the objection, if any, received from him, modify the assessment from the date on which the assessment was made and collect the arrears of tax.".

(2) For the existing Part V, the following shall be substituted, namely :—

"PART V.

*Revision of assessment.*

20. (1) There shall be one or more Taxation Appeal Tribunals (hereinafter referred to in this Part as "the Tribunal") for hearing and disposing of an appeal preferred by any person who is not satisfied with the assessment order made by the Commissioner under this Act other than the orders relating to the transfer duty.

(2) The Tribunal shall consist of a Judicial Officer not below the rank of a Sub-Judge.

(3) The terms and conditions of the Tribunal shall be such as may be determined by the Government.

(4) The salary and other allowances payable to the Tribunal shall be borne from the funds of the Corporation.

21. No person who fails to file the return within the notified time under rule 4 in Part II shall be entitled to appeal against any assessment order made by the Commissioner.

22. No appeal shall be entertained by the Tribunal unless the appellant deposits in the Corporation the existing tax and also fifty per cent of the difference between the existing tax and the tax as assessed by the Commissioner in the revision.

23. An appeal against the decision of the Tribunal may be filed within thirty days from the date of the order to the District Judge.

24. (1) Every appeal filed under this Part shall be entered in a register maintained for this purpose by the Tribunal.

(2) The Tribunal shall give to person filing an appeal a written notice specifying the place, date and time of hearing the appeal.

(3) The Tribunal shall dispose of the appeal within five months from the date of filing of the appeal.

(4) Any person preferring an appeal may either appear in person or through an authorised agent before the Tribunal.

(5) The gist of the order passed in an appeal shall be recorded in the register which shall be duly attested by the Tribunal and a copy of the order shall be supplied within ten days from the date of passing of the order to the appellant.".

(3) In Part VI, after rule 29, the following rule shall be inserted, namely :—

"29-A. Notwithstanding anything contained in any rule in this Part, it shall not be necessary for the Commissioner to serve any notice for the levy and collection of Property Tax under section 115".

## இணைப்பு III.

[815-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க].

## DRAFT AMENDMENTS.

In Schedule II to the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act 25 of 1981),—

(1) for the existing Part II, the following shall be substituted, namely :—

## "PART II.

### *Assessment of Property Tax.*

4. The Commissioner may, by giving publicity in the local newspapers and otherwise require the owner or the occupier of, any land or building, or a portion thereof to file a return within a period not exceeding one month from the date notified in this behalf by the Commissioner, containing the following particulars with regard to each assessable item, namely :—

(i) The name of the division and the street in which it is situated and the door number ;

(ii) description of the assessable item like number of storeys, plinth area in each storey and the extent of vacant land ;

(iii) the name of the owner ;



(iv) the name of the occupier ;

(v) the year in which the assessable item was last assessed and the amount of annual value fixed by the Commissioner ;

(vi) the amount of tax now being paid per half-year ;

(vii) whether the assessable item is used for residential or non-residential purpose ;

(viii) whether the assessable item is wholly rented or partly occupied by the owner and partly rented ; and

(ix) the amount received as rent or lease amount per year.

5. If any person fails to file a return within the notified time, the Commissioner may authorise any person not below the rank of a Bill Collector to enter upon and make an inspection of the assessable item and prepare the return.

6. The Commissioner shall assess the property tax having regard to—

(1) the annual value of the assessable item as on the 1st October 1978 ;

(2) the property tax payable by the owner or the occupier on the basis of the particulars filed in the return ; and

(3) the property tax payable by the owner or the occupier with reference to the guidelines, if any, issued by the Council.

7. (1) A property tax card which shall contain all the details relating to the assessable item and the amount of property tax payable shall be supplied to every owner or occupier who has filed the return under this rule and such card shall be sent to such owner or occupier by post.

(2) The Commissioner shall receive the property tax specified in the property tax card and make necessary entry in the said card and in the assessment book maintained by the Corporation.

(3) If any correction is to be made in the property tax card either in pursuance of any revision in the property tax or all order passed in appeal against the order of the Commissioner, such correction shall be made and attested by the Commissioner or any officer authorised by him in this behalf in the property tax card and in the assessment book.

(4) The property tax card shall be valid until the assessment is revised during a general revision or earlier, as the Government may direct in this behalf.

8. The Commissioner shall make arrangements for the verification of the particulars furnished in the return filed by the owner or occupier of every assessable item immediately after a general revision and before the next general revision.

9. Consequent on the verification made under rule 8, if any discrepancy is noticed in the particulars furnished in the return filed by the owner or occupier, the Commissioner may, after giving such owner or occupier a reasonable opportunity of being heard and after considering the objection, if any, received from him, modify the assessment from the date on which the assessment was made and collect the arrears of tax ".

(2) For the existing Part V, the following shall be substituted, namely :—

"PART V.

*Revision of assessment.*

20. (1) There shall be one or more Taxation Appeal Tribunals (hereinafter referred to in this Part as "the Tribunal") for hearing and disposing of an appeal preferred by any person who is not satisfied with the assessment order made by the Commissioner under this Act other than the orders relating to the transfer duty.

(2) The Tribunal shall consist of a Judicial Officer not below the rank of a Sub-Judge.

(3) The terms and conditions of the Tribunal shall be such as may be determined by the Government.

(4) The salary and other allowances payable to the Tribunal shall be borne from the funds of the Corporation.

21. No person who fails to file the return within the notified time under rule 4 in Part II shall be entitled to appeal against any assessment order made by the Commissioner.

22. No appeal shall be entertained by the Tribunal unless the appellant deposits in the Corporation the existing tax and also fifty per cent of the difference between the existing tax and the tax as assessed by the Commissioner in the revision.

23. An appeal against the decision of the Tribunal may be filed within thirty days from the date of the order to the District Judge.





24. (1) Every appeal filed under this Part shall be entered in a register maintained for this purpose by the Tribunal.

(2) The Tribunal shall give to person filing an appeal a written notice specifying the place, date and time of hearing the appeal.

(3) The Tribunal shall dispose of the appeal within five months from the date of filing of the appeal.

(4) Any person preferring an appeal may either appear in person or through an authorised agent before the Tribunal.

(5) The gist of the order passed in an appeal shall be recorded in the register which shall be duly attested by the Tribunal and a copy of the order shall be supplied within ten days from the date of passing of the order to the appellant.".

(3) In Part VI, after rule 29, the following rule shall be inserted, namely :—

"29-A. Notwithsanding anything contained in any rule in this Part, it shall not be necessary for the Commissioner to serve any notice for the levy and collection of Property Tax under section 117".

136541

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, T[illegible] [illegible]di Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, [illegible]1, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 [illegible]kumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 [illegible] Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-[illegible]
21 Kumaran Book Depot, Booksellers, Erode-[illegible]
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-[illegible]
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.